894.8111
2442

உ
ஹரிஓம்.
ஸ்ரீஹரிஹரஹிரண்யகர்ப்பேப்யோநம:
ஸ்ரீராதாருக்மணீஸமேதஸ்ரீகிருஷ்ணாய நம:

ஸ்ரீமத்திராவிடமகாபாரதவசனம்.

விராடபர்வம்

129
2-76

இஃது.
தமிழில்-வாக்கியரூபமாக-பதினெண்பருவத்தையும்-திருத்தமாய்
அச்சிட்டுத்தரும்படி நிலைபெற்ற சைவ வைணவ
ஸ்மார்த்த-மாத்துவ-சம்யப்பிரபுக்கள்
கேட்டுக்கொண்டபடி

த - சண்முகக்கவிராஜரால்

ஸ்ரீவேதவியாசர்செய்த கீர்வாண பாரதத்திற்கிணங்க
தமிழில்
நல்லாப்பிள்ளை செய்தபாடலின்படி
உரையிடப்பட்டதை.
கோகுலாபுரம்.
மலையானந்தசுவாமிகளின் மாணாக்கருளொருவராகிய

அருணாசலமுதலியாரால்

பார்வையிடப்பட்டு.

தர்க்கோலம்.

நரசிம்முலு நாயுடு அவர்களது

விவேகசந்திரோதய வச்சுக்கூடத்திலும்,
மார்க்கபுரம்.

முத்துசெட்டியாரவர்களது

ஸாகவிரஞ்சனிமுத்திராக்ஷரசாலையினும்
பதிப்பிக்கப்பட்டது.

௲அஎசு ௵—ஏப்ரல் ௴

117135

O-,1MNL,B
M76

உ

ஸ்ரீகணேசாயநம:

ஸ்ரீமகாபாரதவசனவிராடபர்வத்தின்

கதையின் அட்டவணை

கதை.	பக்கம்.
விராடபர்வம்.	
அஞ்ஞாதவாசம் கரந்துறைச்சருக்கம்... ...	௧
கரந்துறையும்-ஆலோசனை	௫
தௌமியர்பாண்டவர்களுக்கு நீதிஎடுத்துரைத்தல்	௰
தௌமியர் ஐவரிடத்தில் ஔபாசாக்கினியைப் பெற்று தவத்துக்கேகல் ...	௧௫
பாண்டவரைவரும் பாஞ்சாலியும் மாறுவேடங் கொள்ளல்...	௧௪
மற்போர்ச்சருக்கம்	௧௮
கீசகன்வதைச்சருக்கம்... ...	௨௧
இவ்விடத்தில் வைசம்பாயனரை ஜெனமேசெயன்கேட்பது-வினா-விடை ...	௩௧
கீசகன்வரலாறு...	௩௯
கீசகஸம்மாரம்	௪௰
தட்சணகோமீட்சிச்சருக்கம் ...	௫௫
கங்கபட்டர் - விராடராஜனுக்குப் பலாயனன் பெருமைகூறுதல்	௬௬
சுசர்மாவினிடத்தில்விராடராஜன்கட்டுப்படல் -	௬௯
பீமனிடத்தில்-திரிகர்த்தராஜன்கட்டுப்படல் -	௭௧
உத்தரகோமீட்சிச்சருக்கம்.. ...	௭௨
பேடிசாரதித்தொழிலுக்கிசைதல் ...	௭௬
உத்தரகுமாரன்-தேரினின்றுங்குதித்தோடல்...	௮௧
* உத்தரகுமாரன்வலவனாகவிசைதல் ...	௮௬
உத்தரகுமாரன் வன்னிமரத்திலுற்ற ஆயுதங்களையெடுக்கவிசைதல் ...	௮௬
* உத்தரனுக்கு-அர்ச்சுனனுக்குற்ற பெயரும் அப்பெயர்வந்தவரலாறும்பேடியிசைத்தல்	௮௯
அர்ச்சுனன் பேடியுருவமகற்றுச் சுயரூபமெடுத்தல்...	௯௰
அஸ்வத்தாமன்தர்மத்திற்காகப்பரிந்துபேசுதல்...	௯௫
கர்ணன்கூறல்	௯௬
கிருபாச்சாரியர்கர்ணனோடுகூறுதல்... ...	௯௭
கர்ணன்பேசுவது	௯௯
வீஷ்மர்சொல்லுவது ...	௯௯
அஞ்ஞாதவாசத் தவணைநாளைக்குறித்து வீஷ்மர் பேசுவது	௧0௨
அர்ச்சுனராஜன்-தனது சிலைக்குருவர்களாகிய-துரோணர்-வீஷ்மர்-கிருபர்-இம்மூவருக்கும்வந்தனக்கணைகளை விடுத்தல்.	௧0௫
அர்ச்சுனராஜன்-பசுநிரைகளுக்குச்சரக்கூடமமைத்துவிராடபுரத்திற்கனுப்புதல் ...	௧0௮
அர்ச்சுனன்-துரியோதனனுடன்பேசுவது ...	௧௰
துரோணருக்கும்-அர்ச்சுனனுக்குஞ்சண்டை -	௧௨௧
பாண்டவர்வெளிப்படுசருக்கம்... ...	௧௫௰
சீதனவிபரம்	௧௫௬

விராடபர்வம்கதைகள்-௩௩

ஸ்ரீராதாருக்மணீஸமேதஸ்ரீகிருஷ்ணாயநம:.

ஸ்ரீ மஹாபாரதம்

விராடபர்வம்.

அஞ்ஞாதவாசம் - கரந்துறைசருக்கம்.

கண்ணன்றுதி - விருத்தம்.

கருவிடையெய்தார் நரகிடைப்புகுதார் காலனைக்கனவிலுங்கருதார் ... ...*
வெருவிருவிழிவேன மடந்தையர்காமவேட்கையாம் வேலையினழுந்தார் ... ... *
பொருமொருதிகிரி வலக்காத்தணித்த புண்ணியன்விண்ணவர்பெருமான் ... ...*
திருமருமார்பன திருவடிக்கடிமை செயுமடியவர்க்கடியவரே... ... ... *

(இதன்பொருள்.)

அடியார்களை இரட்சிக்கும் பொருட்டாய் அமராடி அரக்கரையழிக்குஞ் சக்ராயுதத்தை வலக்கரத்தில் தரித்தருளிய புண்ணியன், தேவர்க்கதிபதியாகிய தெய்வநாயகன்ஸ்ரீமகாலட்சுமிபொருந்தியமார்பன், இவரது திருவடிக்கடிமைசெய்யும் அடியார்க் கடியவர்கள் ஜனனவேதனையை விளைக்குங் கருவிற்புகுந்தார்கள், மரணவேதையிலுமன்று நரகில் நுழையார்கள், தண்டபாசச் சண்டனைக்கண்டு அஞ்சுவதைக் கனவிலு நினையார்கள் - பயப்படச்செய்யும் வேலாயுதம்போன்ற விழிமாதர்களின் காமவிருப்பக் கருங்கடலுளழுந்தார்கள். இத்தன்மையாகப் பக்தர்களைக்காக்கும் ஸ்ரீகிருஷ்ண மூர்த்தியையும் ஸ்ரீவேதவியாசரையும் பணிந்து, பொன்னிறச்சடைமுடி புனைந்த வைசம்பாயனர், இதுவரையிலுஞ் சொல்லிவந்த பஞ்சமவேதமென்னும் பரிசுத்த அமுதத்தைக் கற்புடைமையுடன் மனோமாட்சியிலுயர்ந்த பொற்புடைய வபுஷ்டாதேவிக்குப் புருஷ சிரேஷ்டனான ஜெனமேஜெயமஹாராஜன், காதென்னும் வாய்வழியருந்தி அற்புதமடைந்து - மற்புயம்வளர்ந்து மகிழ்ந்து, விற்பனவிவேகமேலோனான வைசம்பாயனரை நோக்கி சுவாமி? அப்பால் பாண்டவர்களுக்கு நேரிட்ட பான்மையைப் பகரவேண்டுமென்று இறைஞ்சிக்கேட்க, வேதபாராயணராகிய வைசம்பாயனர் விளம்பத்தொடங்கினார்.

அரவக்கொடி படைத்த துரியோதன மஹாராஜனேவலினால் பாண்டவர்களும் - துரோபதாதேவியும் தௌமியாச்சாரியரும் பன்னீராயிரம் பிராமணர்களும், வனத்துடன் திரிந்து - வனவாசம்புரிந்து, பலவகைப் பழங்களும் - வெகுவிதக்கிழங்குகளும் - சருகாதிகளுந் தின்று, பகலும் - இரவும் - பனியும் - மழையும் - காற்றும் - காடும் - மேடும் - கல்லும் - புல்லும் - கலந்தகாட்டில் பன்னிரண்டுவருடமுன் கழித்தபிற்பாடு, அஞ்ஞாதவாசஞ் செய்வதற்கு ஆலோசிக்க வேண்டுமென்று தாங்கள் தங்கியவனத்தைவிட்டு அப்பால்போயிருந்து, தருமதேவதையைத் தொழுது, எந்தையே? நாங்கள் நினைத்தகாரியம் தடையில்லாமல் நிறைவேறும்படி நச்சுப்பொய்கையில் வரங்கொடுத்தவண்ணம், இப்போது கைகூடவேண்டுமென்றநிந்து மகிழ்ச்சியடைந்த தருமபுத்திர மஹாராஜனானவர் தங்களுடனிருந்த வேதவேதியரை

நமஸ்கரித்து, பிர்மக்கியானமுள்ள மேலோர்களே? இத்தனைநாளுமெங்களுடன பொருந்தி மெத்தவருந்தி வனவாசம்புரிந்து, உபவாசமிருந்தீர்கள். இனிமேல் நாங்களொருவருடம் மறைந்திருக்க வேண்டியகாலம் நேரிட்டிருப்பதால் நீங்கள்யாவரும் ஆசீர்வதித்து எங்களுக்கு விடைகொடுத்தருள வேண்டுமென்று உபசரித்துக் கேட்டார். இவ்விதமாகச் சிரத்தில் கரத்தைக்குவித்துக் கேட்ட முரசக்கொடி முதல்வனைப்பார்த்து வேதியர் விளம்பினார்கள்.

ஓ? பாண்டவர்களின் முதல்வனே ? நீங்களெண்ணிய காரியமெல்லாம் திண்ணமாய்க்கைகூடும், இனிமேல் யாதொருதாழ்ச்சியுமில்லை இன்னுஞ்சிலநாளையில் நீங்கள் வெளிப்பட்டுச் சத்துரு சங்காரஞ்செய்து சகலராஜவைபவத்துடன் தாரணி ஆளப்போகிறீர்களென்று மங்கள்வாழ்த்துதலுடன் ஆசீர்வதித்தார்கள். இப்படிக் குப்பல்லாண்டுகூறிய மகாத்துமாக்களைநோக்கி தருமராஜன்சொல்லுகின்றார்.

ஐயமார்களே ! இப்போதெங்கட்கு நேரிட்டிருக்கிற ஆபத்து நீங்கிவெளிப்பட்டு உங்களுடன் கலந்திருந்து உசிதவசனங்கள் பேசிநேசித்து விசுவாசித் திருக்கக் கூடுமோ கூடாதோ நான்தேடிய புண்ணியவசமெப்படியோ அறியேனென்று கண்ணீர்பெருக உள்ளமுருகச் சோர்ந்தார், அப்படிச்சோர்ந்த தருமராசனைத் தம்பிமாரணைத்து உபசரித்து ஆயாசமாற்றித் தேற்றிப்போற்றினார்கள், எவ்விதத்தாலுந் தேறாமல் தியங்கிய சத்தியவானை, தௌமியாச்சாரியர் கண்டு ஓ? உதிஷ்டிரமகாராசனே தைரிய - விசய - சாந்த - உதாரதரும முதலிய புகழ்ப் பிரதாபங்களிலும், சத்திய - விரதசவுச - ஸம்பத்சர - சாஸ்திர-விசாரணைகளிலும், பிரபலநீதி நிறைந்த கருணையங்கடலாகிய நீர்தாமே விசாரப்பட்டால் மற்றியார்தான் சகிக்கக்கூடும் நிருபனே, முத்தொழிலிய மூவர்க்கானாலும், பொற்றலத்துற்ற தேவர்க்கானாலும், நற்றற்றோர்முதலிய தவத்துற்றோர்க்கானாலும் ஆபத்துவராமற்போகாது வந்தால் அது அநுபவிக்காமலானாயும் விடாது இதற்குத்திர்ஷ்டாந்தஞ் சொல்லுகிறேன் கேளநும், தேவர்கட்கதிபதியாகிய தேவேந்திரன் சூட்சமரூபமாய் ஒரு தாமரைத் தண்டிதுள் ஒளித்து வெகுகாலந் தவஞ்செய்திருந்து தனக்கு வல்வினைப்பயன் நேரிட்டபோது வல்லவனானன். உலகாளுக்ஞனா ஸ்ரீமன் நாராயணன் அதிதியின்கருப்பத்தி லடங்கி வாமனமூர்த்தியாய் வந்து மகாபலிச் சக்கிரவர்த்தியிடத்தில் தானமாக் மூவடிமண்கொண்டு வானமளாவிச் சேவடியாலளந்து தன்சிந்தையிலெண்ணியவண்ணம் முடித்தருளினான். அக்கினிதேவனானவர் அவுரவமஹாமுனியின் மனையாளுடைய தொடையில்மறைந்து நெடுநாளிருந்து தீவினை தீர்ந்தபிற்பாடு வெளிப்பட்டார். சூரியபகவானானவர் பசுவின வயிற்றிலொளித்துப் பலபகல்கழித்துப், பண்ணவர்முதலிய விண்ணவருங் கொண்டாடப் பாரிலுதயஞ் செய்தருளினார்.

இவ்விதமாக இன்னும் அநேகருமிப்படியே காலத்திற்குத்தக்க கோலங்கொண்டு ஞாலத்தில்வாழ்ந்து வாழ்நாளைக் கழித்தார்கள். ஆகையால் தீவினையாலெய்துகின்ற ஆபத்தானது யாவரையும் இக்குட்படுத்தும், நீங்களும், அப்படியே அஞ்ஞாதவாசந் தொலைத்து விஞ்ஞானமேலிடநிலைத்து முனபோலவே இராஜ்ஜியபரிபாலனம் புரியவருவீர்களென்று அன்புடனுரைத்த புரோகிதர் சொல்லை இன்புடன்கேட்டு மகிழ்ந்து, எங்கள் வினை இனியெப்படியோவென்று தியங்கிமயங்கித் தேறிய தருமராஜனை, மகாபலசாலியான வீமசேனன் பார்த்து முகம்வேர்த்து, ஓ? எங்களண்ணாவே, கதாபாணியாகிய நானும், காண்டீபதாரனாகிய விஜயனும், நகுல - சகாதேவரும், உமது கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, இஷ்டப்படி நடந்துவரும்போது இப்போதும் இனியெப்போதும் உமக்கென்ன குறையிருக்கின்றது தேவரீர் உள்ளங்கலங்க வேண்டிய காரியமில்லையே, இப்பவும் சற்றே கடைக்கண் நோக்குவீராகில் இதுவரைக்கும் பற்பலதுன்பங்களைச் செய்துவந்த பகையாளிகளை அடிவேரறுத்து முடிசாயவீழ்த்திப் படியாளுமன்னர் முடியால்வணங்க கெடிஸ்தலாதிபனென்னும் கீர்த்தி உமக்குண்டாக்கி வைப்போம், சீக்கிரத்தில் உத்தாரங்கொடுத்தருளும் மூத்தாரமணிந்த முதல்வனே, தேவரீரரசாளும் வேலையை முன்னடிமுடித்துவிட்டு மற்றவேலைகளைப்பின்னடி பார்க்கிறோமென்று குதித்தெழுந்துரைத்த தம்பியைக் கையமர்த்தி, அப்பனே வீமா! சத்தியநிலைகாத்து தருமமுறைபார்த்து உத்தமகீர்த்திசேர்த்து உண்மைக்குறுதி நிறுத்தவேண்டுமாதலால், மெத்தநாளில்லை இன்னுஞ் சற்றுநாளிருக்குது இதற்குள் நீங்கள் ஆத்திரப்படவேண்டாம் க்ஷாத்திரவான்களேயென்று தம்பிமார்களுடன் சாந்தமாய்ப் பேசிக்கொண்டு இரண்டு நாழிகை வழிதூரஞ்சென்று மேல்நடக்கவேண்டிய காரியத்தைக்குறித்து தௌமியாச்சாரியர் முதலியபெரியோர்களுடன் ஆலோசனை செயயத்தொடங்கினார்கள், கேளும்ஜெனமேஜெய மகாராஜனேயென்று வைசம்பாயனர்சொல்லி மேலுஞ் சொல்லத்தொடங்கினார்.

காந்துறையும் ஆலோசனை.

சகல கலைக்யானங்களையும், ஐயந்திரிபு அறியாமையில்லாமற்கற்ற தருமராஜன் வையம்புகழு மஹாவீரர்களாகிய தம்பிமார்களைநோக்கி ஆ! என்சகோதரரே, கல்லும் புல்லுநிறைந்த காடுமேடுஞ்செறிந்த கருங்கல் மலையுயர்ந்த இடங்கள்தோறும்நமக்கிருப்பிடமாகப் பொருந்திப் பன்னிரண்டாண்டு பலருமறியக் கழித்தோம் இனியொருவரு முணராமல் ஒருவருடந்தொலைக்க வேண்டியிருப்பதால் நாம் மறைந்திருப்பதற்குத் தகுதியான இடம்யாதோ அதை முன்னே யோசியுங்க ளென்று விசுவாசமுள்ள தமையனகேட்க, இந்திரன் மைந்தனான அருச்சுனனெழுந்து தாமரைக்கமலம்போன்ற தாள்மேற்பணிந்து அண்ணாவே! நமது குருதேசத்திற்குச் சமீபத்தில் பாஞ்சாலதேசம் மச்சதேசம் சாளவதேசம்-புளிந்பதேசம் பாகுலிகதேசம் விதேகதேசம் தசார்ணதேசம்- சூரசேனதேசம் - கலிங்கதேசம் - மகததேசம் இவைகளெல்லாம் மனோரம்மியமா யிருக்கின்றன. இத்தேசங்களுக்குள் மிச்சமாய்ச்சிறந்தது மச்சதேசம், அதேனெனில், நீதியுநெறி நிறைந்து நிலவளநீர்வளமுயர்ந்து நிறையும் பொறையு மிகுந்து நிலையா மும்மாரிபொழிந்து, தருமமும் நற்கருமமுந் தழைத்து சகலநிதிகளுஞ்செறிந்து, பழுதற்ற குடிகளும், படைகளும் புகழ்ந்து தொழுதுவணங்கச் செழிந்து மநுநீதிவழியேபரந்து, அஷ்டதிக்களவும் ஆக்கியாச் சக்கரம்போக்கி செங்கோல் செலுத்தி, வேதவேள்வி வேதியர்பலரும் வானவர் விற்பனர் மாதவர் சிலரும் மாதுஸ்தானம்போல் பொருந்தி வாழ்வைப் பெரும்படியான விராடராஜனுடைய மச்சநாடு ஐயா, இத்தியாதி நன்மைகளுக் கிருப்பிடமான பட்டணஞ்சேர்ந்து நமதுருவைமறைத்து பயமில்லாமல் காலங்கழிப்பதே ஜெயமாகும் நமக்கொருநாளுந் தீங்கில்லை ஈதன்னே வேறொரு நாட்டை விரும்புவோமாகில் நமது காரியகாரணங்கள் ஒருவேளை வெளிப்பட்டாலும் வெளிப்படும் இதன்றியும் துரியோதனனுடைய தூதர்களும் காரியஸ்தர்களும் மந்திரி சாமந்தர்களும், தினந்தோறும் போக்குவரத்தா யிருப்பார்கள் அப்போப்பட்ட நிர்ப்பந்தமான வருத்தம் நமக்கிந்த விராடநகரத்தி லிருக்கமாட்டாது. மேலும், இந்தப் பட்டணத்து மச்சராஜன் நமக்குப் பூர்வசம்பந்தப் பொருத்தத்தினாலும்; மெத்தகுணசாலி யானதினாலும், நாம் காட்டில் அநுபவித்த கஷ்டத்தை இந்தமச்ச நாட்டில் ஆற்றிக்கொள்ளும் வகையிருப்பதினாலும், அஸ்தினாபுரத்தை விட்டு வனவாசஞ்செய்ய வரும்போது ஜோதிடநூலோருணர்த்த ஆருடத்தினாலும், நாமிந்தப் பேச்சைப் பேசும்போது நல்லசகுனங் கிடைத்ததினாலும், அடியேனுக்கிந்த நகரத்தின்மேல் ஆசையுண்டாகிப் பரிசுத்த பவித்திர மகத்துவ சுகத்தைத்தரு மென்றதனால் என்புத்தியில் தோற்றியதைப் புகன்றேன் உத்தமர் கற்றவர் மற்றவர் பலரும் புகழ்ந்துபேசிய பொன்னுலகமும் பின்னிடும்படியானது இந்நகரத்தின் பெருமை. தேவரீர்சித்தமெப்படியோ அறியேன்சிறியேனென்று வணங்கி இதைவிட வேறொரிடமில்லை யென்றான்.

இந்தப்பிரகாரம் அருச்சுனன் சொன்ன மொழியை அருளுக் காதாரமான தருமராசன்கேட்டுத், தீர்க்காலோசனைசெய்து தங்களைக் காணும்படிக்கு வனத்தில் வந்திருந்த அரசர்களுக்கு இச்சங்கதி தெரியாமலடக்கி அவர்களை நோக்கி ஓ! இராசர்களே இனமுமெங்களைப் பிடிக்காநின்ற தீவினை தீரும்வழியைப் பார்க்கின்றோம் நீங்களுங்கள் பட்டணம்போய்ச் சேருங்களென்றும், பரதேசிகளான வனவாசிகளென்னும் பிராமணர்களைப்பார்த்து ஓ, சுவாமிகளே, இனியெக்காலம் உங்களை நாங்கள் காணப்போகிறோமென்றும், இன்பவார்த்தைக ளன்புடன்பேசி, அவர்கள் மனங்கனிந் துரைத்த வார்த்தையையும் ஆசீர்வாதத்தையும் பெற்றுக்கொண்டு முக்காலும் வலம்வந்து முடியுறவணங்கி எக்காலு முங்கள் கிருபை யெங்கள்மேல் இருக்கட்டுமென்று உபசரித்து, பிரியப்படாத பிரியத்துடன் விடைகொடுத் தனுப்பிவிட்டு, அன்றிரவுமுழுதும் நடந்து சூரியோதயத்திற்கு முன்னதாய் செல்வச்சிறப்போங்கிய விராடபுரஞ் சேர்வோமென்று, திரௌபதாதேவியும், பாண்டவரைவரும் கலைக்கியானமுணர்ந்த தௌமியாச்சாரியரும் தொலைக்கா வழியடர்ந்த கொடிபடர்ந்த மலைக்காடுகடந்து, பருக்கைக் கற்களும் பாலைவனமும் - வருக்கைமா - தேக்கு - மலர்ச்சாலை - சோலையும் - அருவிபெருகிய ஆறும் - குருவிமருவிய கூடும் நரி யெதுவாய் காடும் - பள்ளர்வாழும் வீடும் - பரந்த மணல்மேடுங் கடந்து, பற்பல பாதை மன்னரும் விற்பனவிவேகரும் வந்தொதுங்குகின்ற சத்திரவட்டக் குடையினையுடைய விராடராஜனது மச்சநாடெல்லையில் வந்தார்கள் (அப்போது) பச்சைப்புரவிபூட்டி ஓராழி யச்சுத்தேரினையோட்டிவருகின்ற சூரியனுங் கிழக்குத்திக்கில் எழுந்தான்.

அன்றிரவுமுழுது நடந்த பாண்டவரும் பாஞ்சாலியும் புரோகிதரும் இனிமேல் தங்களெண்ணம் பலித்

தயேதனக் களித்து, மீதமர்ந்த மீன்கள் முதலியினங்கள் நீராளிகள் நீர்க்குதிரைகள் பொருந்திய மடுக்களும், பசுக்கள் பட்சிசனுலாவாநின்ற முல்லைக்காட்டையும், பயிர்ப்பலங்கள் சூழ்ந்த நல்ல நாட்டையும், காவலனிருக்குங் கோட்டையையும், கால்நடைநடக்கும் பாட்டையையும் மாடமாளிகை வீட்டையும் மகரதோரண வாசற்பேட்டையும், மேகமளாவிய கோபுரங்களையுங்கண்டு, களிகூர்ந்து, பாதலவ்வளைக்கும் ஆழ்ந்து நிறைந்த ஒரு தாமரைத் தடாகத்திலிறங்கி, நித்தியவிதிமுடித்து அருக்கியங்கொடுத்துச் சூரியநமஸ்காரஞ்செய்து வழிநடந்த வருத்தந்தீர ஓர் மரத்தினிழலில்தங்கி அருள்குடிகொண்ட தௌமியரைநோக்கி, இருகரங்குவித்திறைஞ்சி வாழ்த்தி இதுவரையிலும் நிகரற்ற வாழ்வைப்பெற்ற நாங்கள் இனி நடக்கவேண்டிய முறைமையைக் கட்டளையிட்டருளுமென்று மேலான நூலாய்ந்த தருமராஜன்கேட்க, காலாதிப வேதமுணர்ந்த தௌமியாச்சாரியர் சொல்லலுற்றார்.

சந்திரகுலத் திந்திரனை தருமநந்தனா? நீங்களறியாத காரியம் நானென்ன சொல்லப்போகிறேன்? ஆகினும், காட்டில் காலங்கழித்தது பெரிதல்ல, நாட்டிலொருவருடம் மறைந்திருந் தொழிப்பதே பெரியகாரியம் கருங்கல்போன்ற தோளினையுடைய காவலர்களே, நீங்கள் உருவமறைந்துறையு நாளையில் உங்கள் சொருபத்தினாலாவது பேச்சினாலாவது செய்கையினாலாவது கொஞ்சமேனுந் தெரியுமாகில் மறுபடியும் பன்னிரண்டுவருடம் வனவாசஞ்செய்ய நேரிடும். ஆனதால், உங்களை ஒருவரும் அறியாதிருக்கும்படி மாறுவேடந் தாங்கிப் பெயர்வேறுகொண்டு குலச்சிறப்புற்ற விராடராஜனிடஞ்சென்று உங்கட்குரிய தொழில்செய்து, அத்தொழிலுக் கிணங்க நடந்து காலங்கழிப்பதைவிட வேறு உறுதியில்லையென்று, வைதிகக்கருத்தனை தௌமியர்சொல்ல, அவருடைய வார்த்தையைக்கேட்ட தருமராஜன மகிழ்ந்து, இவ்வாறு நடத்துகிறதைவிட இனபம் வேறில்லையென்று ஒப்புக்கொண்டார். அவ்வாறு ஒப்பிய தமயன்பாதத்தில் தம்பியர் வீழ்ந்து, பதைபருண்டு மயங்கி அண்ணா, மேது குலமுதலாகிய சந்திரனும், நம்மைப்பெற்ற பாண்டு பூபதியென்னு மிந்திரனும் உம்மையல்லது வேறில்லையென்று நாங்கள்வணங்கி வாழ்த்துகின்றோம். எங்கட்கு ஜேஷ்டப்ராதாவாய் விளங்கிய சுதர்தாரும் களங்கமில்லா மனத்தினரும், ராஜபூஜாதுரந்தரரும் கெடிஸ்த வாதிபரும், நிரந்தர காருண்யரும், காமக்குரோதாதிகளற்றவரும், தாயப்புய மேருவை யொத்தவருமாகிய தேவரீர் - உமக்குக் கீழ்ப்பட்ட ராஜனிடத்திற்போயிணங்கி, அவன் மனதின்படி வணங்கி வேலைசெய்யத் தக்கதோ? ஐயா பொய்யாமொழிப் புநிதராகிய தௌமியரே ஐயையோ! இந்த அநியாயத்திற் கென்செய்வோம். இவ்வுலகத்தைப் பணமுடியால்தாங்கு மாதிசேடன்போலும் - சப்தமேகம் வருஷிக்குந் தாரைபோலும் பொருளமுதம் பொழிந்து சகைக்கியான முதலிய வேதக்கருத்துங் கடந்து, சத்துருசெயம்புரிந்து, வெற்றிமாலை புனைந்து, எத்திசையிலுமுள்ள கொற்றவர் பலரும் பணிந்துகொள்ள முற்றும் பெருமைபெற்று, அருமையுற்று திருமகுடமுடித்துச், சகலசிறப்பும் படைத்து ஜகரக்ஷகனாகத் தனியரசு நாட்டியதருமசொரூபியோ வனமுயரிடத்தி லடங்கி, பிறரைத்தொழுதுங்கி யிருப்பதுவா ஆறா! விணையேயெனறுவாடி வாய்விட் டரற்றினார்கள்.

இவ்விதத்துயரால்துன்பக்கடலுளாழ்ந்த தம்பிமார்களைத் தருமராஜன்நோக்கி அப்பா யெனதுள்ளத்திற் கொப்பான சகோதரர்களே நீங்களென்னைக் குறித்து விசாரப்படவேண்டாம் பின்னால் இப்படி வருமென்று முன்னமே நான் ஜாக்கிரதையா யிருக்கின்றேன் அதென்னவெனில் இக்குப்பாலரி லொருவனாகிய தௌமிகைச் கடவுள் பக்குவமாக அநுக்கிரகித்தருளிய மந்திரவசத்தால் வேதவேதாங்க முணர்ந்த வேதியனாகி மச்சராஜனது உச்சிதச் சபைக்குட்புகுந்து அவ்வரசன்முதலிய யாவரும் எனக்கெதிர்வந் திறைஞ்சவும் நான் அவர்கட்கு ஆசிர்வசனஞ் சொல்லவும் பெற்றிருக்கின்றேன் இதல்லாமலும் உமக்கிருப்பிடம்யாது உமதுபெயரென்ன நீரிவ்விடம் வந்ததற்குக் காரணமேதென்று கேட்பாராகில் நான் தருமராஜனைவிட்டுப் பிரியாநண்பனானவன் அவர்பன்னிரண்டு வருடம் வனவாசஞ் செய்யப்போனநாளையில் நானுங்கூடப் போயிருந்தேன் இன்னுமொருவருடங் கழிப்பதற்காக இவ்விடம் வந்தேனென பெயர் கங்கபட்டனென்றுரைப்பேன் இதன்றியும் பெரியோர்களாலியற்றிய அக்ஷர லக்ஷணம் - கணிதம் - சங்கிரமலக்ஷணம் - எழுத்திலக்ஷணம் - வேதம் - வேதாங்கம் - புராணம் - வியாகரணம் - நீதிசாஸ்திரம் - ஜோதிடசாஸ்திரம் - தருமசாஸ்திரம் - யோகசாஸ்திரம் - போகசாஸ்திரம் - மந்திரசாஸ்திரம் - சகுனசாஸ்திரம் - சிற்பசாஸ்திரம் - வைத்யசாஸ்திரம் - சொரூபசாஸ்திரம் - இதிஹாசகாவியம் - அலங்காரம் - மதுரபாடனம் - நாடகம் - நிருத்தம் - சத்தப்ரமம் - வீணை - வேணு - மிர்தங்கம் - தாளம் - அஸ்திரபரீக்ஷை - சஸ்திரபரீக்ஷை - இரத்தினபரீக்ஷை - கனகபரீக்ஷை - ரதபரீக்ஷை - கஜபரீக்ஷை - அஸ்வபரீக்ஷை - ஆயுதபரீக்ஷை -

பூமிபரீட்சை - மல்லயுத்தம் - ஆக்ருஷணம் - உச்சாடனம் - வித்துவேஷணம் - ஜாலாதிஜாலம் - மோகனம் - வசியம் - இரசவாதம் - மந்திரவாதம் - காந்தருவவாதம் - பைபிலவாதம் - தாதுவாதம் - காருடம்நட்டம் - முட்டி - ஆகாயப்பிரவேசம் - பரகாயப்பிரவேசம் - வாகனமனம் - அதிரிசியம் - இந்திரஜாலம் - மகேந்திரஜாலம் - அக்கினிஸ்தம்பனம் - ஜலஸ்தம்பனம் - வாயுஸ்தம்பனம் - திருஷ்டித்தம்பனம் - வாக்குஸ்தம்பனம் - சுக்கிலஸ்தம்பனம் - சுவாசஸ்தம்பனம் - கப்கஸ்தம்பனம் - அவஸ்தைப்பிரயோக முதலிய, அறுபத்துநான்கு கலைக்கியானமு மறிவேன், இக்கெட்டுங்கொண்டாடுஞ் சொக்கட்டானுடும் பகுவமும் எனக்குண்டு. ஓ! விராடராஜனே நீதயவுசெய்து உம்மிடத்தில் நானிருக்கச் செலவுகொடுப்பீராகில், ஒருநாளைப்போல் ஒருவருஷம் இவ்விடம்விட்டு நீங்காமல் இன்புற் றிருப்பேனென்றுரைத்து, அந்தராஜன் பக்கத்திலிருந்து, அவன் கருத்துக்கிசைந்த தேசவர்த்தமான காரிய காரணங்களைக் காலசமய மறிந்துபேசி, விநோதமான விந்தைகளை நிந்தையில்லாமற்சொல்லி விதரணையான அரசாட்சியைப் பெருமையுடன் நடத்தி வேந்தனுள்ளங்களிக்கச்செய்து சுற்றிலுஞ்சூழ்ந்த வெற்றிவீரர்களும், சற்றவர் முதலிய சுற்றத்தவர்களும், தந்திரி மந்திரி - சாமந்தர்களும் உத்தமரிவனென்று சொண்டாடும்படிக்கு மெத்தவு மேன்மையாக காலங்கழிப்பேன், சித்தசுத்திபெற்ற தம்பிமார்களேயென்று, எழுலகத்திற் கோராழி செலுத்துங் குருகுலக்கோமகனாகிய தருமராஜனுரைத்தருளினர். அவருடைய பெருமிதவாக்கியத்தை வீமார்ச்சுனர் முதலிய தம்பியருங்கேட்டு நமது தமயனருக்கு இந்தத்தொழில் தகுந்தகுமென்று சந்தோஷமானர்கள்.

அந்தவேளையில், பொறுமையைப் பூஷணமாகப்பூண்ட தருமராஜன் வீமசேனனுடைய முகத்தைப்பார்த்து கருணைவெள்ளங்கவிந்து, கனிந்துள்ளமுவந்து கருத்திணுற்பரிந்து, கண்ணீர்சொரிந்து நினைத்தற்கரிய பலத்தையுடைய வாயுபுத்திரனே? நீ அரக்குமாளிகைவிட்டெழுந்தபோது உரக்கக்கூவிக் கொடும்பசைகொண்டு எதிர்த்த இடும்பனைக்கொன்றும், வேத்திரகியத்திலிருந்த வேதியர்களின் துன்பமாற்றும் படிக்குப் பகாசூரனுயிரைவென்றும், கிம்மிராசூரனைக் கெடுத்தும், குபேரலோகம்புகுந்து மணிமாலனுயிரும் பொற்றமரை மலரும் பறித்துவந்தும், சடாசூரனைத் தாக்கியும் போருக்கெதிர்த்த பேர்களைப்போக்கியும், இரக்கமில்லாக் கொடியோனாகிய துரியோதனன் அன்னத்தில் விஷங்கலந்தூட்டி அநேககொடிகளாற்கட்டி ஆற்றுப் பெருக்கத்தில் போட்டகாலையில் நாகலோகம்புகுந்து விஷாமிர்தமுண்டிருந்தவுன்னை நாங்கள் எழுநாள்வரையிலுந்தேடிப் பட்சிபோற்பறந்து பாதவித்தலைந்த துக்கத்தை எட்டாநாள்வந்து போக்கியும் வணங்காமுடியோன செய்த வஞ்சனையினின்று நீக்கியும் பெற்றதாயன குந்திதேவியாருடன் எங்களையுங் காத்திரட்சித்த தாஷ்டீகவண்ணலே! நீயொருவனுடைய நகரஞ்சேர்ந்து அவனைத் தாழ்ந்து அவனுக்கிசைவாகிய தொழில்புரிந்து காலமறிந்து நாம் கடத்தவேண்டிய நாளைக்கழிக்கவறிவையோ? நீ ஒருவரிடத்திலடங்கி யேவற்பணி செய்திருக்கும்படியாய்ப் பாவியான என்னிருகண் பார்க்கத்தக்கதோ படுவினையேயென்று பாதவித்துப் பெருமூச்சுவிட்டு ஐயா தம்பி, நமது காலபலனறிந்து வேளைக்குத் தகுந்த வேடம்புனைந்து நாளைப்போக்கத் துணிந்தபோதிலும் ஒருவனை வணங்கி யிதம்பேச அறியாயே, ராஜசமயந்தெரிந்து, நலம்பெற உறவாடி நேசவிசுவாமுற நினைக்க மாட்டாயே, எந்தவேளையில் எத்தொழில்செய்யவேண்டியதோ அந்தவேளையில் அந்த வேலைமுடித்து அரசனை மனமகிழச் செய்யுமார்க்கங் கற்றிலையே, ஐயோ பரிசுத்த குலத்தானாகிய விராடன் புகழவும், அவனைச்சேர்ந்த சபையார்மகிழவும், நாமிவ்விடத்தில் மறைந்திருப்பதை மற்றவர்களறியா திருக்கவும், அஞ்ஞாதவாசமகற்றவும் வேண்டுமே, நீ! எவ்விதமிருக்கப் போகிறாய் என்னிளவலேயென்று தளர்ந்து இமைகொட்டாமல் ஏக்கமுற்றிருந்தார்.

இவ்வண்ணம் தம்பியைக்குறித்து வெம்பிய அண்ணனை, புகழ்ப்பிரதாப பூஷணமணிந்த புயவீமன்வணங்கி, நமது தந்தையிறந்த தளர்ச்சிதோன்றுமற் சார்ந்த தமயனே? தித்திப்பு - புளிப்பு - உவர்ப்பு - துவர்ப்பு-கார்ப்பு - கைப்பு - இவ்வாறுவகை ருசியுடன் ஐந்துவித கச்சாயங்களும் - பச்சடிகளும் - நானகுவகைக்கறி - மூன்றுவித ரசம் - இரண்டுவகைக்குழம்பு - ஒருவிதபாயசம் - புளியோதனம் - எள்ளோதனம் - முளாகோதனம்-தயியோதனம்-பாலோதனம - சர்க்கரைப்பொங்கல்-அக்காரவடிசில்-முதலியவகைவகை அன்னங்களும் பலகாரவிதங்களும் திருத்தமாகச்செய்யக் கற்றிருக்கின்றேன. இந்தச்சுயம்பாகத்தொழிலால் இரத்தக்கறை நீங்காத வேலாயுதந்தங்கிய விராடனும் மற்றவர்களும் திருப்தியடைந்து, அமுதத்தையிகழ்ந்து, நான்செய்யும் பாகத்தைப்புகழ்ந்துபாகசாஸ்திரங்கற்றயக்குவனென்றென்னை மகிழ்ந்து உபசரிக்கும்படியாயிருந்து, விருந்துமுதலிய

துப்பரிந்து எந்தச்சமயத்தில் எதுவேண்டியதோ அந்தச் சமயத்தில் ஆச்சுதென்றளித்து, அடுப்புக்கு விறகுவேண்டியபோது ஆகாயமளாவிய விருக்ஷங்களைக் கோடாலிகொண்டு பிளக்காமல் என்னிருகையாலு முறித்து வற்படுத்திக்கொள்வேன், ஒருவேளை, மலையொத்த திண்புயனாகிய மச்சராஜன், மல்லர்களுடன் சண்டைசெய்ய விடுப்பானாகில் மற்போர்வல்லரைச் சொற்பமாயழித்துப், பற்பலவிதபரிசும்பெற்று விற்பனவிவேகிகள் மெச்சப்பேறெடுப்பேன். இன்னும், யாளி - சிங்கம் - புலி - கரடி - யானை - முதலிய மிருகங்களைப்பிடித்து, இராஜனுக்கு முன்னேவிடுத்து மாச்சரியமூட்டி ஆச்சரியங்காட்டுவேன், உனபெயர் ஏனனென்னில் பலாயனனென்பேன், உன் நகரேதென்றால் தருமராஜன் கீர்த்தியைப்புகழ்ந்துபேசுகின்ற புண்ணியநகரமென்பேன், உன்குலகோத்திர மெனனவென்றால் அறப்பெருங்கடவுள் மைந்தனாகிய மூர சகோதரருக்கு அடிமைசெய்யுமடியேன் அறிவில்லாச் சூத்திரனென்பேனென்று வாயுசேயனான வீமனசொன்னான். அவனசொன்னசொல்லைச் சாந்தகுணத் தருமராஜன்கேட்டு, இருபுயமும் பெருமலைபோலோங்கிப் பசுவானது கன்றின்மேல்வைக்கும்பக்ஷத்திலும் லக்ஷம்பங் கதிகமாய்க்கருணைகூர்ந்து, தம்பி இந்தத்தொழில் உனக்குரியதுதான் என்றெனக்கு அன்னத்திற்குக் கருப்பில்லை அஞ்ஞாதவாசத்தை வெறுப்பில்லாமல் நிறைவேற்றலாமென்று வியந்து, இப்பால் தன்பக்கத்தில் பயந்து நிற்கின்ற பார்த்தனுடைய முகத்தைப்பார்த்து, நயந்துசொல்லுதற் கரியதுயரங்கொண்டு அப்பனே, குழந்தாய் அர்ச்சுனா! தேவர்களாலுஞ் செயிக்கப் படாத காண்டா வனத்தையழித்து, அக்கினிதேவனுக்கு அவியாயளித்துப் பசிதணித்தருளினை, மகமேருவுக் கப்பாலுஞ்சென்று விஜயம்பெற்று, விஜயனென்று புகழ்ஸ்தம்பநாட்டி அரசர்களளித்த இறைகளியாவற்றுங்கொண்டு அடங்கா மறுமன்னரையும் வென்று ஜெயத்துடன்மீண்டாய். இதல்லாமலும், நான்குவேதமும், நான்முகனும் நாரணனும், நாகலோகத்தார் முதலியபேரும் அறிதற்கரிதாகிய தேவாதிதேவன், ஆதிபாண்டரங்கன், சேற்கண்டைபோன்ற தடங்கண்வாய்ந்த ஜெகதீஸ்வரியுடனே விருஷபவாகனரூடரா யெழுந்தருளியபோது, உன்னிருவிழியும் உள்ளமுங்களித்து, ஆனந்த பாஷ்பத்துடன் தொழுது பழுதுபடாத இன்பம்படைத்தனை, மூலகாரணனான கண்ணுதலளித்த பாசுபதமும்பெற்றாய், பிரம்மாவினாலும், அஷ்டவசுக்களினாலும், அஷ்டதிக்குப்பாலகராலும், துளபமாலைதரித்தநாரணனாலும், இந்திரனாலும், தேவர்களாலும், மந்திரகணங்களும் பெற்றாய், கற்பக நாட்டாருக்கு நெடுநாட் பகைவராகிய காலகேய நிவாதகவசர்களைகொடியில் பொடியாக[illegible]டித்தாய், மானுபாணமும், ஞானபாணமுமணிந்த [illegible]றாபதிவிரதையான இந்திராணி உன்திராணியறிந்து சாவாமருந்தான தேவாமிர்தத்தை ஊட்டுவிக்க, இன்பமாயுண்டு தேவேந்திரனுடன் சிங்காசனமேறிச் சிறப்புற்றிருந்தாய், அரவக்கொடிபடைத்த துரியோதனனையும், அவன் தம்பிமாரையும், அவர்கட்குரிய தருமபத்தினிகளையும் தாமணியாகக் கட்டிக்கொண்டுபோன சித்திரசேனனைக் கைப்பிடியாகக் கொண்டு வாவென்று நான்சொன்னவாய்மூடு முன்னேசென்று, அவனைத் திருப்பிக்கொண்டுவந்து, எனமுன்னிறுத்திக்கட்டுப்பட்ட காவலனைக்கட்டவிழ்த்துவிட்டாய் மேலும், தேசுடையவரில் அக்கினிதேவன்போலும், தேசராசர்களில் தேவேந்திரன்போலும், திசையானைகளில் சுப்பிரதீபம்போலும், ஜெயகீர்த்தியதில் விடையோன்போலு மிருக்கின்றாய், அநுமத்துவஜமும், அநீகவில்லும், அக்ஷயதூணியும், அழகியதேரும், சுவேதப்புரவியும் படைத்த சுந்தரனே! விசித்திரவில்லாளியென்னும் விராடராஜனுடைய பதியிற்புகுந்து, உன்வேடமாறி, வித்வத்திலுயர்ந்த உன்னுள்ளமடங்கி ஒருவருடமொடுங்கி எத்தன்மையான சிற்றேவல் செய்வையோ? அத்தனே யென்று புத்திமருண்டு, கண்ணீர் ததும்பு உண்ணீர்வெதும்பக் கரைந்து வருந்தினார். அவ்வாறு வருந்திய தருமராஜனது உள்ளத் தளர்ச்சியும் பெருமித மான தன்மனக்கிளர்ச்சியுஞ் சற்றுநிதானித்து ஆறுயர்க்கெண்ணிய சவ்வியசாசி, அண்ணலே! என்னைக்குறித்து எண்ணமுற இருக்கும் படியாய் அடியேன் ஒருவாசகஞ் சொல்லுகிறேனா தேவரீர், திருவுளமகிழக்கடவதென்று சுபத்திரை மணாளன சொல்லத் தொடங்கினான்.

தருமகுணைமேகேட்டருளும்! பூர்வம் யானதெய்வலோகம்போயிருந்தபோது வண்ணப்பெண்ணான ஊர்வசியின் எண்ணத்திற்கிசையாத என்னைப் பெண்தன்மையிலும் ஆண்தன்மையிலும் இழிந்தபேடித்தன்மையாகச் சபித்தாள். அந்தச் சாபத்தால் தளர்ந்து வருந்திய வாட்டத்தை ஆயிரநாட்டமுள்ள அயிராவதத்தன் அறிந்து, அந்த ஊர்வசியினிடத்தில் சென்று என்னடி பாவி! தேவர்க்கநுகூலஞ்செய்த செஞ்சிலைவீரச் சேவகனைப்பரிவகாரியாகிய நீயிப்படிச்சபிக்கலாமா? அடி ஊர்வசியே, இப்போது நீ யிட்டசாபத்தை விலக்கி என்சஞ்சலத்தைத்துலக்கி விடடியென்று வருந்திச்சொன்னார். அவ்வாரத்தைக்கேட்டு ஊர்வசியானவள் நானிட்ட சாபம்

பழுதுபடாமல் இவர் வேண்டும் பொழுதுவந்து ஒருவருடமிருக்கவும்; வேண்டாமென்றபோது அகன்றுபோகவுங்கடவதென்று பிரதிசாபங் கொடுத்திருக்கின்றனள். அந்தநாளையில் வந்தசாபம் தந்தையான இந்திரன் உபகாரமென்றெண்ணிவந்தேன், இப்போதந்த ஊர்வசியிட்ட சாபமானதுநாம் நாடியவழிக்குஉபயோகப்பட்டுநன்மைசெய்கின்றதுபோலாச்சுது.

உதிரக்கறையோங்கிய வேல்தாங்கியகாவலனே! நானப்படியே பேடியுருவமெடுத்து, இம்மச்சராஜனிடத்திலடுத்துப், பெண்களுக்குப் பாதநாட்டியம் படிப்பிக்கவல்லனென்று பகர்ந்து, அவனருள்பெற்று ஆடரங்கசாலையிலிருப்பேன், உன் பெயரென்ன வென்றால், பிரகன்னளையென்றுரைப்பேன், நீ யிருந்த பட்டணமெது வென்றால், தீயிற்பிறந்த திரௌபதாதேவிக்கு நடனத்தொழில் செலுத்தினவளென்பேன்! நீயேதிப்படி வந்தாயென்னில், பாண்டவர்களுடன் பாஞ்சாலியும் வனவாசஞ்செய்யப்போன நாளில நானுங்கூடப் போயிருந்து,ஒரு வருஷம் அஞ்ஞாதவாசஞ் செய்வதற்காக உன்னிடத்தில் அடைந்தேனென்று இசைத்து அரசனைச்சந்தோஷப்படுத்துவதற்கு என்மனங்குவிந்திருக்கிறதென்று பற்குனன்பகர்ந்தான். அவன் கருத்தையறிந்ததருமராஜன் இவையுனக்குத் தக்கதுதானென்று மகிழ்ந்து பக்கத்தில் நின்ற நகுலனைப் பார்த்துப் பாதவிக்கத்தொடங்கினர்.

எந்நாளுமென்னைவிட்டுநீங்காதவிளஞ்சிங்கமே! நீன் சொன்னபடிகேட்டு நடக்கத்தக்கவனேயல்லது உன் சுயபுத்தியா யொன்றைத்தொடங்கிச்செய்யும் வல்லவனல்லவே, மெய்வருந்தும் வேலையிற் பிரவேசிக்கமாட்டாயே, வியர்வுண்டாகமேனிகசங்காயே, முன்பின்னென்று முணராயே, அறியாச் சிறியவனான நீ, சத்துருவின் கண்ணுக்குக் கிட்டாமல் மச்சராஜன் தேசத்தில் உருமாறி ஒருவருடமிருந்து எவ்வாறு காலங்கழிப்பாய்அப்பனே! அஸ்வாருடராஜனேயென்று தருமராஜன்கேட்கச்சிவபெருமானுடன்விற்போரும, மற்போரும்புரிந்த சிலைவிஜயன் தம்பியானநகுலராஜன், அமலனான அண்ணலைப்பணிந்துகமலமலர்போல் முகமலர்ந்து கருணைக்கண்ணா அண்ணாவென்று கழறத்தொடங்கினன்.

தருமப்பிரபுவாகிய தயாநிதியே! தேவரீர் அடியேனுக்குப் படிப்பித்த சாஸ்திரங்களில் அஸ்வசாஸ்திரத்தை முக்கியமாயறிந்தேன், பரிக்ஷையுந் தெரிந்தேன். அதனால் குதிரைகளின் குலமும் - குணமும் - குரலும் - நலமும் - பலமும் - நன்மையும் - வன்மையும் - இறலும் - ஈதும் - தேசமும் - வாசமும் - சீரும் - சிறப்பும் - சித்தமும் - உன்மத்தமும் - பேதமும் - அபேதமும் - முகமும் - கண்களும்-சுழியும் - சுத்தமும் - துலக்கமும் - விலக்கமும் - வருணமும் - ஆரோகணமும் - அவரோகணமும் - வட்டம் - கோணம், - வளைவு-வையாளி - சிறுநடை - பெருநடைசிப்புட்கதிளும், குதிரைப்பிணிகளும், அவைகட்குக் கொடுக்குமருந்தும்-செவ்வையாகத் தெரிந்திருக்கின்றேன், ஆகையால், அஸ்வசாஸ்திர அதிபதியென்ன வேடம்பூண்டு, மச்சகுலாதிபனிடஞ்சென்று, அவனுக்கிச்சை யுண்டாகும்படிக் கிசைந்து பச்சைப்புரவிதாண்டும் பாகனிலுமேலா யிருப்பேன், அவர் என்னூரையும் - என்பேரையும் - என் சீரையும் நான் வந்தவாறையுங் கேட்பாராகில், தருமமிலுயர்ந்த தருமராஜனுடைய நாட்டில் குதிரைநடாத்திவருங் குமரன்யான், என்பெயர் தாமக்கிரந்தி யென்றிசைத்து, அருமைக்குதிரைகளையும் சருளமாய்த் திருப்பிவிடுத்துச், சமயத்திற்குத்தகுந்த சவாரியுங்கொடுத்து, எஜமானனைச் சந்தோஷப்படுத்தி, ஆடையாபரண முதலாகிய பரிசுகளும்பெற்றுக் குதிரைத்தலைவர்கள் கொண்டாடும்படிக்குக்காலங்கழிப்பேனென்றான். அந்தத்தம்பியின் வசனத்தைக்கேட்ட தருமராஜன் மனக்களிப் படைந்து காலத்திற்குத்தகுந்த கோலமாய் நீ கொள்ளப் போகிற தொழில் மெத்தவும் நன்றென்று உரைத்துமன்மதனிலுமுயர்ந்த வடிவமைந்த சகாதேவனை நோக்கிச்சொல்லத் தொடங்கினர்.

ஓகோ அதிபாலியனே தந்தையான பாண்டுமகாராஜன் மார்பிலும் தாயான குந்திதேவி மடியிலும் விந்தகிரிபோன்ற என் தோளிலும் வேற்றரசர்களின தலையிலும் விளையாடிமிதித்து நடைபழகியுலாவிய உன்மெல்லடிகள் செம்பருக்கைக் கற்களுடன் சிவந்த தீப்பொறி கலந்த மலைச்சாரலிலும் வனங்களிலும் திரிந்து பன்னிரண்டு வருஷந் தொலைத்தும் இன்னுந் தீரவில் ன்னஞ்செய்த தீவினையென்றேங்கிக் கன்னெஞ்சனான அன்னவாகன்னே, கார்செறிந்து நீர்சொரிந்த பார்புரந்து தார்புனைந்த பாண்டுராஜனுக்குப் பிள்ளையாகப்பிறந்தும் அருளற்ற என்போல்வார்க்குத் தம்பியாகச் சிறந்தும் சாஸ்திர கலைக்கியானங்களை புணர்ந்தும் சாது சங்கப்பழக்கம் புணர்ந்தும் பழவினையொழியாது அநுபவித்தனையே பாலனே என்னிரு கண்மணியே புத்தியிற் பிரகஸ்பதியும் சுக்கிராச்சாரியும் நிகரென்று சொல்லும் படியாய் மந்திர சாஸ்திரமும்றும் நீதிநூல்முதலிய மற்

றுங் கற்றுணர்ந்த வல்லோனே நீ யெத்தொழில் செய்வாய், எவ்வாறு சிற்றேவல்புரிவாய், எவர்க்குந் தெரியாதிருக்க எந்தவேட மெடுப்பாய், எப்படிநாளைக்கழிப்பாய் என்னிளவலேயென்று கண்ணீர்சொரிந்து ஏங்கியிருந்த தருமராஜனை, திரிகாலமுந்தெரிந்த சகாதேவன் வணங்கிப் பேசத்தொடங்கினான்.

வையகநாடுஞ் செய்யகோலாடும் ஐயனே கேளும், தருமதேவதைக்கொப்பாகிய பசுவினங்களைச் சவரக்ஷணைசெய்யுங் கோபாலவேடங்கொண்டு, விராடராஜனிடத்திற்சென்று பசுக்கள்மேய்ப் போனாகவும், அப்பசுக்களுக்கு நேரிடுங்கோமாரி - அடைப்பன் - தெறிப்பன்- வெக்கை தொம்பை - சூலை - இசிவு - வயிறுப்பல்-பொருமல் - செருமல் - இருமல் - வாய் அசைவு போடாதிருத்தல் முதலியநோய் களைப்போக்கவும், புல்லுள்ள புலத்தில்மேயவோட்டி, நீருள்ளஇடத்தில் தண்ணீர்காட்டி, நிழலுள்ளதோப்பில் மந்தையைக்கூட்டி மடக்கவும், கறக்காப்பசுக்களைக்கறக்கவும், கன்றைமறக்கர்ப்பசுக்களைமறக்கச்செய்யவும், ஆடிககறக்கும்பசு-அதட்டிக்கறக்கும்பசு - அணைத்துக்கறக்கும்பசு - பாடிக்கறக்கும் பசு - பழிச்சுக்கறக்கும்பசு - இவைகளைத்தெரிந்துகொள்ளவும் இப்பசுக்களின்தேசம்-வாசம். குணம்-மணம்- இவைமுதலியதுகளையுமுணர்ந்து நடத்தவும் அறிவேன், உன்பெய சொன்னவென்னில், தந்திரபாலனென்பேன், உன் நகரோதெனிலோ பாண்டவாசளாகிய ஆண்டவமாரிடத்தில் பசுமேய்த்துக்காலங்கழித்தேன், (நந்தகோபாலன்) என்றன மைத்துனனென் றுரைத்து அவ்வரசன் சிந்தைக்கிளிகூறச் செல்வமோ டிருப்பேனென்பதாய்ச் சகாதேவன் சாற்றினன. அந்தவார்த்தையைக்கேட்ட தருமராஜன - மகாதேவ சப்போவென்று பெருமூச்சுவிட்டு, நம்மெல்லோரினுஞ் சிறந்ததொழில்இவன் பெற்றானென்றிசைந்து கற்புக்கணியான பாஞ்சாலியின் மதிமுகத்தை நோக்கி, விதிர்விதிர்த்துவிளம்பத் தொடங்கினார்.

அழகுக்காலயமான அன்னமே, பிறவிச்செல்வ முள்ள பேதையே! உனக்கு அனேகந்தாதியர் ஏவல்ப்பணிசெய்யத் துன்பமில்லாமல் இன்பமடைந்த தோகைமயிலான நீ, எத்தொழி லியற்றிக்காலங் கழிப்பையோ? இளம்பிடியே! என்றேங்கிச் சுவாசமேலிட்டிருந்த ஞானசம்பன்னனாகிய தருமராஜனது மனக்குறிப்பறிந்து பெண்ணிற்சிறந்த பெருந்தகைப் பாஞ்சாலியானவள் கண்ணீருகுத்துக்கழறத் தொடங்கினாள்.

புண்ணியமனமும் திண்ணிய புயமுமுள்ள வள்ளலே! நான் வண்ணப்பெண்ணென்னும் வடிவங்கொண்டு, மச்சராஜனுடைய மனைவியிடஞ்சென்று ஆபரண அலங்காரஞ் செய்யவும், கண்ணுக்குமைதீட்டவும், ஸ்தனத்திற்குத் தொய்யி லெழுதவும் பலவகைமலரொடுத்துத் தொடுக்கவும், கோர்க்கவும், கொண்டையில் முடிக்கவும், இடையில் சேலையுடுக்கவும், நெற்றியில் விபூதிரேகையிடவும், செந்தூரத்திலதம் வைக்கவும், சாந்து சந்தனம் சவ்வாது கூட்டவும், கதம்பப் பொடிகலக்கவும், இன்னும் பலவிதமான சின்னங்களுஞ்செய்ய அறிவேன் உன்னிடத்தில் ஒருவருடமிருந்து காலங்கழிக்க வந்தேன், என்னைக்காதலித்த ஐந்துகாந்தருவர் கணவராயுங் காவலிருக்கிறார்கள். அவர்களைப் பகைத்துப் போராடும் வல்லவர்களில்லை, எப்போப்பட்ட வர்களும் என்னைப்பார்த்துத் தப்பான எண்ணங் கொள்ளப்போகாது, அப்படியே தாறுமாறான நினைப்புக் கொண்டால், நூறு நூறு கூறாய் வேறு வேறாய் மாய்வார்கள் - இப்போப்பட்ட வல்லார்கட்கு இல்லாளான நீ வேலைசெய்ய வெளிப்படுவானேனென்று கேட்டால், என்குலத்திற்குரிய நல்லொழுக்கமும், நாணம் - மடம் - அச்சம் - பயிர்ப்பும், குறைவுபடாமல் பிரதாபம்பெற்ற பாஞ்சாலிக்குப் பணிவிடைசெய்து மாஞ்சோலைக்குயில்போல் விசுவாசத்துடன் வாழ்ந்தேன், அவ்விடம் விட்டிவ்விடம் வரும்படியான அவசியம் என்னவெனில், நல்வினைப்பயன்பெற்றமாதுசிரோமணி வல்வினைவசத்தால் வனவாசம்போனபோது, நானுங்கூடப் போயிருந்தேன், அவர்கள் அஞ்ஞாதவாசஞ் செய்யப்போனார்கள், நான அந்தக்காட்டிலலைந்து, விசனமடைந்து, உன்னுட்டிற்சிலபகல் கழித்து அவர்கள் வெளிப்படும்போது நாம்போய்க் கூடிக்கொள்ளலாமென்று யோசித்துவந்தேன். என்னைச் சேர்த்தாதரிக்க இஷ்டமுள்ளதோவென்று இன்பமொழிபுகன்று அவளன்புடனுரைக்க, ஆசையோடிருந்து, சமயோசித வசனங்கள்பேசி, முன்னிருந்த தாதியொல்லால் நாணைப்பட என்வல்லமையைக்காட்டி, அந்தச் சீமாட்டி இச்சைப்படும்படிக் கனிபல்கூட்டி, நாளுக்கு நாள் பக்ஷமுண்டாக நடந்து அஞ்ஞாதவாசங் கழிப்பேனென்று கற்புக்கொரு பொக்கிஷம்போன்ற காதலிசொல்ல, அற்புக்கருங்கடலாகிய தருமராஜன் கேட்டு வெற்புக்கிணையான சொற்கந்தங்கிய மின்னே! நீ சொன்ன நன்னயமொழியால் நற்பயனைப் பெறுவையென் றுரைத்து இன்னுஞ்சில சொல்லத்தொடங்கினார்.

அன்னநடையும் மின்னலிடையும் பின்னுசடையும் வன்னவுடையுமுடைய மடமானே, என்வார்த்தையை

க்கொஞ்சங்கேளுஞ் செந்தேனே வேதிய ரொழுக்கமும், வேந்தர்நீதியும், மாதர்கள்கற்பும் பொருந்தி, மாதமும்மாரி பொழிவதென்றும், அம்மழையினால் கற்காடுகள் திருந்திப் புற்பூடுகள் பொருந்தி, செந்நெற்பயிரோருக்கி - ஜெகந்தழைத் தோங்குவதென்றும், புண்ணியவான்கள் தவம் புரிவதென்றும், பெரியோர் புகன்றிருக்கின்ற நீதியைக்கேட்டு நெறிமுறைவழுவாமல் நடக்கும் நிலையினை யுடையவள், நீ யாகையாலும், ஒருகற்புள்ள மனையாளைக் கலியாணஞ்செய்துகொண்ட கணவனுக்கு விற்பனவிவேக வேதசாஸ்திரங்களும் பற்பல சுகுணப் பயனும், அன்பும் - இன்பமும் - அழகும் - புகழும் - வெற்றியும் - பத்தியும் - மெய்மையும் - பொருமையும், செல்வமும் - சிறுப்பிடமும் - தீரமும்-குறைவறப் பெருகுமென்று மஹாவாக்கிகள் குறித்திருக்கின்றார்கள். (பாரியையென்பது) பாரியாளெனமருவிய மனைவியானவள், (கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை) என்னுங் கருத்திற்கிணங்க நடக்கவேண்டியது, கணவன் கருத்திற்கு மாறுபடுவாளாகில் அவட்குரிய புருஷனுடைய மெய்த்தவத்தையும், செல்வத்தையும், ஆயுள்முதலிய யாவற்றையும் அழித்து, மீளாநரகத்திற் காளாக்கி விடுமென்று ருக்குவேதத்தில் சொல்லியிருக்கின்றது, பதிவிரதையுடன்கூடி, இல்லற தருமமியற்றி நல்லமனதுடன் வாழ்வுகூர்ந்தபேருக்குக் கீர்த்தியும், பொருளுங் கிடைக்குமென்று உண்மைஞான முணர்ந்தோர் உரைத்திருக்கின்றார்கள், அதற்குத் திருஷ்டாந்த மென்னவென்றால், (மாதாவாகிய சீதாதேவியின் பதிவிரதா மகத்துவத்தால் இராவண கும்பகர்ணாதியரை யழித்துத் தேவர்முதலிய தண்டகாரணிய ரிஷிகளுக்கு அபயங்கொடுத்தளித்த ஸ்ரீராமனுடைய பட்டாபிஷேகக் கீர்த்தியை) பலதரமுங்கேட்டிருக்கின்றனை, நிதமும் அருந்ததிதுதிக்கு அன்னமே,

இப்படிக்கெல்லா மிருந்தபோதிலும், (காவல்தானே பாவையர்க்கழகு) என்னுங் கருத்தின்படிக்கு முதற்காவல் தந்தை, இரண்டாவதுகாவல் புருஷன், மூன்றுவதுகாவல் புத்திரன், இம்மூன்று காவலுக் குட்பட்டிருப்பவர் மகாபதிவிரதையாம், அதுவே பெண்கட்கழகாகும், நாம் அஞ்ஞாதவாசம் பண்ணவேண்டிய இத்தருணத்தில் உனக்கு யாதொரு காவலுமில்லை. ஆனதால், நான் சொல்லவேண்டுவ தென்னெனில், உன்புத்தியைப் பெருங்காவலாகக் கொண்டு, இஷ்ட தெய்வத்துணையை யிடைவிடாமல் நம்பி, நிறையாகிய அழிவின்மையை முறையாய்நிறுவி இக்காலத்தைக் கழிக்கவேண்டும், உனனிடத்தே துஷ்டர்கள்கருதிக் கிட்டவந்தாலும், அந்தமூடர்களை நீ பார்த்தபோதிலும், அவர்கள் கண்ணுக்கெட்டாமலகன்று, அந்தக்கொடுமையாளருடைய துற்புத்திக்கும் உனது சத்துருவின பார்வைக்கும் அகப்படாதிருந்து, இராஜஸ்திரீயிற்குவிரோதம்வராமல் நடந்து, நமக்கு நற்காலம் வருகிறவரைக்கும் இந்தத்துற்காலத்தைத் தொலைத்துவிடவேண்டும் பாஞ்சால கன்னிகையே! என்று பகர்ந்த தருமராஜனுடைய சத்தியமொழியான தருமநீதிகளை உத்தமகுண சாலியாகிய பாஞ்சாலி வணங்கிகேட்டுப்புத்திபுத்தியென்றுபேசத்தொடங்கினாள்.

ஐயா! பொய்யாவிரத புனிதமூர்த்தியே! தேவரீருரைத்த சிலாக்கிய வாக்கியத்தை ஜென்மாந்திர பாக்கியமென்றும், வேதமொழியென்றும், எனதலைமேற்கொண்டேன், தேவரீரமொழிந்த தெவ்வண்ணமோ அவ்வண்ணம் நடக்க அடியாளிருக்கின்றேன், எனக்காகச் சிந்தனைசெய்யவேண்டாம், சத்தியவத்துவின்தத்துவ நிலையேயென்று சரணமேற்றாழ்ந்தாள். அப்பாஞ்சாலிசொல்லிய பாரமார்த்திய மொழியைப் பாண்டுமைந்தன் உணர்ந்து, பரவசமாகநகைத்துத், தௌமியரை நோக்கிச் சுவாமி! அடியேங்களிளைத்த வினையிப்படியாச்சுது. அரசாட்சிமுதற் பெருமையும்போச்சுது, தம்மைப் பணிப்வரைத் தாம்பணியக் காலம்வாய்ச்சுது. இனியெப்படி கட்டளையோ அக்கட்டளைக்குக் கீழ்ப்பட்டிருந்து தமது கிருபையின்படி நடக்கக்காத்திருக்கின்றேம், பரமாகசியபதிதபாவனனேயென்று தருமராஜன் சாற்ற. தௌமியாச்சாரியார் சந்தோஷித்து நீங்கள் ஆறுபேரும்விராடபூபனை யடுத்து, இச்சையின்படிக்குத் திரியாமல், ஒருவருக்கும் தெரியாமல், ஒருவனையொருவர் பிரியாமல் இப்போதிவ்விடத்தில் நிச்சயித்துக் கொண்டபடி வேறுவேடம் பூண்டு அவரவர்க்குறிய தொழில்களை அலுப்பில்லாமலும், அவசரப்படாமலுஞ் செய்யவேணும் அப்படி செய்கிறவிஷயத்தில் களங்கமறக்கற்ற கனவானானாலும், தனக்குமேம் புத்தியோரிடத்தில் ஆலோசித்து நடக்கத்தக்கதென்று நீதிநூலினர் பேசியிருப்பதால், நீங்களுணராத நீதிநெறியில்லை. அப்படிக்குத் தெளிந்த போதிலும், நானறிந்திருப்பதையுங் கொஞ்சஞ் சொல்லுகிறேன, வெறுப்பின்றி விருப்பமாய்க் கேட்டருளுங்களென்று விரதசிலாக்கிய வேதபுரோகிதன் விளம்பலுற்றனன்.

தௌமியர்பாண்டவர்களுக்கு நீதிஎடுத்துரைத்தல்.

ஆ! ஐவர்களே! ஜெகமுழுதும் ஒருகுடையிலாளுமிந்திரனானாலும், திகாந்தவரையிலும் ஒருகொடியிற் ஜெயிக்கும் வீரனானாலும், ஒருவரிடத்தில் சேவகஞ்செய்யப்புகுந்தால், தீரமும் வீரமும் ஒடுங்கிச்சேவகஞ்செய்ய வேண்டுமென்று பாவகநீதி சாஸ்திரத்திற் பகுத்திருக்கின்றது, ஆனதால், நீங்களைவரும் மாறுருக்கொண்டு, விராடனிடஞ்சென்று தொழில்புரியுங்காலையில், உங்கள்பெருமையையும் புகழையும்பேசாமல் மறந்துவிடவேண்டும், பூர்வகாலத்தில் (துளவணிபூண்ட ஆண்டவன் ஒவ்வொரு காரியங்களை நிறைவேற்றுதற்காக எத்தனைபாடேபட்டு அவதரித்துக், காரியசித்திகண்டு கமலசம்பவன முதலாகிய தேவர்களுக்கு அருள்செய்திருக்கின்றார்) அதுபோல் நீங்களும் காலங்கருதி, உங்கள் சிறப்பைமறந்து மச்சராஜனிடமருவி, எவலாளரினும் எளியராயிருந்து காலைக்கழிப்பது நலமாகும். ஒருவனிடத்தில் ஊழியஞ்செய்வதும், அரசருக்கடிமையாவதும், வேறுவேஷங்கொண்டுவேலைக்கவாவதும் கொடுமை கொடுமை இம்மூன்றில், அரசனிடத்தில் உத்தியோகஞ்செய்கின்றமுறைமையும், எவற்றொழில் கேட்குந் திறமையும், அரசன் தயவைச்சம்பாதிக்கவேண்டிய நன்மையும், கீர்த்திதேடுந் தன்மையும், உசிதவார்த்தைசபை மெச்சப்பேசுமுசிதமும், சகிதமும்நானுணர்ந்தபடிக்கு விளம்புகிறேன் திங்கள்குலந் தழைக்கவந்த செல்வராகிய நீங்களகேளுங்கள்.

பகைவருடலிற்பாவிய உதிரமாமிசத்தை முனைத்தலையிற்சுமந்தவேலாயுதந்தரித்த ராஜனானவன் சபைக்குவருமுன்னமே, தனக்குத்தகுந்த ஸ்தானத்தில் தான் வந்திருந்து, அரசன்வாக்கிலிருந்துவருஞ் சொல்லினுடைய பொருள் நுட்பமறிந்து, அந்தச்சொல்லின் சூக்ஷத்திற்குத் தகுதியாக[illegible]தாய்கொடுத்து, மரியாதையாயுடுத்து மனமகிழச்செய்தால், அவ்வரசனது பாக்கியங்களெல்லாம் அவனேபெறத்தக்கயோக்கியனாவான்.

உலகு காவலனாகிய வேந்தனிடத்தில் நாம்வந்தடுத்த அந்நாள்முதல் இந்நாள்வரையிலும் மிகுந்துன்பப்பட்டோம் இதனால் என்னபலன் கண்டோமென்று பலருமறியத்தூறி மனவெறுப்போடொறுத்துக் கொள்ளுகின்ற அவசரப்புத்தி யுடையவர்கள், இனிமேல் இராஜனால் கிடைக்கப்போகிற பெருமை புகழ் ஐஸ்வரிய முதலிய சம்மானத்தைப் போக்கடித்துக் கொண்டவர்களென்றுசொல்லலாம்.

மன்னன்மாளிகைக்கு மேற்பட்டவீடும் அவன்சிறப்புக்கதிகமான சிறப்பும், அவன நாகரீகத்திற்கதிகமாகியநாகரீகமும் அவனலங்காரத்திற்கு அதிகமான அலங்காரமும், அவனாபரணத்திற் குயர்ந்த ஆபரணமும், அவனனுசுகந்த பரிமளத்திற்குமிகுந்த வாசனையும், அவன் வஸ்திரத்திற்குயர்ந்த வஸ்திரமும் அவன்சொல்லிய நீதிபேதிக்கப்பேசுகின்ற துஷ்டவார்த்தையும், மதிப்பில்லாத மரியாதையும், வணக்கமற்ற இணக்கமும் கூடாது இவைகளொருவேளை அதிகப்பட்டிருந்தால், நல்லபாம்பின விஷத்தை நாள்தோறும் அருந்துவதுபோல நன்மையைக்களைந்துஉயிரழிக்குந்தீமையைவிளைவிக்கும்.

பூபதிக்குரிய புத்திரரானாலும், அவர்களாசைக்கரிய மித்திரரானாலும், அவர்களன்பு மேற்கொண்ட பௌத்திரரானாலும், இனவருக்கமானாலும் ஜனப்பெருக்கமானாலும், வெட்டிச்செயிக்கும் வீரமுள்ளசகோதரரானாலும அரசனது ஆணைமீறி நீதிவழுவிநடக்கலாகாது, அப்படிநடப்பார்களாகில் மிகுதியான கோபங்கொண்டுமறு[illegible]மைக்குமாறாக உயிர்வதைசெய்து விடுவார்கள்.

மன்னர்களுக்கு மகிழ்ச்சியைத்தரு மைந்தர்களும் யுத்தமுனையில் வெற்றிபெறுஞ் சத்தியையுடைய சுத்தவீரர்களும், செய்யத்துணிந்து பிரவேசித்த யாதொரு காரியங்களில் எதாகிலுங் காரியத்தாழ்ச்சி நேரிட்டு அந்தச்சங்கதி அவ்விடத்திலிருக்கின்றமற்றப்பேருக்குத் தெரியுமாகில், அதைவெளியிற் பிரசித்தப்படுத்தப்படாது.

திக்கு யானைகளையொத்த திறம்பெற்றவர்களானாலும் வேந்தனால் முடியாதகாரியத்தை நானேமுடிக்கிறேனென்று வீரியம் பேசப்படாது.

இராஜன் நமக்கு மிகுநேச விசுவாசமாயிருக்கின்றானென்று அவனிடத்தில் தனக்கினிமையான காரியங்களைச் சொல்லி முடித்துக்கொள்ளுகிற பக்ஷமானது அந்தராஜனை அடுத்திருக்கிற சிலபேருக்குத் துன்பத்தை விளைக்குமாகில் அதுமகா கொடுமையென்றறிந்து புத்திமான்கள் ஒருபோதும் பிரஸ்தாபத்திற் கொணடுவரப்படாது.

தாங்கள் நினைத்த காரியங்களில் யாதொருபயனுமில்லா திருக்குமாகில், வித்வச்சிரேஷ்ட மகத்துக்கள்

கூட்டத்தில் அர்த்தப்பயனில்லாச் சொல்லைப்பகர்ந்து பழிப்புக் கிடமாகிய இழிவடையப்போகாது.

ஆலோசனையி லுயர்ந்த பேரறிவாளர்கள் ஏழையெளியோர் முதலியயாவரானாலும் அவர்களைக்கடிந்து, கறுவி(வெட்டெனப் பேசுதல்விட்டிடலென்று)மேலோருரைத்தநீதியை நினைத்துக் கோபங்கொள்ளக்கூடாது.

வீரமுடைய வேந்தனிடத்தில் உரிமையாயிருப்பவர்களைப் பகைத்துத், தன்னருமைபெருமை கொடுமை முதலிய ஆணவப்பேச்சால் விரோதமாகத்தூறிக் கடினவார்த்தைகள் சொல்லப்படாது, அப்படி விரோதிப்பார்களாகில், எவராலு மாற்றப்படாத கூற்றுவனைக்கொல்லுங் கொலைத்தொழிலை நாளுக்குநாள் விளைக்குமென்று நன்றாயுணர்ந்து யாவருக்கு நல்லவர்களாய் நடந்துகொள்ளவேண்டியது.

தராதிபன் கொலுக்கொண்டிருக்குஞ் சபையில் தாராளமாய் எதிரில் நிற்கப்படாது, அரசனுக்குப் பின்புறத்திலு நிற்கப்படாது.

சிங்காசனத்திலிருக்கும் வேந்தனுக்கு இருபக்கத்திலு நெருங்கிநின்று. அவனுடைய கண்கள் யாரைப்பார்க்குமோ? என்றும் அக்கண்ணோக்கானது கருணைநோக்கோ கலகநோக்கோவென்றுங் கண்டறிந்து காலமுமிடமுங்கருதி நடக்கவேண்டும்.

அவ்வரசனுடைய வாக்கிலிருந்து வருகிற வசனத்தைக் கண்சிமிட்டாமற் பார்த்துக், காதுகொடுத்துக் கேட்டு எவர்களுக்கென்ன சிலாக்கியமோ, ஏழைகளுக்கென்ன பாக்கியமோ? எதிரிகளுக்கென்ன அபாக்கியமோ என்று யோசித்துக்கொள்ளவேண்டியது.

அரசன் அரண்மனையிலுள்ள நன்மைதீமைகளைத் தானறிந்தாலும், ஒருவரால் கேள்விப்பட்டாலும், இராஜகாரியங்க ளேதுவானாலும், மற்றொருவருடனசொல்லாமல், மறைக்கவும் வேண்டும் உடனே அதைமறக்கவும்வேண்டும்.

அந்நியர் முதலிய மன்னவர்களால் சண்டைசச்சரவு பொல்லாங்காகிய கட்டுவார்த்தைகள் நேரிட்டுக் கேள்விப்பட்டால் அதைக் கெட்டியாய் விசாரித்துத், தீர்க்காலோசனைசெய்து, உடனேதன் எசமானனுக்குத் தெரியப்படுத்தி மேன்மையைப்பெற்று, அவ்வரசனுக்கு மெய்ப்பட்டப் பொருந்தியிருப்பதுவே அழகுக்கழகாகிய அணியை யுண்டாக்கும்.

ஐம்புலாதிகளை அடியோடறுத்து, ஆசைமூன்றையும் வேர்களைந்து ஆரண்யத்தில் வாசஞ்செய்கின்ற அருந்தவத் தோர்களையும், கலைவகிமிர்ந்த சலவையணிந்த கலசமுலையார்களின் கடைக்கண் மருட்டுமாகில், பஞ்சேந்திரியங்களுடன் நாட்டில் வாழுகின்ற நம்மை விட்டுவிடத்தக்கதோ? ஆதலால், இராஜஸ்திரீகளிருக்கு மிடத்தில் தனித்துப் போகப்படாது; அவர்களுடன் சரசவார்த்தைகள் பேசப்படாது.

நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு, என்னும் இந்நான்குமமைந்த ஸ்திரிகளிடத்திலும், குள்ளனிடத்திலும், கள்ளனிடத்திலும், சிறுபிள்ளையினிடத்திலும், ஈனஜாதியினிடத்திலும், சிநேகஞ்செய்யலாகாது, சிநேகம்பண்ணினால் உடனே கலகநேர்ந்து அவமரியாதைக்குள்ளாக்கி உயிர்த் தண்டனைவரையிலுங் கொண்டுபோய் விட்டுவிடும்.

உலகமெல்லாந் தொழுதற்கரிய உயர்ந்தோராயினும், சிங்காசனக் கொலுமுகநோக்கிச் சென்றால் அவ்வரசன் தனக்கு மரியாதை செய்திலனென்றும், வாகனங் கொடுத்திலனென்றும், வசனித்திலனென்றும், ஆசனமளித்திலனென்றும், போஜன மருத்திலனென்றும், வரிசைவண்மை மணியணிப்பணி தந்திலனென்றும் விசனமேற்கொண்டு குரூரப்படலாகாது, ஒருவேளை அக்கொற்றவனால் சகலவெகுமானமும் பெற்றால் உடல்பூரித்துத், தன்னைத்தானே மறந்து, மனமகிழ்ந்து கர்வங்கொள்ளப்படாது, அதிகசந்தோஷம் அதிகதுக்கந்தருமென்று சாஸ்திரஞ் சொல்லுகின்றமையால், அவ்வரசனாலப்போதே அவமானநேரிட்டாலும் நேரிடும்; அதைக்குறித்து சிந்தை வாடப்போகாது.

அரசனால்வந்த நன்மைதீமையிரண்டுஞ் சமமாகக் கொண்டு சஞ்சலமில்லா திருந்தவர்கள் எல்லாமுணர்ந்தவல்லவர்களென்று இயம்பத்தக்கவராம்.

இராஜன் ஒருவர்மீது கோபங்கொண்டு அவன்செல்வங்களைக் கைக்கொள்ளக்கருதிய காரணத்தைத் தானறிந்த துண்டாகில், அந்தப்பேச்சை யாரிடத்தும் பேசலாகாது, அதைக்குறித்தரசனையு மேசலாகாது.

கார்மேகங்கலந்து பொழிகின்ற மழையிலும், ஊர்வெந்து உலர்ந்து கரிந்துபோகக்காயும் வெயிலிலும் மைசாசு நித்திரைசெய்யும் பாதிராத்திரியிலும் கைசாயவீசிமோதுங் கடுங்காற்றிலும் வேந்தன் ஒருவேலையாக அனுப்புவானாகில் தன்னிடத்தில் சொல்லிய காரியமே க

ண்ணுகக்கொண்டு தான்போன அந்தக்காரியத்தை முடித்து வரவேண்டுமல்லது வேறொன்று நினைக்கப்படாது.

இராஜகாரியம் நிறைவேறுகிற வரையிலும் சோகம் சோம்பல் தேகவருத்தம் பசி இளைப்பு ஆயாசம் தாகம் மனஸ்தாபம் நித்திரை பெருமை அருமை இருமை இவைமுதலிய ஒன்றையும் பொருளாய்க் கொள்ளாமல் மானத்தையும் மன்னன்சொன்ன நியானத்தையும் முக்கியமாய்க் கருதி முடிவுபெற நடத்திவரல்வேண்டும்.

கொலுமுகத்தினின்ற வொருவனையழைத்துப் பகைவர்மேலனுப்பினால் அப்பகைவர் குடிகெடும்படி வென்று தங்களரசாட்சியைக் காக்கவேண்டும், அவ்வரசனைத் தங்கள் தங்கள் கண்மணிபோற் பார்க்கவேண்டும், எந்தவேளையும் அரசனைப்புகழ்ந்து பேசவேண்டுமல்லது எப்போது மிகழ்ந்துபேசலாகாது.

உற்றதுணையாய்க் கொற்றவனேசம் பெற்றிருந்தாலும் அரசனவனை உயிர்போல் வைத்திருந்தாலும், அவனது பொன்னைப் பொருளைப் பூமியை சேமியைக் கனனக்கோற் கள்வரைப்போல்வைகப்பற்றக் கருதலாகாது, கணக்குமுதலிய காரியங்களிலும் மறந்தும் வழுவலாகாது ஒருவேளை, இராஜன் சந்தோஷமடைந்து பொன்னைப் பொருளைப் பூமியை மாளிகையை மனையைக் கொடுப்பானாகில், ஆசை அன்புடன் அவைகளைப் பெறத்தக்கது மற்றோருபாய தந்திரங்களால் கிரகிக்க நினைப்பது ஆலஹாலவிடத்தை அமுதென்று நினைத்த ஆசைபோலாகுமென்று அறிவிலுயர்ந்தோர் மோசம்போகாமல், கிடைத்தவரையிலுந் திர்ப்தியடைந்து சத்திய தர்மந்தவறாமலிருப்பார்கள்.

இதனறியும் (காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளு கருப்புள்ளபோதே சாற்றிக்கொள்ளென்னும்) பழமொழியைநினைந்து இந்தக்காலத்திற் சம்பாதிக்காமல் இனியெந்தக்காலத்திற் சம்பாதிக்க[illegible] போகிறோமென்று கைகொண்டவரைக்குங் கொள்[illegible]டிப்பதற் குடன்படுவோர், ககடா[illegible]வரொன் றுரைக்கப்படுவதுமன்றி முன்பின்னுள்ள [illegible]தலுமிழந்து மூளையுமழிந்து தேசப்பிரஷ்டத்துவ[illegible]ார்கள்.

கொலுக்கொண்டிருக்[illegible]ங் கோவேந்தன் சபையில், பொய்புரட்டு பெரு[illegible] டம்பம் சம்பம் தும்மல்விக்கல் கக்கல் கொ[illegible]ட்டை சோம்பல் கொட்டாவி குறுகுறுத்தல் இமிர்வி[illegible]தல் இவைமுதலாகிய துற்குணங்கள் வரக்கூடாது ஒருவேளை வருமாகில் அந்த இடத்தைவிட்டு அப்பாற்போய்த் தீர்த்துக்கொண்டு வரவேண்டும்.

களிப்பாகச் செய்யுஞ் சயப்பாகிய வஸ்துக்களைக் கனவிலும் கருதப்படாது, அதையுட்கொண்டு காவலன் சமுகமேறப்படாது (கண்ணாரக்கண்டதும்பொய், காதாரக்கேட்டதும்பொய், தீர விசாரிப்பதுவேமெய்) இதுமுதியோர் மொழியாதலால் யாதொரு காரியத்தையும் நாவடக்காமற் பதறிச் சொல்லப்படாது, அப்படிச்சொன்னவர்களுக்குப் பெருந்துன்பத்தையும் மனுஷப் பதரெனனும் பெயனாயும் வருவிக்கும்.

அரசனால் நியமித்த குற்றவாளிமுதலிய கொலையாளருடன கூடிக்கலந்து குலாவலாகாது, கூடினால், இவனும் அந்தக்குற்றங்களுக் குரியவனாவான.

அரசன் கைபெடுத் தழைத்தால் ஆனந்தப் படாமல் அந்தகனழைக்க வந்தபோது, அவனைக்கண்டு நொந்துழுகின்ற அறிவில்லா ருயிர்போலொடுங்கி, யடங்கி, வாய்பொத்திவணங்கி வரவேண்டும்.

இராஜனா லழைக்க வரும்போது, பூமியதிரத் திடுதிடென்று நடந்து அலட்சியமாய்ப் பதறிவரலாகாது (அடக்கம் அமரருளுய்க்குமென்னும்) வாக்கியத்திற் கிணங்க மருவிச்சுகம்பெறவேண்டும்.

வெற்றிவேலேந்திய வேந்தனிடத்தில் கட்டிக்காத்துப் பொருந்தியிருப்பவர்கள் கொசுகுபோன்ற சிற்றறிவுடையவரானாலும், அவர்களோ டெதிர்த்துப் பகைத்துக்கொள்ளப்படாது; அவர்கள்பகையானதுநல்லதருணத்தில் கழுத்துக்குக் கத்தியாய் வந்துநேரும்.

இவ்வரசனிடத்தில் வெகுவாகிய செல்வமும் சுபமாகிய இன்பமும் பெறுகிறதற் காகவல்லவோ எந்நேரமுங்கோள் குண்டிணிசொல்லி, நயிச்சிகமாக நடந்துகொண்டானென்று அரசனைச் சூழ்ந்திருப்பவர்க ளியாவரும் இகழ்ச்சியாய்ப் பேசிக்கொள்ளும்படிக்கு இடங்கொடுத்துப் பலவிதவளங்கள்சுபலமாய்க் கிடைப்பதானாலும் அறிவினையுடையோர் அவ்விதப் பழிச்சொல்லுக் காசைவைக்கார்கள், இராஜன் கொண்டாடிப் புகழ்ந்தபோதிலும், பேரறிவகன்ற பெருஞ்செல்வப் பெரியோர்கள் வெகுபேர் நம்மை மெச்சவேண்டுமென் றிச்சைகொண்டு, தன்னைத்தான்மறந்து, ஆணவத்தாற்சிறந்து அகந்தைகொள்ளமாட்டார்கள்.

பரிசுத்தவான்களாகிய உத்தமர்கள் உலககாவலனாகிய அரசனையும். உபதேசஞ்செய்தருளிய குருவையும், வித்தியாப்பியாசம் பண்ணிய உபாத்தியாயரையும், முத்திபெறுதற்குப்பெற்ற தந்தையையும், பத்திசெலுத்து

ந் தெய்வத்தையும், தந்தையெனச் சிந்தித்துத் தினமுமேத்தித் தொழுது, வாழ்த்திப்போற்றுவார்கள்.

ஆதலால், நீங்களெவரும் இவ்வகையான உலக வியற்கைகளை மனதுட்கொண்டு விராடராஜனையடுத்து, நாள்தோறுங் குற்றமற்ற ஏவற்றொழிலைமுடித்து, அகந்தையற்ற மனத்தினராய்ப் பெருமைபொருந்தி, இன்சொல்விளைத்து அஞ்ஞாதவாசம் ஒருவருஷமுங் கழிப்பீர்களாகில், அது உங்களிடத்திலுண்டாகிய நல்ல நினைப்புக்குத் துணைக்காரணமாயிருக்குமென்று தௌமியாச்சாரியார் சொன்னார். அப்போது, பர்வதாகிர்தியாகக் குவிந்த தோளினையுடைய பாண்டவர்கள் ஜெயங்கொண்டதைப் பார்க்கிலும் மேலான விருப்ப முடையவர்களாய்ப் பௌரோகிதருடைய மனமகிழச் சொல்லலுற்றார்கள்,

ஓ! வேதியர்பெருமானே? காவலனிடத்தில் ஏவல்செய்யு முறைமைகளை எங்களுக்கின்று கற்பித்தருளினீர் குறைவற்ற தவராஜ தந்தையே நீருரைத்த திவ்விய மொழிகளை வேதபாடங்கட்குஞ் சந்தைபோலுஞ் சிந்தையுட்கொண்டோம் இனிமேல் நாங்கள் மறைந்துறைந்து ஒருவருடந் தொலைக்கிறவரைக்கும் தேவரீர்தவவேடம்பூண்டு மாதவர்கள் வாழும் வனமடைந்துமருவத்தக்கதென்று. செந்தாமரைபோன்ற அவரது திருவடியைத் தொழுதுபோற்றி. இதுவரையிலும் பத்தியுடன் பூசைபண்ணிக்கொண்டுவந்த நித்தியாக்கினியை நெறியோடளித்தார்கள்.

தௌமியர் - ஐவரிடத்தில் ஔபாசாக்கினியைப்பெற்று தவத்துக்கேகல்.

விசுவாசமாய்ப் பூசித்துவந்த ஔபாசாக்கினியைத் தௌமியாச்சாரியார் கைப்பற்றிக்கொண்டு பாண்டவர் ஐவரையும் பட்சமாய்நோக்கி, அருள்மலர் முகத்தோடு ஆசிர்வதித்து, அவ்விடம்விட் டெழுந்து மாசற்றமாதவர் நிறைகின்ற வனம்புகுந்து தேசுற்ற தவத்திற் சிர்பெற்றிருந்தார்.

இப்பால் பாண்டவர்களுக்கும் துரோபதாதேவிக்கும், பணிவிடை செய்துவந்த் பாங்கியர்களைப் பார்த்து நாங்கள் ஒருவருடம் ஒளித்திருக்குங்காலம் நேரிட்டபடியால், அதுவரையிலும் நீங்களியாவரும் விசனப்படாமல் மான்களுலாவும் வனஞ்சூழ்ந்த பாஞ்சாலதேசஞ் சேர்ந்திருங்களென்று அவர்களுக்காதரவு சொல்லியனுப்பிவிட்டுப், பெருமையிற்சிறந்த்பாண்டவர்கள் மகாலட்சுமிபோன்ற பாஞ்சாலியுடன் சிலதூரம் போகையில், தருமராஜன் தன் தம்பியர்களைநோக்கிச் சொல்லுகின்றார். ஓ! என்னருமைச் சகோதரர்களே ! நாம் இந்த இராஜன் சார்பிற்சார்ந்துவேலைத்தொழில் நடத்துநாளில் நமது காத்திலிருக்கும் ஆயுதங்களை ஒருவருமறியாமல் ஒளித்துவைப்போமாகில், நம்மைச்சத்துருக்கள் முதலாகிய யாவருங்கண்டு கொள்ளமாட்டார்களென்றார்.

அந்தச்சொல்லைக்கேட்ட அருச்சுனன்வணங்கி அண்ணாவே! தேவரீர்சொன்னது நியாயந்தானென்றுவாய்விட்டிரைந்தோங்கிப் பெற்றதாயைப்பிரியுங் கன்றுபோலேங்கிப், பதைபதைத்து வெற்றிகொண்ட காண்டீபத்தையும், அஸ்திரநிறைந்த அக்ஷயத்தூணியையும்,சஸ்திரமாகிய மற்ற ஆயுதங்களையுங் கஸ்தியுடன் சுழற்றிக் கொடுத்தான்.

மாருதி மைந்தனாகிய வீமசேனனும் வாரிதிபோற்பொங்கிச், சேருதற்கரிய கோபங்கொண்டு, சிந்தைசோர்வடைந்து, துன்பந்தாங்கிநைந்து, மேகங்கள் வெளுக்கச் சிதைக்கும் வில்லையும், நாகங்கள் பதைக்கவதைக்குங் கதையையும், மோகமும் மானமுமுடைய படையையும் சோபத்துடன் அயர்ந்து மனமுருகிவைத்தான்.

நகுல சகாதேவனென்னுந் தம்பியரிருவருந் தலைவனாகிய தருமராஜனுரை தவறாதவர்களாய்ப், பல்லோருங் கவலைகொள்ளும் வில்லாயுதமும், வேலாயுதமும்,வாளாயுதமும், தோமராயுதமும் சூலாயுதமும், கேடகமும், அம்பறாத்தூணியும் அவிழ்த்துக் கொடுத்தார்கள்.

ஒப்பில்லாச் சித்தசுத்தமுள்ள தருமராஜன் தன்னுடைய ஆயுதங்களையுங் கூடவைத்து, மொத்தமாகச் சேர்த்து இவைகளையொருவரும் உணராதிருக்கும் இடந்தேடி வைக்கவேண்டுமென்று யோசித்துச்,செழுமையுடன்வளர்ந்து இருளுக்கிருப்பிடமாகவுயர்ந்து தழைந்து கவிந்திருந்த ஒரு வன்னிமரத்தோப்பின் வளப்பத்தைக்கண்டு, மகாசந்தோஷங்கொண்டு அதில் ஓர் மரப்பொந்தில் இவ்வாயுதங்களை வைத்துப், பகைவர் முதலாகிய பலருக்குந்தோன்றாமலிருக்கவேண்டுமென்று மான் தோலால்மறைத்து, மூடிக்கட்டும்படிக்கு வீமசேனனுக்கு உத்தரவுசெய்து தருமசொரூபியாகிய தார்வேந்தன் தந்தையாகிய யமதருமராஜன் திருவடியைச் சிந்தித்து, வந்தித்து சுவாமி? எங்களுக்கு வெற்றியையும் வீரத்தையுங் கொடாநின்றஆயுதங்களைத்தையும் இந்தவன்

ணி விருட்சத்தில் வைத்திருக்கின்றோம் இதுகளை - நாளாவது நாளாவது - எடுக்கத்தக்கதேயன்றி மற்றியார்வந்தெடுத்தாலும், இம்மரத்தின்கிளையை யடுத்தாலும், பெரும்பாம்புருவாய் ஆலாலவிடத்தைச் சுவாலாமாலிகையாய்வீசி வெகுண்டு மேல்விழக் கடவதுகளென்றுபேசிக், கட்டுரையாகிய உறுதிமொழியால் இடத்த வரத்தைப்பெற்று அவ்வரத்தைப் பரீட்சிக்கவேண்டி, வீமசேனனையழைத்து நீ பத்திரப்படுத்திய படைகளைப்பாரென்னுரைத்தார். அப்போதே வீமசேனன் அந்த மரத்தின் கிளைமேற்சார்ந்து எட்டியெடுக்கக் கிட்டியபோது மட்டுமிதமற்ற கொடுவிடத்தைக் கூபீரென்றுகக்கி அழலால் தகித்துப் பெரும்பாம்புருவாகித் துரத்துவதைக்கண்டு பேச்சுமூச்சடங்கிப், பொறி புலன் கலங்கிப், புலம்பிப் பொன்போன்ற முகங்கிரிந்து, இளைத்தகன்றிறிந்த வியற்கையைக் கண்டு தருமராஜன் முதலிய யாவருந் துதிக்கைபெற்ற யானைபோல் துயர்நீங்கி மகிழ்ந்துதூர்க்கையின் திருவடிதொழுது, அவ்விடம்விட்டு நீங்கிச், சிலதூரத்திற்கப்பாலிருக்குஞ் செந்தாமரைப் பொய்கையைச் சேர்ந்து, ஸ்நானம்பண்ணி, நீர்துவட்டி, நெடுமயிராற்றி, வேதவிதிப்பிரகாரம் மத்தியானக்கடன் முடித்துத், திருத்தந்தையின் பதத்துணையைச் சிரமேற்கொண்டு, திக்குநோக்கித் தெண்டனிட்டுத் தென்றிசைக் கடவுளாகிய தெய்வமே நாங்களெடுக்கவேண்டிய வேடத்திற்குத் தகுந்த உபகரணப் பொருள்களெல்லாம் உதவிசெய்து, சுஜாதிகப்பிரகாசமுந் தந்தருள வேண்டுமென்று வருந்திக்கேட்ட தன்மகனாகிய தருமராஜனிஷ்டப்படிக்கு யமதருமராஜன் அநுக்கிரகஞ்செய்தருளினர்.

பாண்டவரைவரும்பாஞ்சாலியும் மாறுவேடங்கொள்ளல்.

செங்கோற்கடவுளது திருவருட்பயனால் தருமபுத்திர மகாராஜன ஒளிவிடுங்கிரணவுதய சூரியன்போல் சதுர்வேத சம்பன்னனுருவாய்த், தழைத்தபின் குடுமியும் செழித்த முப்புரிநூலும், கவித்தவெண்குடையும், பிடித்த தண்டுகமண்டலமும், விபுலபட்டஞ்சு வேஷ்டி யுத்தரீயமும், காதிற்குண்டலமும், கையிற்பவித்திரமும், கண்டவர்மதிக்கும் புண்டரநுதலும், கடாட்ச வீட்சண்யமும், கரஜெபமாலையும், கனிவுறும் வாக்கிற் பனிமொழியாசியும், முகிவரிற்சிறந்த முகவிலாசமுமுடையவரானார்.

மற்போர் வல்லவனாகிய வீமன் - மடத்தொழிலாளருருவமமைந்து நுதற்கிசைந்த திலதவகையும், செவிக்கிசைந்த இருமணிகளையும், பாகசாஸ்திரப் பேச்சும், சந்தனபாளிதப்பூச்சும், தாழ்ந்தகைவீச்சும், சரிகைத்தாப்தாஷால்வைப் போர்வையு முடையவனாகிச் சிருஷ்டிகர்த்தாவினாலுஞ் செய்தற்கரிய நூதனவேடங் கொண்டான்.

மண்ணுலகத்தாரும் - விண்ணுலகத்தாரும்-போற்றிவிரும்பும் பவளமலைபோன்ற பரமசிவமும், அப்பவளமலைமேற் படர்ந்த பச்சைப்பசுங்கொடிப் பார்வதியாரும, ஆசைப்பெருக்கோடடுத்து முன்னின்று, அருட்பார்வையளிக்கத், தன்னிலைதவறாத் தவத்திலிருந்து, உன்னியவை யொருங்குடன்பெற்றுக் காட்சிகண்டருளிய காண்டீப அருச்சுனன் கண்ணுதலுடன கலந்து விளையாடியதன திருமேனிப் பிரகாசத்தை நீக்கி, வாசனைதங்கு மலர்க்குழலும், கலகலவென்னுங் கைவளையும், உடலைமறைக்கும் அரைச்சட்டையும், கருங்குவளைபோன்ற கண்களும், உடுக்கைக்கிணையாஞ் சிற்றிடையும், உயர்ந்தசரிகைப் பட்டுடையும், உலவுஞ்சொகுசாகிய நடையுஞ், செந்தூரப்பொட்டணிநுதலுந், தாளக்கோல் முதலிய சதங்கையும் உடையவனாய்ப்பேடியரி லுயர்ந்த பேருருவமைந்தான்.

பின்னவரிருவரில் - முன்னவனாகிய நகுலராஜன், தலைப்புறத்துங் காதின்புரத்துஞ் சுருள்செய்து கத்தரித்துவிட்ட மயிர்க்குச்சும், வனனப்பிச்சமும், முறுக்குமீசையும், கனகமயச்சருகிணை கலந்துகட்டிய வண்டிற்பாகையும், நெற்றிக்கோபியும், சஞ்சுகக்கவசமும், கலகலவென்னுங் குதிரைச்சம்மட்டியும், சீதிகைபழக்குங் கயிறுங்கொண்டு - குணமும் - குற்றமும் - கோணமும்- வட்டமும் - வளைவுமாறலும் பிணிவருவிதமும் - பிணிதீர்க்குமவுஷதமு முணர்ந்த குதிரைப் பாகனைப்போல் குறைவில்லா வடிவெடுத்தான்.

மகாசிற்பன விவேக சகாதேவன் சிகில் நிறைந்துயர்ந்த கொண்டையும், வளர்ந்ததாடியும். கிளர்ந்தமீசையும், செம்மண் - வெண்மண் - திலகக்காப்பும், கருங்கம்பளமுங், கச்சப்பையும், கயிறுங், கோலும், கன்றின் வாய்ப்பூட்டும், காதணிக்குழையும், தாதுகுதழையும், கந்தைவேஷ்டியும், பெருங்குரல்த் தாட்டியு முடையவனாய்ப், பலகோடி பசுக்களைப் பாதுகாக்குங் கோபாலனைப்போல் வடிவமானான்.

வேலாயுதம்போன்ற கண்ணினளாகிய பாஞ்சாலி தலைசீவி வகிர்ந்து, கூந்தல்விட்டுமுடிந்து, நெற்றிக்குச்

கூட்டிகட்டி, நீலவிழிக்கு மைதீட்டி, இரத்தினப்பணிகள் பூட்டி, வாசக்கலவைப்பொடிகூட்டி அண்ணல்முதலிய ஐவருங்கண்டுவண்ணமகளுருவாமெனச்சமைந்தாள்.

இவர்களறுவருந் தாங்கள், நிச்சயித்துக்கொண்ட வண்ணம் வேறுவேடந் தாங்கி ஒருவரையொருவர்பார்த்து உற்சாகமடைந்து, மச்சராஜனிடத்தி லொருவருடம் வாழலாமென்று இச்சைமேற்கொண்டு, அச்சமில்லாதவர்களா யிருந்தபோது, மறுவகன்ற தருமராஜன் மனமகிழ்ந்து, பலவிதவுபாய வளப்பமும் பேசித் திறமுடையவர்களே! ஊன்நாறும் வேலோங்கிய விராடனிடத்தில் நான்போய்ச் சேர்ந்தபிற்பாடு நீங்களெவரும் முறையாகத் தனித்தனிவந்து சேருங்கள். நானவ்விடத்தி லிருப்பதால், என்னைநோக்கி வணங்கி யிணங்கி போற்றுதற்கெளிதா யிருக்குமென்று விளம்பிக்கிளம்பிய அறக்கடமை நீங்காத அண்ணலைவாழ்த்தித் தம்பிமாரும் பாஞ்சாலியும் பாதவித்துவாட, தேவர்முதலிய யாவருங் கொண்டாட, மாதவவேதியர் வடிவங்கொண்ட தருமராஜன் கங்கபட்டனென்னுந் திருநாமமும் இளஞ்சூரியன்போற் பிரகாசமும் - பாற்கடலைபோல் முப்புரிநூலும் - பரந்தமார்பும் உயர்ந்ததோளும்-வெகுவுலாச - முகவிலாச - மந்தஹாச சுகந்தவாசமாலையுமுடையவராய் - விகட - தடகட-காடவாரணம்போற்சென்று, மராட - கர்நாட - கன்னட - கிராட் - மலைநாடர் - வந்திறைஞ்சு - மணிக்கத வமைந்தவாசலிற்போய்நின்று வெண்குடைநீழலில் நன்குடன்பொருந்திய விராடராஜனுக் கறிவிக்கச்சொன்னார். அவ்விடத்திற் காவலிருந்த தூதுவர்சென்று, வாய்மூடிக்கைகட்டிச் சுவாமி! பராக்கு யாரோவொரு பெரியவர் நமது கொலுமுகவாசலில் வந்திருக்கின்றா ரென்றார்கள். அவர்கள் பேச்சைக்கேட்ட மச்சராஜன் உடனே எதிரோடிச்சென்று ஐம்புலனொடுங்கப் பணிந்து, முகமலர்ந்து, அகங்கனிந்து கரமிரண்டுங்குவித்துச், சிரத்திற்பொருத்திக் கருத்தில் துதித்துச் சேவித்துநின்றான். உடனேகங்கபட்டர், மங்களானிபவந்து என்று உபசாரஞ் சொல்லி, இடதுகையை வலதுகையுடனெடுத்து ருக்குவேதசாகையினால் ஆசீர்வசன முரைத்தருளினார். அந்தவிராடன் சபையிலிருந்தயாவரும், வந்தவேதியர் பெருமானைக்கண்டு, விந்தையென்றுட்கொண்டு தொழுதார்கள் அந்தவேளையில், சந்திரவிம்ப பிரமதேயசுஜோலித சோப்பியமாயிருந்த கங்கபட்டரால், மங்களாசனம் பெற்றமச்சராஜன் அவரை இச்சைமேலான பட்சத்துடனழைத்துப்போய், வைதீகர்க ளிருக்கவமைத்த ஆசனத்தில் எழுந்தருளப்பண்ணி அவருபயதிருவடிக்கு அருக்கியபாத்தியம் - ஆசமநீயம் - அபிஷேகம் - வஸ்திரம் - புஷ்பம் - அரிச்சந்தனம் - அக்ஷதை - தூபம் - தீபம் - நைவேத்தியம்-இவைமுதலிய உபசாரங்கள் யாவும்புரிந்து, பக்திசெலுத்திப் பரிந்தேற்றிப்போற்றி, வாய்பொத்தி நின்று, சுவாமி? தேவரீர் யாரையா, எவ்விடமிருப்பது இவ்விடத்திற் கெழுந்தருளிய காரணம்யாது, தங்களுடைய நாமதேயமென்ன? என்றுகேட்டான். அதற்குக் கங்கபட்டர் சொல்லுகின்றார். ஓ! அதிதீவிரபக்குவமுள்ள அரசனே? இந்தச் சக்கிரவாளஞ் சூழ்ந்தபூமியை ஆக்கினைச்சக்கரஞ்செலுத்தியாளுந் தருமராஜனுடன் பழகியிருந்தேன், அவர்வனவாசம்பண்ணிய நாளையிலுங் கனநேசம்பண்ணிக் கலந்துதிரிந்தேன், என்னைவிட்டொருவருடம் பிரிந்திருக்கவேண்டி வந்ததால், நான்உம்மிடத்திற்சிலநாளொழிக்கலா மென்று வந்தேனென்று வேள்வியினாலும் கேள்வியினாலும் மிக்கோனாகிய தக்கோனுரைக்க, மறுநீதிதவறாத மச்சராஜனகேட்டு, மதியால்மகிழ்ந்து, துதியாற்புகழ்ந்து, பரவசமடைந்து, தெளிவாகிய அறிவும் - அன்பும் - ஆசையும் - உள்ளக்களிப்பும் - ஒளிவிட்டிலங்க, ஓ, என்ஆண்டவனே! தேவரீர் இந்தப்பட்டணத்திற் கெழுந்தருளிய பிரயோசனமானது நான் எழுபிறப்பிலுந் தேடிக்கொண்ட நல்வினையின் நலமேயல்லது வேறில்லை. ஆதலால் நாத கீத வேத முநிவராகிய தேவரீர், இவ்விடத்தி லெத்தனை நாளைக்கிருக்க இஷ்டமோ அத்தனைநாளும் அதிபதியாயிருக்கலாமென்று, வித்தகவிராடன் புத்திமேற்கொண்டு சொன்னான். அவ்வாறே புநிதமாகிய சிங்காசனத் திருந்து வேதியர்முதலிய மாதவரும் பலஜாதியரும் தொழப்பவளச்செபமாலை கரத்தில் குவளைத்தொடைமாலை உரத்தில் தரித்ததருமராஜன் இருந்தருளினார்.

பின்னுஞ் சிலநாள் சென்றபிற்பாடு விற்போருக்கும், மற்போருக்கும் இவன்தா னென்னும் பலம்பொருந்திய கதாபாணியாகிய வீமனென்பவன், தான்தெளிர்ந்த தேவாமிர்தத்திற் கொப்பாகச் சமையல் செய்யும் பக்குவத்தைக் குறித்தும், கல்வியின் திடத்தைக்குறித்தும், தெரிவிக்க ஏகபோகத்திற் கொருவனாகிய விராடன் சபைக்குட்புகுந்து காகரத்தினம்போல் நலம்பெற்றிருந்த தருமராஜன் திருவடியில் தண்டனிட்டு இம்மண்டலத்தரசே! யான்மடத்தொழிலுக்குரியவன கூட்டுக்கறி - குழம்புக்கறி - குழைக்கறி - பொரிக்கறி - பச்சடி - கிச்சடிமுதலிய ஐந்துவகைக்கறிகளும் உண்டல் தின்றல் நக்கல் பருகலுடன் - அறுசுவைநிறை

வும், குறைவறச்சமைப்பேன் ஒருசமயத்தில் மல்லுங் கொடுப்பேன் வில்லுமெடுப்பேன் அல்லும்பகலும் நல்லவனாய் நடப்பேன் பலாயனனென்னும் பெயர்பெற்றேன் திரிபுவனத்தில் தேடிப்பார்க்கிலும் என்றொழிற்கிணை சொல்ல எத்தொழிலுமிராது எனக்கீடானவர் எவருமில்லைசமயபேதத்தால் தருமராஜனுக்கிளைய வீமனென்பவனைவிட்டு உன்னிடத்தி லொருவருட மிருக்கும்படியாய் உன்னிவந்தேனென்றான்.

இவ்வாறியம்பிய பலாயனன்பேரில் இஷ்டங்கொண்டு முகமலர்ந்த விராடராஜன் அவன்தலைமேற் கைவைத்து பொன்னாரமும், பூவாரமும், இரத்தினாபரணமும், முத்தாரமும் வச்சிரவாகுவலயமும் மரகதமதாணியும் மெல்லிய வஸ்திரங்களும், யானை - குதிரை - பல்லாக்கு முதலியவாகனங்களும் பெருமையாகக்கொடுத்து, ஓ, சுயம்பாகி! அரசரிடத்திலிருக்கின்ற உத்தியோகங்களிற் சிறந்தது தாய்போலூட்டிவிக்குஞ் சுயம்பாகித்தொழில், ஆதலினால் நீ யின்றுமுதல்எனக்கும் என்சுற்றத்தவருக்கும் இனிமையுடன் உண்பிக்கும் உரிமையும், இங்குள்ள மடைத்தொழிலாளரானவருக்குந் தலைமையாம் அதிகாரம் உனக்குக்கொடுத்தோம். இந்தவேலையை உன் சொந்தவேலையாகப்பார்த்துச் சிந்தை வேறுபடாதிருக்க வேண்டுமென்றனுப்பி, விந்தைதங்கும் புயத்தோனாகிய விராடன் மிகக்களித்திருந்தான்.

இப்பால் வாயுபுத்திரன் சேர்ந்து மடைத்தொழில் தலைமைபூண்டிருந்தான், பின்பு மறுநாட்காலையில் அறிவாலுயர்ந்த ப்ரகன்னளையென்னும் பேடியானவள், வட்டவெண்குடையும், மணிமகுடமுந்தரித்த மச்சராஜனிருந்த உச்சிதசபையானது, சிறக்கும்படிசென்று, முப்புரி நூல் விப்பிரரான கங்கபட்டரென்னும் முதல்வன்பாதத்தில் ஒருக்களித்து வணங்கி ஐயா! எண்டிசைகொண்டாடுங் காண்டீபதரனான அருச்சுனன் அரண்மனையிலிருக்கும் பேடியர் அநேகரில் நானொருபேடி, நாதப்பிர்மம் - சத்தப்பிர்மம் - ஒலி - ஒத்து - தாளம்-மேள முதலியவையுங் கலந்து, சுர - சுதி - லயை - குறையாமற் பாடவும் ஆடவும், நடனசாஸ்திரப் பிரசங்கஞ்செய்யுஞ் சபைக்கு யோக்கியமாகப் பேதைப்பருவப் பெண்களுக்குப் பாதங் கற்பிக்கவுங் கற்றிருக்கின்றேன், பிரகன்னளையென்னும் பெயரினையுடையேன், உமது செல்வமாநகரிலிருந்து, சிலநாள் கழிக்கும்பொருட்டு அடைந்தேன். என்னை நீர் ஆதரிப்பீராகில், வேதமும் வேள்வியுமுள்ள மேதினியில் உம்முடைய மரபு விருத்தியாமென்று பேடிவாழ்த்தினாள் அவள்வாழ்த்தியதைச்சாஸ்திரமுணர்ந்த விராடராஜன்கேட்டு, இத்தன்மையுடையோர்கள் கடல்சூழ்ந்த காசினியிற்கிடைப்பது அருமையென்று பெருமையாய்ப்பேசி, வரிசைமுதலிய வர்க்கமுங்கொடுத்து இன்னுமுனக்கு வேண்டுவனவெல்லாந் தருவேன், எனபெண்ணுக்கு உயிர்ப்பாங்கிபோற் கண்ணுக்குக் கண்ணாயிருந்து, பரதசாஸ்திரம் முற்றிலும் பயித்துவிப்பா யென்று உத்தரகுமாரத்தி யிருக்கின்ற அந்தப்புரத்திற் கனுப்பிவித்தான.

பின்னுஞ் சிலநாள் சென்றபின்பு அழகில் மன்மதனையும் - அறிவிற் சுக்கிரனையும் பழிக்கச், செழிக்கும் நகுலராஜன்போய் விராடனுடைய குதிரைச்சாலைக் கெதிராகநின்றான். அன்று சாயங்காலவேளையில், மின்னலோங்கிய வேல்தாங்கிய விராடராஜன் வன்னக்குதிரையேறி, வையாளிவிட்டுவரும் பொழுது கடிவாளமும், கம்பியும் கயிறும், கிலுகிலுக்கும், கட்டையும், ஜாட்டியும், பிடித்துப் பார்த்தபேரெல்லாம் அஸ்வசாத்திரந் தெரிந்த மூர்த்தண்ணியனென்று, மதிக்கும்படியாயிருந்த பரிவல்லவனை இச்சைமேற்கொண்டு, உச்சாகப் பார்வையாகப்பார்த்துக் கையைநீட்டி ஓ? குதிரைச்சம்மட்டிகொண்டு நிற்கின்ற குதிரைப்பாகனே! நீ எங்கிருந்து வருகிறாய் உன்பெயரென்ன? சொல்லென்றான், இவ்விதங்கேட்ட அஸ்வாரூடவரசனைக் குதிரைச்சேவகஞ் செய்யும் வேஷங்கொண்ட கோமானானவன், குறிகித் தன்தொழிலுக்குத்தகுந்த மரியாதைசெய்து அரசனே! அடியேன் விஜயனுக்கிளைய நகுலனென்று பலதிசையிலுமெழுதிய வெற்றிபெற்றவன் அவனது கீர்த்தியைச்சொல்ல வல்லவருமுண்டோ? அந்தநகுலராஜனுடைய குதிரைத் தலங்களுக்குத் தலைவர்களில் எழுமையாகத்தாழ்ந்து வாழ்ந்தவன், தாமக்கிரந்தியென்னும் நாமம்புனைந்தவனையா! விளாவில்நடக்கும் பரிகளும், இராஜாக்களேறுங் குதிரையும், அவற்றின்மனமும் வடிவமும் சுழியும் சுத்தமும் நிறமும் திறமும் இடமும் குணமும் மணமும் குலமும் குரலும் வேகமும் கதியும் உற்பவதேசமும் வீரமும் ரோஷமும் மறுவும் பிறவுமுள்ள மார்க்கமுமறிவேன் தீராக்குதிரைப்பிணிகளுந் தீர்ப்பேன் மண்டலம் - கோணம் - வளைவுமுன்னோட்டம் - பின்னோட்டம் - நேரோட்டம் - நரி - கரி - அரி - வரி-வேங்கை நடையுங் காட்டுவேன் தேருக்குப்பூட்டுங் குதிரையும் போர்க்குமூட்டுங் குதிரையும் பட்டாபிஷேகம்பரிகளும் கலியாணப்பரிகளும் யாகப்புரவியும் வாயுவேக மனோவேக சரவேக சற்பவேகப் புரவியுந்தெரிந்து வகுப்பேன், சத்துவகுண சாந்தனே! அண்டினோரா

யாதரிக்கும் பாண்டு மைந்தனாவருப், வனவாசம் பண்ணப்போன பின்பு உண்டியு மிழந்தேன் உறுதியு மழிந்தேன் உமது கீர்த்தியைக்கேட்டு இவிடம் வந்தேன் என்னை யாதரித்தருளும் உத்தமனே யென்றான் அந்தப்புரவித் தலைவனது பொய்யா மொழியைக்கேட்டு துன்னி நெருங்கிய மன்னவரியார்க்கும் பொன்னுல கோர்க்கும் மண்ணுல கோர்க்கும் புனிதஞானியர்க்கும், பூசுரருக்கும், விசுவாசநேச மெய்யறிவோர்க்கும் உற்றகவலையையொருங்குடன தீர்க்கும் வித்தகவிராடன், மெய்ப்புளகிதனுய் மந்திரிமார்முதலிய யாவருங்கொண்டாடச், செந்திருகலைமகள் சேர்ந்துநின்றுடப் பொன்னின் குடநிறைந்த வாசலில் வந்திறங்கித்தன்னை வந்தடுத்தோருக்கும் சத்தியநெறி பெற்ற தருமராஜன் தம்பிமாருக்கு ங் கொடுத்தவெகுமானத்திலும் மூன்றுபங் கதிகமாகக் கொடுத்துச், சம்மானஞ்செய்து தன்னுடைய குதிரை வல்லவருக் கெல்லாந்தலைவனென்னு முதன்மையுங்கொடுத்தான்.

அதன்பின்பு ஓர்நாள் அஸ்வங்களை அபிவிர்த்தியாகஅளிக்கும்படிக்கமைந்த நகுலராஜனுக்கிளைய சகாதேவராஜன், நந்தகோபன் மைந்தன்போல் வேடங்கொண்டு, அசைந்தாடிய செவிகளுக் கிசைச்சூடிய பச்சிலையுடன, புள்ளாங் குழலிசைபாடும் தடியும், தொறட்டுக்கோலும், கன்றணைக்குங் கயிறும், மாடுகட்டுந் தும்பும். இக்கக்கச்ச மூந்தோள் மேற்கொண்டசைந்து கீர்த்திதழைத்த விராடராஜன சபையையக்கிட்டினன். அவனைக் கண்ட அரசன் கருங்கம்பளப் போர்வையுடைய கானவனே நீயாரென்று கேட்டான. அப்போது, தருமராஜனுடன் சமமாயிருந்த விராடராஜனைப்பணிந்தும் பணியாதவன்போற் பணிந்து ஓ? மஹாராஜனே! துரியோதனனுடன் சொக்கட்டாஞுடி,இக்கட்டடைந்து,நாட்டைவிடுத்துக் காட்டையடுத்து வனவாசம்பண்ணிய பாண்டவர்களில் இளஞ்சிங்கமாகிய சகாதேவ ராஜனுடைய பசுக்களைப் பார்த்து, மேய்த்துக், காத்துவந்தநான், கோபாலனையா? என்பெயர் தந்திரபால னென்றான். அவன சொல்லைக் கேட்டவிராடராஜன், மகிழ்ந்து அவனைத்தன்னருகிலழைத்து வேண்டிய வெகுமானங் கொடுத்து நமதுபசுமந்தைகளை உன்சொந்தம்போற் காப்பாற்றிக் கொண்டிருவென்று அனுப்பிவிட்டுச் சந்தோஷமுற்றிருந்தான.

உடனே ஓமாக்கினியில் உற்பவித்த திரௌபதாதேவியும், வண்ணப் பெண்வடிவாகிவந்து மருமலர்மாலை வாசமேறிய திருமல்வேலைத் தேசம்வீறிய மச்சராஜனது தோளணைந்த சுதர்க்கணைவாழும் அந்தப்புரத்தைநாடி, அவ்விடத்திற் காவலிருக்கும் பாங்கியரை நோக்கி யாரோ ரொருத்தி வந்திருக்கிறாளென்று உங்கள் அரசிக்குச் சொல்லுங்களென்ன, அவர்களவ்வாறே சென்று, தங்களரசியைவணங்கி எங்களையாளும் அம்மணி! தேன் நிறைந்த செந்தாமரை மலரிற்பிறந்த செந்திருவுந் தொழுதற்கரியாளாகிய வோர் பெண்பெருமாள் இடையசைய விசையாய்நடந்து, நமது தலைவாசலைக்கடந்து வந்திருக்கின்றாள். தாயே - மாதுரியவசனி - பங்கஜாக்ஷி - கட்டளைப்படி நடக்கக்காத் திருக்கின்றோமென்று உபசரித்தார்கள், அந்தப்பாங்கியருரைத்ததைக் கேட்டுப் பாசமார்த்தியமுள்ள சுதர்க்கணையிருந்த பக்ஷமுள்ளவளாய்த், தக்ஷணமே யழைக்கச் சொன்னாள். அங்கேமே சேடியர்கூடி, பாடிடு குயில்போலோடி வாடிய மயில்போல் வாசலில் நின்ற மங்கையைநாடி நூதனமான மாதனமே? வாரும்வாருமென்று அன்போடழைத்தார்கள், அவிடமிருந்த வண்ணப்பெண்ணனவள் மகாபாக்கியமென்று வந்தாள். அம்மாதின் துடியிடைப் பிடிநடைச் சுந்தரத்தைக்கண்ட சுதர்க்கணையானவள் திடீரென்றெழுந்து, செழுமுகமலர்ந்து, கைகொடுத்தணைத்துப், பக்கத்திலிருத்திக், குங்குமச்சாந்து சந்தனகந்த கதம்ப - தாம்பூலமஞ்சள் - புஷ்பவஸ்திராபரணங்களினுற் பூசித்து அன்னையே! உமது தேசவாசம்யாது எதுகாரண மிவ்வளவுதூர மெழுந்தருளியது, தமது பெயரென்ன! அடியாள் அறியச்சொல்லுமென்று நயமாய்க்கேட்டாள், அப்படிக்கேட்ட சுதர்க்கணைக்கு உபசாரவார்த்தைசொல்லி அருட்கண்ணிறைந்த ஆரணங்கே இந்திரப்பிரஸ்தமுதலிய எல்லாவற்றையும் சகுனியாடிய சூதால் தோற்றுக், காடேவீடாகவும் பட்சிமிருகங்களே பந்துவர்கவும் பன்னிரண்டுவருடம் வனவாசம்பண்ணிய பாண்டவர்களை மருவியமான் விழிமடந்தையைப் பிரியாதிருந்தேன் என்பேர்விரதசாரணி, சந்தனுதி சந்தகதம்பம் பூசுவதிலும், சேலைமாலை சேர்த்துக்கட்டுவதிலும், பூரணாபரணங்கள் பூட்டுவதிலுங் கூந்தல்வகிர்ந்து முடித்துப் பின்னுவதிலும்,மார்புக்குத் தொய்யலெழுதி யலங்கரிப்பதிலும், மைதிட்டுவதிலும், புகழ்பெற்ற வல்லவள், உமக்கிச்சையானபடி அழகுண்டாக்கி மனமகிழச்செய்ய வேண்டுமென் றெண்ணிவந்தேன், பெண்கள் சிந்தாமணியே இன்னுமொருகாரியமியம்பக்கேளும் யான் எனதாய்வீட்டிற் சஞ்சரித்துலாவுங் கன்னிப்பருவத்தில் காந்தருவர் காவலிலடங்கிக் கற்புடையளாயினேன் மற்றமனிதர்கள் நோக்கப்படாது மனிதர்வதனநோக்கி நான் மகிழவுமாட்டேன், சீமாதவ

முடைய வல்லவனென்று உன்மாளிகைநோக்கி வந்தேனென்றாள் இவ்வாறு கூறியவண்ணப்பெண் வசனத்தைக்கேட்டுத், திடுக்கிட்டுப் பயந்து, திடத்துடனயந்து, மகிழ்ச்சியாய் விரும்பிப் புகழ்ச்சியாய்த் திரும்பிப் பூதேவிபோனற சிதேவியே! தெய்வப் பெண்போல்வந்த உமைச் செவ்வையாகப் பார்த்து சிந்தை மகிழ்ந்தேன் இன்றுமுதல் நீர் என்னிரு கண்ணுகவும், எங்களோடு ஒப்பாகவும் வண்ணப்பெண்ணுகவும், என்னுடனு மூழிரு முன்காவலாயக்காத்து, உற்றதாயாகிய நீர் பெற்றதாயெனப் பார்த்துப், புகழ்பட வாழ்ந்து, நன்மொழிபுகன்று, நலம்பெற நடத்துவது உன்கடனென்றுரைத்து, என்னையிரட்சித்தருளுங் காரணியேயென்று உபசரித்தாள், இவ்வாறுபசரித்த பூரண புத்திசாலியான சுதர்க்கனையைப் பாஞ்சாலிபார்த்து அப்படியே யாகட்டுமம்மா! என்னை எந்தெந்த வேலைக்கெப்படி செய்யவேண்டியதோ அந்தந்த வேலைக்கான அலங்கார நன்மைகளை வெறுப்பில்லாமல் விருப்பத்துடன் விதவிதமாகச் செய்து நாளுக்குநாள் அதிகவிசுவாச முண்டாகும்படி நடந்துகொண்டாள்.

இந்தப்பிரகாரம், மைதீட்டி வாள்போல் நீட்டிக் காட்டுங் கருங்கண்ணமைந்த துரோபதாதேவியும் சந்திரகுலமைந்தராகிய பாண்டவர்களும் உருவமறைந்து இராஜசின்னங்கள் யாவையுந்துறந்து, உல்லாபப்பேச்சுகள் மறந்து அஞ்ஞாதவாசத் தொருவருடமுங் கழிக்கச் சிறந்து வருநாளையில், மெய்ப்பயிர் விளைத்துப்பொய்க்களைகளைந்து தீவினைதீர்த்து நல்வினைசேர்த்து இராச்சியப் பரிபாலனஞ்செய்து வாரிறை விராடனுடைய மச்சநாடானது, நித்திய ஜெயமங்களப் பெருஞ்செல்வமும் மாசமும்மாரியும் - நன்செய் - புன்செய் - இஞ்சி - மஞ்சள் - ரத - கஜ - துரகபதாதிகளும் மிஞ்சியும், நான்கு வருணத்தவர் குலாவிக்கொஞ்சியும், குருநாட்டுக்கொப்பாய்க் குறைவறவோங்கியும், பூவாதமரம்பூத்தும், காயாதமரம் காய்த்தும், பசுப்பாக்கியம் பால்பாக்கியமிகுத்து சுபசோபனங்களுடன் சந்தோஷ சம்பிரமங்கள் நிரம்பியிருந்தது.

கேளும்! ஜெனமேஜெய மஹாராஜனேயென்று வைசம்பாயனர் சொல்லிவந்தார்.

மற்போர்ச்சருக்கம்.

நித்திய கலியாண சுபசோபன வைபவ நீங்காச்செல்வச் சிறப்போங்கிய விராடபுரத்தில் பாஞ்சாலியும் பாண்டவர்களும போகபாக்கிய புதிதவிளைமயிற் பூரண சந்திரன்போற் பிரகாசித்துத், தாங்களறுவரும் களங்கரகிதராய்க்கலந்து. பேசுங்காலமறிந்து, ஒருவர் கண்ணிற் படாமல்இரிந்து, ஒருவனையொருவர் பிரிந்துறுமற்பொருந்தித் தாழ்வற வாழுங்காலையில், யானை - புலி - கரடி - சிங்கம் - காட்டெருமை - கலைமான் - முதலிய மிருகங்களுடன் மல்லரைச் சண்டைக்குவிட்டு, விதவிதவேடிக்கைகளை இச்சையின்படி விளைத்து மச்சராஜனு மற்றவர்களும் மகிழ்வுற்றிருந்தார்கள்.

அப்பேர்ப்பட்ட சமயத்தில், வேலாயுதத்திற்குப் பாலசுப்பிரமணியனென்று சூலாயுதத்திற்கு யமதருமராஜனென்றும், வில்லுக்கு இராமனென்றும், சொல்லுக்கு அகத்தியனென்றும, மல்லுக்கு நானே மகாதேவனென்றும், தேசந்திரிந்து சீர்பெற்ற வர்சவனென்று பெயருற்ற மல்லனொருவன், கொலுமுகவாசலில் வந்தான். அவன் எப்பேர்ப்பட்டவனென்றால், அண்டமுகட்டையளாவியமெய்யான் எண்டிசைமட்டு மேந்தியகையான் வாகுவலயம், வனைந்ததோளான் - வீரகண்டை புனைந்த தாளான் வாடைக்காற்றை மறிக்கும் வலத்தான் - ஓடத்தக்க யானையை யொடுக்கும் பலத்தான் - சிவந்த மயிர்விரிந்த தலையான் - தீரபராக்கிரம புயமலையான அவனிழல்போலாயிர மல்லர்களடுத்து வரும்படி சப்தமாப்பூட்டிய ஒற்றையாழித் தேரினையுடைய சூரியன்போல், உன்னதத்தேரேறி விருது - டால் - கொடி - குடை - ஜெயபேரி - டங்கா - பாங்கா - கொம்பு - தாரை - பூரி - வீரசின்னம் - எக்காளமுதலிய முரசவாத்திய மொலிக்கவும், கடல்சூழ்ந்த உலகத்தில் இவனுடன் சண்டைசெய்தவர்கள் யாருமில்லையென்று கட்டியக்காரர் எச்சரிக்கைசொல்லவும், பட்டுவான்கள் கொண்டாடிக் கொக்கரிக்கவும், நவமணிப்பணி மகுடஞ்சொலிக்க, நாகரத்தினத்தணிப்பட்டயமிலங்க, நவமோகன மன்மதனிவனென்ன - ராஜசிங்காசனத்திற் கொலுக்கொண்டிருந்த விராடபூபதியின் சமுகத்திற்குவந்தான்.

இவ்வித படாடம்பத்துடன்வாசவனென்னு மல்லன் தேசபூஜித ராஜனைப்பணிந்து, மகாராஜசிங்கமே! எழுகடல்வளைந்த வட்டாரத்தில் என்னுடனெதிர்த்து மல்லயுத்தம் பண்ணத்தக்க வல்லவரில்லை, நான் அநேகம் பட்டினங்களில் திரிந்து, ராஜராஜர்களைக்கண்டு, என் சமர்த்தைக்காட்டிப் பொன்பூஷணவாசனாதி வரிசைகள் பெற்றிருக்கின்றேன், இவ்விடத்திலுமது மகாசபையை நோக்கிவந்தேன். என்வல்லமையைச் சொல்லுந் தரமல்லவென்றுரைத்தான்.

அந்த மல்லயுத்தத்தொழில் முறைதெரிந்த விராடராஜன்வந்த மல்லன்கூறிய வார்த்தையைக்கேட்டுத், தன்சபையிலிருந்த ஆஸ்தான மல்லர்களைநோக்கி, உதட்டைப்பிதுக்கித், தலையையசைத்துப் புதிதாகவந்த மல்லனுக்குக் கொடுக்கத்தக்க பரிசுகள்கொடுத்து நமது சபையில் நிர்வாகமுள்ள மல்லர்களில்லையல்லவாவென்று வாய்விட்டுச் சொல்லமாட்டாமல் மனப்புழுங்கி யிருந்தான்.

அந்தச் சமையத்தில், விராடனுடைய சொந்தமல்லர்களுக்கு மனம்பொறாமல், கோபாவேசங்கொண்டு; வந்த மல்லனிவ்வளவு வரிசைபெற்றுப் போகவும், நாம்வல்லமை யற்றவர்களாகக்குந்தியிருக்கவும், மானக்கேடும் மரியாதைத் தாழ்வுமாயிற்றே யென்றெழுந்து, காரிடிபோற் பேரொலிகாட்டி, ஓடியுலாய்நடந்து, ஆக்கிரமித்துப், பராக்கிரமம் பேசிப், பதைத்துத், துடித்து, அதட்டிப், புயந்தட்டி, மீசைமுறுக்கிச், கண்கள் சிவக்கவுறுக்கி விழித்துப், பற்கடித்துப், புதுமல்லனைவளைத்து, இதுநல்ல சமையமென்றிணைந்து எங்களுடன் சண்டைபோட வாவென்றுமறித்து, அவன்பெற்ற ஆடையாபரண வெகுமானங்களைப்பறித்து மற்போர்நூலில் வகுத்தபடிக்கு விற்போர் வாட்போர் விதமெல்லாம் விளைத்து, வேந்தர்கள்முதலிய வெகுஜனர் காணப்பாய்ந் தெதிரோடிச் சண்டைசெய்தார்கள்.

தனித்தனி யொருவன் சண்டை பண்ணும்போது தானம்விட்டகலாமல் தத்தியும், ஒருவனையொருவன் சுற்றியும், உடலுடனுடல் மோதியும், தோளுடன்தோளடித்துத் தொத்தியும், தாளுடன் தாளடித்துப் பற்றியும், தலையோடு தலைமோதியும், புயமலையோடு மலைமோதியும், இடசாரிவலசாரியோடியும், இளைப்பெடுத் தொருபுறம்வாடியும், இடைந்து முன்பாய்ந்து கூத்தாடியும் இடம்விட்டிடஞ்சாய்ந்து கூடியும், வச்சிரமுட்டியா லிடித்தும், வைரக்கையாலடித்தும், காலுடன் கால்மாட்டியும் கதாயுதத்தை நீட்டிக்காட்டியும், கருங்கற் பாறையுடன் கருங்கற்பாறை யிடித்துக்கொள்ளுங் காட்சிபோல், மார்புமார்புங் கலங்கமோதி வாரிவாரியெடுத்துவீசி, நேரோடிவாதுபுரிந்து போராடும்போது பிரிந்து. பார்ப்பவர் கண்கள் பதறிக்கலங்க - வேர்க்க விதிர்க்க மல்லயுத்தஞ் செய்யுங் காலையில் ஊர்திரிந்த மல்லன்கையால் விராடனூரிலிருந்த மல்லர்களெல்லாம் எமலோகஞ் சேர்ந்தார்கள்.

இவ்விதமாகத் தன்னுறு திசைச் சோரவிடாமல் யுத்தஞ்செய்து விராடபுரத்து மல்லர்களை வீரசொர்கத்திற் கனுப்பிய வாசவனென்னு மல்லனை நேசவிசுவாசத்துடன் மெச்சி நீ, மெத்தவுநல்லவன் கைமுடச்சி குத்தவும் வல்லவனென்று விராடராஜன் புகழ்ந்து, உயர்ந்த வஸ்திராபரணங் களுமீந்து, விருதுமுடி - குடை - கொடியுடன மேன்மைச் சிறப்புஞ்செய்துவிட்டுப், போர்புரிந்திறந்த மல்லர்களைப் புதைக்கும்படி உத்தரவுகொடுத்துத், தானுஞ் சபையைவிட்டெழுந்து, அரண்மனைக்குட்போய் அன் றிரவு விடியுமளவும் நித்திரைபிடியாமல், மெத்தவும் வருந்தி, மறுநாட்காலையில் நித்தியவிதிமுடித்து, இராஜ கொலுக்கூடத்திற்குவந்து தனக்குமுன் னெழுந்தருளியிருந்த கங்கபட்டர் தாளில்வீழ்ந்து, அவரால் சுபமங்களாசீர்வசனம்பெற்று, மந்திரி சாமந்தர் முதலிய மன்னவர்களுடன் துன்னியிருந்தான்.

அந்தவேளையில் வாசவனுகிய மல்லன்வந்து பணிந்து ராஜ போஜ மகாராஜ பூஜாதுரந்தரபுதிதமூர்த்தி? அடியேனுக்குச் செல்வுகொடுத் தருளுமென்று கைதொழுது நின்றான். அவனைக்கண்ட மச்சராஜன் நேற்றிறந்த தன்சொந்த மல்லர்களின் பரிதாபத்தைப் பாராட்டி, இவனைச் செயிப்பதற்குத் தகுந்தமல்லர்கள் நம்மிடத்திலில்லாமையால் இவ்விடத்திலுண்டான மல்லரையும் வாரிப்போர்கொடுத்து, ஆருக்கும் பயங்கரமுண்டாகப் பேரெடுத்து ஊருக்கும் போகப்போகிறனென்று மனத்தாங்கலாகப்பேசினன். அந்தக்கருத்தை அண்டையிலிருந்த கங்கபட்டரறிந்து மாங்குயிற்கூவும் வளநாட்டிறையாகிய மச்சராஜனே! கேளும்; அரசரிடத்தில் வரிசைபெற்று உரிசைகண்ட வாசவனுகிய மல்லனை வெல்லவாவது கொல்லவாவது வேண்டுமானல், தகுந்தமல்லன் நமது மடைப்பள்ளியிலிருக்கிறனே, அவனே மெத்தவு நல்லவன், மகாசமர்த்துள்ள வல்லவன், பூருவத்தில் தருமராஜனுடைய தம்பி வீமசேனனிடமா யிருக்கும்போது, வெகுபேர் மல்லர்களைவென்று, பாலாயனனென்று பேருங்கொண்டு, வெற்றி மாலையும் வெகுமதியும் பெற்றிருக்கின்றான், அஞ்சாநெஞ்சுற முற்றிருக்கின்றான், அசுரகுலகாலனென்னும் பலசாலி, அவனாலிவனை யடக்கிப்போடலாமென்று நினைக்கிறேனென்று சொன்னார், அதை யரசன்கேட்டு மகிழ்ந்து, அப்படியானல், அந்த மடைத்தொழிலாளியை வருவியுங்களென்றான். உடனே தூதனையனுப்பி யழைத்துவரச் சொன்னார்கள். அவ்வாறு போயழைத்தவர்களைப் பலாயனன் கண்டு, அடா தூதர்களே! அரசன் அழைத்த காரணமென்னவென்று கேட்கத், தூதர்கள் ஐயா யாரோவொரு மல்லன்வந்து நின்று, நமது சில்லரை மல்லரை வெல்

லாங்கொன்று வெகுமானங் கொண்டு, நமக்கெல்லாம்
அவமானங் கண்டான். ஆனதால் அவனோடு சண்டை
போடுவதற்கோ அல்ல தும்மைக்கண்டு பேசுவதற்கோ
நாங்களறியோம்; அன்றியும் உம்மைக்குறித்துக், கங்கப
ட்டர் செம்மையாய்ச் சொல்லியிருக்கின்றார்; அதனு ல
ழைப்பித்ததுபோலு மிருக்கின்றது என்றார்கள். அவர்
கள்வார்த்தையைக்கேட்ட வீமசேனன் முகமலர்ந்து, அ
கமகிழ்ந்து, இதோ, வந்தேன் வந்தேனென்று மகமேரு
வைச் சக்கிரவாளகிரி வளைந்ததுபோல இடுப்பிற் கச்சை
வரிந்திருக்கி, அண்டமுகட்டுக்கு முட்டுக்கொடுக்குந்த
ண்டமொன்று கையிற்கொண்டு, விஷாமிர்தம் புசித்த
திடகாத்திர தீரன ஜெபசிம்மவீரன் சீக்கிரம்வந்து, சி
ங்காசனத்திருந்த கங்கபட்டரைத் தொழுது ஸ்வாமிப
ராக்கென்று நின்றான், அவ்வாறுநின்ற சுயம்பாகியை வி
ராடராஜன் கண்டு நீ யிந்த மல்லனோடு யுத்தஞ்செய்
ய வல்லையோ? என்றான். ஐயா! ஏதோ, உமது அனுக்கி
ரகத்தாலும் இதோ, எழுந்தருளி யிருக்கும் பெரியோர்
களின் ஆசீர்வசனத்தினாலும் போர்புரிய மாட்டுவேன்;
தேவரீர்! காலதாமத மில்லாமற் கட்டளையிட்டருளும்;
இதோ, ஒருநொடியில் இவனைஸ்தானப் பிரஷ்டத்துவ
மாக்கி ஸ்நானம்பண்ணி வருகிறேனென்றான். அந்தப்
பாகசாஸ்திரப் பலாயனன்சொல்லை விராடராஜன் கே
ட்டு, நகைமுகங்காட்டிப், புதுமல்லனை யழைத்து இவ
னுடன் யுத்தஞ்செய்வதற்கு உனக்கிஷ்டந்தானு வென்
றான். ஆஹா! நீர் நல்லபுண்ணிய பூபாலன் உமது சபை
யிலிருந்த மல்லர்களை யெல்லாம் வீணாய் மடித்துவிட்
டேன், இவனுகிலும், மல்லனென்னும்பேருக் கிருக்கட்டு
ம், இவனுமிறந்து போவானுகில், எனக்குமெத்த மனஸ்
தாபமா யிருக்கும், உம்மைப்பற்றி யிவனை மருந்துபோ
ல் வைத்துவிடுகிறேன், அந்தோ? இவனது ஊழ்வினைப்
பயனால் நமக்குவிருந்தாக வந்திருக்கின்றான்போலு மி
ருக்கிறது; நீங்களும் இவனுயிருக்கு உலைவைத்திருக்
கின்றீர்கள், என்பேரிற் குற்றஞ்சொல்ல வேண்டாம், எ
மனுடனெதிர்த்தவுயிரும், சிங்கத்தைப்பகைத்த யானை
யும், என்னுடன்போராடவந்தபேரும் பிழைக்கப் போ
கிறதேயில்லை. ஆகையால், இவனின்றைக்கு இறந்துபோ
வான். இவனுக்காராவது பெண்டு - பிள்ளை - தந்தைதா
ய் - அண்ணன் - தம்பி - மாமன் - மைத்துனன் - உற்
ற் உறவினர்களுண்டானல் முன்னாடிசொல்லியனுப்பி
த், தலைமுழுகிப்போடப் பண்ணுங்கள், உங்களுக்குஞ்
சம்மதமானுல் என்னுடன் சண்டைக்கு வரச்சொல்லு
ங்களென்று, அண்டை யசலைப்பார்த்துக் கண்ணுருட்
டிக் கறுத்து விழித்து, மீசைமுறுக்கித் திரித்துச், சிரித்
து, ஆர்ப்பரித்துக், கொக்கரித்து வீமனுக்கண்டையில்
வந்தான். அவ்விடமிருந்தகங்க பட்டரொருவர் தவிர ம
ற்றவர்கட்கெல்லாம் பயமுண்டாகிச், பலாயன னிறந்
துபோனுனென்று திண்ணமாயெண்ணங்கொண்டு தியங்
கிமயங்கித் தத்தளித்து. நின்றுவிட்டார்கள்.

இவ்வாறிருக்க, காமதகனனுக் கொப்பாகிய வீம
ன், தன்னண்டையிற் சண்டைக்குவந்த வீரமல்லனைக்
கிட்டி, உதயகிரி யஸ்தகிரி யிரண்டும்நெருங்கிப்போரா
டப் புகுந்ததைப் போற்பொருந்தி, இருவருந்தோளடி
த்து, பெருங்குரல்முழக்கி யடித்துப், பிரதாபப்பேச்சு
கள் படித்துக் காலாலுங்கையாலும் பின்னிப்போரிட்
டுப்பிடித்தார்கள் ஒருவனையொருவரடித்தார்கள். ஒருவ
ர் காலையொருவர் மிதித்தார்கள், ஒருவனையொருவ ரு
தைத்தார்கள் ஒருவனையொருவர் பற்றினார்கள், ஒருவ
ரை யொவர் சுற்றினார்கள், ஒருவனையொருவரெறிந்தார
கள் ஒருவனையொருவர் செறிந்தார்கள், ஒருவனைவிட்
டொருவர் பிரிந்தார்கள், ஒருவருக்கொருவர். பின்பறி
ந்தார்கள், மார்புடன மார்பழுந்த இறுக்கிக்கட்டி யணை
த்துச் சுற்றினார்கள், கையுமுடுக்கி மார்புந் தோளுந்
துளைபடக் குத்தினார்கள், கால்மேலாகவிழ எற்றினார்க
ள், புருவம் - வாய் - மூக்கு - காதுமுதலிய உறுப்புக்க
ளழியச் சிதைத்தார்கள், பொருப்பென்னும்புயங்களொ
டிய இடித்துப் பதைத்தார்கள், ஒருத்தனையொருத்தர்
தூரத்திப் பிடித்தார்கள், ஓடி - வாடி - நாடிநிலையில் மீ
ண்டார்கள். ஒதுங்கிப், பதுங்கி யொடுங்கி, யடங்கிப்,
பாய்ந்து, காய்ந்து. சாய்ந்து, மாய்ந்தார்போல் வதங்கி
வாடினார்கள் இத்தன்மையாக, இருவரும் போர்புந்தத்
தில் புதுமல்லன் கற்றவித்தைகளையும் சாகசங்களையும்,
கைலாகவத்தையும், வீமசேனன்கண்டுகொண்டு, இவ்வ
ளவுதானிவனிடத்திலிருக்கிற மகிமையென்றுதெரிந்து,
எதிரிக்கிடங்கொடுத்து ஏழைபோல்நின்ற வாயுகுமார
னை எதிரிலிருந்த புதுமல்லனை திடீரெனப்பூமியிற் குனி
ந்து, குபீரெனப்பாய்ந்து, தொடையிற்கைதுறுத்தித்தூக்
கித், தொப்பென்று பூமியிற் குப்புறப்போட்டுத், தோள்
மேலேறத்துணிந்தபோது, இடும்பாசுரனைப், பகாசுர
னை யெற்றிக்குத்தி யெமலோகமனுப்பி யிவ்வுலகத்தில்
பேருபகாரியெனப் பெயரெடுத்த வீமன தன்னுடைய
சாகசசமர்த்தினால் வீராவேசங்கொண்டு, அந்த மல்லன்
கையினின்றும் நீங்கி. நிலத்திற் பாய்ந்து, பதறி, நிமிர்
ந்துகுதித்து, நிதானமாய் மதித்து. நேருக்கு நேர்சென்
று, ஒருகையைநீட்டி, அவனுடலை நெருக்கிப்பிடித்து,
மற்றொருகையால் கழுத்தைமடக்கி யொடித்து, நிலத்

தினில் போகி, ஓரேமுழுக்காக அமுக்கிப், பழுத்தபாலைப்பழம்போல், கொழுத்தக்கண்கள் பிதுங்கத்தக்கதாகக், கரசரணாதிகளை யொடித்து, உயிருண்டித்து, வெறுப்பில்லாமல் வீதியெறிந்து, எங்கே, இவன் பின்னால்வந்த மல்லனொன்று புயங்கொட்டி யார்த்துக் கண்கள் பொறியெழவிழித்து, முகம்வியர்த்து, ஆர்ப்பரித்து வீரிட்டெழுந்தான். இவ்வாறடங்காத் திடங்கொண்டெழுந்த சுயம்பாகியை, விராடன்கண்டு ஒப்புச்சொல்லுவதற் கிடமில்லாமல் அப்பப்பா வென்றயர்ந்து, இப்பராக்ரமென்னமோவென்று வியந்து, உடனே முங்கையாக ஜெகஜெட்டிமுந்த டைகளைனையென்று புகழ்ந்து தன்னிருகரத்தாலு மணைத்து பொன்னரிமாலை நினைத்தெரித்து இனிமேலென்னுடைய போர்முகங்களுக்கு உன்னையன்றி யுற்றதுணை யுளதோ உத்தமபராக்கிரமனே என்றுபசரித்து மன்னர் மதிக்க வாளார்த்திக்க மன்னர்க்குரிய வரிசைகளளித்து முன்னவனின்னனந் திருந்திய கனகபட்டடைப் பூசித்துச் சுவாமி உம்மாலெனக்கிவ்வளவு பெருமையுண்டாயிற்றென்று உவந்து வாழ்த்தி, தன்னுடல்போலும் - தன்னுயிர்போலும் - தன்பொருள்போலும் பகைத்திலிருத்தி இந்த அதிவீரபராக்ரமனாகிய சுயம்பாகிக்கொப்பாக ஸ்ரீராமனைச்சொன்னாலும் என்காதுக் கினிமையாயிராது, அவனென் செய்தான்போவென்று தினந்தினஞ் சந்தோஷமடைந்து சிறப்புற்றிருந்தான்.

இப்பால் பாண்டவர்கள் தத்தந் தொழில்களில் குறைவின்றி அஞ்ஞாதவாசமாயிருந்து விராடராஜன் நடத்துமரியாதைகளினால் அந்நியதேசத்தி லிருக்கின்றோமென்னும் வெறுப்பின்றி, விசனமற்ற சுசனங்களுடன் இந்திரப்பிரஸ்தத்தி லிருந்து, அரசாளுஞ்செல்வம்போற் சுகமுற்றிருந்தார்கள். இப்படி யிருக்குங்காலையில், இக்கதப்பட்டினத்திற் கதிபதியாகிய மச்சராஜனுக்கு மைத்துனரும் சுதக்ஷணாதேவிக்குத் தம்பியுமான கீசகன் ஆச்சரியப்படுத்தத் தேசங்கள்தோறுஞ் சிறப்படைந்து வந்தவீரசவனென்னும் பேருடைய மல்லனைத் தங்கள் வாசலிலிருந்த மடைத்தொழில் வல்லன நாசகால நமன்போலெதிர்த்துக் கொன்றுவிட்டானென்று கேட்டுச் சந்தோஷங் கொண்டாடியும் கேற்றிறந்த பண்புமல்லனைக்குறித்து இரக்கமடைந்து மிருந்தார்கள். அன்று முதலாகச் சுயம்பாகியாகிய வலாயனனைப் பார்க்குந்தோறும் அவ்வூரிலுள்ளாரகளுக்கும், மற்றவர்களுக்கும், மனபீதியும் பயமும் வயிற்றிற் பெருநெருப்பு மூண்டதுமிருந்தது. கேளும் ஜெனமேஜெய மகாராஜனே! என்று வைசம்பாயனர் சொல்லலுற்றனர்.

கீசகவதைச்சருக்கம்.

பஞ்சபாண்டவரும், பாஞ்சாலியும், வித்தியாசமின்றிப் பத்துமாதங்கழித்து மற்றைநாளுந் தொலைக்கவேண்டுமென்று ஒருநாள் ஒருயுகம்போற் போக்கிச், சோர்வடையாமல் தேககஷ்டம்பாராமல் தங்கள் வலிமையைப் பிறருக்குக் காட்டாமல் ஒருமார்க்கமாய்க் காலங்கழித்தார்கள். அப்படி வருங்காலையி லொருநாள் சுதர்க்ஷணையுடன்பிறந்த நூற்றுவருபேருக்கு மூத்தவனும், விராடராஜனுக்கு மைத்துனனும், அவன்படைக்கதிபதியுமாகி, காமனைப்பழிக்கும் காந்தியும் அளவிடப்படாத ஆண்மையு முடைய கீசகராஜன் தன் சகோதரியான சுதக்ஷணாதேவியைப் பார்க்கவேண்டுமென்று வந்து, அந்தப்புரத்திற்புகுந்து, சிலம்பு, புலம்புஞ் சீரடி பணிந்து, அன்னமத- க்கோலமத- மிஜமதமென்னு முப்மதம் பொழியும் வாரணம்போற்றணிந்து சிலநேரம் வரையிலும் பேசியிருந்து, தன் தமக்கையாளிடத்தில் செலவுபெற்றுச் சிங்காரவனத்தின் வழியாய் வந்தான். அவன் வரும்போது, பாண்டவர்களின் தேவியாகிய விரதசாரிணியென்பவள், ஆடகலோகத் திறைவனாகிய தேவேந்திரனது நந்தவனத்திற் கொப்பாகிய அந்தப்புரத் தோட்டத்தில் சுகந்தபரிமளமிகுந்த புட்பங்கள்பறித்துக், சோடசகலைகணிறைந்த மதிமுகம் வெயர்த்துச், சொருபவிலாசமும், இந்திரதனுசையொற்றப் புருவ விலாசமும், செந்தாமரை மொக்குபோலும் - கூவிளங்கனிபோலும் - யானையின் மத்தகம்போலும் - தென்னங்குரும்பைபோலும் தங்ககிண்ணம்போலும் - மேருவைப்போலும் பருத்து - இரண்டு கொங்கையும், இரண்டுமலையைச் சுமக்கமாட்டாமல் துவண்டாடும் நூலிழைபோன்ற இடையும் அன்னநடையும், வன்னவுடையும், உடையவளாகிச், சாயல்கண்டு தோற்ற மயிலாடக், குரலோசைக்கேட்டுக் குயிலிசைபாட, அளிமொழிக்கிடைந்து கிளியினம்வாட, அடிப்புறவடிக்கு ஆம்பலொளிக்க, பொன்னொளி பார்த்து மின்னல் நெளிக்க இன்னினழில்பெற்ற கன்னிகை யுருள் பொன்னங்காவிற் பொலிந்தெதிர்ப்பட்டாள். செயற்கையழகின்றி இயற்கையழகுள்ள அப்பாவையைக் கீசகன்கண்டு, ஆசைமேற்கொண்டு, மோக சோகமூர்ச்சைமேலிட்டுக், காமன்கணையாற் கலக்கப்பட்டு ஓகோ கோ! இப்படிப்பட்ட பெண்ணை இதுவரையிலுங் கண்டிலேன், இவ்வுலகமயங்கவந்த மாயையோ? சும்மாயிருப்பவர்மேல் தொடுக்கு மோகனாஸ்திரமோ? இக்குப்பாலருக்குச் சொக்குப் பொடியோ? பிர்மாவமைத்த விசித்திரமோ, கம்மியனமைத்த சித்திரமோ, அம்

மா! யீதொன்றுமறிகிலேன் தெய்வப்பெண்ணோ, இவளாரோ, எவளோ, என்று ஐயங்கொண்டு, அவளண்டையில் வந்து, இருகண்ணிமைக்குந் தன்மையால் துணிந்து, காமுகனுகிச், சிந்தைவருந்தி நைந்து நினைந்து நினைந்து மையலால் வெந்து வாடிவதங்கி, மானம்- மகிழ்ச்சி-பெருமை - புகழ்ச்சி யாவுமறந்து, ஐம்புலனும்புரண்டு, அறிவுமருண்டு மோகப்பயிருக் காதாரமாகிய வித்தே உன்மேற்கொண்ட தாகத்தால் வருந்தும் நீ என்னெதிரில் நேரிட்டும் விரகசோகந்தீராச் சங்கடமென்னே ? ஆகா! நேசப்பெண்ணாசே ! உன்சரித்திரத்தைக்கேளாத் தரித்திரனு யிருக்கிறேன். நீயாரோ எவ்விடமிருப்பது உன்னுயக - ளெங்கே - நீயென்னகாரியமாய் வந்தாயிங்கே - உன்பெயரென்ன, மிகப்பரிவுற்ற என்பேரில் தயைபுரிந்துசொல்லுமென்று பலவிதத்திலுங்கேட்டான்.

அதற்கொருத்தரமுஞ் சொல்லாமலிருந்த சித்திரப் பாவையைப்பார்த்து நானுனக்குப் பொருளாகத்தோணற வில்லையோ என்சொல்லுன செவிக்கேறவில்லையோ நான்படுந்துயர் நீயறியாததோ உன்மனமென்ன கல்லோ - கடிதோ இரும்போ - எழுகோ - என்னுடன்வார்த்தையாடினுல் உன்வாய்முத்து சிந்துமோ ஆபத்து நீக்காவிட்டாற் பாபத்திற் கிடமல்லவோ? என்பேரிற் கோபத்தை வைக்காதே - நான்கொண்ட சோபத்தைத் தீர்த்தருளும் சோலைக்கண்ணுறையும் வாலைப்பருவக் குயிலே யென்மனமிரங்கப், பேசிப், பக்கத்தில்தங்கிய பாங்கியரைநோக்கி காமவெகுளிமேற்கொண்டவனுய் அடிதாதியரே! இந்தப் பெண்பெருமாளாரடி இவளுக்கென்னபேரடி - இவளெந்தவூரடி - இதுவரையிலும் நானறியேனடி - நீங்களாராவதுஞ் சொல்லுங்களடி யென்று கேட்டான், அவர்களவனுக்குப் பயந்து ஐயா? இந்த வண்ணமகள் உங்கள் தமக்கையாரிடத்தில் பத்துமாதமாய் வேலைக்கமர்ந்திருக்கின்றுளென்றுர்கள். அந்தவாசகங்கேட்ட கீசகன் ஊழியஞ்செய்யவந்தவள்தானேயென்ன இலேசாக நினைத்துக், காமத்தீப்பெருக்காற் கருகியுருகி, நாணங்கொண்டொடுங்கி முகங்கோணி முன்னின்ற விரதசாரணியின் பாதத்தில் வீழ்ந்து, என்னுவியே! நான் மகாபாவியே! என்னைக்கொல்லுவது உன் ஆசை வசனுயியே ! வசந்தகால வண்டைப்போல் உன்வாய் மலரிற்சுரக்குந் தேனையுண்டு, பிரமானந்தங்கொண்டு மேன்[illegible] விரும்புகின்றேன். உனக்குண்டாகிய வழகும், அந்தவழகுக்கேற்ற பருவமும், அப்பருவத்துக்குரியவுருவமும் அவ்வுருவத்திற்கிசைந்த காந்தியும் அக்காந்திக்குத்தக்க சாங்கியமுண்டாயிருந்தும் உனக்குத்தகுந்த சொர்குசுகாயக னில்லாமையால் உன்காலம் அநியாயமாயகன்று போகிறதே ஐயோ ! அஞ்சுகமே மிஞ்சிய வுனது மோகத்தால் கெஞ்சும் நானுனக் குடன்பாடாகிய கிரீட்டி நீயெனக்கிசைவாகிய கண்ணாட்டி அடி சீமாட்டி! இவ்வுலகின்கண் பெண்ணுகப் பிறந்தவர்கள் உன்னழகைக்கண்டு பின்தொடரவேண்டுமே, அலங்காரமென்பனவெல்லாம் உனக்கலங் காரமாயமைந்த அடிமையே, இவ்வளவு நிறைவுற்றிருக்கு முனக்கு மெனக்கும் என்னகுறைவு நாம்பேசிக்குலாவிக் கூடுவதேயுறவு. உனக்குவேண்டிய நவரத்தின பரணங்களும் - கட்டுவர்க்கங்களும் - பட்டுவர்க்கங்களும் - பொன்பாத்திரங்களும் - பொருள்களுந் தருகிறேன், எனக்கெவ்வளவுபோகங் கொடுத்தையோ அவ்வளவு போகங்கொடுக்கிறேன் நித்தியம் உன்னுத்தரவின்படி நடக்கிறேன், மற்றொருவர் முகநோக்கிலேன், சத்தியம்பண்ணித் தருகிறேன், சற்றேனுமனமிரங்க வேண்டுந் தையலே ! என்று எத்தனையோகோடி புபசாரவார்த்தைகள் சொன்னுன். அத்தனைமொழிகளுக்கும் எள்ளத்தனைப்பேச்சும் பேசாமல், ஓர்மரத்தினூரமாய் மறைந்திருந்து ஆ, கீசகா பாவமாகிய மூட்டையும். பழிப்பாகிய கேட்டையும் பாசப்பெருங் கோட்டையும் ஏன் கட்டித் தள்ளுகிறுய்? ஏழைப்பெண் பாவத்தைக்கொட்டிக்கொள்ளுகிறுய்? இம்மைப்பயனை யொழிக்கிறுய் மறுமைப்பயனையழிக்கிறுய், இம்மை மறுமை யிரண்டையும் யோசிக்கவில்லையோ ஏதோ, விபரீதமாய் நினைத்தவின் நினைப்பையு மாற்றவில்லையோ, ஐயோ இஃதுனக் கெந்நாளுந்தொல்லையே நற்குடிப்பிறப்பையும்போற்றிலை, நடவாத காரியங்களை நாடுகிறுய், வீணுகியசொற்களைச் சொல்லுகிறுய், அந்தோ! இந்தப்பேச்சு உன்னுடன்றுப்போகிறதாயிருக்கவில்லையே. அநேக மன்னரும் வெகுவாகிய ஆத்மகோடிகளும்வந்தொதுங்குகின்ற சந்திரவட்டக்குடை நிழலையுடைய விராடராஜனது பெருமைக்குப், அவனது புகழுக்குப், அழிவுதேட ஏற்பட்டாயபோலு மிருக்கின்றது, முடிவுகாலத்தைத் தேடிக்கொண்ட மூர்க்கனே, விவேகமற்றவெறியனே மன்மதபாணமாகிய நெருப்புக்குப்பயந்து, மகா பதிவிரதைகளின் வயிறெரிச்சலாகிய வடவாமுகாக்கினியில் வீழ்ந்து வாழ்நாளழிந்து மாளப்போகிறுய். அடாபாவி சிறந்தமரபிற் பிறந்தவர்கள் தங்கள் தங்களுடலழிந்தாலும். உடலிற்பொருந்திய உயிரழிந்தாலும், பி[illegible]றர்பொருள் விரும்பமாட்டார்களே. வாய்புழுக்க வஞ்சமொழிவசனிக்கார்களோ? பொய்யவுரையார்கள். கொந்தகண்ணுற்பாரார்கள் அவர்களைத்தான்மிக்கோரொன்று துதித்தும் தக்கோரென்று மதித்தும் சாஸ்திரங்களிற் பேசியிருப்பது நீ இழிந்தபிறு

புள்ளானனுகையால் துற்பாஷைகளை யேறக்குறையப்பே
சினய் அவைகளையெல்லாஞ் சுதாக்கனையப்பற்றி மன
ம்பொருந்தேன். அந்தமட்டும் உன்றுறப்புத்திசையைவிலக
கி நற்புத்தியைத்துலக்கினல் தொல்துலகிலின்னுஞ் சில
நாளிருந்துவாழ்வா, இல்லாவிட்டால் எமலோகஞ்சேர்ந்
து நரகத்தினாழ்வாய்?என்னை நீயாரென்று நினைத்தாய்?
தேவபுருஷர்களாகிய ஐவருடைய காவலிலிருக்கிறவள்.
அந்தத் தேவர்களுக்குமுனக்கு மிருக்கிற பேதத்தை
யோசித்துப்பார். உனதுநடத்தையை மிதுவரையிலுமவர்
களறியார்கள்போலு மிருக்கிறது. அவர்களிலொருவனு
கிய வீரபோஜ னென்னுமேலோ னறிந்தானுகில், கண்
மூடித்திறப்பதற்குமுன் உன்னுடல் மண்மூடிப்போய்
விடும்? உன்னுயிருமொழிவாய். அடா, காலாந்தகா! என்
றுகாமவேதனை கண்டயவனுக் கெதிரில்நாமம் வேறு
கொண்ட நாயகிபேசினள்.

அந்தகாசகாலனுகிய கீசகனுமதை ஆசைநோயதிகரி
த்துக் கூசுதலற்றுவண்ணப்பெண்ணைநோக்கி, உம்மைப்
பார்த்தகண்ணுக்கு மற்றொருபெண்ணைப்பார்க்க! எனக்
கெண்ண மில்லையே, என்னிரு கண்மணியே, அதற்கி
சைந்தமணியே? அந்தமணியினொளியே, ஒளியிடத்தின்
வெளியே? இந்திரலோகத்திற் கொப்பாய்ச்சந்திர மண்
டலத்திற்கப்பாலுளாகிய எனமாளிகையைத் தருகிறே
ன். அம்மாளிகைநிறைந்தசாளிகை தருகிறேன், சகலவநு
பவ வதிகாரமுந் தருகிறேன்?நானுமுமக்கேவல் செய்ய
வருகிறேன்.என்னைநீர் நிஷ்டூரஞ் சொல்லாமல் என்னி
ஷ்டதெய்வம் போலாண்டருளும் ஆடகலோகத்த மு
தம்போன்ற ஆரணங்கே ! உமதன்புள்ள கருணைப்
பார்வையால் எனக்கு விபரீதத்னதவிளைத்த காமப்பே
யையோட்டிவிடும், என்கலக்கமயக்கத்தைமாற்றிவையும்
நான் கடைத்தேறும்படி தேற்றிவிடும் கல்வியமளியை
யேற்றிவிடும் உமதுசிறுநகை நிலவினுல் என்புத்திமரு
ண்ட மோகவிருளைப் பிரகாசிக்கப்பண்ணும்! மன்மத
ன் கணைதுளைத்த என்மார்பிற் புண்ணுக்கு மதமேறிய
ஸ்தனத்தா லொத்தடம்போடும், கரங்களிரண்டாற் க
ட்டியிறுக்கும், எனனுள்ளுக்கு மருந்தாய்உம்பித முமுத
மூட்டும், உயிர்போமென்க்குமதுறுதி மொழிசொல்லு
ம், மதப்பயல் சண்டைக்குவந்து முன்னில்லும், என
னைத் தடுத்தாட்கொள்ளும். சரணஞ் சரணம் பெண்
ணுயகச் செல்வமே! இவ்விதமாகவணங்குகிற வென்னை
இனனென் றறிந்துகொள்ளும், இந்திரன்முதல் யாவ
ரையும் தந்திரத்திற் ஜெயிக்குஞ் சுந்தரமுடைய நான்,
திரிபுவனஞ்சேரந் தெதிர்த்தாலும், அபுஜபமடையமா
ட்டேன், இளமைப்பருவத்தில் மாரன்-வளமைச்செல்வ
த்திற் குபேரன் - கல்வியிற் சேடன் - கலவியில்விசேட
ன் - தனமைக்குவந்தவன் - நானுந் தன்மைக்குத் தகுந்த
வன் இந்த மச்சதேசத்தில் நான்வைத்தது பிச்சை இந்
நாட்டரசனன் விராடனை மேன்மையர் யென்னுதே
யும். அவனென் தமக்கைப் புருஷனுகையாலும், சிங்கா
சனத்திலேறி யிருப்பதற்கு எனக்குச் சாவகாசமில்லா
மையாலும், இவனை இவ்வட்டத்திற்கு முடிசூட்டி நிலைநா
ட்டி ஆள்காட்டிபோல் வைத்திருக்கின்றேன். அவனல்
ஒன்றுமில்லை, எல்லாமென்னு லிருக்கின்றது, என்பெயர்
சொன்னல், மராட்முதலிய கர்நாடகமுநடுங்கும். ஆத
லால் நானவனை மதிப்பதுமில்லைத் துதிப்பதுமில்லை, எ
ன்மகிமையை நீர் நன்ருய் விசாரிக்கவுமில்லை. உமக்கு
எதுவேண்டி யிருந்தாலும், நீரெப்படி நடத்தவேண்டு
வதானாலும், உமது சொற்படிக்கெல்லா முடிக்கக்காத்
திருக்கின்றேன. என் பெண்சாதிமார்களும் உமக்கேவ
ல் செய்யப்பார்த் திருக்கிறேன. நீர் வண்ணப் பெண்
ணென்னுஞ் சின்னத்தொழிலை விடுத்து, என்னையடுத்து
மேன்மையா யிருக்கலாம், நீ ரெனக்கு வசப்படுவீராகி
ல், விருஷபத்துவஜராகிப் திரிநேத்திர தாரியைப், பார்
வதிபங்கனைப்,பரமசிவத்தைப்பூசித்துப் பிரமோச்சவம்
பண்ணிவைக்கிறேன், யானிதுவரையிலும் பண்ணியபு
ண்ணியங்களை யுமக்கேதத்தஞ் செய்கிறேன், உடல்-
பொருள் - ஆவி - மூன்றையுமக்கே யொப்பிக்கிறேன்-
உமதாசையால் மோசம்போகிறேன். நான் கொண்ட
மோகலாகிரி தலைக்கேறிவிட்டது. இந்தக்காம மயக்கத்
தைத் தணியாவிடில்என்னுடலுமுயிருமொருங்கேபோ
ய்விடும். அதனாலுமக்குப் பாவஞ்சம்பவிக்கும். ஓ பரு
வமாதே! நான்மெத்தப்பெரியமனதின்,பெண்மையுறவா
ழ்ந்தேன். காமக்குழியில்காலவதறி விழுந்தேன், மோகக்க
டலிலாழ்ந்தேன், ஆதரவற்றலைந்தேன், ஆசைவலையாலுலை
ந்தேன், ஐயோ! அறிவுதொலைந்தேன- நீரொன்றுயிர்க்கு
துதியாகித் தெப்பம்போற் கைகொடுத்துக் கரையேற்ற
வேண்டும்கலாநிதியே, நிலாமதியே, ஜீவசஞ்சீவியே, தேவ
வரப்பிரசாதமே, கருணைப்பிரவாகமே. காந்திப்பிரவாகமே
யே உமக்குமேலாகியபுண்ணியமுண்டு. இனிநானென்ன
சொல்லப்போகிறேன தனியனுகிய நானென்னசெய்வே
ன? உமதுசித்தமென்பாக்கியம் தருமத்தை யெண்ணி
த் தயவுபண்ணி இனி என்னை யிரட்சிக்கவேண்டும், எ
ன்மனமோ பதைபதைக்கின்றது என்னுடலோ துடிதுடி
த்துச் சோருகிறது, என்மொழி புலனழுங்குகிறது என்
புத்திவிலங்குகிறது, பிராணனொடுங்குகிறது நான்பிழை
த்தபிழைப்பு வீணுய்ப்போயிற்று, பிறருக்கு நகைப்புள

டாயிற்று, உள்ளமுருகுது. உடலங்கருகுது,உயிருமலேயு
து, உளாயுங்குழறுதே ஆஹா,பெண்தெய்வமே உமது
அரவிந்தபாதம் எனக்கடைக் கலஸ்தானம் நம்பினேனை
நம்பினேனென்று வெம்பிவிழுந்து, அந்தவிரதசாரணியி
ன காலடிப் பொடியில் இவன் தலைமுடிபடும் படியாய்த்
தாழ்ந்து கண்டபடி பிதற்றினன்.

அப்பொழுது, வண்டுமொய்க்குங் கூந்தல் விரிந்த
மாதரசி, கைநெரித்து, முகத்திற் கடுமைகாட்டி அடா
கோலேபாதகா, அநாசார முடையவனே! உத்தமஜாதியி
ற் பிறந்தும், உயிர்வாழ்க்கையி லிருந்தும், யோசிக்காமற்
போனுயே,பாத்திரமில்லாத சூத்திரஜாதியாகியும், ரா
ஜஸ்திரீகளுக்குப் பணிவிடை செய்பவளாகியும், தாழ்ந்
ததிசையிலிருக்கிற என்பேரி லாசைப்பட்டு மோசம்
போய்ப் பேசுவது உனக்கு நாசகாலமல்லவோ? அடாகீ
சகா எழையாகிய எனக்குக் கொடுக்கிறேனென்ற செல்
வங்களை உன் குலத்துக்குரிய பெண்களுக்குக்கொடுத்து
அக்கினி சாட்சியாகக் கல்லியாணஞ்செய்து கொண்டு, க
லந்துண்டு அழகாயிருக்கலாமே. அவர்கள் சுகத்தைவி
ட்டுவிட்டு வயிறுவளர்க்கவந்து மாறுவேஷங்கொண்டு,த
லையும் பம்பை, இடையுங்கந்தை, இக்கோலமான என்
னைவிரும்பிபேனுசை கொண்டாய்; வானுசைகொண்ட
மாபாதகா! இமகுண்டத்தமுதென்று உன்னுமற் கலங்கு
கிறுய், உயர்ந்த பொருளுக்குத் தளர்ந்தாசைப்படுகிறுய்;
அடா, துன்மார்க்கனே,புத்திமானுகிய வொருவன்,தான
மணம்புரிந்த மனைவியைத் தனியேவிட்டு அந்நியஸ்திரி
களைநாடி, அவர்கள்காலடியில் வாடிக்கிடப்பது அழகல்
லவே, அக்கினி சாட்சியாகச்செய்த சத்தியந்தப்பினவா
களுக்கு இம்மையில் வாழ்வுமாறும் மறுமையில் நரகமு
மும், எப்பிறப்பிலும் பழியும் பாவமும் அபகீர்த்தியு
மேறும்,ஐயோ நான் சொல்வதைக்கேள், மறுமாதர்மே
ல்மையல் கொள்ளுவது அநியாயம் அம்மையலால் வி
ளைவது அபாயம் எந்தவேளையும் அச்சமும், துன்பமு
ம் சேரும இதுவோ தொல்லை, இன்பமோ இல்லை, அன்
றியும் பரஸ்திரீகள் தங்களைவிரும்பிய நாயகனுடைய
சுகதுக்கத்திற்கு உரியராகமாட்டார்கள், அதேனெனில்,
தங்களைச் சேர்ந்த ஜாரநாயகனிறந்தால், அவனுக்குக் க
ருமக்கிரியை முதலாகிய சிரார்த்தங்கள்செய்ய அதிகா
ரமில்லை, அவள் கருப்பங்கொண்டுபெற்ற பிள்ளையும் த
ந்தைவழிக்கிசைந்த கருமச்சடங்குகளுஞ் செய்யவொ
ண்ணுது, அந்தப்பிள்ளையினுல்வம்மிசவிருத்தியுமாகாது,
ஒருவேளை வம்மிசவிருத்தியானுல் தந்தைகுலம் நசிச்
சுப்போம்,அபிமானத்தால்வந்த இந்தவீணந்தன் தலையே
டுத்து மேம்பாடடைவான் இவனெவ்வளவு செல்வம்
பெற்றிருந்தாலும், எருமைச்சாணம் எக்கியத்திற்காகா
தென்பதுபோலாம குலத்திற்கொண்ட குரங்கானுலும்
குறைசொல்லுதற் கிடமிராது, வேதவிதியும், நீதிமு
றையும், பிசகாது, திதிமுதலிய பிதுர்க்கடனுக்கும் அதி
காரியாவான். இவைகளையெல்லாம் ஓதியுணர்ந்த கோத்
திரத்தானுகிய நீ, ஜாதியிழிந்தவர்போல் அதர்மத்திற்கு
டன்படவேண்டாம்,என்னைநாடுவதும்,இஷ்டமாகத் தே
டுவதும், உன்குலத்திற் குரிமையல்லவே, மூடவனுக்குக்
கரும்புத்தேன் எட்டுமா, மூடனுக்கென் அன்புத்தான்
கிட்டுமா ஓ மூர்க்கனே! நானொரு விரதம்பற்றி இவ்வி
டத்தில் வந்திருக்கிறேன், என்பேர்விரதசாரணி, நீ த
ப்பு நினைப்புக்கொள்ளாதே, சாகவேதலைநுள்ளாதே, பூர்
வம் சீதையை யெடுத்துப்போய்ச் சிறையில்வைத்து, உ
ண்ணுமல் தின்னுமல், ஊரம்பலமாய்ப் புத்திர மித்தி
பௌத்திராதியருடன் நிர்மூலமாய்ப்போன இராவண
ன் சரித்திரத்தைக் கேட்டிலேயோ? இந்நாட்டிலேயோ?
உனக்குமதேகதி உருளவந்ததேதலைவிதி. நீ என்னசெய்
வாய, என்னைக் கலியாணம்பண்ணிக்கொண்ட காந்திரு
வர் ஐவர் அவர்கள் மகாபராக்கிரமசாலிகள், என்விஷய
த்தில் தீங்குசெய்பவர்கள் தலைகள் பனங்காய்ப்போல உ
ருண்டலைய, ஓங்கிய விற்பிடித்திருக்கின்றார்கள் இந்தர
கசியத்தைநானுனக்குச் சொல்லவேண்டிய அவசியமில்லை.
ஆகிலும், விராடன் பத்தினியாகிய சுதர்க்கனையையடு
த்து, அவளன்னம்புசித்துவருகின்றமையினுல் நன் றிகுன்
றுமற் சொன்னேன். கெடுவாய் கேடுநினையாதே யென
றுல் இன்னமுங்கெடுவேனபந்தயமென்ன வென்பதுபோ
ல் என்னைவிரும்பிச் சின்னவார்த்தை பேசுகிறுய் துற்பு
த்தியை விட்டுவிடு - வாய்க்கடங்காப் பிடிபிடித்துமண்
டையுடைந்துமடியாதே என்னண்டை யடைந்து துடி
யாதே என்றுமுன் பேசுவதற்குத் தெய்வலோகத்தாரு
ம் திடுக்கிடுவார்கள் அப்படியிருக்க நீபயமில்லாமற்பே
சினையே, பாவி! எனக்குரிய காந்திருவர்கள் இப்பொழு
து இந்நகரத்தி லிருக்கின்றார்கள் அவர்களுக்கு விரோ
திகளில்லை, சிலசமயத்தில் விரோதியானவர்கள் ஆகா
யத்திற் பறந்திருனும், அலைகடல் மூழ்கியொதுங்கினு
லும், பாதலத்தில் மறைந்தாலும், பூதாத்தி லுறைந்தா
லும், திக்குப்பாலருடைய பேருதவிபெற்றுலும், நவக்
கிரகங்களின் நன்மையுற்றுலும், அரி யர பிரமாதிகளா
னபோதிலும்,அவர்களுயிரை யழிக்காமல் விடார்கள் ஆ
கையால், நீ என்னிமித்தம் உன்னினத்தாருடன் மடிய
வேண்டாம், காமபாசத்திலும் கொழுத்து எமபாசத்
தை யிழுத்துக கழுத்தில் மாட்டிக்கொள்ளக் கருதுவா

னேன் அப்பால் கண்ணீர்சொரிந்து கலங்குவானேன், எரியுந்நெருப்பை எடுத்துமுடிவானேன், கரியாவிஷத்தைக்கண்டு குடிப்பானேன்? தன்பலமும் எதிரிபலமும் எண்ணாமல் தவிக்கின்றனையே. அடாசண்டாளா, அப்பாலொத்திப் போடாவென்று கெட்டியாய்க்கூவி வெட்டி நடந்தாள்.

இவ்வாறு அட்டதிக்கும் ஜயஸ்தம்ப நாட்டிய பட்டாபிஷேகப் பாண்டவர்தேவியானவள், எசக்கேட்டகீசகன் இடுக்கிட்டுச் சோர்ந்து அவளையடுத்துப் பின்சென்று கைபற்றித்தடுத்து முன்னின்று ஆஹா எனதாசைக்கனியே, உமக்குரிய காந்தருவரால் என்னுயிர் போயினும் போகட்டும், என்னெண்ணங் கைகூடினாலும் கூடட்டும் உமது கருணைப்பார்வை என்மேல் நீடட்டும். நீர், வேண்டுமென்று நினைத்தால், எம்மையுங்காத்து உம்மையுமீந்துக்கொள்ளலாம், அப்பா லுமதுசித்தம் எமதுபாக்கியமென்று கீசகன் பேசினான். அக்காலையில் வடிவேற்கண்படைத்த வண்ணப்பெண்ணானவள் வாய்வறண்டு கோபங்கொண்டு, இனி யிந்தப் பாதகனுக்கெதிரில்நிற்கப்படாதென்று தூதுளங்கனிவாயும், முத்துப்போன்ற பல்வரிசையுமுடைய சுதக்கணாதேவிக்கு எதிரோடி, நடுங்கிய தேகமும் ஒடுங்கியவுயிரும் நாணமும் மானமும் நாவரட்சியுங்கொண்டு குருசந்திர யோகத்தில் பொழியுமழைபோல் கண்ணீர்விட்டுச், சித்திரபாவைபோல் அசைவற்றுத் திகைத்துத் தேம்பி தேம்பி நின்று கடுங்கோபக் கண்ணினையுடைய பட்டத்தி யானைமேற் பவனிவரும்பார்த்திபன் பத்தினியாகியதாயே! உமதுபூந்தோட்டத்தில்புட்பம்பறித்துக்கொண்டு திரும்பிவரும்போது வீரகண்டைதரித்த உன்தம்பியானவன், சொல்லாத வார்த்தைகளைப் பலவாகச்சொல்லிப் பொல்லாத எண்ணங்கொண்டு தூர்த்தினான். உன்னிடத்தில் நானூழியஞ்செய்யவரும்போது, நான்கொண்டிருக்கும்விரதமும் காந்தருவனாவர் காவலும், என்னை யிச்சித்தவர்களிறப்பார்களென்றும், உனக்குறுதி சொல்லியிருந்தேனே, இப்போது வீணாய் வாளாலழிய வழிதேடிக்கொண்ட உன் சகோதரனுக்குப் புத்தி மதிகள் போதித்துச் சரச சல்லாப சூரத லீலைகளைச் செய்யும் தாசிகளை யழைத்துவந்து, அவன் தலைக்கேறிய காமத்தைத் தணித்துவையும், சத்தியந்தப்பாமற் புத்தியாயிருக்கச்செய்யும்! உத்தமியாகிய நீ முன்சாக்கிரதை படாமற்போனால், என்ஜாக்கிரதையில் நான் முந்தியிருப்பேன்? அதனாலவனுயிர் சிந்திப்போய்விடும், இந்தச்சொல்லை யுண்மையாய் நம்பும், என்பேரில் குற்றமில்லை முக்காலுஞ் சொன்னேன் சொன்னேனென்றாள்.

அந்த வையம்புகழுங் கையலுரைத்த சங்கதியைக் கேட்ட சுதக்கணையானவள் கையை நெறித்து, வயிற்றைபிசைந்து, சந்திரபிம்ப முகமலர்ச்சி தளர்ந்து, கேசயபட்டிபோற், கொஞ்சிப்பேசுகின்ற சொல்லுங்குழுமியிலுக்கொப்பான சாயலுமாறி, அன்னம்போன்ற நடையுமசந்து, சேனைபிடியைக் கேட்ட பாம்பென்ன வொடுங்கி, வசலைக் கொடிபோல் வாடிவதங்கி, வெதும்பிவிம்மி, வியர்த்து வண்ணமா மகளை யணைத்துக் கண்ணீர்துடைத்து அம்மா! வாரும் கிருபைக் கண்பாரும் என்னருகிலுட்காரும் அவன்கெட்டான் கொடியதுஷ்டன் உம்மைத் தொட்டானா? அதற்காக நீர் பயப்படவேண்டாம். அந்தமட்டும் பாவிகையில் அகப்படாமல், தப்பி வந்து விட்டதே நான்செய்த பாக்கியமென்று அருமை பாராட்டி, அந்த அழகிய சீமாட்டி பேசிக்கொண்டிருக்கும்போது தூர்த்திக்கொண்டுவந்த காமாட்டியாகிய கீசகனவன் பணிப்பெண்ணாகிய, அம்மாலினியைப் பார்த்துச் சுதர்க்கணையைப் பணிந்து அம்மா? உன்னிடத்தி லிருக்கிற வண்ணப் பெண்ணால் என்னுயிர் போவதுதிண்ணம் எனக்கு நேரிட்ட சோபனைதங்கி ஆபத்தைத்தீர்த்துஉன்கோபத்தை மாற்றவேண்டும் அன்னையே! நமதுபூந்தோட்டத்தில் இவளைக்கண்டேன் மையல்கொண்டேன், மாஞ்சோலைக் குயில்கூவ, மன்மதன்கணைதூவ, அதனால் மனம்வேக இந்தச் சீதேவி காலில் விழுந்தேன், உடனேபெண்ணை ஆதரிக்காமல், சீசீமூதேவியென்று முகத்தாலடித்து விடவிடத்துப் பேசினாள் படபடத்தேசினாள், வினையழியப்போகின்ற நான் இவளுடன்கூடி, பின்ப மறுபலித்து இவளுக்குச் சொந்தமாவீ கந்திருவர்கையால் இறந்துபோனாலுஞ், சுகிர்தமுண்டு, ஐயையோ இவளைச்சேராவிடில், எப்படிம் நான்யமலோகஞ்சேருவேன். நானிறந்தால், உன் புருஷனுடைய ராஜாங்கமும்பறக்கும் பகைஞர்கள் மேலிடுவார்கள்பார்த்தோருக்குக் கேலியாம், என்னுடன்பிறந்த உன்தாலிக்கு நித்தியகண்டஞ்சம்பவிக்கும். ஆகையால், நீயிவளுக்குத் தெரியப்படச்சொல்லி என்னுடன் இணங்கிவாழச்செய்வையாகில் உன்மங்கிலியந் தீர்க்கமங்கிலியமாம் நல்ல செல்வங்களை யநுபவிக்கலாம் இந்தவிராடராஜனது அரசாக்ஷிக்குத் தாழ்ச்சிவராது நாவின்னஞ் சிலநாளைக் கிருக்கும்படியாக்க, கிருபை செய்தருளும். சகோதரியே யென்றுசுதர்க்கணைபாதத்தைத்தொழுதான் மிகுந்த வணக்கமாகப்பணிந்து, வேண்டிக்கொண்ட கீசகன் முகத்தை நெருப்புப்போற் பார்த்து, அவனுக்கிடங்கொடுக்காமல் அதட்டி ஆமடாவென்றுகறுவி, அடாதோஷி, என்னபேச்சுச் சொன்னாய் அடாபாவி அரிஹரியென்று

இரண்டுகாதையும் பொத்திக்கொண்டு மானம் பெரிதென்று மதித்தவருக்கு பிராணன் துரும்பென்று மதியூகிகளெண்ணுவார்கள். புத்தியீனர்கள் பிராணனைப்பொருளாக நினைத்து,மானங்கெட, வயிறுவளர்த்து, அப்பிராணனைச் சிலகாலில் இழந்துவிட்டு மண்ணுளவனாக்கும் வசையினிலழிந்து, விண்ணுளவனாக்கு மிருகாதிநிந்து,வேறு வேறு யோனியிற் பிறந்து,தாறுமாறு யலைந்து வீறழிந்து சங்கடப்படுவார்கள் ஐயோ,ஐரோகி இந்தசைரந்திரியானவள் எனனிடத்தில் வரும்பொழுது தனக்கு மானக்கேடுவாராமல், பெற்றதாய்போல் காப்பாற்றவேண்டுமென்றும், தன்னை யாரேனுஞ் சிந்தித்து- நிந்திப்பாராகில், அந்திவன்னனருளாற் தனக்கு- நாயகராகிய கந்திருவரால் அனாத்தம் விளையுமென்றும் தானொருகாரணத்தின் பொருட்டுச் சிலநாள் கழிக்கவேண்டுமென்றும், உனக்குநா னடைக்கலமென்றுஞ் சொன்னாள் நானு மவ்வாறே வாக்குத்தத்தம் பண்ணி, விராடராஜன் முதலியவேந்தர்களாலும் மற்றமாந்தர்களாலும் பொல்லாங்குவாராவொட்டாமல், பெண்பழிபெண்தோஷம்பேசவொட்டாமல், என்கருப்பத்தில் வைத்துக் காப்பதுபோல் இதுவரையிலும் கண்ணுண்டாய்ப் பார்த்துவந்தேன் அடா துரோகி- நீயென்கட்டுக் காவலையுமழித்தன்னெயரையுங்கெடுத்து,எங்களை நடுத்தெருவில்,விடுத்து உனதுயிரையமனுக்குக்கொடுத்து-விராடராஜனது செங்கோலையுங் கொடுங்கோலாக்கி, கிஷ்டூரத்தாற் கஷ்டப்படுமார்க்கத்தை இலேசாகத் தேடிக்கொண்டாய் அடாதிவினையாளா,ஈதுனக்கழகல்லவே, அறிவல்லவே,என்சொல்லைநம்பிப்,பேசாமற்போய்விட்டா தம்பி இந்தப்பெண்ணணங்குக்குக் கண்ணுறிய காந்திருவர்கள்,கருடனுக்கும் காற்றுக்கும் மேலானவேகமுள்ளவர்களாம் வருணனுக்குந் தேவேந்திரனுக்கும் மேற்பட்ட வல்லமையுள்ளவர்களாம் அக்கினியையும் சூரியனையும் பழிக்கும் காந்தியுடையவர்களாம் அவர்களுடைய கோபாவேசத்திற்கு மூன்றுலோகமுந் தாங்கமாட்டாவாம் இந்தவிர்த்தாந்தங்களை நான்முன்னுடி யறிந்திருக்கின்றேன் நீயிழைக்க மனதுள்ளவனாகில் இப்பெண்மெற் கொண்டமோகத்தைக் கனவிலு நினையாமல் மறந்துவிடு. மறவாவிடில் வீணே கெட்டழிந்துபோவாய், ஆ பழிகாராவென்று சுதர்க்கனைசொன்னாள்.

அம்மொழியைக்கேட்ட கீசகன் விந்தையாகச்சிரித்துச்,சிந்தைதனொந்துருத்துஎன்தந்தைக்கொப்பாகிய தமக்கையாரே என்வல்லமைதெரிந்துந்தெரியாதவர்போற்பேசுகிறீர் அவ்வளவுபலவான்களாகிய காந்திருவர்பதினைவிரம்பேர் ஒன்றுசந்திரண்டுவரினும் என்னுடைய இரத்து என்னைப்பகைத்து வெல்வார்களோ நானொருவருக்குப்பயந்தவனோ அவர்களைப்பஞ்சுபோ லழித்து யமலோக நோக்கிப் பறக்கவிடுத்து,இவளிதழைக்கடித்து,இன்பரசங்குடித்து என்னெண்ணமுடித்து, உம்பெதிரில்நகைத்துஉலாவிவிளையாடப்போகின்ற என்னைதுன்பப்படுத்தப்பாரென்று நீர் சொல்லியது பேதமையே; பெரியவளென்னப் பெயர்வைத்துக் கொண்டாயே போபோவென்று கோடித்து நல்லதம்பா அதப்படியிருக்கட்டும் நீர் பெண்ணுகப்பிறந்திருந்தும் எனக்குத்தமக்கையென்னப் பேர்பெற்றிருந்தும் மனைவாழ்க்கையில் நன்றாய்ச்சிறந்தும் பெண்களுக்குவேண்டியபிரதானகாரியங்களொன்றுமுனக்குத் தெரியவில்லையே உலகிலுள்ளபெண்களின் குணதிசயத்தையும் அந்தரங்க ரகசியத்தையும் நீயறியாமற்பேசினையே, ஸ்திரீகளின் சுபாபகுணமென்னவென்னில் (கைநிறைந்தபொன்னிலுங் கண்ணிறைந்த கணவனேபோதும்)என்றெண்ணுவார்கள். அன்றியும் பெற்றவனானாலுங்கூடப்பிறந்தவனானாலும்,தானபெற்றபிள்ளையானாலுஞ் சௌந்தரியமாயிருந்தால்;முறைபாராட்டாமல்மோகங்கொள்வார்கள்-அழகிலும், இனியமொழியிலும்-பருவத்திலும் உருவத்திலும்-சங்கித- சாகித்தியத்திலும்எல்லாராலும்மதிக்கத்தக்கநாயகன் வாய்த்திருந்தாலும் அம்மான் பிள்ளை அத்தைபிள்ளையாயிருந்தாலும் அப்படிப்பட்டவர்கள் மேலாசையைவிட்டு அந்நியபுருஷர்கள்பேரிலிச்சைபடுவது பெண்ணுருவாய்த்தோன்றியபேதமையோருக்கியற்கையென்றுபெரியோர்கள்பேசியிருக்கின்றார்கள்.

இதற்குமேற்கோள் - விருத்தம்.

தந்தையாயினும் விழைவித் றன்னுடனேயொருவயிற்றிற்சார்ந்தாரேனும், மைந்தராயினும்மிகவும்வனப்புடையரெனில்வர்மென் மடநல்லார்தம்,சிந்தைதடந்திடும்தனுற் சாம்பன்மலர்க்கணைவேளிற் செவ்விவாய்ந்தோனைப்பொதுயாரினிதமரு ம்வளகத்திற் றனிவருதல் பான்மையன்றே......................*

நீதிநெறிவிளக்கம் - வெண்பா.

எக்கிதழின்மிக்கா னிளையானிசைவல்லான் ... *
காந்தையர்கண்கவர் நோக்கத்தான் - வாய்ந்த ...*
நயனுண்டயின்சொல்லான கேளெனினுமாதர்க்...*
கயலார்மேலாகுமனம்.......................*

என்று இன்னும்பன்னூலுஞ்சொன்னவாற்றான்ஸ்திரீகள் விஷயத்தைப்பற்றவர்களென்றும் ஸ்திரீகளைநம்பப்படாதென்றுஞ் செப்பியிருக்கின்றார்கள்.

நீதிநெறிவெண்பா.

அத்திமலருமருங்காக்கை வெண்ணிறமுங்......*
கத்துபுனன்மீனபதமுங்கண்டாலும்-மித்தரோ...*
காணார்தெரியக்கடவுளருங்காண்பரோ ... ...*
காணார்விழியார்மனம ... ...*

என்னுந்தன்மைபோல் நீயிவளுக்குப் போதுமான புத்திமதியைப்போதித்து, என்னைக்கலந்து இன்புறச்செய்வது உனக்குரிய கடமையென்று கெஞ்சினான்.

இவ்வாறு கெஞ்சிய கீசகனைச் சுதேஷ்ணை நோக்கிப், பஞ்சமாபாதகா. கொஞ்சமேனும் நாணமில்லாமல். பக்கத்திலிருக்கும் பாங்கிப்பெண்களையும் பாராமல், என்னிடத்தில் இந்தப்பேச்சைப் பேசலாம் பேசப்படாதென்றும் யோசிக்காமல். துணிந்துபேசினையன்றோ நீயென்னகதியடைவையோ, எப்பாடுபடுவாயோ, சைரந்திரிமேற்கொண்ட மோகாக்கினியில். தனக்குத்தானே விழுகின்ற விட்டிற்பூச்சிபோலாவாயோ நீயுமுன்னைச்சார்ந்தோரும் எவ்வாறுவீர்களோ, பசிக்குப் பனம்பழந் தின்னப்பார்க்காதே இஷ்டகாரியங்களைத் தொடங்கிக் கெட்டும்போவார்கள் கோடாகோடியுண்டு, அடாமட்டி என்னுடன்பிறந்தவர்கள் நூற்றைந்துபேரென்னுங் கணக்கு இன்றைக்கொழிந்தது குட்டாயிருந்தகட்டுத்தளர்ந்தது, காவலழிந்தது போங்கால மாச்சுது சாங்காலம்வாய்ச்சுது இப்போது உன்னை யிழந்தவளாயினேன், இனியென் தலைவாசலை மிதிக்காதே. எனக்கெதிரில்நிற்காதே நீ செத்தாலும், நான் முகத்தில்விழியேன் ஆ தப்பறைக்காறு, அப்பாற் போடாவென்று அதட்டினாள் அப்பொழுது பாவபுண்ணியமெண்ணிப் பாராத பாவியாகிய கீசகன் கோபமேலிட்டுக் கொதித்துச்சோபதாபத்துடன் தன் மாளிகைக்குப்போனான்.

போகும்போதே, காமும-குளிரும்-சோம்பலும் தும்மலும்-தேம்பலும்-இசிவுமுடையவனாய் ஆகாபனிப்பெண்ணெனபாதகி என்னைக்கெடுத்தாளே, பாம்பின் வாய்ப்பட்டதேரையாக்கினையேயென்று பரிதாபமடைந்து மூச்சுத்திணறிப் பதைபதைத்தான். அந்தவேளையில் மன்மதன்பிரவேசித்து இதுநல்லதருணமென்று இடைக்கொள்ளைக் காரனைப்போல்-முல்லை-அசோகு-நீலோற்பலம்-மாம்பூ-தாமரைஎன்னும்-பஞ்சபாணத்தை யெடுத்துக் கொஞ்சமேனும் நெஞ்சிரக்கமின்றித் தொடுத்தான் அதனால் கீசகன் சிந்தையழிந்து செயல்வேறுபட்டுத் தட்டுக்கெட்டுத் தடுமாறி மெத்தையின்மீது பொத்தென்விழுந்து ஐயோவென்னும அவச்சொல்மிகுந்துஅரண்டுபுரண்டு அவஸ்தைப்படும்பொழுது தாதியர்கூடிச் சயித்தியோபசாரஞ்செய்தார்கள்-அத்தனைவித வுபசாரம் பண்ணியும் அத்தனையும் அவனுக்கு வெறுப்பாயிருந்ததால் ஐயோ இந்தமலரணை வெதுப்புதே வாசப்பன்னீர்கொதிக்குதே சந்தனச்சேறு தணல்போல் தகிக்குதே அடிசிறுக்கிகளா நீங்களெல்லோரும் பெண்ணுகையால் ஒன்றாய்ச் சேர்ந்துகொண்டு என்னைப் புண்ணாக்கவோ அன்றி, மண்ணாக்கவோ பாலைவனத்தின் நெருப்பையெடுத்தையென்று பரப்பினைவத்தீர்கள், சிற்றாலவட்டம் பேராலவட்டம் பொன்னாலவட்டம் பூவாலவட்டமென்று விதவிதமாய்ச்சொல்லி வீசுகின்றீர்களே இந்தஆலவட்டக்காற்றும் சாளரத்திற்புகுந்து பெரும் புலிபோல் பாய்ந்துவருகிற தென்றலும் வாசுகிமுதலாகிய பாம்புகளின் விஷக்காற்றுப்போல் என்னுடலையு முயிரையும், வாட்டுதே, ஓசைப்பட்டொலிப்பதென்ன கடலோ அந்தக்கனுக் கெனமேலென்ன அடலோ இளஞ் சந்திரன் காயுதே இதென்ன வடவைத்தீயின் வாதையோ - கோடைக்காய்ச்சலின சூரியவேதையோ இந்தமாலைப் பொழுதுவந்ததென்ன காளவிஷக்கறுப்போ மகாதேவன் நெற்றிக்கண்ணெருப்போ இராவுமுடியெத்தனை காலமாச்சோ.

ஆழிவாய்சத்தமடங்கிற்றோ யான்வளர்த்த
கோழிவாய்மண்கூறுகொண்டதோ- ஊழித்
திரண்டதோகங்குற்றினகரனுந்தேரும்
உருண்டதோபாதாளத்துள்.

பொழுதுவிடியாமலிருக்கும்படியாய் பெண்கள் கூறிவிட்டசாபப்பேச்சோ வண்ணப்பெண் முகச்சாயல் வந்துபாயுதோ மதிதானெழுந்து காயுதோ- நித்திரை பிடியாதது சித்தப்பிரமையோ ஏகமாய்வருவது மோகவாசனையோ அல்லது அவள் தேகவாசனையோ- நான் கொண்டகாமவேதனையோ-அவள்கடைக்கண் சோதனையோ அம்மம்மா அவள்குரலோ, குயில்போல் கூவியே சுவந்து அவள்மொழியோ கிளிபோலத் தாறிப்பேசுவது என்னை மோகப்பேய் பிடித்துதலைசுற்றியாட்டுது காமச்சோகபாசங் காலனாருக் கோட்டுது அடிதோழிகளே அங்கேபேசுவதாரடி பஞ்சவன்னக்கிளியோ கொஞ்சும் பணிப்பெண்ணளியோ அவ்விடத்தி லசைந்துநடப்பது அன்னமோ இவ்விடத்திலிசைந்த தலைவாசலைக்கடப்பது விரதசாரணியாகிய சொன்னமோ என்று அன்றிரவு முழுதும் அவன்பட்டபாடு மற்றியார்படுவார்கள் இவ்விதமாக விபரீதம்விளைந்த சமயத்தில், ஊழியப்பெண்களியாவருஞ் சேர்ந்து ஐயோஈதென்னஅனியாயமென்று பயந்து சந்தனபாளித படீர-குங்கும-பங்கஜபராகங்களைக்கலந்து அவன்தேகத்தில்-தெளித்துத் தாமரைக்கொழுந்து முத்துச்சரம் வாழைக்குருத்து முதலிய சீ

தள வஸ்துக்களினால் படுக்கைவிரித்துப் பக்குவம் பண்ணினார்கள். அத்தனையுமவனுக்கு ஒத்துக் கொள்ளாமல் மெத்தவருத்தப்பட்டு எரியுதே- மேனிபொரியுதே கண்ணீர்சொரியுதே-கைகால்கரியுதே கண்களிருளுதே கருத்துமருளுதே-கட்டுவிட்டுப்போகுதே நாவும் புலர்ந்துதே-வாயிவறண்டுதே செவியுமடைக்குதே பிரசுமுடைக்குதேயென்று கதறிக்கொண்டிருக்கும் பொழுதே பேச்சடயங்கிப்போயிற்று.

பக்கத்திலிருந்த பத்தினிமார்களும் பாங்கியரும்பார்த்து ஆச்சுதுஆச்சுது பெருமூச்சு வாய்ச்சுதுவாய்ச்சுது பேச்சும்போச்சுது பிழைமோசமாச்சுதேயென்றுகாச்சுமூச்சௌக்கதறி இனிமேல் நாம் சும்மாவிருப்பது காரியமல்லவென்று பதறிப் பாவிபடும்பாடு இவ்வண்ணமுடிந்ததேயென்று கண்ணீர்விட்டழுது தெய்வத்தைத்தொழுது இவனினைத்த நினைப்புப்பழுது இதுசொற்பமாகத்தக்க தல்லவென்று பற்பலவாகப்பேசி அப்பாலியாவரும் தங்கள் பேரிற் பழிசாராமல் எஜமானிக்கேறிக்கையிடவேண்டுமென்று கால்பதறவோடி இராஜபத்தினியாகிய சுதேஷ்ணையைப்பணிந்து குலக்கொடியே தேவரீர்கோபித்துக்கொண்ட கடுமையினால் கூசாமற்சென்ற கீசகாதன் படுக்கைமேல்வீழ்ந்து காமத்தீயாற் கருகிமோகக்காற்றால் மொத்துண்டு பித்தனும்பேதறனுமுடையவனுப்ச் சிந்தைவாடித் தியங்கிவருந்தி தலையெடுக்கமாட்டாமல் தன்னைமறந்து அரட்டலும்புரட்டலுங்கொண்டுஅயர்ந்துபோய்விட்டான்எங்களால்கூடியவுபசாரமெல்லாஞ் செய்து பார்த்தோம் ஏதேது தேறுவதாய்க்காணேம் காமக்கடலாடமுழ்ந்திப்போனான், இனிக்கரையேறுவானென்று கனவிலும்நினைக்கவேண்டியதில்லை. ஆனால் உடன்பிறப்பென்னுங் கருணைபெருகி அதனால் உமதுள்ளமுருகி ஜீவகாருண்யஞ்செய்ய இரங்குவீராகில்- இன்னுஞ்சிலநாளைக்குக் கீசகராஜ னிருப்பானென்று ஒருவாறெண்ணலாம் அவனுயிர் பெறுவானாகில், விராடநகர்ப்புரிசையும் நமதுவாழ்க்கையாம் வரிசையும் குறைவுபடாமற்கண்டுமகிழலாம் எங்களைப்போன்ற ஏழைக்குடும்பங்களுங் காலங்கழிக்கலாம் அப்படிக்கில்லாவிட்டால், கீசகனுக்கு நேரிட்டகெடுதிவெளிப்பட்டவுனே பகைவர்மேலிடுவார்கள். நானாவிதவிரோதங்களும் விளையும் அதனால் நமதுமச்சநாட்டின் வட்டமும பச்சைக்கொடிநாட்டிய பட்டமும்போம், அப்பாலுங்களை யண்டியநாங்கள் பிச்சையெடுத்துப் பிழைக்கநேரிடும் ஆ கொச்சைமொழிமானே இனிமேல் வினைச்செயலெப்படியோ அறியோம்தாயே என்று கையைநெரித்துச், கண்ணீர்விடுத்துச், சுதர்க்ஷணைகால்மேற்படுத்துக்கதறிப்பதறியழுதார்கள் அப்படிகதறிக் கலங்கியபாங்கியரைப்பார்த்துச் சங்கதியென்னடியென்று கேட்டாள்.

அப்போது அவ்விடம்நின்ற தோழியர் அம்மா பின்னையொன்றுமில்லை, கருங்குவளைக்கண்ணாள் வண்ணப்பெண்ணாளாகிய நுண்ணிடையாளை வசப்படுத்தி எப்பாடுபட்டாகிலும் கீசகனிடத்தில் அனுப்புவீராகில், அவன்கொண்ட வெறியும் கடுங்காதற்சூழியும் தனக்குத்தானே தணிந்துபோய்விடும், போனபிராணனு மீளும் அவன்மனைவியர்களுமங்கிலியத்தோ டிருப்பார்கள் இப்படிப்பட்ட ஆபத்து எப்பொழுதும் வந்ததில்லை, இப்போதுநேரிட்ட இந்தத் தத்துக்குத் தப்பிப்பிழைக்கும்படி நீயே சாந்திசெய்யவேண்டும், மந்திரமழையே! இந்தவேளைநீர் இரங்காமற்போனால், இப்பவோ! இன்னுஞ்சற்றுநேரத்திலேயோ! பொழுதுவிடியுங் காலத்திலேயோ? கீசகனுயிர் நாசமடைந்துபோம். ஊழியராகிய எங்களைமேல் தோஷஞ்சொல்ல வேண்டாம் எங்களால்உபசரிக்கவேறுவழியுமில்லையென்பதாய் பாங்கியருரைத்த பசப்புவார்த்தையைச் சுதர்க்ஷணைகேட்டுத் தோழிமாரே! ஆசைப்பட்டபாவியாவது, வேறுபெண்களிமே லாசைப்படலாகாதா? ஐயோ மோசம்வந்ததே. நந்திருவர் காவலிலடங்கிய தெய்வப்பெண்ணை நானெப்படி வசப்படுத்தியனுப்புவது . அப்படிச்செய்வது நன்மையல்லவே ஒருவேளையனுப்பிவைத்தால், மோகாந்தகனாகிய பாவி மேல்விழுந்து தொந்தரைசெய்வானாகில், இநாடும் நகரமுமகுலமுங் கோத்திரமும் குடியும்படையும் குன்றிப்போய்விடுமே. நானென்னசெய்வேன்! சகிமாரே கெடுவழியிற்பிரவேசிக்கலாகாது என்மனதிற்குச் சஞ்சலமெண்ணுந் தணலைமூட்டினீர்களே யென்று, முகத்திலும் வயிற்றிலும் அறைந்துகொண்டு கலாபமயில்போ லசைந்து கலங்கினாள், அப்பொழுது வஞ்சகனாகிய கீசகனுடைய தாதிமார் இராஜவஞ்சியைநோக்கி, அம்மா! நீரேன்அஞ்சுகிறீர்! பெண்ணென்பதெல்லா மொன்றே, நாமெல்லாம் ஸ்திரீயினமேயன்றி வேறல்ல, மானமென்பது யாவருக்குமுண்டு, கீர்த்தி அபகீர்த்தி எவர்கட்குமுள்ளதே. இந்த விஷயத்தைக்குறித்து உமக்கும் உம்முடைய நாயகனுக்கும் பொல்லாங்கு நேரிடுமாகில். எங்களுக்கு துன்பமுந் துயருமில்லாமற்போமோ? நீங்கள் நன்மையாயிருந்தாலல்லவோ எங்களுக்கு சவுக்கியமுண்டு. நாங்கள்நீங்காமல் கீசகன்பக்கத்தி லிருக்கும்போது வேறுவித்தியாசம் விளையுமென்று நினைக்கின்றீரா! அப்படிநினையாதீர் எங்களுயிரைவிட்டாலும் விடுவோமேயொழிய அபகீர்

த்திக்காளாக்மாட்டோம், அவனுடைய அக்கிரமத்துக்
கிடங்கொடுக்கமாட்டோம்'எங்கள்பேச்சைநேர்சத்தியமா
யகம்புஞ், நாங்கள் செய்யப்போகிற தந்திரத்தைக்கேளு
ம் இந்தவிரதசாரணியை யழைத்துப்போய், அவன்முன்
னேனிறுத்தி இவளைச்சுற்றிலு நாங்கள் நின்றுக்கொண்
டுஇதோ, வந்தாள். வண்ண மாதென்போம். இச்சொல்
அவன்செவியில் விழுந்தவுடனே மோகினியைக் கண்ட
முனிபோலெழுந்து இவளுடைய கால்மேல் பணிந்து,க
ண்ணே-பெண்ணே-யென்று புலம்பிக்கதறுவான். காம
வேஷ்டையால் பதறுவான் ,அண்டையி லிருக்கின்ற நா
ங்கள் அவனைத்தடுத்து ஐயா! உம்முடம்பு கசங்கிஅசங்
கிப்பட்டிருப்பதினால்,ஸ்நானஞ்செய்து, சந்தனம்-புனு
கு-சவ்வாது-பனிநீர்-சாந்து-கதம்பக் கலவையுந் திமிர்ந்
து,போசனமுண்டு, தாம்பூலந்தரித்து, ஆபரணவலங்கா
ரத்துடன் பழவர்க்கங்களும் பட்டுப்பட்டாவளியும்-புட்
பச்செண்டுங் கொண்டு இந்தப்பெண்ணுக்குக்கொடுத்து
உல்லாசப்படுத்திச் சல்லாபமாய் பேசுமென்று, அந்தவ
ல்லாளன் புத்தியைமாற்றி, ஆளைப் பூமேலேற்றித்தேற்
றி உடனே யிந்தச்சைந்திரியை உம்மிடத்திற் கனுப்பிவி
டுகிறோம் அம்மா, பெருநெருப்பை ஈ மொய்க்குமா! இ
ரும்பைச் செல்லரிக்குமா எவ்வளவும் வித்தியாசமெ
ண்ணாதீரென்று உறுதியாய்ச் சொன்னார்கள்.

இவ்விடத்தில் ஸ்திரமாய்ப்பேசிய சேடியர்களைச்சுதர்க்க
ணைப்பார்த்து ஆமடிபெண்களே நீங்கள்சொல்லுவதுயு
க்தவந்தான் இவ்வாறுநடந்தால் எவருக்குந்தோஷமில்லை
அவனுயிருக்கும் நாசமில்லை, ஒருவேளை கரைபுரண்ட
வெள்ளம் அணைகடந்து போனாலெப்படி! நீங்கள்தானெ
ன்னசெய்வீர்கள் நான் பாவியாய் பழிகாரியாய் விடுவே
னே அன்றியும் - கட்குடியன்-காமுகன்-பொய்யன்-பொ
றாமைக்காரன்- புறங்கூறுபவன்- கள்ளன்- ஊராருடை
மைக் குலைவைத்திருப்பவன்-வறியன்- மூடன்-முதலிய
இவர்களுக்குச்-சத்தியம்-சவுசம்- ஆசாரம்-சாந்தம்-தண்
மை-உண்மை-ஆணை-ஆக்கினை யொன்றுமிராதே, இப்ப
டிப்பட்ட மூடர்கள் சற்றும் யோசிக்க மாட்டார்களே
மோகக்காற்றும் காமத்தீயும் மூடிவரும்பொழுது, கை
கொண்டு மறிக்கப்போமோ கட்டுப்படுமோ சொல்லு
ங்கள் காரிகையேயென்று, தருமந்தவறாத சுதர்க்கண
யானவள் சொல்லும்போது அந்தக்கீசகனிடத்தி லிருந்
து வேறுதாதிய ரோடிவந்து எப்படி எனசெய்வோம்
அப்படிந்த கண்ணுளான மதனரதியே, உன்பேரிலா
ணைப்படிக்குக் கீசகன் முடியப்போகிறான் காலங்கிட்டி
விட்டது ஜாலம்பண்ணாமல் இந்தச்சைரந்திரியையனுப்
புமம்மா ஆபத்திற்குபாவமில்லை இத்தருணத்தில் நீரவ
னைக் காக்கவேண்டும், இந்தம்மாள்பேரில் அவன்கைப்
படவொட்டாமல் செய்து, இவள் பதிவிரதாதன்மத்தை
க்காப்பாற்றி உங்கள் சத்தியத்தையுங் கீர்த்தியையுந் த
ழைக்கப் பார்க்கிறோம் கிருபைபுரியுமென்று பல்லிலக்கா
ட்டிக் கெஞ்சினார்கள், அத்தாதியர்பட்ட பரிதாபத்தை
ப்பார்த்த சுதர்க்கணையானவள் காலகதியாற் கருத்து ம
யங்கி, ஊழ்வினைவசத்தா லுணர்வுமழிந்து அந்தோ! அ
டாபாபி கீசகா பாசகாரிகளாகிய ஐம்புலாதிகளின் சே
ட்டையறிந்து, சேட்டையொழிந்து தேறித் தெளிந்தபா
க்கியவான்களின் வாக்கியங்களைக் கற்றும் யோக்கியமா
கக்கேட்டும் இன்னுந் தெளியாமற் போனையே, மன்மத
வேதமார்க்க மகிமையும் பார்த்திலையே கேடுவரும்போ
து மதிகெட்டு வருமென்பதுபோல் நாசம்வரும்போது
ஞானமும்உண்மையுங் கெட்டு நன்மையும் விட்டுப்போ
மோ மனமுக்கா லிருட்டானாலும் கொம்புதவறிக் குறங்
குபாயுமா! புலிபசித்தாலும்,புல்லைத்தின்னுமா? சிங்கஞ்
சிறுத்தாலும்! பங்கப்படுமா யானை மாமிசமன்றி வேறு
காரந்திண்டுமோஎன்றழுது(தானாடாவிட்டாலும்-சதை
யாடுமென்னும் பழமொழிக்கிணங்க)சகோதரபாசத்தா
ல் வியாகூலப்பட்டு நெஞ்சு புண்ணாய்க்கொட்டிய பஞ்
சுபோற்பதிந்து, கண்மாரிசொரிந்து தன்னருகில் வந்தப
ணிப்பெண் கால்மேல்வணங்கி திருந்திய குலத்திற்பிற
ந்து அருந்ததியிலுஞ் சிறந்த தேவிநீர் கண்ணருள்செய்
வீராகில், எங்கள் செங்கோலும் வாழ்வும் நீதியும் நெறி
யும் சிறப்புஞ்சிறப்புங் குறைவுபடாது தேவரீர் இருபைசெ
ய்யாவிட்டால் எங்க ளரசுரிமை யாவும் அழிந்துபோய்
விடும்எங்கள் தலைமேலிடி விழுவதற்கு உமதுவாய்மொ
ழியைப்பார்த்துக் கெண்டிருக்கிறது நீர் ஆமென்றேற்புக்
கொண்டால் நாங்கள் பிழைப்பதற் கிடமுண்டாம் நீர்
ஒத்துக்கொள்ளாவிடில் நாங்களடியோ டழிந்து போகு
மபடியாய்நேரிடும்நான்பேசப்போகிற வசனத்தைப்பொ
றுமையுடன் கேட்டருளும் பூரணசெல்வியே யென்றுவி
ராடராஜன் பத்தினி சொல்லத்துணிந்தாள்.

என்னுயிருக் கொருதுணையே எனக்குத்தம்பி யெ
ன்றுபிறந்தவம்பன் அறிவில்லாச்சிறுவனானகையால், மனவு
றுதியில்லாமல் மதனவெறி யேறிப்போனானும், மதிமய
ங்கிப் பிணமானாலும் இதுவரையிலும் உயிரிருக்குதோ
இல்லையோவென்றுதாதியரோடிவந்துசேதி சொன்னார்க
ள். மூவாசையொழிந்த முதியோர்களையும் பெண்ணாசை
விடாது. பிரபஞ்சமாயையென்பது இதுதான் நானமகா
பாவியானேன். நீசொன்பேரிற் கோபியாதிரும் உமதுவி
ரதங்குறையாமல் தாதியர் மெத்தப்பிரயாசப் படுவோ
மென்று எனக்குச் சத்தியவசனஞ் சொன்னார்கள், அப்ப

டிச்சொன்னபோதிலும் படாடம்பனை கீசகன் அடாத காரியமாக உம்மைநாடி யாசைப்பட்டது அநியாயம் ஆகிலும்! உம்மைவேண்டிக் கொள்ளுகிறேன ஆபத்துக்காலத்திற்கிரங்கி, அடியேன் முகத்தைப்பார்த்து என்மனச்சஞ்சலத்தையும் அவனபடுகிற துன்பத்தையும் போக்கும் வகையை நீரியோசிக்கவேண்டும். உமதுகற்புக்கும் பழுதுவாராமல், என்னையும் புதிதவதியாக்கி, அவனும்பிழைக்கும்படி கிருபை செய்தருளும், நீரிவ்வளவு ஜீவகாருண்யம்வைத்து எங்களைரட்சிப்பீராகில், உமது குலமும் கோத்திரமும் குணமும் நீர்கொண்டிருக்கின்ற நோன்பும் குறைவுறாமல் மேன்மேலும் விருத்தியாகும்! உலகுள்ளமட்டும் உமது மகுத்துவம் நிலைநிற்கும் எங்கள் நாற்றைந்துபேரையும் பெற்றுவளர்த்த தாயென்று நாங்கள் கொண்டாடுவதுமன்றி உலகத்தாரும்புகழ்ந்து மகிழ்ந்து வாழ்த்துவார்கள் தினமுந் திருவிளக்கேற்றிவைத்து எங்கள் குலதெய்வமென்று உம்மைக்கும்பிடுவேன, தீனரக்ஷகி உன் பத்தினித்வத்திற்குப் பங்கம் வரும்படியாகப்பார்க்கமாட்டேன, நானும்மைநம்பினேன், எனக்கொருவருந் துணையில்லை, என்றுசொல்லிக், கெதியில்லாதஅடியாளுக்கு உமதிரண்டு பாதமேகெதியென்று பணிந்து அவள் காலைப்பிடித்துக்கொண்டு, துணிந்து நானொருயுத்தி நினைந்திருக்கின்றேன். அது உமதுசித்தத்திற் கெப்படியிருக்குமோ தெரிகிலேன் சிறியாளாகியவென்மொழியைச் சிந்தையிற்கொண் டருளவேண்டுஞ்செல்வியேநாசக்கால வழியை நாடி மோசம்போய்க் கிடக்கின்ற கீசகனிடத்திற்கு நீர்போய், வாசப்பூமாலையுந்தேனும் உன்தமக்கைவரிசை யனுப்பினளென்று கொடுத்துவருவீராகில்! என்னிஷ்டம் உம்மைவிட் டெப்பொழுது மகலாதென்று அதிகவருத்தத்தோடுரைத்துப், இந்த உத்தமியையனுப்புவதற்குச் சற்றுமன மில்லாதவளாய்க் கவலைகொண்டிருந்தாள்.

இத்தன்மையாகச் சொல்லிய விராடன்மனைவியை நோக்கிக் கற்புக்கனியாகிய பாஞ்சாலியானவள் என்னையாதரிக்கத்துணிந்த அன்னையே உம்முடைய தம்பியாகிய கீசகன் அற்பவிஷயத்திற் காசைப்பட்டு பூந்தோட்டத்திலிருந்து என்னைத் துரத்திவந்தபோது நீர் கடுமையாகப்பேசியவார்த்தையால் கொல்லத்தக்க பகைகொண்டுபோனான். அவனுடைய கருத்து உமக்குநன்றாய்த் தெரிந்திருந்தும் அந்த இடத்திற்குப்போவென் றெவ்வாறு சொல்லுகிறீர் அவனிடத்திற் கென்னையனுப்ப நினைப்பது உமதுமேலானபுத்திக்கழகல்லவோ நானும்மிடத்தில் வந்தடுத்தபோது என்பேரிலொருவர் காதல்கொள்ளப்படாதென்றும் கொண்டால், உடனே உயிரிழக்கவேண்டுமென்றும் முன்னமேசொன்னேனே அப்படியே குறைவுவாராமற் காக்கிறேனென்று வாக்களித்து அதுமுதலிதுவரையிலுந் தளர்ச்சியின்றிக்காத்து இப்பொழுதந்தச் சண்டாளனிடத்திற் கனுப்புவதற்கு எப்படியுமது மனமொப்பியதோ அறியேன் அப்படியே யாகட்டுமெனது உமது வார்த்தையைத் தள்ளாமற் போவேனாகில் அந்த வண்டன் என்னைக்கண்டவுடனே காதல்மீறிக் காமமேலிக் கைகலக்கத்துணிவானே அப்போது நான்கலங்கலங்கப் படுவேனோ அப்பால் விருதாவாய் அநர்த்தம் விளைந்துபோமே(மறந்துசெத்தேன் பிராணனேவாவென்றால் வாராதே)ஆதலினால் அவனிடத்திற்கென்னை யனுப்புவதை நிறுத்தி வேறெந்த வேலைக் கனுப்பினாலும் உமது சொல்லுக்குத் தடைசொல்லேன். இந்தவேளையிலென்னைவிலக்கிவிடும் என்னைப்போல் இன்னும் அநேகதாதியரிருக்கிறார்கள். அந்தச்சௌந்தரியவதிகளிற் சிலரையனுப்புவது உத்தமமாயிருக்கும் என்மனத்தையுமக்குச் சொன்னேன் அப்பாலுமதிஷ்டமென்று சைரந்திரிசொல்ல, அதற்குச்சுதர்க்கணைசொல்லுகின்றாள். ஓவிதரணைசாலி உம்மைக்கண்டு ஆசைப்பட்டு, உயிரொழியும்படியா யுறக்கங்கொண்டு படாதபாடும்படுகிற பதிதனுக்கு மற்றொரு பெண்ணைக்கண்டுபேச இசையுண்டாமோ அப்படியல்லவென் றனுப்பினாலும் உம்மேற்கொண்ட மோகம் மற்றொருபெண்ணால்மாறுமோ, உமதுருவங்கண்டாலும் உமது இன்சொற் சேட்டாலும் இறங்கவழிபார்க்குங் கீசகன் எழுந்திருப்பானென்று சொல்லுகிறார்களே என்னிஷ்டமே நீர் பட்டகஷ்டத்தோடுசென்று திருப்புவதே யென்பாக்கியம் நீடூழிவாழ்வீர் - நீர் போய்வந்து எங்களை நிலைபெறச் செய்வீரென்று போற்றினாள்.

இவ்விதமாக வணங்கிப் போகத்தகாத காரியத்திற்குப் போகச்சொல்லிய சுதர்க்கணையைப் பேரறிவாலும்பிசகாமொழியாலும் பெருமையாலுமுயர்ந்தபாஞ்சாலிபார்த்து. மேதினிபோற்று மாதரசேகொடிய பாதகனிமித்தமாகக் குரூரவார்த்தையைக்கூசாமற் சொன்னபடியால் உமதுசொல்லைத் தள்ளக்கூடாத தாக்ஷிண்யத்தின் பொருட்டுப் போகிறேன் பின்னுமென்ன கெடுதிவிளையுமோ அன்னமே சொன்னேன்என்னை வெறுக்காதேயும் இதுவரையும் தழைத்து விளங்கிய சுற்றத்தாருக்கும் மற்றையோருக்கும் பெத்தவருத்த மேவிடும்போலிருக்கின்றது (விநாசகால விபரீதபுத்தி) யென்பதையோசிக்காமல் காலாநுகூலத்திற்குத்தகுதியாய் நீருமிப்படி கட்டளையிட்டீர் அப்படியே நான்போய் வருகிறே னென்று சொல்லி, வினையின்பயனே பயனென் றெழுந்து

முத்துப்போல் கண்ணீரை முகஞ்சோரவிட்டு,வாசப்பூமாலையுந் தேனுங்கைக்கொண்டு அந்தப்புர வாசலுக்கு வெளியேவந்து நின்று தேவேந்திரன்-வாயுதேவன்-எமதருமராஜன்-அஸ்வனிதேவர்கள் இவ்வைவரையுந் தியானித்து எஜமானி உத்தரவைக் கடக்கக் கூடாமையால் நாசகாலக் கீசகன் வாசஸ்தலத்தை நாடிப்போனாள்.

இவ்விடத்தில் வைசம்பாயனரை

ஜெனமேஜெயன் கேட்பது, வினா-விடை.

ஓ வைசம்பாயனராகிய சுவாமிகளே திரௌபதாதேவி விரதசாரணியென்ன வேஷங்கொண்டு சுதர்ச்சணையிடத்துக்கு வந்தபொழுது காந்திருவரைவர் தனக்குக் கணவரென்றும் மற்றவர் தன்னைத் தீண்டப்படாதென்றும்,கண்ணேறிட்டுப் பார்த்தவர்கள் வெண்ணீறாய்ப்போவார்களென்றும் ஒருதரத்திற்குப் பத்துதரமாகச்சொன்னதாகத்தேவரீர் திருவாய்மலர்ந்தருளினீர். அப்படியிருக்க ஆஜர்னுபார்குவாகிய மச்சராஜனமனைவி நீதிநெறிகெட்டகீசகனிடத்திற்கு இந்தம்மாளையனுப்பியவிதமென்னவோ அந்த சுதக்ஷணாதேவியை மெத்தவும் புத்திசாலியென்று கற்றவராகிய நீர் புகழ்ந்து பேசிவந்தீரே அவள் புத்திசாலித்தனம் எத்தன்மையாய்ப் போயிற்று என்று ஜெனமேஜெயராஜன் வினாவினான்.

அதற்கு வைசம்பாயனரானவர் கேளும் சந்திரகுலத்தோன்றலே ஜன்மாந்திர வினைவசத்தால்வந்த அநுபவத்தை யாருமநுபவித்தே யொழிக்க வேண்டுமன்றி அநுபவியாமல் வெல்லவல்லவர்களியாருமில்லை. இன்னும் வீமன்கையால் கீசகன்முடியவேண்டிய காரணமிருப்பதினால் பாஞ்சாலியைப்பார்த்துஅவனாசைப்படவும்இவளவனிடத்திற் கனுப்பவும் சமயத்திற்குத்தக்கபடி தாதியர் சொல்லவுநேரிட்டது ஆகலால் மேல்நடந்த விர்த்தாந்தத்தைக் கேளுமென்று விளம்பலுற்றனர்.

இப்பால் புட்பமாலையுந் தேனுங்கொண்டு சென்ற திரௌபதாதேவியம்மன் முந்தி நினைந்துவந்தஐந்துதேவருடன்-சூரியன்-குபேரன்-வருணன்-உருத்திரன்-உருத்திரை-மகாவிஷ்ணு-மகாலட்சுமி-சண்முகன்-பிரமன் சரஸ்வதி-இத்தியாதி- தேவர்களையுந்- தனக்கு வழித்துணையாக வரும்படிவருந்தித் துதித்துச் சத்துரு சங்காரஞ் செய்யும்படிக்கு வந்தித்து வேடன்வீசிய வலைக்குள் அகப்படப்போகின்ற மான்போல் கண்களிரண்டுமிரண்டுவெருண்டு நான்குபுறமுந் தேங்கிப்பார்த்து இருட்டிலுண்டாகிய பயத்தினாலும் நாணத்தினாலும் விதிர்விதிர்த்து,மெய்சிலிர்த்து,இராஜவீதியாகப்போய்,அந்தக் கீசகனரண்மனையிற்புகுந்துமெய்மறந்து,தூக்கமும்,ஊக்கமும்விட்டு,அன்னபானாதி கசந்துஅவஸ்தையாலுள்ளுடைந்து விரதசாரணியைப் போல் தனக்கெதிரில் உருவெளித்தோற்றங்கண்டு வாய் பிதற்றிக்கொண்டு நாவறண்டு, புரண்டுருண்டு கிடக்கின்ற பேயனைக்கண்டாள்.

அப்பொழுது மோகத்தாற்சிதைந்து,மோசவலையிற்புதைந்துகிடக்கின்ற கீசகன் எப்படியிருக்கின்றானென்றால்,தனக்கு அகாலமிருத்துவாகப் பூங்காவில் நேரிட்டமங்கையை நினைத்துப், புன்சிரிப்பாக நகைத்து, இதோ என்பேரில் பாசங்கொண்ட ஆசைப்பெண்வந்தாள், என்னாத்மாவை இரட்சிக்கும் அமுதசஞ்சீவிவந்தாள் ஜீவகாருணிவந்தாள், தேகபோஷிவந்தாள், ஜீமூதமான அஞ்ஞான கேவலத்தைப் போக்கும் ஞானசொரூபி வந்தாள் சித்தசன தொடுங்கணையை வெற்றிகொள்ள வந்தாள், ஆசைக்கடலுள்மூழ்ந்திய நான ஆதரவாகப்பற்றி நீந்திக்கரைசேருவதற்குஅமுதகொங்கைக்குடங்கொண்டு வந்தாள்,என்னை அடிமைகொண்டாளு மங்கைவந்தாள், திருஷ்டிப்பொக்கிஷச் செல்விவந்தாள் பட்டாபிஷேகத் தேவிவந்தாள், என்மோட்டிவந்தாள், என் கண்ணாட்டி வந்தாளென்று சரச சந்தோஷச் சைகைகாட்டித் தலையாட்டி இன்றெனக்கு நல்லகாலம். எனனுடைய சிறுகுடிலில் நல்லவர்கள் திருவடிபெயர்த்தருளப்பெற்றேன் ஆசைராந்திரியாகிய தனமே தேவரீர் செங்கமலப் பாதஞ்சிவக்க நடந்ததோ அடிசேடிமார்களே ஓடிவாருங்க ளோடிவாருங்கள் நான்பிறந்த பிறப்பு இன்றுதான் பயன்பட்டது இதோ என்னெண்ணப்பெண்வந்தாள், இவர்வந்தெந்நேரமாகிறது ஒதுங்கிநிற்கவேண்டிய காரணமென்ன உபசாரஞ்செய்து உள்ளேயழையுங்கள் வாசங்கலந்த பனிநீர் கொண்டுவாருங்கள்,ஸ்நானம்பண்ணிவையுங்கள், பத்தரைமாற்றுப் பசும்பொன்னினாற் சித்திரித்த உத்தரியப்பட்டுடுத்துங்கள், இந்திரவன்னப்பட்டு மேகவர்னப்பட்டு வெண்பட்டு செம்பட்டு- இவைகளாலமைத்திருக்கிற பாவாடை-ரவிக்கைகளையக்குப்பிட்டுக்கொடுங்கள்,முத்துமாலை மோகனமாலை-ஆணிப்பொன்மாலை-அலர்ந்தபூமாலை மாணிக்கமாலை-வச்சிரமாலை-மரகதமாலை இம்மாலையாலலங்கரியுங்கள். புநுகு சவ்வாது கதம்ப கஸ்தூரி பனிநீர்-அத்தர்-சந்தனாதிகளைப் பூசுங்கள்,மதும்மிசபக்ஷணகச்சாயங்களும் கனிவர்க்கங்களும் இச்சையானமட்டுந் தின்னக்கொடுங்கள், வழிநடந்துவந்த இளைப்பாறுங்கள். ஓகோ விரதசாரணியென்னுமின்னே என்பேரிலன்புவருவதற்கு இத்தனை காலஞ்சென்றதோ, வாரும் வாரும் என்மஞ்சத்திலுட்காரும் வாடிப்போனஎன்மு

சுத்தைப்பாரும் உம்மைநாடிவந்த என்மோகத்தைத்தீரும் இதனாலுமக்கதிகபுண்ணியஞ்சேரும். இன்பசரபே, இனியசுகமேயென்றுப்புலம்பி, மூடியகண்ணைவிழித்துப்பாராமல், முறண்டிக்கொண்டிருக்கின்ற மூர்க்கனைப்பாஞ்சாலிபார்த்துநட்டமைக்கண்ணிற்காணாததுபோதேகண்டபாவனையாகப்பேசிக்கலங்குகிற லோபியானவன், எதிரிற்கண்டால், என்னசெய்வனோவென்றுமனங்கலங்கிப்பெருமூச்செறிந்துஇந்தப்பாதிராத்திரியிலிவனைப்பார்ப்பதைப்பார்க்கிலும், பெழுதுவிடிந்தபின்புக்காணலாமென்று அழகியபூஞ்சோலைநெருங்கியதடத்திற்புகுந்தாள், அந்தவேளையில், ஒருகாலுள்ள தேரைக்கூட்டி, மின்னற்கொடிகாட்டிப் பரிமாவேழும்பூட்டி இருகாலில்லாச்சாரதியோட்டி உதயகிரிமிஞ்சியினீட்டிக் கதிர்க்கிரணங்களைக்காட்டி முக்காலும் அருக்கியமேற்குஞ்சூரியனை எக்காலுங்கொண்டு வருவதுபோல்வாராமல், அக்காலையிலவசரத்துடன்கிழக்குத்திசையில் அருணன்கொண்டுவந்தான்.

முருக்கம்பூப்போன்றசூரியோதயங்கண்டவுடனே செருக்கியெழுந்த சேவலும் பட்சிகளுந் தவிதலைக் கீசகன் பிதற்றியசங்கதிகளைச் சகிக்கமாட்டாமல், சங்கடப்பட்டுப் பாதவித்துத் தியங்கித் திட்டுவதுபோல் தொகைகளினால் வயிற்றிலடித்துக்கொண்டு கூவிப்பறந்ததுகள் தடாகமென்றும் பெண்ணானவள் துரோபதாதேவியின் சஞ்சலத்தைப்பார்க்கமாட்டாமல் கண்ணீர்பெருக்கியக்கண்களைசுருக்கிக் கையை விரிப்பதுபோல்கருங்குவளை முதலிய புட்பங்கள் குவிந்து தாமரைமலர்கள் தேன்சொரிந்து விரிந்தனகள் மகாபாவியாகி கீசகனையிகழ்ந்து பாடுவதுபோல் வண்டோல மிட்டது இத்தன்மையாகிய காலத்தில் தெங்கு-மா-கோங்கு பலா-கமுகு முதலியமரங்களோங்கு வனஞ்சூழ்ந்த ஒருபொய்கையிலிடத்தில் பாஞ்சாலிசேர்ந்து- கை- கால்- முகங்கழுவிக்கொண்டு நித்தியவிதிநிறைவேற்றிச் சூரியனுக்கு அருக்கியம்விட்டு இருகர்த்தலத்தையுங்கூப்பி நமஸ்காரமந்திரஞ்செபித்து வணங்கினாள்.

அதெவ்வாறெனில், உலகெலாம் விளங்குமொருபெருஞ்சோதி சர்வசாட்சிதனிப்பரம்பொருளே, பர்வமும் புண்யமும்பரிக்கும்பருதியே, புத்தியுஞ்சித்தியும்பொருந்துமாதயனே சத்துருஜெயாதரு மித்திர வெயிலோய் உத்தமகுணமும் சுத்தமும் விடும்வித்தகக்கல்வியும்மேம்படுசெல்வமும் பத்திசெய் வோர்கட்கித்தனை பேறும் பாலித்தருளும் பாபாதிதனே, எந்தையேபோற்றி, இரவியேபோற்றி, சுந்தரச்செங்கதிர்ச் சுடரேபோற்றி, ஆயிரக்கிரணத் தலரியேபோற்றி, இருள்வலிபொழிக்கும் இனனேபோற்றி, தினகரவெய்யோய்தினமணிபோற்றி, பங்கயபதங்கப் பரிதியேபோற்றி பனிப்பகை பானுப் பகலோய்போற்றி, மித்திரவிருச்சிக விண்மணிபோற்றி சித்திரபானு திவாகரபோற்றி, அண்டயோனி அரியமாபோற்றி, அருக்கனலி யருணனேபோற்றி, சுதேஷ்ணாதேவியின் சொற்பிசகாமல், கீசகன்தன்பாற்கிட்டுமேழைக்குத்துன்பங்கெடுதி, துயரமெய்தாமல் இன்பங்கொடுத்தாளென் ஞாயிறொளியே, உன்னைத் தொழுதேற்குறுகணில்லாமல், இங்கார்மன்னற் கிடர்விளையாமல், விராடன்தேவி விசனமுறாமல், என்குலதெய்வமாயென்னுயிருந்து, தன்மங்காத்தருள் சத்தியமணியே சரணஞ் சரணஞ் சவிதாசரணம் சான்றோய்சரணம் தரணிசரணம் தருணந்தருணமென்று பிரதக்ஷணதெண்டம் சமர்ப்பித்துப் பூமியைத்தொட்டு நெற்றியிற் போட்டிட்டுச், சலம்புரோட்சித்துச், சங்கற்பஞ்சொல்லித், தற்சனிவைத்துச், சற்றுநேரமிருந்து, தடாகத்திலிறங்கி, ஆசமனம்முடித்துக்கொண்டு கரையேறிக் காமவிகாரத்தாற் கன்றிவருந்திய கீசகனிருந்த கெடுமனைகிட்டி, கமலையெதிர்ந்த உயிர்போல்மெலிந்து ஐயா, உம்முன்பட்ட தமக்கையார்தந்த பூவுந்தேனும் இந்தாவென்றுகொடுத்து அவன்மாறுத்தரஞ்சொல்லுமளவும் வேறோர் புறத்திலொதுங்கி யிருந்தாள்.

அந்தவேளையில் கீசகன் கெதிகெப்படி யென்றுஞ் ஆறாத மோகநெருப்பால் நிறுப்பிவந்து, வெதுப்பித், தலைவிசிறி நிலைதவறி மதிபதறி விதிகுறுகி மேனி கருகிமெலிந்து ஊற்றுமுருகியுலர்ந்து செந்தாமரைக்கொழுந்தும்-இளவாழைக் குருத்தும் யானைத்தந்தப்பலகையும் அணிச்சந்தளிரும்-அலர்ந்தமலரும்- அணையாகப்பரப்பி அதன்மேற்படுத்திருந்தான். அதெப்படியிருந்ததென்னில் கட்டையுடன் முட்டைகளைதடுக்கி அதன்மேன்சுட்டெரிக்க நீட்டிவைத்தபிணம்போலத்துவங்கினான். இதனரியும் சந்தன- பாளித- குங்கும - பன்னீரைத் தெளிக்கின்றார்கள் அதெவ்வாறிருந்ததென்னில் சமயதீயைமூட்டிவிட்டுக், கலசச் சலமிறைக்குங் காட்சிபோலிருந்தது மேலும் அவனைச்சுற்றிலும் வாசனைவத்திகளைத்தாதிப்பெண்கள் வைக்கிறார்கள் அதெவ்வண்ணமென்னில் கருமக்கிரியை செய்வதற்குப் புத்திரனல்லாதவர்கள் பெண்கள்கையில் தற்பையளித்துக் கொள்ளிநாட்டுங் கொள்ளைபோலிருந்தது. இவ்வாறுசெய்த சயித்தியோபசாரத்திலுந் தணியாமல், ஐயையோ வென்று ஓங்கியிறைந்து ஏங்கியகீசகனுக்குப்பூபாங்கிலிருந்தபாங்கியர் பலரும் ஆலவட்டம்-தாலவட்டம்-மயில்விசிறி - குயில்விசிறி-குஞ்ச

வேர்விசிறி-சிறுவேர்விசிறி-பட்டுவிசிறி- வெட்டிவேர்விசிறி-தந்தவிசிறி-சந்தவிசிறி-இவைகளா லுபசரித்தார்கள் அவர்கள் வீசிய விசிறிக் காற்றினால் கூசி மெய்குலைந்து தோழிகளே! ஈதென்ன ஊழித்திக்காற்றோ! ஆழித்திக்காற்றோ? என்னுயிரைக் கொள்ளையாட வந்தகூற்றோ ஆஹா! என்னம்மா அயருகிறதேயென்று அசைசத்தமிட்டான். அப்பொழுதே அவ்விட மிருந்த பெண்கள் ஆத்திரப்படடுப் பூவாசம்-பொன்னாரம் - புநுகாரம்-சந்தனாரம்-சித்திராரம-விஸ்தாரம்- முத்தாரங்கொண்டுத்தாரஞ் செய்தார்கள். அவைகளவன் சரீரத்திற் பட்டவுடனே பள-பள-பள-பளா-வென்று பொரிந்து, நீறு நெருப்புமாய் வெந்துபோவதினால் தளதளவென்று தக்காளிப் பழம்போற்கொப்புளமெழும்பக் குப்புறப்படுத்தான.

இதன்றியுங்காமனோய் கலந்த கலக்கத்தால் சந்திரனைத்தூஷித்துச்! சமுத்திர கோஷத்தைக் கோபித்துத் தென்றலைச் சீயென்றேசி! வரிச்சிறைக்குயிலை யிருபிறப்பென்றுபேசிக், கிள்ளைமொழியைக் கடிந்து, கடகடவென்றுப்புரண்டு! இடைகொடுக்காமல், உடைவுடுக்காமல் உணவெடுக்காமல், கன்னியைவிரும்பித், தனியனாய் வெம்பி நான்குபுறமும் நன்றாய்ப்பார்த்து, மெத்தைமேல்வீழ்ந்து, தத்தளிக்கும்பாதகனுக்குஜன்மாந்திரஞ்செய்ததவங்கைகூடியதுபோல், தாழ்ச்சியில்லாவண்ணமடைந்தை காட்சியாய் முன்னிற்கக் கண்டான். அவளைக்கண்டு, நான்பண்ணியபுண்ணியம் பலித்ததென்று கக்கடநகைத்துப்பக்கமாய்ப் படுத்தவன் திக்கென்றெழுந்து தீர்க்கமாய்வீழ்ந்து சரணஞ் சரணம் இதுநல்ல தருணந் தருணம் என்மாதவம்வந்தது, என்வழித்துணைவந்தது, என்னிஷ்டதெய்வம் வந்தது, நான் கும்பிட்டதெய்வம்வந்தது. என்பிராணசஞ்சீவிவந்தது, என்னுடைச்சொபம்போக்கும்-அமுதமிதோவந்தது, பேசப் பிரசம்பெருகுங்குமுதம்வந்தது, என்தேகத்துணை வந்தது, என்றேகத்துயிர் வந்தது, மோகவித்துவந்தது, போகமுத்துவந்தது. என்கண்ணிற் பாவைவந்தது, என்முன்வண்ணப்பெண் வந்தது, ஓகோ ஆபத்திற்குதவு பணங்கேவாரும என் தாகத்தைத் தணிக்குந் தயாரசமேவாரும், என்னருகிலுட்காரும், வறண்டுபோனஎன் பண்டைக்குந் தொண்டைக்கும் சுருண்டுபோன நாக்குக்குமுறக்குக்கும் பசையுண்டாம்படி மதுரவார்த்தையைப்பொழியும், என்னையிறுகக்கட்டி சேரும் கைப்பாகிய என்வாய்க்குக் கனிவாய்முத்தந்தாரும், என்பவம் போக்கடிக்கவந்த பதமே! என்னை விட்டுப்பிரியாதிருக்கவேண்டும்நிதமே, நானுமக்குச்சதமேயென்று நித்தில்தலைக்குப்புற்றிருந்த கீசகன் நிமிர்ந்து, எக்களிப்பிட்டெழுந்து, முன்பின்பாராமல்விரதசாரணியைத் தொட்டணைக்கக் கிட்டினான்.

மீளாநரகத்திற் காளாகும் கீசகன் காமவிகாரத்தினால் பேய்போலோடிவருவதை விரதசாரணிகண்டு, அடா சண்டாளா! துரோகி! என்னைத்தொடாதே. என்னையொருவரும் தீண்டப்படாதே. வீணாசைகொண்டு வாணாளை யொழிக்காதே நெருப்பிலழுந்திய புழுப்போற்சாகாதே, விளக்கில்வீழும விட்டிற்பூச்சிபோல் வேகாதே மறுமாதாமேலாசைப்படாதே. மையல்மோகத்தால் நாசப்படாதே காமப்பேயாற் கண்கலங்காதேயென்று கடுஞ்சொற்களால் கண்டித்தாள். அவ்வாறு கண்டித்துந் தேறாதவனாய்த் தேடியமருந்து சிக்கியதுபோற் கிடைத்ததேவியே! என்னாவியே! நான் மகாபாவியே. பெருகிய காமாக்கினியா லுருகி, வாடுகிற நான் நூறுயிரம்பேர் தடுத்தாலும், உன்னைவிட மாட்டேன். துறட்டுக்கெட்டாப்பழம் வாய்க்கெட்டும் பொழுது, அப்பழத்தைச் சுவைக்காமல் விட்டு விடுகிற மூடனு முண்டோ தோகையே! என்று துரத்தினான். அதனால் நீஞ்சாத்துன்பங்கொண்ட பாஞ்சாலியானவள் பயந்து, உடல் வியர்த்துக், கொலைவேடனைக் கண்ட கலைமானைப்போல், சேலைகுலைய மாலையலையக் கமலமுகம்வாடக் கண்ணீரோடக் கருங்கூந்தலாடக் குடல்குலுங்க குலைநடுங்கதுடியிடைமாதுள் விட்டுவிடென்றோடினாள், அவ்வாறோடிய பாஞ்சாலியானவள் நவமணியிழைத்த கதிர்முடிதரித்த விராடராஜன் கொலுவில் தருமராஜன்முதலியயாவரும் பார்க்கும்படியாய் அபயம் அபயமென்றலறி வாடிய கொடிபோல் வந்துவீழ்ந்தழுதாள். அந்தவிராடபுரத்தில் கங்கபட்டர் வந்தநாள்முதல் உதயத்திற் சபைசேரும்படியாய் வழக்கப்படுத்திய பிரகாரம் மகாஜனங்களுடன் கூடியிருந்த மனுகுலத் தோன்றலாகிய மச்சராஜனும் மந்திரிமார்முதலிய சாஸ்திரிகளும் தேம்பியழுகின்ற தெரிவையைக்கண்டு, கவலைமேற்கொண்டு, கருத்து வேறுபட்டு ஒன்றுந்தோன்றாம லிருக்குஞ் சமயத்தில் காமப்பிணியாற் கலங்கிய கீசகன் சோமவதனத் துரோபதை தன்னைத்தொடர்ந்து பிடிக்கத் துணிந்தாங்கெய்தினன்.

அந்தச் சமயத்தில் மகாலட்சுமி போன்ற மாதரசியைப் பற்றுவதற்கு நீட்டிய கீசகன் கையிரண்டும் அந்த பதிவிரதையின் மேற் படவொட்டாமல், சூரியபகவானநுக்கிரகத்தால் சுழற்காற்றுப்போல் தோன்றிய ஒருகிங்கிரனானவன் கெடுகாலக் கீசகன் கரத்தைப்பற்றி

கு, இருகிறேனச் சுழற்றி விருவிறென்விட்டெறிந்துபோனான். அதனால் வக்கிச்சோடு கடுகிய கீசகன் பெருமூச்செறிந்து பிரமித்து, மன்னர் நகைக்கக் குப்புறவிழுந்து பின்னும்பிடிக்க வெழுந்தான். பின்புத் தானிருக்குமிடத்திற்கும் துரோபதையிருக்குமிடத்திற்கும் வெகுதூரமென்று கண்டு, தலைகவிழ்ந்து, உடல் குனிந்து வெட்கிச், சந்தடிகாட்டாமல் வந்தவழி யோடிப்போனான், அவ்விடத்தில் நடந்த அதிசயத்தைக் கண்ட யாவரும் திக்கற்றவருக்குத் தெய்வமே கதியென்று சிந்தைகலங்கித் திருகித் திகைத்திருந்தார்கள்.

இப்பால் அச்சபையில் வந்து வீழ்ந்தழுத அவ்வேழைப் பெண்ணின் அலங்கோலத்தையும் தொட்டிழுக்கத் தன் மைத்துனனது அக்கிரமத்தையும் அதனால் தனக்கு நேரிட்ட நிந்தையையும் விராடராஜன் யோசித்து, அவ்விடமிருந்த பெரியோர்களையும் இராஜராஜர்களையும் மந்திரி பிரதானிமுதலிய மதிவல்லோரையும்பார்த்து ஓ விற்பத்தி யுடையவர்களே! துற்புத்தி யுடைய இக்கொடிய கீசகன் முறைதப்பி நடந்ததைப் பார்த்தீர்களா? என்று ஆத்திரப்பட்டு அவனுக்கு நற்புத்தி சொல்லி, அவன்செய்த வேலைக்குத் தகுந்ததண்டனை விதிக்கத் தன்னால் கூடாமையால், அக்கீசகனுடைய திடதைரிய பராக்கிரம திக்குவிஜயத்தைக் குறித்துப்பயந்து சிந்தித்திருந்தான்.

அந்தக் காலத்தில் இராஜசபையில் நின்ற விரதசாரணியானவள் ஐயோ! இதென்ன அநியாயம் தெய்வமேயென்று விசனப்பட்டாள் அப்பொழு தவ்விடத்தில் நிறைந்திருந்த வெகுஜனங்களுள் தானுமொருவனாக்வந்திருந்த வீமசேனனாகிய பலாயனனென்பவன் மனவேதனையடைந்து, அஞ்சிக் கெஞ்சிப் பஞ்சுபோற் பறந்தோடிவந்த பாஞ்சாலியையும் அவளைப்பிடிக்கவந்த கீசகனையும் பார்த்துப், பஞ்சேந்திரியமும் பதறத்துடித்து ஆசாரவாசல் முகப்பிலிருக்கிற பெருந்தருவைப் பிடுங்கியடித்துக் கீசகனையும் விராடனையும் ஒருமிக்க முடித்து விடுவதற் கெண்ணினான் அப்பொழுது தம்பியாகிய வீமன் எங்கே பதறுகிறானோவென்று அதுவே நினைப்பாகப் பார்த்துக் கொண்டிருந்த தருமராஜன் அவனது கோபக் குறிப்பையும் எண்ணத்தையும் அறிந்துகொண்டு, அப்பா பலாயனா நீ மடைப்பள்ளிக் கேசமானனாகையால், காய்ந்த விறகு எங்குண்டோவென்று உயர்ந்தமரங்களைக் கண்ணோட்டமிடுகிறது போலுங் காண்கிறது நீ இப்பொழுது பார்க்கிறவிருட்சம் அவசரத்திற்கு விறகாகமாட்டாதே இந்தக் காயவைத்துங் கொள்ளலாமென்று கருதினாலும், இன்னும் இரண்டுமாதஞ் செல்லாமல் உலராதே முக்கியமாய் விறகுவேண்டியிருந்தால், தகுந்த மனிதருடன் காட்டுக்குப்போய். நீ நினைத்த மரங்களை வெட்டி, உன்னிஷ்டப்படி முடித்துக் கொள்ளவேண்டுமேயன்றி இவ்விராடராஜன்சபையில் நிற்கக்கண்ட மரத்தை அவசரப்பட்டழிக்கக்கூடாதே, மிகுந்த பலசாலியாகிய உனக்கு எதுவுங்கஷ்டமில்லை ஆதலின் இப்பட்டினத்திற்குப் புறம்பிற்சென்று வேண்டுமரங்களை வேருடன்கெல்லி எளிதாக எரிக்கலாம் இங்கிருக்குந் தருவானது அநேகம் பட்சிகட் காதாரமாகியும் நமது வாழ்நாளுக் குதவியாகியும் குளிர்ந்த நிழலைக் கொடுத்துக் கொலுமுகத்திற் கழகாயிருக்கின்றது ஐயோ! இம்மரத்தைப் புத்திமான்கள் குறைக்கவிடார்கள். பச்சைமரத்தை வெட்டலாகாதென்று பெரியோரால் சொல்லப் பட்டிருக்கிறது என்ன ஆபத்து வந்தாலும், பாபத்திற்குப் பயப்படவேண்டுமேயென்று தமதுகாலாற் பூமியைத்தேய்த்தார். அவர் இங்கே விறகின்மே லேற்றி வெளிப்படையாகச் சொல்லியவற்றின் பொருள், பரோபகாரியாகிய விராடனைக் கொல்லாமல், கீசகனைக்காட்டிற் கொண்டுபோய்க் கொல்லவேண்டு மெனக் குறிப்பால் விளங்கியது.

அதை யறிந்துகொண்ட வீமசேனன் ஓகோகோ! இவரிக்குந் தடையானாரோயென்று, உடலெங்கும்பதற எழுந்த கோப வேகத்தையடக்கித், திரௌபதியைப் பார்த்தான், அந்தப்பார்வைக் குறிப்பை அறிந்து கொண்ட பாஞ்சாலியானவள் தனக்குநேரிலிருந்த விராடராஜனை நோக்கி, ஓ, மகாராஜனே நல்லொழுக்கத்தை முற்றிலும் ஒழுகவிட்ட கீசகன் துன்மார்க்கமாய், என்னைத்தொடர்ந்து தொட்டிழுக்க வந்தது நீதிதானோ? சாஸ்திரங்களைப் படித்தும் சாதுசங்கத்தை யடுத்தும தன்னுயிர்போல் மன்னுயிர்காத்தும் யாதார சோதர மெனப் பார்த்தும் பாவபுண்ணிய மின்னாவென்றறிந்தும் அடைக்கலம் புகுந்தோரை யாதரித்தும் தேவதாபக்தி ஆசாரிய பக்தி செலுத்தியும் குலமுறை பிசகாமல் நடத்தியும் ஏழைகள்மனது நோவாமலும் படை - குடி - கூழ் - அமைச்சு நட்பு - அரண் - இவ்வாறினையு முடையவனாகியும் செங்கோல் செலுத்துஞ் சீமானாகிய நீர் உமது மைத்துனனுடைய துற்புத்தியை விசாரித்து எனது உள்ளக் கலக்கத்தை மாற்றி, ஆறுதல் சொல்லி ஆதரியாதிருப்பது உமதரசாட்சிக் கழகாமோ, நீதிபரனே! நெறிமுறை யறிந்த நிருபர்கள் தம்மை யண்டினோர்களைத் தம்மக்க

ளைப்போல் [illegible]க்கவேண்டுமென்று தருமசாஸ்திரஞ்சொல்லி யிருக்கிறதல்லவோ, தயாநிதியே! வலியவனாகிய ஒருவன் எளியவனையடித்தாலும் ஒருவனபொருளையொருவன் அபகரித்தாலும் வம்புவார்த்தைகளை வழங்கினும் அவைகளை யரசன்விசாரித்துத் துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனம் பண்ணவேண்டுவ தன்றோ வில்லையோ அவ்வாறு விசாரியாத கொடுங்கோல் மன்னன் இருந்தென்ன என்று உலகம்நிந்திக்குமே உத்தமனே உயர்ந்தோர் முதலிய சர்வசனங்களும் துற்சோபம் - துற்பயங்காம் - துற்மரணம் - துற்வியாதி - இவைமுதலிய பீடைகளடையாமல் சற்சிநேகம் சன்மார்க்கம் - சற்குணம் சதாயு-முதலிய நன்மைகளைப் பெறும்படிக்கல்லவோ அரசனுக்குச் சிங்காசனப் பட்டாபிஷேகஞ் செய்வது.

அவ்வாறு பட்டங்கட்டிக்கொண்ட அரசனுக்கினையாலல்லவோ வருணநான்கும் வரிசைதப்பா திருப்பது பூர்வத்தில் ஒருபாதம் சந்தனக் குழம்பிலும் மற்றொருபாதம் அக்கினிப்பிழம்பிலும்நாட்டி அரசாட்சி புரிந்துவந்த சக்கரவர்த்திகளின் சரித்திரத்தைக் கேட்டறியீரோ தருமாத்மாவே உமதுதேவியாருக்குப் பணிவிடைசெய்து பிழைக்கவந்த ஏழையாகிய வென்னை இக்காட்சி கண்ட சிங்கபலக் கீசகன் தன்னைத்தீர விசாரியாமற்போவீராகில், எனக்கு வேறுகெதியில்லை உமது இடத்தைத் தெரிந்துகொண்ட பாதகன் இனியென்னை யெங்கும் பிழைக்கவொட்டானே. எல்லாந்தெரிந்த பெரியோருக்கு சொல்லாலுணர்த்து வதியாதொன்றுமில்லை தோன்றலே இவ்வுலகத்தில் தவஞ்செய்வதும் யாகம்புரிவதும் தீர்த்தமாடுவதும் தெய்வந்தொழுவதும் பெரிதல்ல அபயமென்றுவந்து அடைக்கலம் புகுந்தவர்களை யாதரிப்பதுவே தருமங்களெல்லாவற்றினுஞ் சிறந்ததென்று சதுமறைப்புரோகிதன்பிரமசூத்திரத்தில் சாற்றியிருக்கின்றனன்.

அதற்குத்திஷ்டாந்தங் கேளும், முற்காலத்திலொருநாள் பிர்மாவினுடையசபைக்குத் தேவேந்திரன்போனான் அவனைக்கண்ட பிர்மதேவனசந்தோஷித்து ஓ இந்திரனே சொற்கமத்தியபாதலத்தோர் நடத்துகின்ற தர்மாதர்மங்கள் உன்னாதீனமா யிருக்கிறபடியால் நீ தருமசூக்ஷமமறிந்து நடத்த வேண்டியதாயிருக்கிறது நீ அவ்வண்ணம் நடத்தாவிடில், இந்தப்பூலோகத்தார் செய்யும் பாபங்களில் பேர்பாதி யுன்னைப் பிடியாமற்போகாது. அப்படிப்பிடித்த பாபங்களை நீ நீக்கிக்கொள்ள வேண்டுமானால், பற்பல அதர்மஞ்செய்கிறவர்களை உடனேயழித்துவிட வேண்டுமென்றார். இப்படிப்பலவாறாகிய அதர்மஞ்செய்யும் பாவிகள் யாரென்று தேவேந்திரன்கேட்க, வேதவிதியும் நீதிவழியும் உலகநடையுந் தப்பிநடந் தவர்கள்தான பாவிகள், இவர்களில் நன்றிகெட்டவர்கள் அடைக்கலம் புகுந்தோரை யாதரியாதவர்கள் இவர்களை மகாபாவிகளென்னப்படும் ஆதலின், இக்கொடிய அதர்மிகளை வச்சிராயுதத்தால் மண்டைகிழிய மோதிப், பண்டுசெய்த பாபங்களைப்போக்கி தருமத்திற் பிரவேசிக்கப் பண்ணுவையாகில், அவர்கள் செய்த புண்ணியங்களில் பேர்பாதி யுனக்குண்டாம், நீ மூவுலகிற்கு முதற்பதியோனாகையால், இந்ததருமசூக்ஷமத்தை யுனக்குச் சாற்றினேனென்றான்.

அந்தச் சதுமுகன் மொழியைக் கேட்ட இந்திரன் பூலோகத்தில்வந்து, துஷ்டர்களைச் சிட்சித்துச், சிஷ்டர்களைரக்ஷித்துப், புண்ணியம்பெருகப் பொருந்தி வாழ்ந்திருந்தானென்று பெரியோருரைக்கக் கேட்டிருக்கின்றேன. ஓ விராடராஜனே உன்மனைவியாரிடத்தில் வந்துசேர்ந்தஅந்நாள்முத லிந்நாள்வரையிலும் இத்தன்மையாகிய துன்பம் நானறியேன் இன்றென் பொல்லாவினையால் வல்லாண்மைக்காரக் கீசகன் இக்கொடிய எண்ணங்கொண்டான், அவன்தானப்படி நினைத்தாலும், ஜெகந்தாங்கிய நீரும் பேசாம லிருந்தது என்றீவினைதான், ஐயா உம்மிடத்தி லிப்பேர்பட்ட குணமிருக்குமாகில், அரசாட்சி யெவ்வாறுநடக்கும் உம்மையார்மதிப்பார்கள், உம்மையார்துதிப்பார்கள், உம்மையாரடுப்பார்கள், வருந்திவந்தவர்களின் துன்பத்தை மாற்றிக் காக்கவேண்டியது உமதுகடமையல்லவா, நீர் அவ்வாறு செய்யாமற்போனால், சாஸ்திரப்படிக்கு உமக்கு மோக்ஷங்கிட்டாதே ஓங்கியநரகமும் உம்மைவிட் டகலாதே, அதிலும் பேதைப் பெண்கள் நாதனற்றவர்கள் முடவர் ஊமைசெவிடு குருடு பிணியாளர் தரித்திரர் தவசிகள் முதலானோருக்குத் தாயுந்தந்தையும் இராஜனாகையால், அவர்களைத்தன்பிராணனைப்போ லாதரிக்கவேண்டும் பழிக்குடன்படாதபார்த்திபனே நான் அநாதையா யிருக்கிறேன் நீயென்னை நிராதரவுசெய்யாமல், இரட்சிக்க வேண்டுமென்று சைரந்திரி சொன்னாள்.

அவ்விரதசாரணி மொழிந்ததை விராடராஜனறிந்து ஓ மங்கையே நான் கீசகனை விசாரிக்க வில்லையென்று கிலேசப்படுகிறாய் உனக்குமவனுக்கும் நேரிட்டநேசமும் நீயவன்வீட்டுக்குப் போனகாரணமும் உன்னைத்துரத்திவந்த விசுவாசமும் இன்னதென்று எனக்குத்தெரியாமையால் ஒருதலைவழக்காகத் தண்டிப்பது உத்தமமல்ல

வே பின்புகாரண காரியந்தெரிந்துக் கொண்டு தீர்க்கவிசாரணைசெய்ய வேண்டியிருப்பதினாலும் உனக்குவந்த தீங்கு ஒருவாறாய் விலகிப்போனதினாலும் நான்சும்மா விருந்தேன். அம்மா? நீ இந்தவேளை மனம் பொறுத்துக்கொள்ளென்று வாயகுளிரப்பேசினான்.

அவனது இன்சொல்லைக்கேட்ட பாஞ்சாலியானவள் விராடராஜனுக்கு மனோதைரியமில்லையென்றுணர்ந்து ஐயா! நீர் சத்தில்லா வசனஞ்சொன்னீர். நான உற்றதுரைக்கிறேன்கேளும் அடியாளுக்குக் காந்திருவரைந்து பேர் கணவர்கள்? புஜபலபராக்கிரமசாலிகள், ஒப்பற்றவர்கள்? விற்பனவிவேகிகள், அவர்கட்குப் பகைவரில்லை யாருக்காயினும் அழிவுகாலநேரிடில், அவர்கள்தாம் சத்துருவாய்த்தோன்றி அழிவார்கள், அக்காந்திருவர்வருகின்ற தேரோசையும் அவர்கள் கைக்கொண்டிருக்கும் வில்லோசையும் எட்டுத்திக்குப் பாலகரையும் திடுக்கிட்டு விழிக்கச்செய்வதுமன்றிச், சக்கிரவாளமுடிமட்டுமுக்கிரமாக வுடைபட்டுத் தத்தளிக்கப்பண்ணுமே, அவர்களை யண்டினோருக்கு வேண்டிய பாக்கியங்களுண்டாமே. அப்பேர்ப்பட்ட மகாபுருஷர்களை மாலையிட்டு மருவிவாழுமென்னை, இப்பேர்ப்பட்ட கேலிக்கிடமாக்கிவிட்ட கீசகனுக்கு நாசகாலங் கிட்டியதென்பதற்குச்சந்தேகமில்லை- ஐயோ! இரும்பை நக்கியோடிக்குஞ் சம்மட்டி யடியானது, நெருப்புக்கும் படுவதுபோல், உம்மையெங்கே மாட்டிக்கொள்ளுகிறதோ வென்னும் துக்கத்தால் இவ்வளவுதூரஞ்சொல்லி யழுகிறேன். ஐயா!மச்சராஜனே, இத்தியாதி வல்லமைபெற்ற காந்திருவர்கட்கு மனைவியாகிய நீ, என்தேவிக்குவேலைசெய்யவருவானேனென்றால்; வினைப்பயனை வெல்ல வல்லவரில்லாமையால், என் நாயகரைவரும் இவ்வினைவசத்தால் தங்களுருமாறியிருக்கின்றார்கள். அவ்வாறிருந்த போதிலும், (கருகிருந்தாலும் காரம்போகாதென்பதுபோல்) தங்கள் தீரவீரமாறினவர்களல்ல, இப்பொழுது இவ்விடத்தில் நடந்திருக்கிற கலகத்தை அவர்களுணர்ந்திருப்பார்கள், தடையின்றி எங்குஞ்சஞ்சரிக்கும் நெஞ்சுரமுள்ளவர்கள். தமக்குத்தாமே சங்கதிதெரிந்துகொள்ளுஞ் சத்தியுடையவர்கள், இந்நேரம் இவன் பிராணனுக்கு முடிவு தேடி உலைவைத்திருப்பார்கள் ஆகிலும் மன்னனும் வேந்தன் வாய்பேசாதிருந்தால், பெண்ணாகியநான் போவ தெவ்வாறோ? புநிதனே! நான் ஒருவரையும் நோகத்தக்கதில்லை பூருவந்தேடிக்கொண்ட வினையையே நோகவேண்டுமென்று, பொருமி, விம்மிப்புலம்பி, ஓ, சபைநிறைந்த புண்ணியவான்களே! சத்தியதரும மென்றும அசத்திய தருமமென்றும் இரண்டு உண்டு அவ்விரண்டினுள் சத்திய தருமமே முக்கியம், அச்சத்திய தருமம் எவ்விடத்தில் விளங்குகிறதோ? அவ்விடத்தில் மகாலட்சுமியுடன் மாயோனிருப்பான். அந்த ஸ்ரீயப்பதியிருக்குமிடத்தில்கிளர்ச்சியும்சத்துருஜெயமுமுண்டாம்.

அசத்தியதருமம் எவ்விடத்திலிருக்கின்றதோ? அவ்விடத்தில் மூதேவிகுடி புகுவாள், மூடருறவு மெய்தும், அனரியும், கொடுரோகிகளாய்த் தளர்ச்சியுற்றுத் தூக்கமும் சோம்பலும் ஏக்கமும், அடைவார்களெனச் சுருதிமுறையிடுகின்ற தாகையால், ஆணைப்பெண்ணைப் பெற்ற நீங்களாயினுங் கவனித்துத் தருமத்தையநுசரித்துப் பொதுவாய்ப் பேசப்படாதோ? அரசனெவ்வழி அவ்வழி குடிகளென்பதை நிலைநாட்டினீர்களே, நீதிநெறி யற்றீர்களோ? ஐயோ! இந்நிலத்தில் நான்பெண்ணாகப் பிறந்த பெரும்பிழையாதோ தெய்வமே என்று தளர்ந்துவாடினாள்.

அழகியமாதின தளர்ச்சியைச் சபையிலிருந்த சகலரும்பார்த்துக் கீசகனையும் விராடனையும் நிந்தித்து, விந்த சாரணியின பதிவிரதா தருமத்தைச்சிக்கித்துப்பெண்ணிலக்கணம் பூரணமாக அமைந்திருக்கின்ற இப்புண்ணியசாலியை நிதானித்து இந்த அம்மாள் நல்லகுடிப்பிறப்பாக் காண்கிறது, தேவபுருஷசம்பந்தம்போலத் தோன்றுகிறது, குணம்- மணம்- குரல்- வசனம்- இவற்றைநோக்குங்கால், பதுமினி ஸ்திரீயாயிருக்கிறாள். இத்தன்மையவாகிய உத்தமிகள், நினைத்த காரியங்களெல்லாம் சித்தியாகாமல்போமோ? இலேசான பெண்களைப்போல் எண்ணப்படாது, கெட்டமதியுள்ள கீசகன துட்டநினைப்பினால் தொடர்ந்த மூடத்தனமானது அவன் பிராணமுடிவுக்கோ? யாதுகாரணமோ? தெரியவில்லை பூர்வம் சீதாதேவிக்கு ஸ்ரமம் நேரிட்டாப்போல் நேரிட்டதல்லவா என்று தங்கள் மனத்தைத் தாங்களே தேற்றிக்கொண்டு அம்மா! சும்மாவிரு விசனப்படாதே, உமக்கு நல்லகாலம் இந்த விராடபுரத்தில் வரப்போகிறதென்று வாழ்த்தினார்கள்.

அக்காலையில் இவற்றையெல்லாம் பார்த்து,உள்ளே மாச்சரியமும் வெளிக்கு ஆச்சரியமுங் கொண்டிருந்த கங்கபட்டரானவர், ஓ, சைரந்திரிப் பெயர்பெற்றபெண்பாவாய்! பெண்களுக்குரிய நாணமடமுதலிய நாற்குணங்களுமாறி. இராஜசபையேறி, அத்துமீறிப் பேசுகின்றாய், அநியாயக்காரி! தருமபதியாகிய விராடபூபதி மகாதயாநிதி, சத்தியவாக்கியர் சாதுசங்கப்பழக்கமுள்ள

யோக்கியர், சகலவித சம்பத்துடைய பாக்கியர். சதுர்வேத மோர்ந்தவர். தநுர்வேதந்தேர்ந்தவர். மநுமுறைகற்றவர். மக்களைப்பெற்றவர் - நடுவுநிலையாக விசாரிப்பார் பக்ஷபாதமிராது, நீ யஞ்சாதே அவசரப்படாதே இந்த மச்சராஜன் விசாரியாமல்போனாலும், உனக்குரிய காந்திருவர்கள் அவசியம் விசாரிப்பார்களென்று உனசொல்லினாலேயே விளங்குகிறது. நீ யிந்தச்சபையில் ஆத்திரப்படவேண்டாம். உன் எசமான் கட்டளையைப்பரிபாலிப்பதே முக்கியதர்மம். சாந்தகுணமே தகுந்தபூஷணம் பெண்ணாகப்பிறந்தோருக்கு அடக்கமிருக்கவேண்டும் ஆதாரவற்றவர்க்கு அரசனே தெய்வமென்றுநம்பி, வாயடங்கி ஒடுங்கிப்போகவேண்டும். அன்றித் தாங்களெவ்விடத்தில் வேலைசெய் கின்றார்களோ அந்தவிடத்திற் சொல்லி அவர்கள்மூலமாக விசாரணைக்கு வரச்செய்யவேண்டும் அப்பொழு துன்மனக்குறை யெப்பொழுதுமில்லாமல் நீங்கும். இப்பொழுது நீ அந்தப்புரம் போய்ச் சேரென்றார்.

கங்கபட்டருரைத்த கருத்தைத்தெரிந்துகொண்ட மங்கையானவள், அங்கைகுவித்துப் புத்தியென்றுபோற்றிச், சுதார்க்கணையிடத்திற்போய்ப் பெருங்காற்றிலலைந்த முருங்கைபோல் சுருங்கி ஒடுங்கிநின்றாள். இவ்வாறு ஓய்ந்துநின்ற மாலினியை அரசன்பத்தினி பார்த்துக்கருங்குவளைநெருங்கிய கண்களும் - வெண்டாமரை போன்றமுகமும் - சண்பகப்பூவனைய மூக்கும், முல்லை யரும்பைப் பழிக்கும் பல்லும் - அமுதமாகிய சொல்லும் - கொவ்வைக்கனிக் கொப்பாமிதழும் - இராகுவினால் தீண்டப்பட்ட சந்திரன்போல் குறைந்து வதங்கிய உடலும் வாடியநடையுமாய் வருவானேன்? கண்ணீர்சொரிவானேன் கழுத்து முத்தாரம் பழுத்துபோவானேன், போன இடத்தில் பொல்லாங்குண்டோ, அப்படிக்கேதாகிலுமுண்டானால், இப்பொழுதே சொல்லுந்தப்பாமல் தண்டிக்கிறேனென்று கேட்டாள்.

அப்படி அன்புடன்கேட்ட சுதார்க்கணையைத் திரௌபதாதேவி பார்த்து, அம்மா! கைவிரலால்கண்ணைக் குத்திவிட்டு யார்குத்தினார்கள், குத்தியதற்குக் காரணமென்ன, என்றுகேட்பது ஆச்சரியத்தின்மேலாச்சரியமல்லவோ, என் நிர்வாகமுதலிய யாவற்றையும் முன்னாடிச்சொல்லி யிருந்த என்னை உன்தம்பியினிடத்திற்கனுப்பிவைத்துப் பின்னுமொன்றுந் தெரியாதவள்போல் துடிதுடித்துப் பேசுகின்றாய், ஆயினும், பெரிதல்ல உன்வார்த்தையின் வண்ணம் புட்பமும் தேனும் - கொண்டுபோய்க் கொடுத்தேன், அந்தக்கீசகன் என்னைக் கண்டவுடனே எழுந்தோடிவந்து, என்கையிலிருந்த மாலையையும் மதுவையும் - வாங்காமல், என்மேல்விழுந்து அநுபவிக்க எண்ணினான், நான அந்தப் பாதகன்கையி லகப்படாமல், தப்பியோடி விராடராஜன் சபையில்விழுந்தேன். அப்பாலென்னைத் தொடர்ந்துவந்தபாவியப்பாடுபட்டானோ என்னகதி கெட்டானோ நானறியேன். உத்தமியென்றழுதாள்.

இவ்வாறு உருகியழாநின்ற விரதசாரணியின் துக்கத்தையும் சோபத்தையும்போக்கி அம்மா! வண்ணமாதே அந்தப்படுபாவி என்தம்பியானாலும் மகா பதிவிரதையான உன்சித்தஞ் சிதையப்பண்ணியபடியால் கடைகஷ்டனாகிய துஷ்டனானான். தாய்க்காகாதபிள்ளை ஊர்க்காகாதென்பதுபோல் உனக்காகாதசாவான் எனக்கு மாகாமற்போவான், உனக்கொருநாளுங் குறைவில்லை. பங்கமில்லாத தங்கமே! காமி - வாமி - வெறியன் - மூறியன வறியன் - சிறியன் - இவர்களுக்கு மட்டுமரியாதை கட்டுத்திட்டம் - ஈனமானம் விதிவிலக்கு - விவேகமுதலியதுங்கிடையாது நன்மையினால் வசவிர்த்திக்கு வரமாட்டார்கள் சவுக்கடியே தெய்வம், ஆதலின் முறைகெட்ட மூடனாகிய கீசகனைக் கொல்லவேண்டு மென்னும் நினைப்பிருந்தால் சொல்லும். விராடராஜனுடன் கலந்துபேசி வேலையை முடிக்கச் செய்கிறேன். உமதெண்ணத்தை எமக்குணர்த்துமென்று சுதார்க்கணைகேட்டாள். அம்மொழியைக் கேட்ட விரதசாரணியானவள், அம்மா வதோ, என்னுடைய கர்மாநுபவம் இப்படியிருந்தது, இராஜசபையி லிருந்தவர்கள் நகைப்பதற் கிடமுண்டாயிற்று, இக்கற்ற எனக்குத் தெய்வமிருக்கிறது, அடாதுசெய்வார் படாதுபடுவாரென்னும் பழமொழியுண்டு, அது பழுதுபடாது என்விஷயத்தில் அபராதியாகிய கீசகன் கந்திருவர் ஐவரால் கால்சாய்ந்துபோவான் எனக்குரிய நாயகர்கள் இன்றைக்கோ நாளைக்கோ வரப்போகிறார்கள் அப்பொழுதிவன் தலையொடுபோமோ இரதத் தாணியொடுபோமோ தெரியேன், நான் உன்னைவந்தடுத்து, உன்னுடைய உப்புந்தண்ணீரும் புசித்துக், காலங்கழித்துவந்தென்னால் உனக்கு ஒருகுறைவும் இல்லாதிருக்கும்படி என்னிஷ்டதெய்வத்தைப் பிரார்த்துக் கொண்டேன் அன்னையே? என்று வண்ணமகள் வாழ்த்தினாள். அப்பெண்ணின் வார்த்தையைக்கேட்ட சுதார்க்கணையானவள் கண்ணீர்விடுத்து, அவள் கண்ணைத்துடைத்து, விம்மிமெலிந்து நம்பியொருவனாகிய தம்பி வெம்பிவிழுங்காலம் வந்ததே. புத்திரமித்திராதியரா யிழந்துபோக நேரிட்டதே. யென்று கலக்கமுற்று மிகவும் ஏக்கங்கொண்டு

தாள். இப்படி தூக்கப்பட்ட சுதர்க்கணையாகிய வண்டுவிழியாளுக்குப் பண்டுதொட்டுத் தொண்டுபுரிந்து அண்டையில் நின்ற பெண்டுகளெல்லாம் ஒன்றுகூடி, மாலினியைக்கண்டு, மதிமருட்கொண்டு ஐயோ! கண்டகனுகிய கீசகன் பண்டைவினையால் பொன்றுங்காலத்தைத் தேடிக்கொண்டானே. அது பெருந்தீயைப்போல்-மூண்டுவிட்டதே. விராடராஜனுக்கும் விதண்டையான வியாகூலம் விளைந்ததே. இந்தமோசத்திற்கு நாம் தப்பிப்பிழைக்கும் வகையெப்படியென்று கிலேசித்து எண்ணமிட்டுக்கொண்டிருந்தார்கள் இப்பால் பாஞ்சாலியைப் பிடிக்கவந்த கீசகன் திரௌபதாதித்தன் அனுப்பிவித்த கிங்கிரனால் வீசியெறியவிழுந்து, மிகவும் வேஷ்டையால்தாழ்ந்து, நாம் வாழ்ந்தவாழ் விதுவோவென்று மனமெலிவடைந்து, தாஷ்டீகந்தளர்ந்து, மோகச்சமுத்திரம் வடிந்து, இம்மைதிரும்பிச் சிந்தைதெளிந்து, மயக்கமாறித், தன்மாளிகைபோய்ச் சேர்ந்தான். இவனது நிலையிப்படியிருக்க, அச்சமில்லாதிருந்த மச்சராஜன் கொச்சைமொழியாள் கேட்ட கேள்வியினால் நாணப்பட்டுச்சபையிலுள்ளோர் பேசிய தன்விபகாரத் தாழ்வையும் கீசகன் தேடிக்கொண்ட நாசத்தையும் தன்மனதுட் கொண்டு, மைத்துனனைக் கொல்லுந்திறம் தனக்கில்லாமையால், புல்லியர்தங்களைப்போல் பொருமலுற்றிருந்தான்.

இத்தன்மையிருந்த விராடராஜனை, வேதவிதியும் நீதிவழியுந்தெரிந்த கங்கபட்டர்பார்த்துச்சாந்தகுணவேந்தனே. ஆண்மையுடன் அரசாட்சிசெய்யும் அரசர்கள் துட்டனாக்கொட்ட மடக்காவிடில், அப்பட்டினத்துச் செல்வமும், ராஜநீதியும் நிலைபெறுவாம் புகழ்ப்பிரதாபமுங் கைகூடாது செங்கோல்செலுத்துந்திறமையுடையவர்கள் விபகாரதிசையில் தன்னவன்பிறன் என்னும் பக்ஷபாதம் பார்க்கப்போகாது வயிறுவளர்ப்பதற்குவந்து உம்முடைய மனைவியையடுத்துக் குற்றேவல் செய்துஜீவனம்பண்ணுகிற ஓரேழைமேல், மச்சராஜன் மச்சான இச்சைவைச்சானென்பது வசையோ, அன்றி இசையோ, பெரியமனிதன் செயலா, ஒருபெண்ணைத் துரத்திவந்தது ஞாயமா? சுத்தவீரன் கொடுமை நினைத்தது தர்மமா? நீர்சும்மாஇருந்துவிட்டது தர்மமா? இதுநீமக்கள் செய்கையல்லவோ? அக்கீசகன், தன்னைவிடப் பிரபஞ்சமில்லையென்று, உம்மை மதியாதிருக்கின்றான், உமது துரைத்தனத்தில், இப்பேர்ப்பட்ட கெடுதியைச்செய்து களித்துப்போனான். இவனுக்கு எதிரொருவருமில்லை. அப்பணிப் பெண்ணுக்குத் திக்கொருவருமில்லை அப்படி இருந்தபோதிலும் எல்லோருக்கும் பொதுவில் தெய்வமொன் றிருக்கிறதல்லவா? பாவபுண்ணியங்களைப் பார்க்குந் தருமதேவதை, சற்றேனுஞ் சகிக்கமாட்டாதே. அரசன் அன்றேகொல்லும் தெய்வம் நின்றுகொல்லும் உலகமாயையொழித்த ஞானியையுந், தீவினைதொடராது விடாது. தருமத்திற்கு விரோதமான காரியம் கழுத்தறுப்பென்பது கதையிலுங் கேட்டறிவீரோ! இதுசகல ஆத்தமகோடிகளுக்குஞ் சகசமாயிருப்பது அவ்வாறிருப்பினும், இலைமறைவோ காய்மறைவோவென்றுதாரா[illegible]திந்துகாலமிடந்தெரிந்துகாற்றடித்தது தாழைப்பூத்ததென்னுங் கற்பனைபோல், அநுபவியாமல் அதுவே உற்பனமாய்க் கண்டவிடத்தில் கண்ணுங் கருத்துஞ் செலுத்திப் பெண்டாசைகொண்டு பிரகற்பித்தவிப்பது துன்பத்திலும் பெருந்துன்பமாய்ச் சேருமே ஐயோ! நீரிதுவரையிலும் பெற்ற மகிழ்ச்சியும் புகழ்ச்சியுங் கெட்டுப்போமே. இனிஇகழ்ச்சிக்கிடமாகுமே. இறைவனே என்று தருமராஜன்சாற்றினர்.

இங்ஙனமுரைத்த கங்கபட்டர் வாக்கியமும் விரதசாரணிக்கு நேரிட்ட அபாக்கியமும் அதனால் தனக்குவந்த சிலாக்கியமும் தன்னிரு காதைத்துளைத்து, உருவிப்போனதினால் களைத்துப் புத்தியுமிளைத்துச் சிங்காசனம்விட்டெழுந்து, திருமனைக்குட்புகுந்து, தியங்கித் திகைத்து, மயங்கி மலைத்துப் பிரக்ஞை தப்பியிருந்தான் அந்தக்கொலுமுகத்தி லிருந்த வீமன் நெருப்பினும் அதிகமாகப்பொங்கிப் பொறிசிதறக் கண்களையுருட்டி விழித்து நறநறவென்று பல்லைக்கடித்துக் கையிரண்டையுந் தேய்த்து; முறுக்கி, மோதி, முகஞ்சுளித்து, விராடனைப்பழித்து விண்ணு மண்ணும் வேகக் கலகலவென்றுசிரித்துக், குகைக்குட்புகுஞ் சிங்கம்போல், மடைப்பள்ளியில் புகுந்தான் பின்புத் தருமராஜனும் மற்றத்தம்பிமாரும் தங்கள் காலத்தை நினைந்து. வருந்தித் தங்கள்தங்கள் இடம்போய்ச் சேர்ந்தார்கள்.

வெற்றிவேலேந்தியவிராடராஜன்படுக்கைபொருந்தாமல் புரண்டு, அழிவில்லா அரசுக்கு அநர்த்தம் வந்ததேயென்று பழிகாரக் கீசகனை வெறுத்துக் குறுகுறுத்துத், தன்தீவினையை யொறுத்து இனிநாம்முடிபொறுத்திருப்பது எப்படியென்று ஏங்கியிருந்தான்.

மகாலட்சுமிக் கொப்பாகிய சுதக்ஷ்ணாதேவியானவள் துன்பமடைந்து எப்படி விளையுமோ என்னநேரிடுமோ நமது செல்வங்கள் எவ்வாறுமோ, என்று திகிலடைந் திருந்தாள்.

அந்தமச்சநாட்டில் மருவிய நான்கு வருணங்களும் தங்களுயிரின் மேலும்உடலின்மேலும்இச்சைவிட்டு அச்சமோ டிருந்தார்கள்.

இக்கொடிய செய்கைக்கு யாதான விசனப்படார்கள் அரசனே யென்று வைசம்பாயனர் சொல்லி வரும்போது சந்திரகுலத் தோன்றலாகிய ஜெனமேஜெயமகாராஜன் மனஸ்தாபப்பட்டு இதென்ன பாவமென்றேங்கிப் பக்கத்திலிருந்த தக்கமனைவியானவபுஷ்டாதேவியுடனெழுந்து புராணிகளைப் பணிந்து சுவாமி மகாபதிவிரதையாகிய பாஞ்சாலியம்மனவள் அந்தத்துன்மார்க்க கீசகனைச் சபித்துத் தன்மகத்துவத்தை நிலைகாட்டி வரிசசபெறப் படாதோ ஏன் சும்மாவிருந்தாள் மானங்கெடுங்காலத்தி லில்லாத மகத்துவம் மற்றொருகாலத்தில் இருந்தென்ன போயென்ன அந்தக் கீசகன் எம்மாத்திர மனுஷன் எவ்வளவு பலமுள்ளவன் எந்தக்குலத்திற்பிறந்தவன சுதர்க்கணைக்கும் இவனுக்கும் சகோதரசம்பந்தம் எவ்வாறுண்டாயிற்று இவனுக்கு விராடனடங்கியிருக்க வேண்டியகாரணமென்ன இந்த விபரங்களையெல்லாம் எனக்கு அறிவிக்கவேண்டும் புண்ணியனே என்று ஜெனமேஜெயன் கேட்க வைசம்பாயனர் சொல்லத் தொடங்கினார்.

கீசகன் வரலாறு.

கேளும் ஜெனமேஜெய மகாராஜனே பிரமசிருட்டியாலுண்டான பிரபஞ்சத்தில் பிராமணனுக்கும் க்ஷத்திரியனுக்கும் பிறந்தோர்களைச் சூதகுலத்தாரென்று சொல்லுவார்கள், அந்தச் சூதகுலம் க்ஷத்திரிய குலத்திற்குத் தாழ்ந்ததென்றும் வைசியருக்கு உயர்ந்ததென்றும ஜாதிநூலில் சொல்லியிருக்கிறது, அப்படியிருந்தபோதிலும், அநுமுதலிதுவரையில் சூதகுலத்தில் க்ஷத்திரியர்கள் சம்பந்தம் பண்ணிக்கொண்டிருக்கின்றார்கள் க்ஷத்திரியகுலத்தில் சூதகுலத்தாருக்குச் சம்பந்தமில்லை இந்தப் பரதகண்டத்திலுள்ளவர்கள் அந்தச் சூதவம்ஸத்தைக் குறைவாகப் பேசிக்கொள்ளுவார்கள் அப்பேர்ப்பட்ட சூதகுலத்தில் கேகயராஜ னொருவனிருந்தான அந்தக்கேகயராஜன் இராஜகன்னியென்பவளை விவாகம்பண்ணிக்கொண்டு லோகப்பிரசித்தனாய் வாழ்ந்தான் அவனுக்கொருபெண் பிறந்தாள் அந்தப்பெண்தான் ஐயா இந்தச்சுதர்க்கணையென்பவள் இவள்பிறந்தபின்பு வேறே பிள்ளைகளில்லாமையால் இந்தச்சுதக்ஷணை தேவியைப் பூமரம்போல் அருமையாக வளர்த்து வந்தார்கள் இப்படியிருக்கையில் இவள் தந்தையாகிய கேகயராஜன் ஆண்பிள்ளை பிறக்கவேண்டுமென்னும் ஆசையால்மாளவதேவி யென்பவளை இரண்டாவது மணம்புரிந்து கொண்டான் அவள் கருப்பத்தில் நூற்றுநாலுபிள்ளைகள பிறந்தார்கள் அவர்களில் இந்தக் கீசகன்தான் மூத்தவன்சிங்கபலனென்றுபேர்வாய்ந்தவன் மகாபலசாலி இப்படியிருக்க விராடராஜனுடைய மூதற்பெண்சாதி சுரதையென்பவள் சதானீகன் சங்கன்-வராகன்- ஆதிவராக- கேது எனனும் இந்நால்வரைப் பெற்றுவைத்து இறந்துபோனாள் பிற்பாடு இந்தச் சுதர்க்கணையைக்கலியாணஞ்செய்துகொண்டான் இவள்வயிற்றில் உத்தரன் உத்தரா யென்னும் ஆணும் பெண்ணும் ஒருபேராய்ப் பிறந்தார்கள் இவ்விராடராஜனுக்கு அபிமானபுத்திரனாக முதற்பிறந்த சுவேதனென்பவனொருவன் இவர்களியாவருங்குழந்தைகளானபடியாலும் விராடன் தம்பிமார்கள் பதின்மர் இடந்தப்பினவர்களாகையாலும் விராடனுடைய மச்சதேசம் சகலவளங்களும் உள்ளதாகையாலும சத்துருக்கள் அநேகரிருந்தார்கள் அதனால் விராடன் சித்தங்கலங்கி இந்தச்சுதர்க்கணைக்குத் தம்பியாகிய கீசகன் சத்துருசங்காரனென்று கேள்விப்பட்டு அவனைவருவித்துத்தனக்குதவியாயிருக்கும்படி கேட்டுக்கொண்டான் அதற்குடன்பட்ட கீசகன உபகீசர்களாகிய தன்தம்பிமார்களுடன் இந்த விராடபுரத்தை யடுத்துச் சேனாபதிப்பட்டமுடையவனாய்த் திக்குவிஜயம் புரிந்து சகலகாணியாட்சிக்கும் தானேசுதந்திரனானான்.

இப்பொழுது நான்சொன்ன கீசகர்கள் யாவரும் பூர்வசநநத்தில் காலகேயர்களென்னுங் காந்திருவர்கள் பாணனென்பவன் முதலாக நூற்றுநாலுபேர்கள் வாமகாரிகளாகவும் காமகாரிகளாகவும் சாமவேதியர்சாபம்பெற்றுப் பூமியிற்பிறந்தார்கள் பாணனென்னும் சிங்கபல கீசகனானவன அஸ்திர சஸ்திர சாஸ்திரங்களை அப்பியாசித்துப் பதினாயிரம்யானை பலமுள்ளவனாய்ப் பகைவரைக்கொன்று பலனையும் வென்று விராடபுரத்தரசைநிலைநிறுத்தி வைத்தான் இவனைப் பகைத்தெதிர்த்த திரிகர்த்ததேசாதிபன் தசாரண தேசராஜன கஜேருகதேசாதிபதி மாளவதேசபோஜன் யவனதேசராஜன் புலிந்தகர்த்தலைவன்கோசலதேசமுதல்வன் அங்கராஜன்வங்கதேசன் கலிங்கராஜன் தக்கணதேசாதிபன் நிடததேசாதிபதி முதலானோர்களும் கிராதகுலத் தலைவர்களும் இவனுடன் போர்புரிந்து வெல்லமாட்டாமல் தோற்றுவில்லொடிந்து இனிச் சாகிறபரியந்தம இவனுடன் சண்டைக்கு வருவதில்லையென்று சபதம் பண்ணிக்கொண்டு ஊர்முகமாயோடிப்போனார்கள் அதனாலிவன் அநேகவெற்றிபெற்றவனாய் மதிமந்திரி புத்திகற்றவனாய் இத்தேசமுழுவதும் தனக்குச் சுவாதீனமாக்கிக்கொண்டு ஏகதே[illegible]சையாக விருக்கின்றான் எல்லாமர்மங்களுந் தெரிந்[illegible]னகையால் இவனுக்கு விராடனடங்கியிருக்கின்றான்இதனு

லேதான் துரோபதியைத் தூத்திவந்த துராக்கிரதத்தைப்பற்றி யொன்றுங் கேளாமற்போனது இதனாலும் துரோபதியம்மன கீசகனைச் சபிக்கப்படாதாலென்றுவினவினிரோ அதற்குக்காரணஞ் சொல்லுகிறேன் கேளும் தனக்குரிய கணவர்கள் கண்குத்திப்பாம்புபோல் பிரத்தியக்ஷமாகப் பார்த்திருக்கும்போது சபிப்பது தருமமல்லவென்றும் சூரியநமஸ்காரஞ்செய்த சுகிர்தத்தினல் தனக்குத் துன்பமில்லாமற் போயிற்றென்றும் எப்படியும்வீமன் தப்பாமல் கொல்லுவானென்றும்தைரியங்கொண்டு சபிக்காமல் விடுத்தாள் வெண்கதிர்க்குலத்தோனாகியவேந்தனே நீர்கேட்ட சங்கதியைச் சந்தேகமறச்சொன்னேன் மேல்நடக்குங் கீசகனுடைய அழிவையுஞ்சொல்லுகிறேனென்று வைசம்பாயனர் ஸ்ரீவேதவியாசரைச் சிந்தித்து, வந்தித்துச் செப்பத்தொடங்கினர்.

கீசகஸம்மாரம்.

இப்பால் மாதமொன்றுக்கொவ்வொருவராகமகமேருவை வலம்வருகின்ற துவாதசாதித்தர்களில் அந்தமாசத்தி லுதயமான மித்துருவென்னுஞ் சூரியன துரோபதியம்மன் பூசித்தபடியால் துரோபதா இத்தனைநா போபெற்ற விரதசாரணிக்கு விளைந்த வேஷ்டையைக்குறித்துச் சூரியகுலத் தோனாகிய கீசகனை வெறுத்துக் குலதர்மத்தை விட்டு வழுவினனென்று கோபித்து விஸ்தாரமுள்ள தன்கிரணத்தைக் கூட்டி, அஸ்தமானகிரியில்தேரோட்டி, மேற்றிசைசிவக்க நாற்றிசையுவக்கச்சாய்ந்து சமுத்திரத்தில் தோய்ந்தான். பொழுதுபோனவுடன் அந்நகரிலுள்ளோர் யாவரும் அடிவயற்றில்வடவாமுகாக்கினியைக்குடிவைத்துக் கொண்டு, பசியோனத்திகிலடைந்து, நித்திரைவிட்டு, நினைவுங்கெட்டு, கெட்டுயிர்ப்பெயிந்து, உயிராசைதுறந்து, உறக்க முற்றிருந்தார்கள்.

சுதேக்ஷணைதேவியி னிடத்திலிருந்த துரோபதாதேவியானவள் திராத்துயரத்தினல் சிந்தைவருந்திக்கண்கலங்கிக், கவலைகொண்டு ஜெப-தப ஸ்நான -போஜனமிகருந்துறந்து, என்னுடையமென்னி நமதுபுகழுக்குப் பழுதுவந்ததேயென்றுநெருப்பிடும்மெழுகுபோல் நெஞ்சமுருகி எக்கமேலிட்டுத் தூக்கங் கொள்ளாமல் நடுராத்திரியில் வெளிப்பட்டுத், தருமராஜனுடைய சாணாரவிந்தத்தைத் தியானித்துக், காவலாளிகளின் கண்ணிற்படாமல் மடைப்பள்ளிக்குப்போய், வெண்பட்டு மெத்தைமேற்சயனித்து நித்திரைபோலிருக்கின்றவலாயனனைப்பார்த்துவருஷாகாலத்து விருஷபம்போன்றது, மதகரி[illegible]னே! என்மானங்கெட வினைத்தகீசகனை வாட்டாமல், மெய்மறந்து உறங்குவதுயாதோ? கவலையுள்ளவர்க்குக் கண்ணுறக்கம் வருமோ? நான் பட்டபாட்டைப் பார்த்திருந்தீர் கொஞ்சமேனும் படபடப்பின்றி முற்றிலும் மறந்துவிட்டீரோ? நல்லது, எழுந்திரு மெழுந்திருமென்றுள், இவள் வருவதற்குமுன்னமே எண்ணமிட்டுக் கண்ணைமூடிக் கொண்டு கலவரத்தி லிருந்தவீமசேனன் இடுக்கென்றெழுந்து ஓ, பேதையே! நீ யிந்தவேளையில் தனித்துவருவானேன் என்றான், அந்தச்சொல் பொறுக்கமாட்டாமல், பாஞ்சாலிபதைத்து, ஆகா! ஆரோ - எவரோ-வனோ-தானோ வென்று கேட்கின்றீர். பாஞ்சால புத்திரியாயும் பாண்டவர்க்குப் பத்தினியாயும் இந்திரப்பிரஸ்தத்தி லிருந்த என்னை அஸ்தினபுரத்திற் கழைத்துவந்து நாறுதுட்டனா வெளியிட்டபட்டபுதேவியை எனக்கிட்டமான மாமியென்று அவள் கிட்டவைத்துப் போய்ச், சொக்கட்டாடித் தோற்றுத், திக்கெட்டு முள்ளதுராதுனாகள் நிறைந்தசபையில் துச்சாதனன் என்னைமற்கட்டியிழுத்துவரக், கர்ணன்- துரியோதனன் முதலியபலரும் இகழ்ந்து தூர்ப்பாஷைகளவழங்க, அதனால் என் அங்கம் பங்கப்படுநாளில் வீஷ்டுமர் துரோணர்-கிருபர்-விதூரர்- திரிதராஷ்டிரரும் ஊமைபோலிருக்க நீங்களைவரும் ஐம்பொறி யடக்கியென்றும் ஆமைபோலிருக்க ஆபத்பாந்தவனும் ஆதிமத்தியாந்தரகிதனும் ஆதிமூலப்பெருளும் அநந்தகல்யாண குணனும் யதுகுலமுதல்வனுமாகிய ஜநார்த்தனன் சன்மானத்துடன் என்மானங்காத்தருளினர். நீங்கள் அந்நாளிலிருந்த தன்மைபோலவேயிந்நாளிலும் இருக்கப்போகிறீர்களென்றுமுன்ஜாக்கிரதைசெய்ய முழுராத்திரியில்வந்தேனென்றுள். நான்பிறந்தகத்திலும் புகுந்தகத்திலும் அதிகசெல்வமாய் ஓராயிரஞ்சேடியர் புடைசூழ்ந்து, ஊழியஞ்செய்ய வாழ்ந்திருந்தேன். உங்களைநம்பிக் கற்களும் முட்களுமுள்ள கானகமெல்லாந்திரிந்தலைந்து கசங்கிவருந்திக், காய்கனியருந்திப்பனிரண்டுவருஷங்கழித்தேன் ஒருவருஷம் அஞ்ஞாதவாசஞ்செய்வதற்கு உருமாறிப், பெயர்வேறு கொண்டு என்னிருசையுங்கன்றி, என்மெய்யொளியுங்குன்றிச் சிற்றேவல்புரிந்து வருங்காலையில், கொடியகீசகனவன் இவ்வித அவதிப்படுத்தினன். பூமண்டல முழுவதும் புகழ்பெறவிளங்கிய தருமராஜனவர்வைதிக வேடம்பூண்டு ஒருமார்க்கமாயிருக்கின்றார். திரிபுவனகண்டகஜெயசிகாமணியாகிய விஜயன் பேடியுரு வெடுத்து நாடகத்தொழிலடுத்து, ஆடல்பாடல்தொடுத்து மூடுமுக்காடிட்டுக்கொண்டிருக்கின்றார். நகுலசகாதேவர்களிருவரும்வெளியில் தத்தமக்கேற்ற தொழிலில் அமைந்திருக்கிறார்கள். இவர்களிடத்திலெல்லாஞ் சொல்லிக் காரியமென்ன? ஒருலாபமுமில்லை.

எனக்குரிய ஐவரில் உம்மைவிட மற்றொருதவியுமில்லை எனக்கு உற்றதுணைநீரே வாயாற்கூறிய சபதத்தையும் மனத்தால் நினைத்த குரோதத்தையும் முன்பின்பாராமல் முடிக்கத்தக்க பலசாலி நீராகையால் உம்மிடத்தில் என்குறையையிட்டுக் கொண்டேனென்றாள்.

கொண்டலொத்த கூந்தலையுடைய பாஞ்சாலியின மொழியை வீமன்கேட்டு வெடுக்கென்றெழுந்து காரண காரியங்களை யோசித்து ஓமாதே புருஷர்களுக்குரிய ஆபரணம் பொறுமை அதிலும் நீதிவழுவிய நிர்மூடனாக் கண்டபொழுதாயினுந் தாமதியாமல் குப்புறத்தள்ளியுதைத்துத் தலைவிளக்கமிதித்துக் கீர்த்தியை நிலைநாட்டுவதே சிறந்த ஆபரணமாம் கல்விநிறைந்த மங்கையருக்கு கல்விநிறைந்த ஆபரணம் நாணமென்பதுதான் ஸ்திரீபுருஷர்கள் கூடும்காலத்திலும் அந்நாணம் நீங்காமல் சரசஞ்செய்து அநுபவிப்பதுவே பொற்பூஷணங்களிற் சிறந்த நற்பூஷணமாகும் இப்படியிருக்க எனக்குப்போதுமான பலமிருந்தும் என்கைக்குத்தக்க கதாயுதமிருந்தும் தநஞ்செயனுக்குச் சௌரிய பராக்கிரமமிருந்தும் காண்டீபமிருந்தும் என்னலாபம் அஸ்தினபுரத்தில் சகுனியுடன் சூதாடித்தோற்றபொழுதும் உன்னைத் துச்சாதனன் இழுத்துவந்தபொழுதும் இராஜசபையில் மானபங்கம் பண்ணியபொழுதும் துரியோதனன் கர்னன் இவர்கள் வம்புவார்த்தைகள் பிதற்றியபொழுதும் ஆற்றக்கூடாமல் உடல்பதறிப்பொழுக எங்களை ஆத்திரப்பட வேண்டாமென்று அடக்கிய அண்ணனானவர் இப்பொழுதும் இந்த விராடன்சபையில் உன்னைத் தூரத்தில்வந்த கீசகனைக் கொல்லவெண்ணிய என்கோபக்குறிதெரிந்து சவுக்கையாகப்பேசிச் சாடைகாட்டித் தடுத்துவிட்டார் இவர் என்றென்றைக்கும் இத்தன்மையராகவிருந்தால் எங்கள் மானமுங்கெட்டு ஈனப்பட்டுப் போவோமென்பதற்குச் சந்தேகமில்லையே எங்களைச் சுபத்தில் மீறவொட்டாமல் சங்கடப்படுத்திவரும் தருமராஜனாலுண்டாகிய என்மனஸ்தாபத்தையுந் துரியாதருடையால் விளைக்கிருக்கிற கோபத்தையும் இந்தக் கீசகன்பேரில் காட்டி என் கீர்த்தியை நிலைநாட்டி யானைமத்தகத்தைப் பிளக்குஞ் சிங்கப்போல்பாய்ந்து அவனுடலைவாட்டிக் குடலைப் பிடுங்குகிறேன் இனிமேல் இவன்விஷயத்தில் யார்குறுக்கிட்டாலும் காலனுடன் படப்போகிறதுமில்லை இவனை உயிருடன்விடப்போகிறதுமில்லை இவ்வுலகத்தில் அற்பர்களுடைய பெண்சாதிமார்களெல்லாரும் அதிகசௌக்கியமடைந்திருக்கும்போது விற்பனர்களாகிய எங்கள் பத்தினியான நீ மெலிந்து விசனப்படவேண்டிய விதியென்ன கல்லதாகட்டும் வல்லவருக்கு வாழ்க்கைப் பட்டும் இப்படி வருத்தப் படுகின்றோமேயென்று நீ சற்றும் மனமிளைக்காமல் இரு மாதரசி முன்னாளில் தீவினைவசத்தால் அகஸ்தியருக்கு அன்புடைய பத்தினியாகிய லோபாமுத்திரையென்பவள் தன்கணவனுக்குப் பணிவிடைசெய்து ஆகாரம் நித்திரையின்றி நெடுநாள் கஷ்டப்பட்டுப் பிற்பாடு நல்லவினைப்பயத்தால் சுபமும் சுகமும் கீர்த்தியும் பெற்றாள் இதன்றியும்.

யயாதிமஹாராஜன் புத்திரியாகிய சுகன்னியானவள் சவனகமஹாமுனிவருக்குச் சிசுருஷைசெய்து, சிலநாள்வருத்தப்பட்டு, பலநாளும் பாக்கியத்துடன் வாழ்ந்து கண்ணியம்பெற்றுப் புண்ணியலோக முற்றாள்.

வீமராஜன்மகளாகிய தமயந்தியானவள், பிள்ளைகளைப்பிரிந்து, புருஷனை நீங்கித் தனியளாய்க், காட்டில் அலைந்து, கருப்பாம்பின்வாய்ப்பட்டு, வேடனால் வெளிப்படுஞ், சிறியதாயார் வீட்டிற்சேர்ந்து. அங்கே குற்றேவல்செய்துகொண்டிருந்து, கொஞ்சகாலைக்குள் தாய்தந்தையையடுத்துத், தானுவிடுத்துப், பிரிவுற்ற நாயகனைக் கண்டுகூடித்தன்சேயொடுமகிழ்ந்து, சிறந்துவாழ்ந்திருந்தாள்.

இவ்வாறு, அத்தனையோகோடி இராஜஸ்திரீகள் படாதபாடுபட்டுக் கற்புக்கோரிடையூறுமின்றிப் பதம் பெற்றிருந்தார்கள். ஆகையால், தேவர்களானாலும் நல்வினை தீவினையை அநுபவித்தே தீர்க்கவேண்டும், இப்பொழுது,நமக்குண்டாகிய துன்பம் இன்னும் முப்பதுநாளைக்குமேல் இன்பத்தைவிளைக்கக் காத்திருக்கின்றது,(பட்டவர்பதத்திலிருப்பார்கள்) என்னும் பழமொழியறியாயோ? அப்படியிருந்தபோதிலும்,இந்தப்பகையை எந்தவிதத்திலும் சீக்கிரத்தில் நானேமுடிக்கிறேன். பாக்கியவதியே அஞ்சவேண்டாமென்று வீமசேனன்சொன்னான்.

இவ்வார்த்தையைப் பாஞ்சாலிகேட்டு முரசக்கொடிமுதல்வனாகிய தருமராஜன் உமது குறிப்பையறிந்து கோபமேலிடவொட்டாமல், தணித்தானென்று மனக்குறைகொள்ளவேண்டாம், நமதுடையபகையாளி நிச்சயித்தபன்னிரண்டு வருடமுங்கழித்து, ஒருவருடம் அஞ்ஞாதவாசஞ் செய்யும்படியாக, இந்தவிராடபுரத்திற்குவந்துகொஞ்சகாலமாகிறது இன்னுஞ்சிலநாள் ஒருவரும் அறியாமலிருந்து காலம்போக்க வேண்டுமென்றும், இதற்குள்ளாக நம்மை யாவரேனுங்கண்டால், பகைவெல்லவந்த நற்காலம் துற்காலமாமென்றும், பழயபடி வனவாசம் பண்ணவருமென்றும், அதனால் உங்கள் சீருஞ்சிறப்பும் சபதமும் பலவீனப்படுமென்று நினைத்து, உம்மை அவசரப்படவொட்டாமல் அடக்கினர். அவர் காலதேசவர்த்தமானம் தெரிந்த புத்திமானாகையால். உமது வெகுளி

னைக் கண்டவுடன், அடக்கவேண்டிய கடமைதான். அதனால் அவர்பேரில் தோஷமில்லை. இந்தப் பஞ்சையாகிய கீசகன் என்னைக்கொஞ்சமாக நினைத்தான். அவனை நான்பார்த்து அடாபாவகாரி! உனக்குக் கேடுகால நேரிட்டதடா துரோகி! எனக்குக் காந்திருவர் ஐந்துபேர்களிருக்கிறார்கள், மிகுந்ததிடவான்கள், சத்துருவை வீரசொர்க்கஞ்சேர்க்கும் விஷயத்தில் பகாவல்லவர்கள், மித்துருவானவர்களுக்கு உத்தமகுணமுள்ள நல்லவர்கள் எல்லாமறிந்தவர்கள், பொல்லாங் கொழிந்தவர்கள், எங்குமிருப்பவர்கள், நீ, செய்ததீமைகள் அனைத்தையும் தெரிந்துகொள்ளத்தக்க ஞானமுள்ளவர்கள் சொல்லாமல்சொல்லிக் கொல்லாமல் கொல்லத்தக்கவர்கள், நீயும் உன் குடும்பமும் நிருமூலியாதேயென்று, பலநீதிகளையும்பழமையாய் நடந்திருக்கிற சில சேதிகளையுஞ் சொன்னேன் அந்தக்கீசகன் நான் சொல்லியவற்றை அலட்சியஞ் செய்துபோபோ அவர்கள் எப்பேர்ப்பட்ட காந்திருவரானாலும் என்முன்னிற்பார்களோ? என்று ஏசித் தூத்திக்கொண்டுவந்தான். அந்தப்பதிதன் உமக்குமுன் எதிர்ப்படுவானாகில், என்னபாடுபடான். கருடனது நிழல்பட்டபாம்புபோல் கெடுவான். என்மனம் பற்றி எரிகிறதே. அந்த நாசகால கீசகன் வந்தவழி போனவழி தெரியாமல் தொந்தழியும்படிக்கு நீர் பிரவேசிக்கவேண்டும். ஆனால் ஆத்திரப்படாதேயும். இன்னும் இரண்டொருநாள்காலதாமிசஞ்செய்து இவனைமுடித்தால், விரதசாரணிக்கு அனபர்களாகிய காந்திருவர் கீசகனைப்பிடித்துத்,துடிதுடிக்க அடித்து முடித்துவிட்டார்களென்று பேசிக்கொள்வார்கள். அப்போது உம்மேல் சந்தேகங் கொள்ளுவதற் கிடமிராது ஆகையால், உமதுயுத்திக்கு இசைந்தபடி பார்த்துக்கொள்ளுமென்று துரோபதிசொன்னாள் அந்தக்கற்புடையாள் வார்த்தையை வீமன்கேட்டுப் பாஞ்சாலியே! கீசகனைக்குறித்துக். கிஞ்சித்தேனும் நீ யோசிக்கவேண்டாம், அவனென்றைக்கு உன்னைத்தொடர்ந்தானோ? அன்றைக்கே அழிந்தானென்று நம்பு, உன்னிஷ்டமெப்படியோ? அப்படியே அவனுயிரை நஷ்டப்படுத்திவிடுகிறேன்.

ஆனால், இப்பொழுது விடியற்காமாயிற்று, இனிநாம் அந்தக்காரியத்திற்குப் பிரவேசித்தால், அஞ்ஞாதவாச ரகசியம் வெளிப்பட்டுப் போய்விடும், தருமபுத்திராசித்தத்திற்கு மெத்தவருத்தம் சம்பவிக்கும், அன்னமே நீ முன்னமே சொன்னவண்ணமே எண்ணித்துணிவது கருமமாதலால், இன்றிரவு முழுமையும் நாளைப்பகல் முப்பது நாழிகையும் பொறுத்து நாளையிராத்திரியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன், நீ யந்தச்சுதர்க்கனை மாளிகைக்குப் போய்விடுவையாகில், அந்தத் துற்புத்தியுள்ள கீசகன் நாளைக்காலமே உன்னிடத்திற்கு வந்து. இருமாந்து செர்க்குக்கொண்டு இப்பொழுது என்னசொல்லுகிறாய்? ஓ, விரதசாரணி! நானுன்னைத் தூரத்தி வந்தபோது, என்னை யார்கேட்டார்கள்? யார்தடுத்தார்கள் எனக்கும் எதிரில்லை, உனக்குந் திக்கில்லையென்று சொல்லி,மகாதாராளமாய்க் கிட்டிப்பேசுவான், அவனை நீ பார்த்தவுடனே அன்புள்ளவளைப்போல், அரைக்கண்பார்வைகாட்டி, அதிமோகமுக நயஜாடைகாட்டி, ஆசைவிசய அபிநயம் புகட்டி, மோகவிஷத்தை அவன் முடிமேலேற்றி, உன்கற்புக்குமாத்திரம் பழுதில்லாமல், அந்தக்கயவனுடன் கலந்துபேசி விராட்புரத்திற்கு மேற்கில் மாஞ்சோலைசூழ்ந்த வசந்தமண்டபத்தில் நாளை இராத்திரி பத்துநாழிகைக்கு அவனைவரும் படியாகப் பக்குவப் படுத்திக் கொள்ளென்று யுத்திசொல்லித் துரோபதியை அனுப்பிவிட்டுத் தருமராஜனுக்கிளைய சத்தியவிரதனும்கருமலைபோல் வளர்ந்த இருபுஜமுள்ளவனும் பதினாயிரம் யானைப்பலம் பெற்றவனுமாகிய வீமசேனன் நெய்வார்த்தநெருப்பெனப்பொங்கிமுகம்வேர்த்து நித்திரைபிடியாமல் சித்தம்பிரமித்துப் பகலிரவென்றுபாராமல் தான் குறித்தகால அளவைக்கருதிச் சுடச்சுட வேலை முடிப்பதற்கில்லையே எனறு, மனக்கலக்கங்கொண்டு படுக்கையில் மல்லாந்தெண்ணமிட்டுக்கொண்டிருந்தான்.

இத்தன்மையாயிருந்த வீமனிடத்தில் விடைகொண்டுசென்ற விரதசாரணியானவள் சுதர்க்கனை மாளிகைக்குப்போய்ப் பொழுதுவிடியு மளவும் ஒருவிதமாய் முகஞ்சுளுக்கிக்கொண்டிருந்தாள் அப்படிக்கிருந்தபாஞ்சாலியின் மனோதுக்கத்தைப் பரிகரிப்பதுபோல் ஒளியைக்கூட்டி இருளையோட்டி மலரச்செய்வதுபோல் அவள் முகம் தாமரைப்புட்பங்களை மலரக்காட்டிக் கதிர்க்கிரணங்களை நீட்டிக்கொண்டு சூரியன் உதயமானான்.

அழகிய உதயகிரியி லெழுந்த ஆதித்தனைக் கண்ட சைரந்திரியானவள் வழக்கப்படி காலைக்கடனை முடித்துச் சுதேக்ஷணாதேவிக்கு மலரொடுத்துத் தொடுத்துக்கொடுப்பதற்குப் பூஞ்சோலைக் குட்புகுந்து வரும்போது இராஜஸ்திரீயாகிய சுதர்க்கனைமுன் தன்னை நிந்தித்த நிற்பாக்கியத்தால் மனம் வருந்திப்போன கீசகன் தன்தமக்கையைச் சந்தித்து க்ஷேமகேட்டுக் கொண்டுவருவோமென்று நினைத்து மந்தமாருதமுதலாகிய நந்தவனத்தில்வந்தான் அவன்வந்தவழியில் சந்திரவதயைப்போல்கொந்தலர் பறித்துக்கொண்டு நின்ற கோதையானவள் அந்தகனைக்கண்ட ஆன்மாவைப்போல் நடுங்கித்தெளிந்த ஓ

தேந்திரியர்களைப்போல் உடனேதேவி மனந்தளராமல் சங்கடப்படாமல் தள்ளாடி ஓடாமல் தவித்துவாடாமல் சற்றும் அச்சமில்லாமல் தலைகுனிந்து தன்கால்ப்புறவடியைப்பார்த்து நிமிஷத்திற்கொருதரம் கீசகன் முகத்தைநோக்கிச் சற்றேபுன்சிரிப்பாக நகைத்து அவனது துற்புத்தி படருவதற்குத் தானேகொழுக் கொம்பாகி,வீமனிடத்தில் பேசிக்கொண்ட சங்கேதப்படி நிலைசெய்யவெண்ணினாள்.

இவ்விடத்தில் கற்புநிலைதவறாமல் பொற்பிரதமைபோலிருந்த மாலினியைப் பழிவழிக்குவந்த முழுமூடன் பார்த்துச் சந்திரனைக்கண்ட சமுத்திரம்போல் பெருகிச் சந்திரகாந்தக் கல்லைப்போலுருகிச் செல்வத்தைக்கண்ட தரித்திரன்போல் மகிழ்ந்து கல்விப்பொருளில் கற்பனையலங்கார கவிதைமேற்கொண்ட கனவான்போல் முகமலர்ந்து விழிகுளிர்ந்து அவள்கால்முதல்தலைவரைக்கும் இமையாமல் பார்த்துத் தன் அறிவுகெட்டு அற்பபுத்திமேலிட்டுத் திக்குநோக்கிக் கும்பிட்டு ஓவிரதசாரணி! எனக்குப் பிராணதாரம் நீயன்றி வேறில்லை நான்சொல்லப்போகிறதை நன்றாய்க்கேள் இந்தப்பட்டினமும் இந்நாட்டுவளப்பமும் விராடனுடைய வாழ்க்கையும் என்தமக்கையாரதுமங்கிலியருத்திரமும்இதோ என் இடதுகையில் மூடிவைத்திருக்கின்றேன்என்கையை விரித்து விடுவேனாகில் அவைகளெல்லாம் துருவாசர் சாபத்தால் சமுத்திரம்போயழுந்திய தேவேந்திரனசெல்வம்போலாய்விடும், என்னை என்னமோவென் றெண்ணாதே முன்னமே என்வல்லமையாவுஞ் சொல்லியிருக்கின்றேன் உன்னைநான் தூரத்தில்வந்தபொழுது யாரென்னைத் தடுத்தார்கள் எவர்கள் என் அருகில்வந்தார்கள் விராடராஜனுவது எனிப்படி செய்தானென்று கேட்டானோ உனக்காகிலும் உதவி ஒத்தாசை செய்தானோ ஒன்றுமில்லையே இன்னும் நான்சொல்ல வேண்டுமா இந்த வேலை என்னையல்லாமல் இன்னொருவன் செய்திருப்பானாகில் இந்நேரம் அவனை எமலோகத்திற் புழுவாய்த்துடிக்கச்செய்வேன் எல்லோரும் என்காலில் வீழ்வதினால் சகலமுமெனக்கே சொந்தமென்று உனக்குத் தெரியவில்லையா இந்த விராடனுக்கு நான்கட்டிவைத் திருக்கிற பட்டத்தை இப்பொழுதே உனக்குக்கட்டி உன்னைப்பெண்ணரசியாக்கிவைக்கிறேன் வேண்டுமானால் பிரத்தியக்ஷமாய்ப்பார் இதன்றியும் உன்னைக்காக்கும் கந்தருவருண்டென்று பேதைமதியால் நம்பிப் பெருமோசம் போயிருக்கிறாய் என்னைப்பேசாதும்பேசிக் கருக்குறாய் வீண்கர்வங்கொண்டு செருக்குகிறாய் இப்பேர்ப்பட்டதனியில் உதவிசெய்ய வாராதவர்களை உனக்கு உரியவர்களென்று எண்ணலாமா அவர்கள் பண்டவாளத்தையும் பசுத்தையுங் கண்டுகொண்ட நீ இனிவேறுபேசப்போமோ அற்பமனிதர்பேச்சு அவலமாய்ப்போச்சு நான் ஆருக்குமடங்காதவன் ஆர்படைக்குந்தோராதவன்என்னைக்குறித்து இன்னுமென்ன சொல்லப்போகிறாய் உன் எண்ணந்தானென்ன அடிவண்ணமாமகளே ஒருவேளை என்பேரில் குற்றம் எத்தனையோ இருக்கலாம் சிறியோர் செய்தபிழையைப் பெரியோர் பொறுக்கவேண்டுமென்று புண்ணியவான்கள் பேசியிருக்கிறார்கள் அந்தவார்த்தைக்கு விக்கினமில்லாமல் மன்னித்து என்னைரட்சித்துப் பொறுமையுடன் ஆதரிப்பது உன்கிருபைக்குரியகடனென்று தன் இருகரத்தையுந் தலைமேல் குவித்துச் சேவித்து உன்கல்மனம் இளகி என்கருத்து முற்றவேண்டுமென்று காலில் வீழ்ந்தான்.

அவனை மாலினிபார்த்து முகமயத்துடன் முறுவலுங்காட்டி நாம்நினைத்தகாரியம் இன்றைக்கு நிறைவேறுமென்று மாயச்சாயல் மயக்கநோக்கம் வஞ்சனைப்பேச்சுமுதலிய மார்க்கங்களினால் வசனிக்கத் தொடங்கினாள் வாரும் கீசகராஜனே நான் உம்மைத்தடுத்ததும் விரகதாபப்படவிடுத்ததும் என்னத்தினாலென்றால் எனது மேலானமரபினாலும் நல்லொழுக்கத்தினாலும் நான் கொண்டிருந்த விரதத்தினாலும் உமது எண்ணத்தைப் பின்னப் படுத்தினேன்.

நீர் என்பேரில் ஆசைப்படுமுன்னமே நான்உம்மேல் பாசங் கொண்டிருந்தேன் அதல்லாமலும் நீரென்மேல் வைத்த மோகம் நிலையானதுவோ நெறியானதுவோ வேறொரு பெண்ணைக்கண்டால் பின்வாங்குமோ மனதேங்குமோ என்னமோ ஆண்பிள்ளைகளின் புத்தி சபலமாமேயென்று சோதிக்குநிமித்தமாக இஷ்டமில்லாதவள்போல் அபிநயித்தேன் என்மெய் தொட்டிருந்த காந்திருவர் ஐவரும் என்னைக் கைவிட்டார்போலும் காணேறது இனிக்காரியமில்லை ஓ வீரியவானே என்மேல் காவலுமில்லை நிராதரவான என்னைத் தாராதாமறியத்தக்கநீர் அபேக்ஷித்தபொழுதே நான் புகிதவதியானேனா என்னைப் பெண்டாள நினைத்த உமக்குச் சீக்கிரத்தில் மேலானபாக்கியமுண்டாம் என்றால் உமக்குவிளைந்தவருத்தம் இன்று கூண்டோடுபோய்விடும் பெண்களின் குணமறிந்திருந்தும் வீணே இத்தனைதூரம் பிரபலப்படுத்திவைத்தீர் நீர் காணாதுகண்டுகொருதி மோகித்ததும் வீணாசைகொண்டுவிரதாபப்பழிசுமந்ததும் நான் நாணாது நாணிகவியவாதித்ததும் நீரென்னைப் பிடிக்கவந்ததும் நான் இராஜசபையிலோடிவிழுந்ததும் அங்கேஉமக்கோர் அனர்த்தம் விளைந்ததும் ஊர்நாடெல்லாஞ்சிரிக்கஉட

ப்பெடுத்ததும் ஏதோ காலவித்தியாசம் கடந்துபோய்
விட்டது போனதுபோகட்டும் இவ்வுலகத்தில் ஆலால
விடத்தையும் அந்தகனையும் யானைக்கவட்டையும் வெவ்
கைப் புலியையும் அறிவில்லா மூடனையும் ஒருவாறுநம்
பலாம் சேலைகட்டுமாதரை க்ஷணமும் நம்பப்படாது அ
தெவ்வாறெனில் இந்திரன்முதலாகிய கந்திருவர்வந்து
ஆடையாபரணாதிகளை ஆசைப்பட்டாலும் ஸ்திரீகள்
தாங்கள்கொண்டமையலை வெளிப்படுத்தாமல், ஆசைய
ற்றவர் போல், முகத்தைச்சுளித்து முடுக்காய்முறுக்கி
என்னென்னைப்பார்க்கிறாய் நானென்வேசியோதாசியா உங்க
ளுக்குத் தங்கை தமக்கையில்லையா எங்கள் வீட்டார்க
ண்டால் சும்மாவிடுவார்களா என்று தலைகுனிந்து கலை
ஙவென்று கண்ணீர்சொரிந்து சிறுநகைகாட்டிக் குறுவிய
ர்வுறைந்தெறிந்து மாராப்புத் துணியைப் பத்துதரமி
ழுத்திழுத்துச்சொருகி, வாயைமூடிக் கையைநெரித்து,
ஜாலமானமாய காயகுகங்காட்டிக் கால்தடுக்கநிற்பானே
னென்றுதனக்குத்தானே பேசிக்கொண்டு அப்பால்சில
தூரம்போய் இப்பால்வந்து எட்டிப்பார்த்து, ஒருபக்க
த்திலொதுங்கித் தலையை நீட்டிக்காட்டி மறைந்து, மறு
படியும் எட்டி உறவுபோல்கலந்துடனே ஓடி, வடிக்க
லந்து கூடித்திரிவர் இது பெண்களின் கெட்டசுபாவம்
இப்பேர்ப்பட்டவர்கள் மனதை எப்படித்தெரிந்துகொள்
ளலாமென்றால் அந்நியபெண்டுகளாவது தாதியர்முத
லிய வேலைக்காரிகளாவது குழந்தைகளாவது கிட்டநின்
ருல், அவர்கள்பேரில் விழுந்தும் வல்லிக்கொடிபோல்து
வண்டுவளைந்தெழுந்தும் பிள்ளையை அணைத்துக் கொஞ்
சிமுத்தாடியும் புஷ்பத்தைமுகர்ந்தும் பெருமையாகடம
பம்பேசியும் விருதாவாய்ஒருவரைபேசியும்சொற்பமான
பேச்சுகளை ஓடியமாய்ச் சொல்லியும் கூடுவார்கள் நாய
கன் அவர்களைப்பார்த்தால் அவர்கள் நிலத்தை நோக்கு
வார்கள் நாயகன் அவர்களைப் பார்க்காதபோது தலையெ
டுத்துப் புருஷனை நன்றாய்ப்பார்த்து நாணிநகைப்பார்க
ள் இப்படி இன்னும் அநேகஜால தந்திரங்களுண்டு இ
ந்தக்குறிப்புகளையெல்லாம் வேறுபாடில்லாமல் சரசநா
யகன் தெரிந்து மௌனத்திற்குத் தகுந்த தாளப்போட்
டு எண்ணத்தை முடித்துக்கொள்ளான் மற்றவன் கண்
டால் சங்கிப்பறியாமல் இதெப்படிபோமோ என்னமா
மோ என்று பயந்து ஓடிப்போவான் ஆதலால் பெண்க
ள்கொண்ட புருஷவிரகமானது லோபியாபொருள்போ
ல் அழுந்தியிருக்கும் ஆண்பிள்ளைகள் கொண்ட மோக
மானது கல்லோதான் சுற்ற கல்லினைப்போல் வெளிபாய்
ப்போம் இந்தக்காரியந்தெரியாமல் அவசரப் பட்டவர்க
ள் பலனடையார்கள் நீரும் அவ்வாறே ஆத்திரப்பட்டு
விட்டீர் அப்பொழுதுதானென்ன உமது இஷ்டத்தை எ
ன்னிஷ்டப்படிமுடிப்பதினால் பாபமில்லை உமக்குள்ள
காமவெள்ளத்தைக்கடந்து கரையேறுவதற்கு வழிகாட்
டுகிறேன் நீர் கள்ளமில்லாமல் வாரும் எத்தனைவித சா
கசங் கற்றிருந்தாலும் உள்வீட்டில் காணம் போடலா
காது என்கணவராகிய கந்திருவர்கள் ஒருவேளை யிந்த
ச்சேதிதெரிந்து வந்துவிட்டால் உம்முயிரும் போம் எ
ன் தலைமயிரும்போம் அன்றியும் நேற்று என்னைத்துர
த்திய உம்மை இந்நாட்டிலுள்ள பெண்டுகளும் புருஷ
ர்களும் இராஜன் முதலிய அனைவரும் நன்றாயறிந்தார்
கள் லோகப்பிரசித்தியாச்சுது அப்படியிருக்க நாமிருவ
ரும் இன்றைக்கு உறவாடுவதைப் பார்த்தால் மெத்தவு
ம் எளிதஞ்சொல்லிப் பழிப்பார்கள்.

உம்முடைய தமக்கையாகிய சுதேஷ்ணைக்குத் தெ
ரிந்தால் என்னைச் சுத்தமாய்நம்பமாட்டாள் இதுவுமாயி
லும் நான் பிழைத்தபிழைப்புபேய்ப்பிழைப்பாய் விடும்
அன்றியும் அநேக பொல்லாங்குகள் விளையும் நல்லதல்
ல சந்தனமணிந்த தோளனே நீர் இன்றிரவில் பத்துநா
ழிகைக்குமேல் வருவீராகில் என்னிஷ்டப்படிமுடியுமெ
ன்று பாஞ்சாலி சொன்னாள் அந்தத்தேனை மொழியான
து கீசகன் காதிற்புகுந்து அமுததாரைபோல் விரகாக்கி
னியை ஆற்றியபோது வெளியெழும்பிப்போக வழிபா
ர்த்திருந்த பிராணன் நிலைத்து, இளைத்தவுடம்பும் பூரித்
துத்துன்பங்களை நீங்கி இன்பப்பயிரோறத் தேகம்பரவ
ச மடைந்து, போகஞ் சிறந்து, ஓ மோகநடைமாடுமயி
லே? இப்போ தல்லவோ உன்சொல்லாகிய ஆபரணம் எ
ன்காதிற் கணியாயிற்று இந்தக்கர்ம பூமியிலுடலெடுத்
தபயன இன்றுதான லபித்தது தற்பலனுன நான் நற்ப
லனுற்றேன் என்பாவங்கள் யாவும் பறந்தோடிப் போயி
ற்று நானிதுவரையிலும பண்ணிய புண்ணியம் இன்றே
ஈடேறியது என்பாக்கியமே பாக்கியம் நான்பிழைப்பத
ற்குத் துணைக்காரணமானது உன்வாக்கியமே வாக்கிய
மென்று வாய்புதைத்துக் கைகட்டி மெய்யொடுங்கிவ
ணங்கிப்பணிந்து என் ஆவியே! பாவியாகிய நான் எவ்
விடத்திற்கு வரும்படியாய்க் கட்டளையிட்டருளுகிறீர்
என்னிஷ்டகாமியமே? என்று கேட்டான் வாரும்நெ
னே! விராடராஜனது கோட்டைக்கு மேலண்டையிரு
ருக்கின்ற மாஞ்சோலையில் குயில்கள்கூவவும் மயில்க
ளாடவும் கிளிகள்கொஞ்சவும் அளிகள்மிஞ்சவும் அல
ங்கார மாகப் பளிங்குக்கற்களால் கட்டிய வசந்தமண்
டபத்தில் வந்துசேரும் நீர் வருமுன்னமே நான்வந்திரு
க்கிறேன், மலைகள்பேரிலும் ஓட்டுந்தேரினையுடைய வ
ல்லவனே! இப்பொழுது நான் சொன்ன இடம்சந்தடிய
ற்ற தனியிடமல்லவா? என்று விரதசாரணி விளம்பினாள்.

அம்மொழியைக்கேட்ட கீசகன் ஆஹா அதுவே யெனக்கும் தகுந்த இடம் தேவீர், திருவாய்மலர்ந்தவண்ணம் சீக்கிரம்வருகிறேன உமதுதிருமேனி புழுதிபடிந்து அசுத்தமாயிருக்கிறதென்று கூச்சப்வேண்டாம் உமக்கு நல்லநல்ல ஆபரணங்களும் விலையேறப் பெற்ற வஸ்திரங்களும் புநுகு சவ்வாது கதம்பம் கஸ்தூரி அத்தர் பன்னீர்முதலிய பூச்சுவகைகளும் புஷ்பச் செண்டுகளும் பஞ்சகர்ச்சாய பரமான்னமும் பலகாரங்களும்-பழவர்க்கங்களும் பஞ்சவிடை தாம்பூலங்களும் எந்தலை மேல்சுமந்து கொண்டுவருகிறேன. நீர் அவைகளை யங்கீகரித்து என்கோரிக்கையை யீடேற்ற வேண்டும், கோமளமே! என்குலதெய்வமே! சித்தசன் கொலுக்கூடத்திற்கமைத்த பொக்கிஷமே என்பிராணனை உமக்கேயொப்பித்தேன் இதைவிட வேறே யுபசாரஞ்சொல்ல அறியேன் அடிமையைமறியேன் எனனுயிருள்ளமட்டும் உம்மைநாணமிறியேன் மறுமாதரைநோக்கேன் என்பேரில்கிருபைவைக்கவேண்டுமென்று செலவுபெற்றுக்கொண்டு காளவிடத்தைத் தாகத்திற்கு உட்கொள்ளக் கருதியதரித்திரன்போல் கீசகன்சென்றுஇந்தச்சூரியனெப்பொழுதுதொலைவானென்று அந்தகன்பாசந்தன்னைக்கலக்கும்அஸ்தமானத்தை நாடியிருந்தான்.

இப்பால், கொலைசெய்யுங் கூர்வேல்போன்ற கண்ணுளாகிய பாஞ்சாலி சுதர்க்கணைமனைக்குப் பொய்ப் பூமாலைகொடுத்துப் பூசுவனவுங்கொடுத்து அவளுத்தரவின்பேரில் மடைப்பள்ளிக்குச் சென்று மதகரி வீமனைக்கண்டு நாம் பேசிக்கொண்டபடிக்கு அவனை இசையச்செய்துகொண்டேன் அப்பால் தெய்வச்செயலெப்படியோ? என்றாள் அந்தத்திரௌபதியை வீமசேனன்பார்த்து ஓ காதலி நீயேன கவலைப்படுகிறாய் ஒருவேளை யந்தக்கீசகன் வாராமல்போவானாகில் அவனுடைய வீட்டுக்கு நானேபோய்க்கொல்லுகிறேன் அஞ்ஞாதவாசத்தவணைக்குள் இவ்வூரார் அறிவார்களேயென்று யோசிப்பையாகில் இந்த விராடபுரத்தி லுண்டாகிய ஆண்பெண் அடங்கலையுங்கொன்று துரியோதனனுக்குச் சேதிதெரியாமல் பண்ணுகிறேன் ஒருவேளை துரியோதனனறிந்து பெரும்படை கொண்டுவந்து அஞ்ஞாதவாசம் பூரணமாய் நிறைவேறாமல் குறைவுபட்டுக்கெட்டுப்போனபடியால் மறுபடியும் பன்னிரண்டுவருடம் வனவாசப்பண்ணவேண்டிய நிபந்தனைப்படிக்குப்போகவேண்டுமென்று புகன்றானாகில், அப்போதே யந்தத் துரியோதனனையும் கௌரவரையுங்கொன்று, பள்ளத்திற்புதைத்து. அஸ்தினபுரம்விராடபுரம் உபலாவியம்முதலிய உலகுக்கெல்லாம் தர்மராஜனைப் பட்டங்கட்டிவைத்து எல்லோருங்கொண்டாடஎங்கும் பிரக்கியாதியாயிருப்பேன். சண்டிபுரண்டால், சாதிகொள்ளாதென்னும் சங்கதியறியாயோ? சமுத்திரந் தடையாயிருப்பது கரையினாலேயா? சத்தியத்தினாலேயா, பாஞ்சாலி! நீயாதொன்றுக்கும்பயப்படவேண்டாம். போவென்றனுப்பினான்.

அவ்வாறே செலவுபெற்றுக் கொண்ட திரௌபதியானவள் வீமசேனனைப்பார்த்து ஓ-கொடி வீரசிங்கமே! அங்கம் பங்கப்பட்டழியப்போகிற கீசகன் என்சொல்லை நம்பி யெப்படியுந் தப்பாமல் வருவான். நீரின்றிரவில் வந்து, சாலஞ்செய்யாமல், சந்தடிகாட்டாமல், வேலையை முடிக்கவேண்டும், வேந்தனே! இப்படியாக இதனை நடத்திவிட்டால், சாந்தமூர்த்தியாகிய தருமராஜனுடையசித்தங்களிக்கும, இந்தச்சொல் வெளிப்படுமாகில், நமதெண்ணமெல்லா மழிந்துபோய்விடும். அன்றியும், பதிவிரதையைச்கருதிய பாவியாகியகீசகன் பாழாய்ப்போனான் பார்த்தீர்களாவென்று உலகிலுள்ள பதிவிரதைகள் மகத்துவமாய்ச்சொல்லிக்கொள்ளும் வார்த்தைகளுங்கெட்டுப்போம். பாண்டவர்கள் அஞ்ஞாதவாசம் பண்ணும்போது, தவணை யொருவருஷங் கடப்பதற்குமுன்னதாய் வெளிப்பட்டுவிட்டார்கள. சொற்சோர் வுடையவர்கள், பஞ்சவர்பேச்சுப்பஞ்சுபோலாச்சே, பாரும்பாருமென்று யாரும் நகைப்பார்கள், நீங்காப்பழிச்சொல் நிலையாயநிற்கும். ஆகையால், நீர்மனம்பொறுத்து, அவசரப்படாமல், ஆடம்பரங்காட்டாமல், யாருமறியாமல், அடக்கமாய் முடிக்கவேண்டுமென்று கூறினாள். அந்தமொழியைக்கேட்டபலாயனன் சிந்தைமகிழ்ந்து, நல்லதப்படியேயாகட்டும் நீமாத்திரம் பிறரறியாமல்விரைவாய் அவ்விடம்வந்துசேரென்று, தலைவாசல்வரையிலும் வந்து, விடைதந்து இந்தச்சூரியனெப்பொழுது தொலைவானென்பதாய்ச் சிந்தைவருந்தித் தியங்கியிருந்தான்.

இவ்விடத்தில் துரோபதியானவள் சுதர்க்கணைக்கு வேண்டிய சித்திரான்னமும் திவ்வியமணக்குழம்பும் கச்சாயவிதங்களும் கதம்பபொரியலும் அறுசுவை யுண்டியும் சுயம்பாக வீமனிடத்தில் வாங்கிவந்து. கொடுத்து வழக்கப்படிக்கு வேடிக்கையாக விளையாடிச், சந்தனுதிகந்தத்திமிர்ந்து சிந்தைநோயற்ற செல்வியைப்போல், கபடமில்லாமல், யாருடனுங்கலந்து றவாடி கவங்காகிதமாய்க்காலம்பார்த்திருந்தாள். அப்படியிருக்கும்போது எட்டுத்திக்குங் கெட்டழிந்தோடிய இருளெல்லாந் திரளாகச்சேர்ந்து தங்கள் பகையாகிய சூரியனை வெல்ல வ

ந்தவாறுபோல், சூழ்ந்துகொண்டது. அவ்விருளைக் கண்டுபாபத்திற்குப்பயந்தோடும் பாக்கியவான்களைப்போல் புண்ணியப்பொருளாகிய வெய்யோன் மேற்றிசைபுகுந்து அஸ்தமானகிரியை அணைந்தான், அக்காலத்தில் அளவிறந்த ஆசையை அடைத்துவைத்திருந்த கீசகனானவன் தான் மோசம்போவதறியாமல், வண்ணப் பெண்மேல் கொண்ட மதவிகாரத்தினால் வாசநீரில் தோய்ந்து பூஜாவிதிமுடித்துப், போஜனமுண்டு, இளைப்பாறவுஞ் சமயமில்லாமல், சந்தன குங்கும சிந்தூர பரிமளகந்த கதம்பமிகுந்த சுகந்த நிறைந்த மகரந்த மலர்மாலையும் நவமணி பதித்த அழகியஆபரணமும்சித்திரித்தெழுத்தினிற் பிரித்துக் கொத்துமுத்து வைத்திழைத்த சரிகைகள் சுற்றியவஸ்திரமும் கொத்துச்சரப்பணி ரத்தினமுருகு முத்திரைமோதிரம் அஸ்தகடகம் விசித்திரமகுடம் பவித்திரமுதலிய ஆபரணங்களுமணிந்து, வாசத் தாம்பூலமும்போஜனபாயச பொரிவிளாங்காயும் பண்டுபலாதிகளுங்கொண்டு, கறுத்த இருளில் காலால்வழிதேடி, அந்தகனிருக்குந் திக்குநோக்கிச் செல்வதுபோல், அந்தமாலினிசொன்ன வார்த்தையை நிசமென்றுநம்பிச் சுதர்க்கணை தம்பி மாஞ்சோலையிலிருக்கிற வசந்தனுக்கிசைந்த மண்டபத்தைநாடி ஓடிவந்தான்.

இவ்விதமாகவந்த கீசகனுடையபிராணனென்னும் பனியைக்கெடுக்கப்புகுந்த சூரியன்போன்ற பாஞ்சாலியானவள் இரவுதோன்றியவுடனே விளாவில்ஸ்நானஞ் செய்து, நித்தியசெபமுடித்துச், சூரியன்முதலிய தேவர்களைத்தொழுது அந்தப்புரம்விட்டு புறப்பட்டுச், சத்துருக்களுபிளையும் சமையல் வேலைகளையும் இம் என்பதற்கு முன் முடிக்கநின்ற செம்பொன் மலையை நிகர்த்த தோளும் வீரகண்டைதாங்குந் தாளும் உடைவாளு முடைய வீமசேனனிடத்திற்குப்போய் விளாவிற்புறப்படுமென்றாள். அவள்சொல்லைக்கேட்ட வீமசேனன் அந்த வேளையில் எந்தவேடமெடுக்க நினைத்தாலும், அவனிஷ்டப்படிக்கு அமைய வரங்கொடுத்திருக்கும் எமதருமராஜனருளினால் சகலாபரண அலங்காரச் சௌந்தரியப் பெண்ணுருவெடுத்துக் கையில் அள்ளிக்கொள்ளத்தக்கதாய்க் கலந்தகன்ன இருளில் மெல்லச்சென்று கீசகக்கள்ளன் வருவானோ வாரானோவென்று கவலைகொண்டு கனகமயஞ்சித்த சிகரமாடமுடைய பளிங்குமண்டபத்தைஅடுத்து தெய்வப்பெண்ணான திரௌபதாதேவியை அவ்விடத்திலொளித்து வண்ணமகள் போலாகிய தன்னுருவத்தைத் தூணின்மறைத்துக் கண்சிமிட்டாமல் காட்டுவழியேல் நாட்டம் வைத்திருந்தான்.

அந்தவேளையில் செத்தபிணமானது மெத்தப்பணி பூண்டு வருவதுபோலும் எக்கியத்திற்கிசைந்த நெய்யை நக்கிப்புசிக்கவரும் நாய்போலும் வருகிறகீசகன் உயர்ந்தமாமரச்சோலையில் சாந்திருள்மெருகிட்ட தாவன்யமான வசந்தமண்டபத்தைக் கண்டு தெண்டையங் கண்ணு விங்குவந்தாளோ ஒன்றியாய்வரப் பயந்துநின்றாளோ வந்துவென்னைக்காணமையால் சென்றாளோ மறைந்திருந்து மனஞ்சோதிக்கின்றாளோ? என்னமோ அவளெண்ணம் அறியேன் வாசப்பூமலர் மேனிமானேஎன்னாசைக்கோளிமதுரத்தேனே மன்மதன் படையை வாட்டவந்ததுணையே மாதவந்தை அழிக்கும்விழிக்கணையே என்றுகூவிக்கொண்டுவந்த கீசகராஜனை ஆஜானுபாகுவிளையுடைய தண்டதாரனாகிய வீமன்கண்டு வெட்கங்கொண் டொதுங்கும் பெண்களைப்போல் அந்தத் தூண்மறைவிலொதுங்கித் தலையைநாட்டிச் சந்திரபிம்ப முகங்காட்டி இன்னும் பற்பல அபிநயங்களால் அவனைப் பேய்போலாட்டி அடங்கிக்கிடந்த காமத்தீயைத் தொடங்கச்செய்த சிமாட்டியை அந்தக்கீசகன் கண்ணுருவக்கண்டு பெண்ணுருவெனச் சிந்தையுட்கொண்டு குனிந்து நேராக அத்தையல்கால்மேற்பணிந்து வாராய் தாராய் சும்மெனநிருக்கின்ற இவ்வனத்து என்னைபொருபொருளாய் மதித்து எனபேரிலிஷ்டம வைத்து இத்தனைதூரம் தனித்துக்கால்வருந்தத்தக்கதாக வரும்படி பொருத்துகின்ற தவம்யாருடையதோ இத்தலம்புரிதவமோஎன்குலம்புரிதவமோ வலம்புரிக் கழுத்தினையுடைய மாதே அறியேனறியேன் காலதாமச மாச்சுதேயென்று கோபங்கொள்ள வேண்டாமென்று எனக்கூத்தாடி நின்று ஓகோகோ பருவதியே காமவெறியேறிக் கருத்தழிந்து போன நான மானபிமானம் பாராமல் உம்மைத்தூரத்திவந்து மனக்குறைவிளைத்தேன் அப்பிழைபொறுத்துஎளியேனை ஆண்டருள்வாயென்றுகலம்பொலிமணிமுடிநிலம்படவிழுந்து மறுபடியுமெழுந்து பின்னும்விழுந்து அன்னமே என்று புகழ்ந்து செங்கையிரண்டையுஞ் சிரமேற்குவித்து அவள்முகத்தைப் பார்த்துச் செவ்விளநீரைப் பழித்துத் திரண்ட இரண்டு கொங்கைதாங்கிய மங்கையே புனல் படிந்து புகைபரந்து புதுகளைந்து பூவணிந்து புள்ளுறைந்து பொங்குமகுலைப் பொருத்தித் தங்குகங்குலைத்திருத்திமுடித்தகுழற்பூங்கோதையே, குழலினசக்கினியமொழிபலபயிலும்பேதையே உபக்குத்திருநினைத்த மகாபாவி நானுனையால் தேவரீர் நீர்க்கவைபம் வையாமல் அதனால் உமதுளம் நைபாமல் என்னையாட்கொள்ள வேண்டும் இந்தக்கடுமையான காட்டில் கொடியகயவர் மனம்போல் கறுத்தஇருட்டில் அடியேனிமித்தம் கலவியையா

டிருந்து காத்திருக்கிற உமக்கு நானென்னவுபகாரஞ்செய்யப்போகிறேன் எவ்விதவுபகாரம் பண்ணுவேன் நீர்கிருபை வைத்து நடத்தினைத்த உதவிக்குப் பிரதியுதவிபுரிய வகையறியேன் நீரின்று கொடுக்கப்போகிற தனத்திற்கு நான் கோடிதனங் கொடுத்தாலும் ஈடாகாதே என்னுசைக்கண்ணோ இனிமேல் நானென்செய்வேன் ஆகிலும் பதிலுதவி செய்வதற்கு ஒருவகையிருக்கிறது அதென்னவென்னில் என்னுயிரை உமக்கு ஒப்புவிப்பதுதான் உயர்ந்தசைமாறு இதைவிடவேறு விதியில்லை இப்போதும் தமக்குவேண்டிய வஸ்துக்களெல்லாம் இதோகொண்டுவந்திருக்கிறேன் தயையுடன் அங்கீகரித்துக்கொள்ளும் ஓதருணி தவருதப்பியஎன்னைத் தாங்கிக்கொள்ளும் என்சும்மாவிருக்கிறீர் ஐயோ பொழுது அநியாயமாய்ப் போகிறதே அநேகபோஜனவஸ்துக்கள் ஆறியலண்டு போகிறதே கிஞ்சுகவாய்திறந்துகொஞ்சம்பேசப்போகாதோ பஞ்சவர்னக்கிளியே அஞ்சாதேயென்று ஆதரிக்கப்படாதோ எஞ்சியவென்னை ஈடேற்றப்படாதோ தித்திப்பான உம்பேச்சு என்செவிக்கேருக காலமாச்சு தெய்வப் பெண்ணே நீரிப்படி மர்மமாயிருந்தபடியால் மனமதனால் நொந்து வெந்து போன நான் கடைத்தேறுங் காலமெதுவோ நீயெனக்கிசைந்து இவ்வளவு தூரங்கிட்டவந்திருந்தும் ஒட்டாமலெட்டியிருப்பது என்னபாவமோ உத்தமஸ்திரீகளுக்குள்ளசுபாவமோ எதுவும் உமது கருணைக்கெதிர் நிற்கமாட்டாது தனழுந்திருக்குந் தோப்பில் தனித்திருக்கு நாமிருவரும் கொஞ்சிவிளையாடவேண்டாமோ? ஆவிதுளங்கத் தாவித்துளைக்கும் பாவிமதன்கணையோ பொல்லாது என்னிஷ்டதெய்வமும் அஷ்டைஸ்வரியமும் உம்மையன்றி இல்லை வேறொன்று உம்மையானம்பினேன் உங்காலடி யழகுக்கீடுபடாத என்பெண்சாதிமார்களின் தேகத்தையும அவர்கள் மேலுண்டான மோகத்தையும் இன்றுதுறந்தேன் உமதாளை என்கண்ணுனை இன்றுமுதலென்றென்றைக்குங் கண்ணெடுத்துப்பார்க்க மாட்டேன் இதுவேசத்தியம் என்சொல்லே நித்தியம் உம்மையிணங்காத நான் அநித்தியம் ஆ பத்தினி என்னைப்பற்றியெறிக்குங் காமாக்கினிவெதுப்பிக் கருக்கிக்கவழ்க்கப்பார்க்கின்றது இத்தறியில் நீர்கைகொடுக்க வேண்டும் இனித்தாளமாட்டேன் இன்னுஞ் சற்றுநேரம்போனால் உம்மை நான்ஆளமாட்டேன் வாளாயுதக் கண்வாய்ந்த மனோரதமே என்று அவளுக்குநேர் சென்று நின்று ஆகா நீர்முந்திப்பேசலாகாதோ பேசினால் உமதுவாய்முத்துச் சிந்திப்போமென்றோ என்பேரில் கோபமோ அல்லது மனஸ்தாபமோ ஓ பெண்ணரசே என்று பலவாறுகிய பஞ்சைப்பாட்டுகளைப்பாடினான்.

அவன் பிதற்றியமொழிகளைக் கொஞ்ச நேரம் வரையிலுங் கேட்டிருந்த வீமசேனன் தன்முகத்தைக் கீசகனுக்குக் காட்டாமல் தூணில் மறைத்து ஒருபக்கத்திற் கொருபக்கந்திரும்பி அவனைப் பார்க்கப்பார்க்க மனமுறிந்து ஆணவமலமுதலான அஞ்ஞானவிருள்மூடிய ஆசாரயீனர் வாசா கயிங்கிரியஞ்சொல்லி ஊர்மெச்சப் பால்வார்த் துண்பதுபோல் உலகமெச்சச் செய்கின்ற படாடம்ப பூசாவிதியின் புன்பயனால் அப்பூசைசெய்பவரையும் அவர்கால்வழியையும் நாசமாக்க நகைக்குங் கடவுள்போல் நகைத்துக் கோபாக்கினியால் கீசகனைச் சுழித்து வெறித்துப்பார்த்தான் அதுகாலையில் கீசகராஜன் கெவுரவமாய்ச் சிரித்து வண்டுலாவு மலர்க்குழல்மாதே என்மேலன்பு இன்றுதான் வந்ததோ இத்தனைநாட்சென்றதோ இவ்வளவுதயவு போதுமென்று தன்னிருகாத்திலுந்தாவி என்பிராணமோக்ஷகாரணி என்று பாவிமூவினுன் அத்தூணில் மறைந்திருந்த வீமனை கீசகன்கைக்குச்சிக்காமல் யானைத்துதிக்கை போன்ற தன்னிருகைகளையு நீட்டி முறைவழுவித் துறைதப்பித் தழுவநீட்டிய கீசகன் கைகளிரண்டையும் பற்றிக்கொண்டு நெருக்கினுன் நெருக்கவேசெந்தேள்கொட்டித் திகைப்பதுபோல் துடித்து உதட்டை மடித்து ஈதென்னவாச்சரியம் ஐயோ விபரீதமாய்த்தோணுதே பெருமோசம் போல்காணுதே நாமெண்ணிய வண்ணமகளானுல் அவளுடைய உள்ளங்கை தாமரைபுட்பம்போல்மிருதுவாயிருக்குமே இந்தக்கை கல்லினும் கடினமாகக் காணுதே. இந்தப்பிடி எமலோகத்திற் கிழுத்துக்கொண்டுபோகவந்த காலதூதரால் கழுத்திற்கிடுங் கத்திரிக்கோல்போலு மிருக்குதே இது ஆர்செய்தமாயமோ அவள்தேடிய உபாயமோ என்னுத்மாவுக் கபாயமோ ஒருவேளை நம்மை நம்பவைத்து மோசம்பண்ணி யிருப்பாளா ஏறவிட்டேணியை வாங்கும் புனனெறியனைப்போல் நினைப்பாளா நமது தமக்கையினிடமாய் அண்டிப் பிழைக்கவந்த அநாதையானவள் வஞ்சனைவிரோத மனத்தில் வைப்பாளா கொஞ்சமேனும் நன்றி நினையாளா எனைச்செயும வினைச்செயலெப்படியோ வறியேன் ஆகிலும் ஸ்திரீகளை நம்பலாகாது என்பது பெரியபேச்சு அந்தச்சொல்லை யோசிக்குமிடத்தில் எல்லாப் பெண்களும் மோசமுள்ளவர்களாயிருப்பார்களா சிலவேளை நாம் கொண்டமோகசோபத்தினால் புத்திமருண்டு சத்திமாறியதோ நம்மை இவ்விடம் வரச்சொன்னகாதலிஅவளோ அல்லது இன்னமெவளோ இதைநன்றாய்ச் சோதித் தறிவோமென்று தனக்குள்ளே கலவரங்கொண்டு என்கையைப்பிடித்த அடிதையலே மையலாகிரிவந்தது நீசரசமாய்ப் பிடித்த என்கைதனையச்

சற்றே விட்டுவிடடி நீ பிடித்தபிடிப்புக் கிளையா திருக்கிற என் பிராணவலுவைப்பாரடி உன்பலத்திற் கென்லைந் தின்பழுபக்குயர்ந்ததடி உன்னை நான் அடிபிடியென்பதாய்ப் பேசுகிறேனென்று நீ ஆயாசப்படாதே காமச்சாசக் கலவிக்களிப்பால் கசிந்துவருகிறகளிதூஉகிதவாரத்தையடி என்னிருகண்ணே காதலிப்பெண்ணே என்று தன்கையைப் பிடுங்கினான் இவனைத்தனையோ பாராக்குக்காட்டி அசுப்பில் தன்கையை யிழுத்தபோது ஜாக்கிரதையிலிருந்த வீமன் தான்பிடித்தபிடி விடாமல் வலதுகையை நீட்டி இடதுகையையிழுத்து இடதுகையை நீட்டி வலதுகையை யிழுத்துநிலைமத்திட்டுத்தயிர்கடையுந்தன்மைபோல் மாறிமாறியிழுத்து வலித்துத் தானுடன் தேய்த்துஅவனிருகரத்தையுஞ்சேர்த்துத் தன்னொருகரத்தால் பற்றிக்கொண்டு மற்றொருகரத்தினால்மோத்தியும் குத்தியும் கிள்ளியும் நிமிட்டியும் பிசைந்தும் சரசக்குத்து சரசக்கிள்ளென்று சொல்லியும் ஒவ்வொரு கிள்ளுக்கு அள்ளுச்சதை துள்ளும்படியாயும் ஒவ்வொருகுத்துக்கு உழக்குரத்தம் பீரிடவுஞ் செய்து அவன் தேகத்தை வருத்தித் தீமைபுரியும்போது கீசகன் சகிக்கமாட்டாமல் வாய்விட்டலறுந்து நாடாதும் நாடி வாடாமுகமும்வாடி தேகம் வியர்த்துச் சூரசம்மாரச் சுப்பிரமண்யக்கடவுளோ? ராக்ஷச வைரியாகிய மகாவிஷ்ணுவோ என்று நிலவரம்விண்டு கலவரங்கொண்டு வகைதப்பி மாட்டிக்கொண்ட தன்கைகளைத் தன்னால் கூடியமட்டும் சாகசஞ்செய்து வாங்கினான்.

அப்போதந்த வீமசேனன் மின்னொளிபோல விளக்கிக் கீசகனுடைய இரண்டுகையில் ஒருகையைவிட்டுவிட்டு மற்றொருகையைப் பிடித்தபிடி தளராமலிருக்கவிறுவிறென்று சுற்றிநிசைக்கயிற்றைஇழுப்பதுபோல அவனுடைய தலைமயிரைப் பற்றியிழுத்து நான்குதிசையிலுங் காகா வென்று சுழற்றி மேலேதூக்கிக் கீழேதாக்கினான் அப்போது கீசகன்பெருமூச்சிட்டெழுந்து ஐயையோ ஆண்டவனே பெண்ணென் றெண்ணிய எண்ணம் போச்சுதே இப்போஇது பேயுருவாய் வந்துவாய்ச்சுதே இனிப்பிழைக்கும் வழியெப்படி இந்தவேளையில் பெதறிபிளைப்போமாகில் வந்திருப்பவன் மனிதன் எப்படியும் நம்மைமாட்டுவான்போ லிருக்கிறது நாமிவனை முந்திமுடித்துவிட்டால் பிந்தி அந்தப்பெண்ணுடன் கூடிப்பேசிக் கொள்ளலாம்இவனைப்பிராணனுடன்விடப்போகாதென்று விரைந்தோடிவந்தான் வந்தகீசகனை வீமன் மடக்கினான் மடக்கியபிடிப்பைச் சடுக்கென்று தட்டினான் தட்டியகீசகன் தலையில் குட்டினான் குட்டிய வீமனைமுகத்தைப்பார்த்துக் குத்தினான் குத்திய கீசகனை கொதித்தெழுந்து குதித்து அவன் மூக்கில் தாக்கினான் தாக்கியவீமனைத் தடுத்துப்பிடித்தான் பிடித்த கீசகனைப் புரட்டிப் பூமியில் சாயத்தான் சாய்த்த வீமனைக் காலால்தளேந்தான் தளேந்தகீசகனைப்புரட்டி புதைத்துத் தள்ளினான் தள்ளிய வீமனுக்கிளையாமல் பின்னுங் கீசகனெழுந்து முன்னம்பேசிய ஆணவமும் நாணமும் மானமும் விடாமல் மற்போர்கொடுக்கவந்தான் அவ்வேளையில் வீமன் ஆக்கிரமித்தெழுந்து எதிரிதோள்மேல்கோடையிடிபோல் இடித்தான் அவ்விடியைப் படியத்தாங்கிய கீசகராஜன் இவனை முடியப்பார்ப்பேனென்று விடியற் காலத்துக் சாக்கைபோல் கதறிக் குத்துககு பதில் குத்துக் குத்தினான் அவன்குத்திய குத்தை மகமேருவோ டொத்த தோளில் தாங்கிய வீமசேனன் தத்தளிக்காமல் முகஞ்சுளித்துத் தன்கைவிரல்களை மடக்கிக் கீசகன் மார்புகிழியவும் அவன் தலையெழுத்து அழியவும் முதுகெலும்பு நொறுங்கவும் பழுவெலும்பு முறியவும் தலையோடுடைந்து இரத்தம்ததும்பிவழியவும் தாக்கினான்.

அந்தத்தாக்கு-தலைமேற்கொண்ட கீசகன் ஆர்ப்பரித்துக் கனைத்து வீரங்கொண்டு சுழன்று இருகையுமூடக்கி இலகுவுகொண்டெழுந்தான் எழுந்தவன் காமிரண்டும் கொழுந்தெனவதங்கி வாடும்படிக்குத் தட்டிவிட்டுக்குலத்திற்குப் பழுதுதேடிக்கொண்ட கீசகனைத் தனித் தன்காலால் அவன்காலைப்பின்னிச் சேர்த்துத்தூக்கியெடுத்துத் துரோபதியை யழைத்துத் தீராமோகங்கொண்ட விகார சுருபனைப்பாரென்று சுழற்காற்றி லகப்பட்ட துரும்பதுபோலும் காற்றாடிபோலும் கறகறெனச்சுழற்றிக் கொக்கரித்துப் போர்ச்சிங்கம்போல் பூரித்துப் பூமியிலெநின்றான் வீமசேனனால் எறியப்பட்டுவிழுந்த கீசகன் காமவின்பத்தைக் கட்டுடன் மறந்து சோமகுலந் துலங்கப்பிறந்த பாண்டவர்களில் இவன் வீமசேனனென்று அறிந்து துன்பநிறைந்து ஐயோ இவனைமிந்தமட்டும் விட்டுவிட்டு என்றேட்டத்தை நீபிடிக்கமாட்டாய் போடாபோவென்று ஓடலாமென்றால் இவனம்மை எங்களைக்கும் பிராணனுடன் விடப்போகிறதில்லை நாமிதுவரையிலும் பிழைத்த பிழைப்புக்குப்பழுதுவந்துபோம் நம்மையாரும் சட்டைபண்ணார்கள் பெட்டாகிய குட்டுக் கெட்டுப் போய்விடும் ஆகையால் இவனை ஒருகைபார்ப்போம் நமக்கு நல்வினைப் பயன்கைகூடுமானால் இவனை நமனுலகஞ் சேர்ப்போம் ஆகாமல் போனால் இவனிடத்தில் நமது உயிரைத் தாரைவார்ப்போமென்று எழுந்து விரைந்து கந்துபாய்ந்து வீமன் த

லைமயிரைப் பிடித்துக் கையினால் சுற்றி நெரித்துக் கரகரவென்னச் சுழற்றி நிலத்திலடியாகத் தள்ளித் தன்னிருகாலால் புரட்டிப் புரட்டி உதைத்து அவனுடலைத் தேய்த்து மகிழுங்கிய இரண்டு கல்தூண்போலாக்கி உள்ளங்கை யிரண்டும் இரத்தவெள்ளங் காணமிதித்துத் தேகம் சிவக்கச்சீறி அறைந்தான் இவ்விதமாகக் கீழே வீழ்த்தி மோதிப்பிடித்து மாறியடித்து பொருதுநின்ற கீசகன் வசத்திலகைபொசமாய் மாட்டிக்கொண்டவாயுகுமாரனைப் பாஞ்சாலிகண்டு பரதவித்துப் பாபம்பெரிதோ புண்ணியஞ்சிறிதோ சத்தியக்குறைவோ ! அசத்தியநிறைவோ ஓ தெய்வங்களா! வனதேவதையே வீமராஜனுக்குப் பொல்லாக்கு நேரிட்டபிற்பாடு இம்மேதினியில் நானும் பிராணனுடனிருக்கவேண்டுமா அவருக்கு முன்னே என் உயிரைமாய்த்து விடுகிறேன் முதல்வனே என்றழுது பரிதவிக்கும்போது இந்தத்திரௌபதாதேவியின் விசனவசனமானது வீமன்காதில் நுழைந்தது அதனால் வீரசந்தமேறி மேலாள் கீழாளாகப்புரட்டிக் கீழான் மேலாளாகிக் கண்ணுருட்டி அஞ்சாதே அஞ்சாதே மிஞ்சாதே பாஞ்சாலி பரிதேதுதோகாவிழைந்தித வென்று தேக ஆயாசந்தீர்த்து பிராணனைத் திணமாக மதித்து நீருண்டுவேகங்கொண்டெழுந்த மேகம்போ லிரைந்து பூமியில் தோய்ந்து குதிரைப் பாய்ந்து கீசகனைப்பற்றிக் கிறுகிறெனச்சுற்றி வானத்திலெறிந்தான் ஆகாயத்திற்போன கீசகனானவன் வாயுவை ஸ்தம்பித்துக் கேசரிமார்க்கத்தில் கிளம்பி விருவிறெனச்சுழன்று வீமன்றலைமேற் குதித்து அவன்கழுத்தைக்கெட்டியாய்க்கட்டிகொண்டுதொங்கினான்.

அந்தக் கீசகனை வீமசேனனெடுத்துக் கொண்டு அவனிருகரத்தையுந் தன்னிருகரத்திலடக்கி அவனையிழுத்துக் கீழேபோட்டு மடக்கி வயிற்றை மிதித்து வாயிலுமுறைந்தப் பற்கள் பதினாறையும் உதிர்த்தான் வீமனடித்த அடியினால் கீசகன் வாய்கிழிந்து கெடுமீனைப்பழிந்து பல்லெல்லாம் பதர்போல்பறந்துபோனதால்பொக்கைவாய்க் கீசகன்புறங்கொடுக்காமலுரங்கொண்டோங்கி மாசுகளைப்பிடுங்கி வரிசைகள்தொட்டங்கினான் வீமனும் அவனைவிடாமல் தொடர்ந்து வேண்டியமாநங்களை வேருடன்கலைந்து விதவிதமான போர்புரிந்து வீரவெறிகொண்டாடினான ஒருவரை யொருவர்விடாமல் இடம்வலம் வருதல் கெடாமல் இருவரும் அடிகள் படாமல் ஆயுதமென்பது படாமல்அடிக்கடி மூர்ச்சைகொடாமல் சோபதாரகந்தொடாமல் ஆகாச நிருக்ஷமாயொட்டிநடத்திய யுத்தத்தையும் அவர்கள் மனோதிடத்தையும் தேகாபிமானம்விட்டு அமர்புரிகின்றதிறத்தையுமாம்சொல்லத்தக்கதல்ல வல்லவனுகிய ஜனமேஜயராஜனே.

இவ்விதமாகஇவர்களிருவரும் தங்கள்தங்களுடைய முழுப்பலங்களைக்காட்டி, மாறாமல் போராடிவரும்போது, பொழுதுவிடியப்போகிறதென்மதுபூர்வோத்திரம்வெளிப்படுமேயெனறு, வீமன் தடித்து, இவனை விரைவில் முடித்துவிடவேணுமென்று நினைத்துப்பங்கப்படச்சிங்கமானது அற்பமிருகத்தைஅமுக்குவதுபோல் அந்தக்கீசகனைஅமுக்கிக்காலிரண்டையும்மேலாகத் தூக்கிக்கவ்வாக்காய்ப்பூமியில்தாக்கி அவன்மீதேறி அமுக்கி உட்கார்ந்து மார்பும் தோளும் வயிறும் பிடரியும் வலிப்பெடுக்கக் குத்தினான். அவன் குத்தியகுத்தைச் சிங்கபலம்பெற்ற கீசகனானவன், திரஸ்கரித்து அதையொருவாவு செலவில்லைக்காமல் காலால் வீமன்கழுத்தைமடக்கி தன்னிருகைகளையும் தரையில் தேய்த்து வாயுகுமாரன் தலையோடு செறியத்தாக்கினான். அந்தக்கீசகன் அறைந்த அறையானது வீமனதலைமேல் வீழ்ந்தகாலையில் அநேகாநிசைவரையிலும் அறிவுமயக்கி நெருப்பில் நெய்விட்டதுபோல், கோபங்கொண் டோங்கிக் கருப்பைக்குள் கட்டுப்பட்ட சிசுவைப்போல், அடங்கிய கீசகனை அசையவொட்டாமல், ஓரே அமுத்தாக அமுக்கி, அவன் தலைமயிரைக் கெட்டியாய்ப்பிடித்து, வச்சிராயுதத்தால் மாட்டுவதுபோல், கையைமுடக்கி, நகங்களை நீட்டி முட்டி அடிக்கொப்பாய் அவன் உச்சியில் குட்டினான். அதனால், கீசகன் தலைசிதறிந்து, மலசலாதிவழிந்து, கண்ணிரண்டுங்குழிந்து, காதில் உதிரம்பொழிந்து, அந்தககாரண வர்தனையால் பதறி, வாதமாணவேதனையினால் கதறி ஆவியழிந்து புவிமேல்சாய்ந்தான்.

மண்மேல்கிடந்த விராடன் மைத்துனனை அந்தமட்டில் விட்டுவிடாமல், வாரிப்பிடித்து, மார்புறுத்ப இழுத்துக் கையைமுறித்துக், காலைக்குறைத்து, மெய்யைச் சுருக்கிக், கையால் பிசைந்து மாவிளக்குப் போடுவதுபோல், மாமிசத்தைத்திரட்டி, உண்டையாகவைத்து, அந்த உண்டையின்மேல் மீசையும்கண்களும் விரித்தவாயும் பாக்குமுகமுமுடைய தலையைநாட்டிக், தலைதலையைமாட்டிப், பணிப்பெண்ணுக்காகக் கொண்டுவந்த வஸ்திராபரணவலங்கார புட்பங்களையும் சூட்டிப், பணபெலாதி கர்ச்சாயங்களையும் அவன்கொண்டுவந்த தலைவாழையிலையில் படையல்போட்டுக், கந்தகதம்ப கஸ்தூரிகளை வாரி இறைத்து, இவ்வுலகவழக்கம் பேயோட்டிப் பலிபோடப் பூசாரிகள் சிங்காரிக்கும் பொம்மை முகம்போலமைத்து, இந்தவேடிக்கையைத் துரோபதிக்குக்

காண்பித்துக், காமப் பேயோட்டிக், காட்டில் பூசை போட்டுப், பேய்ப்பதி சிங்காரித் திருக்கிறேன், பாருமென்று சொல்லுவோ மென்பதாகநினைத்துக், காயுங்கனியும் பூவுமாயிருந்த ஒரு பெரியமரத்தைப் பிடுங்கிக், கசக்கித், தீயெழத்தேய்த்து பூபூவென்று வாயினுலூதிப் பக்கத்திலிருந்த காட்டைக் கொளுத்திவிட்டு எங்கும் ஜோதியாய் எரியும்போது, வெற்பெனத்திரண்ட சொற்கத்தைச்சுமந்த கற்பினிதுயர்ந்தபத்தினிப்பெண்மணே! உன் கால்மேல்விழ்ந்த கடையனைப்பார் கயவனைப்பார் காமக்கனிப்போடாடியபேயனைப் பாரென்றுகாட்டினுன்.

வேலுஞ்சேலும் விழியாயமைந்த பாலுந்தேனும் மொழியாய்ச்சமைந்த பங்கயப்பெண் பெருமாள் பார்த்துத் தனதுவயிறும் வாயும் மனமும் பதறிச் கதறியவாட்டமொழிந்து வீமசேனன்பேரில் நாட்டமா யிருந்தான். அவரவர்தேடிய வினைப்பயன்களை அநுபவித்துத் தீரவேண்டுமல்லது அநுபவியாமல்விடாது. தாங்கள் ஒருகாரியத்தைப் பெற எண்ணினுல் நினைத்தபடிமுடியாது. எண்ணியவண்ணம் எவர்களும்பெறவில்லை. எண்ண முன்னுக்குவாராது. உண்மைக்குத்தெய்வபலமிருந்தொருவேளை முடிந்தால் முடியும். சிங்கபலம்பெற்ற கீசகன் பாஞ்சாலியை எளிதில் நினைத்த பொல்லாங்கானதுநாமெல்லோரும் நாவால்பேசப்படாத புண்ணியகாரியமாதலால் அதனுல்வந்த மிதமற்றபலனை உடனே அவன் அநுபவித்தான், அதைப்பற்றி நாம் பேசவேண்டும் அவசியமில்லை, கோபதியாகிய பூபதியே! என்று ஜெனமேஜெயனுக்குச்சொல்லி வைசம்பாயன மகாமுனியானவர் மேல் சொல்லத்தொடங்கினுர்.

இப்பால், வாயுசுதனுகிய வீமசேனன் அக்கினியில் பிறந்த அணங்கைநோக்கி உமக்குப்பகையான கீசகன் ஒருவகையாய் அழிந்துபோனுன். உன்விஷயத்தில் - இனியும்யாராவது மன்மதகோலாகல மயக்கத்தைக்கொண்டார்களாகில், அவர்களு மிப்படியே அநுபவிப்பார்கள் நீ ஒன்றுக்குமஞ்சாதே. இனிநாம் இவ்விடத்திலிருக்கத் தகாது, பொழுதுவிடியுமுன் போய்விட வேண்டுமென்று காட்டைவிட்டுப் புறப்பட்டு, மச்சநாட்டை நோக்கி வருகையில், வழியில் ஓர் தாமரைக்குளத்தி லிறங்கித், தேகப்பரிசுத்தஞ் செய்துகொண்டு தீர்த்தமருந்தித் தெய்வப் பிரார்த்தனையுடன சுதர்க்கனை அரண்மனைக்குப் போம்படியாகத் துரோபதியை அனுப்புவித்து, வீமசேனன் மடைப்பள்ளிக்குப்போய், பலாணைமேல் படுத்து நித்திரைவாராமல் குத்துக்காலிட்டுக்கொண்டிருந்தான.

இப்படியிருக்க, மடலவிழ்ந்து, இதழ்பரந்து, மலர்விரிந்து, மதுநிறைந்து, மணமுறைந்து, தளிர் தழைந்து தலைசெறிந்து, இலைமிகுந்து, மிகவுயர்ந்து, இருளடர்ந்து கொடிபடர்ந்து, காய்சொரிந்து, கனியுதிர்ந்து, கதிர்மதி நுழையாக் கவிப்பொதிருந்த மாந்தோப்பில் இவரிவருவரும் பேசியவோசையும் கைக்குத்தின் முழக்கமும் மண்டபத்திலுண்டான எதிரொலியும் மரங்களைப் பிடுங்கியாட்டிய ஆர்ப்பும் சந்தடங்கிய இருபதுநாழிகைச் சமயமாதலால், விராடபுர முதலிய சுற்றுக்கிராமங்களிலும்கேட்டது, கேட்டும், சனங்கள் அப்போது இராக்காலமானதினுலும் நித்திரை மயக்கத்தாலும் எப்பொழுதும் யுத்தம் இல்லையென்றிருந்த மப்புப்புத்தியினுலும் பயத்தினுலும் விசாரிக்கவேண்டிய அவசிய மில்லாமையினுலும் கலவரப்படாமல், நிதானித்துக் காரணகாரியங்களை யெண்ணுதல் திகிலடைந்து, திரும்பிப்பாராமல் நித்திரைசெய்தார்கள்.

ஆனுல் முன்னமே கலவரங்கொண்டிருந்த கீசகன் தம்பிமார் இந்தப் பேரோசையைக் [illegible], படுக்கைவிட்டெழுந்து, உப்பரிகைமே லேறிப்பார்த்து, அந்தச்சத்தம் வருகிறவழியை யுற்றுக்கேட்டுத், தங்கள் அண்ணன் நினைத்த எண்ணமும் வண்ணப்பெண் வாடியவழிநெரிச்சலும் வாரர்பேசிக்கொண்ட வகையும் அவர்களைச் சந்தேகத்தில் கொண்டுவந்து விட்டதாக, அச்சப்பட்டு, கீசகன்படுக்கை வீட்டைப்பார்த்து, அவன் அவ்விடத்திலில்லாமையால், பாங்கியர் முதலாகிய பணிப்பெண்களைக்கேட்க, அவர்கள் இன்றிரவில் பத்துநாழிகைக்கு ஸ்நானம்பண்ணிச் சாலங்கார சம்பிரமமாய் மேனிமினுக்கி வெளியேபோனுரென்றுரைக்க, அம்மொழிகேட்ட உபகீசகர்கள் பாதகித்துச் சரிதான் சரிதான் நம்மு சுதர்க்கனைக்குச் சாந்தசந்தனுதி மலர்முதலியதும்புனைந்துவந்த தெய்வப்பெண்ணின்மேல் இச்சைவைத்தமையால், அன்னத்தின் வேஷங்கொண்டு, தனக்குரிய போகமாதரையும் விண்டு, மன்மதன்கணையா லுடைந்து, பாகொத்தமொழியாளாகிய பணிப்பெண்ணைத் தொடர்ந்து சோலைமேவிட்டுத், தூக்கமுங்கெடுத்து, துயரமாயிருந்தவன தான்கொண்ட விரகவெப்பந் தணிவதற்காகமாமரச்சோலை வசந்தமண்டபத்திற்குப் போனவனுகவேணும் அந்தவேளையில் வண்டுறுமலர்க் கொண்டையைப் புனைய ஸைரந்திரியானவள் ஏதோ, ஒரு காரணார்த்தமாய் அவ்விடத்திற்குப்போ யிருக்கவேண்டும். பிரசண்ட வேகமதயானைபோன்ற கீசகன் அவளைக்கண்டு எதுடா நமக்குடன்படாதவள் இவ்வளவுதூரம் வந்திருக்கிறுள், இந்த இருட்டில் தனித்துவருவதற்குக் காரணமென்ன? என்று சற்றேனும் யோசனைபண்ணுமல், காமக்கனிவைய

க் கருதினவனுக்வேண்டும். இதற்குமுன்னுன். இவனைத்
துரத்திச் சின்னபின்னப்படுத்திய செய்தியை அவனுக
குரிய காந்திருவ ராவர்கட்குத் தெரிவித்திருந்தவ ரா
கவேணும், அவர்கள் அவ்வாறே வசந்தமண்டபச்சோ
லையில் வந்திருந்தவராகவேணும். இவனுடைய பொல்
லாவினைவசத்தால் போர்மூண்டதாக வேண்டுமென்று,
தங்கள் தங்களுக்குள்ளே நிச்சயித்து, இனிநாம் சும்மா
விருக்கலாகாது. சீக்கிரம்போய்ப்பார்ப்போம். அப்படி
பார்க்குமிடத்தில், நிந்தைக்குடன்பட்ட கீசகன் உயி
ரோடிருப்பானாகில், வந்திருக்குங் காந்திருவருடன் மு
ந்திப்போர்விளைத்து, அவரைக் கைப்பிடியாய்ப்பிடித்து
க், கண்கலக்கப்படுத்துவோம். ஒருவேளை கீசகன் நாசம
டைந்திருப்பானாகில், அவனைப்பழிகொடுத்து நாம் உயி
ருடனிருந்து மானமில்லாமல் வாழ்வது மரியாதையல்
லவே. கூடப்பிறந்த தோஷத்திற்காக, அந்தக் காந்திரு
வருடனே போராடி அவன்மடிந்த விடத்திலேயே நாமு
மடிந்துபோவோம். இதுவேயுறுதி வேறில்லையென்
று, தம்பியாவரு மொன்றுகூடிக், கண்பொறிபெ
முவிழித்துக் கடகடவென்று பல்லைக்கடித்து, விடவிட
வென்று வில்லைப்பிடித்து மடமடவென்று பல்லாயுதங்
களுங் கொண்டு, தடதடவென்று விரைந்து வந்து காசா
ந்தமனம்போல், கருகியவிருட்டில் வசந்தமண்டபத்தைச்
சேர்ந்து சன்னுச்சன்னைத் தடவியஜோதி இங்க ளொளி
பேர்ல் எங்கும்பிரகாசிக்கக்கொழுந்து விட்டெரியும்வெ
ளிச்சத்தில் அழிந்து சிதைந்து அரைந்துநிரைந்து தி
ண்டுருண்டுமோத்தாகாரமாயிருந்த மாமிசத் திப்பை
யின்பேரில் தமையனுடைய தலைமாத்திரம் அழியாமலி
ருக்கக் கண்டு, திக்கென்று வயிறெரிந்து, திடலென்றுவீ
ழ்ந்து, வாடிவதங்கி, வயிற்றைப்பிசைந்து, கைகளைநெரி
த்துச், செய்வதென்னென்று, வெம்பித்தேம்பி விம்மிவி
ம்மித்து, மண்டபத்தைச் சுற்றிப்பார்த்து, ஒருவரையுங்
காணாமல் வாய்விட்டழுது, முகத்திலுந் தலையிலுமோ
திக்கொண்டு புலம்பி அண்ணனுடைய காலகைமுதலா
ன அவயவமொன்றுங் காணாதவர்களாய்ப், பிண்
டாகாரமாயிருக்கும் பேருடலைக்கண்டு ஓ கோகோ! எ
தென்னவிந்தை! இதுவரைக்கும் வாழ்ந்த எங்களுக்குநே
ரிட்டதிந்த. அளவிறந்த பல பராக்கிரமங்களுள்ள நம
து ஜேஷ்டனை இப்படியாகக் கொன்றபே ரெவர்களோ?
இவனைக் கொல்லத்தக்க வல்லவருந் தொல்லுலகிலுள
ரோ? இவனைக்கொன்றவன் மானிடனல்ல தேவப்பிறப்
பா யிருக்கவேண்டும். வேறொருபிறப்பில் விளைந்தவனு
னுல், கழுத்தைநெரித்து, வயிற்றைக்கிழித்துக், கை காலை
யொடித்துக் கசக்கிக், கோசபீசத்துடனே க்குத்தி
மொத்தையாகச் செய்வானோ? ஐயோ? வைச்சபதமிருக்க
ப், பிச்சைக்குப்போவானேன்? வசந்தப்பித் தாபமண
டைவானேன், அவனைப்போப்பட்ட தேவனுயிருந்த
போதிலும், இவனைவன்கையா லிறக்கமாட்டான். யே
தோ ருதுவினைத்துத் திருசெய்து விட்டார்கள் அந்த
ப்பெண் மோகத்தாலும இவனது தீவினைவசத்தாலு மா
ண்டானென்று, மார்பிலடித்துக்கொண்டு, மண்மேல்வீ
ழ்ந்து புரண்டு மானம் போச்சுது, வையகத்தார் பழிக்
கும்படிக்கு சனமாச்சுது ஆகா, தெய்வமே? இவனிப்ப
டி அழிந்ததைப் பிரசித்தியாமலடக்கம் பண்ணிவிடவே
ண்டும். பிரசித்தால். பெருமோசம்வந்துவிடும். நமது
சுதர்க்கனைக்குமாத்திரந் தெரிவித்து, அவள் கருத்தின்
வண்ணம் நடந்துகொள்வோமென்று, அவளிடத்திற்குச்
சென்று அடித்து மோதிவீழ்ந்து, அவள்பாதத்தில் தாழ்
ந்து நாம் வாழ்ந்தவாழ்வு இன்றோடழிந்தது மாதாசி? க
மது வண்ணப்பெண் மோகங் கொண்ட அண்ணன் வி
ன்னனுலகேறினன். இனிமேல் நடத்துங்காரியங்களுக்
கு நாங்கள் ஆலோசனைசெய்ய வந்தோமென்றுஞ் சொ
ன்னார்கள். அவர்கள்கருத்தை அந்தச் சுதர்க்கனை கேட்
டுத், தம்பிமாரைத் தழுவி நின்றும் கொம்பிலாக்கொடி
போற்று வண்டும் தரைமேற் புரண்டும் தலையிலடித்து
க்கொண்டும் பெருமூர்ச்சை யடைந்தும்பெதறியெழுந்து
ம் அடாபாவி? எங்களைத் தெருவில்விட்டாயே, வாழ்ந்த
வாழ்வு இவ்வளவுதானு சாய்ந்தது மன்மதபாணமா உ
ன்மேற்பாய்ந்தது அண்ணாவோ நீ மரணமடைந்தது, ஐ
யோ, அப்பாவென றடங்களர்க்கு உயிருடன் தூசலாடி,
ஓ சகோதரர்களே நானெவ்வளவோ சொல்லியும், பாவி
கீசகன் கேளாமற் போக்கழிந்தான். அக்கியஸ்திரீ களி
னுசை யென்றும் ஆயு ளழிக்குமென்று மோகநிவாரண
நூலில்மொழிந்திருந்தும் காலாந்திரத்தாற்கதிசேர்ந்தா
னே ஐயோ, சேககளிறே யென்று, கண்ணீர்வடித்து,
அவனது புஜபல காரியங்களைப் படித்து, ஒருவருமுண
ராம லொப்பனையிட்டழுது கீசகனிறந்தானென்னுங் கே
ள்வி பராஜர் களுணர்ந்தால், படையெடுத்துப் போர்
கொடுத்து இப்பட்டத்தை அபகரிப்பார்களே என் நாய
கனுக்குமெனக்கும் இத்தகட்டத்தை வைத்தானே நடுக்
கடல் கிருப்பானேனும் நடுத்தெருப்புழுதியானேனும் அட
டா, துட்டசாவானே, என்று பட்டப்பகலில்தோன்றிய
சந்திரன்போல், முகத் தொளி மழுங்கி என்சகோதரர்
களே நானிந்தவார்த்தையை உங்கள்மைத்துனராகிய வி
ராடஜனுக்குப் பக்குவமாய்ச் சொல்லிவிடுகிறேன். நீங்
கள் சீக்கிரத்திற்சென்று அண்டை அசலாரறியாமல் அ
டக்கம்பண்ணிப்போடுங்கள், பரப்பில்விடாதீர்கள்பழி,
ப்புக்கிடம் பண்ணுதீர்கள், பதறுதீர்கள், என்னைப்பாதே

சியாக்கிப்போடாநீர்கள், கடக்குநால்கு இக்கிலும்பகைவர்க்கிருப்பதினால், கீசகனுயிருடனிருக்கின்றானென்னுங் கேடியைக்காட்டி அவனுக்குச் செய்யவேண்டிய உத்தரிகைக் கடன்களைத் தீர்த்துவிடுங்களென்று உறவிகள்சொல்லியனுப்பிவிட்டு உள்ளடங்கி யொடுங்கி வெள்ளம்போல் கண்ணீர்விடுத்துப், பூமிமேற் படுத்துத் தெய்வமே! எனது தேம்பித் தொழுது துக்கமற்றவள்போல் பக்கத்திலிருப்பவர்கட்குத் தெரியாமல் விக்கியிருந்தாள்.

அந்தச்சுதர்க்களை சொன்னவண்ணம், அண்ணனைத்தகனஞ்செய்வதற் கெண்ணிய தம்பிமார் நூற்றுமூன்றுபேரும் பிரேதத்திற்கு வேண்டிய சல்லா சாதராஷாக்களை சந்தனக்கட்டைகள் ஸ்நானதிரவியங்கள்முதலிய சகலமுங்கொண்டு, தமக்கையாண்பணையிலிருந்து சுடுக்கில் குறுக்குவழிவரும்போது, வீமசேனனை விட்டுவராநின்ற வண்ணப்பெண்ணைத் தாங்கள் கண்ணிற்கண்டுவிழிமறித்துநின்று, மனஸ்தாபங்கொண்டு, மகோதிடமுடைய நமது தமையன் மாளுவதற்கு இவளே காரணமல்லது வேறில்லை நாமெண்ணியபடி இப்பொழுதுதான் முடித்துவருகிறாள். இதற்கொரு சந்தேகமுமில்லை அவனிவள்மேல்வைத்த ஆசையும் இவளவனைக் கெடுத்தமோசமும் அடியோடு நாசமாகும்படியாய். இவளையுமவனுடன சேர்த்துக்கொளுத்திவிடுவது உத்தமமாம் இம்மையிற்கலந்தெரிந்தால் அம்மையிலும் உம்மையிலும் பிரியாவிடையாயிருப்பார்கள் ஆகையால் இவளைக்கூசாமல் பிடியுங்களென்று, நான்குதிசையிலும் பார்த்துநாய்போல் வளைந்து, மான்போல்மருண்டு செல்லும் பாஞ்சாலியைத் தூரத்தினார்கள்.

வனவேடர்போன்று உபகீசகர்களைக்கண்ட வசாந்திரியானவள் ஒப்பேச்சும் பேசாமல் அல்லலடைந்து ஆலிபறிபக் கதறும் அனம்போற் பதறிப் பொறிபுலனிதறிக், கைகள் ஓதறியோடி ஆ, கார்திருவர்களே, எனக்குக்காவலாகிய தெய்வங்களே பேய்களுலாவுங் காலமாகிய இரவில் யாதுரதனைப்போல், கிலதுஷ்டர்களடுத்து என்னைப்பிடித்து, நெருப்பிலிட்டுக் கொளுத்தும்படிக்கு நிச்சயித்தார்கள், அதனால், கொழுகொம்பில்லாக் கொடிபோல் துவளுகிறேன். என்னசெய்வார்களோவென்று வாடுகிறேன். இந்த வீணர்கையிலகப்படாமலோடுகிறேன். இப்பாவிகள் வசப்பட்டு ஆவியழியுந் துன்பத்தைப்பார்க்கிலும், இப்போது தானே உயிரையொழித்துவிடுவது இன்பமென்று நாடுகிறேன். இந்தப் பஞ்சைகள்கையிலகப்பட்டுப் பாதகிகளுமுனனே அஞ்சேலனுமேலென்று நீவிர்களைந்துபேரு மோடிவாருங்கள். இந்த ஆபத்துவேளையில்வந்தென்னைக்காருங்கள். மல்லைகளைமண்ணாக்கவாட்டும் புஜபலத்தைக்காட்டுங்கள். அந்தத் துன்மார்க்கனை முடித்ததுபோல், இந்தக்கயவர்களையும்வாட்டுங்கள். மகோவேகத்தினுங் கடுகவோடி வந்து இவர்களையமலோகத்திற்கோட்டுங்கள். ஜய விஜய ஜயந்த ஜயசேன ஜயற்பலனேயென்று, அஞ்ஞாதவாசமுதலில் நேமித்துக்கொண்ட சங்கேதப்பெயர்களைச் சொல்லிக்கூப்பிட்டாள். அவள்கெட்டியாய்க்கூவிய ஓசையைமடைப்பள்ளியிலிருந்த வீமசேனன்கேட்டு, வாரிச் சுருட்டியெழுந்து, வதேர், பிரமாதம்விளைந்ததென்று, இடையிற் கச்சையைப்பிடிக்கவரிந்து, தொடையிலிரத்தந் துடிக்கப்பரிந்து, இதோ, வந்தோம், உன்றன்மனந்தளரேலென்று, பேரிடிபோலிரைச்சலிட்டுக் கொக்கரித்து எக்களிப்புடன் எதிரிலிருந்த மரங்களைப்பிடுங்கி, விறுவிறெனச்சுழற்றிக் கையொடுகையறைந்து, காடுகலங்கக்குதித்து கீணடவிருக்ஷங்கள் கெரியமிதித்துவந்தான், அவன்வருகிற இரைச்சலையும் வந்தவிசையையும் உபகீசகர்கள் பார்த்து, உடனே முகம்வேர்த்துத் தங்களுக்குள் தயங்கித், தைரியமில்லாமல்மயங்கி ஆ, தம்பிகளே! இவனிறங்குது கூவியபோதே இதோ, விரைந்து வந்தோமென்று ஒருபேரொலிகேட்டது, அவ்வோசை யடங்குவதற்கு முன்னே பெருங்காற்றுப் புறப்பட்டது, மரங்களியாவும் மடமடவென்றேடுகிறது. பூமிகடசடவென்றுறுமுகிறது. இவனும் சூரிய காந்திருவர் துணைவருகிறாய் போலுமிருக்கிறது. நமது தமையனையடித்துமுடித்தவிட்டிப்பொழுதுதான் போகிறவர்கள் போலுங் காணகிறது நம்முடையதமையனை இக்கேடுகண்டவர்கள் நம்மையெளிதில்விடார்கள் போலுந் தோன்றுகிறது இனியென் செய்வோமென்று பயந்து, உடல்பதறி நடுநடுங்கிக், கட்டமுதலைந்தவிரதச்சாரணியை விட்டுவிட்டோடிப் பிழைப்பதே மேலென்று, யோசிக்குமுன்னமே காலபாசச் சூலங்கொண்ட காலனைப்போலும் ஆலகாலவிஷம்போலும், வீமன்வந்துபுகுந்து விளாகும்போது, புத்தித்தாழ்வாற் பிராணனைப்போக்கடித்துக் கொண்ட கீசகன் தம்பிமார்கள் அஞ்சியோடி விலகினார்கள் அவர்களைக் கொத்துப்போற் சேர்த்து வளைத்துப், பந்துப்போக் கோரடியாயடித்து ஒருவரும் தப்பிப்பிழைக்காமல்மடித்து, அவரவரொலுப்பையுமொடித்து மேலுலகேற்றினான்? அந்த உபகீசகர்கள் சகோதரவார்ச்சல்யத்தப்பாமலுந்தமையனைப் பிரியாமலும் அவன்போனவழியே இவர்களும்போனார்கள்

இப்பால் துவளுமிடையுங்குவளைப்பட்டுடையும், அன்னநடையும் அரம்பைத் தொடையும் அருட்கடைக்கண்ணையும் அணிபூஞ்சடையும் கற்புடைமையுமுள்ளவிரதி

சாரணியின்மேல் விருப்பம்வைத்த கீசகனை வீமசேன
னறித்தபோது அவன் ஒருவருமறியாமல் உபாயத்தி
லொழித்தான் இந்த உபகீசகர்களைமடித்தபோது, பொ
ழுது விடியுஞ் சமயமாகையினாலும் விராடபுரத்தைச்
சமீபித்தவிடமாகையினாலும் பேரோசையினாலும்ஊரா
ரறிந்து உறக்கமற்றுவருந்தக், கலங்கிப்பயந்து சாரிதான்
சரிதான்வண்ணமாதுமீதெண்ணங்கொண்ட தின்னைய
ஞகிய கீசகனை அந்தப்பெண்ணுக்கிசைந்த கந்திருவர்வந்
துகொன்றார்களாக்கும்அவனுக்காகப்பரிந்துவந்தகீசகன்
தம்பிமார்கள் ஒன்றுகூடி சண்டைவிளைத்துநின்ற நூற்
றுமுன்றுபேரையும்வென்றார்களாக்கும்ஆகிலும்தேவஸ்
திரீயை மனிதன்நாடுவது நிற்கு. தேவர்களுடன் மனித
ரெதிர்த்துச் சண்டைசெய்வது இங்கிலுமீங்கு தன்பல
மும் எதிர்பலமும் எண்ணாமற் சண்டையிட்ட கீசர்க
ளில் ஒருவரும்பிழையாமல், விண்ணுலகுற்றார் போலு
மென்று பட்டினத்திலுள்ளவர் யாவரும்பேசிக் கொண்
டார்கள்.

இவ்வாறு உலகநடுங்கி யொடுங்கும்படிக்கு அன்றி
ரவில் கண்டகராகிய கீசகர்களைக்கொன்று,நாய்-நரி-பே
ய்-பிசாசம்-காக்கை-கழுகு-கூளி-காளி- முதலியவற்றிற்
கு விருந்தாக்கிவிட்ட சுயம்பாகியாகிய வீமசேனனும்
பரிவிறற் பதமளித்த பாஞ்சாலியும் திரும்பும்போது
வாயுகுமாரன் துரோபதியையணைத்து, வண்டாருமலர்க்
கொண்டைகண்டமாதே! கற்புடையமாதர்க் கெப்போ
தும் ஆபத்து நேரிடாது ஒருவேளை தீவினைப்பயனால்
நேரிட்டால் சூரியனைக்கண்ட பனிபோலகலும். மேலு
ம்நற்குணநற்செய்கையுடைய பதிவிரதைகள் தாங்களே
ப்படிநினைத்தாலுமுடியும். அதற்கொப்பாக ஒருகதை
சொல்லுகிறேன் கேளும்.

பூருவத்தில் இமவற்பர்வத ராஜகுமாரியான பவா
னியினிடத்தில் பணிவிடைபண்ணிக் கொண்டிருந்த ஐ
யையென்னும் பெயரினையுடைய தெய்வப்பெண்ணொருத்
தி இந்தப் பூலோகத்தில்வாழு மாதர்களுடைய இல்லற
தர்மமெப்படியோவென்று சந்தேகங்கொண்டு, பார்வ
தியாரைக்கேட்டாள். அதற்கு அம்பிகையானவர் அந்த
ப்பெண்ணைப்பார்த்து, நான்சொல்லுவதிதை இதனக்கநு
பவமாகாது நீபோய்ப் பூமியிற்பிறந்து, இல்லறதர்மத்
தைக்காட்சிப்பிரமாணமாகக்கண்டநுபவித்து வரக்கட
வாயென்று அநுக்கிரகம்பண்ணினார். அவ்வாறே மண்
ணிற்பிறந்துவளர்ந்து, சிறந்துவருங்காலையில், தேவராத
னென்றொருமுநிவன் தனக்குபசாரஞ்செய்வதற்கு உத்த
மகுணசாலியான பத்தினியொருத்தி வேண்டுமென்று
தேசமுழுமையுந் தேடித்திரிந்து, வாடிவருந்தி வரும்

போது, ஒருசிற்றூர் அக்கிராரத்தி லிருந்த இந்தப்பெண்
ணைக்கண்டு, கன்னிகை யென்றுணர்ந்து, இவளது பதி
விரதாகுணத்தைச் சோதிக்கவேண்டுமென் றெண்ணிப்
பெரியராக்ஷஸரூபங் கொண்டு, கோரமாயெதிர்சென்று
நின்று, அவளைப்பருந்துராய்ஞ்சும் பாவனைபோல் தூக்
கிக்கொண்டு, மகாவாரணி யத்திற்போய், நூறுயோச
னை விசாலமுள்ள தாமரைத்தடாகக் கரைமேல்வைத்து,
வெகுவிதசந்தோஷமுண்டாக்கிப், பற்பலகனிதேன் கிழ
ங்குகளுங்கொடுத்துஉற்பலந் தாமரைமல்லிகை முதலிய
புட்பங்களுமளித்துப் போகப்புணர்ச்சியின் பொருட்டு
ப் பேசுவனவெல்லாஞ் சரசமாய்ப்பேசித் தன்னுடன்கூடிய
மட்டுந்திருத்தி, நயபயங்காட்டிப்பொருத்திப் பார்த்தா
ன். அவளெந்தவிதத்திலுமயங்காமல், இடச்சித்தமாயி
ருந்து, கலவியமளிக் கலத்தலுக்குச் சம்மதியாமற்போ
னாள். அப்போது இராக்ஷஸரூபங்கொண்டவன் தன்கை
யில்பிடித்திருந்த கோலால் அவளைக் கீழேதள்ளிப் பல
வந்தமாய் ஒருதலைக்காமப் புணர்ச்சிசெய்ய ஆரம்பித்தா
ன். அவளதற்குமஞ்சாமல் தன்னிருகைகளையும் தலைமே
ற்குவித்து, ஓ தர்மதேவதையே நானிதுவரையிலும், ம
நோவாக்குக்காயங்களினால் வழுவுதன்முதலிய பழுதுமி
ல்லாமல் கற்புடைமைகாத்து ஒப்புவமையில்லாதிருந்தே
ன். இப்போதிந்த இராக்கதன்கை யென்மேற்படுமுன்ன
மே அல்பமாகிய என்னுடலங்கருங் கல்லாய்ப்போகக்
கடவதென்று கூவினாள் அவ்விடத்தில் உரத்திக்கூவின
வளையதட்டி, அந்தராக்ஷஸன் வெருட்டிப். பயங்காட்டி
மேல்விழுந்து தழுவப்போகையில், அவள் கல்லாய்ச்ச
மைந்தாள். அவளுக்குநேரிட்ட அபாயத்தைக்கண்ட மு
நிவன் இராக்ஷஸ ரூபத்தை விட்டுப்,பழையவடிவெடுத்
து, அவளுடல்கல்லாகியதைத்தடுத்து தான் அதுவரையி
லுந் தேடிய தபோமகிமையை அதநுக் கீடாகக்கொடுத்
து, அவளைத் தன்வாழ்க்கைத்துணை நலத்திற்குரிய மனை
வியாக்கி, விபகாரவிதிப்படி புணர்ந்து, கொக்கோகநூ
லிற்கூறியவண்ணம் ஆலிங்கன முதலிய யாவுநாடத்தி,
அநேகவரங்களுமளித்துத் தன்னுசிரமமடுத்தி. அறம்
பொருள் இன்பம்வீடு திறம்பாமலடைந்து இல்லறவா
ழ்க்கை யித்தன்மையதென் றியாவரு மறிய இகத்தில் இ
வ்விருவரும் நாட்டிவைத்தார்கள்.

கேளும் பாஞ்சாலி நல்லவர்களுக் கொருநாளும்
பொல்லாங்குவராது வந்தாலும், நிலையாயிராது பின்னு
ல் நன்மையுண்டாகும் ஆதலால் எப்பேர்ப்பட்ட ஆபத்
துகள்வந்தாலும். அதற்கஞ்சி விசனப்படலாகாது. இப்
போதுனக்கு நேரிட்ட கஷ்ட நிஷ்டூரங்களுக்காகத் து
க்கப்படாதே. இன்னுஞ் சிலநாளைக்குள் நமக்கு நல்ல

லம் வருமென்று நயந்துபேசிச், சுதர்க்ஷணையிடத்திற்க வளையனுப்பிவிட்டு, ஒருதடாகத்திலிறங்கி ஸ்நானம்ப ண்ணி, நித்தியவிதி நிறைவேற்றிக்கொண்டு தான்வெளி யேபோய்வந்தசெய்தி ஒருவருமுணரா திருக்கும்படி யாய் மடைப்பள்ளிக்குப்போய்விட்டான்.

இந்தப்பிரகாரம் வீமசேனன்போகத் திரௌபதி யானவள் பொழுதுவிடிந்து போயிற்றேயென்று பயந்து ஒடுங்கியொதுங்கி, வாடிவதங்கி, நம்மை யார்பார்ப்பார் களோ என்னநினைப்பார்களோ ! என்னமென் றேசுவா ர்களோநாம்போகிறவழியில் சந்திப்பார்களோ ஏதோ, எ ன்னமோவென்று அச்சத்துடன்போய்ச் சுதேக்ஷணைதே வியினரண்மனைக்குள்புகுந்தாள்.

இவ்விதஞ்சொன்ன வைசம்பாயனனை ஜனமேஜெ யராஜனெழுந்து, எதிர்விழுந்து பணிந்துபுகழ்ந்து மகிழ் ந்து ஓ சுவாமி! உபகீசகர்கள் கையிலகப்பட்ட பாஞ்சா லியைவீமசேனன்வந்து விடுவிக்காமற்போனால், கீசகனு டன் சேர்த்துக்கொளுத்திப் போடுவார்களே கிர்தார்த்த னேயென்று பரிக்ஷித்துவின்பாலன்கேட்க, வைசம்பாய னர்சொல்லுகிறார். மதிமரபுதித்த மன்னவனேகேளும், ஸ்ரீகிருஷ்ண பகவானுடைய கடாட்சவீட்சணத்தினா லும் தருமபுத்திரமகாராஜனுடைய சத்தியநித்தியதவ த்தினாலும் பாஞ்சாலியின் பத்தினித்தனத்தினாலும் அ ப்போர்ப்பட்ட பொல்லாங்கு நேரிடாதஒருவேளைநேரிட் டாலும். தான்பெற்றபெண்ணைத் தானேகொளுத்துவா னோ? தானேசுட்டெரிப்பானோ தந்தையாகிய அக்கினிதேவ ன். அப்படிநேரிடுங்காலையில், தருமதேவதையும் அதற் குசகாயப்படுமோ! தர்மந்தலைகாக்காமல்போமா சந்திரகு லாதிபனே என்று சந்தேகந்தீர்த்துமேல்நடந்த வர்த்தமா னங்களையுஞ்சொல்லத்தொடங்கினார்.

இப்பால், கறுத்தவிருட்கலந்து, கவிந்துபரந்து, நி றைந்து, ஜகத்தை மறைத்துப்போர்த்த திரைக்களங்கத் தை வெருத்துவிலக்கி, நிலத்தைவிளக்கி, விளர்த்தகிழக் கிலுதித்த, கதிர்க்கிரணமாலியின் ஜோதியானது உதய கிரி முடிமேலேற்றிய மணிவிளக்குப்போல், எட்டுத் தி சையும் பிரகாசிக்கப், பிரபைவிட் டொளிகாட்டிச் சூரி யோதயமானவுடனே அன்னிரவில்நடந்த யுத்தவிபரீத மும சப்தப்பிரதாபமும் விராடபுரமெங்கும்பரவி, ஆ யிரங்கிரணனி லதிகமாய்விரிந்து; மச்சநாடுள்ள மகா சனங்களும் கோட்டைக்கு மேற்புறத்தடைந்து, வனத் தில் மாண்டுகிடக்கிற உபகீசகர்களையும். அவிபாமலை சிறுமாஞ்சோலையில் ஆயிமஹம்மாயிக்குப் பூசைபோ ட்டுச்செய்த பலியலங்காரம் போலிருக்கும் கீசகன்தலை யையுங்கண்டு, விசனங்கொண்டு; பயந்து ஓட்டமாயோ டிவந்து, விராடராஜனுக்குச்சொல்லி வெறுப்படைந்தார் கள். கீசகனழிந்தசெய்தியைத் தன்பெண்சாதி சொல்ல க்கேட்டு, முன்னமேமன்னவனைவருந்தி இனிநானென்ன செய்வேன், கனவியன்னமே! என்றோள் போச்சுதென் று துடித்துக், கண்ணீர்வடித்துப், படுக்கைவிட்டெழப் பலமற்றவனாய்ப், பாதவித்துக் கொண்டிருந்த பார்த்தி பன்செவியில் உபகீசகர்களு மழிந்தார்களென் றுரைத்தவுடனே இடிமேலிடியும் அடிமேலடியும் எய்திய வாறுபோலிரங்கி, மிகநொந்து, விரைந்தெழுந்துகொலுச்சா வடியிற் கூடிய, தூதர்களைக்கூவி, என்மைத்துனரிறந்த காரணகாரியங் கண்டறிந்து வாருங்களென் றனுப்பினா ன். அப்படியே அவர்கள் போய்ப்பார்த்துச், சிதைந்துவ தைந்தகீசகனைக்கண்டு, ஆச்சரியமுமாச்சரியமுமுள்ளவ ர்களாகி, அரசன்திருமுகத்தைப்பார்த்து இராஜகுலராஜ னே! பராக்கு. கீசகராஜனுடன் உபகீசகராஜரும்பறந்து உ லகவாழ்க்கையைத்துறந்து மண்மேற்சிறந்து இறந்துபோ னார்கள். அவர்கள்பேருமிறந்துபோயிற்று. அந்தப்பிணங் களலங்கோலமாய்க் கிடப்பதைநோக்கி, இந்தப்பட்டினத் துச் சனங்களெல்லோரும் பயங்கொண்டு, வெளிவரமா ட்டாமல், வெசாறிவெதும்புகின்றார்கள். இந்தவிபரீதமெ ல்லாம் சைரந்திரியென்னும்பெண்ணால் விளைந்ததன்றி, மற்றொருவனாலுமில்லை. அந்தப்பாக்கியசாலி இன்னு ஞ்சிலநாளிவ்விடத்திலிருந்தால், இவ்வூரிலுள்ளோரியா வருஞ் சாகாமற் போகார்கள், தருமசீல தயாளுவாகிய தராபதியே! இப்பால் தாங்களே யோசிக்கத்தக்கதென நுசரணஞ்செய்தார்கள். அன்னவர்களுரைத்தமொழியை யோசித்து, மந்திரிக ளுடன்கலந்து வார்த்தையாடித், த ந்திரயுத்தியினாலும் மந்திரசித்தியினாலும் அந்தக்கந்தி ருவரைக் கைப்பிடியாய்ப் பிடிப்பதற்கான உபாயந்தே டி விற்படை வேற்படை யோங்கிய வீரர்களைவிடுத்து, மற்புயவலிமிகுத்த என்மைத்துனரை அற்பமாயெண்ணி ச், சற்பனைசெய்து பிராணனைவாங்கிய துற்பலமுள்ள துட்டர்களை எப்படியானாலுங்கைப்பிடித் தென்சொற்ப டி வரச்சொல்லுங்களென்று பற்கடித்து, விராடன்பகர் ந்து, இறந்துபோன மைத்துனருக்குச் செய்யவேண்டிய ஈமவிதிக்கடன்முடித்து, இனியென்னமோசம்வருமோ வென்று, ஏக்கமேலிட்டுத் தூக்கம்பிடியாம லிருந்தான்.

நேற்றிரவில் நடந்தசங்கதிகளைப் பாண்டுமக்களை வரும் பாஞ்சாலியும் தனித்தோரிடத்தில் சேர்ந்துகலந் து, வார்த்தையாடி அஞ்ஞாதவாசஞ் செய்யவந்தநமதவ தி நாளாயிற்று. இன்னுமுள்ள கொஞ்சநாளுந் தொலைந் தால், வெறுப்பாய்யெடுத்த வேடத்தைவிடுத்து, விருப்

பரிப்பழையவேடமெடுத்து. வெகுஜனங்களுக்குக்காணவெளிப்பட்டுப் பேசவேண்டிய சேதிகளையெல்லாம் பேசிக்கொள்ளலாம். அதுவரையிலுஞ் சந்தடிபண்ணுது இரும்பேமென்றுபேசிக்கொண்டு விற்பன்ன விவேகிகளாகிய அவ்வேந்தர்கள்தங்கள் கற்பனைத்தொழிலில் பக்குவமாகவிருந்துகாலங்கழிந்தார்கள்; அதுமுதல்விராடஜாராணும் சுதர்க்கணையும் புறம்பிலுண்டான சுற்றத்தாரும் மற்றவர்களும் அந்த விரதசாரணியினிடத்திலதிசமாய்நெருங்கவும்வேடிக்கையாய்ச்சொஞ்சவும் குலாவவும்-போவென்றுலாய்ப்பேசுப்பேசவும் பயந்து, அவளாலாகவேண்டிய வேலைகளைத் தாங்களே செய்துகொண்டு அம்மா,தாயே? சும்மாவிரு வென்றுபசரித்து எங்களுக்கு மித்துணையாயிருந்த கீசகர்கள் உன்மேலாசைவைத்து, மானமழி செட்டு நாசமானுர்கள், நீ யெங்கள்பேரிலியாதொரு குற்றங்குறைவையாமல், கோபதாபஞ்செய்யாமல், உமக்குக்காவலாகிய காந்திருவரிடத்தில் சொல்லி எங்களைரக்ஷிக்கும்படி பிராணபிக்ஷைகொடுத்தாருய், நீயெங்களுக்குப் பக்கத்துணையிருந்துகாரும். என்று, உபசாரம்பண்ணிப் பொன்னைப்போற்றுமாறுபோல், பூசித்துவந்தார்கள். அந்நகரிலுள்ள நான்குவருணத்தவரும் துரோபதியம் மகிமைக்கண்டால், எதிர்சென்றோடித்,தீர்க்கதண்டனிட்டு, மரியாதையுடன் பாதபூசைபண்ணி,மஞ்சள்-குங்குமம்-செந்தகதம்பம்-சந்தனுதி-பசுக்ஷதைகளைச்சாத்தித், தூபதீபங்கொடுத்துவணங்கி, வாய்க்குற்றம் கைக்குற்றமவமப்போகிறதென்று வயிற்றில் வாள்கட்டிக்கொண்டவர்போல், பயங்கரத்துடனமதித்துத் துதித்துச், சன்மானம்புரிந்து தேவதாவுபசாரம் ராஜோபசாரம்போல், பலஉபசாரங்களையுஞ்செய்துவந்தார்கள். பாஞ்சாலியும்இந்தப்பூனையந்தப்பாலை குடிக்குமாவென்பதுபோல். எனக்கென்ன தெரியும், நானென்ன அறிவேன். அம்மாவென்று சுதர்க்கணைக் கிணையாய்ப்பொருந்தி, அமர்ந்துவாழ்ந்திருந்தாள்.

பாண்டவர்கள் அஸ்தினபுரத்திற் சொக்கட்டாடுடித்தோற்றுப், பன்னிரண்டுவருடம் வனவாசஞ்செய்யப் புகுந்து, காடாக்கினியோங்கிய காட்டிலும் காளவிஷாக்கினிதங்கிய பாலைநிலத்திலும் வடவாமுகாக்கினி வந்து குடிகொண்டமலைச்சாரிலும் திருபுராக்கினி விளைந்த பருக்கைக்கல் மேட்டிலும் மதனுக்கினிமலர்ந்த மடுக்கரை - குளக்கரை நதிக்கரைகளிலும் இரிந்து மழை-பனி-காற்று-வெயில்முதலாகிய வருத்தங்களையும் பொறுத்து அலைந்த சரித்திரத்தைச்சொன்னேன், பஞ்சவலாக் காட்டிலோட்டிவிட்டு விரகண்டைதாங்கிய தன்பாதத்தில் சத்துருவெல்லாம் மித்துருவாய்ப் பணிந்து சப்பணங் கட்டிவாழ்ப், பொற்பணிமுடி பூண்டு, எப்புவனங்களுக்கும் ஏகசக்ராதிபதியாயிருந்து துரைத்தனஞ்செய்து வராநின்றபாபஇருதயம்படைத்த துரியோதனராஜன் அச்சமில்லாச்சேனைகளுடன் மச்சநாட்டைப்பகைத்து இச்சையின் படிக்குப் பசுமந்தைகளைக் கொள்ளையிடலாமென்று, கொச்சைபதியால் இலச்சைகெட்டுவந்த தெக்ஷணகிரைமீட்சி உத்தரகிரைமீட்சி யென்னும் மாடுபிடி சண்டையைச் சொல்லுகிறேன். கேளும். ஜெனமேஜெயமகாராஜனே! என்று வைசம்பாயனர் சொல்லிவருகிருர்.

தக்ஷணகிரைமீட்சிச்சருக்கம்.

விருத்தம்.

தொழுவார்தம்வினைதீர முற்சோலமாய்வேலை சூ
ழ்பாரெயிற், றுழுவானைநன்னும மொன்றுகிலுங்கற்றோ
ருருவோதினோர், வழுவாதசுராவர் நராகப்புள்ளாக
மாவாகபுன், புழுவாகவொன்றிப் பிறந்தாலுநரகிற்புகார்
காணுமே.......................................*

(இதனபொருள்)

பணியத்தக்க பக்தசனங்களின் தீவினை தீரும்படியாய் ஆதிவராகமாய்ப் பூமிதேவியாருக் காடையாகிய கடல்சூழ்ந்த உலகத்தை யுழுதருளிய பெருமானை அவனது அநேகமாயிரந்திருநாமங்களில் ஒன்றையினுங்கற்று ஒருதரமுருவேற்றினவர்கள் தவறுதலில்லாத தேவர்களாவார்கள். ஒருவேளை, நரர்களாகப் பட்சிகளாக மிருகங்களாக அற்பப்புழுக்களாகப்பொருந்திப்பிறக்கினும் நரகிற்புகுதமாட்டார்கள், ஆதலால், இத்தன்மையமைந்த நற்பதவியைக்கொடுக்கும் திருநாமச்செஞ் சுடரென்னும் ஸ்ரீகோபாலஸ்வாமியைச் சிந்தித்துப், பொற்பாதகமலங்களைப்பூசித்து, ஸ்ரீ வேதவியாசராகிய மெய்த்தவனை விசுவாசித்துமேல்நடந்த தக்ஷணகிரைமீட்சியின் சரிதையைச் சொல்லுகின்றேன். ஜெனமேஜெய மகாராஜனே! கேளுமென்று, வைசம்பாயனர் வகுத்தல் செய்தருளினர்.

மராடமன்னர்முதலிய யாவரும்வணங்கும் விராடபுரத்திற் கீசகர்களை வென்றபிற்பாடு, பாண்டவர்களும் பாஞ்சாலியும் அஞ்ஞாதவாசஞ்செய்து வருநாளையில்,கீசகர்நூற்றுநால்வரும் ஈடழிந்துநாடொழிந்து கேடுகண்டதைக்குறித்து,மச்சராஜன் பெருமூச்சுவிட்டுக், கிலேசமுற்று,இந்நாள்வரையிலும்இந்தராச்சியத்திற்கிடையூறுவாராமற்காத்துச், சேனாதிபதித்துவ விசாரணையுஞ்செய்து,எனக்குத்திகிலுந் தீங்குமில்லாமல், தனது சொந்தம்போற்பார்த்துவந்த என்மைத்துனனுமாண்டானே. ஆ! இனிநானெப்படிப் பகைவரைவெல்லுவேன்? இறைகேட்டதுப்புமூன்றமையுடையவேந்தற்குஇல்லையென்

றெனமாய்ச்சொல்லுவேன்? எங்குப் விரோதிகளாய்ப் படைகொண்டு சண்டைசெய்யவருவார்களே. அப்படிவருபவர்களுக்குப் பயிர்க்களைபறித்த பாவனையாயிற்றே. கோட்டையைபிடித்துக்கொள்கைபோலாயிற்றே. என்னிடத்தில் வைத்தமகிப்புமுதலியகௌரவமும் இனறோடு ஒழிந்ததே. நமது கீசகனுக்குச்சமானமான பலசாலியைச் சம்பாதித்துச் சேனாபதி யாக்கவேண்டுமே. தெய்வமேயென்று மனக்கவலையுற்றிருந்தான். அந்தச்சபையத்தில் பக்கத்திருந்தகங்கபட்டர் மச்சராஜன்மனதைத்தேற்றி, வாய் தெறாமல்மாற்றித் துஷ்ட கீசகர்களுடைய நஷ்டத்தைப்பற்றிக் கஷ்டப்படுகின்றீர் அந்நியராஜபயங்கரங்கொண் டச்சப்படுகிறீர். நீர்யாதொருவருக்கும் அஞ்சவேண்டாம் படுபாவியான கீசகன் பட்டதே உமதிட்டதெய்வாநுக்கிரகமென் றெண்ணிக்கொள்ளும். இனியுமக்கு நல்லகாலம் அந்தக்கீசகனின்னு யிருப்பானாகில் சத்தியவாக்கியமும் சகலபாக்கியமும் யோக்கிய கிலாக்கியமும் பாழாய்ப்போயவிடும் இதுவரையிலும்உம்மைப் பிடித்திருந்த ஏழரைநாட்டுச் சனிவிட்டுப்போயிற்று துஷ்டத் துரோகியையிழைத்துத் துன்பப்படாதீர். நமது மடைப்பள்ளி மல்லனைவிட வேறுசேனாபதியும் வேண்டுமோ? இனியுமக்குப் பகைவரென்பாருமில்லை. உம்மைப் பகைத்து வந்து பிழைப்பாருமில்லை. உமது சத்திய சவுச வாசார விரதம் உறறதுணையாயிருந்து, மேலானசம்பத்தை யுமக்குண்டாக்கிவைக்கும். நீர் சஞ்சலப்படவேண்டாம், சாந்தகுணனே! என்று தருமசொருபனுரைத்துச் சமாதானப்படுத்தியபோது, விராடராஜன் வேதியர்பெருமானுரைத்தபுத்தியைக்கேட்டு, மிகுமகிழ்சிட்சிகொண்டு மேன்மையோடிருந்தான், அந்நியமாதர்மேல்வைத்த ஆசாபாசத்தால் மோசம்போய்த், தம்பிமார்களுடன் கீசகன்பட்டானென்று தேசாதேசமெல்லாம் பேசிக்கொண்டார்கள்.

இது இப்படியிருக்க, நிலைபெற்ற விருபுறத்திலும் அலையெறிந்தொதுங்கிய பொற்சன்னங்களும் நவமணிக்குப்பைகளும் இராசிராசியாய்ப்புரண்டு பிரகாசித்திருக்கின்ற கங்கைவளமோங்கிய குருநாட்டுக் கதிபதியான துரியோதனராஜன் அஸ்தினபுரத்தை யாண்டிருக்குங்காலத்தில் ஒருநாள் வஞ்சச்சூதினால் தோற்றுப்போன குந்திதேவியின்பிள்ளைகள் இன்னும் வனவாசஞ்செய்யவேண்டியிருக்குமா? அல்லது, அஞ்ஞாதவாசம் பண்ணப்போயிருப்பார்களா? அவர்கள்நாட்டைவிட்டுக்காட்டுக்குப்போனநாளைக் கணக்கிட்டுப்பாருங்கள். சம்பிரதிகளேயென்றான். அவ்வாண்மனைக்கணக்கரில்பெரியராயசக்காரனெழுந்துவணங்கி, இராஜாதிராஜபரமேஸ்வரராஜமார்த்தாண்ட ராஜவுத்தண்ட ராஜகெம்பீரராஜப்பிரபுடக ராஜதுரந்தர ராஜராஜேஸ்வர வணங்காமுடிபொறுத்த துரியோதனமகாராஜனே! பாக்கு ஆண்டவறுத்தாரப்படிக்குப் பாண்டவர்கள் வனவாசங்கழித்து அஞ்ஞாதவாசமுக்கால்வாசியுந் தொலைத்து விட்டார்க ளென்றான் அந்தமொழியைக் கேட்டஅரவகேதனன் சிந்தைவருந்தி அவசரப்பட்டு, அருகில்நிறைந்திருந்தசாரணர்களையழைத்து, அடாதூதரே! பாண்டவருறைந்திருக்கும்பதியையும்அவர்கள்கொண்ட மாறுவேடத்தையுங் கண்டறிந்துநமக்குவெளிப்படுத்துவீர்களாகில், உங்களுக்குக்கோடி திரவியமும்- குதிரை- யானை- தேர்- குடை- கொடி- பட்டுப்பட்டாவளி ரத்னாபரணம் - சிவிகை- அருகுதீவட்டி- ஜெயபேரி - பாங்காவாத்தியம் - கிராமம் - பூமி முதலாகிய வெகுமதிகளுங் கொடுப்பேன். நான்குதிக்கும் நன்றாய்த் தேடிப்பார்த்து, வாருங்களென்று, சந்தனதாம்பூலங் கொடுத்துவிடுத்தான், அரசன் சொல்லாசையைநம்பி அநேகதூதர் புறப்பட்டுச் சபைமெச்சும்படி வெகுமதி பெறவேண்டுமென்னுஞ் சந்தோஷத்தால், வானளாவிய மதில்வளைந்தகோட்டைகளும் மாடமாளிகை கூடகோபுரமுள்ள பட்டினங்களும் சீறார்க்கிராமங்களும் அக்கிராரங்களும் தருவங்களும்- நதி குளம்- வரி- தடாகம்- ஓடை - கயம் - கால்வாய்களும்- வாழை - கமுகு- கரும்பு- தெங்கு- வருக்கை மாமுதலிய வளப்பமும்பெற்ற நாடுகளும் மேன்மைபொருந்திய வீடுகளும் வண்டோலஞ்செய்யும் பூங்காடுகளும் விண்டலமுயர்ந்த பர்வதங்களும் சுரபுன்னைதாழை கரும்பனையடர்ந்த மணல்மேடுள்ள கழிக்கரையும்வழிக்கரையுந் தேடிப் பாண்டவர்களின் காலடிச்சுவடுண்டோவென்று நாடி, நாலுதிக்கும் பிரிந்தவர்கள்கூடி, வேசாறிவாடி, நாமெல்லோரும் அதிஷ்டமற்றவர்களென்று தங்களைத்தாங்களே நொந்துகொண்டு, அஸ்தினபுரத்திற்குவந்து சூரியபுத்திரனாகிய கர்னன்- சௌபலராஜகுமாரனாகிய சகுனி- பாரத்துவாச தநயன் துரோணாச்சாரி சிவன்காதலன் அஸ்வத்தாமன் சாத்துவந்தமகாரிஷி சந்ததி கிருபாச்சாரி சந்தனுநந்தனன் வீஷ்டுமர் பச்சை முதலியாத்ஞுபரணமும் வெட்சிமாலையும்புனைந்த திரிகர்த்தன் வியாசன் வழித்தோன்றல் விதுரன்- திரிதராஷ்டிரன்! இன்னுமுள்ள பலதேசராஜரும் மந்திரிசாமந்தரும் தந்திரி சாருவருஞ் சூழ்ந்திருக்கச், சந்திரனைவிட்டகலாத தாராகணம்போல் தம்பிமார் மொய்த்திருக்க, முடிமன்னர் முறைமையுட னிணங்கிக் கப்பணஞ்செலுத்திக்கால்மேல்வணங்கிக், கட்டியர்கூறப், பட்டுவர்புகழத் துஷ்டர்கள்தாழக், கவிவாணர்துதிக்க, இசைவாணரிசைக்க

ச, மறையவர் ஆசிர்வதிக்கப் பரதநாட்டியப் பாவையராடச், சாரஜிகூட, வெண்சாமரைபோட, வீரர்களெதிரோட, வெண்பட்டுக்குடைநிழற்றச், செம்பத்மராகத்தாலமைத்த வீரசிங்காசனத்தின்மீது மத்தியான சூரியன் போல், வேந்தனுன சுயோதனராஜன் வீற்றிருந்தான்.

வினைப்பயனுக்கேற்ச, விதியை துற்சனர்களது மதியின்வண்ணம் சதிசெய்ய வெண்ணித் தனக்குக் கதியாக்கிக்கொண்ட வேந்தனிருந்த கொலுமுகத்தில் பாண்டவர்களைத்தேடி மீளாத்துவந்த தூதர்போய்நின்று, தீர்க்கதெண்டனிட்டு நந்தியாவட்டமாலை புனைந்த காதனே! கொன்றைமாலை பணிந்த பாபநிவனுக்கு வலதுகண்ணுகிய சூரியகிரணங்கள் பாயுமிடத்திலும் அந்தச்சருவேஸ்வரனுக்கு இடதுகண்ணுகிய சந்திரப்பிரகாசம் பாவுமிடங்களிலும் அவ்வாதிபாண்டரங்க னெற்றிக்கண்ணுகிய அக்கினிதேவன் பொருந்துமிடங்களிலும் காலகண்டன் காலருள்கண்ட காலனுடைய கருப்பாசஞ் செல்லுமிடங்களிலும் புகுந்துசோர்வில்லாம லாராய்ந்துபார்த்தோம். எங்கும் பண்டவரைக் காணுமல் பங்கப்பட்டிங்குவந்தோம். பார்த்திபனே? தங்கள் சமுகத்தில் நாங்களுண்மையாய்ச் சொல்லுகின்றோம் ஆண்டவனருளால் பாண்டவர் மாண்டேபோனார்கள். சந்தேகமில்லை. தேவரீரிடத்தில் தவணைவைத்துக்கொண்டுபோன நாள்முதல் இதுவரையிலுந் தேடித்தேடி விருதாவாய்க் காலம்போக்குவதில் பிரயோசனமில்லை, சீக்கிரஞ்சென்று மன்னர்பெருமானுக்கு மூன்னுடிச் சொல்லிவிட்டால், இன்னும் வேண்டியவுபாயந் தேடிக்கொள்வாரென்று எண்ணிவந்து விட்டோம். தேவரீர் கட்டளையின்படி நடக்கின்றோமென்று, நமஸ்கரித்து, வாய்புதைத்துக், கைகட்டிப், புத்திபுத்தியென்று விண்ணப்பம்பண்ணினர்கள்

சொல்லுதற்கரிய- முல்லைபசோகு நீலோற்பலம் மாம்பூ - முளரி என்னும் ஐந்துமலர்க்கணையும் கருப்புவில்லையுமுடைய மன்மதனையொத்த வடிவமைந்த துரியோதனராஜன், சாரணருரைத்த லோபமொழியைக்கேட்டுக்காதிரண்டுங்கும்மென்றடையக்கதறி, உடல்பதறி இருகரத்தையுமுதறித், தன்னருகிருந்த சாதுக்கள் முகத்தைநோக்கி,ஐயா! பெரியோரே! இந்தத்தூதர்கள் அலைநிழுமுதுந்தேடி யலைந்துவந்து உரைத்ததைக் கேட்டீர்களே. இனிநான் செய்யவேண்டிய காரியமின்னதென்றியம்புங்கள். பாண்டுமக்களைவரும் பஞ்சாலனைதயலும் துவாதசவருடம் வனவாசம்பண்ணித், தேசமீனைத்துக் களைத்து ஆவியழிந்து போனார்களோ? அல்லது, அஞ்ஞான விருளைப்போக்கிச் சுஞ்ஞானச்சுடரெரிக்கச்செய்புந்தவமுனிவர்களினுல்மண்ணுசை-பெண்ணுசைபொன்னுசையும்விட்டுமனோதிடம்பெற்று விஞ்ஞானவிளக்கத்தால், வேதாந்தியானுர்களோ! ஒருவேளை, யாருமறியாமலஞ்ஞாதவாசங்கழித்து, முடிவில்லிவ்விடம்வந்துமுளைப்பார்களோ? தெரியவில்லை. உங்களுங்களுள்ளத்தில் செவ்வையாகநிதானித்துயோசித்துச் சொல்லுங்களென்று கள்ளமனத்தோனுன காந்தாரிபுதல்வன் கேட்கச் சூரியன்புத்திரனுகிய கர்னன் சொல்லலுற்றுன்.

அரவக்கொடி நிலவிய கௌரவகுலமுதல்வனே! என்சொல்லுறுதியைக்கேளும். பாண்டவரைவரும் வனவாசம்பண்ணிப், பன்னிரண்டு வருடத்தையுங்கழித்துக் கொடுவிட்டகன்று, நாடுபற்றிச்சென்று, கூடுவிட்டுக்கூடுபாய்வதுபோல், மாறுவேடம்பூண்டு, பெயர்வேறுகொண்டு, குலம்வேறுகாட்டிக், குணம்வேறுகாட்டி, நீதிநெறி பிசகாமல், ஆசாரம்வழுவாமல், பழமைச்செல்வம்பாராட்டாமல், அடங்கி, ஆயுதங்களை மறைத்துவைத்துக் காலத்துக்குத்தக்க கோலமாக ஒவ்வொருவேலையிலிருந்து, அஞ்ஞாதவாச வருடமுந் தொலைத்து, அப்பால்வெளிப்பட்டு ஆபரணமணிமாலைகள் பிரகாசிக்குமார்பினையுடையவராய், ஆயுதபாணிகளாய், இறுமாந்திவ்விடம் வந்து, நாங்கள் முன்னஞ் சூதாடித்தோற்ற நாடுகொடுப்பையா? அல்லது, போர்தொடுப்பையா! என்று நம்மைக் கேட்பார்கள் அவர்களுயிருடன் வருவார்களென்பதற்குச் சந்தேகமில்லை. வேறுசுகினைக்கவேண்டாம். இலங்கியவலம்புரி மாலையைப்பார்த்து அரிவையராசைகொண்டருளும் அலங்காரமார்பனே? என்று வீரப்பிரதாபந் தெரிந்த மேலோனும் மந்திரசக்தி வரோதயனுமாகிய அங்கதேசாதிபன் அறைந்தான்.

இவ்வாறிசைத்த கர்னன்கருத்தைத் துச்சாதனன் கேட்டுத், துடித்து, மனங்கொதித்தெழுந்து, கன்னனுங் கருத்துங் காதும்புகையக்கனன்று, அண்ணனடிமலரிற்பணிந்து, மலையிரண்டுதிரண்டதோளாகிய வள்ளலேவமையாகிய வென்சொல்லையு மிரங்கிக்கேட்டருளும். பாண்டவர்கள் நாட்டைவிடுத்துக் காட்டையடுத்தபோதே செத்தபிணத்தோடொத்தபிணமானர்கள். மனுஷத்தன்மையுள்ளமானிகள் இந்நாள்வரையிலும் உயிரோடிருந்து இனியிவ்விடம் வரப்போகிறார்களென்றெண்ணுகின்றீர்களா? ஐயோ,பாவம் அவர்களப்போதேகெட்டு மண்ணில்மக்கிவிட்டார்கள். அவர்களைப்புதைத்த விடமும் புல்முளைத்தாயிற்று.ஐவர்கள்பேரு மறைந்துபோயிற்று அக்காரியங்களை நிதானிக்காமல் கர்னராஜன் இப்ப

ய்டு

டிசொன்னது தப்படியல்லவோ? இதன்றியும் அவருமிருடனிருந்தால், பாதாளபேதவஞ்சனம்போன்ற கஷ்டமடையாதர்களின் கண்ணிலகப்படாமற்போவார்களா? இதுவே நமக்குப்போதுமான சாட்சியாயிருக்க, வேறு வேறெண்ணி விரிக்கவேண்டிய தென்ன? தேவரீர்கட்டளையிட்டருளுவீராகில், காட்டிற்கஷ்டப்பட்டுக் காலங்கழித்த ஐவர்கள் தாறுமாறு யிறந்ததற்கு க்காரணஞ் சொல்லுகிறேன். காவலர்க்கிறைவே? கவனித்தருளும்.

வாரேறியமலைமுலையும்வாடியவல்லிக்கொடியிடையும் வாழைத்தொடையும் அன்னநடையும்வர்ணவுடையுமுடைய மங்கைமார்க்கெல்லாங் கடைப்பட்ட அந்தஸ்தினால் வறுமையுடைய பாஞ்சாலியானவள் மர்மம்விட்டுத் தர்மராஜனை நோக்கி ஐயோபாவியே அன்னமில்லாமல் நானழுகின்றேனே, ஆவியொழிகின்றேனே, ஏழையெளியவர்க்குப்பெண்சாதியானவர்கள் எவ்வளவோசெல்வங்களை யின்பமாயநுபவிக்கிறார்களே கோழையாகிய உங்களுக்குப் பெண்டாகிநான் ஏழையாகிக்குங்கித்தவித்தும், கண்டார்சிரிக்கக்கலங்குகின்றேனே முகத்திற்கு மஞ்சளுண்டா? நெற்றிக்குக்குங்குமமுண்டா, கூந்தலுக்குமாலைகளுண்டா? குட்சிக்குக்கஞ்சியுண்டா? அஞ்சலென்பவருண்டா? ஆதரிப்பவருண்டா? ஒஞ்சரித்துப்படுக்க வோலைப்பாயுண்டா? குந்தியிருக்கக் குடிசையுண்டா! வெளுத்தவாய்க்கு வெள்ளிலையுண்டா ஆகா, தெய்வமே! சாண்பிள்ளையானாலும் ஆண்பிள்ளைமேலென்பார்கள், நீங்கள் வேலும்-வில்லும்-வாளும்-பூரித்ததோளுமுடையவர்களாய், இருந்தென்பலன் பெற்றீர்கள், எனக்கென்ன நலம்வைத்தீர்கள், நீங்களைவரும் ஆண்பிள்ளைகளிற்சேர்க்கைதானே,உங்களைப்போன்றவர்களைப் பார்க்கும்போது வெட்கமில்லையா? என்றுநாள்தோறும்சலித்துக்கொண்டு பேசி, வினைவெறுத்து, அவமதித்தெதிமுகங்கடுத்துத், தினமுஞ்சண்டைதொடுத்தாள். அதனால், தர்மராஜன் குக்கல்வாய்ப்பட்ட மூசல்போல், மனங்கூசிவருத்தமுற்ற நாளையில்,தம்பிமார்நால்வரும் தமையனையடைந்துவடவக்கனல்போற்கொதித்துக்கோபித்து, அடாதுரோகி, உன்னுடன்பிறந்து என்னபலங்கண்டோம், பெண்சாதிபிள்ளைகளைவிட்டோம். நாடுநகரங்களைச் சூதாலிழந்துகெட்டோம். சகோதரர்களாகிய துரியோதனனதியரைப்பிரிந்தோம், உண்டுதின்று உறங்கும் பருவத்தில் உண்ணாமல் தின்னாமல் ஓட்டாண்டியானோம். ஒருவருக்கொருகாசுகொடுக்கக் கதியற்றோம். யுத்தமுனையில் வெற்றி பெறுதற்கும் வகையற்றோம்இனியுன்னிடத்திற்பொருந்தியிருப்பதுதர்மமா எங்களையிப்படிக்குவளிதஞ்செய்வது தர்மமா, பாண்டுவுக்குப்புத்திரராகப்பிறந்த கர்மமா உனக்கூழியஞ்செய்ய எங்களையடிக்கிவைத்துக்கொண்டாய். வேப்பம்வித்துக் கொப்பானவனே என்று மரியாதைதப்பியெதிர்த்துக் கொண்டார்கள்தன்னோடொருநாளுமாறுபட்டுப்பேசாத தம்பிமார்கள்வாயில்வந்தபடிபேசிய வருத்தத்தினாலும் துரோபதிபடுத்துந்தொந்தரையினாலும் தனக்குள்ளிருக்கும் சில அசந்தர்ப்பங்களினாலும் அகாலபோசனத்தினாலும் காட்டுத்தீ வெப்பத்தினாலும், மலைக்காளினாலும் பனியினாலும் தன்னைப்பிடித்தசனியினாலும் சடாவைராசர்கள் பழித்துச் சின்னத்தனஞ்செய்வதினாலும்பாமழும்பழிபேசிவிட்டதனாலும் நம்மிடத்தில்வந்துமுகத்தில் விழிக்கப் பலிவில்லாதத்தினாலும் தன்னோற் கூடியவனையிழந்தாழ்ந்து குழைந்து விசனக்கினியால்வெந்து சஞ்சலத்துடன்சயித்து உயிர்விட்டான்.

பிரியாமலிருந்ததருமராஜனுயிர்பிரிந்தபோது,தம்பிமாருந்துரோபதியுந் தழுவியழுது அந்தோ பழுதுவந்ததேயென்று பரதவித்து, அண்ணனைப் பறிகொடுத்து மண்ணிலிருந்தென்ன வாரிக்கொள்ளப் போகிறோம் என்றரைக்கிருந்தாலும், நமக்குமிதுவேகெதியெனத்தேறியிறந்துபோனார்கள். அவ்விடமிருந்தகழுகு பருந்து-காக்கைமுதலிய பட்சிகளும் மிருகங்களும்வயிறாறத்தின்றுக்கிழித்து விட்டவெலும்புகள்மண்ணில் மக்கிமறைந்து போயின. அவர்களைக்குறித் தின்னும்பேசுவதுவீண், எனக்கநேகவிதங்களினால்திஷ்டாந்தமாயிற்று அண்ணா,நான்திண்ணமாய்ச்சொல்லுகிறேன் கருமானுலையில் காய்ச்சித்துவைத்த இரும்பிலேறிய சலமானது திரும்பிவந்தாலும்வரும், காடேறியபாண்டவர்கள் இனிநாடேறப் போகிறதில்லை என்சொல்லுக்கு எதிரொவர்பேசினாலும் அதுஈடேறப்போகிறது மில்லையென்றுரைத்தான். அந்தித்துச்சாதனன்சொல்லைத் தேவர்கள்விரும்புந்திவ்யசக்தியான இச்சாசுதந்தரராகிய துரோணாசாரியர் கேட்டுப், பச்சாதாபப்பட்டுப்,புன்னகைவிளைத்துப், பாண்டவர்பக்ஷத்தில்வைத்தபக்ஷமும்பண்பும் அன்பும்யாவருக்கும் பரிஷ்காரமாய்த்தெரிம்படிக்குச் சொல்லத்துணிந்தனர்.

ஓ ராஜாதிராஜனான சுயோதனமகாராஜனே! கேளும் உம்முடையதம்பியாகிய துச்சாதனராஜன் கூறாதஇரமாகச்சொன்ன ஆத்திரவார்த்தையையோசித்துப்பாரும். பாண்டவர்களை இலேசாகநினைக்கவேண்டாம்.சிறுபிள்ளையுத்தசித்ரூடைபோற் பேசாதேயுங்கள்.முன்பின்னெண்ணிப்பாராமல், முழுமோசம் போகாதேயுங்கள் முறைதப்பான ஆலோசனைபண்ணாதேயுங்கள்பாண்டவ

ரங்களெத்தன்மையரென்றால்,வேதமுறைவழுவாதவித்தக
ர்கள். விண்ணவர்கொண்டாடு மேன்மை பெற்றவர்கள்.
யாவருடைய ஈவுக்குமினிமையானவர்கள்எத்தலத்தவர்
க்குமுதன்மையானவர்கள். மூவாசையற்றமுனிவராலுங
காணுதற்கருமையான கண்ணுதலாற்பெற்றபாசுபதமு
தலியபாணவலிமையுடையவர்கள். மிகுந்த சுகந்தகற்பக
மாலைபுனைந்தவர்கள்.விற்பனவிவேகமுயர்ந்தவர்கள் எங்
கும் விளங்கும்இளஞ்சூரியன்போல்சரீரதேஜசுடையவர்
கள். மந்திரஞானியர், எப்புவனமுமதிக்கும் ஒப்புவமை
யில்லாதவர். மருதமரத்தையுதைத்திரட்சித்துக்குருந்த
மரத்திற் குதித்துவிளையாடிய பன்னகாசயனனாகிய திரு
மாலைப்பாண்டவர் சகாயனென்று யாவருஞ்சொல்லும்
பதம்பெற்று இறுமாந்திருக்கும் பார்த்திபர். காலகேய
நிவாத கவசர்களுடைய உரத்தையும்- வரத்தையும்- சிர
த்தையும்-புரத்தையும் போக்கித்தேவர்களிடரை நீக்கித்
தேவேந்திரனுக் காதிக்கமுண்டாக்கி வைத்து அழியாக்
கீர்த்தியைப்படைத்தோர். கடலிலுமுயர்ந்த கண்ணரு
ளுடையோர். அமுதினுமினிய அன்புடையோர். சற்று
ம் பிசகாச்சத்திய சம்பன்னர். வித்தகமுறு நாலே மேம்ப
டுமன்னர். இத்தன்மையராகிய அந்த வுத்தமவேந்தரை
ச்செத்தன ரென்பதுதகுமோ? அத்தினபுரியில் உத்தமர்
கூடிய சபையிற்கூறிய உறுதிச்சபத முடிக்காமற்போ
வாரோ? மத்திமர்கூடி வசைபேசும்படியாய்ச் சாவா
ரோ? பாண்டவரை மாண்டவரென்றுமனப்பால் குடியா
தேயுங்கள். பகைவருக்கு ஆண்டவரென்று யோசிக்கவே
ண்டியது. தங்களுண்மையை நிலைநிறுத்தும்படி தவணை
நாட்கழித்து இன்னுஞ் சிலநாளையி லிவ்விடம்வந்து சே
ரப்போகிறார்கள் நாமெல்லோருங் கண்ணாற் காணப்
போகிறோம். தேனுறங்கு மாலைதாங்கும் பூமானே! நா
ன்சொல்லியதைச் செவ்வையாய்த்தெரிந் துட்கொள்ளு
மென்று துரோணாச் சாரியர்சொன்னார்.

இப்பால், வில்லின்மறை வல்லவராகிய கிருபாச்சா
ரியர் சொல்லத்தொடங்கினார். நல்லவிவேக சுகபோகமு
ற்ற விராஜனே! சத்தியம்விட்ட அசத்தியர்களுக்கு பிர
த்திவு கிட்டிவருமேயன்றிச் சத்தியந்தொட்ட உத்தமர்
கட்கு உரியகாரியநிறைவேறுமுன் பிரத்திவு எட்டிப்பா
ராது; ஆதலால், உண்மையுள்ள பாண்டவர்கள் மரண
மானார்களென்று அகாலமரணத்திற்கு இடமானவர்க
ளே சொல்வார்கள். புத்திமான்கள் அவைகளை யொரு
போதும் ஒப்புக்கொள்ளார்கள். விம்முதலுடன்சென்ற
வேந்தர்கள் ஐவரும்நம்மிடத்திலொப்புக்கொண்ட ஈரா
றாண்டுமெளிதிற்கழித்து; அஞ்ஞாதவாசங்குறித்து, அவ
ரவருருவமறைத்து, எந்தநகரத்திலாவதடுத்து, எடுத்த
காரிய முடிப்பதற்குங் கொடுத்தவேலை நடத்துவதற்குங்
காலங்கருதிக் காத்திருப்பார்கள். அவர்களைக்கண்டு பி
டிப்பவர்களு முண்டோ? மண்டலதுரந்தர மதிகுலத்த
வனே! அவர்கள் மகாசூரர்கள். தநுமறைமுதலிய சாஸ்
திரமறிந்தவீரர்கள் சாதுசங்கப் பழக்கமுற்ற தீரர்கள்.
தனகனக வஸ்துவாகன தர்மவிசாரணையிற் குபேரன்
போன்றவர்கள். தவம்பெற்றவர்கள்.மதிமந்திரிகள். ஒரு
மையும் பெருமையு முறவாய்க் கலந்தவர். இவ்வைவர்க
ளில் தருமநந்தனர் சதாநிஷ்டை கூடினவர். அவாவறுத்
தலும் பொறுமையும் - அழுக்காறின்மையும் நற்குணச்
செய்கையும் - புறங்கூறாமையு முடையவர். தம்பிமாரி
டத்தி லன்புதவறாமல், அவர்களிட்டப்படி மாறுபடாம
ல்நடந்து காலத்துக்குத்தகுந்த புத்தியுத்திகளை யெடுத்
துரைத்து, அவர்களைத்தன் வசப்படுத்திக்கொண் டிரு
க்கத்தக்கவர். அந்தத்தம்பிமார்களோ தமையன்சொல்
லுக் கிரண்டில்லாமலிருந்து; அவராற்கேறிய கோட்டை
க்கடவாமல்நடந்து, தமையனைத் தந்தையாகவுட்கொண்
டு நிந்தைதேடா திருப்பவர்கள். ஆதலால், அவர்களுக்
கொருபோதும் பொல்லாங்கு நேரிடாது அப்பேர்ப்பட்
ட அறிவாளிகள் மனவெறுப்பினால், ஜேஷ்டனைத் தாறு
மாறாய்ப்பேசி அவருமிறக்கத்தாங்களும் இறந்தார்களெ
ன்பது மாச்சரியமன்றி, ஆச்சரியமல்ல, அந்தநினைப்பை
முற்றும்மறந்து, எப்படியு மிவ்விடம் வருவார்களென
னும் எண்ணம்வைத்து, அவர்கள் வந்துவிட்டால், அதற்
கு என்செய்வோமென்று அச்சத்தோடிருக்க வேண்டும்.

அர்ச்சுனனேவென்றால், அசகாயசூரன், அதிரதவீ
ரன். மூன்றுலகையும் வெல்லுந்திறன், சுந்தரத்திற்சொ
ருசுடையமாரன், தேவதாஸ்திரந் தெரிந்தகௌமாரன்.
வீமனெப்பேர்ப்பட்டவ னென்னில், ஊழிக்காலத்து ய
மன்போல, யுத்தம்பண்ணத்தக்க சண்டப்பிரசண்ட த
ண்டதரன். சாந்தகுணதர்மராஜன் சண்டைசெய்யவந்
தால், திரிபுவனமுந் திக்கென்றெரிந்துபோம். வடவாமு
காக்கினியும் வாடிச் சாம்பலாய்ப் போய்விடும், அவரு
டைய மகிமையை யாருமறியார்கள். அறியத்தொடங்கி
னால், அளவிறந்திருக்கும் அரவக்கொடியோனாகிய அரச
னே! இளையவரிருவர் எத்தன்மையரென்னில், ராமபா
ணத்திலுங் கொடிய அம்பினையுடையவர்கள். பரதன்
போலும் இலக்குமணன்போலும் விரதங்காப்பவர்கள்,
பாஞ்சாலியோ, பதிவிரதைகளிற் பதிவிரதையானவள்,
சொல்லைக் கடந்து சொற்புகலாதவள். பல்லைத்திறந்து ந
கைக்கவி யாதவள். இல்லையெனவுரைத்தல் என்றுமில்லா

தவள். வல்லவர்தம்பால் மாறுகொள்ளாதவள். குடிப்பிறப்புடையவள். ஆற்றலிலாதவள். கற்குண நற்செய்கை வாய்ந்தவள், இப்பேர்ப்பட்ட எழிலுடைமாதுள். இவள் தருமராஜனுடன் சண்டைபோடலாகுமென்பது தவறிலுந் தவறு, இவர்கள் முக்கியமாய் அக்கியாதவாசந் தொலைத்து இவ்விடம் வருவார்கள். உங்களெண்ணத்தைப்பார்த்தால், அனர்த்தம் விளையுமென்பதற்கு ஐயமில்லை. அவர்கள் வெளிப்படுவதற்குமுன் எவ்வகையிலாவது கண்டுபிடித்துச் சபையிற்பேசியிருக்கிறபடிக்கு மறுபடியும் வனவாசம்போகச் செய்வோமாகில், நாம் சுகப்படலாம். அப்படிசெய்யாவிடில், அர்ச்சுனன்கணை அதிக்கிரமித்துவந்து நம்மைக் கொண்டுபோய் யமனுலகத்தில் சேர்க்கும்.

இதன்றியும், வேதியருக்கு வேதமேகண்கள். க்ஷத்திரியஜாதியருக்குத் தூதரோகண்கள். ஆகையால், நீங்கள் சாரணரைவிடுத்து முன்ஜாக்கிரதைப் படவேண்டியது. நமதுயுத்திக்கு மேலான புத்தியையுடைய பாண்டவர்கள் ஆண்டவனருளைப் பெற்றவர்கள். எவர் கண்ணுக்கும் அகப்படார்கள். பகலளவுபோனாலொழிய இரவுவாராது இரவளவுசென்றாலல்லது பகல்தோன்றாது. அதுபோல், உருவமறைக்குமறையும் பாண்டவர்கள் அஞ்ஞாதவாசங்கழித்து வெளிப்படுவார்கள். நமது பலாபலத்தை நாமெண்ணி மெச்சும்போது எதிரிகளின் பலாபலத்தையு மெண்ணித் துணியவேண்டியது, இப்படிக்கெல்லாம் யோசித்து, ஒன்றைச்செய்தால், என்றென்றைக்கும் பழுதுபடாது. அதைவிட்டுத், தூராலோசனைசெய்வதினால் பிரயோசனமென்ன? என்று மதிமிகுயர்ந்த கிருபாச் சாரியர் வகுத்தார்.

இந்தப்பிரகாரம் துரோணாச்சாரியருங்கிருபாச்சாரியரும் பேசியவிபரங்களைச் சபைநிறைந்த சகலருங்கேட்டுப், பெரியோர்களின் கருத்தைத்தங்கள்தங்கள் புத்திக்கிசைந்தபடியோசித்து,முடியப்போகிறகாரணகாரியங்களையும்நிதானித்துவாய்மூடி மௌனம்போலிருந்தார்கள்

அந்தவேளையில், கௌரவகுலப் பிதாமகனாகிய வீஷ்மர் துரியோதனனைப்பார்த்து அப்பா! திரிதராஷ்டிரனுக்குச் சுபுத்திரனும் எனக்குப்பௌத்திரனுமான சுகோத்திரனே! நீ தூதர்களையனுப்பிப் பாண்டவரைத் தேடச்சொன்னது ஞாயமே. அவர்கள் தேசமெங்குந் தேடிப்பார்த்துத் திரும்பிவந்துரைத்தது அபாயமே. அதற்காகக் கர்னராஜன் பேசியது நேயமே. உன்தம்பி துச்சாதனன் கிளைத்ததுனக் கடியாயமே. துரோணாச்சாரியருங் கிருபாச்சாரியரு மொழிந்ததுகாயமே. நீ யந்தப்பாண்டவர்களை யெப்படியுங் கைப்பிடியாய்ப் பிடிக்கவேண்டுமென் றெண்ணுவதுபாயமே. இதனாற் காரியமில்லை. பாண்டவர்கள் பன்னிரண்டுவருஷம் வனவாசஞ்செய்து, அஞ்ஞாதவாசமோ ராண்டு தொலைப்பதற்குள்ளி, ரூபமறைந்து ஒருதேசத்திலுறைந்து, முக்காலே மூனுமாமுக்காணி வருஷமுங் கழித்துவிட்டார்கள். இப்போது நீங்கள் ஐவர்களைக்கண்டு பிடிக்குமுன் மற்றுமுள்ள மாகாணிவருஷத்தையு மொழித்துவிட்டு வெளிப்படுவார்கள். அப்பேர்ப்பட்ட அறிவுடையோர்களை மரணமடைந்தாரென்று பேசினவர்கள் அந்தப்பாண்டவர்களால் மரணமடையத் தக்கவர்களே. அத்தன்மையான அவசரப்பேர்களைத்தன்மையோனொடுத்திசைத்தாலும், புத்திமானாகிய நீயெவ்வளவும் நம்பப்படாது. ஆனால்அவரிருக்குமிடத்தை நீங்களறியவேண்டுமென்னும் முக்கியமுளதாகில், முந்நூலாசிரியர்களால் அதற்கோ ரூபாயமுண்டாயிருக்கின்றது. அந்தக் குறிப்பின்வழியைநான் குறிக்கிறேன். நீங்கள் நிதானித்துக் கொள்ளுங்களென்று காங்கேயர் சொல்லத்தொடங்கினார்.

முனீஸ்வரர்களாலும் ரிஷீஸ்வரர்களாலும் மதிக்கப்படாத தருமராஜனும் துரோபதாதேவியும் சகோதரர்களும் பொருந்திவாழ்கின்ற நாடும் நகரமும்- மாதமும்மாரி வருஷிக்க வளங்கொண்டிருக்கும். காடுகரம்புள்ள மலைகளெல்லாம் தேன்வாரிசுரிந்து கொண்டிருக்கும். ஆறுகுளத்தினலைகள்யாவும் ரத்னங்களைக்கொழித்துக் கொண்டிருக்கும், கழனிகளிலார்ந்து தவழாநின்ற இப்பிகள் முத்துக்களை முறைமுறையே ஈன்றுகொண்டிருக்கும், கருங்கடற்கரைகளில் சிவந்தபவளக்கொடிகள் படர்ந்திருக்கும். காடுகள்தோறுந் தேடற்கரிய பொருள்வளம் நிறைந்திருக்கும். பசுவினங்கள் வேளைக்குப் பத்துப்படி பால்கறக்கும், வெகுசனங்கள் நடக்கும் வழிகளெங்குங் கரும்பாலைசிறக்கும் எப்போது முப்போகந் தப்பாமல் விளையும் நித்தியசுபமங்களமாயிருக்கும், அருந்ததியைப்போல் பதிவிரதையான ஸ்திரீகள் பொருந்தியிருப்பார்கள். சாரபயம்வாராது. சோரபயமிராது. தெருக்கடோறுந் தருமக்கொடி நாட்டியிருக்கும். போர்முகத்தில் வெற்றிகொள்ளும் ஜெயக்கொடி காட்டியிருக்கும். வண்டினம் மதுவுண்டு மகரந்தந்தோய்ந்து காந்தாரம்பாடும். அங்கெப்பதியோர் அண்டினபேரையாதரித்துக், கீர்த்திப்பிரதாபம்பெற்று ஜீவகாருண்யராயிருப்பார்கள், துற்சொப்பனம்- துற்பயங்கரம்- துற்மரணம்- துர்வியாதி - முதலிய தேகபீடைவாராதுகள், யோகமார்க்க நெறிதேடித் தீவினையொழிந் திருப்பார்கள்,

பொதுச்சாலையிற்கட்டிய ஆராய்ச் சிமணியென்று மசையாது, அசையும்படியான அக்கிரமங்களுமிராது, எளியவனென்றும் வலியவனென்றும் பாராமல், யாவர்க்கும் நடுநிலைமையான நீதியொன்றேயிருக்கும், எவர்க்குமறிவு குறைபாது, சகல கல்க்கியானங்களுந்தவறாது, உடனுக்குடனே துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனம் நடந்தேறிவரும், ஆசாரபூசாவிதிக ளதிகமாயிருக்கும், தேவாலயம் விஷ்ணுவாலய மிகுதியாய்ச் சிறப்புற்றிருக்கும், பாபத்திற்குங் கோபத்திற்கும் பயந்தடங்கி வாழ்வார்கள். புண்ணியத்திற்கும் பொறுமைக்கும் பொக்கிஷமாயிருப்பார்கள். தைரியம்- கல்வி- ஞானம்- குணம்- பெருமை- மேன்மை- தபம்- செபம்- தானம்- நிதானம்- வெகுமானம்- சன்மானம்- வேதமந்திர வேள்வியும்- ஓமமும் பூரணக்கும்ப புண்ணியாபோசனமும் நவமணிமாளிகைகளாகும் எங்குஞ்சிறந்திருக்கும் சுபமங்கள கல்யாணமுரசும் தியாகமுரசும் வெற்றிமுரசும் எங்கெங்கும் வலம்புரிச்சங்கங்களுமுழங்கிக்கொண்டிருக்கும், காயாமரங் காய்க்கும். பூவாமரம் பூக்கும், கமலக்கருணைக் கண்ணனும் மகாலட்சுமியுடன் வாசமாயிருப்பார். இத்தன்மையாகிய உத்தமநகரமெதுவோ? அதுதான் புண்ணியபுருஷர்களிருக்கும் பதியென்றுணர்ந்துகொள்ளு இவை பெரியோர்கள் பேசியவண்ணம் நானுமுண்மையாய்ச் சொன்னேன். இனிமேலுன்னுடைய வல்லமையினால் யோசித்து உறுதிசெய்துகொள்ள வேண்டியதென்று வீஷ்டுமர் விளம்பினார்.

பக்கத்திலிருந்த கிருபாச்சாரியர்மகிழ்ந்து, வணங்காமுடி மன்னனைநோக்கி, வில்லும்வேலுந் தாங்கிய வேந்தனே! உன்னெண்ணப்படி முடியும்வண்ணம் சுலுவாகியருட்சிறைய உங்கள்பாட்டனார். சொல்லிவிட்டபடியால், திண்ணியதூதனைவிடுத்துத், தேடச்செய்வதற் கிதுவேநல்ல ஆதரவென்றிசைந்து மேலுஞ்சொல்லுகின்றார், அன்புடைமையுடைய பாண்டவர்கள் இராஜசபையிற் சொக்கட்டாடித் தோற்றனையில், என்போலொத்தவர்க ளேற்படுத்தியவாக்கியம் பழுதுபோகாமல், பன்னிரண்டு வருடங் காடுறைந்து, ஒருவருடநாடுறைந்து காலங்கழிப்பதற்காகத், தங்கள் தங்கள் வடிவத்தை மறைத்திருப்பார்களென்பதற் கையமில்லை, பூருவமிந்த இராஜசபையி லுடன்பட்டுப், பேசின பேச்சின் படிக்குச் சொற்சோர்வுபடாமல், தவணைநாளைத்தவிர்த்து விபகாரப்பழுது வாராமல்மெய்வழிநிற்கின்றார்கள், அந்தப்படின்மூன்று வருடமுஞ் சென்றபிற்பாடு பாண்டவர்களேநீங்க ளிவ்விடம் வருவீர்களாகில், உங்கள் நாட்டை யொப்பித்து விடுகிறேனென்று உறுதியுடன் எங்களுக்கு முன்பாக நீசொல்லியிருக்கின்றாயல்லவா? நீ அப்போதுரைத்த வாக்கியத்தை இப்போது தவறியேதேதோ பேசுகிறாய். இன்னும் பாண்டவரைக் கண்டுபிடித்துப், பின்னும் பன்னிரண்டுவருடம் காட்டிலோட்டிவிட வேண்டுமென்று, மெத்தப் பிரயாசத்துடன் சித்தப்பிரமை யடைவது அநியாயமல்லவோ? ஐயோ! தலைபோங்கால நேரிட்டாலும், சரீரத்தைவிட்டுயிர்கெட்டாலும், உன்னைப்போலொத்த உத்தமன்சொல் நிலைதப்பிச் சோர்வடையலாமோ! அப்படி நிலைதவறுவையாகில், உன்னரசாட்சி யென்ன பிரயோசனத்தைப் பெறும்? உன்னையார்தான் மதிப்பார்கள், ஆனால், எனக்கொன்று தோன்றுகிறது. பாபங்களைந்து பாராளும் பார்த்திபரிடத்தில் சத்தியந் தப்பியகுணம் தோன்றுமாகில், அவர்களினரசாட்சி பாராஜர் பங்காய்விடும் அஷ்டலட்சுமியுமகன்று கஷ்டலட்சுமி கலந்துறவாடுவாளென்று வேதத்தில் விளம்பிய மொழியொன்றுண்டு அதையுன்னுமிடத்தில், உன்னுடைய செல்வமுழுமையும் சத்தியவான்களாகிய ஐவர்களுடைய தென்பதற்குயாதொருசந்தேகமுமில்லை. இதை நீசெவ்வையா யோசித்துப்பாரு" உன்னுடையநாவை ஸ்திரமாகக்காரு. ஆதிகாலத்தில் நாங்களெல்லோரும் உன்னுடன்கூடிக் குலாவியிருந்துபேசிய விதமென்னவென்னில், பாண்டவர்கள் வனவாசம் பண்ணிவந்தால், அவர்கள் நாட்டைக்கொடுத்து விடுவதென்னுந் தீர்மானமேயன்றி, வேறொன்றில்லை. இப்போதுனக்கிஷ்டமாகிய தம்பிமார்முதலியபேர்களும் நீயுந்தாறுமாறாய்ப்பேசுவது சரியல்லவே, அறியாதவர்களப்படி பேசினாலும், பெருமையு நிலைமையுமுடைய பெரியவனாகிய நீ பேசப்படாதே. உங்கள்குணத்தை நிதானிக்குமிடத்தில் நீங்கள்நினைத்த கருத்தைநேரே யறிந்தோம் நீங்களொன்றுநினைக்கத் தெய்வமொன்று நினைக்குமென்னு நெறியறியீரோ, நீங்கமெண்ணிறந்த நாள்தேடினாலும், உங்கள்கண்ணுக்குப் பாண்டவராகப்படப் போகிறதில்லை, அவர்களைக் கண்டுபிடிக்குஞ் சாமர்த்திய முமுங்களிடத்திலில்லை. அப்படிக்கல்லவென்று காண்பதற்கெத்தனிப்பீர்களாகில், வீணானபழியும் மேலானவிழிவுங் குறைவும் நேரிடுமேயல்லது நிறைவேறாது, அவர்களைநாளு நன்னாளாகவே யநுபவிப்பார்கள். ஆச்சுது. அஞ்ஞாதவாசமும் பண்ணிவிட்டார்கள். நீ கங்கணங் கட்டிக்கொண்டு இதுவரையிலுந் தேடவிட்டிருந்த தூதரால் பாண்டவ ரிருக்கும் ஸ்தானந்தெரிந்து கொள்ளாமற் போனாய்" இனிமேல் தேடவிட்டென்னலாபங் காணப்போகிறாய். விருதா ஆலோசனையாற் பிரயோசனமில்லை, எதொருகாலை காரியத்திற்கும் முன்ஜாக்கிரதை யி

ருக்கவேண்டும், பின்னெண்ணிப்பார்ப்பது பேதையர் பக்ஷம் தவணைநாட்கழியுங்காலையில் தடவிப்பார்க்கத்துணிவது மேன்மையோர் பக்ஷமல்ல, ஆயினும், பாரைதிபெற்ற கோமுனியாகிய பரிசுத்த இருதயரான வீஷ்டுமர்சொன்னகுறிப்பின்படிக்குத்தூய்மையும்வாய்மையும் பொருந்தியதேசம் எவ்விடமிருக்கிறதெனறு அதையாகிலுந்தெரிந்துகொள்ளு அப்பால், மற்றக்காரியம்யோசிக்கலாமென்று பூர்வாசாரியர்பேசியபோது,அவரிடத்தில்நேசவிசுவாசமுள்ள துரியோதனமகாராஜன் மனமகிழ்ந்து, மாநிலமெல்லாந்தேடித் திரிந்தலைந்துவந்த சாரணர்களைநோக்கி, நீங்கள் பார்த்ததேசத்தில் எங்கள் ஐயா அவர்களுணர்த்த வார்த்தையின்படிக்கு அழகும்- வளமும் அன்பும்- நோன்பும்- நேயமும்- நிலையும்- நீதியும்- நெறியும்- மானமுந்- இயானமும்- வண்மையும்- பண்பும்-இலைசந்திருக்கும் பட்டின மியாதோ, அதைத்தெரியச் செயுங்களென்று சுயோதனன்கேட்க, உடனேவேவுகாரரெல்லோருங்கூடி, அரவக்கொடிக் கதிபனுடைய அடிமேற்பணிந்து விளம்பினார்கள் ஓ சுவாமி பராக்கு, பெரியமூதாதை பேசியபடியே மாதமும்மாரியின் யோகமும் பூதலப்பயிர் பொருந்து மூப்போகமும் ஆதுலர்க்களிக்கும் அன்னமுதலாகிய தியாகமும் சீருஞ்சிறப்புந் திகழுநற்செல்வமும் அறம்பொருளின்ப மானமேம்பாடும் நிறந்தரும்பசுக்கள் நெருக்கமுஞ் சுத்தமும் பாபச்சுருக்கமும் படையின் பெருக்கமும் வாழையுங்கமுகும் வளர்தருதெங்குங் கரும்பும் வளம்படவிளைந்து பார்ப்பவர்மனதையுங கவர்ந்து மேன்மேற்சிறந்தநாடு மச்சநாடல்லது மற்றநாடில்லை வேறேமாற்றிச் சொல்லுவதற்கும் வகையில்லை, எங்குமாராய்ந்துணர்ந்தோம். அந்நாட்டின் மகிழ்ச்சியை நாங்களென்னென்று சொல்லுவோம் இந்நாடடுககிசைபெற்ற வந்தலே நம்முடைய மிதாமகன் பேசிவந்ததூதர்கள் மற்றோராச்சரியத்தைக் கேளும். யாரோவொரு பெண்ணனவள் சைரந்திரியென்றும் மாலினியென்றும் பிரகநளையென்றும் வண்ணமாமகளென்றும் பேர்கொண்டு, விராடராஜன் மனைவியினிடத்தில்வந்து சேர்ந்திருக்கின்றாளாம், அவள்பேரிற் கீசகன் ஆசைகொண்டு தூதனுப்பினதும், எவனோவொரு சிங்கமொன்று குறுககேநுழைந்து, அவனைப்பிடித்தெறிந்து வீசினனும் சபையிலிருந்தவர்களே சொன்னார்களாம் அந்தக்கீசகனையும் அவன்தம்பிமார்களையும் மோசஞ்செய்துபொழுதுவிடியுமுன்னமேசென்று போட்டார்களாம் இவ்விதமாகக் கொன்றவர்கள் யாறென்று விசாரிக்குமிடத்தில், மேற்கூறிய வண்ணமாமகளுக்கு மெய்க்காவலாக விண்ணுலகிற் சஞ்சரிக்குங் காந்திருவரைவரென்று மண்ணுலகெல்லாம் பேசிக்கொள்ளுகிறார்கள் நாங்களதை நன்று யோசிக்குங்காலையில், அந்தக் காந்திருவரைவரும் பாண்டவர்களென்றும், துணிவாய்ச்சொல்வோம் இதுவேநிச்சயமென்று ஸ்திரமாய்ச்சொன்னார்கள்.

இவ்விதங்கூறிய சாரணர்களின் ஸ்திரவார்த்தையும் வீஷ்மர் மனங்குளிர்ந்துரைத்த சத்தியமொழியையுஞ் சேர்த்துத் தன்கருத்துக்கிசையச் சீர்தூக்கிப் பார்த்துக், காரணகாரியத்தை யோசித்துத் துரியோதனன் பூர்ணமனதோடு பேசத்தொடங்கினன். ஐயா! கிருபாச்சாரியர் வீஷ்மர்முதலிய கிருபைக்கடலாகிய பெரியோர்களே, கேளுங்கள், கீசகன் பீமசேனன் சராசந்தன் பகாசுரன் மத்திரராஜன்பலதேவன் இவர்யாவரும் இந்திரன்முதலியபேர்கள் புகழத்தக்க தோள்வலிமையுள்ளவர்களாய்ப் பதினாயிரம்யானை பலம்படைத்தவரென்றும் இவர்களில் ஒருவனையொருவர் கொல்லலாமேயன்றி மற்றொருவரால் மடியாரென்று பெரியோர்கள்பேசக்கேள்விப்பட்டிருக்கிறேன. அப்படியிருக்க, காந்திருவர்வந்து கீசகர்களை மடித்தாரென்பதை யெப்படிநம்பலாம் அந்தச்சைரந்திரி நிமித்தமாய்க் கீசகர்கள் சங்கரிக்கப்பட்டார்களென்பதை உன்னியோசிக்குமளவில், அவள்சைரந்திரியல்லள் துரோபதியென்றும், காந்திருவரல்லர் பாண்டவரென்றும், அப்பாண்டவரில் வீமசேனனே கீசகர்களை நாசஞ்செய்தவனென்றும், பெட்டிப்பாம்புபோலடங்கிவிராடபுரத்தி லிருக்கின்றார்களென்றும்கெட்டியாய்ச்சொல்லுவதற்கு யாதொரு அட்டியுமில்லை,அதேனென்னில்? வல்லிரும்பெனத்திருந்திய புயவலிபொருந்திய யக்ஷர்கள்- அமரர்கள்- நாகர்கள்-அசுரர்கள்- இராக்கதர்கள்-காந்திருவர்கள்-முதலாகிய யாவரும் அந்தக்கீசகன் வல்லமைக்கு ஆற்றமாட்டாமல், கால்கைநடுங்கி யொடுங்கியிருந்தார்கள் இவர்களிலோர் பிரிவாகிய காந்திருவர்வந்து கொன்றார்களென்பது எனக்குமிகவு மாச்சரியமாயிருக்கிறது தேன் துளிக்குமுடியோனாகிய கீசகனைமடித்தவன் சாமனுக்கொப்பாகிய வீமனென்று நினைப்பதற்கியாது மச்சமில்லை நிச்சயமே வண்டுமொய்க்குங்கொண்டையினையுடைய வண்ணப்பெண் வடிவினள் ஐவர்க்குரிய தேவியே இதற்கையமென்பதில்லை,ஆகையால், பாண்டவர்கள் விராடபுரத்தில் மறைந்திருக்கின்றார்கள். அஞ்ஞாதவாசத் தவணைகழிகருநா ளின்னுமிருக்கிறபடியால், தாங்கள் வெளிப்படாமல், சிங்கபல கீசகனுயிரைத் தீர்த்து விட்டார்கள் இதற்குமேல் நடக்கவேண்டிய யோசனையென்ன, இன்னதென்றுரையுங்கள். பொன்னனைய பெரியோர்களேயென்று ஜெயங்கொண்டானும் பு

யங்கக்கொடியோன்கேட்க, சூரியகுமாரனுகிய கர்ணன் ஓர்மொழியுரைக்கலுற்ருன்.

மணந்காதலிக்கும் வணங்காமுடியண்ணனே! முன்னமெண்ணியதேதிசம், இன்னுமேன தாமசம், மேகமண்டலமளாவிய தேர்விதங்களும் மும்மதம்பொழி யானையினங்களும் குப்புற்றுலாவுங்குதிரைத்திரள்களும் ஆலாலர்போன்ற காலாட்களும் இக்ஷணமேபுறப்பட்டு, மச்சநாட்டைவளைத்துப் போர்கொடுத்துப், பசுக்கணங்களைத்தடுத்து, நமதூர்க்குவிடுத்துக்கண்மூடிக் கண் திறப்பதற்குமுன்னமே கலகம்விளைத்துவிடுவோம் நாமெண்ணியவண்ணம் பாண்டவர்களிருப்பார்களாகில், விராடனுக்குப்பரிந்து நமமேற் சண்டைக்கு வருவார்கள், சும்மாவிருக்கமாட்டார்கள், அவர்களைக்கண்டுபிடித்து விபகாரஞ்செலுத்தலாம் அவர்களவ்விடத்திலில்லாமற்போனுல், மடக்கிய பசுமந்தைகளெல்லா முங்கட்கடைக்கலந்தானே. இரண்டுவிதத்திலு நமக்குலாபமிருக்கிறது. இதுவேபாகமென்று அங்கதேசராஜன் சொல்ல, அங்கிருந்தவரசர்யாவரும் பொங்கிப்பூரித்து இதுவேயெல்லோருக்குஞ்சம்மதமென்றிறைந்தார்கள். பெருமையுடைய துரியோதனமகாராஜனும் இக்கருத்துகநோத்திருந்தான்.

அந்தவேளையில் திரிகர்த்த தேசாதிபனுகிய சுசர்மா எழுந்து, காத்ஸைதச்சிரத்திற்குவித்துப், பணிந்து, கௌரவகுலாதிபனே! முன்னொருநாள் சேனுபதியாகிய கீசகனுக்கும் எனக்கும் போர்விளைந்து, மன்னர்களுடன் வந்துவளைந்து, என்னைப்பிடித்து, இறுகப்பிணித்துத்தன் னகரத்திற்குக் கொண்டுபோய்விட்டான். அவன்கையைவிட்டுத் தப்பித்துவரப்பட்டபாடு தெய்வமறிந்தது, அந்தச்சத்துருவை வெல்லுவதற் கெனுற் கூடாமையால் அந்நாள்முதலிந்நாள்வரையிலுமந்நாள் நமக்கெப்போதுவருமென்று நான் காத்திருக்கின்றேன். முன்னுள்செய்த முழுவினைவசத்தால் அவன் தனுற்கெட்டான் காமாந்தகனுகிய கீசகன்வாசஞ்செய்த மச்சதேசத்திற்கு என்னைப்போகச் சொல்லுவீராகில், விராடன்முதலியவேந்தரையும் பிடித்துக்கட்டி, என்மனத்தில் வெந்துகொண்டிருக்குங் குரோதத்தையுங் காட்டித்திட்டி, அந்தவிராடன் மைத்துனனுகிய கீசகன் என்னைப்படுத்திய அவமானத்தை யிவன்பாற்படுத்தி, அவ்விடத்தி லொளித்திருக்கும் பாண்டவரைப் பக்குவமாயறிந்து, மச்சராஜன் வளப்பங்களைக் கைவசப்படுத்திக் கீசகனபலத்தால் நமக்குக் கப்பணங்கட்டாதிருந்த கெருவத்தையடக்கிப் பசுமந்தைகளையுமடக்கி, அஸ்தினபுரம்வந்து சேருகிறேன், கர்த்தனே! என்று திரிகர்த்தன்சொல்ல, ராஜாதிராஜன் ஈகசத்துமகிழ்ந்து, படையிலுமொருவன், கொடையிலுமொருவனெனப் புகழ்ந்து அண்ணுகர்ணு! சுசர்மா சொல்லிய வாக்கியம் உமக்கெப்படி யிருக்கிறதென்று கேட்டான், அடடா, இப்போதே யப்படிசெய்வது உத்தமமென்ருன், அப்பொழுதே சேனுசயினிபங்களைச் சேகரிக்கும்படி யுத்தரவுசெய்து, சுசர்மாவுக்கு வரிசைகளுந் தாம்பூலமரியாதையுங்கூட்டி அண்டகடாகமதிரும்வாத்தியங்களுடன் சண்டைக் கனுப்பினுன், அவ்வாறு விடைகொண்டுதிருப்பிய திரிகர்த்தனுனவன், விந்தகிரிக்கொப்பான தேரேறிய பூலோகதேவேந்திரன்போல் புறப்பட்டுச் சிறப்புப்பொருந்திய விராடபுரத்தின்மீதுபோர்புரியப்போனுன.

இப்பால், சந்தியாவட்டமாலையணிந்த நராதிபன் சபையிலுயர்ந்த சாதுக்களைநோக்கி, ஐயா பூர்ணஞான சீலபுண்ய மூதாதையானவர் புகன்ற குறிப்பிற்கிணங்க நமதுதூதருரைத்தசொற்களினுலும் என்னுடையநிச்சயத்தினுலும் அந்தவிராடபுரத்தில் பாண்டவரிருக்கிருர்களென்பது பரிஷ்காரமாய்த் தெரியவந்தது. அதற்குக்காரணமெனனவெனில், கேகயராஜகுமாரனுகிய கீசகனிறந்த காட்சியே சாட்சியாய்விட்டது, அவ்விடத்திற்குத்தண்டெடுத்துப்போன திரிகர்த்தனுனவன், மச்சநாட்டிற்புகுந்து மாட்டைமடக்குங்காலத்தில், எதிரிகள் சும்மாவிருக்க மாட்டார்கள். அவர்கள், மேல்விழுந்து போர்கொடுத்து மாட்டைத்திருப்பிக் கொள்வார்கள் ஆயுதங்களாலடிபட்டு, மூளைகெட்டுப், படைமுறிபட்டு, பிடித்த பசுக்களைவிட்டுமுதுகிட்டோடிவருந்திரிகர்த்தனுடைய வருத்தத்தைக்கேட்டுப் பின்புநாம் படைத்துணைபோவது நன்மையோ அல்லது, இப்பொழுதுதேசெல்வதுநல்லதோ, குற்றமற்ற வுத்தமர்களே, நீங்கள் கூறுங்களென்று வெற்றிபெற்ற துரியோதனமகாராஜன் கேட்கப், புத்தியிற்சிறந்த கர்ணராஜன் மனம்பூரித்துக் கொற்றவனே வித்தக விராடராஜன மைத்துனனுகிய கீசகனையனுப்பி, அடிக்கடி யுத்தம் பண்ணச்சொல்லி நம்மைத்திடுக்கிடப் பண்ணிக்கொண் டிருந்தானே, அந்தவஞ்சந்திர நாமவனைத் தண்டிக்க வேண்டு மாதலால், உமது பெரியவர்களின் அநுமதிகேட்டுப், பெருஞ் சேனைப்படைகூட்டிப், புறப்பட்டுப் போர்மாட் டென்று கவசகுண்டலன்கழற, அவன்மொழியைச் சிவன் மொழியாயுட்கொண்டு, பின்னும் பெரியோர்களைப்பார்த்து, நான் நினைத்ததினைப்பக் கென்ன சொல்லுகின்றீர்கள்? உங்கள்கருத்தை யுமொளியாமல், வெளியிடுங்களென்று திங்கள் குலத்துதித்த துரியோதனன் வினவினுன், அப்போ தங்கிருந்த விரதப்பொருளாகிய கிருபாச் சாரியரும் மெய்த்தவவித்தகவீஷ்டுமரும் வேதவித்தாகிய துரோணுச்சாரியரு

ம் முக்கியம் படையெடுத்துப் போகவேண்டியதென்று சம்மதித்துப், போதுபோன பிற்பாடு போவோமென்றுரைத்தார்கள். அந்தமொழியைச் சற்பக்கொடியோன் கேட்டுச் சந்தோஷித்துத், துச்சாதனனையழைத்து எனக்கு நற்றுணையாகிய தம்பி! ரத- கஜ- துரக - பதாதிகள் முதலிய சேனைகளைப் பிரயாணபேரிகை அறைந்து புறப்படச்செய், என்றான். அப்படியே செய்வேனென்று, பிரயாணபேரி முழக்கிவைத்துப் புள்ளிப்படந் திருந்திய நாகக்கொடிபொருந்திய சுயோதனன் தம்பிமார் தொண்ணூற்றொன்பதுபேரும்- சல்லியராஜன்-சௌபலராஜன்- சகுனிராஜன் - கர்ணராஜன் - முதலாகிய ராஜர்களையுங்கூட்டித், தங்களெண்ண மிவ்வாறெனத் தெரியக்காட்டி யுத்தகோலங்கொண் டிருந்தார்கள். கொத்துச சித்திரவேலை பதித்தரதத்தைச் செலுத்தி மச்சநாட்டினமேல் சென்றதிரிகர்த்த தேசாதிபனுடைய செய்தியைச் சொல்லுகிறேன் கேளும். ஜெனமேஜெயமகாராஜனே! என்று வைசம்பாயனர் சொல்லத் தொடங்கினார்.

பெருமையிலுயர்ந்த பெரியோர்பேச்சைப் பொருளாகக்கொள்ளாத துரியோதனனை ஆக்ஞாபித்தவண்ணம், படைசேர்த்தெழுந்த வெட்சிமாலைபெற்ற திரிகர்த்தனனவன், முரசவாத்தியம்- பேரி- டங்கா- பாங்கா - காளம்- சங்கம்- தாரை- பூரி - வீரசின்னம் - தப்பட்டை முதலாகிய வாத்தியங்களைத் திக்கெட்டுஞ் செவிடுபட முழக்கிக் கத்தி- கட்டாரி- கேடயம்- ஈட்டி- எறிவேல்- சூலம்- பிண்டிபாலம்- வாள்- முசலம்- தோமரம்-குந்தம்- சக்ராயுதம்- மற்றுமுள்ள ஆயுதங்களெல்லாம் பளபளவென்று விளக்கொளிபோல் மின்னப்பிடித்துக் கவசகுண்டல- கிரீட- மதாணிகடக- கங்கண- தோளணிப் பதக்கம் துலங்கியிலங்கும் வீரர்களையும் திடகாத்திரதேகதீரர்களையும் திசாதிசைகளிற் பாயவிட்டு, ஓரக்குரோணிப் படைகளுடன் மச்சதேசத்திற்குத் தெக்ஷணபாரிசத்தில்வந்து இறங்கிக் கட்டுக்காவலில்லாமல் எதேச்சையாகத்தின்று கொழுத்துக் கன்றுடன் தழைத்துத் திரிகின்ற பசுமந்தைகளனைத்தையு மடக்கினான், அப்போதந்த மாடுகளெல்லாம் காதுகளைநெறித்துக், கண்களையுருட்டி விழித்துக், கடைப்பார்வைபார்த்துத், தலையெறிட்டுத், தங்களைமடக்கினவர்கள் அந்நியரென்றறிந்து தங்கள் தங்கள் கன்றுகளுடன் பெயர்ந்து கும்பலினின்றுமுறிந்து, கும்மாளமிட்டு, நாலுபக்கமும் பிரிந்து அம்மாவென்றலறி, வீரிட்டிரைந்து, அயர்ந்து பயந்து,செம்மான்பாய்வதுபோல், பாய்ந்து, சும்மா வொருமூலையிற் கொம்பசைத்துக் கூட்டமாய்ச்சாய்ந்து வெருண்டு பதறிக் கதறிக், கால்தவறிக் கலங்கித், திகைத்து மயங்கித், தியங்கியகன்றேடும் பசுமந்தையைச் சுசர்மனுடையசேனைநாயகர்கள் துரத்தித்துரத்தி, மறித்துப் பிரித்து இருப்புக்கண்ணியால் தடுத்தார்கள். அந்தப் பசுமந்தைகளைக் காத்திருந்த காவலர்களும் அதுகளைமேய்த்திருந்த கோவலர்களும் ஆக்கிரமித்து அதிர்த்தெழுந்து, மூவுலகதிரும்படிக்குத்தாவி, மேவலர்சேனைமேல் விழுந்து அஸ்திர- சஸ்திர- ஆயுதங்களாலும் குறுந்தடி - குண்டாந்தடி கக்குமாந்தடி- வளைதடி- இலுக்குத்தடி- முழக்குத்தடி- பாணத்தடி- ஈட்டி- எறியீட்டி - திருகீட்டி- சொருகீட்டி- உருகீட்டி- குத்தீட்டி- குறியீட்டி - பாலாபல்லயம்-பற்ஜீ-பட்டா-பாங்கு-சாங்கு- கத்தி- கட்டாரி- பிச்சுவா-கவண்கல்-உண்டைவில்-கணைவில்-அம்புவில்- இத்தன்மையாகிய ஆயுதங்கள் பலவுங்கொண் டெதிர்ந்து, சோபமுதிர்ந்து பாய்ந்து, சினத்தால் காய்ந்து, அவர்கள மாய்ந்து போம், படியாய்ச் சிலரைவெட்டியும்- பலரைக்குத்தியும்- அடித்தும்- மடித்தும - சிற்சிலபேரையுதைத்தும்- சிற்சிலரை வதைத்தும்- பற்பலரைமறித்தும்- பற்பலரைமுறித்தும்-துண்டித்தும்-கண்டித்தும்சுற்[illegible]சிலரைக்குத்தியும்-பற்றியபோதலை யெற்றியும்- தங்களமாட்டைத் திருப்பினார்கள் திரிகர்த்தனைச்சேர்ந்த சேனைகள் சித்தம்பிரமித்து, ஒருமுகமாகச்சாய்ந்து, கணக்குமிதமற்றகடுங்கணைகளைத்தூண்டி, மும்மதயானைகளைமுடுக்கிக், கோட்டைமதில்போல் குறுக்கிவகுத்துச் சிகரம்பெற்ற தேர்களைச்செலுத்தித், திசைகளிலோடிய கிளைகளைவளைத்துக், குப்புற்றுப்பாயுங் குதிரைகளைவிடுத்துக், கூட்டமாகிய சேனை நிலைகெட்டழியக் கெடுத்துத், தன்சொந்தசேனைகளாலந்தச்சேனைகள்முறிந்துபோகச்செய்து, மறுபடியும் மந்தையைத் திருப்பிக்கொண்டு கட்டுக்காவலமைத்துச், செயஞ்செயமென்னச் சிங்கநாதமுழக்கி அந்தப் பசுக்கூட்டங்களுக்காக மேவிட்டுவந்த கோபாலர்களையும் பூபாலர்களையும் வில்லெடுத்துவளைத்துச், சரமாரி தொடுத்துத், திசைமாறவிடுத்து, விசனப்படும்படியாய் மாட்டி வாட்டியபோது,இடையர்களெல்லாம் உடைந்திடைந்து, கைபிழந்தவரும்- காலழிந்தவரும்- மேலுலோர்ந்தவரும்- முடிபோனவரும் - அடிபோனவரும்- முனைகெட்டபேரும்-நிலைவிட்டபேரும்- கண்ணீராறுகரையின்றிப்பெருகி, வாரிநீர் வழிவதுபோல்,வழியவந்து, விராடபுரத்திற்புகுந்து, முடிவேந்தனுடையகொலுமுகத்திற்கு முனசென்றுநின்று, சங்காழிமுகுந்தனைப்போல், சிங்காசனத்திருந்தருளிய எங்கோனே! என்றுவணங்கிச், சுசர்மாவுடன் திரிகர்த்தர்களும் குருசேனசகிதராய் சேர்ந்து தென்திசையில்நிறைந்த பசுமந்தையை மடக்கினார்கள், அவர்களுடன் நாங்களும் பகை

த்து, வைகளாற் கூடியமட்டும் போரிட்டுப் பார்த்தோம், அவர்களைவெல்ல வல்லமையில்லாமலடிபட்டு வெம்பிவெதும்பி, யோடிவந்துவிட்டோம்; அறுபதாயிரம் பசுக்கள் அவர்வசப் பட்டனுகள் இன்னும் நாற்பதினாயிரம் பசுக்களையுங் கைக்கொள்ளப் பார்க்கிறார்கள். நாதனே! தேவரீர் ஆலசியம் பண்ணாமல்,அமர்க்கெழவேண்டுமென்றார்கள் முல்லை நிலமாக்கள் மொழிந்ததைக்கேட்ட வல்லவன் நகைத்தருக், கண்ணிரண்டுங்கறுத்து, வெறுத்துங், கைநெரித்துப், பற்கடித்துச்சிரித்து, ஓகோ! விசுவாசமோசத்தைக் கண்டீர்களா? சொற்பனத்திலும் நினைக்கப்படாத அற்பனுகிய திரிகர்த்தனென்பவன் எங்களால் கட்டுப்பட்டு நொந்து கால்மேல்விழுந்திரந்து, என்றென்றைக்கும் அடிமையென்று புகன்று, இழிவுபட்டுப் போனதை மறந்து, ஏவர்தலிய தேசைாலும் வெறுக்கப்படாத விராட புரத்தைக்கலக்கி, இருந்தசேனையுடனெதிர்த்துப் போர்கொடுத்து, வெகுபேரைக்கெடுத்து, மாட்டையுமடக்கி யிருக்கின்றானும், நல்லதாகட்டும். ஓ சேனாபதிகளே! வீரபட்டம்பெற்ற- ரத- கஜ- துரக- காலாளுள்ள - ஓ, சதுரங்கசேனைகளையும் யுத்தசன்னாகப் படுத்துங்களென்று பெருச்சமுழக்கமாய் வெடிபடச்சொன்னான், அந்தச்சொல் செவிபடுமுன்னமே கரத்தில்வில்லும் கழுத்தில் மாலையுந்தரித்த காவலர் அநேகர் எட்டுத்திசையிலு மடங்கப்படாத வாத்தியமுழக்கத்தோடு இரண்டதேரோடி, வெள்ளப்புரண்டு வருவதுபோல், வந்துமொய்த்தார்கள். இதனறியும், வெல்லும்படியான அதிரதர்களெழுந்து, நவமணிகளாற்செறிந்தமுடியும்-சூரியன் நாணத்தக்க மாணிக்கப் பதக்கமும் - ஆணிப்பொன்றாணியும் நிறைவென்றோர் அணியும் - துர்க்கைமாலையும்- கேயூரமணி குண்டலகண்டியும் - பிரதாபவில்லும் - சபதச்சொல்லும் - பொலிவாகக்கொண்டு, மிக்கப்போற்சென்று, பொன்னுலகை விட்டிழிந்த தேவேந்திரனென்னும்படியாய்த், திக்கஜங்களுங் கொப்பாகிய யானையின்மேலேறிப், பெரும்புலியெனச்சீறிப் புறப்பட்டார்கள் எண்ணிய எண்ணங்களைநிறைவேற்றுமென்ற திண்ணியபுய திடகாத்திரர்கள் யாவரும் ஒன்றாகக்கூடி விராடராஜன் வெளிப்படுமுன்னமே நாம்போய்த்திரிகர்த்தனுடன் அவன சேனைகளையுங் கொன்று, பசுக்களைக்கொண்டு, விராடனுக் கெதிர்சென்று, நாங்கள்செயித்துவந்தோம் நீங்கள் போகவேண்டிய அவசரமில்லை, என்றுசொல்லி, உயர்ந்த விருதுபெருவோமென்பதாக, ஆணிவில்லைவளைத்து, நாணிபூட்டி, அம்பறாத்தூணிமாட்டி, வாளுங்கேடகமும் வல்லயமும் பல்லவமுங்கொண்டு, பகைவர் பட்டாளர்கள், மூறைநிட்டார், அவ

னே

ர்கள் கெட்டார்களென்று, கெருவித்தெழுந்து, கட்டுக்கடங்காமல், அட்டாளதேசமூ மூலைவரும் பட்டாளக் குதிரையேறி வந்தார்கள். சேனைவீரர்கள்திரண்டு, திக்கெல்லெறியச் செவ்விழிகாட்டிச், சிரிப்புகைந்து, செம்பொறிசிதறக்காய்ந்து. வீரகண்டையைபாட்டி, வெதுப்புஞ் செருப்புங்காட்டி, ஆயுதங்களைப்பிடித்து, அவனியைப்பூருக தரியாமல்துடித்து, அலைபரந்தகடலேழும் அடியோடுபெயர்ந்ததுவந்தாலிக்காலென்று அகிலசராசரமும் பேசிக்கொள்ளும் படியாய்ப், பேரோசைமுழக்கிப் பெருங்கும்பு சேர்ந்தார்கள். இவ்விதமாகச், சதுரங்கசேனைகள் புறப்பட்ட வீராவேசத்தை விராடனுடைய மூத்தபிள்ளை சுவேதனென்பவன் கேள்விப்பட்டு, நாமிருக்க நம்முடைய தந்தை வருந்துவானேனென்று, தனதுபிராணனையும் எதிரிகளுயிர் தரும்பாகமதித்துப். பம்பரம்போற் சுழலுஞ் செம்பொற்றேரேறி, வீரலட்சுமியைவிவாகஞ்செய்வதற்கு விரும்பிவருகிற புருஷனைப்போல் கொம்புபூட்டிலுங் கார்முகவடமும் தாங்கிக், குவலயம் நடுங்கக் கவலையோடடைந்தான்.

இரண்டாவது பிள்ளை சதானீகனென்பவன் சங்கிலையரிந்து, முகச்சுளிப்புடன் வெளியேவந்து, அப்படியா இந்நாள்வரையிலும் பின்னமில்லாத பச்சைகாட்டித் தபிரவேசித்துங், கொஞ்சமேனும் பச்சமில்லாமல், மாட்டைமடக்கிய விச்சைகெட்ட திரிகர்த்தனுடைய சேனைகளைனாசஞ் செய்கால் நிலத்தைத் தன்வில்லைப்புகொண்டுழுது இரத்தநீர்ப்பாய்ச்சி, உயிராகிய விதையை விதைத்து அக்கிரமமெனனுள களைகளைக்களைந்து, வெற்றிப்பயிர் விளைத்துப் பூபாரப் பிணப்போர்கட்டி, எமனுக்கு மேல்வாரங்கொடுத்து என்தந்தைக்கு கீர்த்தியென்னு நிலவாரங் கொடுக்கிறேனென்று, துடுக்கென்றெழுந்து, வில்வளைத்து நாணேறிசைத்தொலித்துப், பகைக்கப்படாத சிங்கக்குட்டியானது தமைக்கிரியில் தாவுந் தன்மைபோல், விசாலமான தேரேறி வீதியில்வந்தான்.

மூன்றாவதுபிள்ளை சங்கனென்பவன் சிங்கநாதஞ்செய்தெழுந்து, எங்கள் மாமனாகிய கீசகராஜ னிருக்கிறவரைக்கும் கொஞ்சம் கோப்பியமாயிருந்தது அவனிறந்த பின்பு மெத்த சாப்பியமாய்விட்டது, இனிமேல் பலருக்கும் வசையாயேச, அந்தமொழியைக்கேட்டு, காலுயிரோடிருந்து இன்பமநுபவிக்க மாட்டேன் இதோ! வாளாயுதமெடுத்துப் புறப்படுகிறேன், வந்தவர்நொந்தழியக் கொந்தித்தள்ளுகிறேன்,அவர்களை வெல்லாமலுஞ்சொல்லாமலும் போவேனாகில், என்னுயிரழிந்துபொன்னுலகம்போய்ச் சேருகிறேன், இதுவே சத்தியமென்று சபத

ங்கூடி, விஜயபு-ஞேடித், திசையசையுந் தேரேறிக, கவசமணிந்து, தன்னையொத்த தாரபதிக்குமாரும் மின்னுக்கிணையாம் ஆயுதந்தாங்கி, வீராவேசங் கொண்டு வரத்தானும் பிரயாணமானன்.

நான்காவதுபிள்ளைவராககேதென்பவன்நான்குவேதமும்- தநுர்வேதமும் தருமசாஸ்திரமும் - பதுவிக்கியானமும்தேர்ந்து, அறம்பொருளின்பம்வீடெனபனவற்றையறிந்து, பொறுமைக்கவசம் பூண்டு, மன்னுயிரனைத்தையுந் தன்னுயிராய்ப்பரிந்து பாதுகாக்கும் பருவநாயகன், குலமன்னர் கூட்டமும் பலமன்னரீட்டமும்-காலாட்படைகளும்-ரதகஜதுரகங்களும்-வேற்படை விற்படையுங்கொண்டு, மச்சதேசத்துத் தெக்ஷண திசையில்சென்று, லட்சியம்வையாமல், அந்தத்திரிகர்த்தனை இக்ஷணமே பிக்ஷாபாதனுக்கி, வீரசொற்கத்தி லேற்றிவிட்டு, வேறுவேலை பார்க்கிறேனென்று, விசித்திரக் கவசம்பூண்டுதேரேறிப் போரேறுபோல், புறப்பட்டான்.

இந்தப்பிரகாரம் நான்குபிள்ளைகளும் நால்வகைச்சேனைகளும் ஆரவாரித்தெழுந்து, சத்திரம்-சாமரம்-ஆலவட்டம்- கொடி- குடை- பீலிக்குச்சம்- மகரதோரணம் டால்வகைகளும்- படைமன்னரும்-வாத்திய-கோஷமும்- பின்னுமுன்னும் பெரும்புறக்கடல்போல்வரச்சிங்கநாதம்- சங்கநாதம்- எங்குநாதமாய்முழங்கத், தேர்பரியானைநிரையுடன் சேர்ந்தசேனையை விராடராஜன் கண்குளிரக்கண்டு, பிள்ளைகள் நால்வரும் செல்வதைப் பார்த்து, ஐயோ! இந்நாள்வரைக்கும் என்னைவிட்டுப் பிரியாமலும் போர்முகமறியாமலுமிருந்த அறியாச்சிறுபிள்ளைகள் முன்பின் யோசியாமல் போயிருக்க, நாமிவ்விடமிருப்பது நியாயமோ? அவ்விடம்விளைவது என்ன அபாயமோ? என்றெண்ணித், தன்சகோதரர்களாகிய சதாநீகனையும்- மதிராக்ஷனையு மழைத்துவாருங்கள். தம்பிமார்களே! தெக்ஷண நிரைமீட்சிக்குப்போன நமது பிள்ளைகளின் போர்த்திறத்தையும் குருசேனையுடன்வந்த திரிகர்த்தனது போர்த்திறத்தையும் நான் பார்க்கவேண்டியிருப்பதால், சீக்கிரத்தில் தேர்கொண்டுவரச்செய்யுங்களென்றான். தமையன் மொழிதவருத தம்பியரிருவரும் இரதலங்காரம்புரிந்து இடவேகமுள்ள குதிரைகள்பூட்டி, மதிமோகனென்னுஞ் சாரதியுடன் கொண்டுவந்து நிறுத்தினர்கள் பொன்தகடுவேய்ந்து நவரத்தினமிழைத்த அஸ்திர சஸ்திர இரலகாரவயக் கவஜந்தரித்து, அம்புப்புட்டிலும் வரிநெருங்கியவில்லும் - வாளும்- வேலும் - மகுடமும்- மகரகுண்டலமும் வாகுவலயமும் - கச்சையும் வீரகண்டையும் - வீரற்சாடுகச்சாடும் மின்னுதற் பட்டமுந்தரித்துத், தம்பிமார்களும் இராஜகுமாரர்களும் மகாப்பிரபலிய சேனைகளும்விருது மேளவாத்தியங்களும்-வெண்சாமரையும்-வெள்ளைக்குடையும்- மயிற்பீலியும் - புடைதாங்கிவரப் புகப்பட்டுச்சேனுதிபர்களும்படைவீரர்களுமுன்னேடக், கட்டியர் பட்டுவான்களும் புகழ்ப்பாடப் பாதகாட்டியமாடத், திருநீறணிந்த திரிநேத்திர தாரியாகிய ருத்திரமூர்த்தி யிவனென்னச் சாதிக்கும்படியாய் வடுவில்லாமரபோருகிய விராடபூபதிவந்தான். அம்மன்னனைத்தொடர்ந்து வழிவிடப்போன தருமராஜனை வீமசேனன் நகுலன்- சகாதேவனிவர் மூவரும்பார்த்து, இந்தவிராடராஜனுனவன் மாடுபிடிசண்டைக்கு நம்மைச்சகாயமாயழைக்காமல் போகிறனே, இதென்ன காரணமென்று கண்ஜாடையிற் பேசிக்கொண்டார்கள்.

கங்கபட்டர் விராடராஜனுக்குப் பலாயனன் பெருமையைக்கூறுதல்.

அவர்கள் கருத்தையறிந்த கங்கபட்டரானவர் மச்சராஜனைநோக்கி, நமது மண்டபப்பள்ளியிலிருக்கிற பலாயனன் மல்லர்களை வென்றபோதே மகாபலசாலியென்று தீர்நிதிரல்லவா? அவன் மிஞ்சிய மற்போரிலும் கொஞ்சம் விற்போரிலும் பழகினவனுகத் தோன்றுகிறது. இதோ நிற்கின்ற தந்திரபாலனும் தாமக்கிரந்தியும் - போர்புரி வார்கள்போலுமிருக்கிறது. இவர்கள் தருமராஜனிடத்திலிருக்கும்போது, கௌரவர்களுடனகூடி ஆயுதப் பரிக்ஷயில் பயின்றிருக்கிறர்கள்; கிலசமயத்தில் சண்டையிலுஞ் செயங்கொண்ட தாஷ்டீகர்கள் இவர்களைரட்சிக்கும் நீர்சண்டைக்குப் போம்போது இவர்கள் உம்மைவிட்டுத் தனித்திருப்பது தருமமல்லவே, இம்மூவரையும் அம்மூவராகப் பாவித்துக் கூட்டிப்போவது நலமாகும், நான்மாத்திரந் தனித்திருப்பது நியாயமல்ல, நீங்களியாவரு முன்னுடிச் செல்லுங்கள். நான்நடந்து பின்னுடிவருகிறேனென்று கங்கபட்டர்சொல்ல, அவரிசைத்த மொழியை யன்புடன்கேட்ட விராடன் சிந்தைகளித்து, இது என்தவப்பயனென்றுவாழ்த்துத் தம்பியாகிய சதாநீகனையழைத்து இந்தமகா ஸ்வாமியாகிய கங்கபட்டருக்கும் மற்ற ஆசாமிகளுக்கும் சிங்கமுக லலாடத்தேரும் - பங்கப்படாத வில்லும் அம்பருத்தூணியும் திணிசுவாசி யாடபரணங்களும் ஆயுதங்களுங்கொடுத்து, அதிசீக்கிரத்தி லுன்னுடன்கூட அழைத்துவாவென்று, ஆக்யாபித்துப்போனன். அரசனுத்தாரப்படிக்குச் சகலவரிசையுஞ் சதாநீக

னும் பெற்றுத் தடந்தேரேறி, எவர்களுக்கு முன்னுந்தாயி வர்கள்சென்று, விராடராஜன் தெற்குக் கோட்டைவாயில் தாண்டிமுன்னமே சேனையுடன் கலந்துபோனார்கள். அக்காலையில் பொன்மலையையொத்த எண்ணுயிரந் தேர்களும்- மும்மதம்பொழியும் ஐயாயிரம் யானையும் இம்மெனப்பறக்கும் இருபதினுயிரங் குதிரையும் பொம்மெனநெருங்கிய லக்ஷம் கால்பலங்களும் தம்பிமார்களும் சாதுரியமுள்ள சூரர்களும் மந்திரிதந்திரி மகுடவர்த்தனரும் சுந்தரமைந்தரும் சுதந்திரவேந்தரும் மேவினார்கள். கொம்பு- செடிமுரசு- வாத்தியகோஷங்கள் எட்டுத்திக்குஞ் செவிடுபட்டுப்போகத் தும்புதூசிகள் அம்பரமட்டுமேகச் செம்பரத்தம்பூப்போல், சிவந்த கண்களையுடைய படையைத்தூசி யணியாக நிறுத்தித், தன்மாட்டைமடக்கி சத்துரு சேனைகள்மேற் சென்றுபோர்தொடுத்தான்.

அவ்விராடராஜன் கோபாக்கினியால், பகைவருயிரை வாங்கச்செறிந்து, வெற்றிவேல் தாங்கித்திருந்து, மூக்குகரித்து புரிந்தசண்டையைத் தேவேந்திரன் முதலிய தேவர்களும் பார்க்கச், சொர்ணமயமான விமானமூர்ந்துசென்று, ஆகாயத்தி லிடமில்லையென்ன நெருங்கித் திரண்டு வேடிக்கைபார்த் திருக்கும் வேளையில், இருதிறப்படைகளுங்கைகலந்து யானையும்- யானையும்-குதிரையும்- குதிரையும்- தேரும்- தேரும்- காலாளும் - காலாளும் - தொந்தயுத்தம் பண்ணினார்கள். அந்தயுத்தத்தில் யாரை யாரழித்தார்கள், யாரையார் துவைத்தார்கள், யாரையார் வதைத்தார்கள், யாரையார் சிதைத்தார்கள், எவரையெவர் கொன்றார்கள், எவரையெவர் வென்றார்கள் எவரையெவர் துன்பப்படுத்தினார்கள், எவரையெவர் ஓட்டினார்கள், எவரையெவர் மாட்டினார்கள், எவரையெவர் வாட்டினார்கள், இன்னவிதமென்று நானெப்படிசொல்லுவேன், ஆனாலும், வரிசையாகப்புகுந்து மாச்சரியத்துடன் உடலைவகிர்ந்து, இரத்தவெள்ளம் புரண்டோடச்செய்தபடியால், போரின்பெருமையைப் புகழ்ந்துபேச வல்லவரில்லாமற்போனார்கள். இத்தன்மையான காலத்தில் நூறு நூறாயிரம் ரதங்கள் நீறுநீறாகியழியக், குதிரைகளிறந்துகுவிய, கொம்புள்ளயானைக் கும்புகள்யாவு மொழிய, மாறுமாறாகிய மன்னருடல்களும் வேறுவேறாகிய வீரர்குடல்களும் தாறுமாறாகிச் சிதைய, மலைநிகர்புஜபல மண்டலேஸ்வரர்கள் தலைபோயுருண்டு சங்கடமடைய, இதனைக்கண்ட யாவருமஞ்சி யின்சொல்லுரைக்கத் திறங்காட்டிவந்த திரிகர்த்தன் சேனைகள் புறங்காட்டி நொந்து புலம்பி யோடும்படியாக விராடன் சேனைகள் மேலிட்டுச்சாடியபொழுது, கோபமாயெழுந்த குருகுலச்சேனைகள் கூறுகூறாய் நிலைகெட்டோடினார்கள் விரிட்டடர்ந்த விராடன்சேனைகள் வீரரோடெதிர்த்துப் போர்விளைத்தலால், அப்போரிலாற்ற மாட்டாமலஞ்சிப்பயந்தோடுகின்ற அலங்கோலத்தைத் திரிகர்த்தன் தம்பியாகிய இடனென்பவன் கண்டு, முகம்வேர்த்து, அண்டகடாகம் பிளக்கும்படி ஆர்த்து வில்லெடுத்து நாணிதொடுத்து, இருட்பாணங்களை விடுத்துச், சூரியனுமஞ்சி பொதுங்கத் தேரைச்செலுத்திப் போராடினான். வாரி நீரைவாரிய மாரிபோற் பொழியும் வாளியின வல்லமையால், விராடனது நால்வகைப்படையும்- ரதிகர்களும் பின்னிடைந்து ரதமுமுடைந்து யானைகுதிரைகளுமழிந்து மாறுபாரமையிபரு மொழிந்துபோனார்கள். தநுர்வேத சாஸ்திரிகளும் விராடன பிள்ளைகள் நால்வரும் சதானீகன் முதலாகிய தம்பியரும் வெற்றிப்பயிர்விளைக்கும் வீரவேந்தரும் விதரணசாலிகளாகிய மாந்தரும் இசைகெட்டழிந்து திசைவிட்டோடும்படிக்குத் திரிகர்த்தன் தம்பியான இடனென்பவன் மலைந்து, ஜெயம்பெறுகின்றதன்மையைத் திரும்பிப்பாராமலோடிய துரியோதனன் சேனைகள்கண்டு வருத்தியதோஷம் போக்கிப்புகழ்ந்து புளகாங்கிதத்துடன் வாடியபயிர் மழைகண்டவாறுபோல் மகிழ்ந்து, கடல்முழக்கம்போ லிரைந்து, திருப்பி விரைந்தோடிப் புகுந்து திரிகர்த்தன் தம்பியைக் கலந்து நானுபுறமும்பரந்து அணியணியாய்ப்பிரிந்து வில்லினைவளைத்து கொல்லெனப் பாணங்களைக் குவித்துச் சொரிந்தார்கள்.

அந்தத்தெப்பலினால் விராடன்சேனைகள் வெருண்டு- அரண்டு- புரண்டு - மருண்டு, மேனிபுண்ணாகி விலங்கிக் கண்களிருண்டுகலங்கிக் கருதாததெல்லாங் கருதிக் கனிந்தருகி வியாகூலமடைந்து அச்சமேலிட்டு அமர்முனைவிட் டோடாநின்ற அரசர்களை விராடனுடைய முதற்குமாரனாகிய சுவேதன்கண்டு கோபத்தாம் சொதித்து? மனம்பதைபதைத்து ஓடாதிருங்களென்றுகையமர்த்தி, திரிகர்த்தனையுங் குருசேனைகளையுஞ்சிதைத்துவிடுகிறேனென்று தேரைச் செலுத்திச்சென்று வைரவில்லைவளைத்து நாணிதொடுத்துக் குணத்தொனிசெய்து அஸ்திரசஸ்திரங்களையெய்து மாறுபடாத யானைப்பெருக்கத்தையும் கூறுபடாத குதிரைக்கூட்டங்களையும்நேருபடாத மிகுதிரவீரர்களையும் நீறுநீறாகநெரித்ததுமல்லாமல் மேலிட்டுவரும் வேந்தரையுமாட்டி நூறிரதங்களை நொடியிற் பொடிபடக்காட்டி மற்றோர்திசையில் வளைந்துபோர்மூட்டிச் சுற்றியபெருஞ் சேனைகளின் தலைகள் சுழலப்பேய் போலாட்டிப் பின்னிடவோட்டினான்.

இவனுக் கிளையவனாகிய சதானீகனென்பவன் மன்னவர்மடக்க வயச்சிலைவளைத்து, பொன்னாருள் பூண்ட தேர்மேல்வந்த மன்னர்முடிகளைத் தென்னங்குலைபோற் சிதறவுதிர்த்து முன்னும்பின்னும் முடுகியதிர்த்துச், சினப்பட்டுப் பயந்தோடுங்கும்படியாகத் துன்பப்படுத்தி உருத்துச்சினத்து, உறுக்கிச்சிரித்து, ஊத்துடன் முனைந்து ஒருதிசைபுகுந்தான்.

அவனுக்குத் தம்பியான சங்கனென்பவன் முன்னவன்காட்டிய முடுக்கைப்பார்த்து, வனைத்தேரோட்டி வரிச்சிலைகாட்டி, நவமணிபதித்த கிரீடப்பொறுத்த வெற்றிவீரர்க்கொற்றவரேறிய ஆயிரந்தேர்களை யடித்துசகுனறத்து, அச்சுமச்சுமுறிய சிதைத்து, அநேகரை மடித்துப், பிணமலைகுவித்துத் தானொருதிக்கிற்சென்று, ஜெயசிங்கம்போல்தாக்கிச், சத்துருக்களை யமனிடத்திற்குப்போக்கினான்.

இவனுக்கிளவலாகிய வராகசேதென்பவன் வாசமாலைதன் மணக்கவணிந்து, பூரூனுக்குரிய புகழுடனெதிர்த்து பலப்பெற்ற சிலையைவளைத்துப், பாணங்களால் உருக்குலைத்துப், பதறிக்கதறிச் சிதறிமுறியும்படி செய்து வேங்கைப்புலிக் கெதிர்ப்பட்ட மானபோலோடியபகைவர்யாரும் கெட்டொழியும்படி நிர்த்தூளியாக்கிவிட்டுப் பூணணிப்புயஞ் செழிக்கப்பொருந்தினான்.

இந்தப்பிரகாரம், பாற்கடலை மந்தாகிரியானது கலக்கிக் கடைந்தவாறுபோல், விராடராஜனது நான்கு பிள்ளைகளும் நால்வகைச்சேனையும் எட்டுதிக்கும் புகுந்துமிகுந்த போராடியவேளையில், தந்தையான விராடராஜன் அந்தப்புத்திரர்களின சாமர்த்தியத்தைக்கண்டு, உற்சாகங்கொண்டு, (ஆலமரத்தின்விழுது அம்மரத்தைத் தாங்குமாறுபோல்)தனக்குச்சகாயமாய் வந்துவளைந்த தன்மக்களைப் புகழ்ந்து, மகிழ்ந்து, தளர்ச்சியில்லாமற் களித்து, ஜயமாலையு முடியுந்தரித்த விராடராஜனதானும்வெகுண்டு, எக்களித்து, விசித்திர வின்னாணேற்றி, முச்சட்டை முழக்கங்காட்டி, அச்சுடனமைந்த தேரோட்டிச்சங்குகளீன்ற முத்தினங்கள் சந்திரனைப்போல் பிரகாசிக்கும் வயல்சூழ்ந்தநாட்டுக் கதிபனாகிய திரிகர்த்தன்தம்பியைவளைந்து, பத்துக்கணைகளைப் பாயத்தொடுத்து அவன்விடுத்த பாணங்களை யழித்துக் கெடுத்துக்- கொடி- குடை- தேர்- குதிரை- சாரதி- வில்லையுமழித்து அவனுடன்கூடவந்த வீரர்களையுங் குறைத்து, நேருக்குநேர் தாராளமாய் நெருங்கி, அவன்மேல் மாறுவேகவடிக்கணைமுடுக்கிச் சேனைவேறு யானைவேறு தேசராஜர் கூட்டம்வேறு ஆகச்சிதறும்படித் தாறுமாறாக மூதித்துத், தனிப்படப்பிரித்துப், போர்விளைத்த மச்சராஜனால் திரிகர்த்தன் தம்பியானவன் திகைத்துருந்தி, தோளுந்துவளப்பட்டு, வாளுந்தறிபட்டுச் சேனையுங்கெட்டுச் செருமுகம்விட்டு, ஓடுகின்ற பதாதியருக்கோரடி முந்திப்புறங்கொடுத்தோடும், புன்மையைத் திறமடைந்த விராடர்கோன்கண்டு, ஊழிக்காலத் தொருவனாகிய உருத்திரமூர்த்திபோ லுருத்தெழுந்து, வாடிப்போகிற குருசேனைகளை மதித்துத், தறித்து, மடியச்சிதைத்து, ஒருவருந் தனக்கெதிர்ப்படாமல் வதைத்துப் பிணக்குப்பைமீது சக்கரப்புகையத் தேரவிடுத்துச்சென்றான்.

இவ்விதமாக விராடபூபதியால் நிலையழிந்துவிட்ட குருசேனையும் திரிகர்த்தன் தம்பியும் பலங்குறைந்து, படைமுறிந்து, நொந்துபோனார்கள், அந்தயுத்தத்தில் இரத்தப்பெருகி ஆறுபோலோடப், பிணங்கள் மலைகள்போற்குவிந்து கூடிடக், காக்கையுங் கழுகுங் கலந்து விளையாட, நாயு நரியுஞ் சிரிப்பேலாட்டப், பேயும் பூதமும் புகழ்ந்து கொண்டாட, எமபடராருயிரை யிழுத்துக்கொண்டோடக் கூளியும் பருந்தும். விருந்துண்டாடப் காசகணங்கள் பாடிநின்றாட, அறுபட்ட தலைகளைப் பூமிதேவி யம்மானாட்டப், புயமுந்தலையும் பொருந்திப் புரளப், பொடிப்பொடியாக்கி, ஒருகோடிகடுசரங்களையும் அருகோடிய தேனையுந்தாண்டிச் செயங்கொண்டுவருகின்ற விராடராஜனது இடத்தைத் திரிகர்த்தன்கண்டு வெகுண்டு கொதித்து, வெருண்டுவில்வளைத்துப், புரண்டுபோன சேனைவெள்ளத்தைப் போகவொட்டாமல் திருப்பிச், சந்திரனைக்கண்ட சமுத்திரம் போற்பொங்கி, அட்டதிக் கயங்களும் அயர்ந்தடுங்கி மதம்பொழியும்படியாய் நாணொலிசெய்து, வெற்றிப்பாடல்கள் பாடுகின்ற நால்வகைப் படைகளுடன்சேர்ந்து, மகமேருவைப்போன்ற இரத்தினத் தேர்மேலிருந்து, கடுவிடநாகக் கணைமழைபொழிந்து விராடன சேனைகள்யாவும் விருதிழந்து புறங்காட்டச்செய்து, திக்கெட்டுந் திடுக்கிட்டுத் திக்குமுக்கிட்டு விக்கிட்டோடச்செய்து, மதயானைக்கூட்டத்தில் வந்து புகுந்த மடங்கலென்னுஞ் சிங்கத்தைப்போல், பாய்ந்து, தேரணிகத்தையும் யானையினத்தையும் குதிரைப் பந்தியையும் காலாட்களையும் போக்கிவிட்டுச், சோர்வடையாத தோளாண்மைபூண்ட சுசர்ம்மாவானவன், சுற்றிச்சுற்றித் துமலைசெய்யுங் காலையில் விராடராஜன் பிள்ளைகள்வந்து, மேல்விழுந்து, கொள்ளைகளான கொடுஞ்சமர் விளைத்தார்கள். அவர்களை வெங்கணையாயுதம் வில்லுமிழந்து, கரி பரி தேர் காலா

ருங்குறைந்து, குடல்கலங்கி, உடல்கடுங்கிக், குலைகுலைந்து, தலைசுழங்கி, உயிரொடுங்கிப், பெருமூச்செறிந்து, உடன்பட்டோருடன் இடங்கெட்டோடவும் தேகத்தில் தாங்கிய காயங்களுடன் சேனைகள் மருண்டேங்கவும் பசுக்காவலரும் படைவீரரும்பறந்து பின்வாங்கவும் படாதபாடும் படுத்தி, மச்சராஜனுடைய பசுமந்தையை தன்னிச்சையின்படி கைக்கொண்டு நச்சரவக்கொடியை நாட்டி நாம் வெற்றிகொண்டோமென்று, ஜெயபேரியடித்துச், சிந்தைமகிழ்ந்து, சிலதூரத்திற்கப்பால் சேனைகளையும் பசுக்களையுஞ்சேர்த்துத் திரம்பேசியிருந்தான்.

இவ்விதமாக வீரகண்டையும் வீரபட்டமும் விண்மணிமுடியுஞ் செங்கழுநீர்மாலையும் காங்கைக்கோதையும் பொருந்தித் திருந்தியிருந்த பெருந்தகையான திரிகர்த்தராஜனை மச்சநாடன்கண்டு, மதிமுகம்வேர்த்துத், தேருடனெதிர்த்துச், சிலைவளைத்திழுத்து, முறுக்குநாணியையிறுக்கியேறிட்டு, ஐம்பலர்வாளி ஐம்முகவாளி- ஐஞ்சிகைவாளி- ஐம்பூதவாளி- ஐம்பிறைக்கணை ஐந்துவடிக்கணை- ஐந்து இடிக்கணை - ஐந்துவிஷக்கணை- முதலியவேறுவேறு அஸ்திரங்களை விறுவிறென விடுத்துத், திரிகர்த்தனேறிய தேரையழித்துச், சாரதிதலையைத் தறித்துக், கொடியைக் குறைத்துக், குதிரையைவதைத்து, வில்லைப்பிளந்து, நாணியைத்துணித்துக், கவசத்தைப்பொடித்துக், கருத்தைக்கலக்கி, அச்சமுண்டாகும்படிக்குக் கொத்தாகிய பத்தம்பை அவனுடைய மார்பில் விடுத்தான். அந்த விராடன்விட்ட கணைகளினால், நேர்புகுந்த சுசர்ம்மா வானவன் தேரழிந்து, சிலைமுறிந்து, சிரொழிந்து, பாதவித்துப், பின்பு நெஞ்சுரமுற்று, இந்தவிராடனை நானினியில் விடமாட்டேனென்று, சேமத்தேரேறிச், சிலக்கணை கொண்டுசென்று, நேர்நின்று, ஆரவாரித்து, இருபதுபாணம் இடிபோல்தொடுத்து அவனது தேரச்சு- மச்சு- குற்றுக்கால் கொடுங்கை- கொடி-குடை- குதிரை- சாரதி- முதலியவெல்லாந் தூளுதூளாக்கிப், பஞ்சுபோற் கொட்டிப், பறக்கவிரட்டி அவனுடைய இடக்கை வில்லினைச் சடக்கெனத்தறித்துத், துவஜமழித்துக், கவஜங் கிழித்து, ஜாடும்பொழுது, தட்டுக்கெட்டுத் தடுமாறி யலைந்து, கட்டுவிட்டுக் காவலழிந்து, நிலத்தில் நின்று மலர்த்திவிழித்த கண்களுடன் வாடிவருந்தினன்.

சுசர்ம்மாவினிடத்தில் விராடராஜன்கட்டுப்படல்.

அப்பொழுது, அவனுடன்வந்த சேனைகளழுது ஐயையோ! நமதாசனுக்கும் வந்ததோபமுது, ஆஹா! தெய்வமேயென்று தொழுது நாவறண்டு நீர்மேவிட்டு யுத்தமுனைவிட்டுச் சித்தம்பிரமித் தோடும்படியாகச் சிதறக்காட்டிப், பலம்பெற்ற வில்லாளியாகிய விராடன்கழுத்தில் வில்நாணியைமாட்டி, ரதக்காலுடன்பூட்டி, ஜெயசங்கபேரி முழக்கி, நால்வகைச்சேனையோடு சென்று நான்கு புறத்திலும் காவலாகவடர்ந்து, பசுமந்தைகளுந் தொடர்ந்துவரும்படியாக ஓட்டிக்கொண்டு பணிக்கொடிதரித்த பார்த்திபனை நாடிப்போனான். அந்த அபஜெயத்தைக்கண்ட விராடன் மைந்தரும் பசுக்கூட்டங்களுக்குக் காவலான நந்தரும் படைத்துணைவந்த வேந்தரும் பராக்கிரமவீர மாந்தரும் தங்களாற் கூடியவரையிலு நேர்ந்து, காலகதியையோர்ந்து, மனநொந்து, கங்கபட்டரிருக்கு மிடத்திற்குவந்து, அவர் கால்மேல் விழுந்து தந்தையை யிழந்தோம், எந்தையாகிய அரசனைப் பிரிந்தோமென் றேங்கியழுதார்கள்.

அந்தவேளையில், நெடுந்தூரத்திலிருந்து யுத்தவிந்தையைப் பார்த்திருந்த தருமராஜனை குருகுலக்கோமகன் பயப்படாதீர்களென்று அவர்கள்படும் பரிதாபத்தை மாற்றித், தன்பக்கத்திலிருந்த பலாயனனாகிய தம்பியைக் கடைக்கண்ணாற்பார்த்தார், அவரது கண்ஜாடையைக்கண்ட வீமசேனன், ஊழித்தீயைப்போலெழுந்து, தன் உடலைபுமறந்து. யுகமுடிவில்தோன்றும் சங்காரக் கடவுளாகிய உருத்திரமூர்த்திபோல், பேரோசைகொண்ட வாயுதேவனனவன், உயர்ந்தமலைகளையும் உவரியலைகளையும் உலைத்துமோதிச் சிதைக்குமாறுபோல், மற்றொருதேரைவாரித், திரிகர்த்தன் தேர்மேல்மோதி, அவன் படைவீரர்களையும் கொன்று, பசுநிரைகளையும் வென்று விராடனையும் விடுவித்துக்கொண்டு, திரும்புதற் கெண்ணித், திடுதிடெனச்சென்றான். எடுத்தடிவைக்குமுன்னமே எற்றக்கோல் தூரம்போய்விட்ட இளஞ்சிங்கத்தின் ஆத்திரக் குறிப்பைத் தருமராஜனறிந்து, ஓ கோகோ! மோசம் வந்ததே என்றுணர்ந்து, தம்பியைத் தனிப்பட வழைத்து, அடாகுழந்தாய், அப்பனே, வீமா, ஒப்பில்லாச் சுப்பிர தீபம்போன்ற உத்தமனே! என்றணைத்துப் புகழ்ந்து உன்கருத்தை நானறிந்துகொண்டேன், என்கருத்தை நீகண்டுகொள்ளவில்லை. ஆத்திரப்படாதே. நமதடக்கம் விடாதே. இதுவரையிலுங்கழித்தவனவாசத்தைக் கெடுத்துப்போடாதே. இப்போது உதையமான சூரியன் அஸ்தமன மாகிறவரைக்கும் நாம் இன்னாரென்று எவர்களு மறியப்படாதே, ஒருவேளைச் சத்துருக்கள் நம்மைத்தெரிந்து கொண்டால், நாமிதுவரையிலும் பட்டபாடு பாழாய்ப்போமே, இதையுன் கருத்திலிருத்திச்சென்று, பெருஞ்சண்டைவிளைத்து, வீமசேனனென்னும்பெ

யனை வெளிப்படுத்தாமல், வில்லும்பாணமுங்கொண்டு, தேர்மேற்சென்று, திரிகர்த்தனுக்குன் திறங்காட்டி நின்று, அவனைத் தேருடன்வென்று, நம் விராடராஜனை மீட்டுவிடென்று, வேண்டிய புத்தியுத்திகளை வீமனுக்குரைத்து வீரர்வேச மிவனுக்கு மேலிடாதிருக்கும்படி எமதர்மராஜனாகியதன் தந்தையைப்பிரார்த்தித்துவிடுத்தார்.

அவ்வாறு அண்ணன் சொல்லுக்கடங்கிய வீமசேனன் கேயூரமணிகுண்டல முதலியபணிபூண்டு, அம்பறாத்தூணி யாவுந்தரித்து, ஆகாயமளாவிய குன்றனைய தேர்மேற்பாய்ந்து, வில்வளைத்து, நாணியேற்றி, வெற்றி பெற்ற சிங்கமானது யானைமேல்தாவும் விறுப்புப்போலும் வேகிறதீயைப்போலும், வெறுத்துப்போகின்றான். அதைவீமன்செல்லும் வேடிக்கையைப் பார்க்கும்படிக்குத் தேவேந்திரன்முதலியதேவர்களும் ஆகாயத்தினிறைந்து, அழகியவிமானத்தமர்ந்து வேடிக்கைபார்த்தார்கள்.

இப்பால், வீமனுக்குப் புத்திமதி விளம்பிவிடுத்த முரசக்கொடியோனாகிய தருமராஜன் மனந்தளராமலும் தம்பியை நம்பாமலும் நகுல-சகாதேவர்களாகிய தாமக்கிரந்தி தந்திரிபாலர்களைப்பார்த்து, ஐயா, இளந்தம்பிமார்களே! உங்களண்ணனாகிய வீமனை யனுப்பியிருக்கிறேன், அவனோ, மிகுந்த ஆத்திரமுடையவன், அவசரக்காரன் முன்கோபமுதல்வன், அவனொருவேளை, சுசர்மன்பேரில் பாய்ந்து, சுடுசரந்தொடுத்துச், சமர்புரியும் வேளையில் வீமசேனனுடைய வில்லும் பாணமு முறிந்து, மேனிவருந்தி, வம்புநேரிடுமாகில், தேரைவிட்டுக் கீழேகுதித்து அம்புகள் பறக்குங் கும்பலிற்புகுந்து, விற்போர்விடுத்து மற்போர்கொடுத்து, மலைகளை-மரங்களை வாரணத் தேர்களை-வாரியடித்து மாறுகொடுப்பான், அதனாலிவன் வீமனென்று வெளியாகிப், பாண்டவரிவ்விடத்தி லிருக்கின்றார்களென்று பகைவரறிந்து கொள்வார்களே, அவர்களறிந்தால் மறுபடியும் நாம்வனவாசம் பண்ணவருமே? நாமெண்ணிய வெண்ணம் ஒன்றும்நிறைவேறாமல் போய்விடுமே உலகப்பழிக்க இடமுண்டாகுமே என்று தம்பியரிருவர்க்குந்தழைக்கச்சொல்லி நீங்களிரண்டுபேரும் கூடச்சென்றிருந்துவீமனைமிஞ்சவொட்டாம லடக்கித் திரிகர்த்தனையடக்கி யுத்தந்தொடங்கிப் பசுக்களையும் விராடனையும் விலக்கி வேடிக்கைபார்ப்பவர் தலைகுலுக்கி வியக்கும்படியாய் அமர்முடித்து ஜெயத்துடன் வருவதே பெருமையென்றுரைத்தனுப்பிவித்தார். அவருடைய இதோபதேசத்தைச்சிரமேற்கொண்டு அவ்வாறேமுடிப்போமென்று அண்ணலைத்தொழுது வெகுளிமேற்கொண்ட இளங்காளையரிருவரும்பொன்மயமான போர்த்தேரூர்ந்து கல்லென் றிசைக்குங் கார்முகம் வணக்கி நூற்றிலொருவன் ஆயிரத்திலொருவனென்னு மதிரதவீரர் தலைகள் குதிரையின் காலிலும் யானையினடியிலு மகப்பட்டுருளும்படியாகச் சேனைகளைநடாத்திப் பாணப்பிரயோகம்பண்ணிக்கண்ணுக்கெட்டிய தூரம்பறந்து ஓட்டமாயோடுகின்ற வாயுபுத்திரனாகிய வீமசேனன்மேல் நாட்டமாய்நாடிச் சென்றவர்களாகிய திரிகர்த்தன் சேனைவெள்ளத்தை நீந்திப்போய்த் தேருடன் தேர்கலக்கப்போராடினார்கள். தேவர்களும் புகழாநின்ற குருகுலச் செயபதியான தருமராஜன் தம்பிமார் மூவரும் போயிருக்கிறார்களே தாழ்ச்சி யென்னமோ? சண்டை யாதோ? என்று மனந்தரியாதவனாய்த் தானெடுத்த வேடத்திற்குத்தக்க மரியாதையும் மகிமையும் தப்பாமல் சம்மார காலத்தில் புரண்டெழுகின்ற சலநிதிபோல் குணக்கடலு மருட்கடலுங்குலவுந்தேரேறி அஸ்திரநிறைத்துக் கட்டுகொட்டும் குச்சுப்பட்டுமுடைய வில்லைத்தொட்டெடுத்து வாயுவேகமனோவேகத்துடன்வந்து தம்மைத் தம்பிமார் பார்க்கும்படிக்குச் சமர்முனையிற் கலந்தார்.

இவருக்கு முன்சென்ற தம்பியரிருவரு நெருங்கி எப்புறத்துச்சேனைகளுமப்புறத்திலகலாமல்துப்பரவிவாழித்து மன்னர்தம்முயிரை வானுலகேற்றிச் சின்னபின்னஞ்செய்து வரும்தம்பிமார்களின் செய்கையை வீமன் கண்டு மேலாகிய சந்தோஷங்கொண்டு பலம்பொருந்திய வில்லில் சரங்களைப்பூட்டித் தலைப்புரண்டோடத் தாக்கினான்.

அவ்வேளையில் திரிகர்த்தனானவன் இவன் ஆரடா அப்பா என்று சென்றதேரைத்திருப்பி யெதிர்நின்று வீரலட்சுமி விளையாடுகின்ற வில்லைவளைத்துப் பாணங்கள் பற்பலதிசையிலும் பரந்திடச் சொரிந்தான். அக்காலையில் அழிவில்லாப் பலம்படைத்த ஆண்சிங்கம்போன்ற வீமசேனன் தனதேரைத் திரிகர்த்தன்தேருக்கெதிர்முடுக்கி அயிந்திராஸ்திரங்களை விட்டுமடக்கி அவன் தொடுத்த கணைகள் யாவையும் தறித்து வில்லையுமுறித்து நாணியுமறுத்துச் சாரதி குதிரைத் தலைகளையும்பறித்துத் தேரையுமுடைத்துத் தியங்கச்செய்தான். அப்போது திரிகர்த்தனானவன் இடைதெரிய நேரம்விடாமல் வேறுதேரேறி மின்னெனவிளங்கும் வடிவேலை வீமன் பேரில் வீசினான். அந்த வேலாயுதமானது பூர்ணச்சந்திரனைப் பிடிக்கத்தாவிய செப்பாம்புபோல் புரண்டு திசாதிசையிலுந் தீப்பொறியிறைத்து வருவதைமாருதிகண்டு மடமட வென்று பற்களைக் கடித்துநின்று அதனைப் பிரமாஸ்திரத்தால் ஒடித்தான். வேற்படைமுறிந்ததை

ச் சுசர்மன் கண்டுவெகுண்டு வச்சிரக்கட்டு முட்கட்டு ஏனுடைய கதையைச் சுழற்றிச் சரசரவென்றெறிந்தான் விறுவிறெனச் சுழன்று வெங்கதையானது வீமனை நோக்கி வருவதைப்பார்த்து நெருப்புத்தலைபெற்ற இருப்புக்கணைகளைப் பத்தெடுத்துத் தொடுத்துத் தனக்குநேர்வரும் கதாயுதத்தை நிமிஷத்தில் பொடித்து அசைவற்றிருந்தான். புலவர்கள் புகழும்படிக்குப் பொடிப்பொடியாயுதிர்ந்தழிந்த தன்கதாயுதத்தைத் திரிகர்த்தன்நோக்கி வரதவேலோ யெந்தவேலையோ? என்று மனங்கொந்துவாடி வாளையுருவி விண்டலத்துயர்ந்து மண்டலத்திற்பாய்ந்து வீசிய வீரத்தை வீமன்பார்த்து நகைத்து நாகம்போற் சினந்து மேகக்கணை போக்கித், தேகஞ்சோகங் கொள்ளும்படித் துளைத்துத்தாக்கி, அவனைச்சார்ந்த யானை சேனை பரிவாரங்களையுங்கலக்கி, அப்பாலோட்டுவித்துச் சுசர்மாவையும் அவன்கைப்பிடித்த வாளையும் அலங்கோலமாக்கி எங்குமில்லாமல் இலவம்பஞ்சுபோல் பறக்கடித்து அவன் தலைமயிரைப் பற்றியிழுத்தான், அக்காலையில் திரிகர்த்தராஜன் பொறிபுலன்மயங்கித் திக்குமுக்கிட்டுத் தலைபிறக்கத்துடன் தளர்வுற்றிருந்தான்.

பீமனிடத்தில் திரிகர்த்தராஜன் கட்டுப்படல்.

அதெப்படியிருந்ததென்னில் (பாண்டவர்வனவாசம் பண்ணும்போது, அவர்களைப் பங்கப்படுத்தவந்த துரியோதனன் சித்திரசேனனிடத்தில் சிக்கிப்புத்திர மித்திர பூவைமாருடன் தாயனைப் பிணியாகத் தானுங்கட்டுண்டு பாதவித்த தன்மைபோல்) யுத்தமுகத்தில் மற்றொருவரையும் வெற்றிபெறவொட்டாத சுத்தவீரத்திறமுற்ற திரிகர்த்ததேசராஜனென்னுஞ் சுசர்மாவானவன் சிங்கத்தினிடத்திற் சிக்கிக்கொண்டமத்தகஜம்போல், வல்லமைகுறைந்து, வாயுகுமாரனாகிய வீமனிடத்திலகப்பட்டுப்போனான். உடனே வீமசேனன் விராடபூபனையக் கட்டவிழ்த்து, அவனைத் திரிகர்த்தன்தேரினின்று தனதேரிலேற்றிக்கொண்டு தான்பிடித்த சுசர்மாவின் தலைமயிரைச் சுற்றிப்பிடித்த பிடிவிடாமல் தன்தேர்மேலிழுத்து, இரத்தத்துளி சிறிட்டுச் சுற்றிலுந் தெறிக்கும்படியாய், மடலோடுமடல்சேர மணிக்கயிற்றினால் இறுக்கிக்கட்டி, அவனைத்தன் எதிரிலிருக்குங் குருசேனைகளுக்குங்காட்டி, இதோ, சண்டைசெய்யச் சயர்த்துள்ளவர்கள் வாருங்களென்று அவர்கள்மீது சரமாரிபொழிந்து கோபாவேசங்கொண்டு நின்ற வீமசேனனைச் சுசர்மாவின் சேனைகள்கண்டு, பயங்கொண்டு, புறங்காட்டி யோடிப்போனார்கள் அவ்வேளையில் சர்வசம்மாரகாலவுருத்திரன்போ லுருத்தெழுந்த வாயுகுமாரனை விராடராஜன் நோக்கி, நமதுபங்குத் தெய்வமோ இவ்வுருக்கொண்டெழுந்ததென்று மிகமகிழ்வடைந்தபோது, பதினாயிரங் குதிரைவீரர்கள்பாய்ந்து கோபாலருடன்சேர்ந்து, திரிகர்த்தராஜன் கைக்கொண்ட விராடனுடைய பசுநிரைகளைத் திருப்பிக்கொண்டு ஜெயம்ஜெயம் ஜெயமென்று ஜெயக்கொடிகாட்டிச் சிறுபறைகொட்டிப், பலவித வாத்தியங்களு முழக்கிக்கொண்டு, தங்கள் எதாஸ்தானமாகிய மச்சதேசத்திற்குத் தென்புறத்தில் கலந்து முன்போலிருந்தார்கள்.

கங்கபட்டராகிய தருமராஜன் நமதுபக்ஷம் ஜயமென்றறிந்து, முந்திக் கூடாரத்துக்குப்போய் ஒன்றும்,அறியாதவர்போல் தாமிருக்கத்தக்க ஆசனத்திலிருந்தருளினன்.

இப்பால், சத்துருவாகிய திரிகர்த்தனைவென்று அவனைத்தேர்க்காலில் இறுகக்கட்டிக்கொணர்ந்தவீமசேனனும்விராடராஜனும் தேரூர்ந்துசென்று,சேனைகளுடன் பிள்ளைகளுந் தம்பியருஞ்சூழத் தர்மராஜனுக்கெதிரில் போய்ப்பணிந்துநின்று,சுவாமிதேவரீருடைய அனுக்கிரகத்தால் ஜெயங்கொண்டு வந்தோமெனச் செப்பினார்கள். இணையில்லாத கங்கபட்டரும் அவர்களையாசீர்வதித்து அருகிலிருந்த ஆசனத்திலிருத்தினர். அப்போது கங்கபட்டரை விராடராஜன் பணிந்தெழுந்து, ஆண்டவனே போர்முகத்தில் வீரர்களைப் பொருதியோட்டி, ஊர்முகத்தில் என்னைக்கொண்டுவந்துகாட்டி உலையாப்புகழை நிலைநாட்டி, யெனக்குக் குலதெய்வமாகத்தோன்றிப் பகைவர்கைப்பட்ட வென்னையும் பசுக்களையும் மீட்டிரட்சித்த பலாயனனுடைய பேருதவிக்கு நானென்ன வேறுதவி செய்யப்போகிறேன், அப்படிக்கல்லவென்று,செய்தாலும், இவர்புரிந்த உதவிக்கீடாகாதே இதற்கொத்த கைமாறுளவோவென்று யோசிக்குமிடத்தில், இப்புவியினு மெப்புவியினும் இப்பிறப்பிலு மெப்பிறப்பிலு மில்லையென்றுரைத்துப், பலாயனனைத் தன்மார்போடணைத்து, என்மைத்துனனான் கீசகனைப்பலிகொடுத்துக் கதியற்றிருந்த வென்னை நீங்களிவ்வேளையிலடுத்து, எதிரிகையிற்பட்ட சிறையைவிடுத்து எனக்குயிர்கொடுத்தீர்கள்;நீங்கள் இவ்வுதவி செய்யாவிடில் இந்நேரமென்கதி யெப்படியாமோ! அறியேன் ஆகையால் என்னரசுரிமையும் என்பட்டணமும் என்செல்வமுதலாகிய யாவும் என்னுயிரும் உங்களுக்கே தத்தமாகக் கொடுத்தேன். உங்கள் பெருமைக்கும் அருமைக்கும் நீங்கள்செய்த நன்மைக்கும் நான் தத்தம்பண்ணிய பொருள்கள் தகுதியற்றனவாயிருப்பினும் பக்திஸாரத்தையாகச் செய்கின்ற வழைப்பூசையை எப்பொருட்குமுரிய ஈசன் அங்கீகரித்துக் கொள்வதுபோல், தாங்களுந் தயைபுரிந்து ஒப்புக்கொள்ள

வேண்டுமென்றும், எப்பொழுது மென்னைவிட்டு நீங்காமலிருந் திரட்சிக்கவேண்டுமென்றும், பற்பலவிதமாக உபசார வார்த்தைகளைச் சொல்லிப் பிரார்த்தித்தான்.

அவ்வரசன் மொழியைக்கேட்ட தருமராஜனுந் தம்பியர்மூவரு மகிழ்ந்து, புகழ்ந்து வாழ்த்தினார்கள், பின்னும் முரசக்கொடியுடைய முதல்வனாகைத்துமச்சதேசாதிபனாகிய மன்னனே பாண்டவர்களிடத்தில் பக்ஷமாயிருந்த நாங்களைவரும் ஒருவரைவிட்டொருவர் பிரியாமல் உத்தமனாகிய உம்மிடத்தில் வந்தடைந்த அந்நாள்முதலிந்நாள் வரையிலும் விசாரதனையுடன் நன்றாகக்கழித்து, அன்னவஸ்திராபரணங்களு மநுபவித்து, மகிழ்ச்சியுடன் வாழ்ந்தோம், இன்னுஞ் சிலநாளிருக்கிறது நாங்கள் வெளிப்பட்டுப்போவதற்கு அப்படியே நாங்கள்போனாலும் உமக்கெந்நாளுங் குறைவில்லையென்று, உபசாரஞ் சொல்லிப் பரிசுத்த இருதயம் படைத்த பார்த்திபனே! நீரளித்த சகலசம்பத்தையும் நாங்கள் அநுபவித்ததைப்போல், ஆயிரம்பங்கதிகமாக ஆநந்தப்படும்படியாக உமது தேரிற் கட்டுப்பட்டிருக்கின்ற திரிகர்த்தராஜனைக் கட்டவிழ்த்துவிட்டு, உபசரித்துச் சன்மான வெகுமானத்துடன் ஒரு ரதமுங்கொடுத்து அனுப்பவேண்டியதென்றார். தன்னருகிலிருந்து இரக்கமாகச்சொல்லிய தருமராஜனுடைய கருணைமொழியைக் காதாரக்கேட்டு, மறுவாய்த்திறவாமல், தானே யெழுந்துபோய்க் கட்டவிழ்த்துவிட்டு, ஆபரணவஸ்திராதிகளும் வழங்கி அழகியதேரு மளித்து ஓ திரிகர்த்தனே! முன்னொருநாள் நீயவமானப் பட்டிருக்கப், பின்னும்வந் தகப்பட்டமையால், மன்னர் முறைமைப்படிக்கு உன்னைவரால் வெட்டவேண்டிய வெட்டை இந்த மகாநுபாவராகிய கங்கபட்டர் தப்புவித்தார். இவரால் கிடைத்தது பிராணபிச்சையென்று எப்போது மறவாமலிருவென் றனுப்பினான். அத்திரிகர்த்தன் விராடனைப்பார்க்க வெட்கப்பட்டு, மெத்தவிசனமுற்றுப் புத்திமயங்கிச்சித்தப்பிரமைகொண்டு, சுயோதனன்முதலாகிய கொற்றவர் தனக்குப் பின்னுதவிவந்து கைகொடுக்காமற் போனார்களே அவர்கள்முகத்தில் நாமெப்படிப்போய் விழிப்போமென்று மனமெலிந்து, ஓடியொதுங்கிப் பதுங்கிய தன்படையுடன்கலந்து, கங்கபட்டனென்பவனைக் கருணையில் தருமராஜனென்று புகழ்ந்து, பிழைத்தது போதும்போதுமென்று போனான்.

அப்பால் தருமநந்தனன் விராடனைப்பார்த்து, இப்பொழுதுபோன திரிகர்த்தன் ஒருவேளை, மேற்படைகூட்டிக்கொண்டு வந்தாலும் வருவனென்றுரைக்க, அதைக்கேட்ட மதிகுலவேந்தனுமச்சராஜன் ராஜராஜனாகப தாதிகளான நால்வகைப் படையையும் பிள்ளைகள்மூவரையும் பேரணிநிறுத்தி, மேற்படைவரு மார்க்கத்தில் வேவுகாரரை யனுப்பிவிட்டு, அன்றிரவு முழுமையு மவ்விடத்தில் முகாம்போட்டுக் கொண்டிருந்தான். மூத்த பிள்ளையாகிய சுவேதன், திரிகர்த்தனுலடிபுண்டு, மூறிபட்டோடி, முக்கண்ணனுடைய முதல்வனைப்பூசித்து எக்காலத்துமாழிபற்றவர்க்கு மிளையாமலிருக்கும் வரம்பெறக்கருதித் தவஞ்செய்திருந்தான்.

இங்கே சூரியவஸ்தமனமானவுடனே அதெப்படியிருந்ததென்றால், (வீமசேனன் திரிகர்த்தனைத் தேருடன்கட்டிய திறத்தைச் சமுத்திரநாதனான வருணன்கண்டு, இன்னும் பாண்டவர்களை வெளிப்படவொட்டாமல் தடுத்திருக்கின்றான் சூரியனென்று கோபங்கொண்டு, மேனிசிவக்கக்காட்டி மேற்றிசையிற் கொண்டுபோன விதம்போலிருந்தது) கேளும் ஜனமேஜய மகாராஜனேயென்று வைசம்பாயனர் சொல்லிவந்தார்.

உத்திர நிரைமீட்சிச்சருக்கம்.

விருத்தம்.

உருவமாயருவாயகம்புறத்தினுமுளாவும், ஒருவன் மூவுலகோரடியளந்தசேவடிகள், வருவதாகியும்போவதாகியுத்தடுமாறுங், கருவென்னும்பெருங் கடற்கரையேறலாங்கலமே... ... ...*

எ-து, உருவாகியும் அருவாகியும் உள்ளாகியும் புறம்பாகியு முளாவுநின்றவொருவனது மூவுலகு மோரடியாலளந்த சேவடிகள் போக்குவரத்தாகத் தடுமாறுகின்ற கருவென்னும் பிறவிப்பெருங்கடலைக் கடக்கலாகுந் தெப்பமாம் இத்தெப்பமாகிய செந்தாமரைக்கமலம்போன்ற திருமாலின திருவடிகளைச் சிந்தையால் தொழுது, எந்தையாகிய வேதவியாசனையும் வந்தித்து, ஒப்பற்ற சித்திரமணித்தேரோடிக், குருசேனையுடன் கூடிவந்த திரிகர்த்ததேசாதிபனென்னுஞ் சுசர்மாவானவன் விராடபுரத்தின் தெக்ஷணபாரிசத்தில்சேர்ந்து ஆதிசேடனால் சுமக்கப்பட்ட இப்பூமியதிரும்படிக்குப்பெரும்போர்தொடுத்து, விராடனுடைய மாட்டுமந்தைகளை மடக்கிப்பிடித்துச்செயம்படைத்துத்திரும்புங்காலையில் பசுக்காவல ரடிபட்டோடி விராடராஜனுக் கறிவித்தவுடனே அவ்வரசன் ஓ ரக்குரோணிச் சேனையுடன்வந்து, திரிகர்த்தனுடன் சண்டைபுரிந்து தேரிற்கட்டப்பட்டுச் சுயம்பாகியினால் விடுபட்டு மறுபடியுந் திரிகர்த்தனைப் பிடித்துத் தேர்க்காலுடன்கட்டி அவமானப்படுத்திக் கங்கபட்டர் மொழியால்விடுத்து அவன் கைக்கொண்ட மந்தைகளைத் திருப்பிக்கொண்டகதையைச் சொன்னேன்

அந்தத் திரிகர்த்த ராஜனுக்குப் பின்படையாகவந்த துரியோதனனும் பெருஞ் சேனைகளும் மச்சநகரத்தின் வடபாரிசத்திலடுத்து அங்கிருந்த மாட்டுமந்தையை மடக்கியதையும் பேடியினால் மானங்கெட்டுப் பசுநிரைகளை விட்டோடியதையும் பகருகிறேன கேளும் ஜெனமேஜெயமகாராஜனே யென்று வைசம்பாயனர் சொல்லத் தொடங்கினார்.

குவலயம்புகழுங் குருகுலக்கோமானே! கேளும்திரிகர்த்தராசன் தன்கைவசப்பட்ட மாட்டையும்விட்டுத் தானுஞ் சட்டுண்டு விடுபட்டுச் சேனையுடனமுதுகிட்டுத் திரும்பிவிட்ட செய்தியைத் துரியோதனன்கேட்டு ஆக்கிரமித்து, வியாக்கிரமம்போலெழுந்து பாண்டவர்கள் பதுங்கியிருக்கும் பருவத்தையும் பாராமல், பசுநிரையை மடக்கிய பக்குவத்துடன் பட்டினம்வந்துஞ் சோராமல் விருதாவேலை செய்துவிட்டான் சுசர்மாவென்று வெம்பி ஐயோ ஆண்பிள்ளைக்குடையவ னிவனென்று நம்பி வீணமோசம் போனோமே, அடா துச்சாதனனாகிய தம்பி! நமது நால்வகைப்படையுமெழும்படி விளம்பி நான் யுத்தகோலங்கொள்ள வெற்றிமுடி கொண்டு வாவென்றுகிளம்பி? நாம் இக்கெட்டுஞ் செவிடுபடப்பேரிகைமுழக்கிக்கொண்டு பட்டப்பகலில் புறப்படுவது பக்குவமல்லவென்றுசொல்லி, விட்டிடிக்குங் கிரணங்களையுடைய வெய்யோன உதயஞ்செய்யுமுன்பாக அட்டகஜத்திற் கிணைப்பட்ட துட்டயானைகளை நடாத்திக கட்டுக்காவலுடன் மட்டுப்படாச் சேனைகள் புடைசூழப் புறப்பட்டு விராடபுரத்து உத்தர திசையிற்சென்று, நவதானியம்விளைந்த நாடு காடுகளை யழித்து நால்வகைச் சேனையை நிறைத்து ஊரிலுள்ளோரை யோடவிட்டடித்து ஓடும்பேர்களை யோடாமல் மறித்துச் செழித்துவளர்ந்த கருப்பந் தொல்லைகளைத் தீயிட்டுக்கொளுத்தி, நன்செய்புன்செய்ப் பயிர்களை நாசப்படுத்தி, ஆழ்ந்த குளங்கள் அனைத்தையுந் தூர்த்துத் தடங்கள் மடங்களைச் சரியவிடித்து, ஆறு - கால் - ஏரி - அணைக்கரைகளை- அழித்துப், போராகக்குவித்த நெற்களைப் பொரிபறக்கக் கொளுத்தி, நாடுகாடாகக் காடுமேடாகக் கெடுத்து, மாடுகளைப்பிடித்து அறப் பறந்தேங்கவும் மறஞ்சிறந்தோங்கவும் வில்லைவளைத்து அல்லல்விளைத்தார்கள். அக்காலையில், அந்தமந்தைகளுக்குக் காவலாயிருந்த நந்தகோபாலர் வந்தெதிர்த்துப் போர்புரிந்து சிதைந்தொந்து திறனழிந்து ஊர்புகுந்து இராஜமைந்தனாகிய உத்தரகுமாரனோ டுரைத்தழுதார்கள்.

அவர்களைநோக்கி யென்னதுன்ப நேரிட்டதென்று கேட்க, அவர்கள் இராஜகுமாரனடிமேல் வீழ்ந்தெழுந்து இருகையுங்குவித்து இளஞ்சிங்கக்கன்றாகியசுவாமி பராக்குதென திசையில் திரிகர்த்தன்வந்துபுகுந்து பசுமந்தையைமடக்கிய செய்தியறிந்து அப்பசுக்குலங்களைமீட்கவேண்டிச்சேனைகளுடன் விராடபூபதி, சென்றிருக்குஞ் சமையம்பார்த்து, அரவக்கொடியோனாகிய துரியோதனராஜன் பலம்பொருந்தியபடைகளுடன் வடதிசையில்கலந்து பதாதிகளைப்பிரித்துவிட்டு, நாட்டிலுள்ளபலன்கள் யாவையுமழித்து, அதாகதஞ்செய்து, மாட்டையுங்கவர்ந்து கூட்டமாயெதிர்ந்த எங்களையு மாட்டிப்பிளந்து விட்டான். நீர் இத்தருணத்தில் வீட்டிலிருப்பது தகுதியோ? சந்திர குலேந்திரனே! என்று முறையிட்டார்கள்.

இவ்வண்ணம், தன் பிள்ளையி னிடத்தில் வினையுரைப்போர் விளம்பிய சொல்லை உத்தரனாகிய சுபுத்திரனைப்பெற்ற சுதர்க்கனையானவளறிந்து, ஆ! இதென்ன? நாட்டில் அரசனில்லாத வேளைபார்த்து மாட்டைமடக்குவார்களோ? இராஜநீதிக் கேற்குமோ? பெண்பாலாகிய நானென்செய்வேனென் றேங்கி, தன்பக்கத்திலிருந்த பாங்கியரைநோக்கி, அடிதாதியரே! இந்தவேளை தப்பித்துக்கொள்வதற் கோர்வழியுங்காணேனும். வந்திருக்குங்குருகுலச்சேனைகள் நமதந்தப்புரம்புகுந்து தொந்தரை செய்யுமுன்னமே ஜாக்கிரதைப்படவேண்டும். அதற்கு என்சிந்தையிலொரு தந்திரந்தோன்றுகிறது. அதைக்கேளுங்கள். எப்பேர்ப்பட்டவர்களும் பெண்கள்பேரிற் படையெடுக்கலாகாதென்று அரசநீதி யிருக்கின்றது. அதைப்பலர றியாவிட்டாலுஞ், சிலராயினும் அறிந்திருப்பார்கள், பாவபுண்ணியம் பார்த்து நடப்பார்கள், ஆகையால், நீங்கள்யாவரும் ஆயுத பாணிகளாய்ப் புறப்பட்டுக், கோட்டை மதில்மேலேறிச், கூட்டங்காட்டி, நமது மச்சநாட்டைக் காருங்களென்றுசொன்னாள்.

அவளுரைத்த வார்த்தையைக்கேட்ட உத்தரகுமாரன் நெருப்பில்விழுந்த புழுப்போல்துடித்துப், பெருமூச்சுவிட்டுப்? பெற்றதாயைவணங்கி, அம்மா! நானிருக்க நீயென்ன சொன்னாய்? ஓகோகோ! நீயிப்போ துரைத்தமொழியானது மிகவு நன்றாயிருந்ததென்று வெகுண்டு நகைத்து, ஐயையோ! என்னைக்கொல்லமாட்டாமல் புல்லியமொழி சொல்லினையே. உனது வயிற்றிற் பிறந்துசகல கலைகளுமறிந்து? செல்வச்சிறுவனாயிருந்து செழித்து அமுதருந்திய வென்னை மன்னனுக்குப் பிறந்த மைந்தர்களில் கடைசியிற்பிறந்த மகனென்னப்பூரித்து ஆதரித்துவந்த அன்னையாகிய நீ என்னை யருமையாக இதுவரையில் வளர்த்தது சத்துருக்களால் பகைவந்து

நேர்ந்தபோது, பெண்டுகள்கூடிச் சண்டைசெய்து தாங்குவதற்குத்தானோ? இந்தஸ்திரீகளால் மச்சநாட்டுக்கு வந்த வருத்தநீங்கிப்போமானால், நானுனக்குப் பிள்ளையென்றிருந்து பிரயோசனமென்ன? எனக்கு வீரனென்னு மேம்பாடென்ன? நான் கற்றவித்தைகளினால் பயனென்ன நானொருவ னிருக்கிறேனென்று சற்றுமதியாது பயனற்றவார்த்தைகளைச் சொல்லினையே. தாயே! நானந்தச் சத்துருக்களைச் செயிக்கமாட்டேனென் றெண்ணினையாக்கும். சப்திக்குஞ்சப்த சமுத்திரம்போல் படையெடுத்துவந்து நமது பசுநிரைகளைக்கவர்ந்த பகைவருக் கெதிரில் நானொருவனுமுனைந்து முழுப்போர்புரிந்து, இமை கொட்டுமுன்னமே யினைத்தோடவாட்டி. விஜயக்கொடி நாட்டி, ஜெயபேரியடித்து, யாவரும்புகழ்ந்து மெச்சும்படி திரும்பிவந்து உன் பொன்னடியைப் பூசிக்கிறேனம்மா! ஆனால், அந்தப்போர்முகத்தில் காலமறிந்து, சமயந்தெரிந்து, மனகருத்துணர்ந்து, முகக்குறிப் பேர்ந்து, எதிரியினெண்ணங்கண்டு, தேர்விடுகைத் தக்கவனாகவும் என்மனதுக் கொத்தவனாகவும் சாரதியொருவன் கிடைப்பானாகில், யாரென்னைவெல்ல வல்லவர்கள் அம்மணி! அப்படிப்பட்ட சாரதியொருவன் இல்லாக் குறையினால் நீயுரைத்த பேதைமைச் சொல்லுக்குப் பின்னிட்டுத் தவிக்கிறேன். இப்போது வந்தெதிர்த்திராநின்ற கர்ணராஜன வீஷ்மர் கிருபாச் சாரியார்-துரோணச்சாரியார் அரவக்கொடிபடைத்த துரியோதனன் இவர்க ளியாவரும் புறங்கொடுத்தோடப்போராடி, அவர்கள்குலத்தில் அவதரித்திராநின்ற மகாவீரசிகாமணியாகிய அருச்சுனன் கூட அதிசயிக்கும்படியாகச்செயித்து நமது மாட்டு மந்தையைமீட்டுக், காட்டுக்கோட்டி விட்டு, இந்நாட்டில் வந்து அடிவைப்பேன், அம்மாவென்று உத்தரகுமாரன்சொல்ல. அதைக்கேட்ட சுதர்க்கணையாளவள் என் அப்பனே நீ யிப்போதுரைத்ததெல்லாஞ் சரிதான். உன்னிஷ்டப்படி தேரைச்செலுத்தத்தக்க வல்லவனை நானெங்கே கண்டு தேடுவேன்? உனக்குச்சாரதி தேடுதற்கு முன்னமே எதிரிகள்வந்து கோட்டையைக் கைக்கொண்டு போவார்களே யென்றுசொல்லித் தாயும் பிள்ளையும் எக்கமுற் றிருக்குஞ்சமயத்தில் இக்கருத்தைப் பக்கத்திலிருந்துகேட்டிருந்த பணிப்பெண்ணானவள் உத்தரனுரைத்த உறுதிச்சொல்லையும் அருச்சுனனைப்புகழ்ந்துபேசிய அன்பையும் தன் சித்தத்திற்குறித்துச்? சற்றுசிதானித்துச், சித்திரவில்கொண்டு சிவபெருமான் தலைமேற் புடைத்துப்பாசுபதாஸ்திரம் பெற்ற தனஞ்சயனாகிய பேடியிருக்கும்நாடகசாலையிற்புகுந்தாள்.

மிக்க அவசரமாகவந்தவிரதசாரணியின் அக்கறையையும் முகக்குறிப்பையும் பிரகந்நளையாகியபேடி கண்டு ஓடிவந்து. வாரும், உட்காருமென்றுபசரித்து, இதுவரையிலும் பேதமில்லாமற் பேசுவதுபோற்பேசித், தங்களுக்குள் அமைத்துக்கொண்ட சைகையினால் தனித்துச்சென்று, தெற்குத்திசையில் திரிகர்த்தனை யனுப்பிவிட்டுத், திரண்டசேனையுடன் வடதிசையிற்புகுந்து மாடுமடக்கினான் துரியோதனனென்று கோபாலர்வந்து கூறினார்கள். அந்தமொழியைக்கேட்ட சுதக்ஷணாதேவி சிந்தைநொந்து? அருகிருந்த தாதியர்களையழைத்து, விராடராஜன வருகிறபரியந்தம் கோட்டைமதில்மேற் கூட்டங்காட்டி நாட்டைக் காருங்களென்று நவின்றாள். அப்பேச்சைக்கேட்ட உத்தரகுமாரன் மனம்பொறாமல் மாதாவைவெறுத்துத், தனது வீரப்பிரதாப வெற்றியைப்பேசித், தன்மனதுக்கிசைந்த வலவனிருப்பானாகில், தனஞ்சயனுங் கொண்டாடச் சண்டைபோடுவேன்? பகைவரைச் சாடுவேன், க்ஷத்திரியத்திறத்தைச் சாதிப்பேனென்று சஞ்சலப்படுகின்றானென்று, சொன்னாள்.

அம்மொழிகேட்ட விவேகவல்லவனாகிய பேடி ஆத்திரப்படாமல், தாங்கள் கடத்தவேண்டிய அஞ்ஞாதவாசத் தவணைநாளைக கணக்குப்பார்த்து, ஊர்வசி சாபமுற்ற ஒருவருடத்தொகையையும் காலமும்பலமுங் கண்டறிந்துகொண்டு, வெளிப்படுங்காலம் இதுதானென்று மிகமகிழ்ச்சியுடன்துரோபதியைப்பார்த்து, பெண்ணாயகமே! இவ்வளவுதூரம்வந்து என்காதிலேற்றிய வீராசமானதுவிருதாவாய்ப்போகாமல், எப்படியாவதுசுதர்க்கணைக்கும் உத்தரனுக்குந் தெரியப்படுத்திச், சாரதித்தொழிலுக் கென்னை யிசைவிப்பது உன்கடமையென்று, ஒருதரத்திற் கொன்பதுதரமாகச்சொல்லி வேண்டினான், அவ்வாறே நல்லதென்றுநடந்த வண்ணப்பெண்ணானவள் நெருங்கித்திணிந்த தனமும் சுருங்கிக்கனிந்த மனமும் துவண்டவிடையுஞ் சிறந்த நடையுமுடைய உத்தரகுமாரத்திக்குச் சங்கதியாவுந்தெரிவித்து, அவளுடன் சென்று விராடபுத்திரனாகிய வீரகண்டதரித்த இளஞ்சிங்கத்தைக்கண்டு, ஐயா! நானொரு நன்மை சொல்லுகிறேன். ஐயமில்லாமல் அங்கீகரியும். வையமுழுது மும்மை வாழ்த்தும், பொய்யில்லாப் புகழணிபூணலாம் இப்போது நேரிட்டிருக்கிற துஷ்டனை வெல்லுவதற் கிஷ்டமிருந்தால், திருத்தமாகிய தேரைப் பொருத்தமாகச் செலுத்தஞ் சாரதியில்லையென்று சங்கடப்படவேண்டாம். நமது உத்தரைநாயகியாருக்கு நடனத்தொழில் பயிற்றிவராநின்ற பிரகந்நளையெனனும்பே[illegible]க்கொப்பாகிய சாரதி இப்புவியிலுமில்லை, எப்புவனத்திலுமில்லை. அவள், ஸ்ரீ

கிருஷ்ணமூர்த்தியின் தங்கையான சுபத்திராதேவியைத் திருமணமுடித்தவன் காண்டாவனத்தை யெரித்தகாலத்தில் அக்கினிதேவன்கொடுத்த அழிவில்லா இரதத்தைச்செலுத்தி, யாவருந்துதிக்கத் தேவருங்களிக்க அடுபோர்புரிந்து செயம்பெற்றிருக்கின்றாள். நான் பாண்டவர்க்குரிய பத்தினியிடத்திருந்தகாலையில், இந்தப் பேடியின் திறத்தை யறிவேன். மெத்தமகிமைபெற்றவள், வீரப்பிரதாபமுற்றவள், மேலும்வல்லவள் மிகவுநல்லவள் என்பேச்சைநம்பி யோசித்துப்பாரும் வேந்தன்மைந்தனே! என்று விரதசாரணி சொல்லவும் உத்தரகுமாரனுக்குடன்பிறப்பாகிய உத்தரையானவள் அலர்ந்த செந்தாமரைக் கொப்பாகிய தமயன் முகத்தைதயவுடன்நோக்கி, எனதண்ணவே! இந்த மாலினிசொன்ன வாக்கியம் ஒருக்காலும்பிசகாது. ஒருநாள் பரதசாஸ்திரத்தைக்குறித்து நானும் அந்தப்பேடியும் பேசிக்கொண்டிருக்கும்போது, சாரதித்தொழிற்குரிய சாஸ்திரப்பேச்சும்வந்தது, அந்த விஷயங்களை யாவையும் கிரமமாகப் பிரசங்கித்து எனசித்தம் பிரமிக்கச்செய்து, தேர்விடுந் திறமெல்லாந் தனக்குத் திட்டமாய்த்தெரியுமென்று உண்மையைச் செப்பியிருக்கிறாள். அதனால் அந்தப் பேடியை யொப்புக் கொள்ளும்படியாக நானும் விரும்புகிறேனென்று தங்கைபேசவும் இவ்விருவர் பேச்சையுங் கேட்ட உத்தரகுமாரன் கலீரெனநகைத்துப் பளாபளா! நல்லவார்த்தை சொன்னீர்கள், கேடில்லாக் கீர்த்தியை யுடையவர்கள்பேடியையுஞ் சாரதியாகப் பெறுவார்களோ? ஆணும்பெண்ணுமல்லாத அலியைச் சாரதியாகக்கொண்டு, போர்க்களத்திற்சென்று, சத்துருக்களை வென்று,ஜெயம் பெற்றாலும், அது நிலைநின்று புகழாமோ, என்பெருமைக் கழகாமோ? பேடிமுகத்தில் விழித்துவிட்டு ஒரு வேலைக்குப்போனாலும், அக்காரியங் கெடுதலுமன்றி நமக்குண்டாகிய ஆண்மையும்-அறிவும்-புகழ்ச்சியும் -மகிழ்ச்சியும் -பொருளாகாமற்போய்விடுமே, அடடா! இப்பேர்ப்பட்ட அலிகளது முகாவலம்பனம் பண்ணப்படாதே. அந்தோ? பேதமைப்புத்தியாற்பேசவந்தீர்களே போங்கள் போங்களென்று பொருமிபுடைத்தான். அவ்வாரதவன்கொண்ட ஆத்திரத்தைக் கண்ட சைரந்திரியானவள், சரசவிராடராஜ தநயனே! நான் சொன்னவளைப் பேடியென்றெண்ணிப் பேசாதே. அவளுடையகாரியமிப்போதுதெரியாது இனிமேல் தெரியப் போகிறது. அப்பொழுது என்னை நீ எப்பொழுதுங் கொண்டாடப்போகிறாய், ஐயனே! இவளை வலவனாகக் கொண்டு ஜெயம் பெறப்போகிற மேன்மையும்-நான்புகன்ற வாய்மையும்-நீ-வசனித்த தூய்மையும் - இன்னுஞ் சற்றுநேரத்தில் அறியப்போகிறாய். வெகுகாலத்திற்குமுன்னமே இவளுடன் கூடி ஓரிடத்திருந்து பழகியவளாதலால், இப்பேர்ப்பட்டவளென்று இவள் குணங்களையெல்லாம் எடுத்துச்சொல்லத்துணிந்தேன். இன்னுஞ் சொல்லுகிறேன்? உனக்கு நல்லகாலமிருந்து இவ்வல்லவளைச் சாரதியாகக்கொண்டு யுத்தகளத்தில் புகுவையாகில் வீரமும் பிரபலவெற்றியும் பெற்றுப், பசுமந்தைகளையு மீட்டுக்கொண்டு, சுபகரமாய்த் திரும்பிவந்து உனது அன்னையாகிய சுதர்க்கனையைத் தொழுதுமகிழ்வாய். இவளுக்கு கைவாசியுண்டு. இந்தப்பேடியைவிட்டு நீ வேறொரு சாரதியைக் கொண்டுபோனாலும், போர்முனையில் இழிவாகிய அபஜெயமடைவதற்கு ஐயமேயில்லை. அன்றியும், சாரதி யெப்பேர்ப்பட்டவளாயிருந்தாலும் சாமர்த்தியமுள்ளவனுக்குத் தாழ்ச்சியென்ன? (வல்லவனுக்குப் புல்லுமாயுதம்) என்னும் வசனமறியாயா?(மண்பூனையானாலும் எலிபிடிப்பதேகாரியம்.) நானுங்கட்கு விரோதியல்லவே உங்களுடைய சுகதுக்கங்களுக் குடன்பட்டவளே, இனிநானுனக்குச் சொல்லவேண்டியது யாதொன்றுமில்லை இளவரசிறே! என்று பணிப்பெண்ணியம்பினாள். உத்தரைகுமாரத்தியும் அதற்கொத்துப்பேசினாள், இவற்றையெல்லாங்கேட்ட இளஞ்சிங்கமானவன் சாரதித் தொழிற்குவேறுவழியில்லாமையால், ஒருவாறு சம்மதித்துமண்குதிரையை நம்பி யாற்றிலிறங்கும் வகையாயிருக்க இறதேவண்ணமாமகளே! உனசொல்லை நம்பினேன். நல்லது, அப்படியேயாகட்டும்.தெய்வச்செயல்உள்ளபடிபேநடக்கட்டும் அந்தப்பேடியையழையுங்கள் பார்ப்போமென்றான். அவனுடன்பட்டமையைத்தெரிந்துகொண்டு, பத்தரைமாற்றுப் பசும்பொன்னாகிய பணிப்பெண்ணும்உத்தரைகுமாரத்தியும் ஓரடியாகவோடிப், பேடியுருவந்தாங்கிய பெருந்தகையைக் கண்டு வாடியமைந்தன் மனதைத்திருப்பினோம் கூடியவரையிலுடன்பட்டு உன்னையழைக்கிறான்.வாவென்றழைக்கு முன்னமே பிரகன்னளையானவள் இதோ, வந்தேன்வந்தேனென் றெழுந்து,வேகமாகநடந்து, கையிலணிந்த வளையல் கலகலவென் றொலிக்கக், கமலக்கண்ணிலங்கு மதிமுகஞ்ஜொலிக்க வந்து இராஜகுமாரனைக்கண்டு உபசரித்துநின்றாள் இப்படியாகவந்தபேடியை இராஜபுத்திரன்பார்த்து, ஓ, பேடி? அவங்களுடைய சுபாவமறிந்து எசமானன் கருத்துணர்ந்து, காலசமயங்கண்டு கைத்திறங்காட்டிச் சவ்யோசிதமாகக் குதிரைகளைநடத்திப் போர்முகத்தில் தேர்செலுத்துந்திறம் உனக்குண்டோவென்று றிறவன்கேட்க,எதிரில் வணங்கிநின்ற பேடியானவள் எங்களிளஞ்சிங்கமே கூலிக்குக் குற்றுகிறவனைக் கேளிக்கையாடச் செய்

வதுபோல், நாட்டியஞ்சூழ்பிக்கும் அலியாகியபேதையை விற்பூட்டிப்பெருந்தும் போர்முனையில் தேர்விடச்செய்வது திறமோ? இராஜராஜர்களறியுந் தொழிலை நானறியத்தக்கவளோஐயா அந்தச்சாரதித்தொழிலென்ன சாமானியமோசொல்லும். அழகு-ஈகை- குணம்- புகழ்-மெய்ம்மை-வண்மை-முதலியயாவுமுள்ள மச்சராஜன் மகனே ஆணும்பெண்ணுமல்லாத அலியானவள் உமதுள்ளக் குறிப்பும் குதிரைகளின்குணாதி சயங்களு முணர்ந்து தேர்விடத்தக்கதிறமுடையவளாவேனோவென்று, சிரமசைத்துக், கரநெரித்துக்,குறுநகைகொண்டுசொன்னாள். அவள்காட்டியபுன்னகையின்குறிப்பை மன்னன் மகனறிந்து இவளிடத்தில்வதோ,கொஞ்சம் வித்தையின் இறுமாப்பிருக்கிறதென்றோர்ந்து அடிபேடி என்மனதொத்தசாரதி மாண்டுபோய்விட்டான். அதுமுதல்என்பராக்கிரமமும் ஓய்ந்துபோய்விட்டது இனியெனக்குத்தக்கசாரதி யெப்படியகப்படுவானென் றேக்கமுற்றிருந்தேன், இப்போதுன்னுடைய திறமையுந் தெளிவும் களிவும் அநுபோகசாலிகள் சொல்லத்தெரிந்து கொண்டேன், தேர்விடுந் தொழிலுக்கு உன்னையேவிரும்பி யிருக்கிறேன், சுத்தவீரனான ராஜன எத்தனை பலசாலியாயிருந்தாலும் யுத்தஞ்செய்தல் ஓய்ந்திருத்தல் உடன்சென்றெதிர்த்தல் திரும்பியோடல் போர்மறுத்தல் பிராணனிறத்தல் முதலாகிய வினைகட்கெல்லாம் சமயம் காலம் இடம் இடமறிந்து தேர்செலுத்துஞ்சாரதி தீர்க்காலோசனை செய்யாவிடில், எசமானனுக்குன் இன்பமென்பதெவ்வளவுமிராது. அன்றியும், அரசனவெற்றிமாலையணிவதும் பெருப்புகழ்பெறுவதும் பெரியகாரியங்களை முடிப்பதும் எதிரிகளை யோடவிட்டடிப்பதும் இவைகளியாவும் சாரதியின் பேருதவியினா லுண்டாகத் தக்கனவேயன்றி வேறில்லை, ஆதலால் நான் விஸ்தரித்துச் சொல்லவேண்டுவதுமில்லை, நாமிப்போது செல்லுகின்றபோர்முகத்தில் தேர்செலுத்தும் உன்றிறமையை நான்கண்டுகொண்டால், அளவுபடாத என்சம்பத்துகள்யாவும் உனக்கே சொந்தமென்று ஐயமில்லாமற் கைமேற்கொண்டு, வையகம்வாழ்த்த மகிழ்வுற்றுய்யலாம் வாசனை தங்கிய கருங்குழலோங்கிய ஓ, பேடி என்னை நீ வேறாகநினையாதே உன்மனம்போல் நடந்துகொள்வேன் நமது விராடபுரத்திற்கு வடதிசையில் வளைந்திருக்கிற சத்துருக்களோடெதிர்த்துச் சண்டைவிளைத்துச், செயித்து, மாட்டுமந்தையை மடக்கிவருவோம், சீக்கிரந் தேர்கொண்டுவா போவென்று கட்டளையிட்டான்.

பேடி சாரதித்தொழிலுக் கிசைதல்.

உத்தரனுரைத் தனைக்கேட்ட பிரகன்னளையானவள் நான்பலவகைச்சாதுரியமுள்ள இச்சாரதித்தொழிற்கு வல்லமையற்றவளாயினும் இராஜலக்ஷணமமைந்த உமது கருணைக்கண்ணின் கடாட்ச விட்சண்ணியத்தினாலும் மேன்மைதங்கியவிராடபூபதியின்சத்தியநெறியினாலும் பொன்னாட்டினர்புகழ இந்நாட்டினர்மகிழ என்னாற்கூடியமட்டும் தேர்விடுகிறேன், மன்னா! நீ யாதொன்றுக்கும் மயங்காமல், யுத்தகோலங்கொள்ளென்றுபேடி கூறியதீர்மொழியை உத்தரகுமாரன் யோசித்து நிதானித்துத், தேர்விடுகிறம் இவளிடத்திலில்லாவிடில் நமது பணிமாது இத்தனை துணிவாகப்பகர்வாளா ஏதோ, கொஞ்சம்பசையிருக்கிறது, இனிநமக்குப் பயமில்லையென்று மனங்களிகூர்ந்து, யுத்தகோலச்சாலையில் நுழைந்துகுத்திவிச் சல்லடந்தொடுத்துத், தட்டுவரிந்து, அரைப்பட்டிகை கட்டி, வச்சிரக்கவசம்-உருக்குக்கவசம்- இருப்புக்கவசம்? தரித்துப், பாஷிபந்து கட்டகத்தையணிந்து, வாகுவலயம் புனைந்து, அங்கைசுரடி-புறங்கைசுரடி-வீரச்சாடு காச்சாடு முன்கைப்புணிதொடுத்து, முழங்கைத்தோட்கட்டு இருப்புச்சிரா-மார்புகுறும்பூண் இருண்டலம்பரித்துத், திரிபுண்டரந்தரித்து செந்தூரத்திலகமிட்டு, முத்தாரம் இரத்னாரம்- மோகனாரங்களும்-அணிந்து மாணிக்கப்பதக்கம்-வயிரப்பதக்கம்-தாம்பிப்பதக்கம்-நத்திப்பதக்கம்-சரப்பணி-கண்டசரம்-உத்தரசஞ்சம்- மோகனமாலை-முதலிய ஆபரணங்களும் தொடுத்தமாலை - கோத்தமாலை- தும்பைமாலை- வெட்சிமாலை-முதலிய மாலைகளுந் தரித்துச்? சாந்துசவ்வாதும்பூசி நவமணிபதித்த ஜோதிமாமகுடஞ்சிரமேல்தாங்கி, வீரபட்டங்கட்டி வாளும் வேலு மருங்கிற்சேர்த்து, உச்சிதமான பச்சைசவில்லேந்தி, அம்பறுத்தூணியழகுடனிறுக்கிக்காலில்வீரகண்டாமணிதொடுத்துப், போரலங்கிர்தம்யாவும புகழ்பெறக்கொண்டு, யுத்தசன்னத்தனாகத் தோன்றித்தலைவாசலிற் சென்றுநின்றான்.

இத்தன்மையான உத்தரகுமாரனைப் பெற்றதாயாகிய சுதர்க்கனையானவள் கண்ணாரக்கண்டு, கருத்துள்மகிழ்ந்து, ஒன்றுந்தோன்றாமல் உள்ளங்குளிர்ந்து இஷ்டிப்படப்போகிறதென்று சிந்திக்கும் வேளையில், மைந்தனோடிவந்து சாஷ்டாங்கமாகப் பணிந்து வணங்கினான், சேயானவன் தொழுதகாட்சியைத் தாயானவள்பார்த்து ஆசையாகத்தழுவி, முத்தமிட்டு, அன்பினாலுருகி ஆநந்தம் பெருகி, என்கண்மணியே தேர்மேற்சிறந்து, போர்முனை புகுந்து, தீரசத்தியினருளால்வீர வேந்தனா

வென்று வெற்றிமேற்கொண்டு, பசுக்களுடன்மீண்டு பட்டணம் வருகிறானென்று வாழ்த்தினள். இதற்குள்ளே, பேடியானவள் கோப்பமைந்த குதிரைப்பந்தியை யராய்ந்துசுழி-சுத்தம்-ஜாதி-குணம்-தேசம்-வம்சம்-இலக்ஷணம்-நிறம்-நடை-ரேகலிங்கீரத்து-மானம்-வயிரம்-திராணியம்-ரோஷம்-வேகம்-இவைமுதலியவற்றிற் சிறந்த சுபகாமுள்ள குதிரைகளை நாலுப்பிடித்து ரதத்திற்பூட்டி அம்பு முதலிய ஆயுதவகைகளும் வைத்துச் சுற்றிலும் பத்தி பத்தியாக வெற்றிக்கொடிநாட்டி ஆசாரவாசலிற்கொண்டுவந்து தேரைநிறுத்தினள், அத்தருணத்தில், உத்தரன் தங்கையாகிய உத்தரைகுமாரத்தி முத்து இரத்தினமுதலிய நவமணிகளாலமைத்த ஆலஞ்சுற்றி, வெண்ணீறளித்துத் தமயனைப்போற்றி அருமையான என் அண்ணாவே தேவரீர் யுத்தமுகத்திற்சென்று, சத்துருக்களை வென்று, அவர்கள்சிரத்திற்கட்டியசித்திரவஸ்திரவிருதத்துணிகள் எல்லாவற்றையுங் கொண்டுவந்து கொடும் நான்விளையாடும் பொம்மைகட்குக் கட்டவேண்டுமென்றாள்; இளையவள் வார்த்தையைக்கேட்ட இராஜகுமாரனவனாயாத்தலையைவளைத்து, (அக்காடுவெட்டிப் பருத்திவிளைக்கில் அப்பாயெனக்கொரு துப்பட்டிதாருமென்னும் பழமொழியை ஒத்திருக்கின்றதே நமது தங்கைமொழியென்று) மாறுத்தரஞ்சொல்லமாட்டாமல் நகைத்துக்கொண்டிருந்தான்; அவனுக்கருகிலிருந்த பேடியானவள் ஆகாகா, அம்மா! அவ்வாறே கொண்டுவருவதற்கட்டியென்ன? சாமர்த்தியமுள்ள உன்தமயனுக்குஇது ஒருபெரிதோ? அவரவர் தலைத்துணிகளையுங் கொண்டு ஜெயம்பெற்று வருவதுமரிதோ. நீசந்தேகப்படவேண்டாமென்று உறுதியாகச் சொல்லி உத்தரனைநோக்கிச், சகுனங்களெல்லாஞ் சரியாயிருக்கின்றது இதுவேநல்லவேளை, இரதமீது ஏறுமென்றாள். அவன் அப்படியேயாகட்டுமென்று அன்னைமுதலிய பெரியோர் யாவரையும் வணங்கி, விடைபெற்றுப், பொன்மலைபோன்ற தேரிற்பொருந்தி போர்ச்சிங்கம்போல் பூரித்திருந்தான்.

உத்தரகுமாரன் அமருக்கெழல்.

அப்பொழுது, சுதர்க்கனையானவள் தன்புத்திரனது முன்னழகையும் பின்னழகையும் பார்த்துப் பொங்கிப்பெருமூச்சுவிட்டு ஒருபாகம்பூரிப்பும் மற்றொருபாகத்தில் அறியாச்சிறுவன் யுத்தத்திற்குச் செல்லுகிறானேயென்ற ஏக்கமுங் கொண்டவளாகிநின்றாள், அவ்வேளையில், அரமனைப்பெண்களியாவரும் கற்பூரதீப நீராஞ்சனமெடுத்துத் தங்கள்தங்கள் இஷ்டதெய்வங்களைப் பிரார்த்தித்துப் பேடியைவாழ்த்தி எங்கள்பிள்ளைபத்திரமத்திரமென்று சொல்லி நின்றார்கள். பேடியும் அவர்களைப்பார்த்து, நாங்கள் போய்வருகிறோமென்று சொல்லி இராஜஸ்திரீயினிடத்திலும் விடைபெற்றுக்கொண்டு குதிரைகளின் கவினக்கயிற்றை இடதுகையாற்பிடித்துச், சாட்டையைவலதுகரத்தில் தாங்கித், தேரின்மீது ஒருகால்ஊன்றுமுன்னமே-சுதி-கவனம்தாவலென்று சொல்லப்பட்ட ஐந்துவேகத்தையுமுடையனவாய்ப் பூமியிடமறவும்தும்புகள் மேலெழுந்து ஆகாயத்தைக் கப்பிக்கொள்ளவும்புரவிகள் அதிவேகமாகச் சென்றதுகள். அந்த விராடபுரத்திலுள்ள பிராமணக்ஷத்திரிய வைசிய சூத்திராதிகளில் ஆண்களும் பெண்களும் அணியணியாகநின்று, எங்கள் இளவரசராகியஉத்தரகுமாரருக்கு மங்களமுண்டாகவென்று, மனதாரவாழ்த்தித் தங்கள்தங்கள் வழிபடுகடவுளைத் தொழுது, துதித்தார்கள், இப்படியிருக்கக், கண்மூடிக் கண்திறப்பதற்கு முன்னமே வாறுறகிவிர்ந்து, வளர்ந்த மதில்சூழ் இராஜவீதிகளையும் மற்றும் பற்பல வீதிகளையுந்தாண்டி, ஒற்றைச் சக்கரமும் சப்தமாவென்னுங் குதிரையுமுடைய தேர்மேற் பிரகாசிக்குஞ் செங்கதிர்போல, சங்கிராம ஜயவீர்த்தண்ட இரணஜிய உத்தரகுமாரன்உத்தரதிசைக்குவந்துவிட்டான்.

இப்பிரகாரம், விராடபுத்திரன் வடதிசையை நோக்கி அதிவேகமாக வருகின்ற இரதத்திற்பொருந்தியவிளஞ்சிங்கம்போன்ற அவ்வுத்தர குமாரன் ஸ்ரீராமனைப் போல் குபேரதிசையைக் குறிக்குங்காலையில், வானிடமறச்செறிந்து நிறைந்த நக்ஷத்திரங்கள்போலும், அளவிடுதற்கரிய கடற்கரை மணல்போலும், திரண்டுபாவிய துரியோதனன் சேனைகள் தன் கண்களுக்கெட்டிய தூரம்வரையில் விரிந்து நிறைந்திருப்பதைக்கண்டு, ஆஹாஹா? அடிபேடி! பொறு - பொறு- பொறு- பொறு- அவசரப்படாதே, நீநிறுத்தேர் விறுவிறென்றோடுகிறது ஐயோ? என்தலைகிறுகிறென்று சுற்றுகிறது பூமி நெறுநெறுவென்று நெரிகிறது என்குலைபோ நடுங்குகிறது குடல்குழம்புகிறது. எதிரினிற்குஞ் சேனைகளைப் பார்த்தால், நெற்பயிர் நலைகுகிறது பாவி-சேனாசமுத்திரத்தைப், நமக்கெதிராகிய படைகளைக் கண்ணால்தான் பார். யானையெத்தனை யெத்தனை கோடியோ? குதிரையெத்தனை யெத்தனை கோடியோ? சேனையெத்தனை யெத்தனை கோடியோ? தேர்களெத்தனை யெத்தனை லக்ஷமோ? நாம் எப்படிகணக்கிடப் போகிறோம், என்னசெய்வோம், ஐயையோ! பேடி நீயாகிலும், பார்த்துச் சொல்லடி யென்றேங்கி, உள்ளங்கலங்கி, கைகால்கள்நடுங்கி, கண்களிருண்டு உடல்பதைத்து, உயிர்துடித்து, நாவறண்டு, மூடிசோர்ந்து, பிணம்போல், தேர்மேற் சாய்ந்துபோனான்.

இவ்வாறு பிதற்றி மூருகக்கடவுளாகிய செவ்வேள் விட்ட வேலாயுதத்தால் கிழிபட்டு வீழ்ந்த கிரவுஞ்சகிரி போல், போர்முனைபுகுதற்குச் சக்தியில்லா தவனுய்த் தேர்மேற் சாய்ந்த உத்தரகுமாரனைப் பேடிபார்த்துத் தன்னிருகையாலு மணைத்து, எடுத்து, நிறுத்தி, வேர்வைதுடைத்துச் சோபசிரத் தாகமளித்து, ஆனைத்தேற்றி, அவன் முகத்தை நோக்கி, எனப்பா இப்படியாறு யென்று அறிவாலுயர்ந்தபேடி சொல்லத்தொடங்கினள்.

வாளும்வேலுங்கொண்ட விராடன்மைந்தனே நீஎதிர்க்கும் படையைப்பார்த்துப்பயந்தாயோ? என்கில் நிலைவிழ்ந்தாய்? இருமாங்கெதிர்ந்த பகைவரை யெங்குமில்லாமல் அழித்துவிடுவதொன்று அல்லது, ரணமாவது புத்தகளத்தில் மாள்வதொன்று. இதுவே சுத்தவீரருனடய்துணிவு. வேறே யொசிக்கத்தக்க தொன்றுமில்லை. இதைவிட யாதேனுமுண்டாயிருக்குமாகில், அதையெனக்குச்சொல்லு, முற்றிலும்வளைந்த சத்துருக்களை வெற்றிபெற்று வருகிறேனென்று, நீஉன் அன்னை முதலியயாவரிடத்திலும் உரைத்துவிட்டு உத்தர திசையைநாடி வின்னுஞ் சற்றுநேரமாகவில்லையே, இதற்குள் மறந்துபோனாயோ? நல்லது; கைப்பிடித்த வில்லைவளைத்துக், கடுங்கணைதொடுத்துப், போர்செய்து, அனுவத்தனைபேறுங் காயப்பட்டுத் திருப்புவையாகில், அப்பொழுதும், சிலர் உன்னைக்கிஞ்சித்து சூரத்துவமுள்ளவனென்று மதிப்பார்கள் இல்லாவிடில் அதிக இலேசாக எண்ணுவார்கள் சற்றுமுன் நீ வீட்டிற்பேசி வந்த வீரவசனங்களைமுற்றிலுமறந்து இப்பொழுது முதுகிட் டோடும் இழிவை யோசிக்குமிடத்தில், குறைந்தபெண்டுகள் கூடக் குலுக்கென்று நகையார்களோ? இப்படிப்பட்ட உடம்பும் எடுக்கலாமோ! உன்னையார்தான் பூசித்துப் புகழ்வார்கள்? ஐயோ! அடா, தம்பி! நீ புறப்படும்போது புலிபோற் செற்சித்து, பார், சத்துருக்களையெல்லாம் அதஞ்செய்து, நமது மாடுகளைமடக்கிக்கொண்டு வருகிறேனென்று வாய்பதட்டமாயுளறினையே. அப்படி மகாவீரம் பேசி வெளிப்பட்ட நீ, எதிராளிகளிருக்குமிடத்தைதமிதிக்கு முன்னமே உயிருலைந்து, உடல்நடுங்கித், திடனழிந்து, திகைத்துவிட்டையே, உலகமென்னசொல்லும்? படையைப்பார்த்துப் பதறிக்கதறி யோடினுனென்னும் பழிப்பிற்கிடமாமே, இத்தன்மையாகிய நிந்தை நேரிட்டபின்பு உயிரிருந்தென்ன? மானங்கெட்டும் பிராணனை வைப்பது மரியாதையோ? நீயே யோசித்துப்பார், பயப்படாதே. தயிரியமாய் ரதத்தின்மீது உட்காரு. அலைகடற்கொப்பாகிய பெரும்படைகளை வென்றுவருவோம், அப்பா! இன்னொன்று சொல்லுகிறேன் கேள், (கருங்கற்றூணொன்று சுமக்கமாட்டாத பெரும்பளுவைத்தாங்கிய பொழுதும் பிளந்துமுறிந்து போய்விடுமன்றித், தளர்ந்துவளைந்து தலைசாயமாட்டாது) அதுபோல், அளவிடப்படாத யானைசேனையடுத்தாலும்? கூடியமட்டுஞ்சண்டைசெய்துதளர்ந்தவிடத்து அப்போர்க்களத்திலேயே யுயிரை யொழித்துவிடவேண்டியது. மெலிந்துவெருண்டு புறங்கொடுத் தோடுவது வேந்தர்க்குத் தகுதியல்லவென்று விளம்பியிருக்குஞ் சாஸ்திரத்தை விசாரித்ததில்லையோ, இப்பொழுதுநா னென்ன, ஒன்றும் முழுகிப்போகவில்லை, போர்முகங்கிலேயுங் கார்முகமுறையும் கடுங்கணைதீதொனசயுஞ் சுற்றிருக்கின்ற நீ பெரிய மலையைக் குறிபாகக்கொண் டடிப்பதுபோல், பெருங்கும்பாகிய சேனைகளின்பேரில் மொத்தமாகப் பாணங்களைத் தூற்றிவிட்டால், குமபலிற் கோவிந்தம் போடுவதுபோல. அம்புகள்போய்விழுந்து இன்னாரினியாரென்று பாராமல் யாவரையுங்கொல்லும். உனக்குத்தகுந்தபடி யானுந்தேரைச்செலுத்துவேன். அப்போதுனக்கு மேலான கீர்த்தி விளையும். வைத்தகுறிதப்பாமல் மாட்டுகிறுன் விராடராஜன் மைந்தனென்று கடல்சூழ்ந்த வுலகக் காவலரும் படைகளும் உனக்கெதிர்வாராமல் ஒருமிக்க வொழிவார்கள், அப்பனே, இப்படியாக அடித்து, வேந்தர் யாவரையுமுடித்து, அவர்கைக்கொண்ட பசுக்கூட்டங்களைப் பிடித்துச், செயபேரிகைபடிதது, விராடபுரம் போய்ச் சேருவோமாகில், சந்திரவம்சத்தரசர் அனைவரும் பந்துவர்க்கத்தா ரெல்லோரும் உன்னைப் புகழ்வார்கள், நெடுநாளைக்குங் கீர்த்தி நிலைபெற்றிருக்கும், அவ்வாறன்றிப், புறங்காட்டியோடுவையாகில், உலகுள்ளளவுந் தீராதவசையடைவாய், வந்த பகைவரை வென்று, திரும்புவோமாகில், வையகமெல்லாங் கைகுவித்துப் போற்றுவதுமன்றி, உன்தந்தையுஞ் சிந்தை மகிழ்ந்து அளவில்லா ஆனந்தத்தை யடைவான். ஒருவேளை நமதெண்ணமுன்னுக்குவாராமல் நாமிறந்து போனால், புகழுடம்பு பெற்று, அரம்பாஸ்திரீகளின் இளமுலைப்போகந் துய்த்து, வீரசொர்க்கமுற்றுக், கற்பகத்தருவி னிழலில் வீற்றிருந்துவாழலாம், இரண்டுவிதத்திலும் இன்பமக்குண்டாம், ஓ இளங்கன்றே! பேடியாயிருப்பவனைப் பேடியென்றுபேசுவது பெருமையன்று, பெரும்போர் புரிவேனென்று வந்து, பேச்சுத்தடுமாறிச் சோர்ந்து படையைக்கண்டுபயந்து, ஓடவழிபார்க்குமொருவனையே பேடியென்று உயர்ந்தோருரைப்பார்கள், (சொற்சோர்வு படேல் சோம்பித்திரியேல்) என்னும் வாக்கியங்களை வீரபோருடையவேந்தர் மறவார்கள். கலகத்திற்சென்று, கல்நாட்டகின்று உயிர்நீத்த வீரர்களின்நு கதைத் திறம்

உணர்ந்திலையோ? அரசிளங் காளையே! என்று பற்பலவண்ணமினுலும் உத்தரகுமாரனைத் தேற்றிக், கலவரத்தை மாற்றிக் கட்டுரையாகிய வீரதர்யங்களாற் கனாத்தாள்,

இவைகளையெடுத்துக்காட்டிய பேடியின்கருத்திற் கிணங்காமல், தேரோடும் வீதியில்தேரழுந்துஞ் சிறப்பினையுடைய மச்சநாட்டன் மைந்தனுகிய உத்தர குமாரன் விற்பிடித்து வெகுண்டு, பற்கடித்து மருண்டு, கண்ணை ருகத்துக். கடைவாய்குழைத்துப், புருவநெறித்து நெற்றிவியர்த்துப் பொருமிச்சொல்லுகின்றான் ஆரடி, அடிபேடி, உற்றுப்பாரடி, குடிகேடி? உனக்குக் கண்ணில்லையோ? அவர்களசேனைக் கெண்ணில்லையோ, இப்படையோ டெதிர்ப்பதாரடி, இப்படியேதிருப்பிப்போவது சீரடி. அப்பப்பா, என்கொப்பன் கலங்குகிறதே, குடைகளும் நாற்படைகளும் கருங்கடற்போற் றலங்குகிறதே. பூமிமுழுதுஞ் சேனைக்காடாகப் பொங்கிநிறைகின்றதே. ஐயோ! சித்தம்பிரமிக்கிறதே. இந்தக் கும்பலில் நானொருவனுஞ்சென்று, மீண்டுவருவே னென்பது விகடப்பேச்சே. பெற்றதந்தைக்கும் வச்சே, என்மதியுங்கெட்டுப்போச்சே, வதேது, இனிக்காரியமில்லை, நான சண்டைக்குப் போனுல், தப்பாமற் சாவேன். சந்தேகமில்லையடி பேடி! என்கதியை யென்னதென்றறியடி. என் அன்னைதாய்க்கு நான் கடைக்குட்டிப்பிள்ளை யானதால் இனிப்பெறப்போகிறோமா, வளர்க்கப்போகிறோமா, என்று செல்வமாகவும் மிக அருமையாகவும் வளர்த்தார்களே. நானும் என்போலியாகிய சிறுவர்களோடு சேர்ந்து உன்னடையில் கையிற்பிடித்து விளையாடித் திரிந்துகொண்டிருந்தேனே. என்னைச் சண்டைமுகத்திற் கொண்டுபோகாதையடி, யுத்தஞ்செய்யும்பருவம் எனக்கின்னுமில்லையடி, நான் அறியாதபிள்ளையடி எனக்கேனிந்தச்சள்ளையடி, ஆஹா! இதென்ன அநியாயம், கொடையாளியாகிய கர்னன்-வீஷ்டுமர்-துரோணுச்சாரியர்- கிருபாச்சாரியர் அஸ்வத்தாமா- மற்றுமுள்ளவீரர் பலருஞ் சேர்ந்து மூண்டபோர்முகத்திற்புகுந்துபோராட அறிவேனே, போடிபோ, அடிபேடி! நல்லது தெய்வச்செயலுள்ளபடியாகிறதென்று, மனேதிடங் கொண்டு. சண்டைசெய்வோமென் றெண்ணினுலும், தேர்கள் கோடி-யானை யிரண்டுகோடி, குதிரைவெகுகோடி, பதாதியர்-கோடாகோடி, இவையன்றியும், பட்டவர்த்தனர் - மகுடவர்த்தனர்-அதிரதர் சமரதர்-மகாரதர்-அர்த்தரதர்-இவர்களையெல்லாம் படைத்துணையாகக் கொண்டுவந்து நமது பசுமந்தைகளைக்கவர்ந்தவணங்காமுடியோனுக்கெதிரில் வணங்குமுடிபெற்ற பேடியாகியவுன்னை உதவியாக நம்பிப்போய்ச் சண்டை தொடங்கலாமோ, சொல்லடி, பேடி! காலபலமும் தன்பலமும் மாற்றான் பலமும்-துணைப்பலமும்-ஆராய்ந்துணராத அரசனது முயற்சிகள் அனைத்தும் பயன்படாதென்று பெரியோர் சொல்வார்கள், நானே மெத்தவுஞ்சின்னவன், அதிலுஞ் சொற்ப பலமுள்ளவன். இத்தன்மையனுகிய வென்னை அதிரதரிற்சிறந்து பின்பலம் விரும்பாமற் போர்முகத்திற் புகுந்து, மதயானைகளைப்பிளந்து,புஜபலபராக்ரம விக்ரமம்பெறும் போர்விஜய சிங்கம்போன்றஅருச்சுன ராஜனென் றெண்ணி மதித்திருக்கின்றாயோ, ஐயோ, பேதையே! அந்த விஜயனபுரியும் போர்க்களத்தில் எழுந்து பறந்துபோகாநின்ற பரமாணுவுக்கு ஈடாகுவேனோ, பாவி! ஏனடி வம்பு செய்கிறாய், அடிபேடி! யாரெப்படியானாலும், விளைந்தபோர் எப்படிபோனாலும், உனக்கென்ன, நயநஷ்டங்கள் என்னைத்தானே சாரும். நீயேன் வீணேதுள்ளிவிழுகிறாய். ராஜஸ்திரீகளுக்கு ஆடல்பாடல் கற்பித்துப், புத்துநாளைக் கிருந்து வயிறு வளர்த்துப்போகின்ற உனக்கேன் இத்தனைவீம்பு, பிள்ளை யருமையறியாத பெருமூடிபோடி. இப்பொழுதுதான் புதிதாக வில்வித்தையிற் பழகிவருகிற நான நெடுநாளாக்கற்ற வில்லாளருக்கெதிர்போய் வில்வளைப்பேனுகில், மானங்கெட்டு, ஈனப்பட்டு, மாள்வே னென்பதற்குச் சந்தேகமென்ன, ஐயையோ! உன்னுலென்னுவி ஒழியவந்திருக்கிறதே, என்று கண்கலங்கி, கடுங்கோபங் கொண்டு எனபேச்சுக் கெதிர்பேசாதே, பேசாதே, என்று பின்னுஞ் சொல்லுகின்றான்.

ஆ, பிரகன்னளையென்னும் அலியே! எங்கள் பசுமந்தைகளையெல்லாம் பகைவர்கொண்டுபோனாலும்; மச்சநாடுமுழுவதும் நாங்கள் இழந்தாலும், குடி-படை-அமைச்சு-நிதி-நிக்ஷேபங்குறைந் தொழிந்தாலும், முடிமுதற் செங்கோல் முனையழிந்தாலும், இகனுல்வரும் பெரும் பழியெனக்கடுத்தாலும், என்னைத்தெய்வம் நடுத்தெருவில் விடுத்தாலும், உனக்கொன்றுமில்லையே. என்னை தடுத்தாக்கவேண்டிய அவசியம் உனக்கென்ன நானிப்போது சொல்லுகின்றசொற்படி வாயைமூடிக்கொண்டு அப்படி யிப்படிப்போகாமல், ஊரைப்பார்க்கத் தேரைத்திருப்படி. அடிமகராசி, உனக்குக் கோடி புண்ணியமுண்டடி, தயைசெய்து என் தாய்முகத்தில்விழிக்கப்பண்ணடி. உனக்கு வேண்டியவையெல்லாம் தருகிறேன் நான் சொன்னசொல்மாறேன். சண்டைசெய்யப்போகிறேனென்று என்னுயிருள்ளவரையிலும் இனிப் பதறிக் கூறேனென்று கூகூவெனக் கதறிக்கூறிய சிறுவன்மொழியைக் காண்டீபதரன்கேட்டு, அந்தோ, வது இனிக்காரியமில்லை, இவன்கருத்தைப் பார்க்குமிடத்துத் தேரைவி

டடுக்குழித்துப் புறமிட்டோடுவோன்போலும் இருக்கிற
தென்றெண்ணி, மறுபடியும் மனவெறுப்பில்லாமல், ம
ன்னன்மகனை மகிழ்ந்துநோக்கி, அப்பா, க்ஷத்திரியகுலா
திபனே, திரிலோகத் திலும் ஏகச்சக்ராதி பத்தியமும்
ஆக்கிறைச்சக்கரமுஞ் செல்லும்படி செய்து, இப்பொழு
து, கொடுமையாக வந்தடர்ந்த பெருஞ்சேனைகளை யொ
ருகணையால் மாளச்செய்து. உன் சிந்தை மகிழ நிமிஷத்
தில் திரும்பிவந்துவிடுவோம். நீ யாதொன்றுக்கும்பயப்
படாதே. உன்னை நம்பிவந்த வென்னை நீ திடமாகாப்பு,
இந்தப்பகைவருடைய வாளாயுதம்-வேலாயுதம்,பாலாயு
தம்- குந்தாயுதம்- சக்ராயுதம் - தோமராயுதம் - வில் க
ணைமுதலிய ஆயுதங்களெல்லாம் நெல்லிற்பதர்போல்கெ
ருப்பெழுப்புடைத்துச், சேனையானைகளைத் துடைத்துச்
செயம்படைத்து, மேன்மையாகத் திரும்புவதைவிட்டு
க், கீர்த்தியைப்போக்கி, விராடராஜன்பெற்ற பிரதாபத்
தையும்பாழாக்கி, எதிரிகளுக்கஞ்சி யோடினுனென்னும்
எளனமுண்டாக்கி, என்புகழைப் மண்ணாக்கிப்போட வி
னைப்பது, க்ஷத்திரியபுத்திரனுக்குத் தகுதியோ, உன் தா
யாகிய சுதக்ஷணைதேவியும் உனக்கிளையாளாகிய உத்தரை
யும் உன்பந்துமித்திர வர்க்கங்களும் உன்னிடம்வந்துவ
ணங்கும் பணிப்பெண்களும் பட்டினத்திலுண்டாகிய
வெகுஜனங்களும் மத்திவாசனாகிய உத்தரகுமாரன் யு
த்தத்திற்குப் போயிருக்கிறான். சத்துருக்களைவென்று அ
வர்கள் கைக்கொண்ட பசுமந்தையைத் திருப்பிவருவா
னென்று மேகத்துளியைவிரும்பிய பயிர்போல், வாட்ட
முற்று, வாய்திறந்து நீ வரும்வழியைப் பார்த்திருப்பா
ர்களே. அப்பேர்ப்பட்டவர்கட்கெதிரில் நீயெப்படிபோ
ய் விழிப்பாய், என்னசொல் விசைப்பாய், ஐயோ, இந்த
அவமானத்தைப் பார்க்கிலும், நான் சொல்வது கசப்பா
நினைக்க நினைக்க வெனக்கு விசனமுநினைக்கிறதே, நான
பேடியானபோதிலும், இதுவரைக்குந் தோல்விடுத்துப்போ
ர்முகத்தில் யார்பிழைத்தார்கள், கண்டதுண்டம் படக்
கொன்று கைகண்டதன்றி, சண்டைக்குப் பயந்தோடிய
சங்கதியைப் பார்த்துமறியேன், கதைகளிற் கேட்டுமறி
யேன். என்றும் பிசகுவந்ததுமில்லை. என்னை நம்பியபே
ருக் கிடறுதந்ததுமில்லை, இப்போதுமென்ன, இதழ் வி
ரிந்த மலர்சொரிந்த-மணமுறைந்த-வரிவிரைந்த-தொடை
யணிந்த-படைஇணிந்த- பலவான்கள் அடங்கலும் விறு
வென்று தலைசுழன்று தங்கிலேதெரியாமல் தயங்கும் ப
டியிரதஞ்செலுத்துகின்ற என்னைச்சாதுரியத்தினால் செ
ல்வமிகுந்த வுங்கள் பசுமந்தையைத் திருப்பிக் கொள்
வோம். இடைதெரியதீர சிந்தைகிலைதயாமல்வா. நான் வி
டப்போகிற தேர்ச்சாகசத்தைப்பார். ஒருவேளை, உனக்
குச் சத்துருக்களாற் குற்றநேரிடுமாகில், உடனே உன்
னுயிருக் கென்னுயிரைத் துணையாகக் கொடுக்கிறேன்.
நீயென்னைநம்பித் தேரிலுட்கார். எத்தனையோ கோடா
கோடி சேனைகளென் றிதயங் கலங்காதே. இன்னுமெ
ழுகடல்போற் படையெழுந் தெதிர்த்தாலும், பெரும்
பொறைக் கடல்போற் பெயர்ந்துவந்தாலும், வாட்டு
மென்று உறுதியாய் மனத்துணிவு பெறுவையாகில், தே
வர்கள் மதித்துத் துதித்துச்செய்யும் ஆசிர்வசனமும் தி
ரலட்சுமியின் கருணைகடாட்சமும் பூதலத்தோர் சாத
ழித்துப் புகழும் புகழ்ச்சியும் உனக்குண்டாமென்பதற்
கியாதொரு ஐயமுமில்லை, கீமாத்திரங் குருகுலநாயகன்
போனகருகித்து வில்வளைத்துக், குணத்தொனி யெழு
ப்பு முன்னமே பெருங்காற்றிற் பறக்கு முருக்கைச் சரு
குபோலடித்து, வற்சலமந்தையைக் கைப்பிடித்து, சூ
ணப்பொழுதில் உன்னை மச்சதேசத்திற் கொண்டுபோ
ய்விட்டு மறுவேலை பார்க்கிறேன். இன்றுனைக் கொல்ல
வேண்டும். இவ்வாறு வெல்லவேண்டும். இப்படிச்செ
ய்யவேண்டுமென்னும் வருத்தம் உனக்கெவ்வளவும்வே
ண்டாம் நீயஞ்சாதே, நன்னைநிலைமக் குடன்பட்ட வெ
ன்னுடன்கூடி வாவென்று புத்தியிலுயர்ந்த பேடியான
வன் மெத்தவு மனம்வருந்திச் சொன்னான்.

தன்றும் கூடியபட்டும் உத்திரனுடைய மனதைக்
கரைத்துகளைந்த வார்த்தை யத்தனையிலும் அனுபவித்த
னையேனும், அவன் சித்தத்திற் பொருந்தாமல், யுத்தவீர
ன் திருந்தாமல், மானம்போமென்ன வருந்தாமல், வே
றொன்றுந்தோன்றாமல், புறமிட்டோட நாணமல், புதுமா
பாணம் பூணமல், போர்க்கின்போரில் நோக்கமுள்ளவனு
ப்ப், பெண்யானைகள்போன்ற வெருண்மகள் கடைபரர
விழித்துக், கன்னஞ்சிவந்து, மடிசுரந்து வழியப்பொழி
கின்ற பாலானது காலில்வீழ்ந்துசென்று, மேலாகிய செ
ம்பாசிறப்பாய, அப்பயிர் கற்கம்போற் றழைத்துக் கதி
ருடன்சாயும் வளம்பொருந்திய மச்சநாட்டுக் கதிபதி
யாகிய விராடகுமாரன் பெருமூச்செறிந்து, பேச்சுத்த
ளர்ந்து, பேடியைநோக்கிப் பேசத்தொடங்கினான்.

அடி, மோசக்காரி! நான் எத்தனைவிதத்திற் சொன்
னாலும், என்னாத்தனையுந் தெரிந்துகொள்ளச் சக்தியுமி
ல்லை, உன்சாபுத்தியாற் றுணிவுபெறுவையென்றுமோர்
வதுவுமில்லை. சொற்புத்தியுஞ் சுயபுத்தியுமில்லாத் துஷ்
டியைக்கொண்டு சண்டைக்கெப்படி போகலாம்? இவ்
விடத்தில் மேகம்போற்கவிந்த அரிபோதன னுடைய
சேனைக்கெதிரில் யுத்தஞ்செய்யத் தெரியாத என்னைக்
கொண்டுபோய்விட்டு, நீ வெற்றிபெறலாமென் றெண்
ணினையோ? நரிவாலைக்கொண்டு கடலாழம் பார்க்க லா

மோ, அதற்குநான் ஆளல்லவே. என்னைப்பெற்றவ
னாலும், அவனைப்பெற்றபாட்டனாலும், தநுர்வேதங் க
ற்ற சாதுரியராலும், இந்தப்படையை வெல்லும் வல்
லமை யெவர்க்குண்டாயிருக்கும், சொல்லடி பெருமூடி
புத்திகெட்டபேதையே! உனக்கென்னதெரியும், நீயென்
னவறிவாய்? மறுமன்னர்க்குண்டாகிய வுறுதியும் போர்
மேற்செல்லும் திறமும் காலபலமும் காரியா காரியங்க
ளுந் தெரியாத கயவர்க்கென்ன சொன்னாலுங் கண்ட
றியமாட்டார்கள். ஐயோ! ஈதென்னபாவம், அடியேண்
டி பழிசுமந்துகொள்ளுகிறாய். வேண்டாமடிபாவி! நான்
சொல்வதை யின்னுங்கேளடி. லோபி! படமுடையபாம்
புக்கொடிபடைத்த பார்த்திபனுடன சத்தியவிரத சரத
நெறிபெற்ற சாந்தரும் வெற்றிவே லேந்திய வேந்தரும்
மூனைந்து சண்டைசெய்யும்போர்முகத்தில் குற்றமற்ற
தநுர் வேதங்கற்றவருங் கால்வைக்க மாட்டார்களே,
நமனும் எட்டிப்பார்க்க நடுங்கிக் கண்கலங்குவானே. அ
ப்பேர்ப்பட்ட வதிரதர்களுக்குமுன் வில்பிடிக்கவறியா
ச்சிறுவனாகிய வென்னைக் கொண்டுபோய்விட்டுச் சண்
டைபோடென்பது தகுதியோ, அவர்கட்கெதிரில் நானெ
ப்படிபோய் நிற்பேன், என்னயுத்தம்பண்ணுவேன்? நல்
லது உன்பேச்சை நம்பி நானெதிர்த்த போதிலும், தொ
லைதூரத்திலிருந்து பாணம்விடுப்பேன், நானொருகணைவி
டுக்குமுன்னமே அவர்கள் ஓராயிரங்கணை தொடுப்பார்
களே. அவர்களெய்யு மம்பினால் உன் கையும்மெய்யுங் க
லங்கி முதற்பலியாய் நீ விழுவையே. உன்னைக் காக்கும்
வல்லமை யென்றனக்கில்லையே. அப்பால் நான்செய்வதெ
ன்ன? அடி தப்பறைக்காரி, பிற்பாடு என்தேருஞ் சார
தியுங் குதிரையுமொழிந்து, வில்லுந்துணிந்து, நானுமழி
ந்துபோனால், வெற்றியெவர்பக்ஷமாகும், ஐயாவொருவே
ளைத் தெய்வச்செயலால் தப்பிப் பிழைத்தால் துரிதக்க
ணையேவி தூரத்தியடிப்பார்களே. அதனால் துயருழந்து
அருமையான தேகமலக்கழிந்து, கால்நடுங்கிக், கைநடுங்
கிக், கண்கலங்கிப், புண்கள்பட்டுக் கருத்தழிந்து, விழு
ந்து புரண்டெழுந்து, உள்ளங்கால் சிவக்க வுரங்கெட்
டோடி, மச்சநாட்டிற்போய்ச்சேர்ந்து வாடிவருந்துவது
உனக்கிச்சையோ, அதுனக்கு லச்சையோ, அதனாலிகழ்
ச்சியோ, புகழ்ச்சியோ, நிதானித்துப்பாரடி. இதைவிட,
நான் சொல்வதைக்கேளடி. நாமே விவந்த ஈதழுநியாமல்
வில்லழியாமல், குதிரைசாவாமல், நீ மடிவுறாமல், நான
டிபடாமல், ஒருதுறைவுமில்லாமல் உயிருடன் திரும்பி
வீரம்பெறாதவர்போல், மீணடேர்புகுவது பெருமையோ
சிறுமையோ, யோசித்துச்சொல்லடி. உயிரழிக்குப்பேடி
யென்று பற்பலவிதமாகப்பேசி, மலைபருவிபோற் கண்
ணீருகுத்து. உண்ணீருலர்ந் துள்ளமுருகிக், கொடியபா
வியாகிய விந்தப்பேடி நம்மைப்பிராணனுடன்விடமாட்
டாள் குடிகேடியென்றுயோசித்துக், கைப்பிடித்தவில்லை
யும்அம்பறாத்தூணியையுமுடைய வீரகண்டையையுந்தே
ர்மேல் போட்டுவிட்டுப், பின்புறமாய்ப் பூமியிற்பாய்ந்து
விராடபுரத்தைநோக்கி விரைவில்சென்றோடினான்.

உத்தரகுமாரன்தேரினின்றுங் குதித்தோடல்.

வாரணப் போர்முனைவெல்லப்பூரணவாண்மைபெ
ருத விரட்குமாரன் தேர்விட்டிழிந் தோடுவதைக் கரு
ணைக் கடற்கொருமுதலாகிய அருச்சுனன்கண்டு, பச்சா
த்தாபப் பட்டுக் குதிரைக்கடிவாளத்தைத் தேர்க்காலிற்
கோத்துவிட்டு, நிலத்திற்குதித்து இளைத்தோடுகின்ற உ
த்தரகுமாரனைப் பின்றொடர்ந்தான். இரண்டகற்றூணை
யொத்த புஜபலஜெயசிங்க விஜயனானவன் உத்தரகுமார
னுக்குப் பின்னோடியபோது, நந்தியாவட்டமாலையணிந்
த துரியோதனனுடைய படைமன்னர்பார்த்துச் சங்கதி
தெரியாதவர்களாய், ஓவென்று சமுத்திரம்போ லிரைந்
து, தங்களிற்றாங்களே பொங்கிமகிழ்ந்து, கைகொட்டி
க் கலீரென்று நகைத்தார்கள் அந்தவேளையிற் சிவந்த க
ண்களையுடைய வீஷ்மரும் மற்றப்பெரியோர்களும் த
மது விவேகத்தால் நிதானித்துரைத்தார்கள். நமக்கெதி
ராகவந்த தேரைவிட்டோடுஞ் 'சிறுவனைத் தொடர்ந்து
செல்லுஞ்சாரதியை யோசிக்குமிடத்தில், விசாலமாகநீ
ண்ட விழிப்பார்வையும் எறுநெற்றியும் ஆஜாநு பாகு
வாகிய துணைக்கரமும்-வச்ரமலைபோன்றமார்பும்-பச்சை
வாணத் தாமரைமலரையொத்த முகமும்-பருத்தவிடை
யுங்-கனத்ததொடையும்-சிவந்தபதமும் சிரித்தநகையுமு
ள்ள சிலைவிஜயனைப்போற் றோன்றுகிறது. ஆனால். அணி
ந்திருக்குங்காதோலையினாலும் இணிந்திருக்கும் ஆபரண
ங்களினாலும்கலகலக்கும்வளையல்களினாலும்கட்டியிருக்
கும்புடைவையினாலும்-பின்புறமுடித்தகொண்டையினா
லும்-முன்புறமைவிழிக் கொண்டையினாலும்-பெண்ணு
ருவாய்க்காண்கிறது. ஆகையால் பெண்ணுருவென்றும்
ஆணுருவென்றும் பெண்ணும் ஆணுமல்லாதபேடியுரு
வென்றும் எப்படிப்பேசலாம், ஈதன்றியும் முத்துச் சா
ந்குடைகள் பத்திப்பத்தியாகச் சிறந்தவிராடநகரத்திலி
ருந்து ஒருதேர்புறப்பட்டது. அந்தத்தேரிற் பொருந்தி
னவன் சிறுபிள்ளையாகத் தோன்றினான். அவன்நம்முட
ன் யுத்தஞ்செய்ய வெத்தனித்து விற்பிடித்து வந்தவன்
பேர்லுமிருக்கிறது அவனுக்குத் தேர்விடுஞ் சாரதி ஆ
ணென்றும் பெண்ணென்றுந் தெரியாமற் சந்தேகத்தி
ற் கிடமுண்டாகிறது. அவர்க ளின்னாரென்றும் இன்ன

காரணமாகவந்தார்களென்றும் எடுத்துரைப்பார்யாருமில்லையே. அந்தோ, இந்தச்சூதை யெவ்வாறறியலாம், எப்படியுணரலாம், ஈதென்ன சூதோ, இனி விளையப் போகிறதென்ன வாதோ, என்று மனமறுகி, பலபடியுந் தெளிந்து, ஆலோசனைச்சங்கங் கூடி, அவரவர்களும் நாடிஸ்திரமாய்ச் சொல்லலுற்றார்கள்.

திரிகர்த்த தேசவாசனான சுசன்மாவென்பவன் விராடநகரத்திற்குத்தெக்ஷணபாரிசத்தடைந்து, பசுக்கூட்டங்களை யோட்டியகாலையில், விராடராஜன் துடித்துமலைபோற்றிரண்டதனது தோண்மேலடித்து வைரங்கொண்டு, பற்கடித்து, விற்பிடித்து, நால்வகைத்தானையுடனடந்து, எதிரியையடர்ந்து, எவரையும்வென்று, தாங்கள் பசுநிரையைக் கைக்கொண்டு, மண்ணுலகத்தோரும் விண்ணுலகத்தோருங் கொண்டாடும்படிஜெயம்பெற்றவராகவேண்டும்; பாண்டுமைந்தரைவரும் இப்பதியி லிருந்தார்களென்பதற்குச் சந்தேகம் வேண்டுவதில்லை. மச்சராஜன் தெக்ஷண திசையிற் சண்டைக்குப் போம்போது, உத்தரகுமாரனென்னும் இளங்காளையைவிட்டு மற்றப்பிள்ளைகளுடனுடனபட்டு அஞ்ஞாதவாசஞ்செய்வதற்கு மாறுவேஷத்துடன் அமர்ந்திருந்த தருமராஜன்-வீமன்-நகுலன-சகாதேவன்- இவர்களைவரும் தன்னுடன்வரச் சென்றவனாகவேண்டும், ஊர்வசி சாபம்பெற்ற பேடியுருவத்துடன் வெளிப்புறப்பட வெட்கப்பட்டு இராஜகன்னிகைக்கு நாட்டியம்பழக்கின நபுஞ்சகனானவன் நானாகவேண்டும். நாமெல்லோருந்திரண்டு, சமுத்திரம்போற்புரண்டு, மச்சநாட்டின் வடதிசை யடைந்து, வீட்டை நாட்டை, வேகக்கொளுத்தி, மாட்டைக்கூட்டி மடக்கியவன்மையைத் தூதர்களோடித்துயருடன் சொல்ல, வில்வேளைப்போல், வீட்டிலிருந்துகேட்ட உத்தரகுமாரன் விசனமடைந்து, கண்சிவப்பேறி, என்றந்தைமாருந்தமையன்மாருமில்லாதசமயம்பார்த்துவந்தார்களே, எனக்கொரு சாரதியு மில்லையேயென்று, தயங்கிச் சோர்வடைந்தவனாக வேண்டும். இக்காரியங்களைக் கேள்விப்பட்ட அருச்சுனராஜன் எக்களிப்புடனெழுந்து, பயிர்க்கொல்லைக்குத் திஷ்டிபரிகாரமாகச் செய்துவைத்திருக்கிற புல்லாடவனையொத்த உத்தரகுமாரனுக்கும் போர்க்கோலஞ்செய்து, தானேசாரத்தியம்பண்ணச் சமைந்தவனாகவேண்டும். அந்தப்பேடிபேசிய சாதுரியவசனச் சமர்த்தினாலும், உறுதியூக்க முடைமையினாலும், தான் சிறுவனாயிருக்கின்ற தன்மையினாலும், பின்முன் னெண்ணிப்பாராமல், எதிரியையுந் தன்னையு மெண்ணாமல், மானாபிமானத்தை மதியாமல், (இளங்கன்று பயமறியா தென்பதுபோல்) தேர்மேலேறிப் போர்மேல்வந்ததாகத் தெரியவருகிறது இதுவேநிச்சயம். இதற்குவேறாக நினைக்கவேண்டியதில்லை. அந்தப்பேடிநடத்திய இரதத்தில்வந்த உத்தரகுமாரன் சங்குகரைகாணாதகமது சேனைகளைப்பார்த்துக், கருப்பமுமனமுங்கண்ணுங்கலங்கித், தானினைத்தசண்டை நினைப்பையுமறந்து, தாய் தங்கையரிடத்திலுரைத்த தைரியத்தையுந்துறந்து, வாட்டத்துடன் ஓட்டங்கொள்ளநினைத்த வறியனாகவேண்டும். அவன் மடமையைத்தேர்ந்து சாரதி சொல்லவேண்டிய கடமையையும் தீரவீரத்திறமையையும்இராஜமுறைமையையுந் தெளிவுறச்சொல்லித்தேற்றியும், தேறாதவனாய்த் தேர்விட்டிழிந்து உயிர்க்குறுதிதேடி யூரைப்பார்த்தோடுகிறான். அதிக பயங்கொண் டோடுகின்ற விராடகுமாரனைச் சாரதியாகியபேடிநோக்கிப்பின்றொடர்ந்தோடுகிறாள். இதுதானிப்பொழுது நடந் திருக்கிற காரியமென்று ஆலோசனைச் சங்கமாகக்கூடிய யாவருந் தங்கள்பேரறிவினால் நிச்சயித்தார்கள். இவர்கணிதானத்தைக்கேட்ட சுயோதனனும் அவன் மனதிற்கிசைந்த மன்னவர்களும் பயங்கொண்டு, இருதயத்திற் பசுமரத்தாணிபோற்பதிந்து, காதினுழைந்த நாராசமென்ன நலிந்து, என்னமோ வேதோவென்று பிராந்தியாற் பதைத்தோடுகின்ற உத்தரகுமாரனைக் கண்ணிமிட்டாமல்பார்த்துக்கொண்டே யிருந்தார்கள்.

இப்படியிருக்க, ஊர்முகமாயோடிய உத்தரகுமாரனைப் பிடிக்கப்போன பேடியானவள் க்ஷணப்பொழுது செல்லுமுன்சென்று, எதிர்நின்று மறித்து, அவனுடைய முன்கையைத் தொட்டிழுப்பதற்கஞ்சினாள். அதேனெனில், வீரப்பிரதாப மேன்மையில்லாத வேந்தனானாலும் தான் சாரதித்தொழிற்கிசைந்த தன்மையினால், எசமானன் கையைத்தொடுவது மரியாதை யல்லவென் றிருந்தாள். இப்பால் எமபாசம்போல் இருகரத்தையும் விரித்துத்தடுத் தெதிர்நின்றபேடியைப் பிதிர்கலங்கியோடுகின்ற உத்தரகுமாரன் கண்டு பதிபயங்கித் தியங்கி வதங்கி வாடி வடி அடிபேடி குடிகேடி, நிர்மூடி யின்னுமென்னை விட்டு விடாயா? கொடுகுலியென்று பூனையைக்கண்ட கிளிபோலும், பூதத்தைப்பார்த்த வுயிர்போலும், பயந்து மெய்நடுங்கி, யொடுங்கி யுளறிப்பேசுகின்ற உத்தரனைப் பேடிவேடப்பிரதாபன் பார்த்து இளவரசானவிறைவனே உன்னைத் துணையாக நம்பித் தேர்செலுத்தவந்த வென்னை யோசிக்குமிடத்தில், வினையைத் துணையாக நம்பிய வீணர்களை யொத்தேனென்று வெறுத்துச், சற்றுநேரம்பொறுத்து ஆஹா! அரசிளங்கன்றே! இப்படியுஞ் செய்யலாமாவென் றிசைத்தாள், அவள் பேச்சைக் கேட்டுக் கலகலத்த வுத்தரகுமாரன் அந்தப்பேடியின்

முகத்தைப்பாராமல், நிலத்தைப்பார்த்து, நெடுமூச்செறிந்து, திக்குமுக்காடித், திடுக்கிட்டோடிக், கண்ணீர் சொரியவும் விடவிடவென்று கைகால் நடுங்கவும் - முத்துப்போல் வேர்வை முகத்திற்றுளிக்கவும்- எண்ணங்குலையவும்- இதயந்துடிக்கவும்- மல்லுந்தளறச் - சொல்லுங்குளற வெருண்டு விம்மிசொல்லலுற்றான்.

அடிசிமாட்டி! இவ்வுலக வாழ்க்கையை விரும்பிய வுயிரானது நமனைக்கண்டு நடுக்கங்கொள்வதுபோல், உன்னைக்கண்டு ஒடுங்கிவிட்டேனடிபேடி? நான்சொல்லு நன்மையைக்கேளடி, பிள்ளையாகப்பிறந்த வந்நாண்முதலிந்நாள்வரையிலும் தாய்தந்தையைவிட்டுப் பிரியாததனயனடி, நான்போர்க் கோலங்கொண்டு தேரேறிவரும்போது, என்னைப்பெற்ற சுதக்ஷணாதேவி என்முகநாடி தன்முகம்வாடி, வாசற்படிவரைக்கும் வந்து வழிவிட்டாள். அவளுடைய மனமும் வயிறும் எப்படி வருந்தியதோ? என்னதிகிலடைந்ததோ? நானறியேன் சிவியேன். அவளப்படி அவலமுற்றிருக்க நானிவ்விடத்திற் கோடி சேனைகளைக்கொன்று, வென்று, விஜயத்துடன் திரும்பினால் தாய்வயிறெரியச் சம்பிரமங்கொண்டாடுந் தறிதலையர்களில் நானொருபாவியல்லவோ? அடிசதிகாறி! உனக்குவெகுகோடி புண்ணியமுண்டு - கன்னியமுண்டு- சுகிர்தமுண்டு-சுபமுமுண்டு - நான்வந்தசந்தோஷமாறுமற் கொண்டுபோய் விராடநகரத்திற் சேர்த்துவிடுவையாகில், என் தாய்தந்தையின்பக்ஷம் உன்பேரி லதிகமாயுண்டாகும். அவர்களுனக்கு வெகுமானஞ்செய்யுமுன்னமே யானை-தேர்-குதிரை - ஆடையாபரணங்களும் அடியேன்கொடுக்கிறேன். அடியே பேடி! உன்னை நான்கனவிலுமறவேன். நீயுநானும் உடலிரண்டுஉயிரொன்றெனமிகவுமொருமையாயிருப்போம். எக்காலமும் உன்பேர் விளங்கும்படியாக இவ்வுலகிலுன் உபகாரச்செய்கையை ஸ்தாபித்து என்னிஷ்டதெய்வமாக உன்னைக்கொண்டாடுவேன் நான்மாத்திர நகரம்போய்ச் சேர்வேனாகில், மன்னரையடக்கி, மாட்டடைமடக்கிப் பின்னமில்லாச்செயம்பெற்றதுபோலாவேனடி, அடியுத்தமி! ஏதோவென்மனங் கலவரப்படுகிறது. இன்னொருதரமென் தாயைப்பார்க்கவிச்சையேலிடுகிறது. மச்சநாடுபோய்த் திரும்பிவாராமல், சண்டைக்கடியெடுத்து வைக்கமாட்டேன், என் மண்டைக்கோலைகொண்டுவந்த கொடும்பாவி! கண்மூடித்திறக்கு முன்னம் பட்டினம்போய்ச்சேரடி. கலங்கவிடாதையடி. கடவுண் முகத்தைப்பாரடி. என்மார்பைத்தொட்டுப்பாரடி. ஐயோ! குலைதுடிக்கிறதே. கரைந்துருகிய வென்னைக்காரடி. அடிபேடி! நீயென்பங்கிற் கஷ்டமத்துச்சனிபோல் எங்கிருந்து வந்தாயடி? நீயாரடி? ஒட்டா, உறவா? ஒன்றுமில்லையே. ஆயினும் இந்தவேளை நீதான் எனக்குத்தாயடி. இரும்போ, கருங்கல்லோ! உன்னிதயமிரங்கடி. எனக்கு முனக்கு மென்னபகையடி. எங்களுக்குந்தெரியாத ஜென்மப்பகையுண்டோடி? தாக்ஷண்யம்வையடி. தைரியஞ்சொல்லடி. நீயெனக்குச்செய்யு முபகாரம் நன்மை தீமை யிரண்டும் வேண்டாம். ஓடிப்போமென்னைத் தடுக்காமல் விட்டுவிடுவதே கோடிபுண்ணியமடி யென்று இவ்வாறு பற்பலவிதத்திலுங் கூறி, இச்சனியைத் தப்பியோடுவதற்கு வழியில்லாமல், மிரளமிரளவிழித்துவெம்பிய விராடபுத்திரனை விஜயன்பார்த்து, மெத்தவிசனப்பட்டு, ஏதேதிவனினித் திரும்பானென் றெண்ணியபோதிலும் இப்போதிவனைவிடப்படாது. மற்றொருவிதத்தால்மனந்தேறச் செய்வோமென்று. உத்தரகுமாரனைநோக்கி, விராடராஜபுத்திரனாகிய வுத்தமனே! உனக்கு நித்தியவாழ்வைத் தரவேண்டுமென் றெண்ணியிருந்தவென்னெண்ணத்தையுங்கெடுத்து நீயுமயங்கிப்போய்விட்டாய். போனதுபோகட்டும். இனியாவதுசெவ்வைப்படும்படி உன்சித்தப்பிரமையை விட்டுவிடு. நான்சொல்லப்போகிற வுறுதிமொழியைக் கேட்டு, உன்மனதைத்தேற்றி, யென்மனம்போலிசைந்து வருவையாகில். மேலானதிறம்பெற்ற வில்வல்லவர்களினுஞ் சிறந்தவனீயென்று யாவருமதிக்க உன்னைமுதன்மையாக்கி, இப்பொழுது நேரிட்டிருக்குஞ் சத்துருக்கள் வாடும்படியாய்மாட்டி- நமது பசுங்கைதகளை யெல்லாங்கூட்டிப், பெருங்கீர்த்தியைநிலைநாட்டிவிராடபுரம்போய்ச்சேர்வோம். இவ்வாறு ஜெயம்பெறுவதற்குமுன் மனந்தளர்ந்து வந்தவழியே திரும்பி யோடுவதைக் கண்டால், என்னைப்போலொத்தவர்கள்வளனஞ்செய்யார்களோ ஓ விராஜபுதல்வனே, பேடியென்றென்னைப் பிழைபடநினையாதே, நீயெப்போது ஜெயங்கொண்டு வருவாயெனறுன் வரவையெதிர்பார்த்திருக்குமுன் தாயுந்தந்தையும் பந்துக்களும்- சந்தோஷத்துடன் உன்னைத்தழுவவும் அன்பினுலுருகிப், போனந்தக்கண்ணீர் பெருகிமுத்தந்தரவும் பொன்னுலகத்திற்கிணையாகிய வுன்னுலகத்தார்யாவரும் என்னையும் உன்னையும் புகழ்ந்து மகிழ்ந்து புகன்றெதிர்கொள்ளவும் மலையாகியகீர்த்தியைவளர்த்து, நிலையாகியஜெயத்தைவிளைத்து, ஒருநிமிஷத்திற்கு நிமிஷம் ஜெயம்பெறுகின்ற விஜயனென்றென்னைப் பலரும்நினைக்கவும் மந்தரகிரியாலலைபட்ட பாற்கடல்போல், பகைஞர் சேனைக்கடலைப்படு பாழாகக் கலக்கியடித்துக்? கருந்தூள் செந்தூளெழும்படித்தி, நீடுழிவாழ்வை யுனக்கு நிலைபெறச்செய்வேன். மச்சகுலாதிபன் மாதவப்பேறே, நீ இச்சொல்லுக்கிணங்கிச், சப[illegible]வென்னும் பச்

சைப்புரவித்தேர்க்கொப்பாகிய அச்சுவச்சிரத்தாலமைத்திட்ட நமதுச்சிதத்தேர்மேலிருந்து, அச்சமில்லாமற் சாரதித்தொழிலாகிலுஞ் செய்வையாகில், மூச்சகங்கொண்டாடு மூதன்மையைப்பெறலாம். இதற்காகிலும் உடன்பட்டு வருவையோ, வரமாட்டையோ, என்று போருக்கு முதற்பாதமான பேடிகேட்க, உத்தரகுமாரன் சற்றுழ்ந்துயோசித்து, நிதானித்து, நாம் தனித்திவள்கையிற் சிக்கிக்கொண்டோம். என்னமோகாலகதியின்னதென்று தெரியவில்லை. நாம்போர்செய்வோமென்று புறப்பட்டவேளை யெப்படிப்பட்டதோ, இன்றுதயத்தி லியார்முகத்தில் விழித்தோமோ; இந்தப்பேடிப்பாவி நமக்கெமன்போல்வந்துசேர்ந்தாளே. இவள்நம்மை யுயிருடன்விடாள்போலு மிருக்கிறதே. எதிரியைப் பார்க்கப்பார்க்கப் பயமேலிட்டுருக்குகிறதே. ஐயோ. வாய்க்கொழுப்புச் சீலையால்வடிந்ததுபோல, என்வாய்ச்சொல்லே யெனக்கிடர்விளைத்து விட்டதே. இனித்தெய்வச்செயலெப்படியோ. தெரியாதே. தாய்தந்தைதேடிய தவம் இதுதானோ, தர்மந்தலைகாக்குமென்பது பொய்யோ, இந்த நபுஞ்சகியானவள் ஜெயம்பெறுகிறவில்வல்லபத்தைத் தீரச்சலிப்போற் பேசுகிறாளே, பயமகன்றுசாரதித்தொழிலாவது பண்ணென்று பகர்கின்றாளே. இதற்கும் மாட்டேனென்று குதர்க்கம்பேசுவது தகுதியல்லவே. நல்லதுள்ள படியாகிறது. நாமுங்கொஞ்சஞ்சாரதிசாஸ்திரம் பார்த்திருக்கின்றோமே ஆதலால் தேர்விடுந்தொழிற் கிசைந்துகொண்டால், போர்முனைபுகுந்த பேடியையத்தெரிந்து சமயத்திற்குத் தக்கபடி பார்த்துக்கொள்ளுவோமென்று ஒருவாறுடன்பட்டு, நடுக்கமுமெச்சமுநீங்கி, ஊக்கமேலிட்டுள்ளந்தேறித், திடுக்கிடமுடுக்குஞ் சிங்கம்போற்சீறி, வீரப்பார்வைகாட்டி, அடி, யோட்டி. உனக்குமெனக்குமேதோவொரு சம்பந்தமுண்டாயிருக்கிறது அதின்னதென்றுந்தெரியவில்லை, உன்னிஷ்டப்படியே யொப்புக்கொண்டேன். என்னிடத்திற் றப்பிப்பிருந்தாலும், நீயேசகிக்கவேண்டுமென்று உத்தரகுமாரனுரைத்தான்.

உத்தரகுமாரன்வல்லவனுக்கிசைதல்.

இதைக்கேட்டபேடியானவள். சித்தமகிழ்ந்துதிருப்பி உத்தரனுக்குந்தனும் ஒருமையுடனேடிவந்துதேர்மேலேறிச், கடிவாளம்பிடித்துக், குதிரைகளையுமுடுக்கச்செய்து, அதிபதிந்திய அருச்சுனன் நாயகனுங்கவமாந்து. ஆர்வபுண்ணியப் பிரயோசனப் பலனிப்போது கூடியதென்றுகளித்து. வில்லும்பாணமுங் கரத்திலேந்தி, வேந்தனுன் உத்தரகுமாரனுக்குத் தயிரியஞ்சொல்லி ஐயாவிராடகுமாரனே? நமக்குநேர்வடக்காகிய வருத்திரபூமியின் சாமுண்டிசந்நிதானத்திலிருக்கும் வன்னிமரத்திற்குநேராக நமதுதேரைச்செலுத்தென்றாள், அவள்சொல்லியபடிக்குமுன்னமே என்னபோகாரணந்தெரியவில்லையென்றெண்ணிப் பொன்மயத்தேரை வன்னிமரத்திசையிலோட்டினான். இந்தச்சங்கதி யிவ்விடத்தி லிப்படியிருக்க. கோரகவடதிசையைநாடி வந்ததேசானதுமாறி வடகிழக்கிற்போவதைத் துரியோதனன் முதலிய பெரியோர்களும், பார்த்து, நம்துபடையின்மீது லக்ஷியம்வைத்து வருகின்றவன் அருச்சுனனல்லது, மற்றொருவருமல்ல அந்நியனொன்றுஞ் சந்தேகம்வேண்டுவதில்லை. அவனைப் பேடியென்று மதித்தது நமது பேதமைத்தனமென்றெண்ணிப், போர்முனைவிட்டோடிப் புத்திமழுங்கிப் பொறிபுலன்குன்றிக், கண்கலங்கிக் கவலைகொண்டார்கள், உடனே அனர்த்தமான அவசகுனங்கள்விளைந்தன. இவற்றையெல்லாந் துரோணாச்சாரியார்கண்டுயோசித்து விசனப்பட்டு அரவக்கொடி படைத்த அண்ணனுக்குச்சொல்லுகின்றார்.

மதிமாபுற்ற வணங்காமுடிபெற்றபயனே யான் சொல்லுகிறதைக்கேள் வானமுழுதுமதிராந்துதிக்கெட்டுங்கம்பிதமெழுந்துபகற்காலத்தில் நக்ஷத்திரமுதிர்ந்து மேகம்இரத்தமழைபொழிந்து, பூமாலைகள்கரிந்து புலால்நாற்றமிகுந்து, யானைகுதிரைகள்கண்ணீர்சொரிந்து பருந்துங்-காக்கையும்-பறந்து மேல்வீழ்ந்து, நாயுந்நரியும்புரண்டோலமிட்டுக், கழுகுங் கூளியுங் கவிந்துவிலைறந்து, ஆயுதமுனைகளனற்புகைகமலியச், சேனைகள்திடங்கெத்திடுக்கிட்டலையப்பற்பல துர்ச்சகுனங்களுண்டாகிறபடியாலோசிக்குமிடத்தில், சகுனசாஸ்திரப்படி இராஜனுக்குத் தீங்குமபஜயமும்விளையுமென்பதற்குச்சந்தேகமில்லை, சாஸ்திரந்தப்பென்றெண்ணாமல், நீ, முன்ஜாக்கிரதைப்படவேண்டுமென்றுரைத்து வீஷ்டுமர் கிருபாச்சாரியார் முதலியமேலோரைநோக்கி, விளம்புகின்றார்.

ஓ அதிரத மகாரத சமரதத்தலைவர்களே? சமுத்திரம்போம் பாவியநமதுதேர் வீரர்கட்கெதிரில், ஒற்றைத்தேர்செலுத்திவருகிற வுறுதியுணர்ந்தீர்களோ, அவனை நமது எண்ணிறந்தசேனைகளொப்பு மொருதலையாய் வெற்றிபெறத்தக்க வீரப்பிரதாபனல்லாவிடில்தானொருவனுந் தனித்துவருவானோ? ஆதலின், அம்முடனெதிர்ப்பவர்களில்லையென நிருமுரக்க வாய்பதப்பேசியிழந்து திரிவது தகுதியன்று, சுத்தவீரர்கள் தங்கள்தங்கள் படைகளையணிவகுத்துக் காத்துக்கொள்வதே உத்தமம் தெருண்ணை நிரைமீட்கிக்குச்சென்ற கிரீடத்தினை யிழந்தசாதுரியவானகளே, நமது தேகமழிந்தாலும், பிராணனொழிந்தாலும்மானமழியாமலும். மடக்கியமாட்டைவிடாமலுந் தீரவீரத்திடங்காட்டிச் செயம்பெறுவதே இட

வான்கட்குரிய கடனுமென்றுணர்ந்து. அப்பொழுதே யானை குதிரை தேர்காலாள்களை யணிபெறவகுத்து, இடைக்கிடைப் படைத்தலைவர்களைநிறுத்தி அவர்கட்கு நடுவிற் பசுமந்தையை மடக்கிவைத்துக்கொண்டு கட்டுக்காவல் திட்டப்படுத்தி மட்டுப்படாத தநுர்வேதவரோதயனின்றான். இத்திறமோர்ந்த விராஜவீரர்களனைவரும் இனியிந்தப் பசுநிரையைக் கவர்வாருமுண்டோ வென நினைந்து பேசிக்கொண்டிருந்தார்கள். அவ்வேளையில் தேவர்கள் கொண்டாடுஞ் சத்திய விரத வுத்தமனாகிய வீஷ்டுமரின் முகக்குறிப்பைத் துரோணாச்சாரியாருணர்ந்து தேவரீரெண்ணிய கருத்துக்குத்திருகில்லை; வருகிறவன் அருச்சுனனே. வாளாண்மை வில்லாண்மையிற் சிறந்தகுருகுலச்சேனையைமதியாவதனுப் ஒண்டித்தேருடன்வெளிப்பட்டிருக்கிறான இவன்வருகிற வகையையோசிக்குமிடத்தில் சூரபன்மன்மேலெதிர்த்த சுப்பிரமணியக்கடவுள் போலிருக்கின்றது இதில்யார்யார் மாள்வார்களோ, யார்யார் பிழைப்பார்களோ, என்ன அனர்த்தம் விளையுமோ! அறியேனறியேனென்றுசொல்லிய துரோணாச்சாரியனை அருச்சுனன்பேரில் உள்ளன்புடைய வீஷ்டுமர்பார்த்து ஓ, வீரர்கள்மதிக்கும் வில்லாசிரியனே? பாண்டவர்கள் அஞ்ஞாதவாசம்பண்ணவேண்டியவொருவருடமுங்கழித்து வெளிப்பட்டிருப்பார்களா? அல்லது, மாடுபிடிசண்டையென்று மகிழ்ந்து கோபத்தினால் வெளிப்பட்டிருப்பார்களா? ஒருவேளை காலவளவைக்கடந்து அவசரப்பட்டிருப்பார்களானால், பேல்கட்க்கவேண்டுவதென்னவென்று வேந்தர்சபையில் நியமித்த நிபந்தனையைச் சிந்தித்துப் பார்த்தேனன்றி வேறொன்று நினைக்கவில்லையென்றிருவருங் கலந்துபேசிக்கொண்டு, துரியோதனனிடத்தில் தாங்களெண்ணிய கருத்தைக்காட்டாமல், வேறுவிதமாய் விளம்பினைத்து வாருங்குருகுல சிந்தாமணியே, எதிரியுடனெதிர்த்துப்போர்புரியத்தக்க நாளின்றேயென்று அந்தப்பாண்டவர்களிதுவரையிலும் பொறுத்தநுபவித்த கடவநாள் முழுவதும்போக்கிப்புறப்பட்டார்போலுங்காணுகிறதென்று வீஷ்டுமர்புகல, அம்மொழியைக்கேட்ட தநுர்வேதசம்பன்னரானவர் தெவிட்டாவமிர்தமுண்ட தேவர்போற்களித்து ஒருவசனஞ் செப்புகின்றார்.

ஐயா, மதிகுலவுரோதயவிரதசிகாமணியே? இவ்விடமிருக்கும் நமதுசேனையைநாடி ஒருவில்லுடன் தேர்செலுத்திவரும் ஒருவன் திறத்தை யுன்னுமிடத்திலெப்படியிருக்குமென்னில்; ஒருபுருஷ சிங்கமானது வெகுகாலங் குகைக்குளடங்கிப்பசிதாகத்தாலிளைத்து, தற்காலமே சிறுத்தவரையிலும் வாட்டமுற்றிருந்து, காடகுஞ்சரக்

கூட்டங்களைக்கண்டு களித்துத் தாவியெழுந்துதனித்து வருந்தன்மைபோலிருக்கிறது. கறைமிடற்றண்ணலாகிய பிறைமுடிப் பிஞ்ஞகனளித்த பாசுபதாஸ்திரம் பெற்ற பார்த்தனையெதிர்த்துப் போர்தொடங்கத்தக்கவில்வீரர்கள் இந்தத்தொல்லுலகிலுமில்லை. வெயிலுக்கிணையாகமின்மினிபிரகாசிக்குமோ! சொல்லுங்கள் வல்லவர்களேயென்று துரோணாச்சாரியர் சொல்லினர்.

அச்சொல்லாகிய நாராசமானது, கர்ணன்காதில் நுழைந்த மாத்திரத்தில், செயலுஞ் சிந்தையுந் திகைத்துச் சோர்ந்து, வாயுங்கண்ணும் வறண்டுபுகைந்து, வேசாறிப்புளம்வெந்து, வெகுளியிருந்து, வில்வேதந்தெரிந்த வேதியனைப்பார்த்து, இருகண்களுஞ்சிவந்து, ஓ! துரோணாச்சாரி? இப்போதென்ன சொன்னாயென்று கறுவி, அங்கிருந்த மணிமகுட மன்னரெல்லாங் கூசிமடங்கவும், தடவிகடகுஞ்சரவீரர்கள் வாய்பேசாமலொடுங்கவும், சுற்றுமுற்ற மற்றச்சேனைகள் குலைகுலைந் தேங்கவும், மிக்க இறுமாப்புடன் ஒருத்தரஞ்சொன்னான். ஆஹா? தநுர்வேதியனே! சதுர்வேதமொழிந்த தன்ம முணர்ந்தாயா (நன்மைகடைப்பிடி நன்றியறவேலென்பதல்லவா) மகுடமன்னர்கோடி வந்துவணங்கு மகா மண்டலேஸ்வரனாகிய சர்ப்பக்கொடிதரித்த துரியோதனராஜன் உன்னிடத்திற்பக்ஷம்வைத்து இராஜவைபவ வலங்காரவணிமணிப்பணியாடையும் படையும் வீரபட்டமும் பெருமையுங்கொடுத்துச், சௌக்கியபோஜன சம்பிரமத்துடன் சீர்பெறச்செய்து உன்னுதவியினால் வெற்றிபெறலாமென்னு மாசையை மிகுதியும்வைத்திருந்தான். நானுமஃதுத்தமமென்றெண்ணினேன். இப்பொழுதுன்னெண்ணத்தைத் திரானிக்குங்காலையில், எதிரிகளைக் கொண்டாடியவர்கள் புஜபலத்தைப் புகழ்ந்து, அன்னமிட்ட ஆண்டவனுடைய ஆண்மையைக்குறைத்துப்பேசி, புலசமிகழ்ப்படி செய்து, நன்றிகுன்றி, மரம்வைத்து வளர்த்தவனுக்குப் பலன்கொடாமல், அண்டைவீட்டுக்காரன் அநுபவிக்கும்படியாகச் சாய்ந்த மடக்குத்தென்னமரம்போற்குறைந்த மதியைக்கொண்டிருக்கின்றாய் தருணத்தில் தண்ணீர்வார்த்துவளர்த்த கௌரவகுல முதல்வனைவிட்டுச்சொல்வன்மையும் வில்வன்மையுமுள்ள பாண்டவர்பேரிற் பக்ஷங்கொண்டாய். ஐவர்பேரில் அன்புமாசையும் உனக்குண்டாயிருக்குமானால், அந்தப்பஞ்சைகட்கு நீயினைத்ததாகப்புகழ்ந்து பேசவேண்டுமேயன்றிமற்றையர்களைக்குறைத்துப்பேசுவதி லுனக்கென்னலாபம் எவ்வளவேனுமேன்மை கிடைக்குமோ, எம்போலியரை வெல்லும் வல்லபம் அந்தப்புல்லியருக்குண்டாயிருக்குமாகில், போர்க்களத்திறங்கண்டவீரர்கள் அவர்களைப்புகழா திருப்பா

ர்களோ? (கற்றாக்கற்றோர் காமுறுவரென்பதுபோல்) வீரனைவீரர் வியந்துரையாரோ? மணங்கமழுமாலைபுனைந்த தோளினையுடைய மறையோனே, நீயிப்படிக்கெல்லாம் பூச்சிகாட்டாதே. இவ்வேளை, நமக்கெதிரானவன் அசகாயசூரனாகிய விஜயனானாலும், அவனுக்கெதிர் நானொருவனுமுனைந்து, வில்வளைத் தமர்புரிந்து, மண்ணுளை விரும்பிய அவனைவிண்ணுளாவிடுகிறேன். இதுவேசத்தியம். உலர்ந்தசருகு எரிநெருப்பிற் கரிந்துவேகாதிருக்குமாகில் தேர்மேலேறிப் போர்மேல் வருஞ் சிலைவிஜயனுங்கீர்த்திபெறுவானென் றுணரலாம். நீயேன்விருதாவிற்சொற்சோர்வுபடுகிறாய். வேதியகுலனாகிய நீயேன் வீண்பழிசுமக்கின்றாயென்றான்.

கர்னன்சொன்ன வார்த்தைகளைக் காதிற்கொண்டசுயோதனராஜன் அண்ணா? எதிரியைப்புகழ்ந்து பெருமையாகப்பேசுகிறவர்களெல்லாம பேசட்டும், நீயேன் அவசரப்படுகின்றீர்? போர்செய்யவருகிறவன் பார்த்தனாயிருப்பானாகில், நமக்கு நல்லகாலமென்றே யெண்ணும், அதேதெனென்னில், அவர்களொப்புக் கொண்டுபோன பன்னிரண்டுவருடவனவாசத்திலும் ஒருவருடம் அஞ்ஞாதவாசத்திலும் நாட்குறைவிருக்கிறது. அதைக்கண்டுபிடித்துமறுபடியும் அவர்களைவனவாசம்பண்ண வனுப்பிவிடலாம். அப்படிக்கல்லவென்றால், இந்தயுத்தத்தி லுயிரழிந்துபோவார்களென்று றுதியாச்சொல்லிவிடும். தாக்ஷிணியமாக முன்பின் பார்க்கவேண்டுவதில்லை யென்று, களிப்புடன்சொல்லத், தாமரைமாலைதரித்தநுவேதியரும்பனைமாலைதாங்கியவீஷ்மர்முதலாகியவேந்தரும் சரிதான் சரிதானென்று சிரக்கம்பனஞ்செய்துவாவரக்கண்டறிவோமென்றிருந்தார்கள்.

இப்பால், உத்தரகுமாரனை யுடன்படுத்திக்கொண்டுவந்தபேடியானவள் ஓ, ராஜகுமாரனே! எப்பேர்ப்பட்டவனானாலும், எக்குலத்தானானாலும், போர்முகவீரனென்றுபேர்பெற்றயுத்தமுனைபுகுந்தவன்றான் காயம்பெறாமல், முடிசாய்க்கப்படாது, புறங்கொடுத்தோடிவருங்காலையினும், புகழுண்டாகமார்பிற்காயம் வாங்கிவரவேண்டும். அப்படிவரத்தக்க வல்லமையில்லாதவன்தேகம் ஆறில்லாநாட்டையும் அரணில்லாக் கோட்டையையும் தாரபத்தினியில்லா வீட்டையும் வளநீங்கிய காட்டையும் பொறையிலாவரசையும் ஞானமில்லாக் கல்வியையும் நன்மணமில்லாமலரையும் மதியில்லாவிசும்பையும் மைந்தனில்லாச் செல்வத்தையு மொப்பானென்று, இராஜதருமங்களால் அவன்மனத்தைத் தேற்றிப் பயங்காத்தை மாற்றி, வீராவேசம்விளைத்து ஆறுகோடி மாயாசத்திகளாலு மாறுபடாதவரன்போன்ற வீபற்சானவன் வன்னிமரத்தைச்சேர்ந்தான்.

பராசத்திகோயிலும் பாலையிலுமுந்திறந்தடர்ந்த வன்னிமரத்தோப்பில்வந்தஉத்தரகுமாரன் கன்னிப் போரால்வந்த சந்தித்தோஷத்தாற் கண்விழிக்கமாட்டாதவர் போற்கலங்கி, மகைவற்றிருந்தான். அப்படிக்கிருந்தசாரதியைப்பேடிபார்த்து, அப்பா? நீ யென்சொல் தப்பாமல் இந்தமரத்திலேறி, வடபுறத்திற் பிணைத்துப்பருத்தகிளையினபொந்தில் சேமஞ் செய்திருக்கிற ஐவரது ஆயுதங்களையும் அம்பறாத்தூணியையு மெடுத்துவாவென்றுகூறினான், அந்தப்பேடிமொழியால் தேறியகுமாரன் ரதெனவிந்தையென்றெண்ணி, உயர்ந்து தழைந்து விரிந்த வன்னிவிருக்ஷத்தைநோக்கி, ஐயோ? பூதப்பிரேதங் கட்குரிய பிணக்காட்டகத்திலென்னை அநியாயமாகக்கொண்டுவந்து நிறுத்தி யிந்தப்பெரியமரத்திலேறென்பதென்ன பேதைமையடிபேடி? ஓரோமட்டா பெண்ணுயிர்வாங்குதற்கோ? அடிபாவி? இந்தமரம் என்னிரண்டுகைகளுக்கும் அடங்காதே. நானெப்படியணைத்தேறுவேன் எனமார்பிடம்போதாதே. காலணைத்தேறும் வல்லமையுமில்லையே. உனக்குக்கொஞ்சமேனுஞ் ஜீவகாருண்ய மில்லையா? அடிநபுஞ்சகி நானொரு யுக்திசொல்லுகிறேன் கேளு. மச்சநாட்டை நோக்கிச் சற்றுதூரம் போவேனாகில், வேண்டியவேலைக்கார ரகப்படுவார்கள், அவர்களாலாயுதமெடுப்பிக்கிறேன், இப்படிப்பட்ட மரமேறுகிற வாடிக்கையெனக்கில்லை. கடன்வாங்கி யிறைகொடுத்தவரும் மரமேறிக்கைவிடுத்தவருந் தலையெடுக்கப் போகிறதில்லையே. நானுன்கையிலகப்பட்டேன், ஓ! வீரமாகாளி உன்சந்நிதானத்தில்வந்தேன், இயாவரு மிறந்தழியு மிடஞ்சேர்ந்துவிட்டேன், இனியென்னுயிராசை விட்டேன் ஆகெட்டேனென் றிருகண்ணிலுங் கண்ணீர்விடுத் தேங்கினான்.

இவ்வாறிரங்கிப் பின்வாங்கியபாலனை யவன்பாங்கிலிருந்தபேடியானவள் கைகளாற்றாங்கி, மார்போடணைத்து, மகிழ்ச்சியாய்த்தழுவித், தடவிக்கொடுத்து, உள்ளன்புகாட்டி, அப்பா, நீ அஞ்சாமலேறி ஆயுதமெடுப்பையாகில், உனக்கதிக மங்களாகாமுண்டாமென்று, அவனைத் தேர்க்கொடுங்கைச் சிகரத்திலேற்றி, மரக்கிளையிற்றாண்டிப் போம்படிக்கான உபாயஞ்சொல்லிப் போக்கினாள்.

உத்தரகுமாரன்வன்னிமரத்திலுற்ற ஆயுதங்களை எடுக்க இசைதல்.

அந்தப் பேடிப்பேச்சுப்பிசகாமல் பின்னாற்பெற்ற நாவிக்கப் போகிற பெரும்பயனென்று காத்திருப்பதினால், மச்சகுமாரன் அச்சமில்லாமல் கிளையேற்றுவி, ஆயுதங்களைப்பாண்டவர்கள் பதுக்கிவைத்தார்களென்னும் பேச்சுநிச்சயமோ வென்னமோகிதானிப்போயென்று, கி

ட்டிச், சிருஷ்ணாலத்தினுற்கட்டியிருந்த கட்டையவிழ்த்துப் பார்க்கும்போது, உச்சிதமான கிருஷ்ண சற்பமொன்று சிறித்தாத்தியதைக்கண்டு, மதிமருண்டுமயங்கி, வருந்தித்தியங்கி, அடிவஞ்சகப்பேடி! சண்டைமுகத்திற்கு வரோனென்றவென்னை உபாயமாய்க்கூட்டிவந்து வன்னிமரத்திலேற்றிப், பாம்புக் கிரையாக்கவோபார்த்தாய் நான்பண்ணியபாவமென்னமோ? உன்னைச்சாரதியாகவெண்ணிவந்ததோஷமோ? இன்னமுமென்னையென்ன செய்யப் போகிறாய்? இந்தமட்டுமென்னை விட்டுவிடடி. எனக்குப்புத்திவந்தது. அடிசதிகாரியென்று மயங்கி யிறங்கிவரத்திரும்பியஉத்தரனியற்கையைப்புத்திசாலியாகிய பேடிகண்டு, இறங்காதே யிறங்காதேயென்று கையமர்த்தி நீகண்டபாம்பான துணைப்பதறிக்கடியாது. அதற்கு நீபயப்படாதே. அதிகுணசாலியாகிய வாசகுமாரனே? உனக்குப்பொல்லாங்கு விளைக்கும்படியான பொருண்மையெனக்கில்லை. நீவிருதாவிற்கவலைப்படுகிறாய் இன்னஞ்சற்றுநேரத்திலுனக்கு மேலானசுபங் கிட்டப்போகிறது. எப்போதுமெனசொல்லுனக் கொப்பில்லா வின்பத்தை யுண்டாக்கக்காத்திருக்கிறது உத்தரகுமாரனேயென்று அவன்கருத்திலெழுந்த கலவரத்தைக் களைந்தாள், அம்மரத்தின்மீதிருந்த ராஜகுமாரன்பிராணன்போனாலும்போகட்டும். பேடி பரிந்துவருந்திச்சொன்ன பேச்சைப்பார்ப்போமென் றுளந்தெளிந்து, பேடியிடத்திற் சிகவிப் பேய்போலலைவதிலும், பெரும்பாம்பின் வாய்ப்பட்டிறப்பது புண்ணிய வசந்தானென்று துணிந்து, பாம்புருவாய்க்கண்ட படையின்பேரிற் கைவைத்துக்கலைத்தான் அப்போதொரு பொல்லாங்கு மில்லாதிருந்ததைப்பார்த்து, அடடா? இதிலென்னமோ மகத்துவமிருக்கிறதென்று, தன்னுக்குள்தானே பூரித்துப், பூமியினின்ற பேடியையநோக்கி வீணான நிஷ்டூரத்திற்காளானவிந்தைக்காரி? இந்தமரப்பொந்தில் வைத்திருக்கும் ஆயுதங்களுடன் மலைப்பாம்பொன்று சுற்றிக்கொண்டிருக்கிறது உன்னாலெனக்கென்னதைரியநேரிட்டாலும், (பாம்பென்றாற் படையுநடுங்கும்) என்னும் பழமொழி யுண்டல்லவோ, அதனால் அளவுபடாமலென்மனம்வருந்தி வாடுகிறது அப்படியிருந்தபோதிலும், பாண்டவர்களின் படைகளிவ்விடத்திற்வந்த வரலாறும் விஷாக்கினியுள்ள பாம்பொன்று சிறிக்கொண்டிருக்குந் தன்மையும் அவர்களிந்த வன்னிமரத்திலொளித்துவைத்த காரணமும் இந்தரகசியமுனக்குத் தெரிந்தவிதமும் எனக்கொளியாமல்விபரமாகச்சொல்லுவையானால், நானிந்தவாயுதங்களையெடுத்துக்கொண்டுன்னுடன் கூடவந்துநீசொன்னபடி கேட்டு நடப்பேன். இல்லாவிடில், இம்மரத்தைவிட்டிறங்கமாட்டேனென்று உத்தரகுமாரனுரைத்து அம்மரத்திலட்டகாசஞ்செய்தமர்ந்திருந்தான்.

அந்தமைந்தனறைந்த வார்த்தைகளைப் பேடிகேட்டுச்சிந்தைபூரித்துச் சிரித்துமகிழ்ந்துதோத்தட்டின் மீதினின்று அடுத்தோனைக்காக்கும் அரசிளஞ்சிங்கமே, பாண்டவர்கட்குரியபடைகளை யிந்தவன்னிமரத்தில்மறைத்துவைத்தபோது, இருவர்தவிர மற்றவர்கள் கண்ணுக்குப் பாம்புருவமாய்த் தோன்றக் கடவனவென்று தருமராசனுரைத்த சத்தியவாக்கின்படிக்குச் சற்பமாகத்தெரிவதைக்கண்டு சஞ்சலப்படாதே அதுவொரு பெரியவில்லென் றறிந்துகொள்ளக்கடவை அந்தவில்லின் பிரதாபமும் அதுகிடைத்த முறைமையும் எப்படிப்பட்டதென்னில்சிருஷ்டிகர்த்தாவாகிய பிர்மாவினிடத்தில் நூறாயிரவருடம் தக்ஷப்பிர்மாவினிடத்தில் பதினயிர வருடம் தேவேந்திரனிடத்திலாயிரவருடம் சந்திரனிடத்திலைந்நூறுவருடம் வருணனிடத்தில் நூறுவருடம் மற்றும் பலரிடத்தில் நெடுங்காலமிருந்து இவர்கட்குண்டாகிய பகைகளைக்களைந்து பின்னும் வருணனிடத்தில் வந்துசேர்ந்து பொன்னுமணியும் பூசையாகக்கொண்டு சிலவருடஞ்சென்றபின்பு கடைசியில் அக்கினிதேவனடுத்துக்கேட்க அவனிடத்தி லாசைவைத்து வருணராசன் இக்கடவுட்குக்கொடுத்தார். இந்தவில்லினால் வெற்றிபெற்றுவரும் அக்கினிதேவன் காண்டாவனதகன காரணத்தினால் அருச்சுனராசனுக்குக் கொடுத்துத், தனக்குவேண்டிய காரியங்களை முடித்துக்கொண்டான். அதுமுதல் இதுவரையிலும் அறுபத்தைந்து வருடமாக அருச்சுனராஜன்கரத்திற் கிசைந்து அநாவிர்தகண்டம் அளாவிர்தகண்டமுதலிய வெண்டிசையும்வென்று ஜெயமாலைபுனைந்து மனோபீஷ்டங்களைக்கொடுத்து வெகுவிதவதிசயவெற்றியைப்பெறக்கடவதென்று தேவர்களுரைத் தருளிய வாசீர்வதத்தினால் அசைவற்றிசை பெற்றிருக்குங்காண்டீபப் பேர்கொண்ட வில்லென்றறியக்கடவாய். இந்தவில்லுக் கொப்பாகியவில்லு இந்திரவுலகமுதலிய வெவ்வுலகத்திலுமில்லை இந்திரநீலம்வைத்திழைத்தவொளிபோற்பிரகாசிக்கும் அதனை நீநன்றாய்நிதானித்துப்பார்க்கில், உனக்கே செவ்வையாய்த்தெரியும், அன்றியும், பஞ்சபூதங்களினாலும் மானிடர்முதலிய பதினெண் கணங்களினாலும் பழுதுபடாத காண்டீபமென்பது அதன்பெயர். பூருவம் சொர்க்கலோகத்திற்குற்ற துன்பத்தினை நீக்கும்பொருட்டுக், காலகேய நிவாதகவசர்களைவென்று யமபுரத்திற் கனுப்பிய திறமையும் இராஜசூய யாகத்திற்காக விஜயம்பெற்றுத் திரவியஞ்சேகரித்தமுறைமையும் சித்திரசேனன் முதலிய காந்திருவரைக் கண்கலங்கச்

செய்து. துரியோதனனைக்குழுர்பத்துடன்கட்டவிழ்த்து மீட்ட கருணையும் சுரண்டிபனடைந்த பெருமையும் இந்த வில்லின்வலியே யன்றி, மற்றொன்றுமல்ல. இந்தமட்டுமிருந்திற்க, சத்தாகியபாற்கடலைக் கடைந்த மத்தாகிய மந்தரகிரி போன்று, கொத்தாகியமற்றவாயுதங்களுடன் கலந்துவிளங்குகின்ற வெவ்விய கதையானது, வீமசேனனுக் குரியது, மற்றுமுள்ள வாயுதங்களியாவும் தருமராஜ நகுலசகாதேவர்க ளுடையவையென்று பேடி சொல்ல வெற்றிமேற்கொண்ட விராடகுமாரன் தன்மனக் கலக்கந் தெளிந்து, சகல படைகளையுங் கண்ணுற்றுக்கண்டுசொல்லுகின்றான். கடையேனுமிப வெனக்கு இவற்றையெல்லாங் காண்பித்தென்னை யாளாக்கிவிட்ட காரிகையே! இஷ்ட தெய்வம்போலென்னைத் தடுத்தாட் கொண்ட வேற்றிழையே! மகாபுண்ணியவதியாகிய குந்திதேவி யீன்ற மைந்தரைவரும் தங்கள் தங்க ளுயிர்போற்கருதிய வாயுதங்களை யொருநாளுமபிரியார்களே அப்பேர்ப்பட்ட மகாபுருஷர்கள் இந்த வன்னிமரத்தில் மறைத்துக் குறிப்பிட்டுவைக்கவேண்டிய வவசரமென்னமோ, இப்பொழுதவர்க ளெந்நாட்டிலிருக்கின்றார்களோ, எப்படியானார்களோ? அதையெனக்குணர்த்தவேண்டும் பாக்கியசாலி! என்று உத்தரன் கேட்க? வாசநிறைந்த மலர்போற்சிறந்த கட்கருணை யினையுடைய பேடியானவள் முகமலர்ந்து, புன்னகை புரிந்து, அகமகிழ்ந்து அன்புள்ள வாசனே! பாண்டவரைவரும், நந்தியாவட்ட மாலையணிந்த காந்தகனுடைய வஞ்சத்திற்குள்ளாகிச் சொக்கட்டானுடித், தோல்வி யடைந்து, சோர்வடைந்தவராயப் பன்னிரண்டு வருடம் வனவாசமும் ஒருவருட மஞ்ஞாதவாசமும் போக்குவதற்குடன்பட்டுச்சென்று, காட்டிற் கழிக்கு நாட்களைக்கழித்து, நாட்டிலிருக்கு நாளைநினைத்து, யாவராலுந் தங்களையின்னாரென் றறியாதிருக்கும் படிக்குத் தங்க ளாயுதங்களை யிம்மரத்தில்மறைத்து விட்டு. வேடமாறி வேற்றுருக்கொண்டு, எவரும் ஐயங் கொள்ளா திருக்கும் படிக்கு அவரவர்க்குத் தக்கதொழிலை மேற் கொண்டார்கள். இப்பொழுதவர்க ளெவ்விடத்திலிருக்கின்றார்களோ வெனக்குத் தெரியாதென்றாள்? திங்கள்குலஞ்சிறக்கப்பிறந்த சிலைவிஜயன்கூற, மறுவில்லா மச்சகுமாரன் பெருநகைப்பேடிபேசிய வார்த்தையைக்கேட்டுப், பெருமூச்செறிந்து, உடல் படபடத்து, உயிர்துடிதுடித்து, ஒருவாக்கியம் புகன்றான். ஐயோ, தெய்வமே! சத்தியந்தப்பாத சாதுவானவர்கள் அசத்தியத் துஷ்டராகிய சுயோத னுதியர்களிப்பாடுபடத்தக்கவரோ? தருமமவர்கட்குச் சகாயம் பண்ணாமற் போயிற்றோ? கலிகாலமாயிற்றோ? பாவமேலிட்டதோ? நீதிவழுவிக்கெட்டதோ, கொடியோர்களிக்கட், பாண்டவர்கள் துன்புற்றுத் தேமபிவாடச் செய்ததுதீவினையோ. மெய்த்தவத்தையும் மேலானதருமத்தையுஞ் சத்தியத்தையும் இவ்வுலகிலுள்ளோர்கள் கொண்டாடுகின்றார்களே அந்தோ, இனியெப்படி தருமத்தை நம்பலாம், அசத்தியமேவிட்டு அக்கிரமி களுக்குத் துணைசெய்யுமாயின். சத்தியத்தைநம்பிச் சங்கடப்படுவது தகுதியோ, தருமமே சத்தியம் சத்தியமே நித்திய மென்றிருந்த தருமராஜனும் தோள்வலியைத் துணையாய்க் கொண்ட வீமசேனனும் இறணுற்ற சிலைபெற்ற விஜயனு மணியும் இளையவரிருவரும் பெருமையாகவாழ்ந்த புண்ணியர்கள், வாசமணக்கு மலர்க்குழலினையுடைய துரோபதியாதுடன் எவ்விடத்திற் றுன்பமது பவிக்கின்றார்களோ, எத்தொழிற்செய்கின்றார்களோ, ஐயோ பற்பலயாகங்கள்செய்து சோடச மகாதானமும் பண்ணி, மேலாகிய வாழ்வனுபவித்துத், திரிபுவன ஜெயம்பெற் றிருந்தாலும், அவ்வாழ்வைக் கீழ்ப்படுத்தித், தாழ்வை மேற்படுத்தி நல்லோரை பொல்லாராக்கிப், பொல்லாரை நல்லோராக்கி, விதவைகளை வீரர்களாக்கி, ஜாதியீனரைத் தனவானாக்கித் தனவான்களைத் தரித்திரராக்கிப், புகிதமுடை யோர்க்குப் பிணியைவிளைத்துப், பொய்யரை மெய்யராக்கி, மெய்யரைப் பொய்யராக்கி இவ்வாறு தலைகீழாகப் பண்ணுவதோ ஊழ்வினைப்பயனென் றுருகித், தன்மனங்கருகிச், கண்ணீர் பெருகியோடக் கசிந்து, பெருமூச்செறிந்து, தெய்வமே, பாண்டவர்கள் இப்போ தெங்கிருக்கின்றார்களோ நல்லவர்கட்குத் தீவினைவிளையுங் காரண மென்னமோ, என்று உயிர்வேதையுட னேக்கங்கொண்ட வுத்தரகுமாரனுடைய வுண்மையையும் உறுதியையும் பேடி தெரிந்துகொண்டு உள்ளமகிழ்ந்து உரைக்கத்தொடங்கினாள்.

பள்ளநீர்க்கயங்கடோறும் பால்பெருகி யோடும் மச்சநாட்டினரயான மைந்தனே கேள். சிந்தையில்லாப் பாண்டவர்களைக்குறித்து நைந்து வருந்தாதே. அவர்களிப்போதுன் னாட்டிலும் நகரிலும் படைவீட்டிலு மிருக்கின்றார்களென்று சொன்னாள். அவள் வார்த்தையைக் கேட்ட உத்தரகுமாரன், சித்தம்பிரமித்து அம்மம்மா, என்னாட்டிலும் வீட்டிலு மெப்படி யிருக்கிறார்கள்? அந்தவிந்தை யெனக்கு விபரமாகச்சொல்லுந்தாயே யென்று உத்தரன்கேட்கப் பேடிசொல்லுகிறாள். அப்பா, முதன்மையானகுலத்தையும் முடிவில்லா நலத்தையு முடையவராய் விராடராஜனுக் கருகாசனத்தி லிருந்து, இவ்வியமங்கள் விக்கிரகமாய்விளங்கி, விவகார தருமத்திகளை விளம்பிக் கங்கபட்டனெனப்பெயர் பெற்றகருணையாளர், தான் முரசக்கொடிபடைத்த தருமராஜன். காவிக்கினி

ய அறுசுவை பதார்த்தத்துடன் அன்னஞ் சமைக்கும் படியாக உங்கள் மடைப்பள்ளியிலிருக்கும் பலாயனனென்னுஞ் சுயம்பாகிதான், வீமசேனன். எங்கும் பிரசித்தமாகிய குதிரைக்கூட்டங்களுக் கேசமானனாகிய தாமக்கிரந்திதான், நகுலராஜன். உங்கள் பசுமந்தைகட்குத் தலைவனெனவந்த தந்திரிபாலனானவன், சகாதேவன். உன்தாயாகிய சுதேஷ்ணையினிடத்தில் பணிப்பெண்ணாயமைந்த விரதசாரணியானவள், மகாலட்சுமிக் கிணையான திரௌபதாதேவி, உன் தங்கையாகிய உத்தரைக்கு மத்தளதாள விருத்துடன் நிருத்தியிதாவென நர்த்தனம் பழக்கிக்கொண்டிருந்த பிரகந்நளை யென்னும் பேர்கொண்ட பேடியாகிய நான்தான், அருச்சுனன் அன்றியும், உன் அம்மானான கீசகன் துரோபதியின்மீது காதல்கொண்டு துன்மார்க்க நினைத்தமையால், அவனை வசந்தமண்டபச்சோலையிலடித்து அவன தம்பிமார்களையுமடித்துக் காந்திருவர்பேரிற் பழிவைத்தவன் வீமசேனனென்று தெரிந்துகொள். வீமன்கொன்றுபோட்டுக், காந்திருவர்பேரிற் பழிசுமத்தியதென்னென்றால், நாங்கள் கழிக்கவந்த அஞ்ஞாதவாசத்திற் கிடையூறுவருமென்றஞ்சி, மந்திரத்தாற் றடைபட்டிருந்த கிருஷ்ணசர்ப்பம்போலடங்கியிருந்து, தவணைநாளைக்கழித்துவிட்டோம். நாங்களநுபவிக்கவேண்டிய பதின்மூன்றுவருஷமும் நேற்றோடுதீர்ந்துபோய்விட்டது. இனிமேலெங்கட் கியாதொருபயமுமில்லை யென்றுசொல்ல, உத்தரகுமாரன்கேட்டு, ஆச்சரியத்துடன் புகழ்ந்து, இது நல்லகாலம்போ லிருப்பதால், இவ்வேளையிலின்னஞ்சில ரகசியங்களை வெளியாக்கிக் கொள்ளவேண்டுமென்று விரும்பி, ஓமோமனதாயத் துணிந்து, ஐயா! தேவர்கள் கொண்டாடாநின்ற பேரழகும் பெருமையளித்த வருளாண்மையும் சிலைவிஜயத்திறமும் பெற்றிருக்கின்ற அருச்சுனராஜன் நான்தானென்று நீர்சொன்னபேர்க்கு நானம்பமாட்டேன். நீயேனாரென்று அதிகாரமாகச் சொல்லுவையாகில், உனக் கெத்தனைபெயர் கிடைத்திருக்கின்றது? அப்பெயர்கள் வந்ததற்குக் காரணமென்ன? நீ யெதுவகையிலும் பெற்ற பெருஞ்சிறப்புகளென்ன? அவற்றையெல்லாம் என்மனக்கலக்கந்தீரச் சொல்லுவையாகில், நானுனக் கடிமையாவேனென்று நீர் யாதொரு தடையுமிராதென்று உத்தரகுமாரனுரைக்கச், சித்திரப்பாவைபோலிருந்து கேட்ட விஜயன், அதைகளித்துச் சொல்லத்தொடங்கினன்.

உத்தரனுக்கு அருச்சுனனுக்குற்ற பெயரும் அப்பெயர்வந்த வரலாறும் பேடி இசைத்தல்.

வெற்றிபெற்ற விராடபுத்திரனாகிய உத்தரகுமாரனே! எனக்குக் கிடைத்திருக்கின்றபெயர் பதினொன்று அவற்றின் விபரமென்னையென்னில், பற்குனன் பார்த்தன் கிரீடி தனஞ்சயன்-விஜயன்-சுவேதவாகனன்-வீபற்சு சவ்வியசாசி கிட்டினன் அருச்சுனன்-கிருட்டினன்- இவ்வாறமைந்த வென்பெயரைப் பெரியோர்முதலியயாரும் பெருமையாகக்கொண்டாடிப் பேசுவார்கள், இப்பெயர் வந்ததற்குக் காரணம்யாதெனில், பங்குனியுத்தரத்திற் பிறந்தமையால் பற்குனனென்றும், என்னையீன்ற அன்னைதன்பெயர் பிருதையாதலின், பிருதைச்சம்பந்தம் பார்த்தனென்றும், தேவலோகத்திற் புகுந்து தேவேந்திரன்கொடுத்த கிரீடம்புனைந்து சிம்மாசனத்தில் வீற்றிருந்தமையால், கிரீடியென்றும், இராஜசூயயாக மியற்றியவந்நாளில் உத்தரகுரு கண்டத்துச்சென்று, சித்தர்கள்-தேவர்கள்-காந்திருவர்முதலிய பேர்களைவென்று, எண்ணிறந்த தனக்குவியலை மகமேருபோற் குவித்தமையின், தனஞ்சயனென்றும், திரிபுவனத்துமென்னைச் செயிப்பவரின்றித், திசைமுற்றும் யானொருவனேவென்று விஜயங்கொண்டமையால்? விஜயனென்றும், பரமசிவத்தின் வெள்ளிவிடைபோல் விளங்கும் நான்குசுவேதப் புரவிகள் பூட்டிய தேரேறி நடாத்துகின்றமையால்? சுவேதவாகனனென்றும். என்னைக்கண்ட வேந்தர்யாவரும் மண்-பொன்-பெண்ணாசைகளை விட்டுக், கண்ணைப்பிசைந்து கலங்கிப்பின்னிட்டு விண்ணுடுசேர விடுக்குந் திறத்தால், வீபற்சென்றும், இடக்கை வலக்கையிரண்டினாலும பாணந்தொடுக்குந்திறத்தால், சவ்விய சாசியென்றும், என்னையும் என்வில்லையும்-என்தமயனையும் இகழ்ந்துபேசுகின்றவர்கள் மட்டற்றவல்லமைபெற்றவானவராயினும் மன்னவராயினும் அவர்தலையறுபடுத்திநாசஞ்செய்வேனென்றுசபதங்கொண்டிருக்கின்றமையால், கிட்டினனென்றும், பான்மரகதமணிபோல் நிறம்பெற்றவுடல்கொண்டிருத்தலால், அருச்சுனனென்றும் காண்டாவனதகனகாலத்தில்மாதவனும் யானும் வேற்றுமையின்றி மருவியவாற்றால், கிருட்டினனென்றும், இத்தன்மையாயிசைந்த பதினொரு பெயரும் கற்றவராலுங் கொற்றவராலும் நற்றவராலும் தேவர்கள்முதலிய - மற்றவராலும் வந்தனவென்றோதி, ஐயா, உத்தர குமாரனே பூர்வம் திரிபுரந்தெறுழச் சிரித்தருளிய சிவபெருமான் அநுக்கிரகஞ்செய்த திவ்யாஸ்திரங்களும் பிரமா-விஷ்ணு- இந்திரன்முதலிய தேவர்களளித்த கூரிய பாணங்களும் பெற்றிருக்கின்றேன். அவைகளை, நாங்கள் அஞ்ஞாதவாசஞ்செய்ய எத்தனித்தபோது, இந்த வன்னிமரப் பொந்தில் வைத்திருக்கிறோம். இப்போது உனக்குப்பாம்புருவமாய்க்காணுகிற காண்டீபமும்-அக்ஷயதூணியும்-அக்கினிதேவனாற் கிடைத்தன. முப்பத்து முக்கோடி தே

வர்களும் - தேவேந்திரனும் - கொண்டாடிக்கொடுத்த தேவதத்தத்துடன் பதினாயிரங் குதிரைபூட்டிய இந்திர விமானத்தை மாதலியோட்டிய காலையில், அதன்மேலாரோகணித்துத், தோயமா புரத்திற்சென்று, மூன்றுகோடி நிவாதகவசரைக்கொன்று, ஜெயங்கொண்டு தேவஸ்திரீகளாலமெடுக்கவும் புஷ்பமாரி பொழியவும் புகழ்ந்துவாழ்த்தவும்-பிரதாபம்பெற்றேன், இரணியபுரவாசிகள் அறுபதினாயிரம்பேர் காலகேயர்களையும் அவர்கட்குதவியான பதினாயிரமரக்கரையும் பாசுபதக் கணையால் மாய்த்து, யான் மந்தாரமாலை புனைந்து வரிசைபெற்றுப் பூலோகத்திற்குவந்த மேன்மையை நீகேட்டறியாய்போலு மிருக்கிறது. நல்லது, உத்தர குமாரனே ஆயிரம்பேச்சென்னத்திற்கு? ஒருவார்த்தை சொல்லுகிறேன். நீ யோசிக்கத்தக்கது. சத்துருவை முடிப்பதும்-தாகத்திற்குச் சலங்குடிப்பதும் இவ்விரண்டும் எனக்கு அதிசொற்பமான வேலையன்றி, வருத்தமிராது. ஆதலால் நானருச்சுனனென்பதற்குச்சந்தேகமில்லை. இப்போது நமக்கு நேராகிய சேனைகளைக் கண்காணுமலோடவடிக்கிறேன் கன்றுகளுடன் கலந்தபசுநிரைகளை மீட்கிறேன். நீயினித்தாமதஞ் செய்யாமற்புறப்படென்று சொன்னான்.

அம்மொழிகேட்ட உத்தரன் ஒருவாறுதேறி, மகிழ்சிறந்து இனிநமக்குப் பயமில்லையென்று தானேறியிருந்த விருக்ஷத்தை விட்டிறங்கி, இரதத்தின்மீது இளஞ்சூரியனைப்பனிமூடியவாறுபோல், பேடியுருவமமைந்த பெருமானைக்கண்டு நெடுநாளாகத்தேடிய தேவைப் பணியும் அன்பர்போற்பணிந்து. துன்பமுந் துயருந் தொடராச் சொருபனுடைய திருவடியை சிரத்திலுங் கண்களிலும் முகத்திலுஞ் சேர்த்து முத்தமிட்டுத் தன்னைத்தானேமறந்து தனக்குத்தானே திடுக்கிட்டுப் பயந்து, இனியவசனமொழிந்து நயந்துநின்றான்.

அக்காலையில் பார்த்தனென்பவன் விரைவிற்றேர் விட்டிழிந்து பிரியாப்பிரியத்துடன் முகமலர்ந்து உத்தரகுமாரன் உடல்குழைய வணைத்து ஐயனே, இன்னமுனக்குப்பயமுண்டாயிருக்கின்றதோ என்னளவிற்சந்தேகமுண்டோ! நீயேதொன்றுக்கும் அஞ்சாதே. நீதில்லாச்செயம்பெற்று வாழ்வாயென்று உறுதிவார்த்தைகளுரைத்துத்தேற்றினான், அதனாலுத்தரகுமாரன் களித்து, முகமலர்ந்து, சிவந்தகைகளைச் சிரத்திற்குவித்துக் கண்ணீர் பெருகக் கசிந்துள்ளமுருகிப் பாற்கடல்போற் கீர்த்தியடைந்த பார்த்தமகாராஜனே! தேவரீரின்னுமொன் றறியாமல் கன்றுபின்னுவென்று ஏழைமதியாற்பிதற்றி அபசாரங்களைப் பெரியமூட்டையாகக் கட்டிக்கொண்டேனான் மகாபாவியாயினேன் சிறியேன் செய்த பிழையைப் பொறுத்து அருள்சுரந் தாளவேண்டும். அத்தனே! என்னிட்டமாகிய கர்த்தனே! என்று பற்பலவசனங்களினால் பாதவித்துக்கூறி மேலுஞ்சொல்லுகின்றான்.

கருங்கடலகடுகிழிய ஒருங்குட னேழிக்கலக்குங்கங்கைநீர்வளம்பெருகிய குருநாட்டரசே! கேட்டருளும் தேவரீர் திருவடிபெயர்த்தருளிய சாரதித்தொழில் நமக்குக்கிடைக்குமா, ஜன்மாந்திரபுண்ணியபலன் எண்ணியவண்ணங்கைகூடுமா வென்று வெகுநாளாகக்கவலைகொண்டு மனங்கன்னியிருந்தேன், அண்ணலே! மெத்தப்பிரயாசப்பட்டுத் தான்கற்றவித்தையைப் புகழ்ந்துபேசுகிறவர்களைப்போற், பேசப்படாதென் றிருந்தாலும், தமது கருணையானது என்னைப்பேசச்செய்கிறது. அருமையறியும் பெருமானிடத்திற்பேசாமல், பின்னையாரிடத்திற்பேசப்போகிறேன், அரவாபரணம் பூண்ட ஆண்டவருக்கு வேதப்பரிபூண்டிய பிரமாவினால் விதித்திருக்கின்ற சாரதிநூல்களெல்லாம் பார்த்து எல்லா வல்லமையிலுங்கைதேர்ந்திருக்கின்றேன். கருணைகடாட்ச காண்டீபதரனே யென்றுசொல்லிப் பணிந்தான்.

அந்தராஜகுமாரனை அருச்சுனன் தழுவியணைத்து என்னிதயத்திற்குவந்த இளஞ்சிங்கமே? நீயும்நானும்நெருங்கிய இஷ்டமானோம். இனிநெருப்புங்காற்றுஞ் சேர்ந்தபின்புச் சத்துருவாகியகாடு நீறுபடாதிருக்கக் கூடாது. இன்னம் யோசனைக் கிடங்கொடாது, விரைவிலே நீ இம்மரத்திலொளித்துவைத்திருக்கும் வில்லும் பாணமும் எடுத்துவாவென்று விஜயன்விளம்பினான். உடனே உத்தரகுமாரன் தடையில்லாமல், ஏறி உத்தரவின்படி தேவதத்தமும் காண்டீபமும் அக்ஷயதூணியும் எடுத்துக்கொண்டு மற்றவாயுதங்களை முன்போல் வைத்து மான்தோலாற்கட்டி மறைத்துவிட்டு, மரத்தைவிட்டிழிந்து அருச்சுனராஜனைத் தொழுது, அவர்கையிற்கொடுத்துத் தனக்குச் சாரதித்தொழில் கிடைத்த சந்தோஷத்தால் திடீரென்று தேரிற்குதித்துக் குதிரைக்கடிவாளங்களைக் கையிற்கொண்டான்.

அருச்சுனன்பேடியுருவமறைத்துச் சுயரூபமெடுத்தல்.

அப்பொழுது, அருச்சுனராஜன் இந்திரன்முதலிய தேவர்களையும் ஊர்வசியையுஞ் சிந்தித்துத் தந்தை- தாய் தமையன் முதலானபேர்களையும் வந்தித்துத்தர்மதேவதையையும் போற்றினான். அவ்வேளையில் பாண்டுமஹாராஜன் பூருவந்தேடிய பாக்கியம் பலித்ததுபோல், பேடிரூபநீங்கி, ஆதிபுருஷ ரூபலாவண்ய வடிவமாயினான். ஆகாயத்திலுள்ள அமரரியாவரும் வாழ்த்தினார்கள் அருச்சுனனைக்கண்ட ஆடவர்யாவரும் பெண்மையை அ

வாதுந்தன்மையால் அருகேயிருந்தமச்சகுமாரன் இச்சைபேற்கொண்டான்.

க்ஷணத்திற்குமுன்னே இருள்மூடிய வாறுபோல் பேடியாயிருந்து, இப்போது பச்சைமணியின் பிரகாசம் வீசிச் சொலிப்பதுபோற் றுலங்கியதன்மை யெவ்வாறிருந்ததென்னில், இந்திரஜாலங் கற்றவர்கள் க்ஷணத்திற்குக்ஷணம் வெவ்வேறு ரூபங்காட்டுகின்ற விந்தைபோன்றிருந்தது. அருச்சுனனது தேககாந்தியைக்கண்ட உத்தரகுமாரன் மின்னலுக்கெதிரில் விழித்தவர்கள் போற், கூசிக்கவிழ்ந்து, இரண்டுகைகளினாலுஞ் சேர்த்திறுகத்தழுவி என்னையனே, உமது மாசற்றதிருமேனிக்கு மாறுவந்த காரணம் யாதோவென்றுவணங்கிக்கேட்க், விஜயன்சொல்லுகின்றான். ஓ இராஜசெல்வமே தேவர்கட்குப்பகையாகிய காலகேய நிவாதகவசர்களைச் செயித்து, வெள்ளையானையின்பேரிற் பவனிவந்து, அமுதபோசனமுண்டு இந்திராசனத்திலிருந்த எனக்குச் சந்தோஷமுண்டாக்கும்படி தேவேந்திரன்நினைத்து அரம்பை ஊர்வசி மேனகை திலோத்தமை இவர்களால் நாட்டிய மாடுவித்தான்.

அவர்களாடியஆட்டிலும்பாடியபாட்டிலும்சிறந்த முகநயமுள்ளஊர்வசியை நான்மெச்சிச்சிரக்கம்பஞ்செய்தேன். அவணிருந்ததேவர்முதலியயாவரும்ஊர்வசியின் றுசெவ்வையாய்நடித்தனளென்றுகொண்டாடினார்கள். அன்றிரவில்,எனக்கமைத்த அரண்மனையிற் போயிருந்தேன். நடுராத்திரியில், இந்தஊர்வசி என்னிடத்திற்குவந்தாள். எங்கள்பாட்டனான புரூரவச்சக்கிரவர்த்தியின்பத்தினியென்று மெத்தப்பயந்து, நானெழுந்து அவள்பாதத்தில்விழுந்து நின்றேன் கொழுந்து விட்டெரியுஞ் சுடர்போற்கொதித்து நானெண்ணிவந்த எண்ணத்தைப்பின்னம்பண்ணியபடியால், மண்ணினில்வாழுமனுக்களில்நீ பேடியாகவென்றுசபித்துப்போயினாள். பொழுதுவிடிந்தபின்பு அவ்வுருவத்தோடு வெளியேவருதற்கு வெட்கப்பட்டிருந்த என்னைத்தேவேந்திரன்கண்டு விசனமடைந்து சங்கிதியமிந்துகொண்டு ஊர்வசியினிடத்திற்குச் சென்று. அவளுக்குவேண்டிய உறுதிமொழி புகன்று என் சாபநிவாரணஞ் செய்தான்; அந்தச் சபாம் நானினைத்தபோதுஒருவருஷம் என்னைத் தொடர்ந்திருக்கவும் நானினையாதபோது, என்னைவிட்டு நீங்கியிருக்கவும்அநுக்கிரகித்தாள், அந்தஊர்வசியநுக்கிரகத்தால், உன்னுடைய விராடபுரத்தில் ஒருவருஷம் பேடியாயிருந்து அஞ்ஞாதவாசம்பண்ணும்படி நேரிட்டது அப்பனே! எனக்குப்பேடியுரு வமைந்த வரலாறிதுவென் றுரைத்து இப்பால் அருச்சுனன் தன்தந்தையான இந்திரனையும் - வம்ஸநாயகனாகிய சந்திரனையும்- துரோபதியைப்பெற்றவனாகிய அக்கினிதேவனையும் சிந்தையிற்றுதித்துவந்தனைபுரிந்து தனக்குவேண்டிய அணியணிப் பணிகளைக்குறித்துவிரும்பினான். அவ்வேளையில் தேவேந்திரனானவன்தன்மைந்தன் பழையவடிவங்கொள்ளப் போகிறானென்றுமகிழ்ந்து, கதிர்மணிக் குண்டலம் கனககிரீடம்நவமணியினழுத்த ரத்னாபரணங்களும் ஒப்புவமையில்லா முப்புரிநூலுடன் கர்ப்பகமாலையுங் கந்தமூர் தந்தான். அவற்றையெல்லாம் அருச்சுனன்பெற்றுக்கொண்டு ஊர்வசியம்மனை உள்ளத்தில் நினைத்துப் பஞ்சாயுதன் போலும் செஞ்சிலைமதன்போலும், அஞ்சனமேனியழகனாயினான். இவ்வாறு கட்டழகமைந்த காண்டீபனென்னுங்காளையானவன் அக்கினிதேவனால் அநுமக்கொடியும் அஸ்வகதியும் வரும்படியாய்ச்செய்துகொண்டு சகலாபரணபூஷிதனாய்ப் பூரணவலங்கிர்தத்துடனிருந்து தானேறியதேரில்நாட்டிய சிங்கக்கொடியைமாற்றி அண்டமுகடதிர ஆகாய மார்க்கமாய் வந்த அனுமக் கொடியை அமைக்கச் சொன்னான். அருச்சுனனேரிவந்த தேரிற்பிரகாசித்த அனுமக்கொடியை உத்தரகுமாரனுடைய சிங்கக்கொடியானது கண்டுதுவண்டு நாமிந்த அனுமக்கொடிக்குச் சரியாகமாட்டோம் இந்த அனுமாரானவர்இராமராவணயுத்தத்திற் சங்கைதீர்ந்திருக்கின்றவரென்று தைரியம்விட்டு சந்துபார்த்து நுழைந்து கொண்டதோவென்று சாதுரியவான்கள் சாற்றும்படியாய் அதனை வன்னிமரப்பொந்தில் மறைத்துவைத்தார்கள். இப்பால் அருச்சுனராஜனும். உத்தரகுமாரனும் ஒருவரையொருவர் நோக்கிக்களித்து அவ்விடத்திருந்த காளிகாதேவியைக் கைதொழுதெழுந்து இரதமீதேறி ஆகாயமளாவித்தழைத்த வன்னிமரத்தைவலம்வந்துதொழுது விஜயகாண்டீப வில்லைநிறுத்தி வாசமலர்மாலைசாத்திப் பூசைபுரிந்து நாணேற்றிஷ்டங்காரஞ்செய்தான். அக்குணத்தொனியினால் உலகெலாம்பெயரும் ஊழிக்காலம்போ லோசையெழுந்து எங்குநெருங்கிப் பொங்குகடல்போன்ற சேனைகளெல்லாம் நின்றநிலையில் நிலைதவறிப்போய், இயானைவீரர் அஸ்வதீரர் அழகியதேரோர் அணிபடைக்காலாள் அதிரதமகாரத சமரதர்முதலிய யாவரும்பேரிடிமுழக்கங்கேட்டபெரும்பாம்பினம்போல் தலையெடுக்கமாட்டாமல் தட்டழிந்தார்கள் அக்காலையில், கற்பகமாலையணிந்த மற்புயகோலாகல விற்பனவிவேக விதரணசாலியான வீபற்சு யாவருந் திடுக்கிட்டுக் கண்சலங்கும் படியாகத் தேவதத்தத்தை யெடுத்துத் தனது செவ்வியவாயில்வைத்தூதினான் அவன்செய்த சங்கத்தொனியால் மகமேருமுதலாகியமலைகளும் அதிர்ந்து, கடலுங்கீழ்மேலாகக்குமுறிச் சப்தமேகமும்பிதிர்ந்து, அஷ்டநாகமுஞ் சிதைந்துநக்ஷத்தி

சங்களும் உதிர்ந்து, அண்டமுகடு விண்டு கடகடாயனவாயின.

இவ்வித சங்கத்தொனியினாலும் வில்லொலியாலும் நாணோசையாலும் தேரிற்கட்டிய புரவிகளும்பதைக்கச் சாரதியாகியஉத்தரகுமாரனும்சங்கடப்பட்டுத்தலைகட்டுக்கொண்டுபிடித்தகடிவாளத்தையும்விட்டுக்கண்பொறிகலங்கிச் செவிடுபட்டு உணர்வுகெட்டு ஒடுங்கிவீழ்ந்தான் இவ்வாறுநடுங்கி நிலத்திற்சாய்ந்த உத்தரகுமாரனைக் காண்டாவனதகன காண்டீபன்கண்டு தனது நீண்டகைகளாலெடுத்தணைத்து, ஆலவட்டம் சாமரைகளினால் வீசி ஆயாசந்தணித்து வியர்வுபோக்கி அயர்வுநீக்கிப் பன்னீர்தெளித்து வெந்நீரளித்துக் களையாற்றினான், களைதீர்ந்தெழுந்து கண்விழித்துப்பார்த்த உத்தரகுமாரன்நடுக்கமுங்கவலையுநீங்காதவனாய்க் கும்மென்று காதடைபட்டு ஈனசுரமாய்ப்பேசினான் அந்தப்பிள்ளையை இரக்கமாகப் பார்த்துப் பொறுப்பைக்கடைந்து கடைந்தபொருந்திய புஜப்பூரிப்புப்படைத்த விராடர்கோனளித்தபுனிதகுமாரனே? நான்செய்த சங்கத்தொனியினால் ஐம்புலன்களுமயங்கிய அவசமடைந்த உன் பேதைத்தனம் யாதோவென்று அருச்சுனன்கேட்டான், ஐயா, சப்தசமுத்திரங்களும்பொங்கி நெருங்கிவழிந்து உலகமழியுஞ்சர்வசம்மார ஊழிக்காலத்தோசையென்பது தேவரீர்முழக்கியசங்கோசையைப்பார்க்கிலும் பெரிதாயிருக்குமோ? எல்லாவுலகிலும் எழும்பற்பல வோசைகளியாவும் இப்போதிவ்விடத்தில் உமது வில்லாலுண்டாகிய விபரீதத்தைப்போலும் விந்தையைப்போலும் விளைக்க மாட்டுமோ! இத்தன்மையாகியபேரோசையைக்கேட்ட தேவர்களிலும் திக்குப்பாலர்களிலும்யார்தான்பயந்துமயங்காமற்போவார்கள் யார்தான்திகிலடையமாட்டார்கள் அப்படிக்கிருக்க உமது கால்மாட்டிலிருந்த நான்பயப்பட்டு வீழ்ந்தது பெரிதல்லவே அந்தமட்டும உயிர்தப்பிப்பிழைத்துத்தேவரீருடன்பேசப்புறப்பட்டநான்மிகவுந் தைரியசாலியல்லவோ," முத்தொழில்நடாத்துகின்ற மூவருநடுங்கு முழக்கத்திற்குச்சித்தப்பிரமைகொண்டுதேறியவென்னை ஆதரித்தருளும். அருச்சுனராஜனே இனி நானென்னசொல்லப்போகிறேன் என்றிரங்கிய விராடராஜகுமாரனை அன்புடனேக்கித்தோளுடன்மார்புதோயத்தழுவி மாதவமுனிவரால்தான்கற்றமயக்கந்திருமந்திரத்தை உபதேசித்து ஓஉத்தரகுமாரனே உனக்குங்குதிரைகளுக்கும் இனியொருநாளும்பயமில்லை. ஈரேழுலகுங்குலுங்கினாலும் ஓரேழ்கடலுங்கலங்கினாலும் என்றென்றைக்குங் கவலையில்லாதிருக்கலாம் இப்பொழுது விரைவில்தேர்செலுத்தென்று தனஞ்செயன் சொன்னான் அச்சொல்லைக்கேட்ட மச்சராஜன்மதலையானவன் அருச்சுனன் தனக்குக்கிடைத்த ஆசையினால் அன்புமேலிட்டுக் கையிற் கடிவாளம்பிடித்து உச்சவான்கதிர்த் தேரிற்பூட்டியபச்சைமாவனையுமோட்டிய அருணனைப்போலும் சவ்வியசாசியினைசுவேத வாம்பரிகள்போலும் விளங்கியகுதிரையைப்படபடவென்றுசெலுத்தினான் அப்பொழுதுபனியினால்மறைப்பட்டுஒளிமழுங்கிஉடலொடுங்கிய ஆயிரங்கிரணச்சூரியனனவன்உதயமான தன்மைபோல்பேடியுருவால்மறைந்துபெருமைகுறைந்திருந்த அருச்சுனனழகும்-முன்னழகுபிரகாசிக்கச்சிறந்து நெடுஞ்சிலையுங்-கொடுங்கணையுங் கைப்பிடித்துக், கௌரவ முதல்வன் சேனையிலுள்ள சிருபர்களியாவரும் நடுநடுங்கி, நாவறண்டு, கிடுகிடுத்துப் போகும்படியாக, அவர்களுக்கு நேராகத் தோன்றினான்.

இவ்விதமாக அழகியதேர்மேல்வந்த அநுமக்கொடிக்கதிபனை வீஷ்டுமர்முதலாகிய வீரர்களுங்கண்டு, வேறுவேறெண்ணங்கொண்டு, விருதுமுதலிய வீரசின்னமும் சோர்கின்றார்கள். அவ்வேளையில் நானமறைக் கொடிபடைத்த துரோணாச்சாரியார் பாம்புக்கொடியும் நந்தியாவர்த்தமாலையுமுடைய துரியோதன மஹாராஜனைப் பார்த்து, வணங்காமுடிபெற்ற மகிபனே? இசைபெற்ற விஜயன் சர்வசம்மார காலக்கடவுள்போல் சலனமில்லாமல் வருகிறான்பாரென்று சொல்லத்தொடங்கினார்.

இதோ, நமக்கெதிரில்,ஓடிவருகின்ற தேர்வேகத்தினால்,இந்தப்பூமியைத்தாங்கும் பணாமகுடமுடைய ஆதிசேடன் என்னபாடு படுகின்றானோ? அந்தத் தேரிலிருக்கிற மகாபுருஷன் கைப்பிடித்தவில்லின் நாணோசையால் தேவலோகந் தத்தளியா திருக்குமோ? போர்முகத்தில் முழக்குஞ் சங்கத்தைப்பூரித்த பேரொலியானது எட்டுத்திக்கையுஞ் செவிடுபடுத்தாமல் விட்டுவிடுமோ? இப்படிக்கெல்லாமிக்காவிடில், ஒண்டித்தேரும் ஒற்றை வில்லுங்கொண்டு, ஒன்றுக்கும் அஞ்சாமல் தனிமையாய் வருவானோ? இவ்விடத்திலிருப்பவர்கள் இன்னதின்னதென்றறியாயினும், நான்கநீமைகளோடாயினும் நம்மோடெதிர்த்து யுத்தஞ்செய்ய வருகிறவன் அசகாயசூரனென்றுந் திட்டதரிம தேககாத்திர முள்ளவனென்றுந் தேர்ந்தாயோ? எப்போதும் யாதொருகாரியங்களையுஞ் செவ்வையாகநிதானித்து யோசிக்கவேண்டியதே, ஐயா, துரியோதனராஜனே! ஜேச்டிப்பிரகாசகுண்டலமுஞ்சுடர்விடு கதிர்மணியகுடமும்- உதயகிரியிலெழுந்த சூரியன்போற் றுலங்கும்படியாக வருகிறவன் இந்திரன் மைந்தனென்பதற்குச் சந்தேகமில்லை அதற்குத் திருஷ்டாந்தமென்னவென்றால், சந்திரனைப் பாதியாகப்பிளந்து வை

த்தையொத்த கோரதந்தம்பெற்ற கொடிய இராக்ஷசப்படைகளை அடியோடு மடியப்படுத்திய அநுமக்கொடிக்காட்சியே சாட்சியாகவிருக்கின்றது. அன்றியும் அவன்வருகிறதிறத்தை நோக்குமிடத்தில், வெற்றிபெற்ற வில்லைப்பற்றி, ஈரேழுலகையும் இன்றேவென்று செல்லுவேனென்று, இறுமாப்படைந்து; யாவரையும்பொருளாகவெண்ணாமல், யானைகளைநோக்கித்தாவுகின்றஆண்சிங்கம்போல், வந்துவிட்டான். மேல்நடக்கவேண்டியதென்ன? இனிச்சும்மாவிருப்பது காரியமல்ல நமதுசேனைகளை வீரியங்கெடச்செய்து சூரியனுக்கெதிர்ப்பட்ட பனிபோலோட்டப் பண்ணுவான், இதெல்லாமறும் ஆழ்ந்தபேரறிவுடைய அருச்சுனன் இதுவரையிலும் வாழ்ந்த நமக்கெதிரில்வந்து வெல்லவேணுமென்று வில்வளைத்தானாகில், இவ்விடத்திலிருந்த பெருங்கும்பலில் அவனோடெதிர்த்துப் போராடத்தக்கபேர் யாரிருக்கிறார்கள் ஒருவேளைத்தப்பி ஓடிப்பிழைப்போமென்றாலோ அவன்கையிலிருக்கும் அஸ்திரவலிமையால் அதலசுதலபாதலம்போனாலும் அங்கும்வந்து, போர்புரிந்து கொல்வான்; நாம் அறிந்த அருச்சுனனே அல்லது வேறல்ல ஆகையால், நானொன்று நினைக்கிறேன், நம்மோடவன் எதிர்ப்பதற்குமுன்னே அஸ்தினாபுரத்திற்குப் போய்விடுவோமாகில், ஒருவருக்கும் ஒன்றுமில்லை, ஊர்சிரிக்கும் பழியுமில்லை? யோசிக்குமிடத்தில் வேறுவழியுமில்லை. அப்படிக்கல்லாமல், தானென்னும் கருவத்தால் தலைகாட்டிநிற்போமாகில்? என்றைக்கும் அவனை வெல்லும் வல்லமை நமக்கில்லாதிருந்தாலும், இன்றைக்கு நிச்சயமாக நாமவனைச்செயிக்கமாட்டோம், அதேதென்றால், நாம் நாடுவிட்டுப் புறப்பட்டதுமுதல் மாடுமடக்கிய விதுவரையில் நேரிட்ட துற்சகுனத்தினாலும் மனச்சோர்வினாலும் வெற்றிபெறுவது அரிது ஆதலால், நாமடக்கிய பசுக்கூட்டங்களை ஓட்டிக்கொண்டு பட்டினம்போய்ச்சேர்வோமாகில், நமக்கு லாபமுண்டு நாம் பயந்து ஓடிவிட்டோமென்று யாரும்பழியார்கள், அதற்கு ஓர் உபாயமுமுண்டு. அவ்வுபாயமென்னவென்னில், குலநாயகனாகிய வீஷ்மரும் கிருபாச்சாரியரும் அஸ்வத்தாமாமுதலிய பலரும் நானும் இங்ஙனமொருவழி நின்று, எதிர்வருகின்றதனஞ்செயனை மதித்துயுத்தஞ்செய்கிறோம் நீயும் உனக்குரிய சிலவேந்தரும் வீரர்களும் பாதிப் பதாதிகளும் மடக்கியபசுக்கூட்டங்களும் இவ்விடம் விட்டுப்பெயர்ந்து, அரவக்கொடி நாட்டிய தேரைத் திருப்பிக்கொண்டு? தேசம்போய்ச்சேர்ந்து விடுவையாகில்? துரியோதனராஜன் பெரும்படையுடன்வந்துவிராடராஜனுடைய பசுமந்தைகளை மடக்கிக்கொண்டு; போய்விட்டானென்று உன்னைப் பலருங்கொண்டாடுவார்கள். (ஆரியக்கூத்தாடினாலுங் காரியத்தின்மேல்கண்) என்பதையோசிக்கவேண்டும். அப்பனே! நான்சொல்வது உனக்கு ஒப்போ ஒப்பில்லையோ? சொல்லென்று துரோணாச்சாரியர் கேட்டார். அவருரைத்த சொற்சூசகத்தை யுணராத துரியோதனன் பகைத்துச் சொல்லலுற்றான்.

வாரும். சதுர்வேதபாராயணராகிய தநுவேதியரே! பாண்டுபுத்திரர்கள் எங்கள் மாமனிடத்திற் சொக்கட்டாடித் தோற்று, நீர்வளம்பெற்றநாடும் சீர்நலனுற்ற நகரும் மற்றும் பற்பல செல்வங்களும் சேனைகளும் இழந்து, காட்டிற்பன்னிரண்டுவருடங் கழித்து. நாட்டிலொருவருஷம் அஞ்ஞாதவாசமொழித்து. ஒருவருக்குந்தெரியாமலிருந்து? வெளிப்படும்படியாக உங்களைப்போல் தேறித்தெளிந்த பெரியோர்களாற் நிச்சயித்த நிபந்தனையை ஒப்புக்கொண்டகாலத்தில், மற்றொருவிதம் நிருணயம்பண்ணி யிருந்ததை மறந்து பேசுகின்றீரோ? ஐயரே! ஐவரும் உருவமறைந்து கருவங்குறைந்து அஞ்ஞாதவாசத்தி லிருக்கும்போது, அவர்கள் இன்ன இடத்திலிருக்கின்றார்களென்று நாமறிந்தால், அன்றுமுதல் பின்மூன்றுவருடம் வனவாசம்பண்ணி ஒருவருடம் அஞ்ஞாதவாசஞ் செய்யவேண்டுமென்று ஸ்தாபித்திருக்கிற மொழிப்படிக்குச் சத்தியந்தவறாமற் போகவேண்டுமல்லவோ? அப்படியிருக்க அந்த அஞ்ஞாதவாசத் தவணைநாள் அகலுதற்குமுன்னே எப்படி வெளிப்படலாம்? என்றுமுடையநல்லகாலம் இப்போது வருகிறவன் அருச்சுனனாக விருப்பானாகில், நமக்கு மேலான நியாயவழியைத் தருமல்லாமல், தாழ்வான தீமையைத்தரமாட்டாதே ஓ தநுவேதியனே! மாறுபட்டுப்போராடும் பெருஞ்சமர் வல்லவராகிய பாண்டவர்கள் இந்த மச்சநாட்டிலிருந்த வாறுதெரியாமல் வந்தோமோ, விராடபுரத்தின்மீது நமக்கிருந்த வெகுநாளையப்பகையை முடித்துவிடவேணுமென்று, ஒரேமனதாய் முன்னடித் திரிகர்த்தனையனுப்பினேனோ? பின்னடி நாமெல்லோரும், ஆலோசித்து பஞ்சவர்களின் அஞ்ஞாதவாசத்தைக் கெடுத்துவிட வேண்டுமென்று தானே வந்தோம். ஐயா, துரோணரே! இப்படியெல்லாமிருக்க. அருச்சுனன் வந்தானென்று அவதயிரியமாய்ப் பேசுகின்றீரே. ஐயோ? நானேவந்து, நமக்கெதிர்நின்று, யுத்தஞ்செய்யத் தொடங்குவானாகில், நாம் அவனுடன்பகைத்துப் போர்புரியவேண்டிய அவசரமில்லையே, விவகாரமென்கிற கயிற்றினால் அவனையும் அவனுடைய சகோதரர்களையும் அவனுக்குச் சகாயமானபேர்களையும் குண்டுக்கட்டாகக்கட்டியுருட்டிவிடலாமே, அவனெவ்விதம் நம்மைவெல்லக்கூடும்

நாம் கைக்கொண்டமாடுகளை அவனெவ்வாறு கைப்பற்றக்கூடும்? அவன் சகிக்கவேண்டிய அஞ்ஞாதவருஷத்தவணையில் இன்னம் ஒருநாட்போக்கவேண்டியதாயிருக்கிறது. இதற்குள் அவசரமாய் வெளிப்பட்டிருக்கின்றான். எங்கள்குல முதல்வராகிய வீஷ்மருக்கு இந்தவித்தியாசங்களெல்லாம் நன்றாய்த்தெரியவரும். அந்த மஹானுபாவரோ இந்த விபகாரத்தைக் கண்டறிந்து மறுபடியும் பாண்டவர்கள் வனவாசம்பண்ணும்படிக்குஸ்தாபிக்கப் போகிறார், இதற்குள் நீரேன் ஆத்திரப்படுகிறீர், யுத்தத்திற்கிளைத்த லோபரைப்போல் என்னை ஊருக்கு ஓடிப்போவென்று உறுதிசொல்லவந்தீரோ என்னகாரணத்தால் இவ்வாறு கூறினீர்? நல்லது, துரோணரே! நீர் சொல்லியவண்ணம் ஒண்டித்தேர்மேல் வருகின்றவன் தனஞ்சயனேச் சண்டைதொடுத்தாலும், அவனுக்குச் சகாயமாகத் திக்குப்பாலர்களெடுத்தாலும், தேவர்கள் கந்திருவர் அரக்கர் இயக்கர் அரசர்முதலியோர்கள் வந்து என்னுடன்போர்கொடுத்தாலும், நம்மை அசைக்கப்படாது. எப்படியும் நாமெண்ணிய வண்ணம் பழுதுபடாமல் மாட்டுமந்தையைமடக்கி நமதுவசம் பண்ணிக்கொண்டோம். நாமுந்துணிந்து வந்திருக்கின்றோம். ஆகையால், இவ்விடம்விட்டுப் பெயராமலிருந்து, ஒருகைபார்த்து, வென்றுவருகிற வீரனைப் புறங்கண்டு, விபகாரமேற்கொண்டு, ஜெயபேரிமுழக்கி என்தேசத்திற்குப் போவேனல்லது, திருடனைப்போற் பதுங்கியோடிப் போகமாட்டேன். நாலுணர்விற்பயின்ற நுண்ணியனே இதுவரைக்கும். சத்துருக்கள்பேரில் யுத்தம்பண்ணவேண்டுமென்று சொல்லுமுன்னமே கண்கள்சிவந்து கறுவிப்புகைந்து, கைதேர்ந்த காரியவான்கள்போல், மேகமண்டலம் அளாவிய தேர்மேலேறி, ஆயுததீர ஆரபார வீராவேசத்துடன் அடுத்து, வீரச்சேவகங்காட்டி, எட்டுத்திசையிலும் இசையைநாட்டிவந்த உங்களுடைய பகல்வேஷமெல்லாம் மெய்யென்று நம்பியிருந்தேன், இப்போது, வெட்ட வெளியாயிற்று, ஐயா. நமக்கெதிரோடிவந்த பகைவனைக் கண்டவுடன் வருந்தி,மயங்கி,வாடி ஒருவர்முகத்தை யொருவர்பார்த்து, நெடுமூச்சுவிட்டு? நீ நாட்டைநோக்கி ஓடிப்பிழை. நான் காட்டைப்பார்க்க ஓடிப்பிழைக்கிறேனென்று கண்கலங்கப் படுவதற்குத்தானோ இவ்வளவுபிரயாசமெடுத்துக்கொண்டு வந்தது என்னத்திற்காக இவ்விடம்வந்தோம்புறங்கொடுத்தோடுவதற்கோ? இதைநீர் நன்றாய்த்தெளிந்து சீர்தூக்கிப்பாரும். தேசிகனே! வில்த்திறமேன்மைபடைத்த வேந்தர் யாவரும் விஜயனுக்கெதிர்நின்று, மேன்மைபடைத்துச் செயம்பெறுந்திறத்தை சிந்தையினினைக்க மாட்டார்கள். அப்பப்பா! அவன் மகாதீரனென்று, சொல்லித்தளருகின்ற கிலேக்குருவாகிய உமது சொல்லைக்கேட்டு மீதலத்தோரும் பூதலத்தோரும் கலகலவென்று கைகொட்டி நகையார்களோ? இனி, உம்மைக்கண்ட கைம்பெண்களும் அலட்சியமாக நினைத்துப் பகையார்களோ, காயத்திரிதேர்ந்த கலைவேதியனே, மறபோர்நிறைந்தவிற்போர் திறந்த வானவர்கோன்மகன் வருவதைப்பார்த்து, வசமில்லாமல்மடங்கி, மாட்டையோட்டிக்கொண்டோடுங்கி, மாநகர்க்குப் போவேனாகில், அதனாலெனக்கு வருவது வசையோ? இசையோ? அல்லது, வருகிறவனைக்கண்டு, பயமில்லாமல், எதிர்நின்று, போர்புரிந்து வென்று ஜெயம்பெறுவதுபுகழோ, சொல்லும். மித்துருவை மிகழ்ந்து, சத்துருவைப்புகழ்ந்து; மகிழ்ந்துபாடாநின்ற நைச்சிகனே! தனுமறைகற்ற சதுமறையோனே! எண்ணிறந்த கோடிகளாக இவ்விடத்திற் சேர்ந்த நமது வீரப்படைகளெல்லாஞ் சேர்ந்து ஒருவனாகத் தனித்துவாரநின்ற வில்லாளியைச்செயிக்கமாட்டார்களென்றால், ஒற்றைத்தேரோட்டிவருகின்ற ஒருவருன் இத்தனை பேர்களையும் எப்படி செயிப்பான்? வருகிறசுத்தவீரன் பிராணனைத் துரும்பாகமதிப்பானென்றால், அத்தன்மைபெற்றபேர் நமது சேனைகளிலில்லையோ, ஆகிலும், போர் செய்யப்புகுந்தபேருக்கு பிராணன்பெரிதோ? மானம் பெரிதோ, கடல்சூழ்ந்த வுலகத்தில் பெருமையும் மானமும்போன பிற்பாடு, சஞ்சாரப்பிரேதம்போல்பிராணனுடனிருப்பதில் என்னபிரயோசனம்? புண்ணியபூசுரனே! இனிநான் பலவாறாகப் பேசுவதில் லாபமில்லை ஒரேவசனஞ்சொல்லுகிறேன் கேளும். இதோ. வருகிற என்பகையாளியைக் கண்டுபயந்து அஸ்தினாபுரத்திற்குப்போகமாட்டேன், எனக்குபகாரம்போற் சொல்லுகிறவர்களின்பேச்சையுங் கேட்கமாட்டேன், இது அவரவர்கள்புத்தியிற் கெட்டியாயிருக்கட்டும், ஆனால்இப்பொழுது வருகிற அருச்சுனன்சண்டைக்குப் பயந்தவர்கள் ஆவியைக்காக்க ஆசைப்பட்டவர்கள் பெண்சாதிபிள்ளைகள் மண் மனை நிதி நிக்ஷேபப் பாசமுள்ளவர்கள் இவர்கள்யாவரும் நன்மையுடன் பட்டினம்போய்ச்சேரலாம் அப்படிப்போக மனதுடையோர்களுக்கு யாதொருதடையுமில்லை. இவ்விடத்தில் வந்திருக்கும் படைகள் அடங்கலையுஞ்சாய்த்துக் கொண்டு போனாலும், என்னதிருஷ்டம்போகிறதில்லை ஒருவருக்கொருவர் துணையெனபதில்லை. அவரவர்களுடைய நல்வினை தீவினையே அவரவர்கட்குத் துணையாய் நிற்கும். ஓஅறிவிலுயர்ந்த மறைவேதியரே! நீர் நன்றாயறிந் துட்கொள்ளுமென்று, அடங்காக்கோபங்கொண்டு, துச்சாதனன் முதலாகிய தம்பிமார்

கிளையுர் தார்வேந்தர்களை நோக்கி, சிர்ஷபமூக்காசம்
போற் கனைத்துத், தனக்கெருப்பைபச்சித்தி அதிக பட
படப்புடன்சொன்னுன்.

ஆ! என்னன்புக்குரிய தம்பிமார்களே? எனக்குவெ
ற்றிதாவந்த சம்பிரமவீராளாகிய வேந்தர்களே? பிர்ம
தேயசுடைய முதற்குலத்தோனுகியும்விற்குருவாகிய து
ரோணுச்சாரியார் நன்னெறிசுற்ற பெரியோராயிருந்து,
சமயோச்சிதம் பேச்சைச்சாதுரியமாய்ப்பேசிச், சாப்பா
ட்டுக்குச் சங்கடப்படமாட்டாமல், காலபோசனங்கொ
ண்டு காலங்கழித்திருப்பதே காரியமென்று, ஆரிய சித்
தாந்தமுதலிய சாஸதிரம் யாவும்படித்தவர். அனறியும்
தனுவேதத்திலுள்ளனவெல்லாந் தப்பாமலுணர்ந்து, பு
த்திமான்களுக்குப் போதிக்கத்தெரிந்தவர். வாதித்துவ
ராநின்ற சத்துருக்களைச் சேதிக்கச்செனறு,யுத்தங்கண
டு வென்றுவருகின்ற வீரத்திறம் இவருடைய தொழில
ன்றென்று நன்றாய்ப் பிரசித்தமானவர், ஆகையால், இப்
பேர்ப்பட்டவரை நீங்கள் நம்பியிராமல், வருகிற எதிரி
யென்னும் போர்யானையின் முனைபுகுந்து, தனிமுகச்
சிங்கம்போற் சாதித்துவிடுங்கள். சண்டைபோடப் பய
ந்த வைதீகர்களெல்லோரும் அர்த்தரதப் படைக்குப் பி
ன்னுலேநின்று, நமக்குச் செயமுண்டாகும் படியாகச்
செபம்பண்ணிக்கொண்டிருக்கட்டும். உங்கள்வேலையில்
நீங்கள் ஜாக்ரதையாயிருங்கள், ஒருவருதவியைப்பார்க
கவேண்டாம், போங்களென்றுரைத்தான். இப்படியாக
துரியோதனன் சொன்ன சொல்லானது அங்ஙன மிருந்
தபேர்களின் செவிகளில்நுழைவதற்குமுன்னமேதுரோ
ணுச்சாரியர் குமாரனுன அஸ்வத்தாமாகேட்டு, நெருப்
பில்வீழ்ந்த புழுப்போற்றுடித்துக், கண்கள் சிவந்துபொ
றிபறந்து, புகைமலிந்து, பொருப்புக் கிணையான புயம்
படைத்த புயங்ககேதனனைப் பார்த்து, வணங்காமுடியு
டைய மன்னனேயென்று மத்தகஜம்போற் கூவியழைத்
து, அன்புக்கொருவராகிய வீஷ்டுமரும் கிருபாச்சாரிய
ரும் கர்ணராஜனும் துஸ்வாசனன்முதலிய தம்பிமார்க
ளும் மன்னமண்டலீகரும் மற்றுமுண்டான முடிமஹீ
பரும் கண்ணிரண்டுமூடிக். காதிரண்டுமடைந்து, உள்
ளங்கலங்கி, உடலுநடுங்கி உயிரொடுங்கும்படிக்குச் சில
வார்த்தைகள் சொல்லத் தொடங்கினுன்.

அஸ்வத்தாமன் தந்தைக்காகப் பரிந்துபேசுதல்.

ஆ, கௌரவகுலாதிபனே! நாம் அஸ்தினபுரத்தை
விட்டுவந்ததும்விராடராஜனுடைய பசுமந்தையை மட
க்கிக்கொண்டதும் கூட்டமாகிய நால்வகைச்சேனைகளை
வரிசைப்படுத்தி வைத்ததும் ஜெயம்பெறுவதற்கோ? அ
ல்லது அபஜெயமடைவதற்கோ? நீர்சொல்லும், அப்ப
டிங்கிருக்க, விம்லட்சுமிவாசமாயிருக்கும் வெற்றிவேல்
பெற்ற துரோணுச்சாரியாருடைய மனது நொந்து வா
டும்படியாக வசைமொழிகளை வழங்கி வைத்தது தகுதி
யோ? கூரியவேலும் வில்லுங்கொண்ட கோமானே, நீ
பிள்ளையாய்ப்பிறந்த நாளதொடங்கி இதுவரையிலும்யு
த்தமெனபது செய்து எங்கே வெற்றியடைந் திருக்கின
ருய்? இந்த விராடபுரத்திற்குவந்து, பசுக்காவலாளரை
யடக்கி மந்தையைமடக்கிவிட்டோம், இதுவொரு ஜெய
ம, முதலிலே சுகமாயிருந்த பாண்டவர்களை யழைத்து
மோசச்சூதாடிப், பூமிமுதலிய செல்வங்களை அபகரித்
துக்கொண்டு காட்டுக்கோட்டிவிட்டோம். இதுவொரு
ஜெயம்? இதுதானே நீ கண்காட்சியாக் கண்டிருப்பது
இதைவிடவேறுசொல்ல யோக்கிதை உண்டா? என்ன
மோ பெரிய யுத்தங்களெல்லாஞ் செய்து, சூரர்களைவெ
ன்று, வெற்றிமாலை பூண்டு, கோட்டைகொத்தளங்களை
முற்றிகையிட்டதுபோல், மெத்தமெத்த விறுமாந்துபே
சுகிருய். இதென்ன் கட்டுவார்த்தை இந்தவீரம் ஒருது
ட்டுப்பெருதே. நமதுதிறததை நாமே யெடுத்துப்பேசிக்
கொள்ளுகிறதா? இது நன்றாயிருக்கிறது. போம்போம்.
ராஜனே, இராஜசபையிலிருக்கும் பெரியோர்களுக்குக
டமையென்னவென்றால், காமாந்தகராகிய காவலருக்
குக்காரியா காரியங்களை யெடுத்துக் காட்டிக்கொ
ண்டிருக்க வேண்டுமென்பதாக நீதிநூல்முறையிடுகின
றது. ஆதலால், அந்த நீதிப்பழக்கத்தையும் உலகவழக்
கத்தையும் அநுசரித்துச்சொல்லவேண்டிய தருமத்தை
ச்சொன்னுராக்கும். அவ்வாறிடித்துச்சொல்லுந்தருமவா
க்கியம் உனக்குச் சம்மதமில்லாமற்போனல், அவருடை
யசொல்லுக்குக் காதுகொடுக்காமல், வருகிறவீரனுக்கு
எதிரிற்போய்நின்று போர்புரியலாமே யப்படிக்குப்போ
கிற உன் வீரத்திறத்தை யார்தடுத்தவர்கள்? நீயென்ன
சண்டைபோடாதவனு? பூர்வத்தில் நீ புகுந்தபோர்முக
த்தில் எங்கேயாகிலும் அடிபட்டும். புறங்கொடுத்து ஓ
டியிருக்கின்றையா, இல்லையே. கையில் வில்லுங்கணையு
மிருக்கச், சத்துருக்கள் கையில் அகப்பட்டுக் கொண்டு
சண்டைபோடமாட்டாமல், கட்டுப்பட் டிருக்கிறையா
இல்லையே இப்போதுதானென்ன நீதேரேறிப்புறப்படுவ
துதான்தாமதம். துரியோதன மஹாராஜன் வில்வளைத்
தானென்று கேட்டவுடனே போர்முகத்திலுள்ள அதி
ரத வீரர்கள் முதலியபேரும் அபஜயமடைந்து உயிர்
தொலைவார்கள் அப்பேர்ப்பட்ட வாகைபெறுஞ் சேவக
ணுகிய பூபதியைப்பார்த்து, நீ மாட்டையோட்டிக் கொ
ண்டு, ஊர்முகநோக்கி. ஓடிப்போவென்று இந்த விருத்
தவேதியர் சொல்லலாமா? ஐயோ, உத்தமனே. அவா

சொன்ன சொல்லானது. நீ யிதுவரையிலும் பெற்றிருந்த வீரத்திற்கு மிகவுங் குறைவாயிற்றே. அப்பா. சுத்தவீரனே! சகோதரர்களிடத்திற் சூதாடிப், பூமியைப்பறித்து, ஜேஷ்டப்ராதருவின் பெண்சாதியான துரோபதா தேவியென்னுந் தாயைத் தலைமயிரைப் பிடித்திழுத்துச், சபைநடுவே வஸ்திரத்தைஉரிந்து,மானக்கேடுண்டாக்கிக், காட்டுக்குவழிகாட்டிவிட்ட கதைபோல்,நினைத்தையோ? அல்லது,உன்மாமனுடைய இச்சகுனி முதலியபேரும் வாய்கொண்டமட்டும்பேசிச்செயித்தவீரமென்றெண்ணினையோ? ஐயோ! அப்படிச்செயித்த செயமெல்லாம் கருமபூமியில் பாபமென்னுங் காணியாட்சியைக் கொடுக்கத்தக்கது. அவ்வளவு எளிதென்று இப்போது எண்ணாதே வருகின்றவன் தனஞ்செயன. இவனுகெதிரிலிருந்து, வில்வளைத்துப், பாணந்தொடுத்து யுத்தம்பண்ணித் தீரவேண்டும், வேந்தனே! சூதாடித்தோற்ற அந்த நாளையிலிருந்த அர்ச்சுனன்தானே யென்று,அலட்சியமாய் நினைத்தால், இந்தநாளையில் உங்களையெளிதில்விடுவானென்று எண்ணங்கொள்ளவேண்டாம். உன்னம்மானன சகுனிராஜன் உனக்காகப்பாடுபட்டுச் சம்பாதித்ததருமமானது, சீக்கிரத்தில் இரண்டொருண்டு வளர்ந்து இப்போது வந்தெதிர்ந்து கொண்டது. இதைக்குறித்து நீயொருவருக்குஞ் சொல்லவேண்டிய அவசரமில்லை நீயாரையுந்துணைப்பற்றவேண்டாம்.நீயொருவரைவிரும்பித் துணைவரக் கேட்பையாகில், யாருந்துணையாமாட்டார்கள். அந்த ஆசையைவிட்டுவிடு, சூதாடி. உனக்குச் சந்தோஷமுண்டாகப் பண்ணினவன் இதோ,உனக்குநேராக நிற்கின்றான. இப்போது நேரிடப்போகிற போர்முனைக்கெதிரில் அவனைப் போகச்செய்வது ஞாயம், ஆயுதபாணியாய் அவன் போர்மேற் புறப்படும் விதத்தைப்பாரு. நல்ல நல்ல ஆயுதங்கள் அவனிடத்திலிருக்கிறது யாரொருத்தர் உடனபடுகிறார்களோ அவர்கள் குடித்தனத்தைக் கெடுத்துவிடும் அப்பேர்ப்பட்ட ஆயுதமிருக்க, உனக்கென்ன குறைச்சல், அத்தன்மை யான ஆயுதம் எத்தன்மையுடையதென்றால், பன்னிரண்டு - எட்டு இருக்கால் தொகை முதலாகிய அல்லைறப் படைகள் இவைகளிலால். கட்டு வெட்டு குத்து- பிரித்துவிடு தனியே ஓட்டிவிடு கீழேதள்ளிப் படுக்கவையென்று இப்படிக்கெல்லாஞ்சொல்லி. விஜயனுக் கெதிராகி வெல்லுவான், அந்தப் பார்த்தனைவெல்லும் பராக்கிரமம் எங்களைப் போனறவர்களா லில்லை. எங்களை யல்லாமல் நாகலோகத்தார் முதலிய மூன்றுலோகத்தாரும் நானுக்கெதிர் நிற்கமாட்டார்கள். ஒருவரு நிகரில்லாதவனாய் வருகிற அர்ச்சுனனைக்கண்டு? நான்வெல்லுகிறே னென்று, வாய்வண்ணம்பேசுகிற வல்லவர்களுமுண்டு.வாய்ச்சொற்சொல்லுவதற்கென்ன பஞ்சமா, வருகிறவனைச் செயிக்கலாமென்பதென்ன.கொஞ்சமா, மதிமரபிற்பிறந்தவனே! பெரியோனுகிய சிலையாரியனை அவமதித்துச், சொல்லத்தகாத சொல்லைச்சொல்லி, வெல்லவல்லவனாகிய நீயானகையால், இதோ. நான்சொல்லுகிறேன. இந்த மண்டலத்திலும் அந்த விண்டலத்திலும் அருச்சுனனுக்கு ஒப்புச்சொல்லுவது தப்பு அவனுக்கெதிரொருவருமில்லை. அவனுடைய போர்முனையில் நீதானுவது இன்னம் எப்பேர்ப்பட்டவர்களாவது கிட்டி எட்டிப்பார்த்து வந்தாலும், போதுமே. இதுவே அவனைச்செயித்த கீர்த்தியிலும் எண்மடங்கதிகமான பெருமையை யுண்டாக்குமே. அவனுடைய போர்முகத்தில் நீ நேர்முகமாகப் போய் வரமாட்டுவையோ, உன் கண்ணிற்கண்டு கலங்காதிருப்பையோ, நாகக்கொடியோனே! உன்னிடத்தில் விசுவாசம்வைத்த ஆசாரியர் எதிரியப்பேர்ப்பட்டவன் அவனோடு சண்டைசெய்யவல்லவர் எண்டிசையிலுமில்லையென்று சொன்னால், இந்தப்பேச்சுக்குத் தகாதவார்த்தைகளைப் பேசினாய். அருமையறியாத உன்னுடைய யுத்தமுனையில். எங்களைப் போன்றவர்களிருக்க மாட்டோம். வீரத்தைவிட்டு நாணமுங்கெட்டிருக்கிறஇந்தத் துரோணாச்சாரியர் தனுமறைக் குருவாயிருந்தும். துரியோதனன்பேசிய ஈனவார்த்தைகளைக் கேட்டுப், இன்னம் போகாமலிருக்கிறார். இவர் இவ்விடத்திலிருந்துசண்டைகூடச் செய்வார்போலுமிருக்கிறது, ஐயோ! அவமரியாதை நேரிட்டபோதே அந்த அரசனுடைய உறவை நீக்கிவிடவேண்டும், அல்லது, பேசினவன்பிராணனை அறப்போகவிட வேண்டும் இவ்விரண்டி லொன்றும் இல்லாதிருப்பது. மனுஷத்தனமல்லவே யென்று அசுவத்தாமன் தன்தந்தையை நொந்துகொண்டு, அரவக்கொடிக் கதிபனைப்பார்த்து, அரசனே! இப்போது நான்சொல்லுகிறதைக் கேள். எல்லாவுயிரையுங் கவரும்படியான எமதருமராஜனையும் கடல்நீரை வறட்டும் வடவாமுகாக்கினியையும் உருத்திரமூர்த்தியின் கண்டத்தைக்கருக்கிய ஆலாலவிடத்தையும் மட்டுப்படாத எட்டுத்திக்கையும். அட்டமாநாகத்தையும் ஒருநொடியில்மடிக்கப்பார்ப்போம். அல்லது, செயிப்போம். தேவேந்திர குமாரனை சிலைவிஜயனை மாத்திரஞ் ஜெயிக்கமாட்டோம் நீ உன் சிந்தையில் இதை விந்தையாகக்கொண்டு,பனவுறதியோடு நின்று, தெளிந்துபாரென்று கூறினான்.

அந்தச் சொற்களையெல்லாம் துரியோதனராஜனுக்குச் சமீபத்தில்நின்ற கர்ணராஜன்கேட்டுக் கறுகறு வென்று பற்கடித்து, வெற்றிவீர வேல்பெற்றபெரியோர்களை நோக்கிப், பேசத்தொடங்கினான்.

கர்னன் கூறல்.

பூலோக புரந்தரராகிய புநிதர்களே! விராடராஜனுடைய பசுமந்தைகளை மடக்கும்படியாய் நிதானித்து அஸ்தினபுரத்தைவிட்டுப் புறப்பட்டநாம், வாசமாலைதரித்து வராநின்ற விஜயனென்னும் வில்லாளியை வியந்து புகழ்ந்து பேசுவது மேன்மையோ, குந்திதேவியின் மைந்தர்தொடுக்குங் கொடுங்கணைக்கஞ்சிப் பயப்படுகிறவர்கள். விருதாவில் இவ்வளவுதூரம் ஏன்வர வேண்டும் ஐயோ! வீட்டிலிருக்கப் போகாதா, அப்படியே வேலைமினைக்கிட்டு வந்தவர்கள் எதிரிடையச் செயிக்கத் திறமில்லாவிட்டாலும். வாயைமூடிக்கொண்டு சும்மாவிருக்கலாகாதா, திறவான்களாகிய தீரர்களுக்குநேரில் வாய்க்குவர்தமட்டும் பிதற்றுவானேன், இவ்வளவுகாரியத்திற்குபெரியவர்களென்று பேர்வைத்துக்கொள்ளுவானேன் தனக்குவெல்ல வல்லபமில்லாவிட்டால், தரணியிலுள்ளபேர்களெல்லோரும் வெல்லமாட்டார்களென்று தப்புந் தாறுமாய் வீண்பேச்சுப் பேச வேண்டிய வேலையென்ன, சுத்த வீரர்கள் மனமுறிய மெத்த வருத்தப் படுத்துவானேன்? இருளைக் கெடுத்துவந்த மத்தியானச்சூரியன்போன்ற நானொருவனு மெழுந்து. நெருப்புக்கொழுந்துபோல், வருகிறவிஜயனையடுத்து, அச்சமில்லாமல் நாணிதொடுத்து, அபாரமாகக்கணைகள்விடுத்து என்னிச்சையின்படிக்கு எதிர்த்துப்போர்கொடுத்து அவனேறிவந்ததேரின் அச்சுமச்சு சூத்துக்காலையுமுறித்துக், குதிரைகளையும் அறுத்துக், காண்டீபத்தையும் அனுமக்கொடியையுங்குறைத்து, வெற்றிபெறப்போகிற என்விரத்தை அருச்சுனனைக்கண்டு கொண்டாடுகிறவர்கள் அச்சப்படுறவரவர்கள் யாவருமிருந்து சாக்ஷியாய்க்காணுங்கள், மேலும், மண்டலத்தைதங்கிறி, விண்டலத்தைப்பிறி, குண்டலமசையவருந் தேரோனாகிய தண்டதரன் தம்பியைக்கண்டவுடனே, எண்டிசையதிர, மண்டலாகிர்தியாகிய வில்லைவளைத்து, வருணாஸ்திரப்பிரயோகஞ்செய்து, வடவைத்தீவேகத்தைமாற்றுந்தன்மைபோல், ஒருகணத்தில் அவன்பலத்தைமாற்றி, நீங்கள்கண்டு கண்களிக்கச்செய்கிறேன் பாருங்கள். இதல்லாமல் அவன்வனவாசம்பண்ணிய பன்னிரண்டுவருடமும் அஞ்ஞாதவாசமான ஒருவருடமும் துருப்பிடித்து, அழுக்கடைந்து மழுங்கிக்கிடந்த காண்டீபத்தையும் கணைப்பெட்டியையுங் கைக்கொண்டு, கலங்காமல், நமக்கெதிர்வருகின்ற நானுடைய இடத்தையுந் தீரத்தையுந்தேகத்தையும் சின்னபின்னமாகும் படிச்சேதிக்கிறேன், நீங்களெல்லோருங்கூடிப் பார்க்கலாம். ஓ, பெரியோர்களே! அர்ச்சுனனுக்கெதிரி அங்கர்கோனென்று இச்சகமுதலெங்கும் பிரசித்தமாகப்பேசிக்கொண்டிருக்க, நான் அவனையெளிதில் விடப்போகிறதில்லை. நானும் ஒருவில்லைப்பிடித்து, மலைபோலெதிர்த்து, மலைந்து. போர்த்திறந்தெரிந்த புண்ணியவான்களைப்போல். புகழ்பெறுகின்ற பிரதாபத்தைக் காணவாருங்கள். குளம்படியாற்கிளப்பு மண்பொடிகள் ஓயாமற்கிளம்பப்பாய்ந்துவருங் குதிரைகள்பேரிலும் அக்குதிரைகள்பூட்டிய தேரினபேரிலும் கோடிகோடிபாணங்களைச்செலுத்திக் கொல்லுவதல்லாமலும், அவனது ஆஜானுபாகுவாகிய கரங்கள்தறிபடவும் கால்கள்முறிபடவும் விரிந்தமார்பு துளைபடவும், அணிந்தமுடியுடன் தலையறுபடவும் விரைந்துபோர்புரிந்து நான்வெற்றிகொள்ளப்போகிற விந்தையைப்பார்த்து நீங்கள்மகிழுங்கள். இவ்விடத்தில், நானுறுதியாகச சொல்லுகிறேன். ஞாபகமாய்க்கேளுங்கள். நானிதுவரையில், நரபதியாகிய துரியோதன மஹாராஜனிடத்தில். உண்டு? வளர்ந்துவந்த செஞ்சோற்றுக்கடனும் கர்னன் அர்ச்சுனன் என்றுசொல்லப்படும் எங்களிருவரில், வல்லவர்யாரோவென்று சந்தேகங்கொண்டிருந்த சகலருக்கும் சந்தேகந்திருஞ்சமயமும் இளமைப்பருவத்தில் தனுவேத பரீக்ஷை பார்த்தபோது அச்சுனன் தலையையறுத்து அரங்கபூசை செய்கிறேனென்று அரசருக்குமுன்னே நான் கூறியிருந்த சபதவார்த்தை முடியுங்காலமும் பற்குனனை வெல்லும் வல்லவனில்லையென்று கிருபாசாரியனும் அஸ்வத்தாமனும் பேசிய கட்டுவார்த்தை கெட்டோடச் செய்யுந்தருணமும் இப்போதெனக்கு நேரிட்டிருப்பதினல் என் பரமகுருவாகிய பரசிராமர் அற்புதமாகக் கற்பித்துவைத்த அஸ்திரவித்தைகளை நிலைபெறச்செய்து, அவருடைய திருவடிகளைத் துதிக்குங்காலம் கிடைத்திருக்கின்றதை மதிக்கும் [illegible]வர்களே பாருங்கள். பெருந்தேரிலோங்கி நிற்கும் [illegible] தாங்கி வருகிறவனைக் கண்டேங்கி மயங்கும் ஒருகோடி நரபாலரும் என் சுற்றிலுமிருந்து. வெற்றிபெறும் வேடிக்கையை முற்றிலும் அறியுங்களென்று, ருத்திரமூர்த்திக்கொப்பான வீஷ்டுமர் முதலியபேருக்குங் கேட்கும்படியாகச் சொன்னன். அந்தச்சொல்லைக் கிருபாச்சாரியர்கேட்டு, மனந்தாளாமல் பேசத்தொடங்கினர்.

கிருபாச்சாரியர் கர்னனோடுகூறுதல்.

ஆகா! அங்கதேசத்தரசாகிய அறிஞனே? நெடியகடல்சூழ்ந்த உலகத்தை ஆளுகின்ற அரசருக்குச் சாமபேத-தான-தண்டமென்னுஞ் சதுர்வித உபாயமுண்டு இந்நான்கில், தண்டமென்னும் உபாயத்தை அநுசரித்துச்சண்டைசெய்யக் கற்றிருக்கின்றாயன்றி? மற்றமூன்று உபாயமும் அறியமாட்டாய்போலு மிருக்கிறது. அவ்வு

பாயமூன்றையும் அறிந்துகொள்ளத்தக்க சுயபுத்தி உன
க்கில்லாவிடினும், தெரிந்தபெரியோர்கள் சொல்லுகின்ற
சொற்புத்தியாகிலுங் கேட்டு நடக்கவேண்டும், தண்ட
மென்பதை தாமதகுணத்தோர் விரும்புவார்கள். சாத்
வீககுணமுள்ளவர்களுக்கு மற்றமூன்றும் தகுதியுடை
யனவாகும்? அதெவ்வாறெனில். அரசனானவன் காரியத்
தைக்கருதி யோசியாமல்பகைவர்மேற் செல்லுதல் அப்
பகைவனைத் துன்பமில்லாமல் நிக்கச் செய்வதாகும்.
மேலும், தொழில்வல்லமையையுந் தன்வல்லமையையும்
எதிரிவல்லமையையும் துணைவல்லமையையும் ஆராய்ந்
து, தன்வல்லமை மேலிட்டிருக்குமாயின், தானெடுத்த
காரியத்தைமுடிக்கலாம். ஆகையால், காரியாகாரியங்க
ளெல்லாவற்றையுங்கருதிப், பிற்பாடு சமராடப்புகுந்த
பேர்களுக்கு எவ்வுலகத்தும் எக்காலத்தும் ஒப்பில்லாக்
கீர்த்தி யுண்டாக்குமென்று நீதிநூலோர் பேசியிருக்கி
ன்றார்கள். அதுவுமல்லாமல், தன்பலமும் எதிரிபலமும்
சகலமும அறிந்து வீரியமாகயுத்தஞ்செய்
யக்கற்ற புத்திமான்களானபோதிலும், பெரியாரைத்து
ணைக்கொள்ளென்னும் நீதிவாக்கியப்பிரகாரம் தனக்கு
மேற்பட்ட அனேக அறிவாளர்களைக்கேட்டு, அவர்கள்
புகன்றபுத்திவழி நடக்கவேண்டும். அப்படிகேளாத அ
ரசன் உன்மத்தனு யிருப்பானாகில், அவனது சுகதுக்கத்
திற் கொக்கப்பொருந்திப், பக்கமிருக்குமெம்மைப்போ
ன்ற பெரியோர்கள் அவனுக்கு இடித்துச்சொல்லவேண்
டியகடமை. இசையளவுநாறும் உதிரப்பசைவீறும் வே
லேந்தியகர்ணனே! வருகின்றதேர்ஒன்றென்றும்அத்தேர்
மேல்வருகிறவன் தனியனென்றும் அவன்கைப்பிடித்த
வில்லொன்றென்றும் அவனொருமாத்திரமென்றும் வெகு
சொற்பமாகவெண்ணி ஆத்திரப்பட்டுச் சொல்லினையல்
லவா! உன்னைப்போலொத்தவன் இவ்வாறுரைத்தால்.
மாற்றுயர்ந்த பொன்னைப்போன்று வருகின்றவன் உன்
னை என்னென்று புகலவேண்டும் அவனுனதுவுக்கட
ங்கினவனு? பேச்சாளனு? அந்தோ? மாசாளவனோ இந்த
ப்போராளுந் துரியோதனன் முதலாகிய பலபடைக் கூட்
டங்களையும் வீஷ்மர்முதலிய என்னையும் வீரியம்பேசு
கின்ற உன்னையும் ஒருபொருளாய் நினைக்காமல் இரல்
காரஞ்செய்யத் தக்கவனென்று உனக்குத்தெரியாதா? ஆ
ண்சிங்கஞ்சீறி, யானைக்கூட்டத்தின் மீதிலேபாயுந்தன்
மைபோல், வருகின்றானே அவனுக்கெதிர்நின்றுபோரா
டுபவர்களுமுண்டோ! சிவபெருமானொருவனுஞ்சென்
று, திரிபுரம் நீறுக்கக்கண்டு திருப்பிறனென்று இருவ
ரையிலும் நீகேட்டிருக்க வில்லையோ? செருமுகப்புலி
யே, சேர்படைத்த பாஞ்சாலராஜனுடைய பட்டணத்தில்

திரௌபதாதேவிக்குத் திருக்கலியாண முகூர்த்தமென்
று சுபவாஞ்சாட்டியபோது, மச்சேந்திர லக்ஷயத்தை
முடித்து! இச்சைவைத்து, வந்தராஜரெல்லோரையும் ஒ
டவிட்டடித்துக். கச்சணிந்த பெருந்தனக் காரிகையை
யுங்காண்டீபத்தையுங் கைப்பிடித்துக்கலகலவென்றுஜெ
யலக்ஷ்மிபிடித்து வரக்கண்ட காளைவருகின்றான். அவ
னுடனெதிர்த்துப் போராடுந்திறனுள்ளவர்கள் எவருமி
லையே, மாலைபுனைந்த மணிமுடியணிந்த வணமையோய்
நீயந்தச்சுயம்வரகாலத்தில்! திரௌபதா தேவியைக்குறி
த்துப் போயிருந்தில்லையோ, சகலராஜாலும் வளைக்
கப்படாத வில்லைநீதாங்கிவளைக்கவல்லையோ, அங்ஙன ந
டந்தவிந்தைப் பேச்சுகளையாவது வேடிக்கையாய்க்கேள்
விப்படவில்லையோ, இதன்றியும், கொடுமையாளராய்த்
தொடர்ந்தயது குலத்தாரையெல்லாங்குழுக்கிச், செயங்
கொண்டு சுபத்திராதேவியை மணம்புணர்ந்துகொண்ட
ந்தகாலத்திலும், முப்பத்து முக்கோடி தேவர்கள்முது
குகாட்டியோட ஓட்டி, அஷ்டவசுக்களுடன் அஷ்ட்திக்
குப்பாலரும் சப்தசமுத்திரத்துடன சப்தமேகமுஞ்சலி
க்கக்கெலித்துக், காண்டாவனத்தை அக்கினிதேவனுக்கு
ஆகாரமாகஊட்டிவைத்த காலத்திலும், அனுவிர்தகண்
டம் அளாவிர்தகண்டமுலதாகிய உத்தரகுருகண்டத்தி
லுற்றோரியாரும் முடிவணங்கித்தொழுது, கண்ணீர்வி
ட்டழுது எங்களுக்குப்பழுது வாராமற்காரும், கடைக்
கண்பாருமென்று! உபசாரத்துடன் அநேகதிரவியங்கள்
குவிக்கப்பெற்ற காலத்திலும், மாயவாத்துடன் தோய
மாபுரத்திலிருந்து காலகேயநிவாதகவசர்களையுமிரணி
யபுரவாசிகளையுமடித்தும், அவர்களுடையதோள் வலியுந்
தாள்வலியும், உரத்தின்வலியும் வரத்தின்வலியும் உப
யோகமாக வொட்டாமலடித்து முடித்தநாளையிலும், அ
ட்டதிக்கும் புகழ்பெற்றசித்திர சேனனென்றுங்கந்திரு
வராஜனைக் கொட்டமடக்கி, கதைதாசனுகிய துரியோத
னமகாராஜனையும் - தம்பிமார்களையும் தர்மபத்தினிக
ளையும் கட்டவிழ்த்துவிட்டுமானங் கெட்டபிராணனைக்
காப்பாற்றி விட்டகாலத்திலும், இதோவருகிறகட்டழ
கனுகிய கிருட்டினனுக்குயார்துணையாயிருந்தவர்கள், ஒ
ருவருமில்லை, எந்தக்காலத்திலும், அவனைகப் பிடித்த
விஜயகாண்டீபமேதுணையல்லாது, வேறுதுணை கண்டதில்
லையே அப்படி எதாகிலுந்துணைநாடிப்போய்ச் செயித்தி
ருப்பனுண்டானுற்பேசுகர்ணராஜனே,உன்னுடையகுறை
ச்சமென்னவென்னில் இராஜர் முதலியபேர் கூடியசு
சபையில் எனக்குநிகரில்லயவருமில்லையென்றும் - புயவல்
லமை எனக்கேபொருந்தியுதென்றும்-என்னுடன்போரா
டும் நீசுகவர்பூமியில்லை யென்றும் பலவாறுகப்பேசுகிற

வழக்கமுனைக்குண்டு. நீசொல்லிய வண்ணம் எங்கேயாவது, சேர்வையுமடித்து வெற்றிகொண்டிருக்கின்றையா நீ சத்துருக்கள்பேரில் சண்டைக்குப்போறும், எவ்விடத்திலின்று கீர்த்திகொண்டுவந்தாய், இந்தரனுக்கு நேராகப்போய் நிற்கத்தக்க திறமுனைக்குண்டா, அப்படியிருந்தால், ஒரு அனுபவங்கொண்டா, அப்பா, நான் பேசுவதென்ன தப்பா, சிவபெருமானுஞ் செங்கண்மாலும் பிர்மாவும் தேவேந்திரனும்-தேவர்களும் - மற்றுமுள்ளவர்களுங் கோலாகலமாய்வந்தெதிர்த்து யுத்தஞ்செய்வதற்குக்கூடாத வல்லவனுனவன் வில்லவனைத்தானுமில், அவனுடைய வீரியத்தைப்பழித்து. இங்கிருக்கும் அரசர்முதலிய ஆரியர்களுக்கெதிரில் உன்காரியத்தைக்காட்டிச் செயம்பெறப்போகிறயோ, என்றுமற்பேசி, இழிவடையப்போகிறையோ இதுவரையில் உன்திறத்தை நாங்களு மிருந்து பார்த்தது தானே. அடா அப்பனே, சிரேஷ்டமுநிவராகிய விஷ்டுமரும் சிலைக்குருவான துரோணுச்சாரியரும் வெகுப்பிரமணியக்கடவுள்போன்ற அஸ்வத்தாமாவும் நானும் நீயும் தேவிளைந்த வலம்புரிமாலையணிந்த துரியோதன மஹாராஜனும் ஜெகாசூக்காகிய தார்முடிவேந்தர்பலரும் ஒன்றுகச்சேர்ந்து, அழகியசேனை செலுத்தி, வில்லம்புகள்தாங்கி, மேலானயுத்தஞ்செய்தாலும், இந்த அர்ச்சுனனைவெல்வதுஅரிதரிதென்று,கருதிக்கரையும்எங்கட்கெதிரில்,நானொருவனும்போர்முனை புகுந்துவெல்லுகிறேன் அவனைகொல்லுகிறேனென்றுநீசொல்லுகிறதுகாலிலியானவன்காதவழிநடப்பேனென்பதுபோலாம்.நீசொன்னசொற்படிமுடிப்பையானல்,பனியானது சூரியனை விழுங்கிப்போடுமென்று சந்தேகமறப்பேசலாமே.ஓ.கொடைக்கானே,சீர்வளமுள்ளகுருநாட்டுக்கதிபனுகியகௌரவகுலமுதல்வன் உன்னிடத்தில்நேசம்வைத்திருந்தால்,அவனுக்குஸ்திரமான உறுதிவார்த்தைகளைச்சொல்லி.நீதிநெறிகுறையாமல்பாராளு முறைமையைப்போதித்துப் பக்கத்தில்மந்திரிபோலிருந்து,தந்திரத்துடனடத்துவதைவிட்டுப்பயன்படாதவார்த்தைகளைப்படித்து, அசத்தியத்தைச் சத்தியமென்று அடித்துச்சண்டைமுகத்திலிழுத்து, விட்டு இரண்டுபுறத்தும் இடிபுண்டினைத்து மருண்டுநிற்கவைத்து அந்தச்சமயத்தில்நீ அப்பால்நீங்கிப்போவதற்காகவோ இவ்வளவுதூரநினைத்துச் சொல்லவந்தாய் உத்தமனே அந்தமட்டும் நீயறிந்ததுபோதும்.இந்தமட்டும் உன்கடையைக்கட்டென்று,மூவரையும் வெல்லுங்கிருபாச்சாரியர் சொல்லினர்அவர்மொழியைக்கேட்டகர்னராஜனெருப்பில்விட்ட நெய்போலுருகிப்புகைந்துகண்ணிரண்டுஞ்சிவந்து கடுங்கோபம்பிறந்து குற்றமான்மொழிமைமெத்தப்பேசிக், கிருபாச்சாரியருடைய முகத்தைப்பாராமல், மற்றவர்கள்பக்கமாய்த்திரும்பி, அவர்கள்முகத்தைநோக்கிச் சொல்லத்தொடங்கினன்.

கர்னன் பேசுவது.

ஓஹோ, முடியரசர்களே, வசந்துலாவும், மாலைநிலாவும் வணங்காமுடிவேந்தனுடைய வளப்பங்களையும் சகலசுபசந்தோஷசவுக்கியங்களையும் தாழ்ச்சியில்லாமல், தங்கள்தங்கள்பந்துவர்க்கங்களுடன் காலங்கருப்புத்தோன்றுமல், அனுபவித்துச், சிறுமையின்றிப், பெருமையாய் அண்டிப்பிழைத்தபேர்கள், சண்டைமுகத்தில்வந்து நின்று, அன்னமிட்டாரையிகழ்ந்து. கன்னமிட்டசத்துருவைப்புகழ்ந்து, சித்தங்கனித்துமகிழ்ந்து, தோள்வலியைத்துதித்துத், தாள்வலியைமதித்துக் கொண்டாடாநின்றபேர்களால், நமக்குச்செயங் கிடைக்காமற்போமோ, இவ்வுலகத்தில்நன்னெறியில்லாமற்போமோ. மழைமாரிகுறையுமோ. வளரறங்குறன்மோ, ஆ,அகாலமே, வருகிற நரனனவன் மிகவுந்திறவானென்று புகழ்ந்துபேசுவதினுல் இலாபம்என், அவன்பேரில் உங்களுக்கு அன்பிருக்குமாகில் அந்த அனபுவிருதாவாய்ப்போகாமல் ஓண்டியாய்வருகிற அவனுடன்போய்க் கூடிக்கொள்வது தகுதியாகும. அப்படிக்கில்லையென்றுல். அவரவர்களுடைய வீட்டுக்குப்போய்ப்பெண்சாதிபிள்ளை முகத்தில் விழிக்கலாம் இதற்குயாதொருதடையுமில்லை நேரேவருகிறபார்த்தனுகிய பஞ்சைக்குநானேயெதிராகிறேன் அவனு என்னைச்செயிக்கிறவன், அடடா! பாதலமேழும், மீதலமேழும் பரந்த அகண்டசக்கிரவாளப்பரப்பும்தப்பாமற் பெருமைபெறுஞ்சுப்பிரதிபக்கணைகளினுல் சிவனுக்கெதிரான மதனைப்போலாக்கித், திக்குத்திகாந்தத்திலும் சொக்குப்பொடிபோல், தூற்றி விடுகிறேன், உங்களுக்குஞ் சேதிசொல்ல ஓலைவிடுக்கிறேன். நீங்களுநேருக்குப்போய் உறங்குங்களென்று, உரத்துக்கொதித்து, உரைத்துச்சிரித்தனன்.

இந்தப்பிரகாரம், கொடைக்கரசாகிய கர்னராஜன் பேசியபோது. சேமித்துவைத்ததிரவியம் போலுற்றநிலைநாலும்பெற்ற பலநூலுங்கற்றவீஷ்டுமர்உன்மத்தனையொத்த துரியோதனராஜனை யழைத்துத் தாசினிலைபோல், நடுவுநிலைமையாய்த் தெரிவிக்கத்துணிந்தார்.

வீஷ்டுமர் சொல்லுவது.

திங்கள்மாபிற்றோன்றிய மங்களமுகசுந்தர துரியோதனராஜனே! ஆலையாரியனுகிய-துரோணுச்சாரியர் சொன்னதுமேன்மைமிருந்தபெரியோர்கள் பேசவேண்

டியவிதிதான். சகலகலைக்கியானமுந்தேர்ந்த அஸ்வத்தாமாவானவர் பரிந்தெழுந்துகாரியாகாரியமெடுத்துக்காட்டிக்கண்டிக்கவேண்டிய கடமைதான்மலைபோல் நிலைபெற்றகிர்பாச்சாரியார்முடக்கிமடக்கித்தெரியவைத்ததுமுறைநெறிமுறைதான், இலைபோலொளிரும்வேலேந்தியகர்ணராஜன்தாராதரமறியாமற்பேசியதுதகுதியற்றதுதான்பெரியாரைநிந்தித்துப்பேசப்போகாது. பெரியோர்சிந்தை நொந்தால். வறுமைநிறையும்வாழ்நாள் குறையும் இதுஎவர்களுக்கும் எப்போதுந்தகாது மல்லினவலியும் மலையின்வலியும் தளர்வில்லாமல்வளருந்தடம்புயனே, அரவக்கொடியும் அணிமணிமுடியும்பொறுத்த ராஜகண்மணியே! திரிதராட்டிரபுத்திரனே, துரியோதனனென்னும் என்பௌத்திரனே! நான சொல்வதைக் கேட்க வேண்டும், மெய்யறிவுள்ளமேலோர் செய்கை யெவ்விதமெனனில் தங்களுக்குத் தற்காலநடந்துவருகிற இசாபலனும் காலபலனும் தெய்வபலனும்-செய்கை யேதுவும் காரணகாரியங்களும் செவ்வையாகநாடித் தீர்க்காலோசனை செய்து, வெல்லத்தக்கவல்லமை தங்களுக்குண்டா யிருந்து துணிவுபற்றியபோதிலும், பகைவரை எவ்வாறு வெல்வது அரிமையாயிருக்குது அசாத்தியமென்று அஞ்சாது அலக்ஷியமாகவெண்ணிஅவசரப்படார்கள். தங்களாலாகிறகாரியமானாலும், என்னமோபோய்ப் பார்ப்பேமென்பார்கள். மேம்பாடுடையவிவேகிகள். அதெப்படி யென்றால், முன்பின்னெண்ணாமல், வாய்க்குவந்தமட்டும் வல்லமைபேசி, எதிரியினபலத்தை யெண்ணாமலேசிக், காரியங்களிற்பிரவேசித்து, நாலுபேரும் சீ சீ யென்றுநகைக்கமுகங்கூசி. நாணிவந்தால், சொன்னசொல்லின்படி வெல்லாமல், பல்லைக்காட்டிப் பாதவித்து, ஓடிவந்துவிட்டானென்று, உலகமுள்ளவரையிலும் பெரியவசையாகப்பாடுவார்கள், அதனால், நல்லோர் அடங்கியிருந்து காரியபாவங்களிலும் கருத்துமுற்ற நேரிட்டகாலங்களிலும் தங்கள் வல்லமையைக்காட்டித் தளர்ச்சிபெறாமல், புகழுடன்மனக்கிளர்ச்சிபெறுவார்கள், அப்போர்ப் பட்டவீரர்களை யாவருங்கொண்டாடவேண்டியது. இதுதான் பெரியவர்களுக்கும் சிறியவர்களுக்கும் புத்திமானகளுக்கும் புத்தியீனர்களுக்கும் இருக்கிறவித்தியாசம், ஈதிப்படியிருக்க, நாம்பூசிக்கப்பட்ட ஆசாரியபுருஷர்கள் யுத்தநிலத்தில்வரும் சத்துருவைக்கண்டமாத்திரத்தில்வெற்றிபெறவிரும்பிப் போர்முனைபுகுந்து வில்வளைத்துக், கூரியகணைகளைச்செலுத்திக் கருக்குலையச் செருக்கலையக், கால்மாடு தலைமாடாக்கிச் செயம்பெறக்கற்ற திடவான்களானவர்கள் இத்தன்மைவாய்ந்த உத்தமர்களை யுத்தகளம் விட்டோடிப் போங்களென்றும் எனக்குப், பின்னிருந்து பாருங்களென்றும் அக்கியானகேவலரைப்போல், பெண்டாட்டிபிள்ளைகளைச்சேர்ந்து பிழையுங்களென்றும் இப்படிச்செல்லாஞ் சொல்லலாமோ, அன்றியும், அவர்கள் முன்பாக நானே வீரமுள்ளவனென்றும் அர்ச்சுனனுக்கு சவரி நானேயென்றும் சொல்லப்போமோ, மானமுள்ளவர்கள் இவ்வாறு வெளிப்படையாகப்பேசிவெளிப்படுவார்களோ, மானங்கெட்டவர்கள் எனக்கவன் பகையென்பார்கள், நாளைக்கு உறவாடும்வேலையிலிருப்பார்கள், எப்போதும் மெத்த நல்லவனென்பார்கள் சற்றுப்போதைக்கெல்லாம் அப்பா! அவனுகெட்டவனென்பார்கள். அவர்களுக்கு ஈனமான மில்லாமையாலும், நாணம் வெட்கம் நலிந்தமையாலும், களிப்புதுவைக்கிய செம்புபோல்விளங்கி, முன்சொன்னவார்த்தைக்குப்பின் சொன்னவார்த்தை மாறுபடுமேயென்னும் மதிகெட்டலைவார்கள், மானமுள்ளவர்கள் சொற்சோர்வுபடாமலிருந்து, மானக்கேடுவராமற் காத்துத்தங்கள் பிராணனைத்துரும்பாய்மதித்து. சத்துருநேரிட்டால். யுத்தமும்பண்ணி வெற்றியும்பெற்று. வீரவாகையுற்றுத் திரலட்சுமிக்கு இருப்பிடமாவார்கள். ஆதலால், (பழம்புண்ணுளி பரிகாரியென்பதுபோல், நாலுதுறையுமறிந்த அநுபவசாலியான பெரியோர்கள் இப்படிபோனால். இப்படிமுடியும் இன்னதுசெய்தால், இன்னதுவருமென்று நம்போலியரைத் தடுத்துச்சொல்லவேண்டிய சம்பந்தமுண்டாயிருந்தபடியால், சொன்னார்கள். வழியேபோகிறவர்கள் நமக்கு நற்புத்திசொல்ல வருவார்களா, அப்பா துரியோதனா! முனமறையாளராகிய இவர்கள்மூவரும் மும்மூர்த்திகளுக்கொப்பானவர்கள். திரிகாலக்கியானிகள். இத்தன்மையாகிய ஸ்ரீவன்முத்தரை இந்தக்கர்னனெதிர்த்து இழிவாகப்பேசுவதற்குத் தகுதியானவனோ, நல்லது, இப்போது வருகிற அர்ச்சுனனுக்கு முன்னின்று போர்கொடுத்து. வெல்லுந்திடமுள்ள ஆரியருள்ளாரும் அவர்களுடைய காதுகளும்வெம்பி வெதும்பி வெந்துபோகும் படியாய் வினைத்துவிட்டீர்களே, ஆகா, இப்படியும்பேசலாமா, ஐயோவென்றுதன்கைப்பொத்தி கைபறைந்து, முகம்வாடி வதங்கித்தேர்விட்டிழிந்து, சூரியன்போற் புகழ்படைத்த வீஷ்மரானவர் துரோணாச்சாரியர் கிருபாச்சாரியர் அஸ்வத்தாமா இவர்களிடத்திற்குச் சென்றுநின்றார். பிரதாபம்பெற்றபாட்டனார் தேர்விட்டிறங்கு முன்னமே துரியோதனன்பயந்து, தானும் தேர்விட்டிறங்கி ஓடிவந்தான்.

அப்போது, துரோணர்முதலிய மூவருக்குஞ் சந்தோஷமுண்டாகும்படியாகத் துரியோதனனைப் பார்த்து வீஷ்மர்சொல்லுகின்றார்.

அப்பா துரியோதனா! இம்மூவரும் எப்பேர்ப்பட்டவர்களென்றால், தேவருங்கொண்டாடுகின்ற சீலத்திறமுடையவர்கள், நம்மைப்போன்றவர்களால் வணங்குவதற்கும் வழிபடுவதற்கும், வாழ்த்துவதற்கும் பூசிப்பதற்கும் விசுவாசிப்பதற்கும் நேசிப்பதற்கும் தருமநீதிகளையோசிப்பதற்கும் தானம்பெறுவதற்கும் நன்னெறியாய்ந்து நன்மார்க்கம்போதிப்பதற்கும் நமதுமனதைச்சோதிப்பதற்கும் கிருபைக்கண் கவப்பதற்கும் ஆசீர்வசனஞ்செய்வதற்கும் உன்னதஸ்தானத்திலிருந்து உயர்ந்த பூஜிதையாய்ப் பெருமைபெறத்தக்கபெரியோர்கள். இவர்களுடைய திருவடி நமதுமணிமுடிமேற் பதிக்கத்தக்கதன்றி வேறல்ல. அப்படியிருக்க, இவர்களைக் கோபித்து? அற்பமாகப்பேசி, அவமதிப்பாக மதித்து, அவர்கள் சிந்தைவருந்த திடுக்கிடச்செய்து நாம் வீண்பழிசுமந்து,வினைமூட்டை கட்டிக்கொள்ளுவதற்கு உரியோரல்லவே. துரியோதனனென்று பாரமார்த்திய திருநாமங்களைப்படித்து, இவ்வளவுதானா உன்னுடைய இராஜாங்கமென்று வெறுத்து, (பெற்றார் அகடழித்தால்பிறரும் அகடழிப்பாரென்னும்) பழமொழியுமெடுத்துக்காட்டிப், பெரியாரைப்பழித்த பேதைமையால், கண்டவர் நின்றவர் - கொண்டதுகொண்டபடி கொழிப்பார்கள், உன்னுடையசதுரு சிரிப்பார்கள். சண்டையின்தன்மை உனக்கென்னதெரியும், சாதுக்களின் சேதியை நீயெப்படி அறிவாய், சாதுசங்கப்பழக்கம் எவ்வாறு உணர்வாய்? காரியத்தாழ்ச்சிசெய்து, கலகப்படுத்திக், கலைத்துவிட அறிவாய். போபோவென்று கடுஞ்சொற்சொல்லி, ஆசாரியருடைய பாதங்களில் வீஷ்டுமர்விழுந்து கையுமெய்யுங்குவிய, நேயமும் அன்புநிறைய, வெற்றிக்குவித்தாகிய வேதவேதியரைப்பார்த்துவிளம்பலுற்றார்.

ஆசாரியசுவாமிகளே, தநுர்வேத சதுர்வேத சம்பன்னர்களே, சரணஞ்சரணம் புல்லறிவுடையோர் என்ன சொன்னாலும், கற்றறிவுள்ள உத்தமராகிய தங்களைப்போன்றவர்கள் அதைக் குற்றமாய்க்கொள்ளார்கள். மேலும், தங்களையிகழ்ந்துபேசிய தறுகண்ணனுள்ளவதிலுக்குத்தாங்களிகழாமல், ஜீவகாருண்யத்தால்க்ஷமிக்கவேண்டியது, அதுவுமல்லாமல், ஊழ்வினைப்பயத்தால்இகழ்ந்தவர்கள் மீளாநரகத்திற்கு ஆளாகாமல், ஜெகதீசனைக் குறித்து மந்திரஜெபார்ச்சனைசெய்து மன்னிப்புக்கேட்டு வரம்வாங்கிக்ஷமித்தலும் சான்றோர்க்குரிய கடனாகையால், பூர்ணநிர்பாநோக்கமுள்ள புண்ணியர்களே, இந்தப்புத்தியில்லாதபேயருக்குக் குற்றநேரிடாமல், சித்தமிரங்கித் திருவருள்பாலிக்கவேண்டும், பகைவர் நேரிட்ட சமயத்தில், இப்பத்தர்பேசிய வீண் வீரப்பேச்சும் விர்தாக்கைவீச்சும்பயன்படாது.காற்றுக்குப்பதர் கலங்காதிருக்குமா? கலக்காமணியாகியகாரணர்களே அடிமைபுகுந்தஎங்கள்பேரில், அன்புவைத்து ஆதரிக்கவேண்டும். இனி நான்சொல்லவேண்டியஉபசாரமென்னவிருக்கிறது. தநுர்வேதக்கடலும்சதுர்வேதசமுத்திரமும் உள்ளநிறையக்கொண்டிருக்கும்உத்தமர்களே! குற்றமற்றஉங்களுக்கொப்பாகவேறொருவரை நினைக்கத்தக்கதோ? அதுநிற்க, மற்றொருகாரியம் குருகுலாநாதனுக்கும், அவன் சேனைக்கும் ஏதாகிலும் ஒருதீங்குவருமாகில், அந்தப்பழியானது துரியோதனனுக்குரிமையாகிப் பிரியாதிருக்கிற தநுர்வேதசம்பன்னராகிய உங்களைச்சாராமல்விடாது. அப்போது மதிப்பிலுயர்ந்த உங்களை நாடெங்குந் தூறுவார்கள். மதிப்பற்றவர்களைக்குறித்து யாரும்பேசமாட்டார்கள். ஆதலால், தங்கள்மனத்திற் பலவாறாகிய குற்றங்குறைகளிருந்தாலும், அவைகளைத் தீர்க்கவயிரமாகப் பாராட்டாமல், தம்மையடுத்த மன்னவனுக்கு எப்போதுங் கீர்த்தியுண்டாகும்படியாகச் சகாயஞ்செய்யவேண்டும். மநுநெறிமுதலிய மற்றநூல்களிலும் சொல்லியிருக்குமுறையுமிதுதானே. அப்பேர்ப்பட்ட சாஸ்திரங்கள் முற்றுங்கற்றிருக்குங் கருத்தினையுடைய கடவுளரோ, மற்றோர் விண்ணப்பம். இந்தக்கர்ணராஜன் கழறியவார்த்தைகள் கனங்களுள்ளனவென்று யோசிக்க வேண்டாம், அவனுடையகருத்தை வேறுவிதமாகக் கண்டு கொண்டேன் அதென்னவெனில், தானிப்படிப் பேசினால், உங்களுக்கு இன்னுமேலான வீரத்துவமும் தீரத்துவமும் உண்டாய் அர்ச்சுனனைச் செயிப்பீர்களென்றும் துரியோதனன் பேரிற்கொண்டிருக்கின்ற உங்களன்பு வெளிப்படுமென்னும் புருஷயுக்தியாகச்சொன்னான். ஆதலால், தாங்கள் மனம்பொறுத்துக் காத்தருளவேண்டும். இதோ, நமக்கெதிரில், அதாகதஞ்செய்யக் கருதிவருகிற சுவேதவாகனனென்னுங் காளை சூரியபகவானுக்கொப்பாகக்காணுகிறான். அவனுக்குமுன்னே நாமும் நமதுசேனையும் பனிபோலாய்விடுவோம். இது பிரத்யக்ஷமாகத் தெரிந்திருந்தும்நீங்கள்மனவெறுப்படைவானேன்? அப்பால்? தன் கருடையசித்தமென்று அளவிடுதற்கரிய புகழ்ப்பிரதாபத்தையுடைய வீஷ்டுமர் வேண்டிக் கொண்டார் உடனே, துரியோதன்ராஜனும் கர்ணராஜனும் பணிந்து துரோணாச்சாரியர் கிருபாச்சாரியர் அஸ்வத்தாமாமுதலிய மூவரையும்போற்றிச். சுவாமிகளே? வினையப் போகிறதின்கு இவ்வகையானதென்று தெரியாமல், ஏதேதோ பேசிவிட்டோம்; எங்கள் பிழையைப்பொறுத் திரக்ஷிக்கவேண்டுமென்று, சாஷ்டாங்கமாக நமஸ்காரம்பண்ணி, வேண்டிக்கொண்டு அவர்களின் மனக்குறையை மாற்றினார்

கள், இந்தப்பிரகாரம், இவ்விருவரும்வேண்டிக்கொண்டகாலையில், சான்றோர்சினமாதலால், நீர்கிழிபவெய்தவடுப்போலுமாறி ஆசீர்வதித்துப் பக்கத்திலுள்ளபலரையுநோக்கிச் சிலமொழி பகர்ந்தார்கள். இதழ்விரிந்த வலம்புரிமாலையணிந்த குருகுலவேந்தனும் அங்கதேசராஜனும் எங்களைப் பேசியசொல்லானது முடிவில்லாததுன்பத்தை விளைத்து விட்டது. அத்துன்ப மானது. தேவர்கள் கைகூப்பிச்சிந்தித்து வந்திக்கப்பெற்ற விரதசீல வீஷ்டுமருடைய சாந்தவசனமென்னும் அமுததாரையால் தணிந்துவிட்டது, இனிச்சிந்தனையில்லை இப்பால் நம்முடையபேரில் கோபங்கொண்டுவருகிற நரனுக்குத்தப்பிப் பிழைக்கத்தக்க வழியையும் மேல்நடக்கவேண்டிய வகையையுந் துரியோதனராஜனுக் காகவேண்டிய உறுதியையும் யோசித்துச்சொல்லுங்கள். நாமெல்லோரும் படைகூடிநின்று, வருகின்றவனை தளைத்துப்,போர்புரியும்போது, அந்த அர்ச்சுனன் இந்தத் துரியோதனன் பேரிலும், நாமடக்கிய பசுநிரையின்பேரிலும், லட்சியம் வைத்து வருகின்றவனுகையால் எதிரில்நிற்கிற நம்மையெல்லாம் ஒருபுறமா யொதுங்கிவிட்டு, வணங்காமுடி மன்னனைவளைத்துத் தனித்துவிஜயகாண்டீபக் கணையாற்றலைத்து, அடிநாளைப் பகையை ஆற்றுவானுகில், அநேககோடி அஸ்வ ரதங்களும், திரளாகிய சேனை யானைகளும் வெகுவாகிய வீரர்களும் நாமும் குப்புகூடியிருந்து என்னபிரயோசனம் துரியோதனன் அடிபட்டான்? அர்ச்சுனன்கையிற் பிடிபட்டான் வில்லாசிரியர்முதலிய பல்லோரு மிருக்கின்றார்கள். பார்த்தீர்களாவென்று, பழிப்பும அவமதிப்பும் வருமல்லாமல், வேறுபுகழுண்டோ? ஐயா, வீஷ்டுமரே! நமதுநேரில் வருகிறவன் நீலமேனியுடையவனுதலின்? அர்ச்சுனனென்பதற்கு ஐயப்படவேண்டியதில்லை. ஆகையால், அவனுடனெதிர்த்துச் சண்டைபோடுவதொன்று. அல்லது? ஒருவருடம் அஞ்ஞாதவாசத் தவணைக்கு ஒருநாட்குறைவென்று துரியோதனமகாராஜன் எண்ணிச் சொன்னபிரகாரம்! வழக்கிட்டு, மறுபடியுங் காட்டுக் கோட்டி விடுவதொன்று, இவ்விரண்டுகாரியத்தில், ஒன்றை நிச்சயித்து, ஸ்திரமாய்ச்செய்துவிடுங்கள். மிஞ்சிப்போனபிற்பாடு? விழிப்பது காரியமல்ல வென்று,துரோணாச்சாரியர்சொல்ல? அந்தமொழியை வீஷ்டுமர்கேட்டுச் சிந்தைதெளியச் செப்பத்தொடங்கினர்.

அஞ்ஞாதவாசத் தவணைநாளைக்குறித்து.

வீஷ்டுமர் பேசுவது.

அப்பா. துரியோதனா! தப்பானகாரியத்திற்பிரவேசிக்காதே, நானுனக்குச் சொல்லுவதைக் கேள். அஞ்ஞாதவாசத் தவணைநாளைக்குறித்துப், பாண்டவர்கள்பேரில் வழக்கிட்டு, மீட்டும் வனவாசத்திற்கனுப்ப வல்லவர்கள் ஆண்டவனைப்படைத்த நமது குலமுதல்வனுன சந்திரனுடைய நிழல்படிந்த பூமிமுதலிய திரிலோகத்திலுங் கிடையாது. அதெனப்படியென்றால், ஜகதீசனுடைய ஆக்கினையினால், காலசக்கரஞ்சுழன்று வருகிறகாலில் அகப்பட்ட சூரிய சந்திரர்முதலாகியநவக்கிரகங்களின் சாரத்தினாலும் தினசார பேதத்தினாலும் சற்றேறக் குறைய ஐந்து வருஷத்திற் கொருதரம் அதிகமாசம் வருகின்ற கணிதப்படிக்கு யோசிக்குமிடத்தில், இப்போது? இரண்டுமாதமும் பன்னிரண்டுநாளும் உயர்ந்திருக்கின்றது, அந்த உபரிநாளைக்கூட்டி? நேற்று உதயத்திற்கே பதின்மூன்றுவருடமுங்கழித்துப் போட்டார்கள் இன்றையத்தினம தவணைநாளுக்கு மேற்பட்ட நாளானதையால், நேர்புகுந்துபோர் செய்யப் புறப்பட்டிருக்கின்றான். நீயதை யோசியாமற்சொன்னாய். மன்னவனே! பாண்டவர்கள் எப்பொழுதுஞ் சொற்சோர்வுபடார்கள், வார்த்தை தப்பி வசனிக்கமாட்டார்கள், ஒருவர் தினையத்தனை நன்றி செய்யினும், அதைப் பனையத்தனையாகக்கொண்டு பிராணனுள்ளவரையிலு மறவாமற் புகழ்ந்து பேசத்தக்கவர்கள் ஒருவர்செய்த பலபொல்லாங்குகளையும் அருவிச்சலம்போல், ஆற்றிமறப்பார்கள். திர்க்கண்ணிகளல்லர். சத்தியநெறியும்- நித்தியவிதியுந்தப்பார்கள், வானவர்கொண்டாடும் ஞானமுள்ளவர்கள், வன்மை-உண்மை- திண்மை யுடையவர்கள், நல்லொழுக்கமும் அவ்வொழுக்கத்திற்குத்தக்க நடைப் பழக்கமு முடையோர். பொருமையற்றவர்கள், அயலார்சொத்துக்கு ஆசைவைக் காதவர்கள், புறங்கூறாதவர்கள், அக்கிரமத்திற்கு உடன்படாதவர்கள், குலமுறை குன்றாதவர்கள், ஆகையால் அவர்களொருநாளும் அபகீர்த்திபெறமாட்டார்கள், அபஜெயமடையார்கள், இப்பேர்ப்பட்ட இருதயசுத்தி யுள்ளவர்கள். ராஜசபையில் ஒப்புக்கொண்டுபோன தவணைநாள் கழிப்பதற்குமுன்னமே தாராளமாகச் சண்டைக்கு வருவார்களோ? அவர்கள் சாஸ்திரங் கல்லாதவர்களோ கணிதநூ லுணராதவர்களோ? நல்லது, அப்படி தப்பிவருந்தன்மை பாண்டவர்களிடத்திலுண்டாயிருக்குமாகில், அஸ்தினபுரத்தில், நீங்களாடிய தலைபறந்த ஆட்டத்திற்கும்-சொக்கட்டானாட்டத்திற்கும்- துரோபதியைத் துகிலுரிந்த வாட்டத்திற்கும் இராஜசபைகூடிய உங்கள் துன்மார்க்கக்கூட்டத்திற்கும் உட்பட்டுத்தடைக்கஞ்சியசர்ப்பம்போலும், கரையின்கட்டுப்பட்டிருக்குங்கடல்போலும், பொறுமையாயிருப்பார்களா? இதனுலாவது நீ தெரிந்துகொள்ளவேண்டாமோ? கழனியிற் மசுழ

த்த கருப்பஞ்சோலையின் செழுமையைச் செந்நெற்பயிர் காட்டவும், செந்நெற்பயிரின் கொழுமையைப் படப்பையில்வளர்ந்த கமுகஞ்சோலைநாட்டவும், கமுகஞ்சோலையின்வளமையை மூடக்கின்றியுயர்ந்த தென்னஞ்சோலை தெரிவிக்கவும், தென்னஞ் சோலையின் சீர்மையை இன்னுமுள்ள சோலைகள் விளக்கவும், தங்குநில வளத்தினையுடைய குருநாட்டுக்கதிபதியான குபேரனே! பன்னிரண்டுவருடம் வனவாசம்பண்ணிய பாண்டவர்கள்சந்திரனுடைய சாரகதியினால், அஞ்ஞாதவாச வருடமொன்றையும் நேற்றோடு தொலைத்துவிட்டார்கள். நீயதைக் குறித்துச் சந்தேகப்படவேண்டாம், பதின்மூன்று வருடமும் போக்கிவந்தால்,உங்கணாட்டை விட்டுவிடுகிறேனென்று, நீ - ஆதியிற்சொல்லிய வண்ணம், பாண்டவர்களுக்குரிய பதியைக்கொடுத்து, அவர்களுடன் கலந்து சமாதானமாய்ப்போவது மிகவுநல்லது க்ஷத்திரியதர்மத்திற்கும் உத்தமம். சத்தியவாக்குந்தப்பாது. இந்தப்படி நடவென்று மனத்தழுக்கற்ற வீஷ்டுமர்சொன்னார்.

இவ்வாறுகச்சொல்லிய குலகுருவாகிய பிதாமகனைத் துரியோதனமகாராஜ நோக்கி, முகங்கருகி,மனங்குழுகி, உணர்தளர்ந்து, எங்களையாவே! தேவரீர்சொன்னசொல் எனக்குச்சம்மதமில்லை. முன்னே நிச்சயித்தனுப்பிய பதின்மூன்றுவருடமுங் கழிந்துபோனாலத்தானென்ன? இன்னமுமொருமுறை வனவாசம்பண்ணிவரும்படி ஓட்டிவிடுவேனேயன்றி, நான்நாடுகொடுக்கப் போகிறதுமில்லை, நீங்களந்தத் தவணைநாளை நாடிக் கணக்குப் பார்க்கவேண்டுவதுமில்லை. இதோ, மின்னல்போற் பிரகாசிக்கும் வில்வேந்தர்களுக்கு முன்பாக விளம்புகின்றேன். சங்கினமீன்ற முத்துக்களால், அடைபடுமடைநீர் தடைபடாதோடுங் கழனிகள்சூழ்ந்த நாடேனும்-நகரேனும்- ஐவர்க்களிக்கமாட்டேன். அதேனெனில்,நான் என்னகொடுத்து இணங்கினாலும் என்னிடத்திற்பிரியம்வையாமல் எந்நாளுஞ் சத்துருவா யிருப்பார்களன்றி, எனக்கு மித்துருவாகார்கள். ஆகையால், கான்கொடுத்துப் பொல்லாங்குபெறுவதைவிட, கொடாமல் விரோதப்படுவதே நன்மை. அவர்கள் வேண்டுமானால், சண்டை பண்ணி மூன்றுலோகத்தையும் வென்று தாமே ஆளட்டும். அவர்கள் செல்வஞ்செருக்கி வாழுங்காலத்தில், துரியோதனனால் சுகப்பட்டோமென்று சொல்லிக்கொள்வார்கள், மேலும், எந்தக்காரியமெப்படியானாலும், எவர்களெவ்வாறுசொன்னாலும், அதுகளுக்கெல்லாம் அசையாமலிருந்து, ஓரேநிலையாக யுத்தம்புரிந்து, போர்முனையிலிறந்தாலென்று எனக்கொரு கீர்த்தியுமுண்டாம் என்றான்.

இப்படி வணங்காமுடிபெற்ற மன்னனை ஸ்திரமாகச்சொன்ன கருத்தையும் வீஷ்மர் சொல்லிவந்த விதத்தையும்-காலநிதானத்தையும் படைமன்னர்களுடைய எண்ணத்தையும்- வெற்றிமாலைபொருந்த துரோணாச்சாரியாதிந்து பேரும்-பிரதாபமும்- பெருமையும் படைத்த கௌரவகுலச் சிங்கமே! பாண்டவர்களுக்கு நாடுகொடேனென்று, நீபகர்ந்தது நிச்சயமானால், உனக்கு அவர்கள் ஓடுகொடுப்பார்க ளென்பது உண்மையே. இனியொருக்ஷணப்பொழுதும், நீ யிவ்விடத்தில் நிற்கப்போகாது, எங்களையும் ஸ்திரமாக நம்பாதே. நாமிப்போது கைக்கொண்டிருக்கிற மாட்டினையோட்டிக்கொண்டுஓட்டமுநடையுமாய் ஊர்போய்ச்சேருவையாகில், நீயும்வெற்றிபெற்றதுபோலாம். நமதுயுத்தியும் நிறைவேறும் இவ்விடத்திலிருந்து, போர்புரிந்து ஜெயங்கொண்டு போகலாமென்றால், நாம் ஓட்டியமாட்டையுங் குருநாட்டையுமிழந்து, அநியாயமாக உயிரிழக்கவேண்டிவரும். ஆனதால் நம்முடைய சேனைகளை இரண்டுபிரிவாக்கி, ஒருபிரிவை ஆவினங்களுக்குக் காவலாக அமைத்துக் கொண்டு, நீ அஸ்தினாபுரம்போய்ச்சேர்வது உத்தமம் மற்றச்சேனைகளுடன் நாங்கள் கும்பலாகநின்று, வருகின்றதனஞ்செயனை உன்பேரில் வரவொட்டாமற் றடுத்து, எங்களாற்கூடியமட்டுஞ்சண்டைதொடுத்துச்,சமயம்பார்த்து. நாங்களும் பட்டினம்வந்து சேர்ந்து விடுகிறோம்- விரதங்கெட்டாலுஞ்சுகந்தக்கவேண்டும். சுகங்கெட்டாலும் விரதந்தக்கவேண்டும். இரண்டுங்கெட்டால், என்னபலனுண்டாம். இறைவனே! நாங்களெப்படி யாகிலும், அடிபட்டு அவதிப்பட்டுத், கட்டுக்கெட்டுத், தடுமாறிவந்தாலும், விராடபுரத்திற்குப்போய்மாட்டுமந்தைகளை மடக்கிவந்தோமென்று பெருமைபாராட்டிப்பேசித்திரியலாம். இதிவென்பது நம்மைபெட்டிப்பாராதென்று தநுவேதசம்பன்ன ருரைத்தருளினர். அக்காலையில், விரதமுனியாகியவீஷ்டுமரும்கிருபாச்சாரியரும்சந்தோஷித்து அந்தோ! இந்தயுத்தி மேன்பாட்டை விளக்குமென்று விளம்பி, இரத-கஜ-துரக-பதாதிகளை-ஈரிருகூறாக்கி, ஒருகூறு துரியோதனமகாராஜனுக்குத்தேகசவரக்ஷணைக் காவலும்மற்றோர்கூறு பசுமந்தைக்குக்காவலுமாக அமைத்து, அஸ்தினாபுரத்தைநோக்கிப் போம்படியாக அனுப்புவித்தார்கள். பெரியோருரைத்த பேச்சின்படிக்கு உடன்பட்ட பிரதாபமுடிவேந்தன் புறப்பட்டு, அரவக்கொடிநாட்டிய தேரிலமர்ந்து, ஆனினங்களையும் அநேக வீரப்படைகளையும் தனக்கு முன்னாகநடத்தித், தானுந்தேரை விரைவிற் செலுத்திக்கொண்டு சந்தடிசெய்யாமற்போயினான்.

இப்பால், துரோணாச்சாரியார்- கிருபாச்சாரியர்-வீ

ஷ்டுமர்-அஸ்வத்தாமா கன்னன் முதலியமன்னர்மன்னர்களும்இங்ஙனநின்றசேனைப்பிரிவைக்கடல்போற்பெருக்கிக்காட்டி எங்குந்தாமாய்நிறைந்திருந்தார்கள். எவ்வகைப்பட்ட திறலுடையோரும் இவர்களுக்கு முன்சென்று நின்று யுத்தஞ்செய்வது மெத்தவும் அருமையென்று, இளைத்துவாடி ஓடிப்போம்படியாகச்சிலசேனைகளைப்பலசேனைகளாகப் பலசேனைகளைச் சிலசேனைகளாகத் தோற்றும்படியமைத்து உத்தரதிசைக்குக் கிருபாச்சாரியாரதெக்ஷிணதிசைக்குஅஸ்வத்தாமா-இந்திர திசைக்குக் கர்னன்-தூசிப்படைக்குத்துச்சாதனன் - கூழைப்படைக்குவிகர்னன்- இவர்களைமெய்க்காவலாகநிறுத்திச், சேனைகளுக்குமத்தியில் சகுனி-சயிந்தவன்- சோமதத்தன்- பாகுலிகன்-முதலாகிய முதன்மையோரா பிருத்திப்புறமிடாப்புகழ்பெற்ற புண்ணியசீலனாகிய வீஷ்மரும்-மங்களம்பொங்கு மகிழ்ச்சிதங்கிய துரோணாச்சாரியரும்-சேனைகளின் முனைமுகத்திலும் நடுநிலத்திலும்-முயற்சிவிடாமற் பொருந்தினார்கள்! வானமளாவிய குடைகளும் வாயொளிமின்னும் படைகளும் வகைவகையான கொடிகளும்- வளைதடி முதலிய தடிகளும்- பாலாபல்லயங்களும்-மகரதோரணங்களும்-நிறைந்து? முரசு-காகளம்-எக்காளம்-கொம்பு-பம்பை-தாரை-பூரி-வீரசின்னம்- சங்கம பேரி மற்றுமுள்ள வாத்தியங்களெல்லாம் பூமி செவிடுபட முழக்கி இத்தன்மையாக ஆர்ப்பரித்திருந்த இவர்கள் அணிப்பும் சேனைச்சினியங்களைத் திருத்தியமைத்த திற[illegible]ரியோதனன் பசுமந்தையுடனே நீங்கிப் பட்டினம்சே[illegible]ற ஒழுங்கும் தேவேந்திரன்கண்டு, விட்டேற்றியாய் ஒருதேரில்வருகிற அருச்சுனனுக்கும் கெட்டிக்காரத்தனமாய்ப் பட்டணம்போகிறகௌரவர்களுக்கும் இவ்விடத்தில் நடக்கப்போகின்ற யுத்தத்திறத்தைப் பார்ப்போமென்று! அக்கினி- யமன்- வருணன்- குபேரன்-பிர்மா-விஷ்ணு-உருத்திரன்முதலாகிய சகலதேவதைகளுடனே அந்தரநிறை இந்திரவிமானத்தின்மீது வந்து நின்றனன். அவ்வேளையில். பரவாசுதேவ னநுக்கிரகஞ்செய்ய அவனுக்கினைப்படிக்குச் சொர்க்கலோகநிசப்பெற்ற அஷ்டகன் வசுபத்திரன்-வாருகன்-நகுஷன்- மாந்தாதா-சிபி-புரூரவன்-கார்த்தவீரியன்-பரதன்- பகீரதன்-சகரன்-தசரதன்-அரிச்சந்திரன்-பாண்டு- இவர்கள்முதலாகியமகாராஜரும் விருதுடால்மேளங்களுடன் அரிச்சந்தனதி கர்ப்பகப்பூமாலைவாசங் கமகமவென்று பரிமளிக்க வந்துவிளங்கி வேடிக்கைபார்த்திருந்தார்கள். அவர்களில் தனதுமகன் வரவைக்கண்டு சந்திரகுலத்தோன்றலான பாண்டுமகாராஜன் மகிழ்ச்சிகொண்டு,இரண்டுதோளும் பூரித்துத், திரண்ட உடலும்பாரித்து,இன்பமதுவுண்டு தென்புமேற்கொண்டு, களித்தவர்போல், இந்திரனுக்கு அருகாசனத்திற் பொருந்தியிருந்தான்.

இந்தப்பிரகாரம், தேவதைகளுடன்தேவேந்திரனும்,வானத்தில் தாண்மில்லாமல்,விமானத்திலிருந்து வேடிக்கைபார்க்கும்போது, தேனிறைந்த மாலைபுனைந்த சூரியகுலத்தோன்றல்களும், சந்திரகுலத்தரசரும் சற்றும் ஏமாறாமல்விழித்தகண் விழித்தவண்ணம், பார்த்துக்கொண்டிருக்கும்போது விஜயப்ரதாபவீர காண்டீபவிஜயனானவன் பானுகோடிஜொலித சோப்யம்போல் வெளிவந்தான். இப்படியாகத் தேர்செலுத்தி அணிவகுத்திருக்குங் கௌரவசேனைக் கெதிரில்வந்து காண்டீபனது தேரொலியென்னும்பேரொலியால் அட்டகிரிகளும்- அட்டகரிகளும்-அட்டநாகங்களும்- அட்டதிக்குகளும்- அட்டபாலர்களும்-அட்டவசுக்களும்-திடுக்கிட்டுத் திகைத்தார்கள். அந்தத்தேரிற்பூட்டிய குதிரைகளின்குரத் தெழுந்த தூசிப்படலமானது எண்டிசையுமொய்த்து எழுகடந்தூற்றுச், சக்ரவாளச்சுற்றும் அண்டமுகடுமுற்றுங் கப்பிக்கொண்டதுகள். வேடிக்கைபார்க்கநின்றதேவருமொதுங்கினார்கள். சக்ரவர்த்திகள் முதலியயாவரும் பதுங்கினார்கள். சேனைமுனையிற்செறிந்திருந்த தீரருநடுங்கினார்கள். சேனையும் சேனாபதிகளானவீரரும் ஓடுங்கினார்கள் தங்கள்தங்கள் ஜீவன் தப்பாதென்று தயங்குகின்ற துரியோதனனுடைய நால்வகைச் சேனைகளின் திறத்தையும் சுற்றிநின்ற படைவீரர்களின் மறத்தையும் எளிதிற்றெரிந்துகொண்ட விஜயனானவன் தனக்குச்சாரதியான உத்தரகுமாரனைப்பார்த்து, எதிரிசேனைகளிருக்கின்றதிறமைப்பைப்பார்த்தாயா? நீரோட்டமுள்ள நெடுங்கடல்போல், நிலைகொள்ளாதிருக்கின்றது. ஆகிலும், நமக்கொருஅச்சமல்ல, இப்போதவர்கள் செய்திருக்கிற உபாயமான அபாயத்தை உனக்குநா னெவ்வாறுரைப்பேன் என்னுடையகோபம் என்வாயைமூடுகிறது நம்மைஅவர்கள் மோசம்பண்ணிவிட்டார்கள் அந்தச்சங்கதியை உனக்குச் சொல்லாமல் வெல்லக்கூடாது. அதென்னவென்றால், காட்டுக்குப்போன பாண்டவர்களில் பார்த்தனானவன் தலைமாட்டுக்குத் தீங்குவிளைக்க வந்துவிட்டான னீகாட்டுக்கு நல்லதுணையானதால்,நாம் கூட்டியமாட்டுமேந்தையை ஓட்டிக்கொண்டு உன்வீட்டுக்குப் போய்விடென்று வணங்காமுடிமன்னனுடைய மனத்தைத்திருத்திப், பாதிச்சேனையை அவனுக்குக் காவலாகப் பொருத்தியனுப்பிவிட்டு, மீதிச்சேனையை நமக்கெதிர்நிறுத்திப்பேரணிவகுத்துப், போராடநினைத்துப்பெரியோர்கள்நிற்கின்றார்கள். இவர்களுடன்யுத்தஞ்செய்யத்தொடங்குவோமாகில், பசுக்கூட்டங்களோடு துரியோதனன் பட்டினம்போய்ச்சேர்ந்து விடுவான். அப்பால், இவர்களைவென்று நாமடையப்போகிற லாபமென்ன? ஆகையால், நமக்குநேர்நிற்கிற பெரியோர்களு மறியாமல், மன்னனுக்குரியோர்களு மறியாமல், நாம் செய்யப்போகிறவேலையின்னதென்று யாருங்குறியாதிருக்கும்படியாகத்,தேரோட்டிக்கொண்டு போகாநின்ற துரியோதனனுக்குத்துறக்கேபோய்நின்று, மறித்துவருத்தி நமதுமாட்டை மடக்

கிக்கொள்வது மதியூகிபாகிய மன்னவர்செய்யும் போர்த்திற உபாயமாக்களும் மைந்தனே! நாம் மீட்கவந்தபசுமந்தைகள் அஸ்தினபுரம்போய்ச் சேர்ந்துவிட்டபின்பு இவ்விடத்திலுள்ள பல்லோரை யொழித்தும் வல்லோரையழித்தும் பிரயோசனமென்ன? ஆரியக்கூத்தாடினும், காரியத்திற் கண்ணிருக்கவேண்டியது. ஆதலால் முன்னதாகப் பசுக்களைமடக்கிவிராடபுரத்திற்கனுப்பிவிட்டு, அப்பால், பெரியோர்முதலிய உரியோர்களுடன் சமராடித், துரியோதனனையுஞ் சுற்றவிட்டு வெற்றிபெறுதற்குத் துரிதமாயிருக்கின்றோம் ஒருவேளை,நாம்துரியோதனனைத்தடுக்க நாடிப்போங்காலையில், இந்தப்பெரியோர்கள் மேல்விழுந்து போர்கொடுப்பார்களாகில்,நாம்நேர்புகுந்து சடுங்கணைப்பிரயோகங்காட்டிக் கலக்கிக், கண்ணுக்குக்காணாமல் ஓடிப்போம்படியாய் விலக்கிக், காரியானுகூலங்காண்போம்.இதைவிட,யோசனையில்லையென்றிசைத்து, எக்களிப்போடெழுந்த பற்குனனைப்பணிந்து, உத்தரகுமாரன் சித்தமகிழ்ந்துசரிதான். இப்பேர்ப்பட்ட காலத்திலல்லவோ?என்சாமார்த்தியத்தையறியவேண்டும். அத்தனே! என்று, குதிரைக்கடிவாளத்தைக்குறுக்கிப்பிடித்துக்குலுக்கிவிடுத்துச் சிகரகுன்றம்போன்றதேரைச் செண்டுபோலெழுப்பிப், பெரியவர்களுக்குவலசாரிவருவதுபோல், சூழ்ச்சிகாட்டித், துரியோதனன்போன திக்கைத்தொடாமல், மேலுக்குமேலாக மேற்றிசையைநோக்கி விரைவில்விட்டுவிட்டான்.

அர்ச்சுனராஜன் - தனதுசிலைக்குருவாகிய துரோணாச்சாரியர் - வீஷ்டுமர்-கிருபாச்சாரியர் - இம்மூவருக்கும் வந்தனக்கணைகளேவிமயக்குவித்தல்.

அக்காலையில், அனுமக்கொடியாடுந்தேரில், அமர்ந்துவருகின்ற அர்ச்சுனராஜன் தெக்ஷிண திசையிலிருந்தசிலைக்குருவான துரோணாச்சாரியாருக் குருபாதவணக்கம் பண்ணிக்கொள்ள வேண்டுமென்று குறித்துக், காண்டீபம்வளைத்து நாணேற்றிச், சரணுஞைசைகாட்டி, இரண்டுகணையெடுத்துப் போற்றிப்பணிந்து விடுத்தான். காமதகனனாகிய கண்ணுதலின் கடாட்சம்பெற்றகாண்டீபன் அபிமந்திரித்துவிட்ட அஸ்திரம் இரண்டும்அந்தரம்புகுந்து, ஆகாசசிந்துவைக்கவர்ந்து, அலர்ந்துவிரிந்த மலர்களைப்பறித்துவந்து, துரோணாச்சாரியருடைய பொன்னடிமேற்பொழிந்து, பூசித்துவரும்போது, பின்னும் இரண்டுபாணங்களைப்பிரயோகஞ்செய்தான். அவ்விரண்டுமிரண்டு உருண்டைபோன்றஅண்டத்திற்பரந்து, அவர்முன் ஒன்றுபிரிந்து ஆசாரியரைச்சூழ்ந்து பிரதக்ஷிணஞ்செய்து, திருவடியிற்பணிந்தது. மற்றொன்றுபதின்மூன்றுவருடம் வனவாசஞ்செய்து, அஞ்ஞாதவாசமும்பண்ணித், துன்பந்தொலைத்துத், தேவரீருடையஅநுக்கிரகத்தால், இன்பம்பெறவெளிப்பட்டோம். என்னுடன்கூடஎல்லோரும்க்ஷேமமாயிருக்கின்றார்களென்றுசுபஞ்சொல்லவந்ததுபோல், ஆசாரியருடையசெவியினிடத்திலொலங்கி, ரீங்காரமிட்டுநின்றது. இந்தவிந்தையைக்கண்டதுரோணாச்சாரியார் சிந்தைதளர்ந்து, இப்பிரமைகொண்டு, இயக்கமடைந்து, ஒன்றுந்தோன்றாமலிருந்துவிட்டார். அவரத்தன்மையாயிருக்கும்போது, பச்சிமதிசையிற்படர்ந்த அர்ச்சுனனானவன் அங்கிருந்த குலமுதல்வனாகிய வீஷ்டுமரைக் கண்டு, அவரைத் தொழும்படியாகக்கருதித், துரோணாச் சாரியரைக் குறித்துத் தொடுத்தபிரகாரம் நான்குபாணம்விடுத்துக், கங்கைநீராட்டிக் கர்ச்சித்து, பத்திரபுஷ்பங்களினால் அர்ச்சனை புரிந்து செவிகளுக்கு க்ஷேமசமாச்சாரந் தெரிவித்து வடதிசையில் மேருவைப்போல் படைக்காவலிருக்கின்ற கிருபாச்சாரியருக்கும் நான்கு பாணஞ்செலுத்தி, வந்தனைவழிபாடுசெய்து, காதுகளிடத்துங் கணையொலிகாட்டித், தன்பேரில் அவர்கள் நெடுநாளாக வைத்திருந்தகாதலை விருத்திசெய்து அவரவர்கள் தம்மைத்தாம் மறக்கும்படியாகத் தலைமயக்கங்கொள்வித்து இந்தச்சமயத்தில், தன்னையவர்கள்தொடாதிருக்கவும் தேடாதிருக்கவும்மோசனமுண்டாக்கிச், செவ்வானத்தில்கலந்து மறைந்துசெல்கின்ற செங்கதிர்ச்செல்வனுடைய தேர்போல், தன்னுடையதேரைச் செந்தூளால்மறைத்து அங்குநிறைந்த பெரியோர்களும் பிறமன்னர்முதலாகிய யாவரும் அறியாதிருக்கும்படியாக அவர்கட்குப் பின்பக்கமாகநெறிபற்றிப் போயினான். இவ்வண்ணம், பார்த்தனேறியதேரை மூர்த்தண்யமாகத் திருப்பி முடுக்கி வேகமாய்விடுத்த உத்தரகுமாரன்திறத்தை வீஷ்டுமர்- துரோணாச்சாரியர்-கிருபாச்சாரியர்- அஸ்வத்தாமாமுதலிய யாவரும் பார்த்துப் பார்த்தனுக்குத்தகுந்த தேர்ப்பாகன் அகப்பட்டானென்று பட்சமாய்ப்பேசி மேலும் என்றுங்காணாத அதிசயம் இன்றுகண்டவர்களைப்போல், ஆனந்தங்கொண்டு, ஆ, தெய்வமே, இந்நாள்வரையிலுந் தனுவேதங்கற்றுச், சம்பிரதாயமுற்று, மந்திரார்த்தங்களைப்பெற்றுச் சமர்த்தாயிருந்து, சம்பிரமமாய்க்காலங்கழித்துவாழ்ந்த நாம் கதையிலுங்கேட்டில்லாத கற்பனையிலுங்கண்டறியாத அங்கியாதிசயமான அம்புகளையனுப்பி கும்பலினின்ற நம்மைக்குறித்து அன்பு பாராட்டினனே யென்று, ஒருவரோடொருவர் கூடிக்கசிந்து, ஆஹா? இந்தவல்லவனுக்கீடாகியபுருஷர்களுமுண்டோ? அடடா! விஜயன்விட்டகணைகளில், ஒருகணையானது ஆகாயகங்கையை அள்

ளிக்கொண்டுவந்து, சளசளவெனப் பொழிந்து, சரணங்களில் அபிஷேகம்பண்ணவும் மற்றொருபாணம் புஷ்பங்கள் பறித்துவந்து அர்ச்சனைசெய்யவும் மற்றொரு அஸ்திரம் வஸ்திரம்போல் வளைந்து வலஞ்சுற்றிவரவும் பின்னுமோரம்பு தீதிலாச்செய்தியைக்காதிற்போதிக்குந் திறம்போலினாயவும் இப்படிக் கெல்லாஞ்செய்த பிரதாபம்வாய்ந்த பெருமையேய்ந்த தனுமறைமுதலிய சாஸ்திரங்களாய்ந்த தனஞ்செயன சண்டைமுகத்திற்றொடுக்குஞ்சாத்தைத் தடைசெய்யப்படித்த தாஷ்டிகர்களுண்டோ! இதன்றியும், (பெருப்பாரமேறினுந் தளர்ந்து வளையாத கற்றூணைப்போல்) எத்தனைகோடி கொடிப்படைகள்சுற்றினும் சற்றுமிளையாத் தனஞ்செயனனவன மெத்தவல்லமைகொண்டு, ஒருசாரதி துணையைக்கண்டு சண்டைபோடத் தலைப்பட்டிருக்கின்றானின்று இவனது போர்முகத்திற்கு நேர்முகங்காட்டித் தேர்செலுத்தி யார்செயிக்கப்போகிறார்கள். நாம்பிழைக்குமாறெப்படி! என்னிடத்திற் கற்றதனைத்தையுங் கற்றிருக்கின்றானே. கங்காபுத்திரனேயென்று துரோணாச்சாரியர் கண்கலங்கப்பட்டுக்கழறியபோது வீஷ்டுமர்விளம்பத்தொடங்கினார்.

ஐயா! துரோணாச்சாரியரே! அநுமக்கொடிபடைத்த அருச்சுனராஜன்எனக்குமரியாதைநடாத்திய மந்திராஸ்திரத்திறத்தையும்நம்முடையபேரிலெதிர்த்துநாணமல்வருகிற மனோதிடத்தையும் நிதானிக்குமிடத்து அவனை யெதிர்த்து, அவனைத்தொடர்ந்து அமராடிக்கெலிப்பதற்கு இயாவராலுங்கூடுமா? அல்லாமலும், பாஞ்சசன்யப் பாந்தாமனான ஸ்ரீகிருஷ்ணபகவானுடையபரமதயாள பாத்திரனாயிருப்பவன். தந்தையாகிய இந்திரனுடைய சொந்தக்கருணையையும் மந்திரக்கணையையுந் துணையாகப்பற்றி அன்புக்குந் தயைக்கும் இடமாயிருப்பவன. எற்றுவாகனமூர்த்தியாகிய கூற்றுதைத் தோனது கடாட்ச வீட்சண்யமுண்டாயிருப்பவன. இத்தியாதிநல்வினைப்பயனுற்ற நாரணன்வனைச் சற்றேனுஞ் சயம்பெறுகின்ற தன்யரில்லையே. நாமென்னசெய்யலாம்? நமது சொல்லை உட்கொள்ளாமல் தள்ளிடக்குந் துரியோதனன் துள்ளுகாளைபோற் முடித்துப் பாண்டவருடன் சொக்கட்டாடி அவர்களுடைய நாடுநகரத்தைப் பிடுங்கிக்கொண்டான்; அதுவுமல்லாமல், பட்டஸ்திரீயாகிய பாஞ்சாலியம்மனைத் தலைமயிரைப்பற்றியிழுத்துச்சபையேற்றுவித்து, வஸ்திரமுரிந்து, மானபங்கம் புரிந்து பன்னிரண்டுவருடம் வனவாசம்பண்ணைப்போக்கிய அபாக்கியனானவன் ஒருபோதுஞ் சிலாக்கியனாக மாட்டான். சத்தியவாக்கியனானதருமராஜனுக்கிளையதம்பியினாற்கெடுவான், உயிர்விடுவான் இன்றைக்கு அவமானப்படுவான். இதற்குச் சந்தேகமிராது. அதப்படியிருக்க, அனிருத்திச், சேனைக்குக் காவலாயிருந்த நம்மை ஆவலாய்ப் பூசைபண்ணிப் போய்விட்டானே. அவன்செய்த உபசாரத்திற்கு நாம் ஒரு ஆசிர்வசனஞ்சொல்ல வகையில்லாமற் போனோமே. நமக்கெதிராகிவந்த பலேப்புயன்- சிலைக்கரன் - வானவர்கோன்மைந்தன் நந்தனநதீனைபனாகிய நாரணமனுக்குச் சரியாகாமற் போனோமே. நல்லது, நாமடக்கிய மாட்டுமந்தையை விடுவிக்கவந்தவன்படைமேல் விழுந்து அமராடவேண்டுமே, நம்மையுமயக்கி, நமது சேனையையும் விலக்கி, நான்குதிக்குங் கலக்கி, ஊனாநாடிப்போகின்ற துரியோதனனை விடாமல், நாடிப்போனான்போலு மிருக்கிறதே. ஐயா! மற்றப்பேச்சுக்களையுத்தமுனையிற்கலந்துபேசித் தெரிந்துக்கொள்ளுவோம். வெற்றிவீர விஜயன்போனவழியைச் சுற்றிப்பாருங்கள். பிரசித்தனான துரியோதனனை உற்றுக்காருங்கள்யாருஞ்சேர்ந்துவாருங்கள். சித்தப்பிரமைகொண்டுதியக்கப்படாதீர்கள், கிலேவிஜயனதேனா தெற்கு- மேற்கு-வடக்கில் விட்டாலும், கிழக்கில் விடாதீர்கள். சேனை மன்னர்களேயென்னு யானைசேனை பரிவாரங்களுடனின்று, ஒன்றுந் தோன்றாமல், யோசித்துக்கொண்டு ஒருவாறு உறக்கம் பிடித்திருந்தார்கள்.

அத்தருணத்தில், கடுமையாகவீசிய காற்றின்வாட்டத்தால், கருங்கடலைக்கிழித்தோடுகின்ற கப்பலைப்போல் திக்குத்திசைகள் நெக்குவிட்டசைய, மடமட - கடகட-தடதட-கிடுகிடு-படபடவென்று மண்ணுங்குலுங்க, விண்ணுங்கலங்கப், பார்ப்பவர்கண்களுமயங்க, மனோவேகத்திலுமிஞ்சிய வேகங்காட்டிச் சிகரத்தேரையோட்டித், துரியோதனராஜனுடன் ஓட்டமுநடையுமாய்ச்செல்லுகின்றசேனைக்கு முன்சென்று, செயஞ்செய மென்று குதித்து நின்றான்.

அப்போதந்தப்பசுக்கூட்டங்களுக்குக்காவலாகப்போகின்ற ஆயர்களும்- கோபசசப்தங்கூறும் வாயாகளும் யுத்தஞ்செய்யவிரும்பிய நேயர்களும்-ஆயுதபாணிகளாய் அதிர்த்து, யாருடனும் போர்புரிவதற்கு எதிர்த்து, வாளும்வேலும்பிடித்து, விதிர்த்து, ஓடும்படைகள் உரக்கக்கொக்கரித்துக், கர்ச்சிக்கும்பலத்தை அர்ச்சுனன அறிந்து, ஏ-ஏ-ஹே- யென்றிரைந்து, இருதோளும்பூரிக்க விரைந்து, காண்டீபத்தில் நாரிபிகிந்து, காய்ச்சித்து வைத்துக் கடைச்சற்பிடித்த கணைகளைத்தொடுத்து, ஆகர்ணபரியந்தமும் இழுத்தான். அச்சமயத்தில் கிரீடியின்தேரோடிவந்து கிட்டிவளைத்தகெடுதியை சடுதியிற்கண்ட துரியோதனன் சஞ்சலப் பட்டுப் பெரியோர்கள் பேசிய பேச்சுகேளாமற் பெருமோசமாச்சு. அவர்களின்

ரும் நாமிக்குமாகப்பிரிந்து இவனிடத்தி லகப்பட்டோமேயென்று பெருமுச்சுவிட்டுச், சற்றுநிதானித்துச், சித்தப்பேதித்து, ஓடவுங்கூடாமல், திரும்பிப்போய்வீஷ்டுமர்முதலிய பேர்களுடன் கூடவுங்கூடாமல், வாடிவதங்கி, மரத்தினிழலிலொதுங்கி, மனறதலும் வெளிப்படுதலுமின்றிப் பதுங்கினின்றான்.

இவ்வாறு, நீரகண்டகனை துரியோதனன் மதின்மேற்பூனைபோற்சமயத்தைநோக்கி, இளைத்துக் காட்டிய செய்கையையும்-அவன் சேனைகள் சிலவிஜயனால் வளைக்கப்பட்டவகையையும் வீரகண்டைதரித்தவிராடராஜகுமாரன் தெரிந்துகொண்டு, விஜயலட்சுமியருளால், இன்றுநமக்கு ஜெயமென்று முகமலர்ந்து, விந்தகிரிபோலமைந்த தன சொந்தரத்தை வாரிதியிற் சுழன்ற மந்தரகிரிபோற்றிருப்பிக், கர-கர-கர-கர - வென்று கர்க்கரத்தொனிகாட்டி விற்கரத்தருன விஜயனை நோக்கினன்.

அந்தவேளையில், அர்ச்சுனனுனவன்பேரிடிமுழக்கம்போல் காண்டீபம்வளைத்து, நாணிதொடுத்து, ஷ்டங்காரஞ்செய்தான்.

அத்தொனியை வீஷ்டுமர்-கிருபர்-துரோணர்-அஸ்வத்தாமா-கர்னன்-சகுனி-முதலானோருங்கேட்டுத், திடுக்கிட்டு, ஓகோ! என்னமோ யோசம்வந்தது, நாணொசையுந் தனுவோசையுங்கேட்கிறது, சமர்புரியவந்த குமரனைக்காணேம். ஆரபராநீரவீர சூரத்தன்யமாகத்தேருர்ந்துவந்த போர்வீரனெங்கே? ஈசானமூலையில், இடிக்கின்றாற்போ லிருக்கின்றது. ஆனால், இது மழைபிடியல்ல மகாமச்ச முலாவுகின்ற கடலொலியுமல்ல. வாடைகிழ்க்காற்றின் முழக்கமுமல்ல கெடிவீரசிங்கக் கிரீடி கைக்கொண்ட காண்டீபக்கிண்கிணி நாணோசைபோற் காணுகிறது. கவனமாகக் காதுகொடுத்துகேளுங்கள் நீதனுகவொட்டாமற் திசைகளைப்பாருங்கள். சிந்தையும்எண்ணமுஞ் சிதறுமலுய்த் துணருங்கள் பார்த்திபன் சதியைப் பதறுமற்பாருங்களென்று, வடகிழக்குமூலையிற் கண்வைத்து, ஏதேது இதற்குள் அர்ச்சுனன் இவ்வளவுதூரங் கடந்துபோவானு? இப்போதுதானே நாம்பார்த்தோம். மேற்குத்திக்கில் வெகுதூரம்போனுனே யென்று, ஒருவருக்கொருவர் வாதுகொடுத்து நான்குபக்கமுங் காதுகொடுத்திருந்தார்கள.

அப்போது, பசுமந்தையையும்-பாம்புக்கொடியுடைய பார்த்திபனையும் சேனைகளுடன் மடக்கிய செஞ்சிலைவீரச் சேவகனுனவன் தனக்குத்தானே யோசிக்கத்தொடங்கினுன, அதென்ன வென்றால், நாமின்னுஞ் சற்றுநேரந் தாழ்ந்துவருவமாகில், மாட்டுமந்தைகளுடன்மன்னனுஞ் சேனையும் அஸ்தினுபுரத்தின எல்லைபோ யண்வார்கள். அவர்களந்த எல்லையை மிதித்துவிட்டால், அப்பால், நாம் அபசெயமடைந்து திரும்பியது போலாம், பிராணன்வைத் திருக்கவேண்டிய பெருமையிராது, ஏதோ, தெய்வாநுகூலத்தினுலும் பெரியவர்களைப்பூசைபண்ணிய பூஜாபலத்தினுலும் துரியோதனன் பசுமந்தையுடன் அகப்பட்டுககொண்டான், மேற்படையோ சமீபத்திலிருக்கின்றது, நமது வில்லோசை கேட்டவுடனே வீஷ்டுமர்-அஸ்வத்தாமர்முதலிய பல்லோருமவந்து கவிந்துகொள்வார்கள், இப்பால், மிகுந்த பிரயாசத்துடன் பசுமந்தகளை மீட்கவேண்டிவரும், ஆகையால், முன்னே மாட்டைமடக்கி மச்சநாட்டுக் கனுப்பிவிட்டு, அப்புறம் வருகிறவர்களுடன் போராடுவது உத்தமமென்றுன்னிக், காண்டீபத்திற்கணைதொட்டுப், பொருப்புமுதற்பூமியெல்லாம் நெருப்புமழைபொழிவித்துத், திக்குமுக்காடச்செய்து, திசாதிசைகளனைத்துஞ் சின்னுபின்னப்படுத்திவிட்டான், அவனுடைய தீரதீவிரத்தைத் தேவர்கள்கண்டு, திக்கென்றேறுதுங்கிப், பக்கென்றெழுந்து, இனிக்காரியமில்லை, இந்தப்பூமியில், பலிகொடுப் பதற்கெண்ணிச் சேனைகளைக்கூட்டிவந்தான்துரியோதனனென்று அவனை நிந்தித்து, ஐயோ, தெய்வமே! தீவினையேயென்று கரந்து, எவ்விதத்திலுஞ் சவ்வியசாசி பந்தித்துவென்று விடுவானென்று, சிந்தித்துப் பார்த்திருந்தார்கள்.

அக்காலையில், விஜயனுடையவில்லோசையும்நாணொசையும்-தேவதத்தமுழக்கமும்-தேரோடுமொலியுங்குதிரைகள் அநுமானிக்கும்பழக்கமும் சாரதியினையும வழக்கமும், அநுமக்கொடியாடுகின்றபட படாகாரமும்-அஸ்திரங்களோடுகின்றசிடசிடாகாரமும் - போராடுமிடங்கள்தோறும்புறப்படுமொலியும் வீரர்கள்மாருடும்வலியும் புவனமூன்றும் பயங்கொள்ள வயம்பெறும்-ஜெயசிங்கம் வருகிற வழியில், திரளாகக்கூடியயானைக்கும்புகள்போல், துரியோதனனைச் சேர்ந்த சேனைகளும் வெற்றி வாளேந்திய வீரர்களும்பொங்கித் தங்களாற்கூடியமட்டும் போராடி, விஜயனுக்கெதிர் நிற்கமாட்டாமல், தலைநாணிப் புறங்கொடுத் தோடினார்கள், அச்சமயத்தில், அர்ச்சுனன்தொடுத்த அனல்முனைக் கணையானது கொதித்தெரிந்து கோபித்துவிழுந்துகுதிரையைத்தவித்துயானையைமுறித்துக் கொடிமுடிமன்னரைக் குறைத்துக் குலாவியுலாவித்திரியுங் கொடுமையைத் தேவேந் திரனும் தேவர் களும் - மூவர்களும் - குபேரன் முதலாகிய யக்ஷர் களும் பார்த்துக் கிரீடியைக் கொண்டாடி ஒப்புச்சொல்லுவதற்கு உவமைதேடினார்கள். பின்னும் புகழ்ந்துமகிழ்ந்து ஆநந்தவெள்ளத்திற்குளித்து ஆனசமேவிடக்களித்து ஆடினார்கள். அர்ச்சுனனேவிய அக்கினிபாணத்தின் ப்ரசண்டவேகக்காற்றினுல் பாதலமுமீதல,

முழங்கு பூதலமும் பஞ்சுபஞ்சென்னப் பறந்தது. சுயோதனுதியர் முதலியயாவரும் நெஞ்சுலர்ந்துநாவறண்டு நாபிவரையிலும்புகைந்து வாடாதும்நாடி இதென்ன! அக்கினிநக்ஷத்திரவுதயமோ? அல்லது ஆலாலஞ் சேகரித்த புகையலோ? வடவைத்தீயின அம்பாரமோ?வாடைக்காற்றின் வன்மையோவென்று அவர்களன்று பட்டபாட்டை நானென்னென்று சொல்லுவேன்? நான்கு வகைசாதிகளையும் நால்வகைப்படையையும் - சுயோதனுதியனையும்-உயிருடன் சுடும்போது சும்மாவிருப்பாருமுண்டோ? ஐயா? ஜெனமேஜெய மஹாராஜனே! இந்தப்பிரகாரம், நானேவிய அக்கினிபாணத்தால்படைநான்கும்-மண்ணேடுமண்ணாய்ப் படிந்துபதறிப்பெதறிச்சிதறிப் பிரிந்து பலம்மாய்ந்து சிலர்தேய்ந்து படையோய்ந்துபோன பக்குவத்தை உத்தரகுமாரனறிந்து காவற்கட்டுக்குட்பட்டிருந்த தங்களிடையனைநோக்கிஓகோ? கோவலர்களே! உமக்கு யாதொரு தடையுமில்லை உங்களோடெதிர்க்கப் படையுமில்லை நீங்கள் உற்சாகத்துடன் வச்சலங்களை யோட்டிக்கொண்டு, ஊர்போய்ச்சேருங்களென்று உரக்கக்கூவி இருகரங்களையும்வீசி வருங்களென்றும் போங்கள் போங்களென்று சொல்லினன்.

அப்போதுதங்கள்ராஜகுமாரன்கூறிய இனியவார்த்தையைத்தனிமையாய்ச்சஞ்சலப் பட்டுக்கொண்டிருந்த சகல யாதவருங்கேட்டுச் சம்பிரமங்கொண்டாடிநமது இளஞ்சிங்கமே யுத்தஞ்செய்ய எற்பட்டுப் புறப்பட்டபடியால் கௌரவகுலச் சேனைகளை எங்குமில்லாமற் சங்கரிப்பார் நாமுங் கெலிக்கலாமென்று பெரங்காரத்துடன் ஓங்காரமிட்டு அகமகிழ்ந்துமுகமலர்ந்து முனைகலந்து கலகலென்று மணிமுழங்கு பசுவடர்ந்துநின்ற இடமடைந்து ஊலெனறுவாய்குவித்துஊதி புள்ளாங்குழலிசையையுஞ் சவுக்கினுசையையும் வழக்கப்படிகாட்டினார்கள்.

இடையர்களுடையகுறிப்போசையைக்கேட்டகாட்டுப்பசுக்களும்-நாட்டுப்பசுக்களும்- தலையெடுத்துப்பார்த்து வாலெடுத்துக் காலசைத்து உடல்குலுக்கிக் கொம்புகளைத்தாழ்த்தித் தங்களைக் கிடைகட்டியிருந்தமச்சநாட்டெல்லையைக்குறித்து இறுமாந்து நெறித்துச்சேனைக்கும்புக எல்லையுறுத்தது அம்பரமுழுதுந்தும்புகளடையக் கம்பளத்தாயர் கலந்துபின்னடையப் பம்பரமென்னச்சுழன்று கும்மாளமிட்டு மானினந் தாவுதல்போற் குதித்து வண்டெனப்பறந்து செண்டெனவெழுந்து கண்டவர்கலங்க மண்டலமயங்கச் செந்தாள்-கருந்தாள்-வெண்டோள்பறக்கத் திசைதடுமாறி வசுக்களுமோடத்திசைகடல்வறள யானைகள்கதறச்சேனைகள்பதற அரைக்கணப்பொழுதில் திரும்பிய பசுக்களைத் துரியோதனனும் அவனுடன்கலந்துவந்த தேசராஜ வீரபூபாலர்களும் கோபாலர்களும் திக்குவேறில்லாமல் வருந்திமடக்கிவந்த பசுவை விடப்படாதென்று மானப் போர்வை பூண்டுவந்து வல்லமையுள்ளனவெல்லாங் காட்டி மனநொந்து தங்களாலாகாமல் காய்ந்துருகி சடப்படங்கிய நெய்போல் வாயடங்கிமடங்கினார்கள் மச்சராஜனுடைய கோபாலர் இக்கசமேற்கொண்டு உருகி ஓசையடங்கிப் போனநெய்யில் ஒருதுளிப் பால் தெறித்ததைப் போல் சளசளவென்று உரத்துக்கூவி எதிரிகைக் கொண்டுபோனவெங்கள்மந்தையை மீட்டிபெற்றோமென்று,எங்கும்பிரகாசிக்கத்தாவி,எந்நாளும்பெறக்கூடாத செயத்தை இந்நாளடைந்தோமென்று இறைவனைப்புகழ்ந்து, மந்தையைவிடாமற் றொடர்ந்துவந்தார்கள்.

அர்ச்சுன்ராஜன் - பசுநிரைகளுக்குச் சரக்கூடமமைத்துவிராடபுரத்திற்கனுப்புதல்.

இவ்வாறு, புள்ளாங்குழற் றொனியாலும், கண்டத்தொனியாலும், கால்வீசியோடும் பசுக்கள்- பசும்பொற்குடம்போன்ற மடியுடைய கபிலைகள் பருவக்கன்றுகளுள்ள கோமளங்கள் - சூற்கொண்ட காமிகள் - சூற்படாதகடாரிகள்- இளமையானவிடைகள்-முதிர்ந்தவிருஷபங்கள்- கட்டுப்படாக்காலிகள்-கறுப்பு-வெளுப்பு- சிவப்பு-கலப்பு - இவைமுதலான பலவர்ணப்பசுக்களும் துரியோதனன்சென்ற விடந்தொடங்கி வீஷ்டுமர்-துரோணர்-முதலியோர்கள் அணிவகுத்துநின்ற இடம்வரைக்கும் காலாற்சிலரை யெறிந்துமிதித்து, வாலாற்பலரை யடித்துமடித்து, உடலாற்சிலரை யுராஞ்சியிடித்துக் கொம்பாற்பலரைக் குத்திவிழுத்திக், கோலாகலமாய்க் கும்பலைக்கலைத்து, அம்புபோற்பறிந்து நேருக்குநேராய் நிரைநிரையாய்ப் பாய்ந்துபோகின்ற பசுமந்தையைப் பார்த்தன்பார்த்து வீஷ்டுமர் முதலியோரும் மாடுகள்போகின்ற மார்க்கத்தில் படைவைத்துக்கொண்டிருக்கின்றபடியால், ஒருவேளையிந்தப்பசுமந்தைகளைமடக்கட்டும். நாம் இந்தப்பசுவுடன் கூடப்போய் மச்சநாட்டில்விட்டுவரலாமென்று நினைத்தால், விபற்சுவந்தான், எங்களைமயக்கவைத்து, மாட்டையோட்டிக்கொண்டு போய்விட்டான். சண்டைசெய்து வெற்றிகொண்டு போனவனல்லவென்று, பல்லோரிடத்திலும் பழிப்பாய்ச் சொல்லிக்கொள்வார்கள். மேலும், நாம்போய்த் திரும்பிவருவதற்குமுன்னே துரியோதனன் தப்பிப்பிழைத்தேனென்று, அஸ்தினாபுரத்திற்குப் போய்விடுவான்போலுந்தோன்றுகிறது. ஐயோ? அவனைக்காணவும் அவனுடன் ஆசையாய்ப்பேசவும் அவசரப்பட்டு, பதின்மூன்றுவருடங்கழித்து ஓடிவந்தேனே. ஆகையால், நாம் இவனைவிட்டுப் போகலாகாது. வேறுவகையான காவல்செய்யவேண்டுமென்றெண்ணி, விஜயகாண்டீபத்தில், சோனைமேகம்பொழிவதுபோல், பாணப்பிரயோகம் பண்ணிப், பசுமந்தைக் கிருபாலும் அண்டச்சுவருங் கொப்பாகச்சரக்கூடவேலியமைத்து, மந்திரமென்னுங் கட்டுகளிட்டு வைராக்கியமாகியமகாபுருஷனையு நிறுத்தினன். அந்தப்படியே யாதொரு ஆக்ஷேபனையுமில்லாமல், நிரந்தரமங்களதுரந்தரபுரந்தரனுகியவிராடராஜனதுமச்சநாட்டில் இதுவரையிலும் வசித்திருந்த வனங்களிற்போய்ச்சேர்ந்தது. என்னைக்கொண்ட உயிர்மீண்டவாறுபோல்பசை

வர்மடக்கிய பசுக்கணம்வந்ததை அந்நாட்டிலுள்ள பலரும் பார்த்து, ஜெயஞ்ஜெயமென்று, சிந்தைமகிழ்ந்து, பத்திரமாகப் பசுமந்தையைப் பாதுகாத்துக் கொண்டிருந்தார்கள்.

இப்பால், வணங்காமுடிமன்னனும் தாங்கள் வகுத்தனுப்பிய சேனைகளுஞ்சாய்த்துக்கொண்டுபோன பசுக்கணங்களுங்கோபாலர்களுந்தங்களுக்குநேரிற்போராடியூரிலோடியவிதத்தைத், தேரிலேறியிருந்தசிலைக்குருவாகிய துரோணாச்சாரியரும்- வீஷ்மர்- கிருபாச்சாரியரும்- அஸ்வத்தாமா- கர்னன் - சகுனி - சாள்வன் - விகர்னன் - துச்சாதனன் - முதலியபேரும் பாத்து, சரிதான், நாம் ஆலோசனைபண்ணிப் பசுநிரைகளையும்பார்த்திபனையும் அஸ்தினபுரத்திற்கு முன்னடி அனுப்பிவைத்த உளவை அர்ச்சுனன் எப்படியோ அறிந்துகொண்டு இங்கிருந்த நம்மெல்லோருக்கும்இன்பமுண்டாகும்படியாய் அம்புகளைவிடுத்து அசரப்படுத்திச் சாரதியுந்தானுந் தேரூர்ந்துசென்று, சமர்த்தாகவென்று, மாட்டையுஞ்சேனையையும்மன்னனையுமடக்கிவிட்டான் நாம் எண்ணிய எண்ணங்கைகூடவில்லை. (பண்ணியபயிரிற் புண்ணியந் தெரியுமென்பதுபோல்) அவனெண்ணிய வண்ணம், இசைவாக்கிக்கொண்டான் இவ்விடத்திற்குகூட்டமான நமக்குஇனிமேலென்ன ஆட்டபாட்டமிருக்கிறது அவன்நம்முடனெதிர்த்தால், நாமெடுப்பது ஓட்டமோட்டமேயென்று ஓரோட்டமாய் மனநொந்துஉறங்கினார்கள்.

இங்ஙனம், சிலைவிஜயனானவன் ருத்திராம்ஸமுண்டாய்அளக்கணத்தில்கிலாக்கணத்தைமீட்டிச் சக்கூடங்கட்டிப் பெருக்கவிடுத்த அண்மைப்படிக்கு வடகிழக்குமூலையிலிருந்து, தென்மேற்குமூலையில் மாடுகள்போய்ச்சேர்ந்த வாறுணர்ந்து, மனமகிழ்ந்து, நல்லது, இராஜாதிராஜனெங்கே, அவனேறிச்சிறக்குந் தேரெங்கே, அத்தேரிற்பறக்கும் பாம்புக்கொடியெங்கே! என்று, எட்டுத்திசையும் மட்டிட்டுப் பார்த்து வரும்போது, ஆனினங்களை முன்னாக்கிச், சேனைக்கணங்களைப் பின்னாக்கி,முடுக்காய்ச்சென்ற துரியோதனராஜன் அர்ச்சுனன்தெறித்த விற்குணத்தாலும் வாய்வைத்து முழக்கிய சங்குநாதத்தாலும்-பாணக்குழாத்தாலும்வீரர்படும்பாட்டாலும் சேனைகெடுங்கேட்டாலும் வெருண்டுஅலமருண்டுபுத்திபுரண்டு கண்கலங்கி ஒருபுறமொதுங்கி நெறிமயங்கியொடுங்கி நின்றுவிட்டான்.

இவ்விதமாகிய துரியோதன்ராஜனைச் சவ்வியசாசி கண்டு,கண்கள்சிவந்து,முகஞ்சுளித்து, பற்கடித்து,மீசை துடித்து,வியர்வுபொடித்து வெகுளிமேற்கொண்டு,எத்திசையிலும்பிரசித்தனானஉத்தரகுமாரனைப்பார்த்துஒருஉத்தரஞ்சொல்லலுற்றன. வெற்றிபெற்றவேலாயுதம்பற்றிய விராடகுமாரனே நம்முடைய ரதத்தைக்கண்டு,பயங்கொண்டு, தனதுபடைகளையும் கன்றுந்தாயுந்தன் நிரப்ப சுக்கூட்டங்களையும் விண்டு, தானுந் தலையிரக்கங்கொண்டு, இந்நிலத்தைவிட்டகன்று, அதோ ஒருமாத்திணிழலில் ஐம்பொறியடக்கியஆமைபோலிருப்பவன்கௌரவகுலாதிபனான துரியோதனமகாராஜன் அவனண்டையில்,நமது தேரைக்கொண்டுபோய் நிறுத்துவையாகில், அல்பமிருகத்தைகொல்லப்பமாயழிக்கும் ஆண்சிங்கம்போல், அவனுதிரத்தை என்பாணத்திற்கு ஆகுதிகொடுக்கிறேனென்று நமடுகடித்து, உடலந்துடித்து, குறிப்பினாற் றெரியப்படுத்தினான். அர்ச்சுனனுரைத்தவார்த்தையைக்கருங்குவளைமலர்ந்து நிறைந்தவாவிசெறிந்த கழனிகள் சூழ்ந்த மச்சநாட்டிறைவன்மைந்தனான உத்தரகுமாரன்கேட்டுமனோவேகமும்-வாயுவேகமும்மட்டென்றுரைக்கத்தக்கதாகத் தன்தேரைவிடுத்து, துரியோதனனுடைய சேனையைத்தடுத்து, அவன்தேரையடுத்து, தன்தேர்க் குதிரைகளின் முன்னங்காலை அவன்தேர்க் குதிரைகளின் தலைமே லேற்றுவித்தான்.

அந்தவேளையில், சந்தேகங்கொண்டு சலிப்பாயிருந்த வீஷ்மர் துரோணாச்சாரியார்முதலியமேன்மைவீரர்மாடுகள்திரும்பிவிட்ட மார்க்கத்தினாலும்,சங்கத்தொனியில் நாரித்தொனி சரமாரித்தொனிகேட்டதன்மையினாலும் செவ்வையாய்க் காரியபாவந்தெரிந்து கொண்டு, ஓகோ? மிஞ்சிப்போச்சுது. அஸ்தினபுரத்தைநோக்கி, ஆனினங்களுடன்போன நமதரசனைப் போர்முகப்புலியான புருஷன் மடக்கிக்கொண்டான், இவ்விடத்திலிருந்த நம்மையேங்கவைத்து சிங்கமானது நரியடி தேடிச்செல்லுமாறுபோல், மேற்குமுகத்திற் போக்குக்காட்டி கிழக்குமுகம்வந்து கிட்டிவிட்டான். இவன் எந்தவழிவந்தானோ, அந்தரவாசிகளாகிய அமரர்கள் இவனுக்கு உளவாயிருப்பார்களோ, வணங்காமுடியோன் சென்றமார்க்கம் இவனுக்கெப்படி தெரியும், என்னமாயறிவான்? இத்தனைபேர்களின் கண்களுக்குத் தெரியாமல்,இவனெப்படி தேருந்திப்போனான்? அவன் மனசுக்குத் தகுந்தாப்போல் சாரதியுங்குதிரையுஞ் சமைந்ததே. ஆகிறகாலத்தில், எல்லாம் அடுக்காய் அமையச்செய்யும் நல்வினையை யாரும் புகழ்ந்தேற்றுவார்கள். ஆதலால், நாம் சும்மாவிருக்கப்போகாது இந்நேரம் நமதுமன்னன் என்னகெதி யானானோதெரியாது. இப்படியே நாமெல்லோரும் பிரியாதுசென்று, துரியோதனனுக்கு உபபலமாக நின்று, அபாயநேரிடாமல், அர்ச்சுனனைவென்று, மறுபடியும் விராடபுரத்தைத் திரும்பிப்பாராமல் ஊர்போ

ய்ச்சேரவேண்டுமென்று உள்ளத்துறுதியாய்க்கொண்டு,
தாங்களிருந்தஇடத்தைவிட்டுநீங்கிவச்சிரயூகம்- பத்மயூ
கம்- அர்த்தசந்திரயூகம்-இவைமுதலிய அணியைக் கலைத்
துப்போட்டுஅவசரப்பட்டுமந்தமாருதமும்பிந்திப்போ
ம்படியாய்முந்திநால்வகைச்சேனைகளுடன் ஓடிவந்தார்க
ள் ஐயா? ஜெனமேஜெயமகாராஜனே இவர்களெவ்வளவு
வேகமாய்த்தேர்செலுத்திவந்தாலும் கந்தனந்தனமை
த்துனன் இந்திரனமைந்தனுந்திய சயந்தனவேகத்திற்கி
ணையில்லையென் றியம்பத்தக்கதாம்ஆதலால்,அர்ச்சுனன்
தேரைத் துரியோதனனிடத்திற்றிருப்பி, தான்பேசவே
ண்டியவரைக்கும் பேசித்தன்மனம்வெறுத்துத்திரும்பப்
போகிறசமயத்தில் இந்தவீஷ்மர்முதலியபேர்கள் தேர்
வந்துகூடுவதை இனிப்பேசப்போகின்ற கதையினற்தெ
ரிந்துகொள்வீரென்று வைசம்பாயனர் சொல்லினார்.

அர்ச்சுனன்-துரியோதனனுடன்பேசுவது.

அர்ச்சுனன்தேரானது அரவக்கொடியோனுடைய
தேரை நாடியோடிச்சென்றுகண்டது அவனெப்படியிரு
ந்தானென்றால், பெருக்கமானவெள்ளங்குறுகிச், சுருக்க
மாயோடுஞ் சோர்வைப்போல் குதிரைகள்நடையோய்ந்
துசாரதியொருபுறஞ்சாய்ந்துதானும் மாய்ந்தான்போலி
ருந்தமன்னனுக்கு நேரிற்சென்ற அர்ச்சுனனனவன் துரி
யோதனனுடைய முகத்தைப்பார்த்துப்பேசவேண்டுமெ
ன்று.ஆசைகொண்டு நோக்கினன் அப்போது சுயோதன
னுடையமுகம்அர்ச்சுனனுக்குத்தெரியவொட்டாமல் அ
வன்தேரிலிருந்தசாரதியும் அந்தரதத்திற்கட்டிய நான்கு
அஸ்வங்களும்-தடையாயிருந்தமையால்,இடிபொன்றவடி
க்கணையெடுத்து,அபிமந்திரித்து விடுத்து.சாரதியையும்-
குதிரைகளையும்போக்கிவெட்டாரவெளியாக்கி இந்திரப்
பிரஸ்தத்தில் இராஜபோகத்திலிருந்த ஐவர்களையழை
த்துப் பொய்ச்சூதுடைய சகுனியைச்சேர்த்து இக்கட்
டான சொக்கட்டாடி. வஞ்சகினைப்பினல் நாக்குவரு
ந்தப்பேசி, அவர்களினது ஐஸ்வரியமுதலியயாவும் ஒன்
றொழியாமல், ஒருங்கே கைக்கொண்டு கொஞ்சமேனும்
நெஞ்சிரக்கமில்லாமல்வனவாசம்பண்ணவிட்டபஞ்சமா
பாதகனகிய பாம்புக்கொடியோனை சங்கடப் படாமல்
தாராளமாய் எதிராகப் பார்த்து? சற்றே நகைத்தான்.
அதுகாலையில், துரியோதன னுடைய சாரதியுங் - கு
திரைகளுங் - தலைசாய்ந்து போனவுடனே உத்தரகுமா
ரன் கைப்பிடித்த கடிவாளத்தை உலுக்கி பினனுக்கி
முத்து முன்னுக்கு முடுக்கி குதிரையை ஓடியடித்
தான். எக்காலத்தும் அடிபடாக் குதிரைகள் உடம்புசி
லிர்த்து, ஓவென் றிரைந்து, கருளித்துவிரைந்து கலினத்
தைத் தடாரித்து கைக்கடங்காமல் கால்மீறியெழுந்து
துரியோதன மகாராஜனுடைய தேர்த்தட்டின்மேற் கா
லூன்றிநின்றது. தேரும் தேரும் முட்டியபோது, சில
விஜயன்தேரிற்கட்டிய அநுமத்துவஜமும் துரியோதன
ன்தேரில் நாட்டிய அரவத்துவஜமும் காற்றினலாடிகடு
கடுப்பாயூடி ஒன்றினேடொன்று துன்னிப்பின்னிப் ப
டபடாகாரமாய் அடிபட்டூடிபட் டடைப்பட் டுடைபட்டு
றிபட் டொடிபட் டுடைபட்டு உடனேவிடுபட்டுக் கோ
பமேலிட்டு, அண்டமும் அகண்டமும் அதிரும்படிவா
ய்விட்டு அநுமக்கொடியானது அரவக்கொடியைப் பா
ர்த்து, சிலவார்த்தைகள் சொல்லியதுபோலுமென்று பு
ராணீகர்கற்பித்தருளினர்.

அஃதென்னயோவெனின், என்தந்தையான வா
யுதேவனுக்கும் உன்தந்தையான ஆதிசேஷனுக்கும் பல
த்தைக்குறித்து, நீ சிறியவன், நான் பெரியவனென்று
பேச்சுவிளைந்து, இவருடைய திடத்தை பெவர்களுங்
காணும்படியாய் மகமேருவின் அடிமுதல் முடிவரைக
கும் ஆயிரஞ்சுற்றுக ஆதிசேடன்வளைந்து, தன வல்ல
மையைக் காட்டியபோது, என்தகப்பனான வாயுதேவ
ன் இரைந்துவிரைந்து தன்னாற்கூடியமட்டுஞ் சாதித்து
உங்களவனனசேடன் பெதறிக் கதறிச் சிதறிப் பதறிப்
போகப்பாட்டி அந்தமேருவின் சிகரத்தில் மூன்றுமுடி
யை வாரிக்கொண்டுபோய்ச் சமுத்திர கதியாக்கித் தன்
னன்மையைநிலைகாட்டி, ஜெயங்கொண்டான். அன்று
முதலின்றளவும் பாம்பினங்களுக்கும் வாயுவினங்களுக்
கும் பகை விளைந்திருக்கின்றது, அதுபற்றி நானந்தவா
யுதேவனுடைய மைந்தனுகையால். பூர்வம் நடந்த பொ
ல்லாங்கைப்பாராட்டி, உன்னை வெல்லாமலுங் கொல்
லாமலும், விடுவதில்லை யென்று மேல்விழுந்து, துரி
யோதனன் பாம்புக்கொடியைப் படாதபாடும் படுத்தி
அர்ச்சுனன துவஜத்தில் ஆஞ்சநேயர்வந்து நர்த்தனம்ப
ண்ணினர், மேலும்காண்டாவனதகனநிமித்தம்அக்கினி
தேவன்இந்த அநுமக்கொடியை அர்ச்சுனனுக்குஅளித்த
காலத்தில், ஆஞ்சநேயர்பிரசன்னமாய் இராவண கும்ப
கர்ணாதிமுதலிய மூலபலங்களையெல்லாமுடித்து தாயா
கிய சீதைக்குத்திருவாழிகொடுத்து, தந்தையரான்ஸ்ரீரா
ம லட்சுமணரையும் தனதோளிலெடுத்து, அவர்களுடை
ய திருவடியை அடுத்து.பட்டாபிஷேக சம்பிரமப்பாக்
கியங்களையும் பார்த்த கண்களால் இந்தப் பஞ்சையான
போரையும்பார்க்கும்படிக் கமைத்ததோ வென்று பரத
வித்தபோது, அக்கினிதேவன் அருட்கண்ணேக்கி அடி
யேனிமித்தம் அமர்ந்தருள வேண்டுமென் றறைய, அவ்
வாறே நல்லதென் றமர்ந்த அநுமாரானவர், துரியோத
னனுடைய சேனைக்கடலைக் கலக்கிக்கடக்கவும் விஜயவி

ரியன் செயம்படைக்கவும் உதயகிரியிலெழுந்த சூரியன் போல், கோபச்சுடர்விரித்துக் கூசாமலெரித்துக் கோர தந்தந்தெறித்துக் குறுகுறுத்ததிர்த்து உண்மையாய் அர்ச்சுனனுடைய தேர்க்கொடியாடையில் அநுமார்வந்து பிரசன்னமானார்

இப்பால், வேடன்கையில் அகப்படாமல் விடுபட்டுப்போன மிருகம் மீண்டும் அகப்பட்டவாறுபோல், அர்ச்சுனன்கையிற் சிக்கிக்கொண்ட அரவக் கொடியோன் இடிமுழக்கங்கேட்ட உரகம்போலேங்கித், தானிருக்குநிலைதெரியாமல். மயங்கியொடுங்கினான். அர்ச்சுனன் அவனைப்பார்த்துச் சிலவார்த்தைசொல்லத்தொடங்கினான்.

ஆ, வணங்காமுடிபெற்ற மன்னனே ? நீ எங்கே ஓடுகின்றாய், ஏன்வாடுகின்றாய், ஓடவேண்டிய அவசரமென்ன? ஐயோ, உன்கையிற் பருத்தவில்லும் பக்குவமான அஸ்திரங்களும், போதுமான பலமிருக்கப், புண்ணியவான்களாகிய பெரியோர்கள் பக்கத்துணையாகவிருக்க வேண்டியமட்டுந் தனங்களிருக்கத், தம்பிமார்களும்வவலாளிகளும் - ஏழுகடல் சூழ்ந்த பூமியும் மாயச்சூதாடுமாமனும்மகாபிரபலனாகியகர்னனுமிருக்க. போர்முனைகண்டு, நீயும் புறமிட்டோடநினைத்து வாயைத்திறவாமல், மயங்கிப் பேய்போலோடிப்போவது திறனோ? நல்லகாரியம், நீ இப்படியே அஸ்தினாபுரம்போய்ச் சார்ந்தாலும், வீரபட்டமும்சிந்தூரப்பொட்டுமிட்ட பட்டத்து யானைமீதேறிப் பவனிவரும் இராஜவீதியில், உன்னைப் பார்ப்பதற்கு ஓடிவாநின்ற பொற்பாவையைப் போன்ற கச்சணிந்த கனதனமாதர்களுங் கன்னியர்களுங்கண்டு இச்சகத்தையாண்ட துரியோதனராஜன்பித்தன்பித்தனென்று. இகழ்ந்துபேசிச் சிரிப்பார்களே நீ போகலாமோ இதன்றியும், சோடசகலைநிறைந்த மதியம்போ விலங்கிய சுவேத க்ஷத்திரமென்னும், வெள்ளைக்குடைபிடிக்க. இருபக்கத்திலும் பால்நுரைபோன்ற சாமரைவீச, வந்தியர்சூழ்ந்து வாழ்த்திப்புகழச், சிந்தை களிக்கச் சிங்காசனமேறிப் பரராஜர்வந்து அடிமேற் பணியத், தவராஜரும்வந்து ஆசீர்வதிக்க. மித்ரபுத்ரபந்துவுடன் கூடிவாழ்கின்ற வேந்தர் வேந்தனென்னும் லோகாதிபதியாகிய நீ-சண்டைமுகத்தைக் கண்டு. பெண்டுகள்போல் ஓடுவது தீரத்துவமோ? நீ இப்போதென்னிடத்தில், தனித்தகப்பட்டாய் உன்னையும் உன்சகோதரர்களையும் ஒருகணப்போதில், என்கணைகளினாலே சல்லடைக்கண்களாகத் துளைத்து அவற்றிற்கு இரையாக்கி விடுவேன். ஆனால், சிங்கக்கொடிக் கதிபனாகிய என்தமயன் வீமசேனன் உங்கள் நூற்றுவரையுங் கொல்வேனென்று, இராஜசபையிற்சொல்லியசபதம்வீணாய்ப்போமேயென்று, உன்வாணாளைவிடுத்தேன். பகற்பொழுதை விளக்கிய பானு அஸ்தமிக்கிறவரைக்கும் பார்த்திருந்து, முறையிற்பிரகாசிக்கவருஞ் சந்திரன்போல், எங்களைக்காட்டிலோட்டிவிட்டு, நீங்கள் நாட்டிலிருந்து, நல்லபாக்கியங்களை அநுபவித்துக், காலந்தப்பாமற்புசித்து, ஆக்கினைச்சக்கரஞ்செலுத்தி அரசாக்ஷி செய்துவந்தீர்கள். மறுபடியும், விடியற்காலத்தில், அந்தச் சந்திரனொளியைத் தவிர்த்துத் தானே பிரபுத்துவஞ் செய்யவந்த சூரியனைப்போல், நாங்கள் வெளிப்பட்டோம். சங்கினங்கள்தவழும் வயல்கள்சூழ்ந்த கங்கைவளநாடனாகிய வீமசேன மகாராஜன் கையினால் தாமிசமின்றி, நாளைக்கே உங்களைக் களப்பலி யூட்டிவைக்கப்போகின்றோம், மேலும், வீமசேனனுடைய சபதந்தப்பினாலுந் தப்பட்டும். பாவியான உன்னைப்பார்த்துங் கொல்லாமல்விட லாகாதென்று, கடுங்கோபம் எனக்குண்டாயிருந்தபோதிலும் இரப்பவர்கள்-யுத்தத்திலிளைத்தவர்கள்- புறங்கொடுத்தோடினவர்கள்-வில்லைப்போட்டுப் புல்லைக்கவ்வினவர்கள்- குழந்தைப்பருவமுடையஇளையவர்கள்- இயாவரும்புகழுங் கவிராஜர்கள்-தவராஜர்கள்-தூதுவர்கள்-நோயாளிகள்-விருத்தர்கள்-பிரமங்கியானமுள்ள பிராமணர்கள்-ஸ்திரீகள்- இவர்களைச்சொல்வது மகாபாவமென்று பெரியோர்கள் பேசியிருக்கின்றார்கள். அந்தத்தர்மம் என்னைப் பிசகவொட்டாமற் றடுக்கின்றது, அதனால், இப்போது இளைத்து ஓடிப்போனா உன்னை நானென்னசெய்வேன்? அவர்கள்கூறிய நீதிவாக்கியத்தைநினைத்து நான் உன்னுயிரைத் தப்பவிட்டேன். அடாவஞ்சகனே, பாவபுண்ணியத்தை எண்ணிப்பாராத பொய்யனே? நீ-யெண்ணிய எண்ணம் சித்திக்குமென் றிருந்தையோ? வனவாசஞ் சென்ற பாண்டவர்கள் மறுபடியுந்திரும்பி வரமாட்டார்களென்னுமதியோ, இனியெப்படிஉன தலைவிதியோ? (வாழ்வாரைப்போலுந் தாழ்வார் - தாழ்வாரைப்போலும்வாழ்வார்) இதைச்சற்றேனும் உன் மனத்தில் வைக்காமற்போனதென்ன, ஊழோ? (சமர்த்திற்குண்டு பாயுமோ) சதுராயிருக்கின்றோமென் றெண்ணப்போகாது, தருமத்திற்கொருநாளும் பிசகுவராது. தானென்னுங்கருவம் நிலைநில்லாது. ஐயையோ! அதுபொல்லாது, சொல்லாதுபோகின்ற தூர்த்தனே யென்று இன்னம் பலவாறாக இழியக்குத்தினான். இவ்வா றிகழ்ந்துபேசியபோது, துரியோதனராஜன் எதிர்ப்பேச்சு பேசாமல், சோப மேற்கொண்டு ஆபத்துவேளையிதுவென்று மனத்தாபத்துடனிருந்தான். அவன், இவ்விடத்தி லிவ்வா றிருக்கும்போது, இந்தமுகநோக்கித் திரும்பிய வேதக்கொடியுடைய துரோணச்சாரியர் கிருபாச்சாரியர்-அஸ்வத்தாமர்-வீஷ்

டுமர்-கற்பகக்காவைப்போல், ஆற்புதமாகக் கொடுக்கும் கர்னராஜன்-சகுனி-சயிந்தவன்-விகர்னன்-துச்சாதனன் சாளவன்முதலிய சாமார்த்தியவான்களும் - சற்பக்கொடிதரித்தமற்றுபயமகாராஜனுக்குத் துணைவந்துகூடினார்கள் அவ்வாறுவந்தவர்களில், துஸ்வாசனன்-விகர்னன்முதலியதம்பியரிற்சிலரும்-முடிவேந்தர்களிற்பலரும்- வெற்றிமாலைபணிந்தசுத்தவீரர்களும்- மாமனும்- மத்துனனும்உடல்பதறியோடிவந்து மதயானைபோற்புகுந்து நாற்றியாவட்டமாலைதரித்தராதிபனைத்தாங்கிஆதரித்துத்தேற்றினார்கள். இதற்குள்ளாகக் காரோசைகடலோசைசளப்பிப்பேரோசைஇடியோசை-முதலியவெல்லாம் ஒன்றுசேர்ந்து ஓரிடத்திற்பிறந்து முழங்கியவாறுபோல், தேரோசை-குதிரைகளின் குரலோசை- மதயானை களிறோசை-பதாதிகளிறோசைக்-வில்லோசை-நாணோசை- சங்கத்தொனி-தாரை-பூரி-சின்னமுதலிய வாத்தியவோசை - சரங்களிறோசையாகிய விவைகளெங்குமுழங்கப் படையாளர் வந்து குவிந்தார்கள். சப்தசமுத்திரம்போ லிரைந்து ஆர்ப்பரித்து இருபக்கத்திலுஞ்சவிந்த படைமன்னர்களைத் துரியோதன மகாராஜன்கண்டு சற்றுத்திடங்கொண்டு குனிந்ததலையை நிமிர்ந்துப்பார்த்தான். இவன்பார்த்தபோதே படைகளுக்கருகிலிருந்த கர்னன்நெற்றிவியர்த்து நறநறவென்று பல்லைக்கடித்து வெம்பிக்கிளம்பி வெதும்பிச்சீறிக் கனைத்துச்சினத்துத் திசாதிசைகளுந் திடுக்கிடத்திரும்பிச் சடக்கெனத் தேரைத் தடதடவென்றுமுடுக்கி மின்னுடன்மின்மினியும் - வேங்கையுடன்மானும் சிங்கத்துடன் யானையும்-சன்மலையுடன் மணற்குன்றும்-எதிர்ப்பதுபோல் கர்னராஜன் அர்ச்சுனன் தேருக்குநேர்சென்றுநின்று ஓ அர்ச்சுனா? என்முகமாகத்திரும்பு. வணங்காமுடிமன்னனாகிய துரியோதனனை வளைத்துத்தகுதியற்ற சொல்லாலிகழ்ந்து கண்டவாறு பேசுவது நியாயமல்ல. நாங்கள் யாவருமிருக்க நராதிபனை யெதிர்த்தது வீரியமுமல்ல, நீ ஏன் வீணைக் கிடந்து மயங்குகின்றாய்? இதோ! நான் உனக்குமுன் வந்திருக்கின்றேன். என்னுடன் பகைத்துப் போர் புரிவதற்கு உனக்குத் திறமுண்டாயின், இங்கே திரும்பிப்பாரொன்று போர்த்திறக்குறிப்பாற் புகன்று, அக்கினிசக்கும் பொறியும் புகையுந் திக்கென் றெழுவதுபோல், மொழிந்தான். இவ்வண்ணமாக அங்கதேசாதிபன் சொன்ன வார்த்தையை அருச்சுனன் கேட்டுக், குபீலென்று பொங்கியெழுந்த கோபாக்கினியானது கால்முதல் தலைவரைக்கும் உதிரத்தை முறித்துவிட்டதனால்; முகங்கறுத்துக்கும்பகாடகுஞ்சரத்தை மடக்கியடக்கிய யாளியானது சிங்கத்தைக்கண்டு, செறுத்துப் பாய்கின்ற செயல்போல் துரியோதனனைவிட்டு விட்டு அறைகூவி, வந்த விருந்தினனாகிய அங்கராஜனுக்கு நேரோ இரதத்தை முடுக்கி யெதிர்ந்தான்.

காண்டீபவிஜயனுக்கும் கர்னராஜனுக்குஞ் சண்டை

அர்ச்சுனன்தேரும் கர்னன்தேரும் கிட்டிநெருங்கி ஒருவரோடொருவ ரெதிர்ந்து, யுத்தஞ்செய்யப் புகுந்த காலையில் கர்னனைச்சேர்ந்த காவலர்களும்ரதகஜதுரகபதாதிகளும் கனைத்துக்கனன்று சிங்கத்தைத்துரத்திவருஞ் செங்கன்றுகள்போல், பங்கப்படாத பற்குனனைவளைந்து பற்றினார்கள். இவர்களல்லாமலும், துரியோதனன தம்பிமாராகிய சித்திராங்கதன்-விகர்னன்-சித்திரசேனன்-சங்கிராமசித்து-சித்திரவிரதன்-துன்முகன்- துர்ஜெயன்-முதலாகியவர்களும் கர்னனுக்குஉபதம்பிமாராகிய ராதைமக்களும் கர்னனைப்பின்றுக்கித்தாங்கள்முன்னுகிக் கனகனவென்றுவீசிய காலகாலாக்கினி கதித்தெழுந்தவாறுபோற்சேர்ந்து, விச்சித்திரமான வில்லைவளைத்துச் சரநாணேலியேற்றிச், சற்குருவைப்போற்றி, உடலூடுருவிப்பாய்கின்றஉயர்வடிக்கணைகளை-ஒன்பது-ஒன்பது, ஐம்பது எண்பது-நூறுநூறென்று தொடுத்துத், திக்குத்திசையெங்கும் அக்கினிமயமாக்கி, அதிசவேகமுங் கோபமுங்கொண்டு, யாருக்குமடங்காமனின்று, அமராடுவதைக் கண்டு சுப்பிரமணியக்கடவுளைநிகர்த்தசுவேதவாகனனவன் இவ்வளவுபேருக்கும் இவ்விடத்திலேயே மரணமென்றெண்ணித் திரமிகுந்த செஞ்சிலையைத் திடமொன்றுவணக்கிக், கட்டுப்படாத சரணோசை காட்டியபோது, எதிரிகளுக்குண்டாகிய இறுமாப்பழிந்து தனித்தனிப்பட்டுச், சிரமயர்ந்து, தேராகிய சயந்தனத்திற் சாய்ந்து, மறுபடியுந் தெளிந்தெழுந்து, கண்கள் சிவந்து, போரிற்புகுந்து, தேரிற்சிறந்து, சாணைபிடித்துத் தயிலதாபஞ்செய்த சரங்களை மாரிபோல்சொரிந்தார்கள் அப்பாணவருஷத்தைப்பார்த்த பார்த்தனானவன்இவர்களை யெளிதில், விடலாகாதென் றெண்ணிச், சோனாமேகஞ் சொரிவதுபோல், நானாவித அஸ்திரங்களைவிடுத்துத், துரியோதனன்தம்பியாகிய சித்திராங்கதனுடையவில்லையும் அவனேறியரதத்தையும்-அழித்து, முடியையுங் குறைத்து, உடலையுஞ் சல்லடைக்கண்ணாக்கி, அவன தம்பியான மதிபூகி, விகர்னனைப்பார்த்துப், பிறைமுகக்கணைகளினாற் பிளந்து, புறங்காட்டிப்போகக்கிளர்ந்து சித்திரசேனனென்பவனை வளைந்து, அவனேறிவந்த தேரையுமழித்து, அவன் சேனையையுமொழித்து, இடியோசைகேட்டு இளைக்கும் பாம்பைப்போற் பூமியிற்புரளவிட்டு, உடல்எங்கும் புண்ணாக்கி, மேலிட்டுவந்த சங்கிராமசித்து வென்பவனைச் சலிக்கவடித்து. அவனுடலைப்பிளி, உதிரம்பெருகவிடுத்துத், துன்முகனேடெதிர்த்துத், துரத்திவிட்டுத், துற்சயனை நோக்கி, நச்சரவக்கொடியோனுடன் பிறந்தநாசகாலர்களேயென்று நலியத்தாக்கி, நால்வகைத்தானைகளும்- நாலிலவீரர்களும் ரதகஜதுரகாதிகளும்-அதிரத-மகாரத-சமரதர்களும்- சூரியகிரணத்திற் குமுன்பனி நெருக்கம்போற்குற்றந்நாம்வாழ்ந்தவாழ்வு

இம்மட்டோவென்று சோர்ந்து, நிலத்திலாழ்ந்து சிலர்நீங்கிப் பலர்பின்வாங்கி பலங்குறைந்து அயர்ந்து போவதைக் கர்ணராஜன் கண்டு கனகோபங்கொண்டு காண்டீபனெங்கேயென்று வரும்போது, அஸ்வத்தாமா குறுக்கிட்டு, ஓ அங்கராஜனே, நீயெந்த அருச்சுனனையிகழ்ந்துபேசினையோ அந்தச்சங்கிராமவிஜயன் இவன்தான். இவனையெவ்விதத்திலும்மாட்டு, இவ்விடம்விட்டோட்டி, எங்கள்முன் நீ செயமடைந்து வரவேண்டியது அபஜயத்திற் கிடங்கொடாதே. அப்பனே? செவ்வையான ஆலோசனைசெய் உன்பேரில் வெகுநாளாய அடம்வைத்திருக்கின்றான்.

இந்தக்கீர்த்தி நீ இராஜசபையிற்பேசிய சங்கதிகளை சாங்கோபாங்கமாய்க் கோத்துவைத்திருப்பான் இதுகளினால் நீ தப்பிவருவது அருமை ஜாக்கிரதையென்றுஞ்சொன்னான், இவ்வாறு அஸ்வத்தாமன் சொன்னதைக்கேட்ட கர்ணராஜன் மனந்தாளாமல் ஓய் அஸ்வத்தாமா? நான் பிராமணச்சாதியிற் பிறந்திருந்தால் யுத்தஞ்செய்வதற்கு அஞ்சுவேன் அப்பேர்ப்பட்ட கௌசிக இனத்திற்பிறவாமல் க்ஷத்திரியகுலத்திற் பிறந்தவனாகையால் க்ஷத்திரியதருமத்தை யநுசரித்து கையில்வில்பிடித்த நான் அமருக்கஞ்சுவேனென்றுநினையாதே, இப்போதென்னுடன் எவரெதிர்த்தாலும் அவர்களுக்கு இந்தப்பூமியே சமாதியிடமாக அடக்கம்பண்ணித் திரும்புவேன். இதற்குவேறு திருஷில்லை என்பராக்கிரமத்தையும் யுத்தத்தின் அதிசயத்தையும் நீயேகண்ணாரக்கண்டு களிக்கப்போகின்றாய் பாரென்று வெற்றிக்கொடியும் வாகைமாலையுஞ் சுற்றிலுங்கட்டித் தூக்கிய கொற்றத்தேரை நெருக்கியுத்தத்திற்குக் குருகினான்.

அவ்விதமாயடுத்த சமயத்தில், இந்திரகுமாரனுடைய் ரதமுக்கிட்டியது, கர்ணராஜனுடைய ரதமும் அர்ச்சுனன்தேரில் மூட்டியது. அவ்விருவர்தேரிலும் பூட்டிய குதிரைகள் கனைக்கவும் சாரதியிருவருஞ் சப்தித்திரையவும் தேர்ச்சக்கரங்கள் கிறிச்சிட்டொலிக்கவும் சிறுமணிச்சதங்கைகள் கணகணவென்னவும் தீரர்களிருவரும் வில்லையெடுத்துப்பிடித்து நிறுத்தி வளைத்து இழுத்து நாணிதொடுத்து, நாதி தெறித்து டங்காரஞ்செய்து, பொன்மலைபோற் பிரகாசிக்கின்ற வில்லிலிருந்து விறுவிறென்றுவிடுத்த வேகக்கணைகளின் வீரத்திறத்தால் சமுத்திரம்சுவறி நிலைதடுமாறி தளதளவென்று கொதித்துக்குறையவும், பூமிப்பரப்புப்புகையால் மறையவும், யுகமுடிவோவென்று உலகத்தோரினையவும், அஷ்டதிக்குக் காதாரமாகிய எட்டுத்திரியும் எதிரொலிசெய்யவும் திசையானைகள் திடுக்கிட்டுவாடவும் அஷ்டமாநாகங்கள் ஆலறியஞ்சவும் ஆகாயத்தில் வேடிக்கைபார்க்குந் தேவாதிதேவர்களும் பூபாலராகிய போர்வேந்தர் பலரும், எப்புவனங்களிலும் இதைவிட அதிசயமில்லையென்று அற்புதமடைந்தார்கள், அன்றியும் சங்கநாதமுழங்கியவாத்தியவொலிகள் செவுடுபட முழங்கியதுகள். இவைகளைத்துந் திகைக்குங்காலையில் சிங்கலலாடத் தேர்க்கிறையாகிய அங்கர்கோனுன்னவன் ஆலாலவிஷத்திற்கொப்பாகிய அம்புகளைக் கும்பலாய்ப்பொழிந்து அருச்சுனனுடைய-வில்-பாணம்-தேர்-குதிரை-சாரதி-முதலிய வெல்லாஞ் சிர்குலையப்பண்ணினான்.

அவன்தொடுத்த அஸ்திரம்வருகின்ற அருச்சுனன்கண், வாய்மடித்து அடையாளப் பொறித்ததும் அக்கினிப்பொறியையுமிழ்கின்ற அனலாஸ்திரங்களை ஏவிக் கர்ணன்விட்டகணைகளத்தனையையும் ஒருகொடியிற் செத்தைபோலாக்கி, வில்லில்மேகாஸ்திரந் தாக்கி வந்தித்து, மந்திரித்து. வள்ளலான கர்ணன்பேரிற் கொள்ளைகொள்ளையாகக் கூசாமலிறைத்தான், வெள்ளையானைமேற் பவனிவரும் வேந்தன்மகனுந்திய பாணங்கள்-காரிடி-கடலிடி-கல்லிடி - தீயிடி - நெருப்பிடி போல் செதிப்பொடுவருவதைக் கர்ணன்கண்டு. கடுகணைகள் கோடாகோடிகளைப் படபடவெனத்தாக்கி, எதிரியுந்திய மேகாஸ்திரங்களைச் சிந்துசிந்தாக்கினான்,

இவ்வாறாக, இருதிறத்தவர்களும் திரண்டபகழிகளைப் பரபரவென்று செலுத்தித்தேனாக் கரகரவென்றுசுழற்றிச், செஞ்சிலைச் சதங்கைகள்குலுங்க அசைத்துக்கொஞ்சமேனும், ஒருவரையொருவர் மிஞ்சவிடாமல், அடர்த்துப் போர்கொடுத்து வரும்போது கனகக்கொடையாளாகிய கர்ணன் கைமிஞ்சிக், காயத்துத்தோய்த்துக் கடைச்சல்பிடித்த பத்துப்பாணங்களையெடுத்து உத்தரகுமாரன்பேரிலோச்சி இரதத்தின்மீது இருபதுகணைகளையெடுத்துச்செலுத்திக் குதிரைகள்மீது குறிபிசகாது நாற்பதுசரங்களைப்போக்கி, விஜயன்பேரில் நூறுகணைகளைவிடுத்தான், உடனே அண்டச்சுவரின் அடியைப்பெயர்த்து எண்டிசை முழுதும் இடியப்பொடித்துச் சாசாசாசாவென விரைந்து

வருங்கணைகளைத் தனஞ்செயன் கண்டு, ஒருசதுமுகக் கணைகொண்டு அவற்றையெல்லாம் பிளந்து பொடிப் படுத்தினான், அந்தவிபரீதத்தைப் பார்த்திருந்த அமரர்களியாவரும் போர்த்திறப் பார்த்தனைப் புகழ்ந்து கொண்டாடினார்கள்.

இப்பால், பற்குனன் வெகுண்டுவில்லை யெடுத்துக் கணைகள் தொடுத்துக் கர்ணன்மீதும் அவன் தேரின்மீதும்-குதிரைகளின்மீதும், சாரதிமீதும் பிரயோகித்தான். அந்தக்கணைகளெல்லாம் ஏகமுகமாய்க்கூடி இந்திராட்டை நாடி சப்தமேகம்போலெழுந்து இரைந்து-ரதகஜ துரகபதாதிகளைநாடித் தேடிவருகின்ற வேகத்தைக் கர்ணராஜன் கண்டு காலாக்கினி போன்ற பாணங்களைவிடுத்து அவற்றை அணுவினும்பரமாணுவாக்கிவிட்டான் அவனுண்மையைக்கண்ட யாவருந் துதித்து இவனுக்கெதிருண்டோவென்று மதித்தார்கள், உடனே இருவரும்பிரிந்து பின்னுமெதிர்ந்து வாசாமகோசரமாய் வடிக்கணைசொரிந்து அமர்புரிந்தார்கள் இருவர்விழிகள் எரியவும் இருவர்மனது பதறவும் - குதிரையினங்கள் கதறவும், சேனைகளெங்குஞ் சிதறவும், கட்கனலும் தேர்ச்சக்கரங்கள் திருகிய செங்கனலும் கணைகள்கக்குங் கடுங்கனலும், பொங்கிப் புகையவும் ஒருவரொருவரைவெகுண்டு புகன்ற உரையினின்றெழுந்த பெருங்கனல்விரிந்து எரிந்து நிறைந்து இருவர்தேரும் இடைந்து, மிடைந்து, இடைவிடாமலுழன்று குயவன் திகிரிபோற்சுழன்று பாதல பூதலமுழுவதும பள்ளமாகி மறுபடியுஞ் சேனைகளாலெழுந்த புழுதிகளால்நிறைந்தது இவ்விதமாகத்தொடர்ந்து தாறுமாறாய வேறு வேறுபாணங்களை நூறு நூறாகத்தொடுத்துச் சண்டைகொடுத்துநின்றார்கள்,

அவ்வேளையில், அருச்சுனனவன் அங்கராஜன்செய்த அமர்த்திறத்தைக்கண்டு அதிககோபங்கொண்டு ஆ கர்ண, உனது சாமர்த்தியமும் நீ செய்யுஞ்சண்டையும் நீ கற்றகல்வியும், இவ்வளவென் றறிந்துகொள்ளும்பொருட்டாகவே இதுவரையிலும் உன்னைப்பிராணனுடன்விட்டுவைத்திருந்தேன், இனி நான்தாமதிக்கமாட்டேன். பொறுமைக்கிடங்கொடுத்தால், அது வறுமைக்கிடமாகும், இவ்விடத்திலுள்ள பெரியவர்களும், உரியவர்களும், அறியத்தக்கதாக ஒருகணையால் உன்னைவாட்டிக் கீர்த்தியைகாட்டி நானடையப்போகின்ற வெற்றியை நீயேயென்று யோசித்துப்பாரென்று, இரண்டு அர்த்தசந்திராஸ்திரங்களைவிட்டு அதிசீக்கிரத்தில் கர்ணன்கைப்பிடித்தவில்லைக் கடுக்கென்றொடித்தான், அப்பொழுது, கர்ணன் கலிகொன்று நகைத்து மலைபிளந்ததுபோலொடிந்தவில்லைவிட்டெறிந்து கண்களையுருட்டி விழித்துக்காருப்பிருங்கருக நோக்கி வேறுவில்கொண்டு பற்குனன்பேரில் சிகைவிரிந்த செஞ்சுடர்வேலெடுத்துச் செலுத்தினான் அங்கதேசாதிபன் எறிந்தவேலாயுதமானது, வெள்ளிப்பட்டுச் சொர்ணநிறமாகச்சொலித்துச் செஞ்சிலை விஜயனைநோக்கிப் பூர்ணசந்திரனைப்பிடிக்கவருகின்ற இராகுக்கிரகம்போல்வந்தது, அந்தவேலாயுதம கந்தமாதனமுதலிய கடலுங்கலக்கத் திரிபுவனமும் திடுக்கிட வந்த விதத்தைச் சர்ப்பக்கொடிதரித்த கௌரவகுல துரியோதனனும்; ரத கஜ துரகபதாதியுடன் காவலர்களுங்கண்டு ஓ கோகோ, அருச்சுனனுடைய சௌரியம்இப்போதல்லவோ, தெரியப்போகிறதென்றுநிமையுடனிமைகொட்டாமற் கண்விழித்துப்பார்த்துப் பார்த்துக்கொண்டேயிருந்தார்கள்.

எல்லோருநடுங்கஎதிரேறிவந்த வேலாயுதத்தை அநுமகொடிக் கதிபனாகிய அருச்சுனன்பார்த்து வவிதிருநதி நணிபொருந்தி மலரணிந்து விளங்குகின்ற வச்சிரக்கணையொன்றெடுத்து. அசைவற்ற வில்விலமைத்து அபிமந்திரித்து ஆவேசங்கொண்டிருந்தான் அந்தக்கணையானது, பந்துபோலெழுந்து வந்துமேல் விழுந்து அந்தவேலாயுதத்தை அரப்பொடியாக நூறி அந்தப்பொடியை வணங்காமுடிமன்னன் முதலாகிய கௌரவச்சேனைகளின் கண்களிற்றூவியது. விழித்த கண்விழித்தபடி வேடிக்கைபார்த்திருந்த வேந்தர்களியாவரும் இதற்கோ இந்தக்கொள்ளை அடா பாவியென்று தலையிறங்கிக்கொண்டார்கள், அதைக்கண்ட தேவர்கள் அகங்களித்தாடினார்கள், அங்கதேசராஜனாகிய கர்ணன் அருமையாய்ப் பெற்றிருந்தவேலாயுதம் அருச்சுனன்கணையால் அழிபட்டுப்போனதைக்கண்டு சற்றுந்தளராமல், மனோதிடங்கொண்டு வைரவில்லெடுத்துத் தீர்க்கமாய்வாங்கிச் சிறுநாணோசைகாட்டிச் சிலைவிஜயனுக்கு எதிரில்வந்து அளவுபடாதஅஸ்திரங்களும்அமோகமாகச்செலுத்திப் போர்விளைவித்தசமயத்தில் இந்திரன்மைந்தனை தனுதேவசுந்தர தனஞ்செயன் மகாதேவனைவணங்கி அருச்சுனனைப்புரிந்து சிறந்த பொற்கட்டமைந்த அஸ்திரங்களைத்தெரிந்தெடுத்து விடுத்துச்சங்கமுங்குறித்துச்சொர்ணமயமாய்

விளங்குகின்ற கர்னனுடையதேரையும் மின்னெறில் போன்ற யக்ஷசக்கொடியையும் நான்கு புரவிகளையும் அப்புரவிகளைப் பால்குறவிடுக்குஞ்சாரதியையும்பொடியாக்கி அவனுடற் கப்பிகிய மணிக்கவசத்தையுந் துணித்துவிட்டு வீரபட்டத்தையுந்தூளாக்கித் தலை பிறக்கமாய்ப் பூமியினிற்கச்செய்து மிகமகிழ்வுற்றுப் புகழ்பெற்ற நாஜுனவன் சிற்சிலவார்த்தைகள்சொல்லலுற்றுன்.

ஐயா,கர்ண; இளமைத்தங்கியரிஷபம்போன்றவனை நான் செகிளாக அறிவேன். உன்யோக்கியம் எப்பேர்ப்பட்டதென்னில் புத்தியில்லாதபுரவலர்சேர்ந்த பின்சபையில் என்னை வெற்றிகொள்ளத்தக்க சுத்த வீரர்கள் ஒருவருமில்லையென்றும் யுத்தத்தில் நான் அதிசமர்த்தனென்றும் விஸ்தாரம்பேசுவாய் நான் நிகரற்றவனென்பாய், இப்படி புலம்பிக்கொண்டிருக்குஞ் சமயத்தில் உன்பொல்லாதவேளை யுத்தநேரிட்டால் அற்ப பலம்பெற்ற அறிவில்லாரைப்போல அயலிற் பதுங்குவாய் ஒருவேளை அடுத்துப் போர்கொடுக்கத் துணிந்து ஆனமட்டும்பார்ப்பாய் அடிபட்டுஓட்டமெடுப்பாய் இக்குணம் உன்னுடன்கூடப் பிறந்திருக்க வேறே வாவென்றால் வருமா, ஐயா, எவர்களெனன கேட்டாலும் இல்லையென்னுமற் கொடுக்குந்தன்மை உன்னிடத்திலுண்டென்றும் உபாமமீயுக்கொடையாளியென்றும் இடைபெறுவள்ளல்லொருவனென்றும் உன்னைப்போற்றிப் புகழ்கின்றார்கள்,

ஆனால் யுத்தகளத்தில் வந்து ஒரு தெப்பல்பட்டவுடனே அப்பாவென்று புறங்காட்டியோடுகின்ற விஷயத்தில், நீ மிகவுங்கொடையாளிதான் நானும் உன்னை மதித்திருக்கின்றேன் வாய்மதம் பேசுமவ்வளவிலே போர்முகத்திற் றேர்செலுத்திப் போர்புரிந்து,புறமிடாதிருந்து, பிராணனை விட்டுவிடுவையாகில், இகத்திலுள்ள எல்லோரும் புகழ்வார்கள் பரத்திலுள்ள தேவர்களும் எதிர்கொண்டுசென்று மகிழ்வார்கள் அரம்பாஸ்திரீகளின் போகமுமுண்டாம் வீரசுவர்க்கமடைவாய் இல்லாவிட்டாலும் நீயடுத்திருக்கின்ற அரவக்கொடியோன் கொண்டாடும்படிக்குத் தப்புவார்த்தைகளைக் குளறி, உன்காலத்தைக்கழித்து,நமனுக்கு நானே ஒப்பிவிப்பது உத்தமம் அப்படிசெய்யாமல், அமர்செய்ய வந்துபுகுந்து, பிறைமுனைப்பகழி சொரிந்து, நானும்போராடுகின்ற வீரபுருஷனென்று தேரோறிவந்து எதிர்த்ததுமதியீனம் திறனற்றவனே மேலும் பஞ்சாலராஜன்பண்ணிய யாகாக்கினியிற்பிறந்த துரோபதாதேவியை அத்தினபுரியிற் கூடிய கொற்றவர்சபையிலேற்றி வஸ்திரபங்கஞ்செய்தகாலையில், பொறிபுலன்கலங்கிக் கண்ணீர் தாரைதாரையாய்ச் சொரியமெய்சோர்ந்து, நடுநடுங்கிநின்று, மானந்தன்னதென்று மனம்வாதித்துத், தன்னால்புடவையைத் தடுத்துக்கொள்ளமாட்டாமல், வஸ்திரத்தைக்கைவிட்டுத், தேகாபிமானநீங்கி, ஹரிவாசுதேவ ஸ்ரீகிருஷ்ணா [illegible] வணங்கி மரம்போல்நின்ற பாஞ்சாலியைத் துஷ்டராகிய நீங்கள்பார்த்து நகைத்துப் பரிகாசவார்த்தை பகர்ந்தீர்களே.

அந்தவேளையில் எங்கள்தமயனாகிய தர்மராஜன் அப்பாதம்பிமார்களே இப்போதொன்று மூழ்கிப்போகவில்லை இதுவரையினும், நாம்தருமந்தப்பி நடந்ததாமென்னும்பேருமில்லை பழிச்சொற்பெறுமச் சகித்திருங்களென்று அடிக்கடியெங்கட்குஅறிவுறுத்திச் சாந்தம்பத்தினி தனயன்பொறுமையென்று தர்மஞ்சொல்லித் தடைப்படுத்தினார் அவரோதியமூல், மந்திரத்தால் மகாநாகம்போலடங்கித்தடைப்பட்டு கருமாறுபலப்பிரகாரங் காலங்கடத்தினோம், ஆ-ஹாஹா!வைதிக சாந்தஸ்தராகிய தருமராஜனது அருணிறைந்த கடைக்கண் கொடுஞ்சமனையுமாயினும், எங்களைநோக்காதிருக்கினும் போதுமே இதுவனாக்கும் கர்னன்-துரியோதனன் என்கின்ற பெயர்கள் இத்தக்காசினியோர் பேசிக்கொள்ளவு மிருக்குமோ இவர்கட்குச் செல்வமுஞ்செருக்குமோ தீரமும்பெருக்குமோ? ஆ பாவி! அப்படிக்கு நாங்கள் ஒடுங்கியிருந்தும்; அந்தச்சபையில் நீங்கள்நடந்த அநீதத்தால், வீமசேனன் வெகுண்டு மனநொந்து துரியோதனன் முதலாகிய நூறுபேரையும் என்கதையால் நானே நொருக்கிறேனென்று சபதம்பேசி இவர்களை முடிக்கிறபரியந்தம் தாகத்திற்கு சலங்குடிக்கமாட்டேனென்று கூறினான் அந்தச்சொல்லைக்கேட்ட சமஸ்தமானபேரும் தலைகுனிந்து சாய்ந்தார்கள் அந்தவேளையில் நானுமெழுந்து மின்னியகணையால் உன்னுயிர்போக்குகிறேன் என்று உறுதிவார்த்தை உரைத்திருக்கின்றேனே அது உனக்கு நன்றாய்தெரியவருமே என்றறைக்கிருந்தாலும் என்பாணத்திற்கு உன்தலைபிரவலே, இப்போதுமென்ன ? ஒருமுகக்கில் மண்ணெடுக்கவேண்டுமென்

னும் அவசரமில்லை நீயிப்போநிருக்கின்ற கதியை யோசித்துப்பார் உனக்கு என்னுடன் சண்டைசெய்யத்தெரியுமாகில் தாராளமாய்வந்து போர்புரிந்து என்னைச்செயிக்கலாம் நான்உனக்கு இந்தப்பூமியை இடம்பண்ணியிருக்கின்றேன் ஐயோபாவம், எங்கேபிறந்தாய், எங்கேவளர்ந்தாய், எங்கேயிருந்தாய்,'இங்கே புகுந்தாய் அங்கதேசாதிபனே ! அவ்வாறுசாகாமல் இன்னுஞ்சிலநாளைக்கு இருக்கவேண்டுமென்றெண்ணினால் இதோநான் தொடுக்கப்போகின்ற இந்தமுகாஸ்திரங்களினால் தப்பாமல் உன்தலை தத்திவிழப்போகிறது அப்பா; முன்னாடி உனக்கரியச்செய்தேன் இப்போதாகிலும், உன்னுயிரைத் தப்பிக்கொண்டோடிப்போவென்று உறுக்கி விழித்தான்.

இந்தப்பிரகாரம், அர்த்தநாரீஸ்வரம்பெற்ற அம்பிகையுடன் என்கர்த்தராகிய பரமேஸ்வரர்மழவிடைமேலெழுந்தருளி வரும்படிக்குத் தவயோகஞ்சாதித்த தனஞ்செயனானவன்பசாற்றியரோது, அவனிசைத்த கடுமொழிகளெல்லாங் கலந்து, பிலம்புகுந்து உறையுமாறுபோல், கர்னனுடைய காதிற்புகுந்து கலங்கச்செய்தது, அதனாற்கர்னனானவன் சூரியன்போற் கண்கள்சிவந்து, நெருப்புக்காற்று வீசுவதுபோல், நெட்டுயிர்ப்பெறிந்து, இரத்தினமிழைத்த கடகங்கணந்தோளணிதாங்கிய இருகாத்தையும் பளபளவென்றுதட்டி, இரண்டுகையுங் கூப்பிக்கொட்டி, கக்கடகக்கட சிரித்துக்காதுடன் சிரத்தையசைத்துத், திக்கெண்டெரிய விழித்துப் பக்கத்திற் குப்புறப்பாயந்தோடிப்போனான்.

இவ்வாறோடிய கர்னன் மனந்துணிந்து, மலைபோற்றிணிந்த சேமத்தேரேறி, வச்சிரக்கவஜம்-உச்சிதக்கவஜம்-மணிக்கவஜம்-பொற்கவஜம்பூண்டுவிசாலமானமார்பில் முப்புரிநூலும்-முத்தாரமும்-கொத்துச் சரப்பணியும்-பொன்மாலை பூமாலையும்-மின்னும்படியாகத்தரித்துக், கடலின் அலைபோற்றுலங்கிய நாரிமாட்டி, வில்லைப்பிடித்து, விசையாயிழுத்துத் தடதடவென்று தேரைச்செலுத்திச் சற்று நேரத்திற்கு முன்னே சண்டைபோட்டு இளைத்தோடிய தடத்திற்போய்நின்று மீசைமுனைக்கு மிகுமுறுக்கேற்றிக், கண்டபேர்கலங்கக் கனைக்குங், கொண்டல்வாகனகுமாரனை கிரீடியை அண்டையிற்கண்டு அடா, அர்ச்சுனா ! எங்கேயோட வழிபார்க்கின்றாய் ? சண்டைபோடவகையில்லாமற் போகின்றாய், இதோ ! நான் வந்திருக்கின்றேன், இளைத்துப்போய்விடாமல், என்னை வளைத்துப் போர்புரியவாடாவென்று, அவனைமடக்கி ஏண்டா என்னை வழிவாய்ப்பேசினையென்று தன்னுக்குக்குத் தழும்பேறும்படியாய் கோபங் கொண்டு கொடிதானசொற்களைக் கொட்டினான்.

அடா ? பஞ்சவரில் இடைப்பட்ட பஞ்சையே நீயென்னடா கொஞ்சமேனும், அஞ்சாமல், மெத்த அங்கற்ற சுத்தவீரன்போல் கருவங்கொண்டு மிஞ்சிப்பேசு கருமமதலையறுகத ஆட்டமாய்த் தனக்குத்தானே சுழன்றோடுகின்றாய் ஊரில், உலகத்தை, உள்ளபேரியோர்கள்-உரியோர்கள்-சிறியோர்முதலாகிய வலியோர்கள் - இவர்களியாவரும், உன்னைப்பார்த்து இவனும் ஒரு வீரன்தானென்று ஏளனஞ்செய்து சிரிக்கும்படிக்கு ஏமாந்தருகாடி நாட்டை-நகரத்தை நலத்தைப் பலத்தைபங்காளிகள்கையில் ஒப்பித்துப்போட்டு, மானம்போனாலும், பிராணனிருந்தாற்போதுமென்று, இருளுக்குப், பிறப்பிடமும் இருப்பிடமுமாகிய வனத்திற்சென்று, சுதியற்றிருந்து கஞ்சிக்கலைந்து, வயிறுகட்டி, வாணாளோட்டிக், காலங்கழிக்கக் கற்றாயன்றிப், போர்முனைக்கண்ணேநேர்புகுந்து, வில்லாளரான வல்லாளருடன் விதண்டை வளைத்து வெற்றிபெருகின்றவிதம் இன்னதென்றறிவாயோ, வீரப்பிரதாபம்பெற்ற விவேகிகளை உணர்வாயோ ? நீயும்ஒருவில்வீரனென்று, வீரபட்டங்கட்டிக்கொண்டு வில்லெடுத்துப் போர்கொடுக்கவந்தாயே, போதும், போதும், அஸ்தினபுரத்து ராஜகோஷ்டில், வட்டாடித்தோற்று மரியாதைகெட்டதுமன்றி, உங்கள்நாட்டைப்பறித்துக்கொண்ட நரேந்திரனானவன் உங்கள் பெண்சாதியையும் மயிரைப்பற்றி யிழுத்துவந்து, சபையிலேற்றி மானபங்கஞ்செய்வித்தானே.

அந்தகாலத்தில் இல்லாதமுனையும் முடுக்கும் இந்தக்காலத்தில் எங்கடாயிருந்து எழுந்தது என்னைக்காணவே கிளைத்தோடிவந்ததோ ? அல்லது முளைத்தோடிவந்ததோ ? மானமும் வல்லமையும் மாறுதவனே ? போகட்டும் கிழேயிடப்பவன் கிழேயிடப்பானே என்பதுபோல், ஒருவேளை, சூரத்துவம் இப்போது தான்வந்தாலும், என்னைச்செயித்து, இசைபெறப்போகின்றவன் நீதானோ, விஜயகாண்டீபம் எடுத்து வெற்றிவாகைபெறுதற்கு வந்தாயோ; ஆ, பைத்தியக்காரா ? இராஜராஜேஸ்வரனாகிய துரியோதன மஹா

ராஜன் சமுகத்தில், பேச்சு மூச்சுமில்லாமல்; பெதறிக்கிடந்த பாண்டவர்களில் பின்னிட்டிருந்த நீ - என்னை மிரட்டவந்தாயென்னடா, பேதையே! இதோ, இப்போது நான்விடுக்கப்போன்ற இரவியாஸ்திரங்களால், உன்னுயிர்வெளிப்பட்டுஉடல்மறிபட்டு, உன்போலொத்தவர்கள் சிந்திக்கத்தலைப்பட்டு, நீ நெடுநாளாய்த்தேடிச் சேகரித்த கீர்த்தியுங்கெட்டு, நிஷ்டூரமாகிய வசைமேலிட்டுப், பொன்றுபோய்ச் சேரும்படியாய் நாளிட்டுவைத்த நன்றுள்வஸ்து ஒதுக்கொண்டது இனியென்னயிருக்கின்றது தாய்தமயன் தம்பியர்கள்-தாரம்-தநயன்முதலியபேர்களை ஒழித்துவிட்டுச் சன்னைக்குத்தலையிட்டு, விராடபுரத்தெல்லையில் செத்துப்போகப்போகிற வுன்னைக் குற்றமான கொடுஞ்சொற்கூறுவானேனன்.

அப்படிப் பேசுவதினால் எனக்கென்னலாபம், ஓ,பார்த்தனே சற்றுநேரத்திற்குமுன்னே என்னை செயித்து ஓட்டிவிட்டதாய் இறுமாந்து முன்னுலோசனை பின்னுலோசனையென்னுமல் குறைகுடந்தளும்புவதுபோலும், சொய்யரிசி கொதிபொறுக்காத்தன்மைபோலும்; சின்னப்பேச்சுகளைக் கொட்டிப்போட்டாயே, உன்னுடனெதிர்ந்த எல்லைகளிலும் நானேஜியித்தேரும் ஒழித்து, நானும் போர்முனையிலிருந்துபோனதை இன்னவிதமென்றறியாமல், வெற்றியடைந்தோமென்னும் உற்சாகங்கொண்டு உனக்கிசை யானமட்டும் பேசினையாக்கனும்; அப்பா, அர்ச்சுனா! இயானையைச் சிங்கம் பங்கப்படுத்துவது இயற்கை, அப்படிப்பட்ட யானைக்கு சிங்கம் இளைத்துப்போமாகில் அந்தயானை சந்தோஷப்பட்டுச் சிங்கத்தைப் பழித்துப்பேசுவது திரமோ, இதுவுமொருவீரமோ? நீ யென்னமோமெத்தத் தெரிந்தவனென்று பேசிக்கொள்ளுகிறாய்களே உனக்கென்னதெரியும் வில்லானது எவ்வளவு துவண்டுவளைகிறதோ அவ்வளவும் வேகத்திற்கிடமென்று தோன்றவில்லையா, ஆட்டுக்கடா பின்னுக்கிடைவது இன்னொரு ஆட்டின் தலையோட்டுக்குக் கேடென்றுணராயா, ஏதோ, ஒருகாரியத்தினால் பின்னிட்ட சிங்கமானது மறுபடியும் பிரவேசித்து, மத்தகத்தைப்பிளந்து, உதிரமுங்கொல்லியிரம்பப் புசிக்குமென்று, சற்றேனும், நீ நினைக்காமற் போனதென்ன, நல்லது, இப்போது நானுன்னைச் செய்யப்போகிற செய்கையினாலும் காரணகாரியங்களினாலும் என்னை இன்னானென் றறியப்போகின்றாய்

உளிட்டத்தில் விருதாவாய்ப்பேசுவதிற் பயனொன்றுமில்லை அப்பிரயோசனமென்று, உரத்துத் தொனியிட்டதட்டி, காத்திலிருக்கும் வில்லைநாட்டி, நாணிபூட்டி, வலுத்தகணைகளை வந்தித்துமாட்டி, வீரவக்ஷணைக்காட்டி, மிகுந்த விசையுடன் தகுந்தசரங்களை விறுவிறுவிறுவிறென்று பொழிந்தான்.

சூரியகுமாரனான கர்னன்தொடுத்த சரங்களினாலும் அவன் தூறிப்பேசிய வீரியச்சொல்லினாலும் அர்ச்சுனன்மனம் பதைத்து உனலாஸ்திரம்-புனலாஸ்திரம்-புகையாஸ்திரம்-மின்னலாஸ்திர முதலியவைகளை அபிமந்திரித்துப் பேர்க்கிப் பற்பலதேயமாந்தரும் விற்படை-வேற்படையுடைய வேந்தரும் வீரசேனைகளும் இரண்டுமருண்டு இளைத்துப்போம்படியாக்கிக், கர்னன்பேரிலுங் கணைக்கமாட்டினான்.

இவ்வாறு கும்புகும்பாய் மூண்டிய அம்பினங்களைக்கண்டு எதிரெதிர் தடுக்கும் படிக்குக் கோடி அஸ்திரங்களை விட்டுபோராடி. மாமுடியர் தங்கள் சேனையுடன்வளைந்து நாருகிய வேந்தருடன் சேர்ந்து, பெருகிய கிரீடியை மொய்த்துக்கொண்டு, கட்டி-கதை வாள்-வேல்-சூலம்-பிண்டி-பாலம்-தோமரம்-கத்தி-கட்டாரி-வாங்கு-சாங்கு-முசுண்டி-முள்மூளை-சக்கர முதலாகிய சஸ்திரங்களை எடுத்தெடுத்தெறிந்து, மூடுபனிபோல் ஜாடுக்காலையில், தனிச்சிங்கமென்னநின்ற தனஞ்செயனானவன், செஞ்சுடர்க் கணைகளைத்தெரிந்து, ஏராத்தையாயெடுத்துப் பரிந்து பூசைகளனேகம் புரிந்து காண்டீபநாரியில் வரிந்துகால்தலைதெரியாமற் சொரிந்தான் அந்தக்கணைகளெல்லாஞ் சேர்ந்து கும்பலிற்போய்விழுந்து அம்புபறக்கச் சுட்டெரிக்கும்போது காவலர்முதலாகிய சேனைகளுங்கடல்முகட்டெழுந்த கதிரவனைக்கண்ட பனிபடும்பாடு பட்டழிந்தார்கள். விண்படரும்மேகம்போலடர்ந்தநான்குபடைகளில். புண்படாமற் போனவர்களில்லை இந்தப்பிரகாரம் வந்தசேனைகளெல்லோரும் கால்முறிந்து கால்தறிந்து சிரமெரிந்து சிலைநெரிந்து சிதைந்தனர் இதனால் வந்த சேதத்தையும் வதைந்து சாய்ந்ததையும் பிணச்சேற்றிற் புதைந்துப்போனதையும் ஒதுங்கியோடுவதையும் பதுங்கிவாடுவதையும்-பானுகுமாரனான கர்னன்பார்த்துப் படபடத்துச் சினத்துக குருசேனையிற்கூடிய பலபடைமன்னரும் அன்புகூர்ந்து இன்புறும்படியாய் ஆசாரியான பாசிராமனைப்ப

னித்து அழல்வாளிகோடி- அலைவ்வாளிகோடி - அரிவாளிகோடி யெடுத்துத்தொடுத்தான்.

அந்தக்கணைகளியாவுஞ் செந்தீயிறைத்து ஜெகமூச்சுவிறைத்து விண்ணைக்கருக்கி மேகங்களைச்சுருக்கி வேலைநீரைவெதுப்பி வெக்கிராசக்குமுடப்பி விண்டலைவிப் பிடித்து மேவிட்டுகின்ற மலையையிடித்துப் பெருங்காற்றழித்துச்சோனமேகம்போற் பொழிந்து சற்றேனுந்தங்காமற் றிரிகின்ற அத்திரங்களைப் போர்முகவிஜய புருடசிலாக்கியனாகண்டு தனக்குக் கைவந்த திவ்வியாஸ்திரம் ஐந்து ஆயுந்தெடுத்து அபிமந்திரித்து எதிரிவிட்டபாணமுழுமையையும் சற்றுநேரத்திற் சிதறவடித்து பொய்யென்ப் பிளந்து மெய்யெனத்தழைத்து வெற்றிப்பிரதாபத்துடன் வரக்கடவதென்றுவிட்டான், அவனுந்திய வண்ணம் வந்து மூத்தியகணைகளைப் பிளந்து மேவலர்கண்டோடக்கனாது நிறுத்தான்கவியில் மூவுலகமுங்கொண்டாடக்கொடுக்குங்கொடையாறபெயர்பெற்றுக் கீர்த்தி விளங்கிய கொற்றவனாகிய கர்ணனும் தொடுக்கும் படையாற்றுப்பட்டகளமியுக் கொங்கடமடக்கிப்போர்விசைகேதும் பாண்டவராகிய பார்த்தனும் ஒருவருக்கொருவரெதிர்ந்துப் போர்புரிந்தார்கள் இருவர்களையும் பதீத்து இருவர் இரதமுஞ்செறிந்து இடைப்பட்ட சேனையுருவிந்து ஆகாயம்பூமியுமிறைந்து சூரியனொளியுங்குறைந்து வேடிக்கைப்பார்த்திருந்தவரும் தேவருமயங்கத்து இடம்பெயாதாரகள், வாயுதேவனும் உலவினுலவு சலொடுநிஸ்தம்பித்துப்போனான்.

இருவரும் பிரயோகஞ்செய்த பாணவேகத்தினல் வெகுபேர்மாண்டார்கள், அடிக்கடி அவசகுனங்களும் விபரீதங்களும் உண்டாய்த் திசிலும்விளைந்தது, யுத்தஞ்செய்கின்ற இருவர்கண்களுஞ்சுழன்று இருவரெண்ணங்களும்பூண்டுசிறப்பாய்வருந் தேருந்தேரும் நெறிப்பாய்வருங் குதிரையுங் குதிரையும் தேர்ப்பாகருந் தேர்ப்பாகரும், ஆர்ப்பாகிய கொடியுங்கொடியும் ஒன்றோடொன்றுதாக்கி அசைந்த மூண்டாக்கிய போது, கர்ணன்கணைத்து இடம்வலம்வலமிடமாகத் தேரைத்திருப்பி. பெருநகைநகைத்துப்பெரும்புலியென்னப்புகுந்து, அடா, அர்ச்சுனா, அஞ்ஞாதவாசஞ் செய்யப்போன ஒருவருஷத்தில், இன்னும் ஒருநாட்கழிக்கவேண்டியிருக்க, அதற்குள் அவசரமாய்வெளிப்பட்டவுன்னால் நீங்களைந்துபேரும் இனியநுபவிக்கப்போகிற வனவாசத்துன்பமானது உங்கள் தலைமேலேறிக்கொண்டது, சபையிற்சொல்லிய சத்தியவசனத்துனுநியல்லவா, அதுதெரியாமல் என்னடா, மெத்தத் தத்தளிச்சுற்றித் தலைகீழாய்விழுகின்றாய், கற்றவித்தையெல்லாங் காட்டுகின்றாய் குற்றமற்றவர்களைப் போற்கொண்டாடுகிறாய், நீ தொடுவிடும்போகின்ற சிலீமுகங்களினல் இறந்துபோவாயாகில் கூண்டோடேபோயிற்று குளிருங்காச்சலுமென்னும் பழமொழிப்படிக்கு உங்களை மன்னித்து விடப்படும் சிலவேளை என் கணைக்குத்தப்பிப் பிழைப்பாயாகில் இன்னும் பதின்மூன்று வருடம்வனவாசம் பண்ணவேண்டும்.

இவ்வாறே அந்தக்கி அஞ்ஞானவாசந்தோறும் உங்களையெப்படியாகிலும், கண்டுபிடித்து நீங்கள் நாட்டுக்கு ஆட்சியாய்ப்பொருந்த நாங்கள் நாட்டுக்கு அரசாட்சியாயிருந்து எங்கள் காலத்தை இன்பமாயுக்கழிப்போம். உங்கள்காலத்தைத்துவாமலொழிப்போம் இந்தஞாலத்தை இசையுடன் புரப்போம் நீங்கள்பண்ணுகின்ற இந்திரஜாலத்தைப் பகையறத் தணிப்போமென்று, சிந்தைநொந்து திப்பொரிசிதறிய கண்பொறிகளை ஒன்றின்பின் ஒன்றாகவுந்தி நெருங்கினர்யாகச் சிந்தி கும்பல்கும்பலாகக்கொளுவி, குபவைகூடாரமாக்குவித்து. அர்ச்சுனனையும் தேர்ப்பூட்டிய அசுவங்களையுஞ் சாரதியையும் அலமலங்கப் படுத்தினன்.

அந்தக்கர்ணன் சிந்தியகணைகளான துருகாயபாணம்போலிறைந்து இராகுக்கிரகம்போல் வளைந்து, பாய்ந்து எரிந்துவருகின்ற கோரத்தைப் பார்த்தன்பார்த்து கண்ணுதம் மனமுங்கலுத்து, விண்ணும் மேகமும் வேகச்செறுத்து வின்னுணிவிக்கிறு [illegible] சரங்களைத்தாக்கி, பட்டப்பகற்போல் வெட்டவெளியாக்கி பானுகுமாரன்பாணம் எட்டும் பாதிவழியில் நாணமுபட்டுப் போகப்பண்ணி, வேண்டுமட்டும் போர்நடத்தி இந்தக்கர்ணனை எதிரியாகக்கொண்டு, நாமிவனுக்கு நேராகநின்று போராடுவதும் இவன்நம்மையடிப்பதும், நாம் இவனையடிப்பதும பெருமையாயிருக்கவில்லை பார்க்கின்றபேர்கள் இவனுஞ் சுத்தவீரன்தான இவனால் அர்ச்சுனனும் அடிபட்டான் வெகுநேரஞ் சண்டைபோட்டானென்று சொல்லுவதற்கு இடங்கொடுக்கிறது ஆதலால் இது நமக்குத் தகாது இவனோடெதிர்த்து வெகுநேரமாகுதென்று நெற்றி

விர்த்துப்புருஷன்அத்திமேதிந்துசிற்றுசைத்து முற்றப்பகைத்து, உக்கிரமான வச்சிராஸ்திரந் தொடுத்து, அவனுக்கு உடற்காப்பாகிய கவசத்தையும்- துவஜத்தையும், மார்பையும், உடலையும், பிளக்கிழித்து, பெருந்துளைபோக்கி, உதிரம்பெருகியோடச்செய்து. அந்த மட்டும்விட்டுவிடாமல் இரண்டுகொளமேகக்கணையைத்தாக்கி வீணையப்பிரற்றும் வாய்மேலடித்து கச்சக்கொடியைப் பிச்செறிக்கொடித்து கண்ணிரண்டிலும் புண்படவடித்து, மின்னுப்பூச்சி பறக்கவிடுத்து நவரத்தினமுடிதவறக்கெடுத்து. வாகுவலயமதாணிப்பதக்கங்களையுமாற்றி, பாரியவில்லைப் படீரென முறித்து பாவியான கர்ணனைப் பார்க்கப்பார்க்கப்பற்றிக்கொண்டவயிற்றெரிச்சலுடன் வைரம்பற்றிய எரிக்கணையினைத்து அவன்இருதோளையுந்துளைத்து பகைத்தெதிர்த்தபரிவாரங்களையும் வளைத்து, கொட்டிய பஞ்சுபோற் குழுமக்கிக்குவித்து குலை குலைந்தோடப் பிடித்து ஸ்தம்பித்து எதிரொருவரில்லாமல் எங்குந்தனித்து ஊடாடிவருந் தாடாளனுன தனஞ்செயனை வக்ஷஸ்தலத்தில் மகாலட்சுமியைவைத்தருளிய மாயனும் அவரது திருநாபிக்கமலத் தெழுந்தருளியசேயனும் பக்ஷத்துடன்மகிழ்ந்து பரிந்தார்கள் தேவர்களும்புகழ்ந்து கொண்டாடினார்கள்.

இப்பால், அங்கதேசாதிபன் அர்ச்சுனனாலடிபட்டுத் தனக்கு உயிர்த்துணையானவில்லும் ஒடிபட்டு ஜீவரத்தினத்தையிழந்த செந்தலைநாகம்போற்சிந்தை தளர்ந்து பின்னுந்தைரியம் விடாமற்கிளர்ந்து வேறு விற்பிடித்து மின்போற்பிரகாசிக்கின்ற நாரிபிறுக்கி திசாதிசைகளும் பிதிர, சந்திரசூரியரும் அதிர, வானிறைந்த யோகமுனிவரும், ஞானமுனிவரும், முப்பத்துமுக்கோடி தேவர்களும்முக்குணமுத்தொழில் விளையாட்டுடைய மூவர்களும் பேரானந்தங்கொள்ளும்படியாயக் கொஞ்சநேரத்திற்குள்ளாகத் திரோணமேகம் பொழியுங்கொள்கைபோற் கொடியவிஷநெருப்புள்ள நாராசக்கணையைக் கைக்கொண்ட மட்டுக்கட்டாகத்தொடுத்தான். இப்படியாகக் கர்ணன்தொடுத்த கணைகளினால் அர்ச்சுனனுடையதேரும் நான்குகுதிரையும்-உத்தரகுமாரனென சாரதியும், அலக்கழிந்து கலக்கங்கொண்டார்கள்.

அதுவேளையில் எங்கும்புகழ்ப் பங்குனைத்திருக்கின்ற பற்குனனுனவன், அமுதாகரனென்னும் அர்த்தசந்திரபாணத்தை மிமீசகரிக்கக் காண்டீபத்திற்பூட்டிக் கடுகத்தெறித்துக் கர்ணனால் விடப்பட்ட காலாக்கினிக் கணைகளையெல்லாம் ஒன்றுபோனவழி ஒன்றுபோகவொட்டாமல் உடைத்துக்கிழித்து, ஒழித்துப்பழித்து. இடியாஸ்திரங்களைமுடியப்பரப்பி வடுவில்லாக் கர்னன்பிடித்திருந்த வில்லினிடைவை கீர்த்திமண்மனைவென்று, நடுவறமுறித்தான், அப்போது அட்டணைக்கொட்டமடக்கும் அங்கதேச பட்டாபிஷேகம் துரியோதனனும் கட்டிக்கொண்ட கர்னராஜன்தன்கையிலிருந்த வட்டவரிவில்லானது அர்ச்சுனனால் வெட்டுப்பட்டுப்போனபோதே அதுகெட்டதென்று விட்டெறிந்துபோட்டு எட்டுத்திக்குங்கெட்டயரும்படியாய் ஆர்ப்பரித்து வச்சிரக்கட்டிட்ட மலைபோன்ற கதாயுதமெடுத்து விறுவிறெனச் சுழற்றிவிட்டெறிந்தான்; அதனால் குவலயநடுங்கிப்பின்வாங்க அலைகடல் நிலைதவறி முன்னேறெண்திசையானைபெட்டுத்திகைத்திட்டு ஒதுங்க சக்கரவாளந் தலைதாழ்த்திப் பதுங்க இப்படியாகக் கலக்கி, எங்குமில்லாமலுழக்கிவருகின்றகதாயுதக்கொடுமையைக் காண்டீபன்கண்டு வயிரக்கணையொன்று மந்திரித்தெடுத்து மலையுடன்மலை மலைவுறுமாறுபோற் கதாயுதம்வருவதைத்தக்காட்டி காதுபரியந்தம் இழுத்துமாட்டினான்.

அந்த வயிரக்கணையானதுவந்து, கர்ணன்வீசிய கதையை வழிமறித்துக்கொண்டு அனந்தங்கோடி சக்கைசக்கையாயுடைத்து வெற்றிபெறுதற்கு வந்தும்பிவந்து அவன் சேனைகளின்பேரிலேசாத்து அவர்களையுஞ் சின்னபின்னமாக்கியது அதனால் சேனைகளுந்தாளுஞ் சகிக்கமாட்டாமல், கவண்கல்லடியுண்டழிந்தவர்களைப்போல்-கை-வாய்-சிரம் - உரம்-கால் முதலிய உறுப்புகளும்வருந்தி மடங்கியோடினார்கள், இவ்வாறுதந் தன்படைமன்னர்முதலாகிய சேனைகளும் அவ்விடத்திற்பொருந்திப் போர்கொடுக்க மாட்டாமல் மாறுபட்டோடினதையும் தானெடுத்தெறிந்த தண்டாயுதமானது, உமியுந்தவிடும்போலமுறிந்துபறந்து சிதறிப்போனதையும் எதிரியாகிய இந்திரகுமாரனும் அவனேறியதேரும் அத்தேரிற்பூட்டிய குதிரையும் சாரதியும் அணுவத்தனையேனும் பழுதுபடாமலிருந்த அதிசயத்தையும் தன்னுடைய கதாயுதம் அநியாயமாய்ப்போன புதுமையையும் அந்த அர்ச்சுனன்கணைகள் அதிக்கிரமத்துக்கொல்லுமென்ற மந்திரத் திறமையையும் கர்ணன்கண்டுபெருமூச்செறிந்து

ஏக்கங்கொண்டு ஒன்றுந்தோன்றாமல் இளைத்து நின்றுவிட்டான்.

அப்படியாக நின்ற அங்கராஜனைச் சங்கிராமவிஜயன்பார்த்து, வெறுஞ்சிரிப்புச் சிரித்து, மெத்தப்பெரிய வீரர்களையடித்து, சத்துப்போகமுடித்து, வெற்றிபெற்றுப் படைத்திருக்கின்ற பத்துக்கணைகளை ஆராய்ந்தெடுத்து பற்பல பூசையும்பண்ணி, உபசாரத்துடன் வணங்கி அபிமந்திரித்துத் தெரிந்தானை, அந்தக்கணையானது, பந்தபாசம்போற்பற்றி எட்டுத்திக்கிலுஞ் சுற்றிக், கர்ணன் ஊர்ந்துவந்த கனகமயமானரதமும்-அந்தரத்திற்பூட்டிய வேகக்குதிரையையும் அப்புரவியின்மனமும் எசமானுடைய இஷ்டத்திற் கேற்கும்படியாகத் தேர்செலுத்துஞ்சாரதியும் ஒருக்ஷணத்திலழியவழித்து, அக்கம்பக்கத்தில் நிற்கும் படைகளைச் சழித்து அண்டகடாகம் வரையிலுஞ்செறிந்து உலவிக்கொண்டிராகின்ற பாணங்களையும் கலைமதிமுகமுங் கடுத்துக் கறுத்து நிற்கின்ற காண்டீபனையும் கர்ணன்கண்டு, கனல்வீசக்காய்ந்து, சாய்ந்துபோனதேர் விட்டிறங்கிப்பாய்ந்து உதடுமடித்துமுகஞ்சுளித்துக் கைவேல்-கதிர்வேல்-வடிவேல்-கெடுவேல்- முதலிய வேலாயுதங்களைப்போக்கிப்பூமியில்நின்று செல்வயையுத்தஞ்செய்தான் இதன்றியும் நான்குபுறம்பிலுந் திரும்பி, வாட்குவரிசைகள் விரும்பி வளைந்து விளையாடிவருகின்ற செங்கதிர்ச்சேயனைச்சிலைவிஜயன் பார்த்து இளியவனை இவ்விடத்திலிருக்கச்செய்யலாகாதென்றெண்ணி விருதுகட்டிய அம்பொன்றெடுத்து பிர்ம்மாஸ்திர மந்திரத்தை யுச்சரித்து ஆசாரியவணக்கஞ்செய்து அனாசூனத்திற் றூற்றினன், அந்தப் பிர்ம்மாஸ்திரம் புறப்பட்டு கர்ணனெறிந்த வேலாயுதங்களெல்லாம் அநாகதஞ்செய்து அந்தக் கர்ணனுடைய மார்புந்தோளும் புண்பட்டுத் தளைப்பட்டு மயிர்க்கால்தோறுங் கண்விட்டு இரத்தப்பிரவாகமாகத் தக்கதாய் வருந்தப்படுத்தியது அதனால் கர்ணனுடைய தேகமுழுமையுஞ் சரங்கள்பாய்ந்து அம்புப்பிரட்ட செம்பொன்மலைபோலாய்ந்து வருந்திக்கால்காய்ந்து எதிர்த்து போராடுவதற்கு வேறுவகையில்லாமல், படுகுழியில்வீழ்ந்து பரதவிக்கும் யானைபோல் நிலத்தில் நிற்கின்ற கர்ணராஜனை சுவேதவாகனன் கண்டுவேகத்தக்க கோபங்கொண்டு, இரக்க [illegible] எவ்வளவுமில்லாமல் மகிமைபெற்ற சரங்களை வாரிவாரிச்சொரிந்தான்.

அர்ச்சுனனவன் அஸ்தலாகவத்தால் அமோகமாகப் பொழிந்த அஸ்திரங்களியாவும் காடாக்கினிபோலெரிந்து வாடாமல்கைகையென்னவந்து விழுந்து கர்ணன் நெற்றியிற்கட்டியிருந்த வீரபட்டத்தைத் துட்டத்தனையாய்ப் பொடித்து அந்தப்பட்டங்கட்டிய நெற்றியில், பொட்டிட்டதுபோல் முத்திரையடித்து ஊசிநுழைதற் கிடமில்லாமலூருவி, அவன்தேகத்தில், ஊடாடிமருவியகாலையில் யாதொன்றும் யோசிப்பதற்கிடமில்லாமல் பெருமைபெறக் கருதி சாமர்த்தியமும்விட்டு சண்டை முனையுங்கெட்டு, தானும் புறமுதுகிட்டு, சக்கைமேவிட்டோடினான். அதுகாலையில் அர்ச்சுனன்தேரிலிருந்த உத்தரகுமாரன் பளபளவென்று இரண்டுகைகளையுங்கொட்டி கலகலவென்றுநகைத்து ஓகோகோவென்றிரைந்து விரைந்துதேர்விட்டான்.

இங்ஙனம் அஞ்ஞானவஞ்சகத்தில் அநாதினமுங் கருத்தைப்பொதிந்த துரியோதனனும் அவன்தம்பிமார்களும் குற்றத்திற்குமெத்தவுமிடஞ்சொல்லித் தேற்றுகின்ற சகுனிமுதலிய மற்றையோர்களும் வித்வசிரேஷ்ட மேன்மையோர்களும் அர்ச்சுனன்செய்த யுத்தமுகத்திற் புறங்கொடுத்தோடுகின்ற கர்ணனைக்கண்டு கவலைமேற்கொண்டு ஐயையோ, இனியெந்தக்காலத்திலும், நமக்குச்செயமில்லை, இப்போதிருக்கின்ற அரசாட்சியும் போய்விடுமென்று ஏங்கித்தளர்ந்தார்கள் குருவுக்கொப்பாகிய ஆரியர்களான வீஷ்மர் கிருபாச்சாரியார் துரோணாச்சாரியார் முதலிய பெரியோர்களும் முகமலர்ந்து அகமகிழ்ந்து புயம்பூரித்து தேகம்பூரித்து ஜெயமுஞ்செல்வமும் தனஞ்செயன் பெறுவானென்பதற்குத் தடையேதாகிலு முண்டோவென்று வாழ்த்தினார்கள்.

அந்தவேளையில் அதிரதத்தலைவர்களில் யாரும் எனக்கிணையாகமாட்டார்களென்று ஆவிபரியப்பரிமபலகாலுங்கூறித்திரிய அங்கதேசாதிபன் சங்கடப்பட்டு நொந்து, பின்காற் பிடரியிலடிபட ஓடுகின்றதைக்கண்டு, அழகியதேர்மேல் அமர்ந்திருந்த அஸ்வத்தாமா வெகுண்டு அவசரத்தில் தன்தேரை முடுக்கிச்சென்று இந்தக்காலத்தில் அந்தக்கொடையாளியைத் தடுத்துப் பேசவேண்டுமென்றுபோனான் அவன்தேரோடிவருகின்ற பேரோசையைக்கேட்டு முன்னமே கலவரங்கொண்டோடி வருகின்ற கர்ணனை

திரும்பிப்பார்க்கச் சாவகாசமுந்திடதைரியமுமில்லாதவனாய் அருச்சுனன்துரத்தி அடிக்கவருகின்றானே வென்பதாய் மேன்மேலாகியதிகிலடைந்து, பின்னும்முடுக்காய்ப்பதறிப் பூமிமேலிடறி விழுந்தோடினான் இவ்வாறிளைத்துப் பிராணபயங்கொண்டோடுகின்ற கர்ணனைப் போய்வளைத்துப் பேசுகின்றான்.

அஸ்வத்தாமாவானவன் அமரிற்றோடுகின்ற அங்கதேசராஜனுக்குநேர்நின்றுபடையாளியான பாரமார்த்தியனே! நான், அஸ்வத்தாமன் இப்போது நீர் கண்பொறிகலங்கி, தலைகவிழ்ந்தோடும் வேளையில், என்னை அர்ச்சுனனென்றுமதித்து, ஆத்திரப்பட்டு ஓடவேண்டாம் நில்லும் நில்லும், ஐயோபாவம், சற்றேவிதானித்துப்பாரும் இங்கேவாரும், கொஞ்சம் இளைப்பாறும், ஓ கோகோ! இதென்னகோலம், ஐயோ பொல்லாதகாலம், ஏனிவ்வாறோடுகின்றீர், மண்களிற்புரண்டொடுங்கி கண்களிற் சலங்கலங்கி, மார்புந் தோளுங் காலுங்கையும், நடுங்கிப்போவானேன்? எதிரிகள்வாயெடுக்கவொட்டாமல், வாயாடுகின்ற உமது வசனம் ஒடுங்கிப்போவானேன், காரணஞ்சொல்லும் காரியவானே? நாமெல்லோருங்கூடி மாடுமடக்கிய அந்தவிடத்திற்சற்றுநேரத்திற்குமுன்னே இதோ ஓடிவருவது ஒருதேரென்றும், அதன்மேல் வருகின்றவன் ஒண்டிக்காரனென்றும் அவன்கைப் பிடித்திருப்பது ஒருவில்லென்றும் அவன் எனக்கெம்மாத்திரமென்றும்ஆணவமாய்ப்பேசி, நீங்களியாவரும் எனக்குப்பின்னின்று வேடிக்கைப் பாருங்களென்றேசி பக்திப்பாகிய படைஞருடன்சென்று, முந்திப்போய் நின்று முனைக்குப்போர்புரியப்போனாயே அப்பா கர்ணா! நீகைப்பிடித்திருந்த வில்லெங்கே - செயிப்பேனென்றசொல்லெங்கே அங்கதேசராஜபட்டாபிஷேகம்பெற்றமுடியெங்கே - கச்சக்கொடியெங்கே கூசாமலோடுங்குதிரையெங்கே தருணத்திற்காக்குஞ்சாரதியெங்கே துந்திச்சேனையெங்கே மந்திரஉச்சரிப்பெங்கே வீரபட்டமெங்கே முத்தாரவட்டமெங்கே மணிக்கவசமெங்கே அணிக்கவசமெங்கேசொல்லப்பா வெல்லப்பாகினு மினிப்பாய்ச்சொல்லுஞ்சொற்சோர்வில்லா தவிற்சாதுரியனே வேந்தன்தம்பியாகிய அற்சாதனனெங்கே மச்சானெங்கே, மாமனெங்கே, பச்சாதாபம் பார்க்காதபதிதனே? மாறுபட்டுவரும்பகையாளிகளை பேறுபெற்ற ஆயுதங்களினால், கூறுகூறுக்கி, தாறுமாறாக வேறுலகாளவிட்டு, வலம்புரிமாலையணிந்த துரியோதனமகாராஜனை இந்தநிலம்புரக்கப் பட்டாபிஷேகம்பண்ணி பெருஞ் செல்வத் தனமக்கிறேனென்றும், அருச்சுனனுக்குவைரி நானொருவன்தானென்றும், பெருமைபாராட்டி, அருமைபாகச்சொல்லிய நீ-அந்த அருச்சுனனாலடிபட்டு, பெருகிவழிகின்ற இரத்தவெள்ளத்தில்நீந்தி விசனமார்ந்தி இருகையேந்தி நிலத்தில்வீழ்ந்து நினைச்சேற்றிலழுந்தி நெடுங்காற்புனைதந்து, ஓடவேண்டியதென்ன? உத்தமனே எங்களைப்போன்றவர்கள் ஒருவனுடைய அன்னத்தைப்புசித்து, யுத்தநேரிட்டகாலத்தில், எசமானையிழந்து, எதிரியைப்புகழ்ந்து, நன்றிகுன்றி, மானங்கெட்டு, நாணம்விட்டு நடக்கத்தக்கவர்கள், இதல்லாமலும், திரத்துடன் செயிக்கப்போகின்ற உம்மைப்போலொத்த வீரனுக்குப்பக்கத்திலிருந்து, நச்சுநச்சென்று லெச்சைகெட்டுப்பேசி, செயிப்பவர்களையுந்தடுத்து, அவர்களுக்குள்ள திடதைரியத்தையுங்கெடுத்து நாங்களுங்குப்புறப்படுத்து, வெல்லாமலும், வெல்லுகின்றபோர்கட்கு உற்சாகஞ்சொல்லாமலும், காரியத்தாழ்ச்சி செய்கின்ற நாங்களாதலால் எங்களை ஊரைப்பார்க்கப் போகச்சொன்னாய்.

அப்படிப்போக மனதில்லாதவர்கள் அர்ச்சுனனையடித்து வெற்றிபெறப் போகின்ற என்னுடைய யுத்தவல்லபத்தைப்படித்து எனக்குப்பின்னாலே நின்று கண்டு சந்தோஷப்படுங்களென்று பேசினாய் போகட்டும் எங்கள்கதிதான் அப்படிக்கானாலும், வாய்ப்பகட்டுரைத்த உன்கதியை யோசிக்குமிடத்தில் போர்முனையைவிடுத்து சாதுவாகிய பாண்டவர்களுக்குச் சந்தோஷங்கொடுத்து உனக்கு அன்னமிட்டு ரக்ஷித்த துரியோதனராஜனுக்கு துன்பமூட்டை கட்டிப்போட்டு, நீபெற்றிருந்த புகழுங்கெட்டு, நன்றிமறவாத வென்றிவீரனானையே, வீரசுந்தரனே! இப்போது ஓடுகின்ற நீ-ஒருவனை, திரும்பிவருவையாகில் உன்னைக் காப்பாற்றிய துரியோதனனுக்குஎன்னசொல்லுவாய், பெரியோர்முதலியபிராமணனுக்கு க்ஷாத்திரமில்லை, வைதீக சாந்தஸ்தமுடையவர்கள், க்ஷாத்திரமுள்ள க்ஷத்திரியகுலாதிபன் நான்தானென்று மார்புதட்டிப்பேசிய நராதிபனே எதுகாரியங்களையும் எண்ணித்துணியாமல், வீண்ஜம்பம்பேசுகின்ற வீணனே, இத்தருணத்தில், கானிடைசப்பதைக், கேட்பாயாக-உலகத்தில் மௌடீகர்கள் யிருக்கின்றவர்கள், இருந்த இடம்விட்டெழுந்திராமல், வாய்கொண்டம

ட்டும் வசனிப்பார்கள் சொல்லியவண்ண நடத்தமாட்டார்கள்.

அப்படிநடத்தலாமென்பது சிருஷ்டிகர்த்தாவாகிய திசைமுகனுலுங் கூடாது ஆகையால், கெடிஸ்திலாதிபனுன கௌரவகுலமுதல்வனுல், தனம்-தானியம்-சம்பத்து-பசு-பத்தினி-புத்திர-மித்திர - பாக்கியமும்படைத்து, பொக்கிஷம்பொருளைப் பூரியாக்கிகொடுத்து, புகழுடம்பெடுத்துப் பூரித்திருக்கும் புஜபலவலிமையால், முன்பின்யோசிக்காமல், வம்புப்பேச்சுகளைப் பேசிவிட்டாய், மகானுக்களுக்கு மனம்ரோசிப்போச்சுது உன்பேச்சின்படி முடிப்பதற்குஉனக்கும் அசாத்தியமாச்சுது இன்னும் ஒருசிங்கத்தை பதினுயிரம்யானைகள் வளைத்துக்கொண்டாலும், குப்பைமேடு தங்கத்தை மறைத்துக்கொண்டாலும்சிங்கத்திற்கும்-தங்கத்திற்கும்-பங்கம்வருமென்று பொங்கி வழிகின்ற நீ-உன்சிந்தையிலெண்ணுதே ? அங்கர்கோனேயென்று பலபலவிதமா யெடுத்துப்படித்து, தவடையிலு மிடித்துபோற் பேசியபோது, சூராதிசூரனும்-அஸ்திரசஸ்திர சாமர்த்தியனுமாகிய கர்னன்-ஏதொன்றும்பேசாமல், எதிர்த்துவாயாடாமல், தலையெடுத்துப்பாராமல், சமயத்திற்குத் தக்கபடிசொல்லாமல், அர்ச்சுனனுல்மடிந்த பிணமலைகளுக்குப் பின்னுலொதுங்கி, ஆமைபோற்பதுங்கி, அகுதிபோன்று நின்றுன் அவன்சதியப்படியிருக்க, வாசத்தேன் மருவிக் குலவிய, வசனத்தார்மாலை நிலவிய வீரத்தோளபூரித்திலங்கிய, தநுவேதியர் குமாரனெனமருவிய, அஸ்வத்தாமாவென்னும் அதிரதமுதல்வன் வீரத்திற்பின்னிட்டோடும் விதவைமுகத்தில் விழிக்கலாகாது விழித்துவசனிப்பது மிகுபாவமென்று அவ்விடம்விட்டுநீங்கித் தனது தந்தைமுதலாகிய பெரியோர்களிருக்குஞ் சாரிற்போய்ச்சேர்ந்தான், இப்பால் அர்ச்சுனனிடத்தில் நடந்த அதிசயத்தைச் சொல்லுகிறேன் கேளும் ஜெனமேஜெய மஹாராஜனேயென்று வைசம்பாயனர் சொல்லிவந்தார்.

பிற்பாடு, விஜயவீரப் பெருமையாற்சிறந்த விஜயன், பொற்சிகரங்கூடிய- அனுமக்கொடியாடிய தேர்மீதிருந்துகாணனுதும்போது, கைகொட்டிநகைத்த உத்திரகுமாரனை அதட்டி ஆ-ஆவென்றுன் அந்தஅமட்டலைக்கேட்ட உத்தரகுமாரன் கர்ப்பங்கலங்கி சர்ப்பம்போல் வளைந்துஒருவாறு வாடிதாழுட்டிய செவ்வெண்ணெயுங் கழன்று, உறங்கியுழன்று ஒடுங்கியழன்று தேரிற்சாய்ந்தான் இவ்வாறிளைத்த, விராடபுத்திரனைப் பாண்டுபுத்திரன் பார்த்துபசியாதாபங்கொண்டு மெத்தவும்பயந்து விட்டாயென்று, தன்னுடைய சித்தத்திற்சேர்ந்து, மகிழ்ந்தமுகமுங் குளிர்ந்தபார்வையுங்-கனிந்தசொல்லுங்-கசிந்த அன்புமுள்ளவனுய்ச் சொல்லுகின்றுன்.

மச்சகுலத்திற்கனியாகிய மணியே ! இச்செகத்திற் பிரகாசிக்கின்ற இரவிமைந்தனுன கர்னன் என்னுடனெதிர்ந்து அதிர்ந்துபோர்புரிந்து வெறுங்கைவீணன்போல், பின்னிட்டோடிப்போனுன அவ்வோடிவிடாவென்று நாம் அலட்சியமாயிருக்கலாகாது, இராஜவீரர்கள் யுத்தத்தில், இளைத்து நாட்டமெடுப்பதுமுண்டு, மறுபடியுங்கிளைத்துவந்து போர்கொடுப்பதுமுண்டு ? இதன்றி, அங்கர்கோனை அடித்துத்துரத்தியவாறுபோல் பெருங்காடென்னக் கலந்து நமக்குநேரில் அடர்ந்து பெருமுழக்கமிட்டிருக்கின்ற சேனைகளுடன் அதிரதர்முதலாகிய வேந்தர்களையும்வென்றுஜெயம்பெறவேண்டியிருப்பதனுல் இவ்விடத்திற் கூடியபேர்கள் இன்னரின்னுரென்று நீ-தெரிந்துகொள்ளும்படிக்குச் சொல்லுகின்றேன் கேளென்றுன்.

மாலையணிந்த தோள்வாட்படை மைந்தனே ! இத்தோரணக்குடைநிரில்நிற்கின்றவர் செய்தவிலக்கருப்பொருளாகிய பனையைக் கொடியிலெழுதிப் படைத்திருக்கின்றவர் பாரியதேரினையுடையவீரியர். தெய்வத்தன்மைபெற்ற அஷ்டவசுக்களில்கனிஷ்டரானவர் இவ்வுலக முதலாகிய எவ்வுலகருங் கொண்டாடாநின்ற எங்கள்குலத் தலைவர், இவரது தந்தையாகிய சந்தனு மகாராஜனுக்கு பரிமளகந்தியாருடைய போகநலங்கிடைக்கும்படியாய் விவாகம்பண்ணிவைத்தார் அந்த விவாகமுன்னிலையில் இவர் அனுபவிக்கவேண்டிய சுகலவைபவ சம்பிரமங்களையும் சிறுவயதிற்கைவிட்டு இராஜயோகமான விரதவழியில்நின்று வீஷ்மனென்றுபேர்கொண்டு மெய்வழிகண்ட மேன்மையோர்களால் மேன்மைபெற்றவர் இவர் எந்தக்காலத்தில் இறக்கவேண்டுமென்று எண்ணுகின்றுரோ, அந்தக்காலத்தில் எமதர்ம்மராஜன் இவரிடத்திற்கு வரவேண்டுமல்லது மற்ற ஆத்மகோடிகள்போற் கருதிவரப்பட்டாது, இவருடைய ஆயுள்முடிவில் தண்டபாசகுல

கோலகண்டகனாகிய நமன்வந்தாலும் அவனுடைய அதிகாரவேலைத அற்றுப்போம்படிக்கு சத்தியசீல உத்தமனான சந்தனுமஹாராஜன் வரங்கொடுத்த ஆசீர்வசனமுந் தந்தருளப்பெற்றவர் இவ்வுலகத்தில் இவரொத்தவர்களைக் கிருந்தாலுமிருக்கலாம் இவர்தானையா எங்களின் மூதாதையாகிய பாட்டன்.

சத்துவகுண புத்திநுட்பத்தால் கற்றறிவுடைய உத்தரகுமாரனே ? இந்தவீஷ்மருக்கு அண்டையில் சண்டைக்குவந்திருக்கின்ற நான்குவேதத்தையும் பொறித்த நான்மறைக்கொடிதரித்த சக்கரத் தேர்மேலமர்ந்திருக்குஞ்சுவாமியவர்கள் தேன்சாறுபாய் மாஞ்சோலைவிரும் பாஞ்சாலதேசத்தினதிபாலும் துருபதராஜன் கொண்டகர்வத்தைப் பங்கப்படுத்தினவர் அறுபத்துநான்கு கலைஞானங்களும் ஐபந்திரியில்லாமல் விருத்திப் பொருளுடன் ஆராய்ந்துணர்ந்தவர் தேவாஸ்திரங்கள் முற்றும் ஸ்திரம்பெறத்தேர்ந்தவர் சம்பிரதாயத்தனுர்வேத மோர்ந்தவர், திரவியசம்பன்னர்களாகிய பக்குவர்களுக்கு விலத்திறந்தெரிவிக்கும் விற்குருவானவர் முடிதாங்கிய தேவர்களும் படியோங்கிய முனீஸ்வரர்களும் பணியும்படியான பதம்பெற்றவர், உத்தம க்ஷத்திரியகுலத்தி லுற்றவர்போல் வெற்றிவாகைபடைத்த வீரப்பிரதாபர், மதாணிபூண்டிய திராணியுடையவர் இவர்தானையா எங்களுக்குக் குருவாகிய துரோணாச்சாரியார்.

சங்கிராம வித்குருவான துரோணாச்சாரியருக்கும்-கங்காபுத்திரரான வீஷ்மருக்கும் நடுவில், வெள்ளைக்கொடியும் பொன்னணிமுடியும் வீரபட்டமும் வேகப்புரவியும்பூட்டி, மேகமனாகிய வெண்கலத்தேரோட்டி ஊக்கத்துடன் வந்திருக்குந் தீர்க்கமும் அழகுங்குலாவிய மதிமுகமும் குமுதமனைய சிறுநகையும் குழலியர்வும பெருமிதமும் அருள்விழியும் குருமணியாற்செய்த ஆபரண அலங்காரமும் பிரமதேஜசம்பன்னத்ததோளும் வீரகண்டை தரித்ததாளும் சௌந்திரியகாந்தியுந் தவமும் ஜெபமும் வரமும் உரமும்பொறுமையும் உடையவர் தனுவேதத்திலும் மதுவேதத்திலும் சமர்வேதத்திலும் சதுர்வேதத்திலும் நிபுணரானவர் இந்தக்குவலயமெல்லாங் கொண்டாடுங் குணநிதியாகியகிர்பாச்சாரியார். இந்தக்கிர்பாச்சாரியருக் கண்டையில் நிற்கின்ற அழகியதேராளியானவர் பஞ்சபாணந்தரித்த மன்மதனென்று சிலர்பேச வேலாயுதந்தரித்த பாலசுப்பிர மணியனென்று பலர்சொல்ல சோடசகலைநிறைந்த சந்திரனென்று சிலர்துதிக்க வச்சிராயுதந்தாங்கிய இந்திரனென்னப் பலர்மதிக்க மூதண்ட நடுங்குங் கோதண்டராமனென்று சிலர்கொண்டாட பிதுர்வாக்கிய பரிபாலனஞ்செய்துபரசிராமனென்று பற்பலர்வந்திக்க, இப்படிக்கு எப்புவனமுங்கொண்டாட ஒப்புவமையில்லாத தோற்றம்படைத்த புண்ணியன், முப்புரமெரித்த எப்பொருட்கிறையான முக்கண்மூர்த்தியின் திருவருட் பயன்பெற்ற காளை ஒருக்ஷணத்தில் திரிபுவனத்தையும் அழிக்குங் குழக்கன்றுபோன்ற அஸ்வத்தாமா, எங்கள்குருவான துரோணாச்சாரியருடைய குமாரன் எனக்குரியமித்திரன், விராடபுத்திரனான உத்தரகுமாரனே, இப்போது நான்சொல்லிவந்த வித்தக வீஷ்மரும் கிர்பாச்சாரியரும் அஸ்வத்தாமாவும் என்னிடத்தில் அருமைப்பாராட்டி, அன்புவைத்திருக்கின்றவர்கள், குற்றமற்றவில்த்திறம் அப்படிக்கிருந்த போதிலும் அவர்களுடன் போர்புரியவேண்டிய அவசியமில்லை இன்னம் நாம்வெல்லவேண்டிய ஆசாமிகள் வேறிருக்கிறார்கள், அவர்களை முன்பின்பாராமல் முதலறக்கொன்று வென்றிபெறுவது நமக்குமேலாகியகீர்த்தியாம், இன்றுபூர்த்தியாகப் போர்புரிந்து புகழுறச்செய்வமாகில், நல்லதிடத்தையுந்திறத்தையும் அறத்தையும் மகிமையையும் நமக்குவிளைக்காமற்போகாது ஆகையால் நாம்வெல்லவேண்டிய மேலவனைச் சொல்லுகிறேனென்று விளம்பலுற்றான்.

ஐயா, உத்தமனென்னும் உத்தரனே, உனக்குநேராக நீலக்கொடியாடைபறக்குந் தேரிலிருப்பவன் வணங்காமுடி மன்னனைத்தணக்கி, அவனது மதியைமறக்கி தன்வசமாயிணக்கி இந்திரப் பிரஸ்தத்திலிருந்த எம்மைவரவழைத்து வஞ்சகச்சூதாடச்செய்தகொடும்பாவி, மகாசபைகூடிய மன்னர்முதலாகிய மாசகசச்சனங்களும் எங்களைக்கண்டு கண்கலங்கும்படியாயியற்றிய காந்தாரதேசவீரன் சவுபாலராஜகுமாரன் எங்கள் சமஸ்தானத்தைக் கெடுக்கப்புகுந்தசூழ்ப்பன் கபடமடைத்த குடுக்கைகடைவால் விஷங்கொண்ட செந்தேள் ஒருகாலத்தும் நம்பப்படாத உரகம்இவன் தானையா சகுனியென்பவன்.

அந்தச்சகுனிமாமனுக்குச் சமீபத்தில் குச்சிதமில்லாச் செஞ்சைக்கொடியோடு, அச்சடித்தது போ

ல் உச்சிதவிற்பிடித்து வச்சிரத்தேரேறி விச்சித்திரப் பணிபூண்டிருப்பவன் சர்சரவக்கொடியோனுக்குத்தம்பி, இளவரசுப்பட்டங் கட்டிக்கொண்டவப்பி சர்வதந்திர வுபாயசுதந்தரன் பழிபாவத்திற்கஞ்சாத அச்சாதனன். இவன்தான் பாஞ்சாலிமயிரைப்பற்றியிழுத்து கன்னியாகவிருந்தசபைக்கேற்றிலைநதுவஸ்திரபங்கம்பண்ணிய புண்ணியவான்.

அதோ ஈசானதிசையில் பன்றிக்கொடி பறக்க சண்டைத்தேரேறி துச்சாதனனுக் கண்டையிலிருப்பவன துரியோதனன்முதலாகிய நூறுபேருக்கு மச்சான், தங்கை துச்சளையைக்கலியாணஞ்செய்துக்கொண்டதோன்றல், சிந்துதேசராஜ சயத்திரதன் எங்களாற்பெற்ற வெகுமானங்களையுஞ் சன்மானங்களையு மறந்து நாங்கள் காட்டிலுறைந்து வேட்டைபோயிருக்கும்போது முறை துறைபாராமல் திரௌபதியை யெடுத்துப்போனான், அந்தச்சங்கதியைக்கேட்டுவந்த நாங்கள் ஓட்டமாகச்சென்று அவனைக்கண்டுபிடித்து வாட்டப்படுத்தி ஐந்துசிகைவைத்தரிந்து, முகத்திற் புள்ளியிட்டு போர்வேறிப்பட்டு தருமராஜனுக் கெதிரில் நிறுத்தி கட்டவிழ்த்து வெட்டவெளியில் அவமானப் படுத்திவிட்டுத் துரத்தினோம்.

இப்பால், வாயுமூலைமட்டிலிருக்கின்றவன் காந்தாரி திரிதராஷ்டிரனென்னுஞ் சேற்றிற்பூத்த பலதினுசுபுஷ்பங்களில் ஒருசெங்கழுநீர் சிறந்த தன்மைமைபோல் பிறந்திருக்கின்ற விகர்ணன் இந்தநீதிமான் நெறிமுறைதவறுமலுன்னி பாவபுண்ணியங்களெண்ணி அதிரௌபதி கேட், சொன்னதிற்கு இராஜசபையில் ஞாயஞ்சொல்லி பாஞ்சாலிபட்டசஞ்சலங்களைதமாற்றி தேற்றிவிட்ட தருமவான் இவனே இவ்வுலகத்திற் புகழாதவர்களில்லை புத்திமானுன உத்தரனே.

இதோ நமதுதேருக் கெதிராக நட்சத்திரக் கூட்டம்போல் தேர்மேல்விளங்குகின்றபசகள் துரியோதனனுக்குத் தம்பிமார்கள் காலாந்தகனொன்று கருதுவதற்குத் தடையில்லைகொடியதுட்டாள். அதோ, தத்தித் திமிதிகுதாவென நர்த்தனங்காட்டிய குதிரைகள் பூட்டிய ரதத்திலமர்ந்தவன் சோமதத்தன்,

இதோசித்திரவில்லிலைப்பவன் அசுவசேனன்

அதோ, தென்புறநிற்பவர்களியாவரும் தேசராஜபோஜர்கள், இப்போது நானுனக்குக்காட்டிய இவர்களையெல்லாம் எதிர்த்துச் சண்டைவிளைத்துக் குலைலைக்கோடவடித்து மந்தரகிரியாகிய மத்தாலடிப்பட்டலைபட்ட பாற்கடற்போலுழக்கிச் சுழலவிட்டுக் கலக்குகின்றேன், ஓ? விராடவேந்தன மைந்தனே, நீ சந்தேகங்கொண்டு காவென்றுசொல்லித் தன்னுள்ளக்கருத்தையும் அவனுக்கு விளங்கும்படியாய்மெள்ளத்தெரிவித்தான். அதெவ்வாறெனில், யுத்தமுனையிலடிபட்டு ஓடிப்போன கர்ணனைக்கண்டு உத்தரன்கைகொட்டிநகைத்ததைப்பற்றி இனிமேல், வீஷ்மர்-துரோணர்-கிருபர்-அசுவத்தாமாமுதலியநால்வரும்தன்னோடெதிர்த்துச் சண்டைவிளைத்து அடிபட்டுப் புறங்கொடுத்தோடப் போகின்றார்களென்பது தனக்கு நன்றாய்த் தெரிந்திருக்கின்றபடியால் ஒருவேளையப்படியப்போதுமிந்தச்சாரதிகைகொட்டிச்சிரிப்பானாகில் குலமுதல்வனான வீஷ்மர்முதலாகிய பெரியோர்கள் தங்களிடத்தில் அன்புவைத்தவர்கள் அவர்களுக்குவந்த குறைவும் அவமானமும் தனக்கு வந்ததுபோலுமென்றெண்ணி பக்ஷமிச்சமான அர்ச்சுனராஜன் மச்சராஜகுமாரனுக்கு அச்சமுண்டாகப்பேசி மற்றசத்துருக்களையுந் தெரிவித்து ஒருவேளை அவர்களைநோக்கி உத்தரகுமாரன்கைகொட்டினாலும், அதனால் தாழ்ச்சியொன்றுமில்லையென்று எண்ணிய தன்கருத்தை இவர்கள்சத்துருக்கள் இவர்கள்மித்திருவென்றுமுத்தரனுக்குச்சொல்லி பெரியோர்கள்பேரி லிருக்கின்ற பட்சமும் துரியோதனனிடமென்னும் பகைவர் மேலிருக்கும் அபட்சமும் அடர அடங்கலும்வேறுவிதமாய் வெளிப்படுத்தினான்.

அப்பா உத்தரகுமாரா, பரிசுத்தவான்களாகிய ஆசாரியபுருஷர்கள் பேரிலெதிர்த்துப்போர்போராட வேண்டிய கருத்தையொழித்து மற்றவர்கள் பேரிற் யுத்தஞ்செய்ய வேண்டியிருப்பதால் நமது தேரைச் செலுத்தி சைனத்திற் செயம்பெறலாகுமென்று சிந்தை மகிழ்ச்சிகொண்டுசெப்பினான்.

இப்படிக்குச் சொல்லிய, சுப்பிர தீபம்போன்ற அருச்சுனனதுகருத்தை உத்தரகுமாரன் திருந்ததுடமாயறிந்து தானகைத்ததைக்குறித்து மிகப்பயந்திருந்துத் தன்னிடத்தில் அர்ச்சுனன் கலந்துபேசினானென்று தன்னை மறந்துபோகாமல் ஜாக்கிரதையாய் மரியாதையுடன் அடங்கி அர்ச்சுனனுரைத்த வாய் மொழிமுன்னமே மனோவேகத்திலும் வாயுவேகத்திலும் மிஞ்சும்படிக்கு மண்டலமதிர - எண்டிசைபிதிர அண்டர்கள் ஒதுங்க, அஷ்ட

தீர்த்தும்பி தனதுதேஜைச்சக்தியிலுந்தி தனஞ்செயனுக்கு முந்திசண்டைசெய்யத் தொடங்கினன்.

இவ்வாறு தனுவேதசாஸ்திரச் சாலச்சிரேஷ்டனும் ஆரியகுமாரனும் வீரியகாமனுமாகிய அஸ்வத்தாமாவானவர் அர்ச்சுனராஜனை தடுத்துப் போர்கொடுக்க வந்தது எத்தன்மையொத்ததென்னில் மேன்மேலாக நெருப்புப்பொறிவீசிய பெருந்தீக்கடவுளைப் பகைத்து ஆலாலவிடத்தில் முளைத்த அருங்கனல்வந்தெதிர்த்ததுபோலிருந்தது இப்படியாக முனைந்த அஸ்வத்தாமன் அர்ச்சுனனுடைய தேரின்பேரில் ஐம்பது அஸ்திரங்களும் அஸ்வங்களின்மீது நூறுகணையும். சாரதிபேரில் இருநூறுசரமும் அனுமக்கொடிமேல் ஐந்நூறம்பும், பச்சைசிறப்பார்த்தன்பேரில் ஓராயிரம் பகழியும் முன்பின்பாராமல் பிரயோகம்பண்ணி தன்பின் பலத்தைத்தேடாமல் பங்கப்படாத சிங்கக்குட்டிபோற் சீறிநின்றான்.

அந்த அஸ்வத்தாமன் கோர்த்த அம்புக் கும்பலைப்பார்த்த தேவேந்திரன்முதலிய தேவர்களும் ஆர்த்து ஆச்சரியமாக்கொண்டு அதிசயப் பட்டார்கள்.

அப்போது! ஜயவிஜய சௌரியபராக்கிரம கண்டீரவகாண்டீப தனஞ்செயன்கண்டு அண்டமுகடதிரவருகின்ற பிரசண்டக்கணைகளாகிய ஓராயிரத் தெண்ணூறுபாணங்களையும் ஒருநொடியில் நறுக்கென்றுகுறுக்காகவெட்டி குறுந்தூளாகக் கொட்டிவிட்டு கூர்மையான இருபது சூரியாஸ்திரங்களைக்குறித்துக் கைப்பிடித்து ஆரியமந்திரம் உச்சரித்துத் தொடுத்து அஸ்வத்தாமன் ரதத்தினட்டிய சுவேதத்துவஜத்தை அடியோடுமாட்டி, தீரப்பார்வைகாட்டிநின்றான் அதைக்கண்ட அஸ்வத்தாமன் உசிதமான வச்சிரவாளி தட்சணமேகொண்டு பிரயோகம்பண்ணி மெச்சியமேன்மைக்கு உச்சிதமாகிய அர்ச்சுனராஜனதுவீரபட்டத்தையறுத்து, ஒடியாத காண்டிபத்திற்பூட்டிய அறுதநாணியைக்குதை நீக்கித் தளரப்படுத்தி அநந்தகோடி தாம்புகளினால் ஆகாயம்பூமியாவத்துந் தெரியாமல் மறைத்து, அர்ச்சுனனுடைய தேஜாயு மூடினன் இத்தன்மையாகக் குருபுத்திரனடாத்திய யுத்த திறத்தை வெற்றிவீரப் பிரதாபவிஜயன்கண்டு புஞ்சிரிப்புக்கொண்டு ஓ? அஸ்வத்தாமா வென்னுஞ் சிரசீவியே! என்னுடைவின்னாணியைத் தளத்திவிட்டதினால் உனக்குப் போர்ச்சேவகனென்னும் புகழ்கிடைத்ததுண்டோபோபோ இதுவைத்தியமாமென்று வீரதீரகாண்டீப வின்னாணிபிருங்கி கோரபாரசரங்களைக் குறையாமலிறைத்தான் அஸ்வத்தாமாவும் அற்கிடாகிய அஸ்திரங்களை அபரிமிதமில்லாமல் அமோகமாய் விறைத்தான் இப்படிக்கு இருதிறவருஞ் செப்பிடுவித்தை செய்பவர்போல ஒப்புவமை உரைப்பதற்கினதி எப்புவனமுநடுங்க அப்பூமாரிபொழிவதை செப்புதற்கரிய துரியோதனனுடைய சேனைகள்நோக்கி தங்களுக்குச் செயகாலமென்றுட்கொண்டு சந்திரனைக்கண்ட சமுத்திரம்போல இறைந்துபொங்கி ஆசாரியகுமாரன்செய்த அமர்த் தொழிலைப்புகழ்ந்து மகிழ்ந்தார்கள் இவர்களிருவரும்விட்ட அஸ்திரங்களானது பரவி எட்டுத்திசையும் எட்டுக்கரியும் எட்டுக்கிரியும் வட்டப்புவியும் அட்டமாநாகமும்மேவிட்ட சுவர்க்கலோகமும் நடுங்கிரோணடைந்து நலியச்செய்தது.

இந்தப்படிக்குஒருவருக்கொருவரோயாமல்ஒன்றுபத்து-நூறு-ஆயிரம்-பதினாயிரம்-லக்ஷம்-லக்ஷாலக்ஷம்கோடி-கோடாகோடி-அர்ப்புதம்-நியர்ப்புதம், பொற்புதமென்று கங்குகரைகாணாமல் எங்குமிறைந்துறைய ஒருமுகூர்த்தபரியந்தம் நெறநெறநெறநெற வெனப்பொழிந்தகாலையில் தோள்வல்லமையுடைய துரோணாச்சாரிமகனது அம்பறாத்தூணிநிறைந்த அஸ்திரங்களியாவும்வறண்டுபோய்சொற்பத்தரித்திரன் போற்சோரவடைந்திருந்தான் அஃதெப்படியென்னில், கீழ்மக்கள் மேன்மகளாவார்களென்பது கனவிலுங்கிடையாது ஒருவேளை தந்தைவிந்தெழுந்து முந்திவந்த தெந்தவினையோ அந்தச்சம்பந்த அருவினையதனால் நடுவதுபாதிமுதலிய நாட்களிற் செல்வநேரிடலாகும் அவ்வாறுநேரிட்டால அத்தைப்பாதுகாத்து தன்னிலுஞ் சிறந்தசாதுக்களுடன் சாவாசஞ்செய்து விற்பனவிவேகம் விளங்கக்கற்பனையானகல்வியையறிந்து அக்கல்வியிற்கழறிய கருத்தையுணர்ந்து அந்தக்கருத்திற்கிணங்க அடங்கியிருந்து முன்பின்னுலகமுறைமையுந்தேர்ந்து அடக்கம்வணக்கம் அன்புங்கொண்டொழுகி இரக்கந்தயை பெற்றிருப்பவர் தமக்கு சம்பத்தெந்நாளுந் தவறடையாது அப்படிக்கில்லாமல் பற்பல அகந்தைகள்விளைத்து தலைகால்தெரியாச் சன்னதமாடியிளைத்து பெரியாரைப்பணியாத பெருமைமுளைத்து வீஷமெத்தாற்றிளைத்து வெறும்பொய்யாழ்களைத்து விசனத்தால் உளைத்து வெதுப்புண்டு

அறிவில்லாத அற்பர்க்குச்செல்வம் பகையென்பதற்கிணங்க கிடைத்திருந்த ஐஸ்வரியத்தைப் பிரயோசனப்படவொட்டாமற் போக்கடித்துக்கொண்ட வெறும்வீணனைப்போலிருந்தது அஸ்வத்தாமன் அருமையாய்ச் சம்பாதித்த அஸ்திரங்களடங்களும் வழிதுறையில்லாமல் வாரியிறைத்துப்போட்டு வதங்கியிருந்த வண்மையானது.

இந்திரகுமாரனாகிய அர்ச்சுனனது அம்பறாத்தூணி இறைக்கச்சுரக்கு மணற்கேணிபோல் எடுக்கவெடுக்கக் குறையாமல் அக்ஷயமாய் எப்போதும்போலிருந்தது, அதெப்படியென்னில், தப்பிதமில்லாமல் கற்கவேண்டிய ஆசு மதுரம் சித்திரம் வித்தாரமென்னும் நான்குகவிகளையும் ஆராய்ந்துதெளிந்த பூர்ணவித்துவான்களின் விவேகவிளைவினால் கற்பனை அலங்காரங்காணச் சுரக்கும் பாவின் விர்த்திபோலிருந்தது.

இப்படிக்கிருக்க குற்றமற்ற வெற்றிபெற்றகொற்றவர்தம்மைப்போல் தேரின்பேரில் அசையாமலிருந்த சிங்கக்குருளைப்போன்ற அஸ்வத்தாமனது செயலைத்தீர்த்தோ அல்லது திறமாகிய சிலைவிஜயனுடன் யோர்புரிந்து ஜெயம்பெறநினைத்தோ அல்லது மைத்துனராகிய துரோணரும் மருமகனாகிய அஸ்வத்தாமாவும் இளைத்துப்போனார்களே அப்படியேநாமும் இளைத்துப்போவோமென்னமுனைந்தோ என்னமோ தெரியாது செவந்தசிறமுந்திறமும் படைத்த கிருபாச்சாரியர், தம்முடையதேரைக் கடகடவென்றுவிடுத்து, கணைகளைவெகுவாய்தொடுத்து, தனஞ்செயனோடெதிர்த்து சண்டைவிளைத்துத் தடுத்தார்.

அந்தவேளையில் கடல்நிறங்கொண்ட காண்டீபனானவன் சாரதியான உத்தரகுமாரனைப் பார்த்து புத்திமானே! அஸ்வத்தாமன் அம்புக்கூட்டிலுள்ள அஸ்திரங்களெல்லாவற்றையும் வாரியிறைத்து வறண்டிளைத்துப்போனான் அவனுக்குநேரிட்ட அவமானத்தை வெளிப்படுத்தலாகாதென்று அவனல்லமானன கிர்பாச்சாரியர் நம்முடனெதிர்த்துப் போர்புரியவருகின்றார் பாரென்று அருட்பார்வையாற் காட்டினான், அந்தக்குறிப்பை யறிந்துக்கொண்ட உத்தரகுமாரன் சக்கரங்களுள்ளதேரை கர்க்கரத்தொனிகாட்டி மூட்டகரமாகவோட்டி, பூர்வாச்சாரியருடைய தேருக்கெதிர்வந்து வளைத்தான் அதுகாலையில் அர்ச்சுனராஜன் காண்டீபத்து நாணியையிறுக்கி மின்னவிடி பின்னியமுழக்கத்துடன் பொழிகின்ற மேகமுநாணி வெட்கப்படும்படிக்கு சரசரவென்னச் சரதாரையாய்ச்சாய்த்தான் அதைக்கண்ட கிருபாச்சாரியருங்கிட்டி ரதத்துடன் ரதமுமூட்டி நாலாவிதகோலாகல பாணங்களைக்கொட்டி அவனுந்திய கணைகளை வெட்டி ஓட்டியுத்தம்பண்ணினார்.

இவ்விருவரும் போராடிய வல்லமையை இவ்விதமென்றுமதித்துச்சொல்ல வல்லவரில்லை ஆனால் வானத்தில் வேடிக்கைப்பார்த்திருந்த வானவரும்மாதவர்முதலாகிய பிதிர்த்தேவதைகளும், சேனைதூரம் ஓதுங்கிச்சென்றார்கள் பிரசண்டவாயுவுங் கலங்கிப் பிரகாசிக்கு மகமேருவுங்குலுங்கி, எட்டுத்திக்குஞ்செவிடுபட்டொடுங்கிப்போச்சுது, அம்பரம்சுழன்றுபம்பரம்போலாடி அக்கினியிருந்து அனற்பொறிமலிந்துவீசியது அண்டகூடந்தொட்டு அகண்டமூலைக்குவிட்டுச்சாய்ந்தது அந்தரகதியாய்த்தொக்கி அஞ்சனமேகமும்விக்கி அதன்துவாயின்பெருக்கி நீரிடி நெருப்பிடியைக்கக்கி மலைக்குகைகளிலும் பிலத்துவாரங்களிலும்புகுந்து உக்கிரியாவெங்கிப்போகப்பிரமாதம் விளைந்தது

இப்படியாக வில்த்திறங்காட்டி விக்கிரமக் கிர்பாச்சாரியரும் பராக்கிரமப் பற்குனனும் தங்களுக்குத்தெரிந்தசிலைத்திறங்களைக் கணைத்திறங்களைச்சீராட்டிப்பாராட்டிமுன்னோட்டம்பின்னோட்டமாகத் தேரையுந்தி வெகுநேரம்வரையிலும் பகழிகளுந்தி ஒருவருக்கொருவர்உதிரஞ்சிந்திஉடலெல்லாஞ்சிக்குசிந்தாய்க்கொந்தி உருத்து முந்திப்போர்புரிந்தார்கள்

அதுகாலையில்கிரீடியானவன் கைமிஞ்சி நீருடிச்சரங்களைச் சரோலெனப்பூகுத்தி புட்பகவிமானம்போன்ற சக்கரத்தேரினையும வேதைவெள்ளைக்கொடியையுஞ்சாரதிகுதிரையும்தத்திவிழத்தாக்கி,கிருபாச்சாரியருடையஉடல்முழுதுந்துளைபோக்கி மறுடியும்பாதமுதற்றலைவரைக்கும பாணங்கள் ஊடுருவிப்போகும்படிக்கு நாணிவிக்கி; ஷ்டங்காரஞ்செய்தான் அவேயகாலையில் கிர்பாச்சாரியர்மதிமயங்கித்தியங்கிக் கண்கலங்கி மானம்துலங்கி மண்மேற்கரைந்தார் அந்தக்கிர்பாச் சாரியருக்கு இரண்டுபக்கத்திலும் திசண்டமலைபோலிருந்த சக்கரக்ஷகரான் சந்திரகேது-சுஷேணன்-மணிமந்தன் வமலான்முதலிய வெற்றி

வில்வீரவேந்தர்கேகர் ஆரபாரித்து அர்ச்சுனனைமட
க்கி; ஜெயம்பெறுமல் விடமாட்டோமென்று ஸ்கிரப்
போர்வினைத்தார்கள், அவர்களை அர்ச்சுனன்பார்த்து,
அதிகோபமாய்வேர்த்துமறுகி கொதித்து மாறிமாறி
வீரக்கும்புகள்பேரில் நூறு நூறாயிரம் அம்புகளை
வி அவனுருடைய ஆயுதங்களையும் பாணங்களையு
ம் விற்களையும் தேனையும் சிகரதனையும் நொறுக்கிப்
பறக்கவடித்து மலையொத்தபுயத்தைக்குறைத்து இ
டையுந்தொடையும் இடையதறித்துகாமுங்காலும்
புறம்பட்டுமுறித்து தலையைச்சிதைத்துத் தரணிமேற்
குவித்துத்தாவிய்காலையில் வீரத்தேரோட்டி திரம்விடா
தவிருந்தராகியகிர்பாச்சாரியர்வெளிப்பட்டார் அவரு
டையவில்லையும் ரதத்தையும் சாரதிகுதிரையையும்
அழித்து அவருக்குப்பின்னுதவி வந்தமன்னவர் பல
ரையுஞ்சிந்தினன்.

தன்னுதவியான மன்னரையுமடித்து தன்கையி
லிருந்த வில்லையுமொடித்து தானேறிவந்த தேரையும்
பொடித்து தானைகள்சான்குந்தவிடாயிடித்து, ஜயம்ப
டைத்திருக்குந் தநஞ்செயனை கிர்பாச்சாரியர் கண்டு
தாளமாட்டாமல்வருந்தி உடல்பட பதைத்து பூமியிலு
ட்கார்ந்து பாய்ந்துள்ளிவேலெடுத்து பூசைமுடித்து
பற்குணன்மேல் விட்டெறிந்தான், அந்தவேலாயுதம்
அதிர்ந்துவருகிற ஆர்ப்பாட்டத்தைஅர்ச்சுனன்தெரிந்து
நகைமுகமாகச்சிரித்து, அக்கினியாஸ்திரந்தொடுத்து
வெட்டையாகியவெண்கலப்பொடிபோலுடைத்துத்
தள்ளினன் அப்போது கிருபாச்சாரியார் தானெறிந்
த வேலாயுதம்போனவிதத்தையும் அதைமுறித்த அ
ர்ச்சுனனது திறத்தையுங்கண்டு ஆக்கிரமித்து வெகு
ண்டு உடல்மறந்துசிறந்தவாளாயுதமும் கேடயமு
ங் கைக்கொண்டு ஒரோவீச்சாவீசி விடக்கருதிவிஜய
னுடைய தேரிற்பாய்ந்தார் இப்படியாக எண்ணிப்பா
ய்ந்த பூர்வாச்சாரினை காண்டாவனமழித்த காண்டீ
பன்கண்டு வெந்திட்டுச்செய்யும்இந்துமுகாஸ்திர சுந்த
ரக்கணைகளூந்தி வாளாயுதமும் பரிசையும்நீறுகப்படு
த்தி பூனைப்பூப்போற்போக்கினன் அதனுல் யுத்தமு
னையில் வெற்றிபெறக்கற்ற வீரம்பெற்ற கிர்பாச்சாரி
யார் வேறுபோர்புரிவதற்கு விதியில்லாமல் சற்றுநே
ரம்வரைக்கும் அசைவற்றிருந்தது தன்னறிவைத்தா
னே நிதானித்து தனக்குமுன்னே சண்டையிலினைத்
த தாஷ்டீகாளையும் யோசித்து கீழக்கண்பார்வையா
ய் கிரீடியைப்பார்த்து சிறுநகைவிளைத்துத் திடமொன்
றேடி வீரகண்டாமணிகட்டிப் பிரகாசிக்கின்ற து
ரோணச்சாரியர் புத்திரனுன் அஸ்வத்தாமனுடைய
தேரின்மேலேரிக்கொண்டார்.

இவ்வனம், மூனைவீரங்காட்டிப் போர்புரிந்தகிரு
பாச்சாரியர்பின்விட்டோடிமருகனுடன்ரதத்திலிருந்
தவன்மையை அவரைநம்பிப்போனசேனைகள்கண்டு
வாடிஅர்ச்சுனன்பாணத்தால் அடிபட்டோடினர்கள்
முன்னிட்டடுத்து யுத்தமுனையேறிய கிருபாச்சாரியர்
இழிவுதேடிக்கொண்டுபின்முதுகுகொடுத்துப்போயி
னரென்றுபொற்சக்கரம்பூட்டியதேர்மேலிருந்தபோர்
சிக்கவீஷ்டுமர் புறப்பட்டுமேகங்களைமின்னுடன்பிடி
த்துப்பிகிந்ததைப்போல் விளங்கிய செஞ்சிலை தாங்கி
யோக்கிய சேவகத்திறங்காட்டிப் போரணிப்படைபு
டைசூழ்ந்து வரும்படியாயப் பிரவேசித்துப் பிரதா
பனை சவ்வியசாசியையலைத்து நாணொலிசெய்தார்
அந்த குருகுலக்கோமான் தெறித்த குணத்தொனி
கேட்டு கரையுடைந்த ஏரிநீர்போ லிருந்த சகுனி து
ச்சாதனன் முதலாகிய சங்கிராமவேந்தர்கள்கூடி வீ
ஷ்மருடைய ஆதரவின்பேரில் அர்ச்சுனனைநாடி அ
ளவற்ற அம்புகளைத்தொடுத்தார்கள் அம்புக்கும்புக
ளைக்கண்ட நாரணவன் பம்பியமேகம்போல் நச்சர
வப்பாணங்களைநாட்டி அவர்கள் தூற்றிய அஸ்திரங்க
ளையெல்லாம் நாலிரண்டாவொடித்து நாரியோசை ய
டித்து தேவதத்தையுந் தொனியெழும்பப்பிடித்தான்
அதனொலியால் மடங்கி இயாவருமயங்கி நலியாலடைந்
தினர்கள்.

இப்பால் சந்திரகுலத் திந்திரனுசத் தோன்றிய
தனஞ்செயன் தானேறிவந்த மந்தரமாலைபோன்ற ர
தத்தை தந்திரமாகச்செலுத்தும்படி சாரதியான உத
தரகுமாரனுக்குச் சாற்றினன் அவனப்படியே மூடுக்
கி ஒருநொடிப்பொழுதில் குலக்குரவன் கலககவருந்
தலக்கண்ணிற் சார்ந்தான் இவ்விதமாகச் செவ்விசேர்
ந்த மன்மதவடிவம்பெற்ற வாசவன்மதலை உலகமுடி
விலெழுகின்ற ஆலாலம்போலும் கால்காலன்போ
லும் போர்முனையிற்கலந்ததைகாங்கேயன்கண்டுகளி
க்குங்காலையில் வாளாயுத வல்லமைகற்ற இடபசேன
ன்குறித்து அர்ச்சுனனைமறித்து கேதுராகுக்கிரகங்க
ள்போற் செறித்து பலம்பொருந்திய பாணங்களைத்
தெறித்து கிரமமாகப் பிறித்து தானும் நெறித்து நி
ன்றான்.

அந்த இடபசேனன்செய்த தேனைப்பார்த்த வநானவன் ஆங்காரங்கொண்டு ஸ்திரமானசரங்களைப்பலமாகச்செலுத்தியடித்து அவனுடையதேர் சாரதிகுதிரைகள் முதலிய கொடிகளையும்போக்கியடித்து கைபிடித்தவில்லையுங் கரணையாயொடித்து செங்கதிர்ச்சிலீமுகங்தெறித்து அவனதுதேகத்தையுந் துளைத்தான் அந்த அடியினாற்களைத்த இடபசேனன் உடலெரிந்து உயிர்கரிந்து வீஷ்டுமருக்காகப்பரிந்து புகுந்தபகஷம் போதுமென்றுமுனைகெட்டழிந்து முதுகிட்டயர்ந்து முறைபட்டோடிப்போனான்.

அவனோடுவதைநோக்கிய சிந்துதேசாதிபனென்னுஞ் சயிந்தவனும் காந்தாரதேசாதிபனான சௌபலசகுனியும்வெம்புமனத்தினராகி துரியோதனன் தம்பிமார்களும் மற்றுமுள்ள மன்னவர்களும் எதிர்த்து அதிர்த்துவிதிர்விதிர்த்துவெந்தழற்கணைமழை சிந்தியகாலையில் மதத்தகெஜகேசரியாகிய மாதவிகொழுநன் நகைத்து, மனவேஷடையாய்ப்பங்கத்து புரத்தையெரித்த ஊரத்த அஸ்திரங்களையுந்தி அவரவர்பிடித்திருக்கின்ற வில்லையும்பாணங்களையுஞ்சிந்தி[illegible]யும் நாணியுங்குறைத்து குதிரை, சாரதியைசறித்து குடையுடைத்தேரையுமுறித்து பின்னும் நூறு பெருங்கணைதாக்கி விறுபட்டசேனைகள் தாறுபட்டயானைகள் கூறுபட்ட குதிரைகள் மாறுபட்டரதங்கள் இவ்வாறுபட்டதென்று சொல்வதற்கிடமில்லாமல் [illegible]வ்வேறுபட்டு நீறுபட்டெரிய நிமிஷத்திற்பொழிந்து சேறுபட்ட உதிரவெள்ளத்தின்மீது தேர்செலுத்தி எதிரொருவரில்லாமல் வருகின்றவிஜயபராக்கிரமனை பருந்து பறக்கச்சிறந்த தேர்மேலிருந்த பிதாமகன்கண்டுபார்த்தனேயிதோ நான்காத்திருக்கின்றேன் வாவென்றெதிர்ந்தான்.

அப்படிகெதிர்ந்த வீஷ்டுமரை அர்ச்சுனன்வணங்கிஐயா அவர்கட்கு நானெம்மாத்திரமென்னை ஒருபொருளாகக்கொண்டு சண்டைபோடச்சம்மதியுண்டோ ஆண்டவனேயென்று நிம்மதியாய் நின்று மேகம்போன்ற காண்டீபங்கொண்டு மின்னற்கிணையாகிய நாணிபிகிர்ந்து சுற்றங்கலங்காவொலிசெய்அதிரஜெயவாளிவீரவய வாளிமகேந்திரபாணமுதலியவற்றை வாரிவாரிவரிசையாய்ச் சொரிந்தான் வீஷ்டுமரும் உகாந்தகாலமேகாந்தகாரமழைபோல் வாகார்த்தவாளிபொழிந்தார் இவ்வாறுமலையுமலையுமெதிர்த்து மாறுமடுவாறுபோற் போராடினார்கள் அவர்களிருவரும் புரிந்தகலகத்தினால் ஏழுசமுத்திரமும் எட்டுத்திக்குப்பாலரும் ஒன்பதுகிரகங்களும் பத்துதிசையும், பதினொருருத்திரரும் பன்னிரண்டு சூரியரும் பட்டபாடின்னதென்று பாவாணரும் பகர்வதற்கிடம் படவில்லை அந்தரவாசிகளாகிய இந்திரன்முதலாகிய தேவர்களும் வேடிக்கைப்பார்த்துவெருண்டு அனேகயோசனைதூரம் அகன்றுபோய்நின்றார்கள் சந்திரசூரியர்களுங் கதிமாறினார்கள் அவர்களிருவரும் உதயமாகியொடுக்கமாகின்ற உதயகிரியும் அஸ்தமனகிரியும் ஒதுங்கி நடுங்கியதுகள் கடலுங்கொதித்து கனலும்பொருந்தி களகளவென்றிரைந்தது எட்டுத்திசையானையும் தட்டுகெட்டயர்ந்தது இவ்வுலகமும் எவ்வுலகமும் ஏங்கித்தளர்ந்தது இவ்வாறு பிரமாதமுண்டாகும்படியாய் அவர்களிருவரும் அமராடியகாலையில் வீஷ்டுமருங்கிஞ்சி பஞ்சபூதம்போன்ற அஞ்சுகணைகளை சாரதியான உத்தரகுமாரன் பேரிற்றுக்கினர் அந்தக்கணைகள்வருகின்ற நிருபடியைக்காண்டபன்கண்டு காலகினிற் கணையைப்பாச்சி பஞ்சுப்பொதியில்நெருப்புப்பற்றிய பான்மைபோலெரித்து வஞ்சம் அறியா மனத்தோனான வீஷ்டுமருடையநெஞ்சு திடுக்கிடும்படி அவர்கையிலிருந்த வில்லையொடித்துவிட்டான்.

தன்பேரனான அர்ச்சுனனால் ஒடிபட்டவில்லை அப்பாலெறிந்துஇப்பாலொரு வில்லையெடுத்து மலைபோல்வளைத்து புற்றிலிருந்து புறப்படுங் கிருஷ்ணசர்ப்பம் பேரோசைகொண்டு புகுந்தவாறென்ன அஸ்திரமாரியை அஸ்தரமாகச்சொரிந்தார் தாஷ்டீகமாக வீஷ்டுமர் சாய்த்தகணைகள் யாவற்றையும் இணையில்லாத அர்ச்சுசுனன் திரணபரிகாயமாய்ப்போக்கி கரணபரியந்தங் காண்டீபநாரியிழுத்து அருணோதயம்போற்செஞ்சரங்கள் மிஞ்சத்தாக்கி அஞ்சிப்பயந்தோட்ச் சேனைகளைப்புடைத்து அசையாக்கீர்த்திபடைத்து அமராடியகாலையில் எழுகடல் நீருஞ்சுண்ட மலைமுதல்யாவுங்குன்ற உலகிலுள்ளயாவரும் இருந்த இடத்தைவிட்டெழாமற்பதுங்க அட்டகஜமும் ரதநங்கக்கி முகம்வதங்க அமரர்கள் முக்கியொதுங்க பிரமப்பிரளயத்தில்உண்டாகாநின்றபெருநெருப்பாதுபோல் சரங்களிரைந்து புலிங்க நிறைத்து தகுதியான இருவரும் தேரைசெலுத்தி ஓரிடத்திலுந் தங்காமல் அண்டச்சுவரின் அடிவாரமட்டுங் திரிந்துக்கொண்டிருக்

தார்கள் இவர்களேறிபதேரானது வாயுவேகம்மனோ
வேகம் என்பதைக்கடந்து வட்டமாகச்சுழன்று ஒன்
றுக்கொன்று கிட்டநெருங்கி புறப்ந்து ஒன்றையொ
ன்று விட்டுப்பிரிந்துபாய்ந்து நெடுந்தூரமோடி ஓய்ந்
து வலசாரி யிடசாரி இடசாரி வலசாரியாய்த் திரிந்
து சூரியன்றேருஞ் சுழலவிடுத்தது.

இதன்றியும் இந்திரன்மைந்தனான விஜயனுடை
யவில்லும் கங்காபுத்திரனான வீஷ்மருடைய வில்
லும் குலாலன்சக்கரம்போற் கூசாமற்சுழன்று கூர
ம்புமுதலாகிய பாணங்கள் புரண்டுமுடிகளோடு மு
டிகள் தலைகளோடுதலைகள் இடிபட உடைபடச் சா
டியடியால் தேரிற்கட்டிய குதிரைகள் பிடிபடாமற்
கனைத்துக் கருளித்துக் கலித்துப்பறிபட்டோடவும்
இருவர்சாரதிகளும் எக்களிப்பிட்டு இளைந்து விரை
ந்து பரிகளைத்தடுக்கவும் அர்ச்சுனனுடைய அனுமக்
கொடியும் வீஷ்மருடையபனைமரக்கொடியும் ஆகா
யமளாவி யுலாவிநீடிய வாயுதேவனுடன் போராடியா
டவும் வாள்வீரர்முதலாகிய மன்னவர்களெல்லாம்
தோள்கள்பூரிக்கவும்நெற்றிவியர்க்கவும்புருவநெரிக்க
வும் மீசைதுடிக்கவும் ரோமஞ்சிலிர்க்கவும் வாள்வி
ழிசெவந்துமலர்ந்து இப்பாக்கவும் அஸ்திரந்தொக்
குல விரல்கள்நெளிக்கவும் விற்பிடித்தகரங்கள் மர
ங்கள்போலாகவும் வீரகண்டைமுழக்கவும் வெற்றிப்
பட்டமிலங்கவும் நெற்றிபட்டந்துலங்கவும் வேடிக்
கைபார்த்த வேந்தர்கள் கலங்கவும் மேலுலகத்தோ
ர் வெதும்பி யொதுங்கவும் நாகலோகத்தார்நலிந்துவி
லங்கவும் சராசரம் பூமி சலித்துக்குலுங்கவும் இவ்வி
தமாக இருவரு நிலைத்து ஒருவருக்கொருவர் ஈடுதாழ்
த்தியில்லாமல்சமராடுகின்றதன்மையிலேமதுசூத
னன் மைத்துனனான அர்ச்சுனன் யுத்திசெய்து கொ
ற்றமுற்ற பத்துக்கணைகளெடுத்து கொத்துக்கொத்
தாகத்தொடுத்துவெற்றிப்பனைக்கொடிவீறியவீஷ்ம
ரேறிய தேரைத்தடுத்து வில்லையுமறுத்தான் அவனு
ம்முறிந்த வில்லையெறிந்து வேறோவில்லெடுக்குமுன்
னமே விஜயனமுனைந்து அட்டகாசம்பண்ணிஅர்த்த
சந்திரபாணம்ஆயிரமாயிரமாக எய்து பாட்டனுடை
ய தேகத்தைக் கொய்து செல்லெரிப்பதுபோற் சல்
லடைக்கண்ணாய்த் துளைத்துவிட்டான் முன்னமே
செவந்திருந்தவீஷ்மருடைய திருமேனியானது ரொ
த்தத்தினாற்பசந்து பாணந்துளைத்த வருத்தத்தினாற்
களைத்து வருந்திவாடி அறிவழிந்து தெதிபுரண்ட நி
லைதவறி மெய்மறந்து பெருமூச்சுவிட்டு கணைபுரண்
ட கருங்கடற்போல் தேர்மேல்விழ்ந்து அஞ்சலற்றி
ருந்தார் அப்போது எஜமானிலைத்த சமயத்தையறிந்
த தேர்ச்சாரதியானவன் அர்ச்சுனனுடைய போர்மு
னைவிட்டு தேரைச்செலுத்தி நேர்முகமான திசையி
ற்கொண்டு போய்நிறுத்தி சீர்பெறத்தேற்றி அவிழ்
தாதிகளாட்டிக் களைதெளியச்செய்து அன்புபாராட்டி
னன் அந்தவேளையில் பகல்விளக்கான பரிதியினிர
தமானது ஆகாயத்தினுச்சியையடுத்தது அதுகாலை
யில் வீஷ்மர் மத்தியானக்கருமத்தை முடிப்பவர்
போல யுத்தமுனையைமறந்துமறைந்து போயினர்.

அவரிடைந்துசென்ற செயலைக்கண்டு துரியோ
தனன் தம்பிமார்களும் புத்திரர்களும் சயந்தவனும
சகுனியும் சாதுரங்கப்படைகளும் பயந்து தயங்கி, த
ங்களுக்குதவியாய்ப் பின்புறநின்று தாங்குவாரில்லா
மையால் தனித்தனியேங்கி பற்குனன் பாணத்தாற்
பங்கப்பட்டு நிற்பதற்கிடமில்லாமலழுன்று மனமழி
ன்று போர்முனைகழன்று புறமிட்டோடினார்கள்.

அந்தவேளையில் மந்தரப் புயத்தோனுகிய அர்ச்
சுனன் யுத்தமுகத்திற் பிரவேசித்து விசித்திரசரங்க
ளை விதவிதமாய்த்தொடுத்து அன்னியசேனைகளைத்
தாக்கிமன்னவர் வெருளப்போக்கினன்.

இந்தப்பிரகாரம் மேலுமேலுங் கோடிகோடிகளை
களை வீக்கியகாலையில் நாலுமூலையிலும் கோலாகல
மாயிருந்த வணங்காமுடிதிருந்திய துரியோதன ம
ஹாராஜன் படைகளானது பின்னிட்டுப்பறிந்து இர
தங்கள் முன்னிட்டுமுறிந்து கொடிமரஞ்சாய்ந்து கு
திரைகளுங் காலோய்ந்து தேரிற்கட்டிய சித்திரத்து
கிலுங்கிழிந்து சக்கரங்களுமுடைந்து அச்சுகள்பிள
ந்து மச்சுகள்சரிந்து குற்றுக்காலுங் கொடுங்கையும்
வீழ்ந்து போதிகைபிடிகை பொடியாயிடிந்து சிகர
முகிர்ந்து சிதறிக்கழிந்து குடையுஞ்சுருங்கி சாரதிகு
டலுங் குலுங்கி வரிசைவிட்டுநிலைகெட்டுமாரொ
டிந்து வாராருந்தபேதமாய்ப் போனதுமல்லாமல்.

வஞ்சமனத்தனான துரியோதனனுடைய வெ
ற்றிபெற்ற மத்தகஜமுற்றும் மத்தகக்கும்பமும் பிள
ந்து வித்தகத்தந்தமும் முறிந்து சளவுபோன்ற கா
துகளுமறுந்து பனைமரத்திற்கிடாகிய துண்டமுந்து
ண்டாய் நான்குகாலும் கமுகீனையவாலும்போய் வா
ய்வாண்டு உடலுங்குடலும்ஒன்றாய்ப்பூண்டு வட்ட

க்கடலுலகில் மலையெட்டுந் தலைகட்டுப்பட்டவாறு போலொன்றுமறியாமல் உயிர்கெட்டொழிந்தன.

தெய்வலோகத்தில் இந்திரசிங்காசனமேறியி ரீடியாளவன் திருடியாய்ச்சிந்திய சரோருகக்கணைகளால் துரியோதனனுடைய குதிரைக்கூட்டங்களியாவும் படைமுறிந்து பலங்குறைந்து வால்தறிந்து தலையறுந்து கழுத்துமயிருதிர்ந்து கடிவாளங்கழன்று சூழிந்து கலந்து அழிந்து மார்புகிழிந்து கால்மடிந்து மேலெடிந்து ஐப்பையுமுகமுங் குப்புறவீழ்ந்து சரகெனவெறிந்தது நாகக்கொடிபடைத்த நராதிபனுடையபதாதிகளானது சிரஞ்சிதைந்துடைந்தன கரந்தறிந்தழிந்தன எலும்பொடிந்துதிர்ந்தன, குடல்சரிந்துடைந்தன, நரம்பறுந்துழன்றன உதிரம் பொழிந்தெழுந்தன நெற்றியும் புருவமும் சிமிர்ந்துபிளந்தன புயமும் மார்பும் புண்ணாகிப்பிழிந்தன குதமும் பதமுங்குறைந்து சருங்கின எவ்விடங்களிலும் பிணக்குவியலுயர்ந்தன இனியொருவர் எதிர்த்துப்போர்கொடுப்பார்களென்று கனவிலுநினையேம் இதன்றியும், சவ்வியசாசிவிட்ட சரங்களுக்குத்தப்பிப்பிழைத்தவர்கள் இப்புவியிலில்லை.

இப்பால் யுத்தஞ்செய்த விடத்தில் நெஞ்சுரம்பொருந்த நஞ்சுபோலிருந்த நரனென்னுங் காலாக்கினிக்கு எதிர்ப்பட்ட பூளைப்பூப்போல் துரியோதனன் சேனைகள்எரிந்துபொடிந்து பொரிந்து புகைத்துபறந்துபுரண்டுபோய் விட்டது,

இவ்வாறு ஜெயித்து சிரித்துப் புரமெடுத்த சிவபெருமான்போனின்ற செஞ்சிலைவிஜயனுக்கெதிரில் திரிபுராதிகட்கொப்பாய் துரியோதனன்படைகள் பட்டார்கள்.

இன்னும் அனுமக்கொடியமைந்த அர்ச்சுனராஜன் அனுசந்தானஞ்செய்த அஸ்திரங்களினால் ஆறுபட்டோடியரத்தவெள்ளமானது சேறுபட்டுச் சிதைந்து சொறுளாகியது

பின்னும் அர்ச்சுனனுடன் மாறுகொண்டு மடிந்தபோர்களின் வல்லுடலானது கீறுபட்டுநெரிந்துஊறுபட்டொழிந்தது அசைவில்லாமலொழிந்த விஜயன் கணைகளானது அங்கங்களிலட்டப்படிக்குசண்டைபோட்டு திசையின்கடை சேவைக்கும்போய் முட்டிப்பார்த்துத்திரும்பி அப்பாலுந்தன் விசையடங்காமல் பூமிதுளைத்து போதுமென்றிராமல் சுழல்காற்றுடன் கலந்து சுரணைகுறையாமற் றிரிந்தன.

மேலும்மாதவிகாதலனாகிய பார்த்தனைவில்லவார்கணைகளானது திக்கெட்டுங்கிட்டி திசைப்பாலர் தலையிலுங்குட்டி அட்டகஜங்களைத்தட்டி அண்டச்சுவரையுமுட்டி இன்னம் ஆராகிலும் பகைவருண்டோ வென்று ஆராய்ந்து விட்டன,

இதன்றியும் சிற்சிலநெருப்புக்கணைகளானதுப்பற்பல தேர்வரிசைகளையும் யானைப பெருக்கங்களையும் குதிரைநெருக்கங்களையும காலபலவருக்கங்களையுமகசியக் கரைத்து கன்னலுச்சிடுமைபோலரைத்து காலவாய்கொண்டோடுகின்ற ரத்தங்களிற்கரைத்து கடலிற்பெருககாயக கலத்தல்போற்கலக்கி விட்டிளைத்ததுகள்.

விபற்சிவினைத்தவினையால் கொற்றவர்களும் மற்றவர்களும் மெத்தவருந்திச் செத்ததல்லாமலும் தலைமேற் குவித்த கரத்தினராய் தறிந்துவீழ்ந்தசிரத்தினராய் தைரியங்கெட்ட உரத்தினராய் தங்கள் தங்கள் வாய்விட்டாறறினராய்போய் தமக்குரிய பெரியபெரிய சந்திரவட்டக்குடைகளும் வெண்சாமரைகளும் பல்லக்குகளும் பலவாகனங்களும் பேரிகைபூரிதாளமேளம் தவிலடி காளம்கொம்பு கொடிமுரசுமுதலிய வாத்தியகருவிகளும் வில்லும், பாணமும் வேலும் வாளும் வெவ்வேருயழிந்து பூமியுங்குபணையாய்ப் பொருந்திக் குவிந்ததுகள்

இந்தப்பிரகாரம் சண்டைபுரிந்த இந்திரன்மைந்தன் அண்டச்சுவராயளாகிய சமுத்திரம்போ லிரைந்தெழுந்ததுரியோதனனுடையசேனைகளைமகரமச்சம் போற்குடைந்துவாட்டியிட்டான்

மேன்மேலுந்தெரிந்த வெங்கனற்கணைகள் மிதமறப்படர்ந்து வெளியெல்லாமடர்ந்து காடெல்லாங் கடந்து கடையுகாக்கினிபோலெரிந்து விரோதியைத் தொடர்ந்து மேனியைப்பிளந்து சேனையைச்சிதைத்து ஊனைப்புசித்து உதிரங்குடித்து தாரகணங்களைத் தரையிலுதித்து தேவர்களைடுங்கச் செந்தீயெறிந்துசிரித்துக்கலித்துத திரம்பெற்று நின்றன

இவ்வாறு மாடுபிடிசண்டை போடுவதற்காக புகுந்த வணங்காமுடியோன் முதலாகிய மன்னவர்கள் பேரில் குறிப்பறிந்து நெறிப்படுத்து கூசாமலேவிய பாசுபதன் பாணங்கள் எப்படியிருந்ததென்னில் தசரதச் சக்கரவர்த்தி தந்தமைந்தனான தாசரதியானவர் தர்ப்பசயனத்திலிருந்து வருணனையழைக்கும்போதுவா

ராதசமுத்திராஜன்பேரில் வலுக்கொண்டுந்திய வன்னிக்கணைபோன்றிருந்தது

ஆண்சர்ப்பக்கொடிநாட்டிய துரியோதனனுடன்பொரிந்திப்போர்புரிந்தபோர்வீரர்கள்பேரில் புரந்தரன் துரந்தன்யோக்கியபுங்கவங்களானது எவ்வாறிருந்ததென்னில் தீரம்பெறுஞ்சூரனையும் அவன் சேனைகளையுங்களைந்தசிவசுப்ரமணியக் கடவுளின் வேலாயுதம் போன்றிருந்தது.

மேலும் கருக்கடற்போர்க்கவிர்ந்த கௌரவகுல முதல்வன் சேனைகளியாவற்றும் கண்கலங்கப் புண்ணுலங்கக் கசக்கிவதக்கிக் கருக்கும்படிக்கு கேசவத்தோழன் மூடுக்கிய கிளைக்கணைகளானது எத்தன்மையொத்ததென்னின் எமதரும் ராஜசேவியவீசிய தண்டபாசத்திற் கிணையாயிருந்ததுகள்.

வேந்தர்கள் முடிமேற் கவித்தவெள்ளைக்குடைகள் காம்புமுறிந்து பூமியிற்கவிழ்ந்து காற்றினால் கிமிர்ந்து கலந்துகிடப்பது எவ்வாறிருந்ததென்னில் சுபத்திரா நாயகன் துரியோதனனுடைய படையை [illegible]து அடையச்செய்யும் யாகத்தில் அவிர்ப்பாகம் பெறவேண்டி சந்திரன்வந்து தலைகவிழ்ந்திருப்பதுபோலிருந்தது.

வெற்றிவீரமுள்ள வேந்தர்கள் கையிற்பற்றிய வலம்புரிச்சங்கமுதலிய வெல்லாவற்றையும் அர்ச்சுனன் அம்பாலடித்துத் தள்ளுதல் எவ்வாறிருந்ததென்றால் ஏகசக்ராதிபனாகிய துரியோதனனது கீர்த்தினைய வேறக்களைந்த வாறுபோலிருந்தது

தேர்களிலும் இயானைகளிலும் பொருந்திருந்த பலநிறசு பட்டுக்கொடிகள் பார்த்தன்விட்ட பாணங்களால் அறுபட்டு முறிபட்டு தறிபட்டு மாலையாய் வீழ்வது எப்படிக்கிருந்ததென்றால் வெகுநிற மேகங்கள் விண்டலம்விட்டு நீங்கி மண்டலத்தில் ஒரேமொத்தமாய் விழாமல் தனித்தனிவரிசையாய் விழுந்தவாறுபோன்றிருந்தது

மாசற்ற தேசுற்ற வளம்பெற்ற மனதுற்ற தருமராஜனுக்கிளைவனாகிய தனஞ்செயனானவன் ஜெயலக்ஷ்மியைக் கல்யாணம் பண்ணிக் கொள்வதற்கு தனித்தனி யெடுத்துக்கொடுத்த சரக்குவையலானது தூசிப்படைச்சூரர்களின் வீரவில்லை வெடுக்கென்று முறியப்படுத்தி வேடிக்கை எவ்விதமென்னில் ஜனகராஜனுடைய வில்லை சீதாபிராட்டியார்க்காக செங்கண்மால் வளைத் தொடித்த செயல்போன்றிருந்தது,

இசங்கியும் கரும்பைப் பரிந்தெடுத்துண்ணும் வாயும்பனைக்கையும் விரிந்தகர்ந்து பொருந்திய மெய்யுமுள்ள திடகாத்திர கும்பகாடதிட யானைகளின் பேரில் முழங்கால்னின்ற முரசவாத்தியங்களை காணுந்திய நாராசப் பசழிகளுத்தது எப்படிக்கிருந்ததென்றால் உயர்ந்தமலை மேலுற்ற பெருங்கருங் கற்களைப் பேரிடி விழுந்து பிளந்தவாறொத்தது,

மேலும் வெற்றிப் போரிற்புகுந்த மத்தகசங்கள் வீரபட்டங்கட்டிய கும்பம்பிளப்புண்டு இரண்டுபக்கங்களிலும் ரத்தம்புரண்டோடும்படியாகத்திரிகின்றது எத்தன்மையொத்ததென்னில் சித்திரைப்புயலடிக்குங் காலத்தில் மெத்த வெள்ளஞ் செவந்து கறுத்த மலைமேல் கால்கொண்டு வழிந்தகாட்சியையொத்திருந்தது,

இதல்லாமலும் அர்ச்சுனன் ஒருயாகஞ்செய்து தேவர்களுக்குப் பூரணாகுதிகொடுத்த செயல்போன்றிருந்தது அஃதெவ்வாறென்னில்; மாடுபிடிசண்டைவிளைந்த காடுகுடிகொண்டு பரந்த நிலமானதுவேள்விச் சாலைபோலும் வீராளெதிர்ந்து போர்புரிந்தஇடமானது ஓமகுண்டமாகவும் அவர்கள்பேரிற் பிரயோகம்பண்ணிய பாணக்கினிகள் யாகாக்கினியாகவும் போர்மோகங் கொண்ட வீராளுடைய தேகமானது சமித்துகளாகவும் அன்னோருடம்பிலிருந்து வழிந்த ரத்தங்கள் நெய்யாகவும் நிணங்கள் வபையாகவும் போர்போரவழைக்கும் வீரப்பேச்சுகள் வேதமந்திரங்களாகவும் இயாவருடைய உயிரும் அவிர்ப்பாகமாகவும் தேர்ச்சிகரங்கள் பூரண கலசங்களாவும், அயமேதம் கயமேதம் புருஷமேதம் பசுமேதமென்னும் யாகத்தை ஒருநாள்விரதத்தில் உத்தமன் செய்ததை ஒத்திருந்தது?

மேலும் பிரமசிருஷ்டிக்குட்பட்ட ஆத்மகோடிகளின் கண்ணுக்குள் மணிபோனின்ற கண்ணனைப் போல் அந்த யுத்தபூமியைச்சாரிவரும் அர்ச்சுனனைக் கண்ட பாரிய தேர்வீராளெல்லோரும் தங்களைநாடித் தனஞ்செயன் தேடிவருகின்றானென்று தளர்ச்சியடைந்தார்கள்;

இப்படியாகப் போர்விளைந்த யுத்தகளம் எப்படியிருந்ததென்றால் பருந்துகளிருந்து விருந்துகளாருந்த கழுகுகள் குழுமிக்-கொழுநிணங்கொள்ள காக்கைகள் வீராள்கண்ணைப்பிடுங்க, ஆக்கையைப்பேறை அடித்துக்கடிக்க பிணந்தின்னுங்கூளிக் கணங்கள்பறக்க சாலை மூலையைக்குழி நரியிழுக்க மிகுந்த

ஓசையுள்ள பட்சிகளின் செட்டை நெருக்கத்தினால் வானமும் மலையும் மரங்களும் மறைய ஆறுகவும் சேறுகவும் மடுவாகவும் ஓடையாகவும் கயமாகவும் காலாகவும் பெருகியோடிய உதிரங்களினால் கடல்வலைத்த உலகஞ்செவக்க பைசாசங்களும்- பூதகணங்களும் பிணங்கி மறுபடியும் இணங்கி வராகியை வணங்கி கைகோர்த்து ஆடியும்பாடியும்ஓடியுமிருக்க,

பாம்பாரமும் என்புமாலையும் சூலகபாலமும் யாளிவாகனமும் உடுக்கை-படிபையுங்கொண்டு திரிகின்ற காளிக்கூட்டமும், ஞாளியீட்டமும் மணிமுடியணிந்த மயிடனைத்துணித்த கன்னிப்படையும் கனக்கக்குடையும் குத்து வெட்டுச் சண்டையிற்றேறிய குறள்-கூளி-பாரிடங்களுங் கூடிக்குலாவி போர்க்களமுழுவதும் பொருமித் திரியவும்?

சண்டையிலுருண்ட தரியலர் தலைகளை அண்டையிற்கிடக்கும் யானைத்தலைகளை குப்பையாயக் குவித்த குதிரைத்தலைகளை மலைப்பாம்புகளில் வா... ...ய்க்கோர்த்து தாலியுருவுமுதலியமங்கலசூத்திரமாயக்கழுத்திற்றரித்து முடிசுத்தரிக்க-உருவுகள் கோர்த்துக்கொண்டேனென்று,பிரதாபம்பேசி-தன்னைமறந்துவந்த பேய்ப்பெண்ணானவள் சற்றேதவறி-பொருத ஆற்றில் வீழ்ந்து-ஆழ்ந்து சுழியிற்சுழன்று,செத்தேனென்று முழுகியெழுந்துதெண்டிக் கூக்கவிடும்போது ஒருபூதம் ஓடிவந்து எற்றைக்கோற போன்ற நீண்டகைகளையக்காட்டி (அககாதனைப்பிடித்துக்கரையேற்றுபவர்போல்) அக்கரத்தைப் பிடித்துக் கரையேவந்து இன்றைக்கொருதத் தென்று சந்தோஷிக்குஞ்சங்கடிபெருக்கமும் அவ்வாறுபிழைத்தபெண்பேய்களானது தங்களைக் கரையேற்றிவிட்டபூதத்தைப்பிடித்துக்கொண்டு எப்போதுமதுகைப்பிடித்தேனே அப்போதே, உமக்கு; நாஞ்பெண்சாதி எனக்குநீயே புருஷன் இனிவேறு புருஷனைவிரும்பேனென்று,பஞ்சஜனங்களுக்கு சொல்லி அவர்களனுமதியில் கலியாணம் செய்துக்கொள்ளுகின்ற ஆரவாரமும், அர்ச்சுனராஜனுடைய புகழ்ப்பிரதாபத்தைப் பாடி அவருக்கு நன்மையுண்டாகக்கடவதென்று வாழ்த்திக்கூடி காண்டபத்தைத தோத்திரம்செய்கின்ற பேரொலியும் கிணைமாமிசத்தை நிரம்பத்தின்று-மயங்கிவீழ்ந்து புரளுகின்ற-வயிறுதாரிப் பேய்களின்வார்த்தையும் - சோரிவெள்ளமானது வாரிபோலோடவும், மடிந்தயானைகள் அவ்வாரியிற்-படிந்த திமிங்கிலம்போலவும் குதிரைப்பிணங்கள் திமியென்னு மீன்போலவும், வாளாயுதமுதலிய மற்றவாயுதங்களெல்லாம்- பற்பலவிதமச்சமாகவும் பொருமலைக்கருதிய பிணங்கள்குவிந்த மேடானது எண்காற்பட்சிகளிருக்கும் பெருமலையாகவும் மண்மேலோடுகின்ற தேர்களும் தோதட்டுகளும்- கடல்மேற் செல்லுகின்ற கப்பல் கட்டுமரம் படவு-பஃறி-பரிசுபோல் உதிரக்கடலூடோடவும், மதயானைகள் கொம்பொடிந்து, கூக்குரலிடும்-ஓசை யானது-தீரபுருஷாளொருவருக்கொருவர்-கூரியகணையால்-குத்திக்கொண்டிடாயும் பேரோசையாலடங்கிப்போகவும்.

கடையாணிகழன்றோடுகின்ற சக்கரங்களும் தலையறுந்துமுண்டமாடும் ஆட்டங்களும்-பரத நாட்டியஸ்திரீகள் வெட்கமுறும்படியா யிருக்கவும்.

இந்தப்பிரகாரம் கற்பகப்பூமாலையணிந்த பொற்பிரகாசப் பொன்னுலகிற்சிறந்த தேவேந்திரகுமாரனான பார்த்தன்-ஆர்த்து அமருத்தரித்த-போர்க்களத்திலே-பாளிக்கும்-சிங்கத்திற்கும்-யானைக்கும்- புலிக்கும் நிகராகிய - வேந்தர்முதலாகிய-வீரர்களை, கூளிக்கும் ஞாளிக்கும்-காக்கைக்கும்-நரிக்கும் - குழுவாகியகழுவுக்கும்-பருந்துக்கும்-குறைவில்லாத் தன்னைகவாளிக்கும்-அவ்வூர்வாழுங் காளிக்கும் விருந்தாக்கி தேவர்கள் கண்களிக்கும்படிக்கு விஜயலட்சுமியைத் திருமணங்கண்டருளினன், விரப்பிரதாப திரகாண்டீப யோக யோக - வையோக தியாகவிஜய-மகாராஜன்-செலுத்திய வெந்தெழற்கணைகளுக்கு - யாவரும், பஞ்சபோற்பறந்து, அஞ்சி பல்லைக்காட்டிக் கெஞ்சி எஞ்சிப்போனார்கள் சிலர் சண்டையைத்துறந்தார்கள் பலர்மண்டைகிழிந்து இறந்தார்கள் சிலர்முகம் விட்டவாறே ஓடினார்கள் பலர்மூச்சுத திணறிவாடினார்கள் இவ்வாறுனனிலையை சவ்வியசாசிகண்டுவெவ்வியநகையுடன் வெகுண்டு ஆபத்திறே-லோடுகின்றவர்களைப் பாபத்திற்குட்பப்படாமற்றுரத்தி விடாதேவிடாதேயென்று வெருட்டினான் இதுவுமல்லாமல், திரிதராஷ்டிரகுமாரனை துரியோதனன். துச்சாதனன் (சிந்துராஜமைந்தன் சௌபலராஜகுமாரன்-குந்திதேவிமுதற்பிள்ளையான சூரியதநயன், இவர்முதலாகிய வெற்றிவீரர்களிபாவரும் திசைமயங்கிமதிமயங்கி நிலைகலங்கித் தலைகுலுங்கிப்போகும்படியாய் செந்நியக்கணைகளை முன்னும் பின்னுமடுக்கி தேரூர்ந்தசாரதியான உத்தரகுமாரனும் நடுங்கிப் போம்படியாய் ஒருவிந்தைசெய்தான் (அந்தவிந்தை யெச்

தவிநமென்னில்) கைபிடித்த காண்டீபத்தை நாணிளர்த்தி தோள்புறமாட்டிய அம்பறாத்தூணியை நீக்கி விரச்சாடு கரச்சாடு முன்கைதோற்கட்டு பின்கைந்தோற்கட்டுமுதலிய கவஜமுங்களைந்து இரதத்தின்மீதுவைத்து அஸ்வசஞ்சீவி மந்திரத்தால் குதிரைகளைத்தேற்றி சாரதியின் சலிப்பையுமாற்றிதனதாசாரியர் தமைப்போற்றி இன்னமும்பகைவர் ஒன்றுகூடி வருவார்களாகில் மெத்தவும்நேத்தியென்றுபூர்த்தியான தன்சரீரவருத்தந்தீர்த்து முகம்வேர்த்து நின்றார்.

அத்தருணத்தில் உத்தரகுமாரனும் தேர்விட்டிழிந்து, குதிரைக்கடிவாளத்தைக் குற்றுக்காலுடன் சேர்த்துகுதிரைநடாத்துவ கோலையுங்கையிலணியுங் கவசமாந்தோலையும் தேர்மேல்வைத்துக்கட்டி குதிரைகளைதடவித்தட்டி அர்ச்சுனராஜனைக்கிட்டி மாடுபிடிசண்டை நடந்த மகத்துவத்தையும் இனிமேல் நடக்கவேண்டிய மார்க்கத்தையும் பேசிக்கொண்டிருந்தான்.

இப்பால், பச்சைநிறம்படைத்த பார்த்தனுடன் கொச்சைப்போர்புரிந்து லெச்சைக்கெட்டழிந்து அடிபட்டோடியபேர்களின் செயலைச்சொல்லுகின்றேன், கேளும் ஜனமேஜய மகாராஜனேயென்று வைசம்பாயனர் சொல்லிவந்தார்.

இவ்விதமாக ஒவ்வுதலில்லாச் செவ்வையதான சவ்வியசாசி பௌவமாம் படையில் அவ்வவர்மீதில் கௌவும்பேவி எவ்வமாகென்று, வின்னூட்டிவிழுத்துவிடுத்தான் துவ்வியபாணம் தெவ்வர்களுடைய கொவ்விய பிடரியைக் குறைத்தழித்தொழிந்த கொடுமையைக் கௌரவக்குலமகன்கண்டு செவ்வியகண்கள் செவ்வரக்கினுஞ்செவந்து நாப்புரண்டுலர்ந்து திப்பொறிமலிந்து நாடாதுகாடி வாடாதுவாடி சூத்திரத்தால் முனைந்துநான் இந்தநரனுடன் சண்டைவிளைத்துநலிந்து-மெலிந்து-தலிந்து-முறிந்து இறந்துபோனாலும் போறதேயல்லது இவனால் என்படைகெட்டு இவ்வளவு - அவமானப்பட்டு அஸ்தினாபுரி மட்டும் போய்ச்சேரமாட்டேனென்று நடநடவென்று பற்கடித்து மடமடவென்று விற்பிடித்து பளபளவென்று தோளடித்து கிடுகிடுவென்னக் கெற்சித்து தடதடவென்றோடித் தேறோதி கடகடவென்று நூலைகளோடப் புரவிசெலுத்தி படபடவென்று அரவக்கொடிநீடு ஆணவப்பேயாட அக்ஞானமேலாட அருவினைபூடாட மாராடகர்னாடர்முதலிய மன்னவர்சூழப் படாடம்பங்காட்டி வந்தான், இப்படிக்குவளர்கின்ற துரியோதனமகாராஜன், கர்னன் பார்த்து கடுங்கோபங்கொண்டார்த்து (தம்பி) நானுயிருடனிருக்கும்போது நீ சண்டைக்குப்போகவேண்டுமா இல்லுமில்லுமென்றுதடுத்து தன்னுடையதேரை முன்னதாய்விடுத்து மன்னவன்ரதத்தைப் பின்னுறவமைத்தான்.

அன்னகாலையில் பொன்னணிபூண்ட துரியோதனன் தம்பியார்களும் பூபாலர்முதலிய பேர்களும் மின்னெனவெழுந்து கன்னனுடன்கலந்து முனைந்தார்கள் வீஷ்டுமர்-துரோணாச்சாரியர்- கிருபாச்சாரியர்- அஸ்வத்தாமாமுதலிய- நால்வரும் துரியோதனனுடைய மனோபாவமறிந்து தவறுபேசாமற் தவிர்ந்து போனவருடனேர்ந்து புகுந்தார்கள் மகமேருக்கொப்பாகிய அத்தினபுரியென்னும் வெற்றியானைமேற்கொண்டு அர்ச்சுனன் சண்டையையிப்போது அமராடிப்பொடியாக்குவேன், தப்பாது எப்போதும் எங்கள்பெருமைக் கொப்பேது பாருங்களென்று விண்டலமுதலாகிய மேகங்களும் எண்டிசைமுதலாகியநாகங்களும் மண்டலமுதலாகிய அண்டங்களும் விண்டுதிர்ந்துபோம் என்னத்தக்கதாய் இற்றைப்போரில் வெற்றிபெறுவானென்று கொற்றவர்பலரும் மற்றவரெவரும் குறித்துக் கொண்டாடும்படியாய் விகர்னனென்னுங்காளை செண்டெனவெழுந்து திரண்ட சேனையுடன்வந்து கலந்தான்.

இதல்லாமலும்- பார்த்தன்பாணத்திற்கிப் பயந்து போர்க்களம்விட்டுப்பிரிந்து, பெண்டுபிள்ளைகள் மேற்பரிந்து நானுபக்கங்களிலும் இரிந்து நாடியோடித்திரிந்து, வயிரொரிந்துபோன மகாரதர்முதலிய பேர்களுஞ்சேர்ந்து எமதர்மராஜன்மேல் எதிர்க்கின்ற உயிர்வகைக்கூட்டம்போலத் திரும்பினார்கள் கோபமீய குரோதமேரிய-நான்குபடைகளும் அதிரதர் மகாரதர்-சமரதர்-அர்த்தரதர்-முதலிய-வீராதிவீரர்களும் பொருந்தி-பிருதிவி-அப்பு-தேயு-வாயு-ஆகாயம் இவ்வைம்பெரும் பூதமும் கலக்கும்படியாய் ஆதிசேடனுடைய பணமகுடங் குலுங்கும்படியாய்த் துணிந்துதிடனதரியதீரத்துடன் இளைப்பாரிக்கொண்டு தனித்துநின்று சாரதியுடன்பேசி சண்டைவென்றுநின்ற தனஞ்செயச் சிங்கத்தைத் தட்டி யெழுப்பிவளைத்தார்கள்,

சற்றுநேரத்திற்குமுன்னே தனஞ்செயனைற் பட்டபாடுங்கெட்டகேடும்அஸ்திரங்துளைத்தநோயும் பச்சை யுதிரம்ஓடிவரும்புணவாயும்-காயுமுன்னமே ஆயும் அறிவினர் ஆயாசம்பாராமல்-போர்புரியப்புகுந்து, அஸ்திரசஸ்திர-ஆயுதங்களை-விஸ்தாரமாக விடுத்து அடுத்தார்கள்.

அவ்வவர்தொடுக்கும் அம்புக் கும்புகளைக்கண்டு- இரதத்தின்மேற்கொண்டு எதிர்வந்தபேர்கள், பிதுர்கலங்கிப் போகும்படிக்கு விஜயகாண்டீபம் வளைத்து காணெவிவிளைத்து மூளைத்தமுழுமதிபோல் முதிர்த்துநின்றான்; நாயகனுனநரன்-தேரோறு முன்னைமவாமோறுதனச் சுதர்க்கணைமைந்தனை உத்தரகுமாரனென்னுஞ் சாரதி களையாறிய குதிரைகளைத் தேரிற்பூட்டி கலகலவென்று ஒலிக்குஞ்சதங்கைகள் காக்கரதொனியுடன்கலந்து முழக்கமுடுக்கினான்.

அர்ச்சுனராஜன் தேர் அசைந்தாடியோடும்பொழுது மணிமுடிதரித்த-மன்னவர் பலரும்-காரிடி-நீரிடி-நெருப்பிடி பேரிடியென்ன -நெடுநாணோசைகாட்டி-அளவுபடாத அம்புகளைச் சொரிந்தார்கள், அதுவுமல்லாமல், அக்கினிபற்றி-யெழுகின்ற கொழு - மழு-தண்டாயுதம்-சூலம்-அங்குசம-பாசம்-உலக்கை-சக்ராயுதப்-தோமரம் ஈட்டி வாங்குமுதலிய ஆயுதங்களை, முக்கண்மூர்த்திக் கொப்பான பற்குணன்பேரிலும் சாரதிமீதிலும் தேரிலும் குதிரைகளுடம்பிலும் படும்படியாய் முட்கரமாய்வீசி முடிக்கினார்கள்,அதன்றியும்,இயானைமேலிருந்தவாகள்-தேர்மேலமர்ந்தவர்கள் வேகமான குதிரைமேற்கொண்டவர்கள் -பூமிமேல்நின்றவர்கள் தங்கள் தங்களுக் கிஷ்டமானபடிமூனிந்து-தனிப்படை கொண்டு ஜாடினார்கள். அப்போது, பூண்டயங்குந்தேரிலிருந்த பாண்டுபுத்திரனுகியபார்த்தன்-ஏமந்திரிதுக்காலத்தில்- மூடுபனியினுல் மறைக்கப்பட்ட சூரியன்போலிருந்தான், அவ்விதமாகச் சற்றுநேரம் ஒளிமழுகி உருத்தெரியாமலிருந்து-உடனேயோசித்து விரைந்து-தனக்கெதிர்நேரிட்ட தரியலர்களையும அவர்களாற்றுக்கிய சரக்கணைகளையுஞ் சட்டைபண்ணுதவனுய் பட்டங்கட்டிய முடித்தலையாட்டி-பகபகவென்கைத்துப் பற்காட்டிய உடலுயிர்பந்தித்து நம்முடன் அடல்விளைந்துவந்த இத்தனைபேர்களும் படைவதைத்தது; விடவேண்டுமென்று பதரிநினைத்து மறுபடியும் பொறுத்து விஜயகாண்டீபத்தை யெடுத்துநிருத்திவிளைத்துநாணேற்றி பூர்வத்தில தனக்குத்தேவேந்திரன் கொடுத்திருந்த இந்திராஸ்திரத்தையேந்தி மந்திரஞ்சொல்லி வணங்கி இந்திரதிக்கினிலுந்தி இயமதாமராஜனுற்பெற்ற ஏமாஸ்திரத்தை யெடுததுப்பூசித்து - தென்றிசையிலமைத்து, வருணாஸ்திரத்தைவணங்கி மேற்குத்திக்கிலிருந்தி குபேராஸ்திரத்தைக் கைக்கொண்டு கும்பிட்டுப்பணிந்து-வடக்குத்திக்கில்விடுத்து இந்திரனமுதலிய ஈசானதேவனையுந்துதித்து நான்குதிக்கிலும் பாங்குடனிறுத்தி நாணிதனத்திய காண்டீபத்தையும்-அம்பறுத்தூணியையும் - இரதத்தின்மேல் வைத்துப்போட்டு இப்பால்-நடக்குகின்ற-விந்தையான வேடிக்கைகளைப்பார்த்துக்கொண்டிருந்தான்.

இப்பிரகாரம் தருக்குடன் செருக்கிகின்ற தனஞ்செயனையும் அவனுலேவிய சாயகங்களையும் அந்தச்சூரர்கள் தங்களைத்தடைப்படுத்துகின்ற தந்திரங்களையும்-தநுர்வேதமந்திரசுதந்தரங்களையும்-தெரிந்துக்கொள்ள மாட்டாதவர்களாய், பண்டாட்டமாவதே கொண்டாட்டமென்னக்குறித்து, சப்தமேகமெழுந்து போறகவிந்து மின்னலிடியும் விவிட்ட வாறுபோல் முழங்கி விற்பிடித்து, கல்வருஷப்பொழியுங் காட்சிபோல் அஸ்திரங்களைச்சொரிந்து வேணமட்டும்பரிந்து சலிப்பில்லாமற் பாடுபட்டார்கள்.

இவ்வாறு தம்மாற்கூடியவளவிலும்-தாட்சியில்லாமல்முடுக்கி பரயோகித்த சரங்களையெல்லாம் அப்பாலிப்பாற்செல்லவொட்டாமலடக்கி அர்ச்சுனனபேரிற் போகவொட்டாமல்மடக்கி அப்பாணத்தினவேகத்தையும் அடக்கி ஆவென்னத்திறந்த வாயால்விழுங்கி முறுக்கிவாரியடித்து நொறுக்கி தாறு - மாறு வேறு - கூறு-வாறு - செய்யுந்தன்மையை, மந்தரமலைபோலுயர்ந்ததோளிணையுடைய வீஷ்மர் துரோணாச்சாரியர் கிருபாச்சாரியர் அஸ்வத்தாமா முதலிய சாந்தரும்-துரியோதனராஜன முதலாகிய வேந்தரும மகாரதர்முதலிய மாந்தருமபார்த்து தலைகவிழ்ந்து குனிந்து மதிமயங்கிமுனிந்து மனந்தியங்கி நினைத்து ஐயோ! இந்த அர்ச்சுனனுல முனைமுடி அடிபட்டு இடைந்தோமே அந்தத் தெப்பலுடன்போய் விடாமல் திரும்பியெதாத்து அவன தொப்பலுக் குள்ளானோமே; ஓ கோகோ; வெகுநாளைக்கு நிலைநிற்கும்படியான அடிகாததியையடைந்தோமே இதுவென்றுஞ்சிநாமு

பெற்றிருந்த சுபகீர்த்தியையிழந்தோமே வீணாகவே சாரிநொந்தோமேபூணாரம்பெற்ற புரந்தரன்மைந்தன் செய்வனவற்றைச் செய்துப்போட்டு மெய்வருத்த மில்லாமல் விலர்சமுற் றிருக்கின்றானே நாம் இதற் கென்னசெய்வோமென்று வெட்கப்பட்டுவெந்துவெ தும்பி யொதுங்கிப்போனார்கள்.

இப்பால் வானத்தினின்றுவேடிக்கைகண்டவா னவர்மாதவர் மகிழ்ச்சிமேற்கொண்டு மாதவி கொழு நனைமகிழ்ந்து மனதாறப்புகழ்ந்து மலர்மழைபொழிந் து வாழ்த்தினார்கள் சர்ஸ்வதிநாயகனான சதுர்முகப் பிரமனானவர் சாக்ஷாத்காரமான சற்காழிமுகுந்தனு டைய தனியருளென்று சந்தோஷங் கொண்டாடி னான்.

அமராபதிக்கதிபதியாகிய தேவேந்திரன் கால கேயாளைச்செயித்து நமராயுளளித்தவிஜயன் நிவாத சோரநாதன் மைத்துனனென்று நாடிப்புகழ் தாடி னான்.

அளகாபுரிக்கிறைவனான குபேரன் சந்திரசேக ர சடாதரனருளால் இந்திராதிபரெவர்க்கும் முந்திய முதற் காரணமாகி வந்தவதரித்தமரகதநிறத்தன் அ ருச்சுனனுமனென்றானந்தங்கொண்டான்.

பாண்டுவும்வேண்டியபார்த்திபர்பலரும் காண் டிபன்வெகுண்டுகாண்டீயந் தன்னால்தூண்டியவேக ச்சுடுசரம்பொடிக்கச்செத்தழிந்தொழிந்த சேனையும் யானையும் இத்தனைகோடி யென்றியம்பப்படாமையா ல் புத்திரப்பேறு பெற்றேனமென்று மெத்தவும்பே சிமேன்மையடைந்தனர்

அமரர்-சித்தர்-அசுரர்-தைத்தியர்-கருடர்-கின் னரர்-கிருதர்-கிம்புருடர்-காந்தருவர்-இயக்கர் - விஞ் சையர்-பூதர்பைசாசர்-அந்தரர் - முனிவர்-உரகர் ஆ காயவாசிகள்-போகபூமியர்-ஏகாதசருத்திரர்-துவாத சாதித்தர்-அட்டவசுக்கள்-முதலாகிய பேர்களியாவ ரும் இத்தச்சவ்வியசாசியின் சாதுரியத்தைக் கண்க ளாற்கண்டு களித்துத்தங்களாலுந் தாங்கமாட்டாமல் ஓங்கிய மலைக்கண்ணுவப்புற்றிருந்தனர்.

இவ்வாறெல்லோரும் கொண்டாடிக் கொண்டி ருக்கின்ற அந்தவேளையில் வீபற்சு என்னும் பெயர் பெற்ற விஜயன் மறுபடியும் வில்லையெடுத்து நாணி தொடுத்து நாணினைத்தகாரிய சித்தியாகும்படிகருதி மோகனாஸ்திரம்பிடித்து பூசாவிதிகள்முடித்து பிர ணவமந்திரம்படித்து பரதாபராமன்போல் விடுத்து பெருங்கும்புகள் அம்பிகளெழும்படியாய்ப் பெதறி வாடி ஓடி அவர்கள் படும்பாட்டை யோகபுருஷன் போல் நாடிப்பார்த்துக் கொண்டிருந்தான்.

இங்ஙனமென்றெழுந்த மோகனாஸ்திர மானது தியாகம்வாங்கச்சென்ற தெரிவைபோற்சென்று பிரா ணத்தியாகம் பண்ணுவதற்கு பின்வாங்காமல் முன் னேங்கி மற்போர்விளைக்கும் பற்பலவீரங்களையும் வி ற்பனவிவேகிகளையும் சொற்பனங் கண்பவர்போற் சோர்வுரச்செய்து மயக்கியபோது சண்டைசெய்யவ ந்ததிறமும் தாங்கள்புரிந்த வீரமறமும் தேக்கிரமும் துறந்து ..ந்து மடிந்தவர் தம்மைப்போற் பூமிமேற் படிந்துபோனார்கள்.

இதன்றியும் தேர்மேலிருந்தவர்கள் தேரின்பே ரிலும், இய..மேல்வந்தவர்கள் யானையின்பேரிலும் குதிரைவீரானும் குதிரைகள்பேரிலும் இருந்தவாறிருந் தபடி பெருந்திகிலடைந்து இந்தலோகம் அந்தலோ கம் எந்தலோகமோவென்று நிலைதவறித் தலையுதறிப் பொறிசிதறிப்புலன்பதறிச் சாய்ந்துவிட்டார்கள்.

அவர்கள் படும்பாட்டைப்பார்த்த பார்த்தனான வன் மனதுக்கிசைந்த சாரதியான உத்தரகுமாரனது சித்திரமுகத்தை நோக்கிப்பரிந்து பிரயோசனமற்ற நகைபுரிந்தான், பிரயோசனமில்லாத நகையாதென் னில், இரும்புக்குவிழுகின்ற சம்மட்டி யடியானது செருப்புக்கும் விழுவதுபோல் துரியோதனாதியர் பட ப்போகின்ற அவமானம் ஆசாரியர்முதலிய வீஷ்டிம ரும்படப்போகின்றார்களே யென்று வெறுப்பினால் ந கைத்தவெறுநகையென்பர் ஆதலால் சந்துருஷ்டியி ல்லாம னகைத்த தனஞ்செயனானவன் விராடகுமா ரனைப்பார்த்து, அப்பா ! உத்தரகுமாரனே, உன்சகோ தரியான உத்தரைசொல்லியசங்கதி ஞாபகத்திலுண் டோ இல்லையோமறந்துவிட்டாயோ ஜெயங்கொண் டதன்மையால் மகிழ்ந்து விட்டாயோவென்று கேட் டான் அவ்வசனங்கேட்ட உத்தரகுமாரன் கண்களி ருண்டு, மனமருண்டு, சிந்தைகலங்கித் திரம்விலக்கி த் திடுக்கிட்டலமலங்கித் தியங்கி ஒன்றுந்தோன்றாம ல் மயங்கி உறக்கமுந்துன்பமும் ஒருவாறடைந்து இ ப்பேர்ப்பட்ட மகாபுருஷனுடைய அருமைபெருமை தெரியாமல்நமது தங்கைஎன்னசொன்னளோ ஏதுகா ரணமோவென்று பெருமூச்செறிந்து பற்குணனைப்ப ணிந்து பயம்விட்டுத்துணிந்து எண்கிட்ட தெய்வ

பான எந்தலே, அறியாதவளான சிறியாள் குறியாமற்பேசிய கொடுமொழியை என்னைப்பற்றி மன்னிக்கவேண்டும் மகாராஜனேயென்று வாய்பறறிக் கைகட்டி மனநடுங்கிச்சொன்னான்.

அவனது அடக்கம் ஒடுக்கம் நடுக்கம் வணக்கம் முதலியவற்றைக் குறிப்பினாலுணர்ந்துக்கொண்டநாரனைவன் உத்தரகுமாரனுடைய முதுகைத்தட்டி மற்றொன்றுமல்ல நீ வாய்வறளாதே மனந்தளராதே மதிபுரளாதே, வல்லவனே, இப்போது நம்பொதுவியமோகனக்கணையால் அயர்ந்து விழுந்தயாவரும் இன்னமொரு முகூர்த்தத்திற்குள்ளாக மயக்கநீங்கியெழுந்திருப்பார்கள், இதற்குமுன்னுதாய் நீ அவர்களிடத்திற்குப்போய் அவர்கள் கிரீடத்தில் சாம்பிரதாயமாய்க் கட்டிக்கொண்டிருக்கின்ற நூல்தரவஸ்திரங்களையும் விருதுகருதித்தொடுத்த இரத்னலைகளையும் பக்குவமாய்ப்பறித்து வருவையாகில், உன்தங்கைகேட்டுக் கொண்டவண்ணம் பொம்மைகட் கணிந்து விளையாடக்கொடுக்கலாமென்று புகன்ற அர்ச்சுனன்வார்த்தையை உத்தரன் பற்றனாமாற்றுப் பசும்பொன்போல் சித்தமுவந்துநேர்ந்து சிந்தைதெளிந்து ஜெயமென்றெழுந்து சீக்கிரஞ்செல்லுகின்ற உத்தரகுமாரனை பராக்ரமக்கொடிபடைத்த பார்த்தனழைத்து, ஓ, விராடகுமாரனே, இராஜாதிராஜனான துரியோதனமகாராஜனணிந்திருக்கும் கறுத்தமணிகள் பொறுத்த சிறத்தையுடையது, அஸ்வத்தாமாமுதலிய துச்சாதனன் தரித்திருக்கும் வஸ்திரம் நீலமணிகளழுத்திய கோலத்தையுடையது கொடையாளனாகிய கர்னராஜனது சிரோவஸ்திரமானது நான்குபுறமும் நவமணிபதித்து மரகதசிறத்தை மாற்றியிருப்பது மநுவேதமறிந்த தனுவேதியரிருவருந் தரித்தகலையானது சுற்று முத்துவைத்த கோத்த குற்றமற்ற வெண்பட்டாற சமைந்தது இன்னமுள்ள மன்னவர் துணிகள் பன்னிறவன்னமாயிருக்கும் அன்னவைகளில் உன்கண்ணுக்கிசைந்தன வெல்லாங்கட்டிக் கொண்டுவந்துவிடு அப்படிக்குவரும்போதில், எக்கலையாவாகிய வீஷ்டுமரிடத்திற்குப்போகாதே அவரது தலைவேஷ்டியானது மெத்தச்சிறந்திருக்கும் அதன்பேரிலாசைவைக்காதே அவரிந்த மோகனாஸ்திரமயக்கத்தில் மூழ்கமாட்டாரோ நீ யொருவேளை அவனாக்கிட்டிப் போனவையாகில் ஒரோவெட்டாய் வெட்டியெறிவாரே ஆகையாலவனா யெட்டிப்பாராதே.

மற்றையர்களிடத்தில் தாராளமாகச்சென்று அவரவர்களுடைய தலைத்துணியைக் கைக்கொண்டு, சல்தியில் வந்துவிடென்று பின்னுஞ் சொல்லுகின்றான்.

ஓ உத்தரனே நீ கால்நடையாகச்செல்லாதே அவர்கள் படும்பாட்டைக்கண்டு ஒன்றுஞ்சொல்லாதே கண்மூடிக்கலங்கிக் கசங்கிக் கிடப்பவனாக்கொல்லாதே அவர்களுன்னைக்கண்டு விட்டால் (ஐயோ) அது பொல்லாதே நீயவ்விடங்களில் தாமிசப்பட்டு நில்லாதே நமதுதேனைச்செலுத்திக் கொண்டுபோய்ச் சீக்கிரத்தில் வரக்கடவாயென்று காண்டீபன்சொல்ல அந்தப்பிரகாரம் செய்வேனென்று இரதமூர்ந்துசென்று அவரவர்கள் கால்மாடுதலைமாடாக விழ்ந்து உறங்கியிருக்கின்ற கலக்கத்தைக்கண்டு, அவாளவாளுடைய தலைத்துணியைக் கவர்ந்துக்கொள்ளும் படிக்குப் பாய்ந்துபாய்ந்து பறிக்கும்போது மாய்ந்தவர்தம்மைப்போற சாயந்துகிடக்கிற வேந்தர்களெல்லாம் மூடியகண் திறக்காமலிருந்தார்கள். சிலபேர்கள் விழித்த பார்வையுடன விறைத்தாப்போலிருந்தார்கள் ஆவெனத்திறந்தவாய்கள் சிலபேர், கூவெனக்குறைந்தபேயர்கள் சிலபேர்கள், ஊவெனவோசையிட்டுளறினோர் பலபேர்நாக்கைக்குழப்பி கவிழ்ந்தோர்பலபேர் வாக்குக்குளறிவலிப்போர்சிலபேர், நழுவாமற்பிடித்த எழுவாயுதத்துடன் விழுவார்பலபேர் எழுவார்பலபேர் கால்தவறிமண்ணைக்கவ்வுவோர் சிலபேர், மேல்சுவறிபொத்த வெறியாஞ்சிலபேர், இதன்றியும்கைகாலசைவது குறியாமலும் மெய்சாய்வதில் உயிர்பிரியாமலும் வாயில் ஈப்புகுவது தெரியாமலும் நோயில்தீப்படுவது தரியாமலும் பல்லைப்பல்லைக்காட்டி பரதவித்து வில்லைநாட்டி பலவிதஜாலமாய் தலைவிரிகோலமாய்ப் பதைத்திருந்தார்கள்.

இப்படியா யிருந்தபேர்களைப்பார்த்த உத்தரகுமாரன் ஜயமடைந்து பையநடந்து என்செய்வோமென்று அர்ச்சுனன்சொன்ன சைகையைமறந்து அவனது ஆதரவையும் போதரவையும் பூரணமாநினைத்து கையுங்காலும் மெய்யும்வாயும் கடகடவென்று குலுங்கி நடுங்கிப்படபடவென்று அலமலங்கி யொடுங்கி பேய்போற்பதறிமுடங்கி பேய்மனம் பெதறியடங்கி பின்னு முன்னும் போகத்தொடங்கி வீஷ்டுமரிருந்த நிலையைப்போய்பார்த்தான், அந்தமெய்விரத சீலரா

கிய வீஷ்டுமரானவர் கண்ணையுருட்டிக்காட்டி விழித்
துவீரப்பார்வை காட்டியிருந்தார் அவரைக்கண்டமா
த்திரத்தில் ஒருதரம்வேர்த்து பயங்கரத்துடனுர்த்து
நான்குபுறமும்பார்த்து சித்திரச்சிலைவிஜயனைச்சிந்தி
த்து திடதீரத்துடன் கனைத்து வந்தகாரியத்தைநினை
த்து வஸ்திரம் பறிக்கத்தனித்து கிரீடியுரைத்த உத்
திரத்திற்கு துஸ்தரமாகிய துஷ்டத்தனஞ்செய்ப்ப
டாதென்று மதித்து வென்றிவீரர்களின், பட்டுத்து
ணிகளைவிட்டு விடாமற் றொட்டுப்பறித்து பெருமூ
ட்டைகட்டி தேர்மேலேற்றிக் கார்போலிரைந்து வா
ராடுவெகுதிரைத் தேரோட வந்தான்.

இந்தப்படிக்கு அச்சமில்லாமற்சென்று மச்சரா
ஜன்மைந்தன் கொண்டுவந்த துணிமூட்டையைப் ப
ச்சைமேனிப் பந்துனன்கண்டு, கொண்டாடிமகிழ்ச்சி
யடைந்துபுகட்சியாய்ப்பார்த்திருக்கும்போது அர்ச்
சுனன்கணையால் அடிபட்டுநொந்து மேனிமுழுதும்
வேஷ்னையால்மெலிந்து மோகனக்கணையால் மூளை
கெட்டழிந்து வில்முதலிய பாணம்பிளந்து வெறுங்
கையராய்த் தளர்ந்து முடிசாய்ந்துவிட்ட கொடிவீரவ
ர்க்கமும் படியாளுமன்னரும் பார்த்திபன்படைகளு
ம் கொஞ்சக்கொஞ்சமாய்க் கலக்கம்பிரிந்து கஞ்சொ
ழிந்தநாகம்போல் நெளிந்து தங்களைத்தாங்களேயறிந்
து தலைக்கேறிய மயக்கந்தெளிந்து தத்தித்தடுமாறிச்
செறிந்து மெத்தனவெழுந்து பித்தன்போல் விழுந்து
செத்தவர்போற்கிடந்து எக்காலுநீங்காத துக்கமுந்
துயரமும் வெட்கமும் நாணமும் விசனமும்மேலி
டவே தது இனிதலையெடுக்கப் போறதில்லையென்று
சொல்லும்படிக்கிருந்தார்கள்.

இப்பேர்ப்பட்ட விசனத்தினுல் திப்பிரமைகொ
ண்டிருந்தவர்கள் சுப்பிரதீபம்போன்ற அர்ச்சுனராஜ
னையெண்ணிமதித்து, அற்புதமடைந்து அவனுக்கெ
திர்வரமாட்டாமல் சிவனுக்கெதிர்செல்ல நாணும் தி
ரிபுராதிகளைப்போல் கனமற்றவர்களாய் திகிலடைந்
த மனமுற்றவர்களாய் வறண்டுபோன நெஞ்சம்நாக்
கும் சுருண்டுபோன சாலுங்குடலும் துன்பப்படாம
ல் கனையச்செய்து இன்புடன்காக்கும் கருணைக்கட
லாகிய கங்காபுத்திரனைநோக்கி, ஓ எங்கோனே இத
ற்கெனசெய்வோமென்று ஏங்கியகாலை (மதற்கிடங்
கொடாத மாணிபாம்விரதன்) எப்புவனத்தும் ஒப்பி
லாத மதிப்புவல்லவனான சுயோதனபாக்கியவானு
க்கெதிர்சென்று நின்று ஓ, யோக்கியனானே என்னொ
ரு வாக்கியங்கேளென்றுபேசத்தொடங்கினுர் அப்பா
துரியோதனு இடுபதைத்து பதிப்பேர யெதிர்த்து
யுத்தப்பண்ணுவதற்கு தேவர்களாலும் தெய்வத்தன்
மைபெற்ற மூவர்களாலும் ஆகாது, மற்றெவர்கட்கு
ம், வெற்றிபெறும் விதக்காட்சியும் யுத்தஞ்செய்யுந்
திடசூட்சியும்வாராது, ஈதிவ்வாறிருக்கின்றமையால்
இனிமேல் யுத்தகளநாடி வெற்றிப்போர்புரிவோமெ
ன்று என்றென்றைக்கும் எண்ணவேண்டாம் ஒரு
வேளை கிரகசாரசாமானியத்தால் சண்டைபோட்க்
கருதுவீராகில் மெய்யாகவே பிராணன்பெறமாட்டீர்
கள், அதென்னத்தினுலென்றுல், அவனுந்தியமோக
ஸஸ்திரத்தினுல் நாமெல்லோரும் உயிர்சிந்திய வாறு
போலயர்ந்து தலைசாய்ந்துகிடந்தசமயத்தில் ஏதோ ஒ
ருசீலைவுகொண்டு, தன்சாரதியையனுப்பி அவர்தலை
கை[illegible]ற கொண்டுவாவென்றுவிட்டால் அந்தச்
சொல்லுக்கிரண்டில்லாமல் இதுவரையில் நமதுபிரா
ணன் போயிருக்கலாம் இதற்குச்சாட்சியாதென்னி
ல் சற்றுநேரத்திற்குமுன்னே செத்தவர்போலொடு
ங்கிக் கிடந்தநம்மைச் சுற்றிப்பார்த்து வரும்படியாய
உத்தரகுமாரனையனுப்பி தனக்குவேண்டிய வற்றை
ச்சுற்றிக்கொண்டுபோனுன் அதற்குத்திர்ஷ்டாந்தரம்
உங்களுங்கள் தலைதப்பியிருப்பதைத் தடவிப்பாருங்
களென்றுர்.

அப்போது தங்கள்தங்கள் தலையைத்தடவிப்பா
ர்த்துமல்லாமல் ஒருவர்தலையை யொருவர்பார்த்து
உன்தலைதுணியெங்கே என்தலைதுணியெங்கேயென்
று பெருங்கூச்சலிட்டு ஐயையோ, தலைத்துணியைக்
கொண்டுபோனீ சாதுரியனுக்கு நமதுதலையைத் தவி
த்துக்கொண்டுபோவதுதாட்சியா ஓகோகோ; தலுவி
ல்முடித்துக்கொள்ள்லாமே அந்தமட்டு நம்மைச் சு
ம்மாவிட்டுப்போனது நமது பெண்சாதிமார்களின் மா
ங்கல்யபலமேயென்று மகிழ்ந்து வீஷ்டுமனைப்புகழ்ந்
து தேவரீர்சொன்னவார்த்தைக்குத் திருநில்லையென்
றுர்கள் அப்போது வீஷ்டுமர் இப்படியே யென்சொ
ல்வழி நிற்பீர்களாகில் நாமெல்லோருஞ் சௌக்கிய
ம்பெறலாம் அதெப்படியென்னில் கடல்நிறம்பெற்ற
காண்டீபனனவன் உயிர்பிச்சை கொடுத்தானென்று
உரக்கக்கூவி அவனுக்குமங்களாகா மூண்டாகும்ப
டிக்கு வாழ்த்தி நம்முடைய படைமுழக்கத்தைத்தா

ழுத்தி அஸ்தினபுரத்தை நோக்கிப்போவதே நேத்தியென்று சொன்னார்.

இவ்விதமாக மாதவத்திலுயர்ந்தவரதின் கூறக்கேட்ட மன்னன்முதலிய தம்பியர்பலரும் கன்னன்முதலிய சகுனியும் மன்னருஞ்சத்தியஞ் சத்தியமென்றுதிரும்பிபாகிரதிபுத்திரனுரைத்த புத்தியை விரும்பிப்போனார்கள் அத்தருணத்தில் அரவக்கொடிக்கதிபனான துரியோதனனுடைய சகோதரர்களில் விகர்னராஜனென்பவன் அத்தினபுரியென்னும் பட்டத்துயானைமேலேறி தன்தமயனை முன்னடத்தி அவனை மறைத்துக்கொண்டு தான்பின்னாகப் போனான் இரதகஜ துரகபதாதியர்முதலிய மன்னமண்டலீகர்யாவரும் பெருங்காற்றிற் பறக்குகின்ற இலவம்பஞ்சுபோல் திசாதிசைகளிலும் பறந்துபறிந்து காந்தைத்சிதத்திறகுவித்துச் செறிந்து துரியோதனனுடன் படைகளுமூறிந்து மெய்விரதன்தம்பியான விஜயனைப்புகழ்ந்து உயிர்ப்பிச்சையளித்தான் உத்தமனென்றுமகிழ்ந்து ஊர்முகநாடியோடினார்கள்.

இப்பால், அர்ச்சுனன்தொடுத்த பாணங்களினல் அழிந்தவரொழிய ஓடியொளிந்த சேனைசமினியக்களும் துரியோதனமகாராஜனுந் திரும்பிப்போவதை ஆண்மையாலுயர்ந்த அர்ச்சுனன்பார்த்து, அடி வயிறெரிய ஆர்ப்பரித்துவேர்த்து ஓ! கௌரவ முதல்வனே ஓ, கீர்த்திப்படைத்த மூர்த்தகண்ணியனே, ஓ கெடிஸ்தலாதிபனே, ஓ வணங்காமுடிமன்னனே, ஓ, அரவக்கொடியானே, ஓ நந்தியாவட்டமாலைதரித்த நரேந்திரனே, ஓ துரியோதனராஜனேயென்று பற்பலமுறையாகக் கூவியழைத்து தேவர்கள்முதலிய பேருந்திசெகிடும்படியாய்ப் பேரிடிபோலிறைந்து சிற்சிலவார்த்தைகள் பேசத்தொடங்கினான்.

அவனியையாளும்நேயனே அபத்தம்பேசும்வாயனே மாயச்சூதாடக்கற்ற வஞ்சகச்சகுனிமாமனிருக்க மகாபதிவிரதைகளை வஸ்திரமுரியக்கற்ற துச்சாதனத் தம்பியிருக்க வாயாடக்கற்றதேர்ப்பாகன் வளப்புப் பிள்ளையானகர்னனிருக்க உனக்குப் போதுமானபுத்தியிருக்க சத்துருக்களைவெல்லுஞ் சமத்திருக்க சத்தியந்தவறி வாயடிப்படிக்குஞ் சாதுரியமிருக்க இத்தனைபலமும் அபலமாகும்படியாய் ஏன் ஓடுகிறாய் பூர்வம், அரசர்கள்கூடிய அஸ்தினபுரத்து ராஜசபையில் இரத்தினமுடிபொருத்த உன்தலையாட உன்காதிலணிந்த குழையாட உன்வாயிலடங்கிய நாவாட கட்டுரைபேசிநீ வாதாட சொக்கட்டானாட்டத்தில் எங்களைச்செயித்து, காட்டிலோட்டிவிடக்கற்ற நீ இப்போது சண்டைநேர்ந்த இவ்விடத்தில் வில்திறங்காட்டி வெற்றிபெறமாட்டாமல் தலைகவிழ்ந்து தலைத்துணியிழந்து உயிர்கொண்டுபோவதுபொல்லாது இதைப்பார்க்கிலும் சாவதுமேலு ஓ காவலனே யுத்தத்திற் சத்துப்போவது மெத்தவும்புகட்சியல்லவோ, மானங்கெட்டபிற்பாடு பிராணனிருக்கவேண்டுமோ, ஆமன்னனே அரவக்கொடியும் அணிமணிமுடியும் வெள்ளைக்குடையும் வேண்டியபடையும் அரசசாத்தியமும் மாசவாத்தியமும் சங்கத்தொனியும எங்குமுழங்கி நெருங்க இந்தவிராடபுரத்திற்குவந்து, சத்தவீரக்கர்த்தனைப்போல் பசுமந்தைகளை மடக்கினையல்லவோ நீ யோட்டியமாட்டுமந்தையை எதிரிகளிடத்தில் விட்டுப்போட்டு, நீ கூட்டிவந்தசேனைகளிலும் பாதிமடியக்கொடுத்து உயிரொழுந்த பிணம்போல ஊரைநோக்கிப்போகின்றனையே ஐயோ அப்பா உன்னைக்கலந்த மங்கைமார்கள் என்னசெய்தியென்று எதிர்நின்றுகேட்டால் அந்த உரியவர்களுக்கு என்ன சொல்லப்போறாய் பெரியதனம்படைத்த பேயனே அப்போர்க்கொத்த பெண்களுக்கெதிரில் நாணமல தலைகோணமல் மானம்விட்டு நடப்பாயோ, அடாபாவி இப்போது நீயாளும்பூமியையும் உன்னுயிரையும் தீங்கல்லாமல் வாங்குவதற்கு என்தமயன் வீமசேனமகாராஜன் காத்திருக்கின்றானென்றெண்ணி இன்றைக் குன்றனைக்கொன்று விடாமல் வென்றிமாத்திரங் கொண்டேன் இதன்றியும் பொருமையாக உன்பிராணனையும் விட்டேன் இல்லாவிட்டால் நீயும் உன்னைச்சார்ந்த படைமன்னரும் எனக்குலக்ஷியமென்றும் அலக்ஷியமென்றும் உனக்கு விலக்ஷணமாகத் தெரியுமே குலக்ஷயம்பண்ணப்பிறந்த கோமானேயென்று வெகுண்டு பின்னதயானவார்த்தை புகன்று நெடுநேரம் பேசியகாலையில் இராஜாதிராஜன் அர்ச்சுனன்சொன்ன மொழியைக்கேட்டுங் கேளாதசெவுடனைப்போல் இருதோளும்வாடி பூரிப்படங்கி துன்ப இருளால் மூடப்பட்டு ஆமைபோலடங்கி ஊமைபோற்போனான்.

அந்தச்சமயத்தில் பச்சைநிறம்பெற்ற பற்குணனவன் வச்சிரக்கண்டவாளியொன்றேவி விகர்ணனேறிச்சென்ற வீரபட்டயானையை வெட்டிமுடக்கி துரியோதனன் வெட்டவெளியாய்த் தெரியமடக்கி பாரியவில்லிற் கூரியமுனைப்பகழியடுக்கி[illegible]ரவக்கொ

டிகரித்த துரியோதனனுடைய வணங்கா முடியிற் பொருந்தகிரீடத்தை யுடைத்துருக்கி மொட்டத் தலையுடனிருந்த துட்டனைப்பார்த்து பொட்டெனநகைத்தான், அந்தகாலையில் தாமரைக்கமலம்போலலர்ந்த துரியோதனனுடைய முகங் குவிந்து, கரிந்து, பொரிந்து, செறிந்த கண்கலக்க முள்ளவனாய் ஓட்டத்தின்பேரில் நாட்டம்வைத்துப்போனான்.

இந்தப்பிரகாரம் பொல்லாங்குக் கிருப்பிடமான வஞ்சநெஞ்சனைச்சேர்ந்த பூபாலர்களும் கோபாலர்களும் யுத்தமுனைகெட்டு, புறமுதுகிட்டு, பேராசைவிட்டுப் பேராசைகெட்டுப்போகுங்காலையில் கற்பகத்தாவைப்போற்கருணையும் பிராணதானவர்க்கும் ஈகையும், ப்ரக்யாதிபெற்ற வாகையுமுடைத்தாய் தேர்மீதிருந்த செஞ்சிலைவிஜயன் மச்சகுலாதிபன் முகத்தைப்பார்த்து, சித்தஜனுக்கொப்பான உத்தரகுமாரனே, நமது மச்சதேசத்திலுள்ள மாட்டை மடக்கி வெற்றிகொண்டு போகவந்தவேந்தன்முதலாகியவீராளியாவரும் யுத்தம்பண்ணி நம்மைச்செயிக்கச் சத்துருவமற்றவர்களாய் செத்தவர்போக மற்றவர்கள் மெத்தநொந்து சித்தநைந்து உயிர்மாத்திரங்கொண்டோடுகின்றார்கள் நம்மிடகாரியஞ்செயமாய்விட்டது இந்தமட்டும் இவர்களைவிட்டுவிடாமல் இன்னமும்மேல் விழுந்து தொடர்ந்து துரத்தியடிப்போமா அவர்கள் கெட்டார்கள் பஞ்சுகளென்றுவிட்டு பெரியமனசுபண்ணி விராடபுரத்திற்குப் போவோமா இன்னஞ்சற்றுநேரம் இவ்விடத்திற்றானே யிருப்போமா உனகருத்தென்ன, சீக்கிரந்திருத்தமாச்சொல்லுமென்றுகேட்க விராடகுமாரன் பேசத்தொடங்கினான்.

வீரியவிஜய வெவ்வேலவனே சீரியமதிகுலச்செஞ்சேவகனே நின்றிருவடிக்கடைக்கலம் காரியங்குறியாக்கடையேன் சிறியேன் பாரியயுத்தம்பண்ணியானறியேன் ஆயினுமையா அவர்களெல்லோரும் செத்தபிணத்தோடொத்த கணம்போல் சத்துருங்கெட்டுத் தளர்ந்தோடினார்கள் இளைத்தோடுகின்றவர்கள்பேரில் கணைதொடுப்பிராகில் தேவரீர், இதுவரையிலும் பெற்றிருந்தபுகட்சி யிகட்சியாய்விடும் மேலும் இன்னம் ஆகவேண்டியகாரியம் பின்னிட்டிருப்பதால் அப்போது பார்த்துக் கொள்ளலாம் நாமிப்போது விராடபுரம்போய்ச்சேர்வோம் பலஞ்சூரந்துபொங்குந்தோளினையுடைய பார்த்திபனேயென்று சாரதிசொன்னான்.

இவ்வாறு உத்தரகுமாரனுரைத்த உத்தரத்தை பார்த்தனுற்றுக்கேட்டு உத்தரதிசையைவிட்டுத் திரும்பிக்களித்துவின்னாணிதளர்த்தி அம்பறாத்தூணியுமவிழ்த்துத் தேர்மேலிருத்தி அப்பா உத்தரகுமாரனே இளைத்தபேர்களைத் தொடரப்படாதென்னும் என்னெண்ணப்படிக்கே நீயும் சொற்றனை நம்மிருவர் மனசும் ஒருமைபானதேபெருமை இப்பவும் யுத்தகோலங்கொண்டு புறப்படும்போது உன்னைப்பெற்றதாயான சுதேட்சணைதேவியானவள் மிகுந்தவியாகுலமடைந்திருந்தாள இன்னமும் எப்படியோவென்று எதிர்பார்த்துக்கொண்டிருப்பாள் ஆகையால் நாம இவ்விடத்தில்வந்த சத்துருக்களைசெயித்து ஒன்பது கோடி பசுக்கூட்டங்களைமீட்டி வனத்திலனுப்பிவைத்த சேவகர்களைநாமே முசுவிற்போய்ச்சொல்லி அவள்மனக்கவலையை ஆற்றவேண்டுமென்று தேவர்கள் மகித்துக்கொடுத்திருந்த தேவதத்தத்தை யெடுத்து உலகுமயங்கும்படியாய் முழக்கினான், அந்தச்சங்கத்தொனியைக்கேட்டு வீஷ்டுமர் துரோணாச்சாரியர் கிருபாசாரியர் அஸ்வத்தாமர்முதலியபேர்களும்பார்த்தன் பின்தொடர்ந்து ஆர்த்துவருகின்றானோ என்னமோவென்னும் பயத்தால் திரும்பித்திரும்பிப் பார்த்தார்கள் அப்படிக்கு பயந்துபார்க்கும் போகளை அர்ச்சுனனும்பார்த்து தேர்விட்டிறங்கி தகுதியுடைய பெரியோர்களைத் தலைவணங்கிப்பணிந்து மறுபடியுந்தேரேறி மிகுந்தசந்தோஷத்துடன் உத்தரகுமாரன் விடுத்த இரதத்தின்மீதிற்சென்றான்.

இப்பால் கடல்சூழ்ந்த உலகைப்பரித்த அரவக்கொடிதரித்த துரியோதனமகாராஜன் அணிந்திருந்த அழகிய நவமணிமுடியும் ஒளிவிடு மிரத்னாபரணங்களும் அதுலசங்கிராமஜயவிஜயனது அஸ்திரங்களினால் அறுப்புண்டு, பிளப்புண்டு, தள்ளுண்டு, கீழ்த்திசையிலுதித்த சூரியகிரணங்களால் மேற்றிசையிற்றோன்றிய சந்திரன்போல் ஒளிமழுங்கி இன்னமும் வரவரக்கண்டறிவோமென்று ஏக்கங்கொண்டு அட்டதிக்கும்பரவிய சேனைகளுடன் பட்டம்பகலிற் பட்டினம்போகமாட்டாமல் வெட்கப்பட்டு, அத்தினபுரியிலுள்ளயாவரும் நித்திரைபோன பிற்பாடு, ஆட்டபாட்டங்களடங்கி கோட்டைமதில் வளைந்தராஜபாட்டையிற்புகுந்து ஒட்டமும் நடையுமாய் ஊர்போய்ச்சேர்ந்தான். பெரியோர்முதலிய உரியோர்களும்பாதி

ராத்திரியிற் பேய்போற்போனார்கள், இவர்களிப்படியிருக்க மாடுபிடி சண்டையைவென்று ஆடுகொடியுடன்திரும்பிய அர்ச்சுனராஜன் மேடுபடும்பாலை நிலத்தில், காடுபட்டுவடர்ந்து நீடிய வன்னிமரத்தைச்சார்ந்து, அம்பரப்பொந்தில், முன்னிருந்தவண்ணம் ஆபரணவலங்காரமுடியும் அனுமக்கொடியும் தேவதத்தமும் வில்லும் அம்பறாத்தூணியும் வைத்து; பழயபடி மான்றோலிட்டிறுக்கி மச்சகுமாரனையுமிறக்கி முச்சகங்கொண்டாடாநின்ற முன்னழகையும் பின்னழகையுமாற்றி இனிமேல் நடக்கவேண்டிய முறைமைகளையுந் திறமைகளையும் யோசித்துபழயபடி பேடியுருவை நினைத்து, வழுவில்லாதவடிவமுமமைந்து பொன்மயமானதேரில் உத்தரகுமாரனது, சிங்கக்கொடியை நாட்டி, குதிரைக்கயிறுங் கோலுந்தாங்கிச் சாரதியாகிச்சயிந்தவமுந்தினன்.

முந்தியதேர்முகத்திற குந்தியபேடியுருவைக்கண்ட உத்தரகுமாரன் கோவெனவழுது, ஓவென்றிரைந்து ஐயா நான்மெய்யைச்சொல்லுகின்றேன் பொய்யா மொழிப்பொறையன் சோதரா நான் செத்தாலுந்தேறமாட்டேன் இனிச்சற்றேனும் நாயகனே யிருக்க மாட்டேன் தேவரீருடைய காலடிப் புறத்திலிருக்கத் தக்கவரிற் கடைப்பட்டநாயேன் நடுநாயகத்தட்டிற்பொருந்து நலம்பெறுவேனோ ஆதெய்வமேயென்றுசிந்தைசிந்தி கொந்துலைந்து தேம்பினான்.

அத்தன்மையாய்க் கலங்கிய உத்தரகுமாரனைத் தேற்ற அவனது, விசனத்தைமாற்றி பிரியவசனங்களினால் பேடிபேசத்தொடங்கினான். ஓ? விராடன தவத்தால் விளைந்த நற்சுதனே எனக்கு மூத்தவர்களும் இளையவர்களும் தங்களுடைய எதாருபமெடுத்து வெளிப்பட்டவர்களோ இன்னம் வெளிப்படவில்லையோ என்னையெதிர்பார்த்துக்கொண் டிருக்கின்றார்களோ அது இன்னதென்று எனக்குத்தெரியவில்லை, அதப்படியிருக்க நான்மாத்திரம் நிசருபங்கொண்டு, நடக்கலாமோ தமயன் கருத்தைத்தள்ளி நடக்கப்போமோ அப்படிக்குத் தப்பிநடந்தால் பிற்படிக்குப் பாபம்பீடிக்காமல் விட்டுவிடுமோ தருமவிருத்தனென்னுந்தாட்சிப்பேர்பெறுவேனல்லவோ, அப்பனே உனக்குமெனக்குமொருபேதமில்லை உள்ளனென்பதொன்றுமேபோதும் என்வார்த்தைதள்ளாமல். இந்தத் தேரிலேறெண்றேற்றி அவனை அதிரதராஜனைக் போற்றிவிற்ப்பாணங்களும்வீரகண்டையும்பூட்டிகுதிரைக்கயிருங்கோலுந்தாங்கிதேரைச்செலுத்தி சற்றேனுங்குந்தமனம்பெறுத உத்தரகுமாரனோடு யெத்தவ்வார்த்தையாடிக்கொண்டுவிராடபுரத்துக்கோட்டைமதிலுக்கு வடமேற்குத்திசையிற் சூழ்ந்தகுளிர்ச்சியும் பசுமையுங் கூடிக்குலாவிய செழிச்சியாகிய சிரங்காரத்தோப்பில் வந்திறங்கிதேகவெப்பந்தீர்த்துக்கொள்ள வேண்டியசிந்தைகொண்டிருந்தது.

ஒருவர்கொருவர்பிரிந்து, பாண்டவர்கள் பன்னிரண்டுவருடம் வனவாசமபண்ணிய துன்பங்களையும ஒருவருடம்அஞ்ஞாதவர்சஞ் செய்வதற்காக வடிவமாறிய துயரங்களையும் விராடராஜனிடத்தில் தாங்கள் செய்துவந்ததொழில் விதங்களையும் வேறுவேறாகிய மாறுபெயர்வைத்துக்கொண்ட மார்க்கங்களையும அமுதரசம் பொழிவதுபோலஉத்தரகுமாரனுடன் சொல்லிக்கொண்டிருக்கும் வேளையில் விராடபுரத்திலிருந்து, சிலதூதர்களோடிவந்து, க்ஷேமவிசாரணை செய்தார்கள் அந்தத்தூதாளிடத்தில் அர்ச்சுனன்சொன்னதாவது, அப்பாசாரணர்களே பேடிதேர்செலுத்தச்சென்ற உன்புத்திரனான உத்தரகுமாரன் எதிர்த்துவந்தமன்னருடன் அதிர்த்துப்போர்புரிந்து, கோடிதோராளிகளைவென்று குப்புற்றுப்புறமிடக்கண்டு, நமது மந்தையைமீட்டு விட்டானென்று நீங்கள் சீக்கிரத்திற்சென்று சொல்லுங்களென்று அவர்களையனுப்பிவிட்டு கங்காநதிபாயுங் குருநாட்டுக் கதிபதியாகிய காண்டீபன் விராடகுமாரனுடன் இன்னம்பலவாறுகப் பேசிக்கொண்டிருந்தான்,

இங்ஙனம் இவ்வாறிருக்க இதற்குமுன்னை நாள் தென்றிசைக்குப்போன விராடராஜன் திரிகர்த்தனைச்செயித்து அன்றிரவுமுழுதும் தூக்கமில்லாமற் சேனைகளுடன் காவலிருந்து, மேற்படைவாராமையால் மறுநாட் சூரியோதயமானபின்பு பந்துவர்க்கங்களும் மன்னரினங்களும் மைந்தரனைவரும் தாம்தாமென்னச் சங்கீதமுழங்க விராடபுரம்வந்து சேர்ந்தார்கள்.

ஜயப்பிரதானத்துடன் மச்சநாடு வந்துசேர்ந்த விராடராஜனை விஷங்கலந்த வேற்கண்ணாளாகிய சுதேக்ஷணாதேவி யிச்சைகொண்டு எதிர்சென்று கண்டு, மச்சகுலாதிபனை வணங்கி தேவரீர் தக்ஷணதிசை மீட்சிக்குப்போயிருந்த சமயத்தில் வீஷ்மர் கிருபாச்சாரியர் துரோணாச்சாரியர் அஸ்வத்தாமா கர்னன்

முதலாகிய துரியோதனாதியர்கள் நமது விராடபுரத்தில் வடதிசைபுகுந்து வளைந்து; மாட்டுமந்தையைமடக்கினார்கள் அந்தச்செய்திகேட்டுசித்திரப்பிரதமைபோன்ற உத்தரகுமாரத்திக்குநாட்டியங்காட்டி ஆட்டிவைத்திருந்த பேடியானவள் தேர்செலுத்தவென்று தங்கள் திருமகனை உத்தரகுமாரன் யுத்தகோலங்கொண்டு வெற்றிபெறப்போயிருக்கின்றானென்று விளம்பினாள்.

தனது, மனைவிகூறிய சங்கதியைக்கேட்டவிராடன் உயிரொழிந்த உடம்புபோலொடுங்கி உயிர்போக்கி உருகிவிழுந்தான் உடனே பக்கத்திலிருந்தபேர்கள், வாரியெடுத்துமார்போடணைத்து சீதளசந்திரகாந்தக்கிண்ணங்களினாற்பொருந்திய சுண்ணங்களையும் சந்தனபாளித குங்குமக்குழம்புகளையும் பூசி பன்னீர்தெளித்து சயித்தியோபசாரஞ்செய்து, சிற்றாலவட்டம்பேராலவட்டமுதலிய விசிறிகளாலசைத்து, விராடராஜனைத்தேற்றினார்கள் எவ்வித வுபசாரங்களினாலுந்தேறாதவனாய்ச் சொன்னதைச்சொல்லிச் சோர்வடைகின்ற-தோன்றலைப்பார்த்து என்னத்திற்கிவ்வண்ணம் வருத்தப்படுகிறீர் மன்னர்மன்னனே, வாறேறுந்தனைப் பேடியானவள் தேரூரும்படியாய்ச் சென்றிருப்பாளாகில் இன்னஞ்சற்றுநேரத்தில் பொன்னந்தேரேறி வெற்றிபெற்று உன்மகன்வரப்போகிறான் அவனைக்குறித்து, நீ சித்தங்கலங்க வேண்டாமென்று நித்தியவிதிசொல்லுகின்ற உத்தமனான கங்கபட்டர் சொன்னார்.

இப்படிக்குச்சொல்லிய தருமதேவதையின் வாக்கியத்தினால் நிறைந்தபாக்கியம்பெற்றவனைப்போல் தேரித்தெளிந்து சிறப்புத்திருந்தான் பின்னுஞ் சற்றுநேரத்திலுன்னி ஓ கங்கபட்டரோ என்பாக்கிய மெய்ப்படியாமோ உமது வாக்கியமெப்படியோமோ நானறியேன ஆகிலும்நால்வகைப்படையுங்கொண்டு, நாமேயெதிர்நோக்கிசென்று நம்மாலான உதவியுஞ் செய்வோமென்று நாடுகின்றேனென்று விராடராஜன் விளம்பினான்.

அம்மொழிகேட்ட கங்கபட்டரானவர் ஐயோ நீயப்படி அணைப்படுவையாகில் குணம்பெற்று வருகிற உன்மகனுக்கு அவமானத்தை விளைக்குமல்லது வெகுமானத்தை விளைக்கமாட்டாதே.

ஆகையால், இன்னங்கொஞ்சநேரம் நீசெவ்வையாக நிதானித்து சிலகாரியஸ்தனையனுப்பி எதிர்கொண்டழைத்து வரச்சொல்லுமென்று, கங்கபட்டர்சொல்ல அதற்குடன்பட்டிருக்குங் காலையில் நிறம்படைந்த துரியோதனன் வீஷ்மர்முதலாகிய பேர்களும் புறங்கொடுத்தோடிப் போயினரென்றும் அவர்களால் மடக்கப்பட்டமாட்டுமந்தையனைத்தும் மச்சநாட்டைச்சார்ந்த காட்டுப்புறத்தில் வந்ததென்று ஒருதேரும் ஒருவில்லுங்கொண்டு முனைந்து யுத்தம்புரிந்து வெற்றிபெற்று வருகின்றார், உன்புத்திரசிகாமணியாகிய உத்தரகுமாரனென்றுந் தூதரோடிவந்து தொழுதுரைத்தார்கள்.

அவர்களுரைத்த அமுதரசத்தைச் செவிவழியாகத்தெவிட்ட வருந்திக்கொதிப்பாறிக் குளிர்ந்த குளத்துநீர்போலும் குமுதநாதனமுத கிரணத்தையுண்ட சகோரம்போலும் சோபதாப துயரமுமாறிச்சிந்தைகளித்து பந்துசனங்களுடன்வந்த வெகுசனங்கட்கு சுகந்தபரிமள சந்தனபோசனமுதலிய வெகுமதியுங்கொடுத்து, மந்திரிமார்களையும் மன்னர்களையுநோக்கி நான்தவிர மற்றுள்ள ரத கஜ துரக பதாதியர் மந்திரிதந்திரி சாமந்திரிமுதலாகிய பேர்களுடனும் விருது; டால்வகை வரிசைகளுடனும் எதிர்கொண்டு ஜெயஜேஷ்டமுடைய என்சிறியகுமாரனை சீக்கிரமழைத்து வாருங்கள், வீதிகளெல்லாம் அலங்காரஞ்செய்யப் பறைசாற்றச்செய்யுங்கள் பந்தலடைத்து மகரதோரணங்கள் கட்டுங்களென்று ஆக்யாபித்தான் (இந்த விராடராஜன்கொண்ட சந்தோஷமெவ்வாறெனில்) ஒருவன் மனவியானவன் அயலாரிடத்திற்சாரத்துவஞ்செய்து, பெற்றுக்கொண்ட பிள்ளையைத் தனக்குப்பிறந்த பிள்ளையென்று உள்ளங்களித்து முத்தமிட்டு, மடிமேலுந் தோண்மேலும் வைத்துத்தாலாட்டி கொஞ்சிக்குலாவி ஆசைவைத்துருகின்ற அறிவில்லார் தம்மைப்போல விஜயபராக்கிரம விக்கிரமன் வெற்றிபெற்றிருக்க அஃதை விராடன் தெரிந்துக்கொள்ளாமல், உத்தரகுமாரன் வெற்றி கொண்டானென்று உண்மையாய்நம்பி உடல் பூரித்திருந்தான் இவனாக்யாபித்தவேலைக்கொண்ட காரியஸ்தர்கள் வீதிகள்திருத்தி புழுதிகலடக்கி செம்பொற்கலசங்கள்பொருத்திவாழை-தாழை-கரும்-புகமுகு பலா-மாமுதலிய தென்னங்குலைகளுங்கட்டி மாணிக்கதீபங்களும் வரிசையாய்வைத்து கொடி-குடை - ஆலவட்டங்களுநாட்டி மகரதோரணங்களும்பூட்டி ஏழுப்பரி

களுயர்ந்த மாடமாளிகை கூடகோபுரமுள்ள வீடுகளலங்கரித்து விதவிதமாச் சிங்காரித்தார்கள் இதிப்படியிருந்…

இவ்விடத்தில் விராடராஜன் தர்மராஜனைப்பார்த்து உம்முடைய ஆசீர்வசனவாக்கின்படிக்கு எனதுஉசிதகுமாரன ஜெயப்பிரதானத்துடன் வருகிறவனாயிலும் நாமிருவரும்சொக்கட்டாடுவோமென்று அந்த ஆட்டத்திற்குவேண்டிய கருவிகளமைத்து, ஆடினார்கள், இவர்களிரண்டுபேரும் ஆடியகாலையில் சொக்கட்டாட்டத்தில்மெத்தவு நிர்வாகமுள்ள கங்கபட்டர்வென்றார் மச்சராஜன் தோற்று தர்மநந்தன் முகத்தைப் பார்த்து, இன்னோட்டமாடுவோம் வாருமென்று பவளம்கருமணி மரகதம் புட்பராகங்களிழைப்பட்டிருக்கின்ற காய்களைவைத்துவயிரப்பாச்சிகைகொண்டு வீசி இந்த ஆட்டத்தில் என்மகனாகிய உத்தரகுமாரன்வெல்ல அவனுக்கீடுபட மாட்டாமல் யுத்தபூமிவிட்டோடிய வெற்றிவீரர்களைப் போல் உம்மைநான் ஓடவிட்டடிக்கின்றேன்பாரும் என்னையனேயென்று பிரதாபமாய்ப்பேசினான் அவ்வாறுரைத்த விராடராஜனை கங்கபட்டர் தடுத்து பேடியாகிய ரதசாரதியானவள் ஜயங்கொண்டு, வருகின்ற பெருமையைப்போல ஜயங்கொள்வேனென்று பேசுவீராகில் அது எனக்குச்சம்மதியாகும் நீரப்படிசொல்லாமல் உத்தரன் செயித்ததைப்போலென்று தப்படிசெப்புவதினால் அதற்குநான் ஒருக்காலும்ஒப்பமாட்டேன் இப்புவிக்கிறைவனான ஏந்தலே அதேதெனென்னில் பிரகன்னளையென்னும் பேயை பேடியென்றெண்ணாதே அவன் பூர்வங் காண்டாவனமழித்த காலைக்குத் தேருர்ந்து தேவர்களுக்குப் பகையாகிய ராக்ஷசரை வென்று தேவசகாய விஜயமென்று பேர்பூண்டு, திக்குத்திகாந்தம்வரைக்கும் அதிசொற்பத்தில்ஜயங்கொண்டு, திரண்டகீர்த்திபெற்றிருக்கின்றவள் ஆதலால், இலேசாக மதிக்காதேயென்று கங்கபட்டர்சொல்லவும் மச்சராஜனுக்கு மிச்சமாகிய கோபம்பிறந்து, மனக்கறுத்து மதியுஞ்சிறுத்து, கண்செவந்து, கனற்பொறிபறந்து கனைத்துப்பார்த்து, ஓ பெரியவரே, கோடாகோடி குருசேனைகளை நீடாதடித்து நிமிரக்கெடுத்து பேடி தேர்விடச்சென்றுஎன்பிள்ளையொருவனுமேயென்று பசுமந்தைகளையுங் கைக்கொண்டு, திரும்பிவருகின்றானென்று தூதர்வந்துசொல்ல பிரத்தியக்ஷத்திற் கேட்டிருந்த தேவரீர் சொல்லமாட்டாத சொல்ப்பமான ஒருபேடியைக்கொண்டாடி ஸ்தாபித்துப்பேசுகின்றீர் ஈதென்ன பிடிவாதம் ஈதெவர்கள் சொல்லுகின்ற பக்ஷபாதம் பிரமக்கியானமுடைய பெரியவரே பேசாதீர் வாய்மூடுமென்றான் அந்தமொழியைக்கேட்ட தர்மராஜன்சிறுநகைநகைத்து நான்சொன்ன வார்த்தைபழுதல்ல இனனுஞ் சற்றுநேரத்தில் நீரறியப்போகின்றீரென்றார்.

அந்தவசனம் தாளமாட்டாமல் விராட ராஜன் முகஞ்சுடித்து, இனியென்னத்தை யறிகிறது கைப்புண்ணுக்கும் கண்ணாடிவேண்டுமோ விஸ்தாரங்கற்றிருக்கும் வைதிகமுனியே பேடிக்கும் கிரீடிக்கும் பேதமறியாதவர் நீர்வீண்வாது பேசுகிறீர் போதும் போதும் நீதில்லாமன்னரானவர் ஏதேனுங் குன்னமானபுன்மை புகன்றாலெனாலும் அச்சபையிலுள்ளவர்கள் நன்மை நன்மையென்று நாளுஞ்சொல்லி ராஜனுக்கிதம்படப் பேசவேண்டுமல்லாமல், அவன் தயவுக்குக் காத்திருந்து ஜீவனஞ்செய்பவர்கள் மன்னன் கருத்துக்குமறுத்துப்பேசுவதுமுண்டோ, காலஞ்சமயமறிந்து கலந்துகொள்ள வேண்டாமோ நான்கு வேதமும் நன்றாயோதிய ஞானவானே யென்றான்.

இங்ஙனம் மமதைகொண்டு பேசிய மச்சராஜன் பேச்சுக்கு இடங்கொடாமற் றடுத்து, ஓ! விராடராஜனே நீர் கொஞ்சமிதானியும் கொடையாளியான கர்ணராஜன் படையாளியான வீஷ்டுமர் தநுவேத சம்பன்னரான துரோணாச்சாரியர் நீதிவழியோர்ந்த கிர்பாச்சாரியார் வித்வமகத்துவமுடைய அசுவத்தாமா இவர்கள்முதலிய சுத்தவீரரை உண்டைவிற் பிடித்துகொண்டிருந்த உன்பிள்ளை வெல்லவல்லவனென்று நீ சொல்லமாட்டுவையா நில்லுநில்லு நிருபனே இதோவந்துரைக்கப் போகிறார்கள் அப்பாலுன மனத்தப்பென்று உன்மதிஉனக்கே ஒப்புச்சொல்லும் இப்போது நானுனக்கெனன்சொன்னாலும் அதுதப்பாகவே தோன்றும் மெய்ப்படும்போது பெருமையடைந்தவன் அப்பாதிருமேனிப் பேடியென்றுணர்வா யென்று தர்மராஜன்பேசினார்.

இச்சொல்லைக்கேட்ட விராடராஜன் இருகண்ணுஞ்செவந்து, கோபச்சிரிப்பாகச் சிரித்து, ஓகோ கோமெத்த மெத்தக்கற்றவேதியரே வில்லாண்மை

யிலுயர்ந்த என்குமாரன் சொல்லாண்மையிற் சிறந்த பகைவரையோட்டி பசுநிரைமீட்டி பராமாத்தியமாய் வருகிற வீரப்பிரதாபத்தைப்பார்த்த தூதர்வந்து சொல்லக்கேட்டறிந்திருந்தும் எவ்வளவுமெண்ணிப்பாராமல் எதிரியையுமதியாமல் என்னையடுத்து ஜீவனஞ்செய்து வருகிறவிதத்தையு மோராமல் பலதரமுமென்னை யலட்டி வாதுசெய்கின்றீர் சொல்ப்பமான பேடியைப் புகழ்ந்து பேசுகின்ற நீர் என்பிள்ளையைக்கொண்டாடிப் பேசப்படாதோ இவ்வளவுபொறுமையும் அக்கரையும் உமக்குவந்தகாரண மென்னவென்றுகொல்லும்விடங்கொண்டெழுந்த நல்லபாம்போற்சீறி தன்கைமேலிருந்த பாச்சிகையை நிலத்தில்விட்டெறிந்து கலகலவென்றுநகைத்தான் அவ்வாறு அதிககோபத்தால் வீசிய பாச்சிகையானது, பூமிமேற்பட்டுத்தெறித்து சேரிலிருந்த கங்கபட்டர் நெற்றியிலடித்து குங்குமக்குழம்பாற் படிந்த திலகம்போல்குன்றிமணியத்தனை யிரத்தங்குபீரொன்று கொப்பளித்தது.

அப்போது உத்தரகுமாரனது க்ஷேமத்தை ராஜசபையில் என்னபேசிக் கொண்டார்கள் அதையறிந்துவாபோவென்று சுதேஷ்ணாதேவியினால் அனுப்பப்பட்ட பணிப்பெண்ணானவள் சபைகூடிய அவ்விடத்திற்குவந்து சங்கதிவிசாரிக்குஞ்சமயத்தில் தர்மராஜனெற்றியிலுண்டான துளியிரத்தத்தைக்கண்டு, நீர்வத்திய தடாகத்தாமரைமலர்போல் நிறங்குன்றி வெருண்டு, மருண்டு கூசிக்கலைந்து, கைகால்நடுங்கக் கடுவனவோடி தன்வஸ்திரத்தின் முந்தானையால் அந்தரத்தத்தை யொத்தினளென்று வைசம்பாயனர் புகல அது யாதுகாரணமென்று ஜனமேஜயன் கேட்க.

அந்தத்தருமனுடைய உதிரம் ஒருதுளிபூமியில் வீழுமாகில் விராடராஜனுக்குத் தழைந்திருக்கின்ற கிளைகளும் புத்ரபௌத்ர புட்பங்களும் மித்திரர்முதலாகிய மென்காய்கனிகளும் புகழ்ப்பிரதாபப் பெருமைச்சிறப்பும் அழகும் வாழ்வும் அமைந்தமூலமும் தாங்களாறுபேரும் அஞ்ஞாதவாசஞ் செய்யவந்தடுத்து, ஒதுங்கியிருந்த நிழலும் அன்றேகெடுமென்றுதானோ, அல்லது, தனக்குரிய நாயகனென்னு நேயந்தானோ, அல்லது இயாவரோனும் இடையூறுண்டாகில் உபசாரஞ்செய்து எல்லோருக்கும் பொதுவென்பது பற்றியோ, அல்லது அர்ச்சுனன்முதலிய பேர்கட்கு உத்தரஞ்சொல்லவேண்டுமென்பதுநந்தியோ, அல்லது பெரியவனென்னும் பக்தியோ அந்தப்புண்ணியவதியின் சுபாவப்புத்தியோ. அவள்கருத்து இன்னவிதமென் றெனக்குத் தெரியாது கண்ணீர் துளித்தழுது கடகடவென்று உடல்நடுங்கத்தொழுது ஐயோ பிழை நேரிட்டதேயென்று வெகுநேரம் வரையிலும் ஒத்தியவதையெடுக்காமல் தருமபத்தினியோ விருந்தாள் அப்படிக்கிருந்த வண்ணப் பெண்ணின் மரியாதையையும் அவளுடல்துடிப்பையும் படபடப்பையும் பரிதாபத்தையும் விராடன்பார்த்து, சந்தேகப்பட்டு இதென்னவாச்சரியம் இதுவரையிலு மில்லாமல் இப்போது, நேரிட்ட தென்னமாச்சரியமென்று எனை முஞ்செயலும் நேருய் என்செய்வோம்என்செயவோமென்று தன்னைத்தானே நொந்து, பின்னுலரியப் போகிற்பெருமை தெரியாதவனாய் ஐயோ கோபம்பாவம்சண்டாளமேயென்று குறைந்துவீழ்ந்தான் இந்த விராடராஜனுடைய மனோதுக்கத்தைக் கண்டு மறைந்துபோனவன்போல ஆயிரங்கிரணக் கதிரோனாகிய சூரியன் அஸ்தமனகிரியையடைந்தான். இஃதிவ்வாறிருக்க.

உத்தரகுமாரனை எதிர்கொண்டழைக்கப்போன யானைசேனைமுதலிய மன்னவர்நெருங்க வீரவாத்திய மேளமுழக்க-விருது-டால்-கொடி-குடைகள் விதவிதமாய்ச் சூழ்ந்துவர பாலா-பல்லயம்-சவளக்கோல் கத்தி-கட்டாரி ஈட்டி கேடயங்கள்மின்ன-சங்கத்தொனிபொங்கித்தழங்க பட்டத்துயானைகளும் ஆட்டக்குதிரைகளும உன்னதத்தேர்களும் துன்னியகாலாளும் இருபக்கமும்நெருங்கிவர தேவேந்திரலோகத்திலிருந்த ஜெயமுள்ள காளமேகம் தேருமேலேறிப் பூலோகத்தில் வருமாறுபோல் பேடிதேர்செலுத்த நீடியகீர்த்திபொருந்த உத்தரகுமாரன் வண்டுமொய்க்கு மலர்க்காவைவிட்டு நீங்கி வாகுமாலைதாங்கி மணிப்புயமோங்கி விராடபுரவீதியில்மேவினன்.

இந்தப்பிரகாரம் சத்துருஜெயம் செய்துவருகின்ற உத்தரகுமாரனை வேதியர்முதலாகிய மாதர்களுங்கண்டு, அன்புகொண்டு ஆலஞ்சுழற்றி திருஷ்டிகழித்து மங்களம் லாலிவாழ்த்தி கொப்பிகள்முதலிய பாடலைப்பாடி ஆசீர்வதிக்க பரதநாட்டியஸ்திரீகள், அபிநயங்காட்டி யாடித்துதிக்கக்கட்டியர்புகழ ஜெட்டியர் மகிழ் பட்டுவான்கள்போற்ற, சந்திரவட்டக்குடைகிழற்ற வெண்சாமரைபோட அட்டதிக்குங்கொண்டாட இராஜ சின்னங்களுடன் மகன்வருகிறமகிமையை

க்கிகள்விப்பட்டுவளைபகவெறிந்தவள்ளிமணாளனைச் சிலையநனைச்செற்றசிவபெருமான்போல்ஆநந்தங்கொண்டு எதிர்சென்றுகண்டு, தேர்மேலிருந்த சிறுவனை ...க்கிரந்தழுவி, பற்றியெடுத்து, சித்தங்குளிர்த்து அனைத்தெடுத்து முத்திகொடுத்து, தந்தையைப்பணிந்து, தடதடென்றோடி கொலுமுகத்திற்கணியா யெழுந்தருளியிருக்கிற வேதவித்தாகிய கங்கபட்டனை வணங்கித்துதித்து, அவருடைய திருவடிகளைச்சிரத்திலும் கண்களிலும்பொருத்தி பற்பலராஜகூட்டங்களும் பார்க்கப் பொற்புயத்தைப்புகழ்ந்து, அற்புதக்கருணைமுகத்தையு நோக்கினன்.

அந்த விற்பனவிவேகியானவர் கடாட்சத்துடனே சொற்பலவாய்-ஆசீர்வதித்தருளினர். அப்போதவர் நெற்றியிலிருந்த வடுவைப்பார்த்து, உடனே முகம் வியர்த்து அண்டரண்ட சராசரங்களு மதிரும்படியாய்க்கூவி ஓ? என்னுண்டவனே விபூதிரேகை பிரகாசிக்கின்ற நமது லலாடஸ்தானத்தில் அபூர்வமானகாயம் படுதற்குக்காரணம் யாது இப்பாவமுச்செய்தவனென்று கார்முகங்கைக்கொண்டான் சேர்முகமாகின்ற விராடராஜனடுங்கி முன்னடந்தகாரியங்களைப் பக்குவமாய்ப்பேசினன், அவ்வார்த்தைகூறிய தந்தையை சிந்தைநொந்து வருந்திவிழுந்து கைக்கொண்டவில்லையொடித்து, பல்லைக்கடித்து நல்லகாரியஞ்செய்தீர் போம்போமென்று நகைத்து, நீ இந்தமஹாநுபாவருடைய சொல்லைமிகட்சிசெய்தேனென்றபோது என்னுடலாடுதே அதைநினைக்குந்தோறும் என்னுடலைவிட்டு உயிர்வெளியோடுதே இதனாலுண்டாகிய பயமானது, என்னூரத்தைஜாடுதே ஐயையோ பிரமசிருஷ்டியினாலாகிய பெரும்பொறைக்கடலை ஆடையாயுடுத்த அவனியினிடத்தில் பாரியமணிமகுடப். பட்டந்தரித்த வீரியவேந்தர்க்கு வேந்தாம்வேந்தே இவருக்கொப்பாகியபேர் எப்பாரிலுமில்லை இவரையாரென்றுணராததாய் என்னைநினைத்து, இப்படிசெய்தாய் குன்னமேற்கொண்டமன்னனே அப்பாற்போமென்றதட்டி, பூசாநிய புண்ணியனைப்பணிந்து அத்தனே ஆனபுந்தகாப் பரிசுத்தனே எங்களையாண்டு கொள்ளுங்கர்த்தனே, சிறியோனறியாமற்செய்த தீமையை பெரியோர் -பொறுப்பது, பெருமைக்கடனென்று தாங்களே செலவுகொடுத்திருப்பதினால் விவேகமற்ற என்தந்தையின்பேரில் - தேவாள் கோபங்கொள்வது ஞாயமன்று ஆறுவதுசினமென்று கங்கபட்டருடைய அடியிற்றாழ்ந்து; பெரியோருள்ளம் பேதிக்கச்செய்து, கோட்டைமூட்டைகட்டிக்கொண்ட் விராடராஜனையும் வீழ்ந்திறைஞ்சச்செய்து, பின்னும் பின்னும் தானிறைஞ்சி தடுத்துப்பேசவறியாத தாக்ஷிண்யபராகிய தருமபுத்திரனென்னும் மோனவானுடைய மனோதுக்கத்தைமாற்றி விட்டான்

அப்போது நீர்கிழியவெய்த வடுப்போலக் கடுப்பாறி சாஸ்திரங்கற்று மாட்சிமைபெற்று பெருமையும் கருணையும் பொருளெனக்கொண்ட கங்கபட்டர் திருந்தவாழ்த்துதல்வாழ்த்தி உத்தரகினா மீட்சிக்குப் புகுந்த யுத்தத்தின்பெருமையை பேசிவந்தார், மச்சராஜனுங்கூசியிச்சையுடனதொடர்ந்துவந்தான்மனங்கலந்த உரியோர்பலரும் சினங்குலைந்த பெரியோர் சிலரும் புடைநெருங்கினர்கள் இவர்களெல்லோருஞ் சூழ்ந்து வருவதை உத்தரகுமாரன்கண்டு ஒன்றுஞ் சொல்லாமல் வெட்கி அந்தப்புரம்போனன் ஜெயங்கொண்டு வந்தமைந்தனை சுதர்க்கணைகண்டு, தவமிருந்து, பெற்றபிள்ளையை ஈன்றபோதிருந்த பேராசையைவிட எண்மடங்கதிகமான இன்பமடைந்து எடுத்தாள் முத்தங்கொடுத்தாள் காஞ்சுற்றிநெரித்தாள் நமது கருப்பஞ்செய்த புண்ணியமென்று சிரித்தாள் இவ்விதமாக சோடசகலைகணிறைந்த சந்திரனைமூச்சிகண்ட சமுத்திரம்போல் தாய்தந்தைமுதலியபேரும் புகட்சியாய்ப்பூரித்து, மகிட்சியடைந்து, செகுட்சியாய் கங்குகரைகாணமற்பொங்கிய பேரானந்தவெள்ளத்தில் மூழ்கிப்பெருமையாகிய பள்ளத்திற்படிந்து ஜெயமென்னுஞ்செய்தியாற் றேறியிருந்தார்கள், அச்சமயத்தில் உத்தரகினா மீட்சிக்குச்சென்ற உத்தரகுமாரன் கௌரவச்சேனைகளைக்கண்டுப் பயங்கொண்டு புறங்கொடுத்தோடியபோது, அந்த ராஜகுமாரனைத் தேற்றி அவன் திகிலைமாற்றி சாரதித்தொழிற் செய்யும்படிக்கு தேர்மேலேற்றி தனக்கெதிர்நின்று உத்தரிக்கமாட்டாமலோடிய துரியோதனதியனாவென்ற அர்ச்சுனனவன் இரதத்தின்மீது வைத்திருந்த எதிரிகளின் சிரோவேஷ்டி மூட்டையை பேடிருபங்கொண்ட தன்தலைமேறசுமந்துவந்து உத்தர குமாரத்தி கையிற்கொடுத்து, உத்தரகுமாரனைப்பெற்ற உத்தமியான சுதர்க்கணைக்குப் பின்பக்கத்திலொதுங்கி ஒடுங்கித் தலைவணங்கிநின்றான் அவனின்றகோலத்தைக் கண்ட உத்தரகுமாரன் கைநெரித்து, கலீரெனச்சிரித்து தேம்பி-விம்பி-திகைத்து -திகிலடைந்து துக்கத்தினால் விங்கித் துபருழுந்திருந்தான்.

அவன் குறிப்பையறிந்த அன்னையுந் தந்தையும் ஆசையுடன்தழுவி அப்பனே ஐயனே அதிசயமென்னடாவென்று ஆயிரந்தரமாகக்கேட்டார்கள் அப்போது உத்தரகுமாரன் ஆயாசந்தீர்ந்து அடிவயிற்றிலிருந்து எரிந்தெழுந்த அக்கினித்தணல் நீங்கும்வழியைத் தேடி அவள்முகத்தைநாடி பேசாமல்வாய்மூடி, பெருமூச்சுவிட்டு நானென்னத்தைச்சொல்வேனென்று தந்தைதாய் இருவரையுந் தனித்தழைத்துச் சென்று இனிநாம்பிழைக்கும் விதமெப்படி எந்தகாலத்திற்குப் புதிதனாகப்போறோம் இப்போது நீர் விளைத்துவிட்ட பகையானது, எப்போதுநீங்கும் விராடபூபதியே சமுத்திரம்போற் புரண்டு, சதுரங்கமுந்திரண்டு நமது மந்தை மாடுகளுமிரண்டு போகவந்து மடக்கிய கௌரவகுலாதிபர்கள் நொந்துபோகச்செய்த அடலும் முந்திப்போர்புரிந்த மூர்த்தண்யதிடமும் அந்தப்பசுக்களைமீட்ட மாற்கமும் வின்சண்டைக்கு வந்தபேர்கள் சோர்ந்துவிழும்படி மோகனாஸ்திரப்பிரயோகஞ்செய்து அவர்களணிந்திருந்த தலைத்துணிகளைப்பிடுங்கி மூட்டை கட்டிக்கொண்டுவந்த மொய்ம்பும் இவைகளியாவும் என்னாலான வல்லமையல்ல என்னாலாகுமென்பதுமல்ல முன்னாலொருவர் வென்றதுமல்ல சொன்னாலுங்கட்கு நன்றாய்த்தோன்றும். அன்னாய் அத்தா கேளுங்கள், தேவரீர் [illegible]ணை நிரை மீட்சிக்குச்சென்ற வேளைகண்டு, சத்துருக்கள் மொய்த்து, உத்தரதிசையில் [illegible]ருமிக்கவந்து, மெத்த வருத்தப்படுத்திப் பத்திரா[illegible]ட்க்கிறார்களென்று சித்தநொந்து, ஒத்[illegible]ருணர்த்தார்கள் நான் அவ்வார்த்தையைக்கேட்டு, [illegible]னையைத்தொழுது அம்மா எனக்கொருசாரதி [illegible]ல் பழுது வாராமற்செயிப்பேனென்[illegible] இடம்பிய் அன்று, நமது உத்தனைக்கு[illegible]ழக்கி வருகிறபடி மெத்தவும் உத்தமமான சாரதியென்றுபணிப்பெண்சொல்லக்கொண்டு, தேரேறிச்சென்று கடல்போற்கவிந்த சேனையைக்கண்டு, கண்கலங்கி மனம் விட்டு, தேர்விட்டிழிந்து, ஊர்முகமாக ஓடிவந்த என்னை ஊர்வசிசாபத்தால் பேடியுருக்கொண்டிருந்த தனஞ்செயனென்னும் புருஷோத்தமன் என்னைவிடாமல் தடுத்துப்பிடித்து, தனக்குச்சாரதியாக்கித்தேற்றி என்பயத்தைமாற்றி தேர்மேலேற்றி வன்னிமரத்தில் மறைத்துவைத்திருந்த விஜயகாண்டீப வெம்பட்டாங்கி அனுமக்கொடிநாட்டி இயாவருமெச்சும்படியாகிய அர்ச்சுனனுருவமுங்காட்டி தேவதத்தமுழக்கஞ்செய்து, அரவக்கொடிக்கதிபனுடைய சேனைகளிற்புகுந்தபோது, அவ்விடத்தில் நடந்தவித்தையை நான்சொல்லத்தரமோ நராதிபனே சூரியனுக்கெதிர்ப்பட்ட பனிபோலவும் சுடருக்கெதிராகிய இருள்போலவும் சிங்கத்திற்கெதிர்ப்பட்ட யானைகள்போலவும் நெருப்புக்கெதிராகிய விட்டிற்பூச்சிபோலவும் இடிக்குநேரிட்ட பாம்புகள்போலவும் எமனுக்கெதிர்ப்பட்ட உயிர்கள்போலவும் சிவனுக்கெதிர்ப்பட்ட சிலைமதன்போலவும் தீச்சலுக்கெதிர்ப்பட்ட பயிர்கால்போலவும் அடங்கலும் அழிந்து, ஒழிந்தார்கள் ஐயா அப்போது, நான்பயந்து இந்த அர்ச்சுனராஜனை விசாரிக்குமிடத்து, தேவரீரிடத்தில் உண்மைநண்பாக உயிர்க்குயிராகிய தர்மாதர்மமுதலிய நீதிகளைத்தெரிவித்துக்கொண்டு கங்கபட்டரென்றிருக்குந் தயாளுவானவர் சந்திரகுலத்தோன்றலான தருமராஜனென்றும் வாசமலரும் பூசுதல்முதலாகிய புநுகுஞ் சாந்துஞ் சம்பங்கித்தயிலமுந் தரித்த கூந்தல்விரித்த வண்ணமகள் பாஞ்சாலராஜ கன்னிகையான திரௌபதா தேவியெனறும் மல்லர்களைவாட்டி கீசகாதிபரை மாட்டி மடைப்பள்ளியிற்சமையல்கூட்டி நமக்கூட்டாநின்ற வல்லமையாளன் வீமசேனராஜனென்றும் குதிரைச்சேவகத்திலமைந்தகோமான் நகுலராஜனென்றும் பசுமந்தைகட்கெசமானாயிருந்த பாக்கியவான் சகாதேவராசனென்றும் வேலாயுதம்பிடித்த வீரர்களைமடித்த பட்டத்தியானைபடைத்த பாண்டவரைவரும் பாஞ்சாலியும் அஞ்ஞாதவாசந் தொலைப்பதற்காக இந்தமச்சநாட்டில் மறைந்திருந்து, காலங்கழித்தனரென்றும்.

நேற்றையவரையிலும் அவர்களுக் குண்டாகிய தவணைநாளைப்போக்கிவிட்டு இன்றுமுதல்வெளிப்படவேண்டியகாரணமென்றுங் கேள்விப்பட்டேன் இனியிதைக்குறித்து நாம்யோசிக்கவேண்டியிருக்குது இதுவரையிலும் நம்மால் என்னகுற்றங்குறைகள் நேரிட்டிருக்கின்றதோ தெரியவில்லை இப்போது பிரத்தியட்சமாய் வடுவில்லாத தர்மராஜனுக்கு நெற்றியில் வடுவுண்டாக்கி வைத்திருக்கின்றனே ஐவருக்கும் அன்பாகிய பாஞ்சாலியை ஆசைப்பட்டணைந்து நேசமுறத்தொடர்ந்த கீசகன்முதலாகிய தம்பிமார்களும் நாசப்பட்டுப்போனார்கள், இதனாற்பெரியமோசம்வந்திருக்குது; இவைகளையெல்லாம் யோசியுங்களென்று உத்தரகுமாரன் சொன்னான்.

இம்மொழிகேட்ட விராடராஜனும் சுதர்க்கணையும் புதைத்திருந்தபொருள்-குதித்து வெளிப்பட்டதுபோற்கண்டு, ஆ-ஆ-ஆ, பாண்டவர்களாயிவர்கள்? பாஞ்சாலியா பணிப்பெண் ஒ ஆண்டவனேயென்று அங்ஙனமயர்ந்து, நிலத்திற்சாய்ந்து உயிருடன்மாய்ந்து மூர்ச்சையானார்கள். அப்போது உத்தரகுமாரன் அவர்களையணைத்து சோபத்தையும் மனஸ்தாபத்தையுந் தணித்து இனி துக்கப்படுவதிற்காரணமில்லை சிக்கிரம் இதற்குவேண்டியபரிகாரங்தேடுங்கள் எனக்கொன்றுதோன்றுது அஃதென்னவெனில், மன்மதனுக்கொப்பாகிய வடிவமும் மயில்வாகனனுக்கொப்பாகிய வெற்றியும் மகாமந்திரசித்தியும் உமா மகேஸ்வரனைப்பூசிக்கும் புத்தியும் விர்ஷபகுஞ்சர சிங்க-விராட்டின் சத்தியும்பார்த்தனுகிய பரந்தாமன் மைத்துனனுக்கு எனக்கிளைய உத்தரகுமாரத்தியைக் கொடுத்து நம்முடன்கலந்து வாழச்செய்யுங் கருத்துடைவோமாகில் தெரிந்துந் தெரியாமற்செய்த தீமைகளியாவுஞ் சிதறிப்போமென்று என்சிந்தையினினைத்தேனென்றான் இவ்வாறியம்பியமைந்தன் வார்த்தையை மனமகிழ்ந்துகேட்டு. தந்தையுந்தாயுஞ் சிந்தைகளிகூர்ந்து எந்தம்மைமந்தனே உந்தன்மனதின்படியே எங்கட்கு மிச்சைமிச்சந்தானென்று ஆனந்தவடிவனவும் அச்சத்துடனொடுங்கி அசைவற் றிருந்தார்கள்.

உத்திரநிரைமீட்சிக்காக பார்த்தன பண்ணிய சண்டையில் சென்றாள் கருந்தூள் பறந்துபடிந்துமறைந்த தன்னொளியைச் சுத்தம்படக் கழுவிக்கொள்வதற்குப்போனவன்போல் மேறகுச் சமுத்திரத்திற சூரியன் போய்க்குளித்தான்.

இப்பால் பெருமையிலுயர்ந்த பாண்டவர்களும் பாஞ்பாலியும் விராடனுடைய அரண்மனைவிட்டு, நீங்கி மச்சநாட்டின் புறம்போய்ச்சேர்ந்து கூடுவிட்டுக்கூடுபாய்கிறவர்களைம்போல் தாங்கள்கொண்டிருந்த வடிவத்தைமாற்றி பழயரூபங்கொண்டு, எமதர்மராஜனைத் தோத்திரம்பண்ணிவணங்கி மேற்றிசையடைந்த சூரியபகவான் கீட்டிசைக்கு வருங்காலததைநோக்கிககொண் டிருந்தார்கள்.

அந்தவேளையில் கோழிமுதலிய குருவிகளெல்லாம் பாழியபுயம்படைத்த பாண்டவர்களே நீங்கள் நீடூழிவாழிவாழி ஆழியினையுடன்மாநிலநடுக்குவதால் சூரியன்வரப்போறானென்று சொல்லுவதுபோல் கூவியதுகள்.

அதுசாலையில் மேற்றிசையில் மறைந்த வெய்யோன பாண்டவர்களின் சங்கதியெல்லாந்தெரிந்துக்கொண்டோமே இனி துரியோதனுதியர்களின் கருத்தையுமறிவோமென்று மகமேருவைச்சூழ்ந்து வந்தவனைப்போல் உதயகிரியில்வந்து, கிரணக்கதிர்நீட்டி தாமரைமலர்க்கரங்காட்டி தண்மதிமுதலிய துட்டரையோட்டி சத்தியநிலைபெற்ற தர்மராஜனது, ஆக்ஞைச்சக்கரத்தை நிலைக்குநாட்டியதுபோல் உதயகிரியினுச்சிமேலெழுந்தான் அப்போது பொழுது விடிந்தது. கேளும் ஜெனமேஜெய மகாராஜனேயென்று வைசம்பாயனர்சொன்னார்.

பாண்டவர்வெளிப்படு சருக்கம்.

விருத்தம்.

எக்கடலுமெக்கிரியுமெவ்வுல்குமுலகிற்
றக்கபலயோனிகள்சராசரமனைத்தும்
மிக்கவிதியால்விதிசெய்விதியினைவிதிக்குஞ்
செக்கமலநாபிமுகில்திருவடிதுதிப்பாம்

என்பது.

கடல்களெல்லாவற்றையும் மலைகளெல்லாவற்றையும் உலகமெல்லாவற்றையும் தகுதியான வுலகினிறைந்தபகுதியையுடைய பலயோனிசம்பந்த சராசரங்களியாவற்றையும் மேலாகிய கட்டளையின்படிசிருஷ்டிசெய்யாநின்ற பிரமக்கடவுளை மலர்ந்தருளிய செந்தாமரைக்கமலம்போன்ற திருநாபிபடைத்த ஜகரக்ஷகமுகில்போன்ற திருமாலினது திருவடிகளைத்துதித்து ஸ்ரீவேதவியாச மூர்த்தியின் மெய்ப்பதத்தைப்போற்றி அற்புதமாகிய ஐவர்வெளிப்பட்ட சரித்திரத்தைசசொல்லுகின்றேன், கேளும் சந்திரகுலாதிபனேயென்று வைசம்பாயன மகாமுனியானவர் திருவாய்மலர்ந்தருளினார்.

மந்திரமூர்த்தியின் - மகிமைப்பலனே சிந்தையுணீங்காச் செனமேஜெயனே பாண்டவர்களையும் பாஞ்சாலியும் விராடபுரநீங்கி மாஞ்சோலைசூழ்ந்த வனத்தூடமைந்த பூஞ்சாலைசேர்ந்த பொய்கையில்மூழ்கி அருணோதயமானவுடனே-ஜெப-தப - விதிகண்முடித்து சூரியநமஸ்காரஞ்செய்து ஸ்ரீ வேதவியாசனையும்

எமதர்மராஜனையுந் திக்குநோக்கிப்பணிந்து பாண்டவசகாயானது பாதபத்மமினைந்து, பருதியினொளியினும் பழயவடிவஞ்சிறந்து மகாலட்சுமிபோன்ற பாஞ்சாலியுடனபாண்டவமுதல்வன்வீற்றிருக்கும்பொழுது வாயுகுமாரனான வீமசேனனும் தேவேந்திரகுமாரனான செஞ்சிலைவிஜயனும் ஆயுள்வேதியரளித்த நகுலசகாதேவரும் தங்கள் குலத்திற்குங்குணத்திற்கும் நலத்திற்கும் நன்மைக்கும் தகுதியான முரசக்கொடிபடைத்த முன்னோனைத்தொழுது அன்னோனருளிய ஆசிமேற்கொண்டு பெரும்புகழ்ப்பிரகாசத்துடன் தமயனிடஞ் சார்ந்திருந்தார்கள்.

இவ்வாறிருக்குஞ்சமயத்தில் நிகரற்ற விற்றுங்கிய தனஞ்சயன் தர்மராஜன் முகத்தைச்சந்தர்ஷ்டியாய்ப் பார்த்து செந்தூரத்திலதம்போற் செவந்தபுண்கண்டு ஆ-அண்ணா, தேவரீருடைய நெற்றியில் வடுதுக்கிடமான வாறுயாதென்று திடுக்கிடக்கேட்டான் தர்மராஜன் சிறுநகைபுரிந்து யாதொன்றுஞ் சொல்லாமலிருந்த அப்போது மின்னலைப்பழித்த மேனிபடைத்த பாஞ்சாலிவிராடராஜனுக்குந் தர்மராஜனுக்குவாக்குவாதத்தினால்வந்த தீது ஈதென்றுசொன்ன வந்நேரமேயெழுந்து இன்னமுந்தாமிசமாவென்று நெருப்புப்போலெரிந்து, நெடுமூச்செறிந்து அண்ணன்மேற்பரிந்து ஐயோ நான்பிரிந்துவந்த துன்பமிதுவோ இப்போதே விராடபுரம் வேகக்கொளுத்தி மச்சராஜன்றலையைவாங்கி வைக்கிறேனென்று நச்சரவம்போற்சீறி வெட்சிமாலையணிந்த ஆகமுந்தேகமும் அதிர நடுங்கி பற்கடித்து விற்பிடித்து அவனுக் கிச்சையானகுலத்தைப் பச்சடிபண்ணுகிறேனென்று புறப்பட்டான். நெருப்புடன் காற்றுநேசமானதுபோல் வீமனும் வெகுண்டுவிரிட்டெழுந்தான் நகுல சகாதேவரிருவரும் வியாகூலத்தோடு நடுங்கிவிராடராஜனுக்கின்றுவினாசகாலமாவென்றுமெய்மறந்துவிட்டார்கள்.

இத்தன்மைவாய்ந்த தம்பிமார்களின் கடுங்கோபத்தைக்கண்ட தருமராஜன் ஓகோகோமோசமாச்சுதென்றுபூசிதவார்த்தைகள் புகன்று நேசவிசுவாசிகளோ ராஜகுலச் சிரேஷ்டர்களே-நிஷ்டூரம்வேண்டாம் கொஞ்சம் நாஜாவா யோசனைசெய்யுங்கள் ஒருவருடைய ஆபத்காலத்தில் இன்னொருவர் உதவிசெய்தால் அவ்வுதவியை ஆயுசுள்ளவரைக்கு மறக்காமல் நன்றி குன்றாமையென்னும்-நீதியையும் தருமத்தையும் நினைந்தநாடி முன்னுதவிசெய்த பேர்களால் என்னபிழைவந்த போதிலும் அதைச்சகித்து மனம்பொறுத்து நன்றிமறவாமல் நன்மைசெய்பவர்கள் நாளும்பெரியவரென்று நானிலம்புகழ்வதுண்டு சாதுக்களும் சாஸ்திரங்களிற் பேசியிருக்கின்றார்கள் பற்பலநாளும் நன்மைபுரிந்து சொற்பமாக ஒருநாளிற குற்றநேரிட்டால்-ஒரு அல்பக்குற்றத்திற்காக நன்றிகுன்றி மனங்கன்றி பொல்லாங்குசெய்ய நினைப்பது புகழல்ல பூணல்ல பொருளல்ல புலமைகெட்ட கீழ்மக்கள்செயலாகையாம் புண்ணியகுலத்திற்பிறந்த-மேன்மக்களே ஒரு நன்றிசெய்தபேர்களை உள்ளத்தில் வைத்து பிழை நூறுனாலும்சான்றோராகியபெரியோர்பொறுப்பார்கள் கயவராகிய மூடர்களுக்கு எழுநூறு நன்றிசெய்து ஒன்றுதீதாமாகில் முன்செய்தநன்றி எழுநூறுந் தீயாய்க்கெட்டுப்போம்.

ஆகையால் காடாக்கினிமூண்ட காட்டில் பன்னிரண்டுவருஷங் கஷ்டப்பட்டு. பதின்மூன்றாவது வருஷத்தை இந்தவிராடராஜனுடைய நீழலிலிருந்து இவனது உப்புந்தண்ணீருமுண்டு நாம் எண்ணியவெண்ணம் பின்னமில்லாமல் அஞ்ஞானதவாசங் கழித்தோம் எத்தேசத்தரசர்களிலும் இத்தேசத்தரசனை மெத்தவும் சாசன் நாம்எங்கிருந்து அஞ்ஞாதவாசம் பண்ணலாமென்று முன்னம் வினவியபோது விராடபுரத்திற்கு மிஞ்சியராஜனுமில்லையென்றுசொன்னீர்கள் உங்கள்சொல்லைநம்பி இங்கு வந்தடுத்தபோது நமக்கிவன் ஊழியன்போலும் இவனதரசாட்சிமதரசாட்சிபோலும் சால்நகடத்தினோமேயல்லது நாமிவனுக்குத்தாழ்ந்து நடுங்கிநடந்ததில்லையே நம்மையிவன் அதிகாரஞ்செய்ததுமில்லையே, ஏதோகோபபாபமென்னும் கொள்கையாலும் நமதுதிவினைவயத்தால் குற்றநேரிட்டது அதற்காக நாம் கடவுளைநோக்கி மன்னிப்புக்கேட்டு இவனுக்கொருபொல்லாங்கு நேரிடாமல காக்கவேண்டிய கடமைநம்முடையதாயிருக்க நீயவனைக்கோபித்தெழுவது குணமல்ல நம்மைத்தொழுது ரட்சித்ததோன்றலின்பேரில் பழிதுநினைப்பது பாவம் பாவம்பார்த்தனே பதறாதீர்களென்றுதர்மராஜன்தடுத்தார் அதன்பேரில் வீமார்ச்சுனரிருவரும் நகுல சகாதேவரும் மூத்தவர்மொழிந்த முறைபிறழாமல் மச்சராஜன்மேல்வைச்ச கோபமாறித்தருமராஜனுத்தரவின்படி வன்னிமரத்திலேறி அவரவராயுதங்கைக்கொண்டு அந்தப்பாலைநிலத்திலமர்ந்த சோலாகலி நீலிசடாதரி லீலாவதி சூலி கலாதரி குண்ட

வி குமரி சாமூண்டியைப்பணிந்து வன்னிமரத்தைவலம்வந்து வணங்கி எங்கள் தாயினது கருப்பம்போல் ஆயுதங்களைக் காத்தளித்ததமனியமானதருவேயென்று சந்தோஷப்பேரிட்டுச் சம்பிரமங் கொண்டாடி விராடராஜனுடைய கொலுமுகச்சாவடியிற் கூசாமற்புகுந்து ஐந்துதேவேந்திரர்கள் ஒரு இந்திராணியுடன் வந்திருந்தவாறுபோல் தந்தத்தவிசேறி யிருந்தார்கள்

அந்தவேளையில் செந்தழல்வளர்க்கும் அந்தணர்முனிவர் மந்திரி சாமந்தர் தந்திரி பிரதானிகர்பந்துமித்திரர் வந்தவிருந்தினன்மாந்தார் வேந்தர் யாவருஞ் சேர்ந்துவந்து குந்திதேவியார் தந்தனைமந்தனைவரும் குருகுலம்விளங்கப் பிரகாசித்துதயமாகிய குமுதநண்பன்போற் சிங்காசனத்திலிருக்கக்கண்டுதங்களாற்றுங்கப்படாத சந்தோஷங்கொண்டு விராடராஜனுக்கு விரைவிற்றெரிவித்தார்கள்.

அச்செய்திகேட்ட மச்சராஜன் இச்சைமேற்கொண்டு ஐயோ, ஏதென்செய்தோம் இனியென்ன செய்வோமென்று மனவருத்தங்கொண்டு சந்தன-தாம்பூல புட்பம்-பன்னீர் - மஞ்சட்குங்குமவாசனை திரவியம் தேங்காய்-வாழை திரண்மாங்கனி-பாலா - பயைலபலகாரங்கள் பருப்புவர்க்கங்களும் தட்டுத்தட்டாய் வெடுப்பித்துக்கொண்டு, பட்டுப்பட்டாவளிகளகட்டுக்கட்டாகிய கட்டுவர்க்கங்கள் தாய்த்தாக்கள் முட்டுப்படாத முத்துமுதல் நவரத்தினங்கள் - ஆணிப்பொன்னெடு மாணிக்கங்களும் காணிக்கைவைத்து தானும் புத்திரனும் தருமபத்தினியும் பாண்டவர்களின் பொன்னடியில்வீழ்ந்து புழுதிமேற்புரண்டு பிழைபொறுத்தருளும் பூரணநிதியே பொறுமைக்கரசேயென்று துதித்துப் பூமியைவிட்டெழுந்திராமலிருந்தார்கள் அம்மூவரையும் - தருமராஜன் வாரியெடுத்து மார்போடணைத்துபக்கத்தில்வைத்து ஆதிசேடன் முடிமேற்றாங்கிய பூமியில் உன்னைப்போலியாரிருக்கிறார்கள் நீர் மெத்தவும்உத்தமர் புண்ணியசாலி பொறுமைக்குவேலியென்று புகழ்ந்துமகிழ்ந்தார்.

இவ்வாறு கொண்டாடிய குருகுலக்கோமானது குளிர்ந்த வாசகத்தால் மச்சகுலாதிபனெழுந்து மறுபடியும்பணிந்து வேந்தாகியசாந்தமூர்த்தியேதோத்திரமென்பது தம்மைப்போல் பவர்க்குத்தகுமல்லது எங்கட்குத்தகாது நாங்கள் அவ்வளவுபாத்திரம் கேத்திரமுங்கோத்திரமும் பெற்றவர்களல்ல ஆதலால், அடியேன் மிகவும்பேயன் விவேகமற்ற சேயன் மூன்கோபத்தாற் பதறிப்பேசுகின்ற வாயன் அப்படிக்கிருந்தபோதிலும் தங்கட்குநான் தகுந்தநேயனெனப் பாராட்டி என்னால்நேரிட்ட குற்றங்குறைகள் யாதிருந்தாலும் அவைகளைமன்னித்து ஒட்டிதீர்க்கவைராநாட்டாமற் சிலகாலத்திற்சொல்லிக் காட்டாமல் தீனனனைவென்னை ஆண்டருள்செய்யவேண்டும் பாண்டவர்களேயென்று வேண்டிக்கொண்டான்.

இப்பிரகாரம் புகன்று அடைக்கலம்புகுந்த-விராடராஜனை வேந்தர்வேந்தாகிய தருமராஜன்பார்த்து இரக்கமுள்ளவராய் இஷ்டபூர்த்தியாய் சொல்லத்தொடங்கினர்.

ஐயா, விராடபூபதியே உமது விராடபுரத்தில் நாங்கள்வந்து சேர்ந்தபிற்பாடு துன்பமென்பவையில்லாமலும் எங்கட்குரிய சுதேசம்போலும் எங்கும் பிரக்கியாதியுண்டாகும்படியாய் வேற்றுமையின்றி வீற்றிருந்து வாழ்ந்தோம் இதல்லாமலும் காற்றினடவால்விளையுங்கழனியின் மடையாய் நீரோட்டத்திற் சேற்கண்டைகள் நேரோதிப்பாய்ந்து விளையாடுந்தேசோதிய மச்சநாட்டரசே நீபதியச்சொல்லுகின்றேன் உன்னில் உன்னிலுமுயர்ந்த உற்றாருமில்லைப் பெற்றாருமில்லைமற்றாருமில்லைமாசற்றமரபோய்உன்னைவிட எனக்குவேறொரு உதவியுமில்லை நான்இதுவரையிலும் அநுபவித்துவந்த உன்-பட்டினத்தின் பதவியைவிட வேறொருபதவியுமில்லையே-உன் - சகோதரரும் உன்புத்திர மித்திரபௌத்திராதியரும் நால்வகைச்சேனைகளும் எனக்குப்படைத்துணைவந்து,என் பக்கத்தில் நிற்பீர்களாகில் துராங்காரமாய் எங்களை வஞ்சித்த சத்துருக்களையும் அவர்கட்குடன்பட்டுவந்த - சேனைவேந்தர்களையும் ஒரு நிமிஷத்தில் இயமலோகமேற்றிவைக்கிறேன் -இதுமெய்யென்று பறைசாற்றிவைக்கிறேன் ஐயமற உட்கொள்ளுமென்று வையகம்வாழ்த்தும் மாமினஞ்சொல்ல அதனுன் மச்சராஜன் தேறிமகிழ்ந்து புகழ்ந்து மனத்துயர்மாறி மாதொடுமகனுந்திகைக்கின்றனர்கள்.

இப்பால் உத்தரகுமாரன நமக்கு உறுதிதேடிக்கொள்ளுந்தருண மிதுதானென்று தந்தைதாயிருவரையுமுன்னிட்டுக்கொண்டு தருமராஜனைப்பணிந்து வாய்பொத்திநின்று சமுத்திரத்தை ஆடையாகத்தரித்தருளிய அகிலவுலகத்தையும் வெள்ளைக்குடைநீழ

மூவிலடக்கியாளும் விதரணவேந்தே தமக்குத்தக்கபக்குவமாகப்பேசவறியன் ஆகிலுஞ்சிறியன் ஆனபோதிலும்-இந்தவிராடபுரமும் இதனது, பூவளம்பொருள்வள முள்ளனயாவும் தேவரீருடையதே இயாங்களியாவரும் உங்களுடைய ஏவற்பணிவிடைக்கேற்றவர்களே-எங்கட்கு சுதந்தரமான ஆறுவிதப்படைகளும் தங்களுடையதே இதெல்லாம்-என் தங்கையாகிய உத்தரகுமாரத்தியும் அர்ச்சுன்ராஜற்குரியவளே இவ்வளவு தயவுசெய்து எங்களையாண்டு கொள்ள வேண்டும் ஆண்டவமாராகிய பாண்டுநந்தனரே யென்று வேண்டி விரும்பினன்

இவ்விதமாக உத்தரகுமாரன் சொல்லக்கேட்ட விஜயகாண்டீபதரன் ஆ-கா-கா, வென்று கையமத்தி கல்வியின் சாரமும் செல்வியின் அபசாரமும் கைப்படைவீரமும் விற்பன விவேகமும் கருணையுதாரமும் காமன்மயமும் சேமஞ்செயமும் காரிய சித்தியும் கூரியபுத்தியுமுடைய காவலன்மகனே உன்தங்கையாகிய உத்தரகுமாரத்திக்கு நான் சிலகாலம் நாட்டியம்பழக்கி வைத்தபடியால் எனக்குப்பெண் மரியாதையாம் நீ இப்போது கொண்ட நினைப்பைநீக்கிவிடு அல்லது உன்னிஷ்டப்படிக்குத்தப்பாமல் உறவுகலக்கவேண்டுமாகில் நன்னலம் நற்குணம்வாய்ந்த உனக்கிளையவள் பொன்னிலமுதலியமன்னவர் புகழும் பேர்படைத்த எனமைந்தன்வாளபிமன்னனுக்கு உரியவளாகுமென்றான்.

இப்படிக்கு அற்புதமாய் விளம்பிய பற்குனன் மொழியைக்கேட்டு அவ்விடத்திருந்த சாஸ்திரசம்பன்னருடன் தருமராஜன் விராடராஜன் முதலியபேரும் ததாஸ்துவென்று, சம்பிரமங் கொண்டாடினார்கள், உடனே விராடபூபதியானவன் கலியாண முரசவாத்திய முழக்கிவைத்து, பந்துமித்திர-பாத்தியர்-தமக்கெல்லாம் பாண்டவர்கள் விராடபுரத்தி லிருக்கின்றார்களென்று ஓலைகளெழுதி தூதர்வசத்திலனுப்பி பத்திரிகையிட்டான்.

இதிப்படியிருக்க, விராடராஜனுடைய முதற்குமாரன் சுவேதனென்பவன் கைலாசபதியைக்குறித்து தவஞ் செய்யப்போனனென்று முன்னமே சொல்லியிருக்கின்றேனல்லவா ஓஜெனமேஜெயமகாராஜனே அந்தச்சுவேதனானவன மனோபக்திமாறாமல் வைராக்கியநிலைபற்றி மகாதேவனைக்குறித்து தவமிழைத்து நாட்சியில்லாத காட்சியும்பெற்று எந்தஆயுதம் பிடித்துப்போர்புரிந்தாலும் திரிபுவனத்தையுஞ் சேதிக்கும்படியாய் அருள்பெற்று மற்றெவருமெதிரில்லாமலுற்று வெற்றிபெறும்படியாயிருக்கின்ற சித்தியை முத்திக்கு வித்தாகிய ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியறிந்து இனிமேல் நாம் குருக்ஷேத்திரத்திற் கூட்டி வைக்கப்போகிற யுத்தத்தில் இவனொருவனை விட்டுவிடுவது யுக்தமல்லவே எவ்விதத்திலுமிவனைக்கொண்டுபோகவேண்டுமென்று அவனிருந்த இடத்திற்குப்போய் பிரிந்துபோன உம்மைப்பார்க்க யித்தனைநாட்சென்றதென்று உபசரித்து பரிந்து அழைத்துவந்து, தனக்குண்டாயிருந்த பகைவர்களையெல்லாம் அலறுற்போக்கிக்கொண்டு. துவாரகாபுரிக்குப்போய் அந்தச்சுவேதனுக்குவிருந்து செய்வித்து வெகுமதியளித்து கேளிக்கைமுதலாகிய சம்பிரமங்களில் காலதாமசம்பண்ணிக்கொண்டு பாண்டவர்கள் வெளிப்பட்ட சமாச்சாரம் இன்றைக்குவருமோ நாளைக்கு வருமோ வென்று எம்பிரானிதயத்தில் எண்ணமுற்றிருக்குஞ் சமயத்தில் தூதர்கள் ஓலைகொண்டுவந்து கொடுத்து, வணங்கினார்கள் அந்தச்சுருளையவிழ்த்து பலபத்திருக்கெதிரில் படித்துக்காட்டி, அண்ணா நமது பாண்டவர்கள் அஞ்ஞாதவாசமகற்றி வெளிப்பட்டார்களாம் இதல்லாமலும், உமது மருமகன் அபிமன்னனுக்கு திருக்கலியாணம் நடக்கப்போகுதாமென்றுசொல்லியிருந்த விருப்பத்துடன் நீருண்ட கருங்கடல்போல் நிறங்கொண்ட கோபாலன் பலராமர்-சாத்தகி- கிருதபன்மன் கிருதவீரியன் முதலாகிய குடும்பங்களும் வண்டுசெறிந்த மதுமாலையணிந்த சுருள்கருங்கொண்டை சிறந்த தங்கை சுபத்திராதேவியும் அபிமன்னனும்கூரிய வேற்படைகொண்ட சுவேதனும் குடிபடைகளும் சூழ்ந்துகொண்டு வரும்படிக்குக் கூட்டிக்கொண்டு விராடபுரம்வந்து சேர்ந்தார்கள்.

இப்பிரகாரம் மேகவண்ணனான கண்ணனும் அவரண்ணனும் வருகின்றார்களென்று தூதுவராற்கேள்விப்பட்டு, சோகநீங்கிச் சுகம்பெற்றிருந்த பாண்டவர்களும் விராடராஜனும் வேதநாயகனைக் காணவேண்டுமென்று எதிர்கொண்டு சென்றுகண்டு, இருவர் தேகமும் ஒன்றென்று சொல்லும்படியாய் இறுகத்தழுவியணைத்து ஆகாயமளாவிய சிகரகோபுரஞ்செறிந்த பேரவையிலழைத்துவந்த பலராமர்சாத்தகி யாதவகுமாரான்முதலிய பேர்களும் அரவணைப்பள்ளிநீ

ங்கிய ஆதிமத்தியாந்த ரகிதனேடுவந்த பெரியோர்முதலிய உரியோர்யாவர்களுக்கும் தகுதியாகிய சன்மானமும் ஆசனமும் வெகுமானமுங்கொடுத்து பிரியவசனங்கள் பேசிக்கொண்டார்கள், மந்திரிபிரதானியர் சிலரும்-வந்தவர்-யாதவர் - முந்தினர்பலரும், மரியாதைகுறையாமல் வணங்கி நின்றார்கள். சுபத்திராதேவியும் யாதவஸ்திரீகளும், ஸ்ரீகிருஷ்ணருடைய அஷ்டபாரியர்களும் தேவகி தேவியார் ரோகணி தேவியார்-மற்றுமுள்ள தாய்மாரும் திரௌபதாதேவியிருந்த அந்தப்புரம்போய்ச்சேர்ந்து சகலவிதமரியாதையுடன் உபசாரமும்பெற்று தனது பாராட்டி சுபங்கொண்டாடியிருந்தார்கள்.

இப்பால் அபிமன்னனெருங்கி தந்தையர் தம்மைவணங்கி பாஞ்சாலியைப்பணிந்து மாஞ்சோலைக்குயில் கூவும் வளனுடைய மச்சநாடனுக்கும்வந்தனந்தந்தான் அவர்களியாவரும் ஆலிங்கனம்பண்ணி ஆசீர்வதித்து அதிசயமடைய ஆண்மிக்கையுடைய பாண்டவர்பக்கத்தில் இளஞ்சிங்கம் வீற்றிருக்கும் தன்மைபோல் இருக்கச்செய்தார்கள், அப்போது அந்தப்பிள்ளையைப் பெற்றவர்கள்கண்டு, மிகவுமகிழ்ந்து வியப்புடன்புகழ்ந்து நயந்து வியந்து பூர்வஞ்செய்த புண்ணியநலமே. பிள்ளையாகப்பிறந்ததென்று, கொள்ளைகொள்ளையாய்க் கொண்டாடிக் கொண்டிருக்கும் பொழுது தருமசொரூபமுள்ள தருசராஜன் விடாத கடாக்ஷ வீக்ஷண்யப் பார்வையால் வீரப்பிரதாபத்தோள்பூரித்த அபிமன்னனைநோக்கி ஸ்திரமான வார்த்தைகளைப்பேசி சொல்லுக்குச்சொல் சாஸ்திரயுக்தமாய்ச்சொல்லுந் துணிவைத்தேர்ந்து ஆசைமேவிடச்சிறந்து அகமகிழ்ந்திருந்தார்;

இவ்விதமாகப் பெரியதந்தையினிடத்திற்பேசிய அபிமன்னனும் மருமகன்றிறத்தால் மாமனுகப் போகிற விராடராஜனும், மைத்துனனுகிய உத்தரகுமாரனும் சுவேதனமுதல் மற்றுள்ளோரும் சுதேட்சணு தேவியும் கண்களிகூர்ந்து செவிகுளிர்ந்து முகமலர்ந்து அகமகிழ்ந்து ஆநந்தங்கொண்டாடினார்கள்.

இப்படியாக விருக்கின்றசமயத்தில் ஸ்ரீகிருஷ்ணபகவானுடைய திருவருட்பயனுல் விராடபுரம்வந்துசேர்ந்த சுவேதனென்பவன் தன்தந்தையானவிராடனையும் சிறியதந்தைமார்களையும் தர்மராஜன்முதலியபேர்களையும் தாயாகியசுதர்க்கணையையும் பணிந்தான் இவர்களெல்லோரும் எந்திமுத்தமிட்டார்கள்,மச்சராஜனொருவனும் இச்சைமேவிட்டெழுந்து மைந்தன்பேரில்விழுந்து, விவேகக்கொழுந்தேயென்று மாரபோடணைத்து புஜத்துடனபுஜமொத்தி முகத்துடன் முகஞ்சேர்த்து இருகாதினதபும் எடுத்துப் பிடித்து உச்சிமோர்ந்து கருத்திற்களித்து கண்ணருள் தழைத்துச் சிலமொழிபுகன்றான்.

அப்பா-ஐயா, என்கண்மணியே நீ எந்தயிடத்திலிருந்தாய் தந்தவண்ணனுக்கிளைய நந்தகுமாரன்உன்னையெங்கேகண்டார் இவருடன்கூடி நீ எப்படிவந்தாய் எவ்விடத்தில் நீங்களிருவருஞ்சந்தித்தீர்கள் இது எனக்குநல்லகாலம் என்மனங் குளிரச்சொல்லையானன்சுதனுகிய சுவேதனேயென்று. விராடராஜன்கேட்க கடல்நிறவண்ணக் கண்ணன் சொல்லத் தொடங்கினார்.

ஓ-விராடபூபதியே, உமது குமாரன்தவவேடம்பூண்டு, அருந்தவமிருந்து சிவனருட்பொருந்திப் பெருந்திறற்படைகளும் பெருமையும் பெற்றான் இத்தன்மையாகச் சித்திபெற்றிருக்கிற திடத்தை யானறிந்து இந்த உத்தமனையழைத்துக்கொண்டு துவாரகைக்குவந்து எனக்கு அசாத்தியமாயிருந்த சத்துருக்களையெல்லாம் இவனுலொழித்துவிட்டு இவனுக்கு விருந்துமுதலிய வுபசாரஞ்செய்து என்னிடத்தில் வைத்துக்கொண்டிருக்கும்போது நீங்களெழுதியனுப்பிய ஓலையைக்கண்டு மச்சநாடடைந்தேம் பூபாலவென்று கோபாலன்சொல்ல அச்சொற்கேட்ட விராடராஜன் பட்சமேவிட்டு மகன்பக்கத்திலிருந்து தவம்புரியப்போனதுமுதல் வந்ததுவரையிலும் சாங்கோபாங்கமா க்ஷேமலாபங்களைவிசாரித்து பகைவரென்னும் யானைகளைக்கொல்லுகின்ற சிங்கம்போன்ற பாண்டவருடன் யாவரையும்பணிந்து சபாமண்டபத்திற் பொருந்தியிருந்தார்கள், விராடராசனுடைய மற்றப்பிள்ளைகள் யாவரும் தமயனைசுவேதனை சாஷ்டாங்கமாகத்தொழுது அவனுலுபசரிக்கப்பட்டு தங்கியிருந்தார்கள் அன்னையாகிய சுதேக்ஷணுதேவியும்தன்னைப்பணிந்த சுவேதனைவாழ்த்திபொன்னுக்கிணையாகிய புத்திரியின் கண்ணுக்கினிமையான கணவனைப்பார்த்துக் களிப்போடிருந்தாள்.

அதுவேளையில் பாஞ்சாலதேசராஜனும் சோமகானும் அவர்கட்குரிய நால்வகைச்சேனைகளும் இள

ம்பஞ்சபாண்டவர்களும் திர்ஷ்டத்தூய்மன் முதலாகியபேரும் வந்தார்கள் அவர்களைவிராடராஜனும் பாண்டவர்களும் எதிர்சென்றுகண்டு ஒருவனா யொருவர் தழுவிக்கொண்டு தகுந்தமரியாதைகளுடன் புகழ்ந்து சபாமண்டபஞ்சேர்ந்திருந்தார்கள்.

இப்பால் குந்திபோஜகுலராசர்களும் மத்திரதேசாதிபர்களும் புத்திராவாக்கன்களும் மித்திரவேந்தர்களும் பாண்டிநாட்டரசரும் சோழராசரும்சேரபூபதியும் மாகாதேசாதிபர்களும் இன்னம் பலபலதேசத்திறைவரும், வனனவன்ன வாகனமேறி வந்தார்கள் அன்னவர்க்கெல்லாம் மன்னவர் வரிசையிற் சொன்ன வண்ணவ் குன்னமில்லாமலுபசரித்து ஆசனத்திலமர்த்தினார்கள்.

வந்தவேந்தர்கள் சிந்தையுவந்து, பாண்டவர்களைப்பார்த்து, அந்தோ நீங்கள் பன்னிரண்டு வருடங் காட்டில்வாசம் பண்ணும்படியாயும் நாங்களுங்களைப் பிரிந்திருக்கும்படியாயு நேரிட்டதல்லவா ஆ கா! வினையேயென்று மனநொந்தார்கள் தம்மைக்குறித்து வெம்மை யடைகின்ற தராதிபர்களைத் தருமராஜனோக்கி, சகலசாஸ்திரங்களுங்கற்ற சம்பன்னர்களேமேல் வினை யெவரையுமீற்றிவிடாதே மேதினியிற்பிறந்த வேதனைனும் வினைக்குப்புறம்பாய்மீளப்போகாதே ஆகையால், கடந்துபோன காரியத்தைப்பற்றி விசனப்படுவதி லாபமொன் றில்லை இனிநடக்கவேண்டிய காரியங்களை நன்காராய வேண்டியதென்று சாந்தமாகப்பேசி ஓ? தரணீஸ்வரர்களே, தாமரைச்சேக்கையிற்படுதத அம்ஸங்கள் அம்மலர்த்தேன்களா னனைந்த இறகுகளை வானத்தில் விரித்துலரச் செய்கின்ற வன்மையும் தானத்தைப்பொழியுந் தந்தாவளத்திண்மையுமீர்வள நிலவள நன்மையுமுடைய இந்த மச்சராஜன்-வசந்தகால மன்மதன்போன்ற மகாராஜன் இவருடையநாட்டிற்கு நாங்க ளெப்போது வந்தோமோ அப்போதே, காட்டிற்றிரிந்த வருத்தமும் எங்களைமாட்டி விருத்திய தீவினைப்பொருத்தமுங்கெட்டுடையடைந்துபோய்விட்டது, இந்த அன்பருடைய பெருதவியால் துன்பகன்றிருந்தோம் முன்பு நான் மாட்டிக்கொண்ட தெவ்வாறென்னில்; சுர-லயை-பேதமில் [illegible]-க-ம-ப-த-நி-யென்னும் சப்தசுரதாதுடன் சேர்ந்த [illegible] குரல் துத்தம்-கைக்கிளை-உழை-இளி-விளரி தாரம் இவ [illegible] ஏழிசைப்பாடலுக்கு விரும்பி வந்துருகிப [illegible] பட்சிகளானது பறையடியோசைகேட்டு, சிறையடியாதயர்ந்து, கைப்படுமாறுபோல், விண்ணுக்கிறவனெனப்போன்ற மன்னுக்கொருவனெனவாண்ட திரிதராட்டிர மகாராஜனென்னும் எமதுபெரியதந்தையின் வார்த்தையால் மயங்கி துரியோதனன்-சகுனி-துஸ்வாசனன்-கன்னன்-இவர்கள் கூடியெண்ணிய வஞ்சனையிலகப்பட்டு மாய்ந்தவாறு போற்றேர்ந்து வருந்தினேன் இனி நான் செய்ய வேண்டிய காரியமென்னை நீங்களிருவரும் என்னைக்காக்கும்படிக்கு கண்ணுக்கிமைபோற் கலந்திருக்கின்றீர்கள் உங்கள் சித்தம் என்பாக்கியமென்று மெத்தவருந்தியுனைத்த உத்தமன் சொல்லைக்கேட்ட கொற்றவர் பலரும் பதைபதைத்து இப்போதிவ்விடத்திற்சேர்ந்திருக்கின்ற நாமெல்லோரும் இதுவே பயணமாகப் புறப்பட்டு இன்றைக்கே சண்டைவிளைத்து துரியோதனன் மண்டையோலைக்கிழித்து அவனுக்குத்துணை வந்தவர்களைக்கொன்று கழித்து ஜெயம்ஜெயமென்ன வென்று-வருவோம் வாருவென்று தருமநந்தனன் கருத்திற்குப் பொருத்தமாக வற்புறுத்துச் சொன்னார்கள்.

இன்னவாறு மன்னர்மன்னர்கள் பின்னருமுமல்-முன்னிட்டுரைத்த மூர்த்தண்யமொழியை விராடர்கோன் கேட்டு, சபையைவிட்டெழுந்து; சாஷ்டாங்கமாகவிழுந்து,கோபாலக்கிருஷ்ணனைச் சிந்தித்து,பூபாலவேந்தரைச் சந்தித்து, இருகரங்குவித்து வந்தித்து தான் சிந்தித்திருந்ததைத் தெரிவித்துக் கொண்டான் அதாவது; இங்கிலங்காக்குமிறைவர்காள்சேண்மின்மலைகள் மதித்துத்துதித்து, வணங்கப்பூரித்த புயமும் நீதிசாஸ்திரநெறிமுறைப்பயனும் சொற்பொருணயமும் விற்பனவியனும் சௌந்தரியமும் கூர்வேல் தாங்குந்தைரியமு முடைய-பாண்டவ சுபுத்ரனென்னும் அபிமன்னராசனுக்கும் என்தவக்கொழுந்தாகிய உத்தரையாட்கும் கலியாணவைபம் கண்டருளிய பிற்பாடு, வாளைகள்பாய கமுகம் பாளைகள் சாயவனிதையருடி மகிழ்ந்துங்கூடி விளையாடும் வளநாகியகுருநாட்டை சண்டையிட்டுவாங்கப்புறப்படுவோம் அதுவரையில் நீ விரியாவருமன்னிக்கவேண்டும் மேலும் மாயனுக்கு மருமகனுகவாய்ந்த வாளபிமன்னன் எனக்கு மருமகனுக வாய்க்கின்றமையால் பற்பலதேசாதிபர்கள் ராஜாதிபர்கள் வரும்படிக்கு முற்பிறப்பிற்செய்ததவம் இப்பிறப்பிற் கைவல்லிய மாச்சென்று சிறப்புற்றென் மாலைதாங்கிய வண்புய மோங்கிய

மன்னவான்களே சீக்கிரத்தில் முகூர்த்த நடக்கும்படிக்குச் செலவுகொடுத்தருளவேண்டுமென்று சந்தனபாளித புஷ்ப தாம்பூல பலாதிகளுந்தட்டுத்தட்டாயவைத்து முட்டுப்பாடில்லாமல் கைகட்டிக்கொண்டு விராடராசன் கேட்டான் அதன்பேரில்சகலத்திராளுஞ்சம்மதித்து தருமராசனது தயைப்பார்வையை நோக்கி அவ்வாறு நடாத்துவதே அதிகஸ்ய அதிகபலமென்றார்கள்.

அப்போது, அன்புக்கொரு வித்தாகிய தருமராஜன்சொல்லியதெனபும், அவர்மொழியைக்கேட்ட ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி முதலாகியபேரும் புஜங்கள்குலிந்து, சுபங்கள்மலிந்து, அகமுகமலர்ந்து, ஆசைமேவிட்டார்கள் பாண்டவர்கள், அஞ்ஞாதவாசம் பண்ணப்புகுந்த காலையிற்பிரிந்ததௌமியரும் பன்னீராயிரம் பிர்மக்கியாணிகளும்வந்தார்கள் அவர்களைக்கண்டு அன்புமேற்கொண்டு சுவாமிகளே, எங்கள்தொண்டு அகன்றதென்றுபுகன்று சரண்மேற்பணிந்தார்கள் அவ்வாறு உபசரித்துத்தொழுத ஐவர்கட்கும் ஆசீர்வதித்து திரௌபதாதேவி வேதிகை சுபத்திரா ரோஞுமதி விஜயை முதலியபேரும் பணிந்தார்கள் அவர்களுக்கும் மங்களாசனஞ்சொல்லி இளம்பஞ்சபாண்டவர்கள் வன்சகாதேயன் அபிமன்னன் நிற்மித்திரன் செயக்ஷேத்திரன் முதலிய புத்திராளும் பத்தியாய்ப் பணிந்தார்கள முத்திக்கு மூலமாகிய முனிவரர் வாழ்த்தி எத்திக்கும் புகழும்படி கீர்த்திபெறுகவென்றிசைத்து தருமநந்தனனைப்பார்த்து ஓ தனிகரோ, எம்மைவிட்டு நீங்கி அஞ்ஞாதவாசமிசைத்த ஒருவருடம்வனாயிலும் நடந்தசங்கதியாவும்உரைத்தருளவேண்டுமென்று கேட்டார்கள்.

இப்படியாகக்கேட்ட தௌமியர் முதலியமகானுக்களும்மன்னவான்களு மகிழ்வுறும்படியாய் நிறைவுறுஞ்செய்திகளைக் குறைவறக்கூறினர்

இவ்வண்ணந் தருமராஜன் சொல்லக்கேட்டு சந்தோஷித்தமுனீஸ்வரர்களையும். தௌமியாச்சாரியனையும்பார்த்து கைகுவித்து வேதவேதியர்களே நமதுவாளபிமன்னனுக்கும் உத்தரகுமாரத்தியாருக்கும் பாணிக்கிரகண முகூர்த்தம்நடக்கவேண்டிய படியால் இதறகுத்தகுந்த நாள்வைக்கவேண்டுமென்று தருமராசனும விராடராசனும் விளம்பினார்கள்,

அவ்வாறே நனகென்று நட்சத்திரம் - லக்னம்-திதி-ஓரையோகம்-காரணம்-பொருத்தம்-திருத்தமாகி விவாகசக்கரமுதலியதுஞ் சோதித்து தாங்கள்கற்றுணர்ந்த தருமசாத்திரத் திறங்களெல்லாங் காட்டி தகுதியான பலங்களுட்டி முகூர்த்த நாள்வைத்தார்கள் அந்தக்கலியாண நாள்வரையிலும்பந்தர்ப்பாடிகள்முதலிய அலங்காரங்கள் பண்ணவேண்டி யிருப்பதால் பாண்டவர்களையும் அவர்கட்கு வேண்டியவர்களையும் உபலாவியத்திற்கனுப்பிவைத்து, அவ்விடத்திற் சவுக்கியமாயிருக்கும்படி செய்து, சகலசாமக் கிரியைகளும் உடுகறை உசிதங்களுங் கொடுத்து, ஒருநாளைப்போல் பலநாளுஞ்சலிப்பில்லாமல் விசாரணைசெய்து வந்தான்.

இவ்வாறு தடையறநிறைவேற்றிய விராடராசன் தனது நகரலங்காரஞ்செய்யும்படியாய்ப் பேரிமுழக்கிவைத்து கருங்கடற்கலையுடுத்த காசினியை யாளுங் காவலர்க்கெல்லாம் கலியாணவோலையுந் தூதும் ஒருமிக்கவிடுத்து விராடபுரமுழுதும் பவளக்கால்நாட்டி தவளவிட்டம் பூட்டி-மரகதவோலைகணீட்டிவச்சிரப்பிரதி மெய்மாட்டி மாணிக்க மலர்மாலை தூக்கி முத்துக்கொத்து வடங்கள்வீக்கி ஆணிப்பொன் ரேகையமைத்தி, தொங்கொளிவட்டம்சுவரொளிவட்டமுதலிய தூங்காவிளக்குப்பாங்குறவமைத்து வாழைகமுகு-மாங்கனி-பலாக்கனி-தாழை-இளநீர்-சாக்கொன்றையிந்து பாளை-கரும்பு-பற்பலமலர்களும்- இரசிதக்குண்டு ஜாலர்கள் சனடமாலைகள்-தமனியப் படங்கள் நீலக்கண்ணாடி-பிலைக்குங்கண்ணாடிகள்-முத்தின் தூண்கள்-ரத்தினப் பூண்கள் வேடிக்கை மான்கள்-விநோத-ஆண்கள்-வாரணக்குதிரைகள்-வஸ்திர சித்திரங்கள்-தோரணநிரைகள் சோடித்தவரைகள்- மேல்விதானங்கள்-விதவிதக்கொடிகள் பலவிதக்குடைகள் பைம்பொன் மேடைகள்-வேதிகைச்சாலைகள்-மென்மலர்ச்சோலைகள்-கும்பக்குடகரங்கள்-கூடமாடங்கள்-விம்பவேடங்கள்-வெயில்மணிச் சிகரங்கள்-எண்டிசையண்டருங் கொண்டாடச்சமைத்து சாந்து சந்தனத்திறுல் தரையெல்லாமெழுகி முத்துச்சுண்ணத்தால் மொக்கிட்டு கலியாணமண்டபக் கலசந்திருத்தி மணவறைநிறையமாலைபொருத்தி மதுகரநிறைந்த பூமாலைமகிழ்ச்சிசிறந்த பொன்மாலை-வாடாப்பவளமலர்மாலை தேடாப்படிகத்திரண்மாலை ஆணிமுத்துமாலை அழகுரத்னமாலை அரிமரகதப்பசுமாலை அரவின்மாணிக்கமாலை வச்சிரமாலை முதலியபசிலோம

லைகளும் புகழ்மாலைகண்டு பூமியோர் கொண்டாடச் சோடித்தார்கள்.

இப்பால் கலியாணவாசலில் சாலுடன்கரகம் முளைப்பாலிகை தழல்வளர்க்கு மேடை குடலிக்துவாடை அரசு ஆல் முருக்கு இம்மூன்றிலொன்றாவது, அல்லது இம்மூன்றுஞ்சேர்ந்தாவது, நாட்டுவதற்கு அரசாணிக்காலெனப் பெயர்பெற்றதுவும் மாவிலை-தருப்பை-அறுகு-மஞ்சள்- குங்குமம்-சந்தனம்-தாம்பூலம் - வாழைப்பழம்-தேங்காய் புட்பம்-வெல்லம்-அக்ஷதை-சாம்பிராணி குடம் சமித்து -நெய்-இன்னமுள்ள பாலொடுதயிரும்-பய்ரெடு- பொரியுமமைத்து-நாளையுதயத்தில் பத்துநாழிகைக்கு முகூர்த்தமென்று பாண்டவர்களுக்குத்தெரிவித்து, தன்னூடுமுதலிய பன்னூட்டுக்கும் பறைசாற்றுவித்தான்.

இச்சங்கதியைக்கேட்ட தருமராஜன்முதலிய தந்தையர்களும் பந்துவருக்கத்துடன் ஜெயமென்றெழுந்து, சிந்தைமகிழ்ந்து தேவாலயம் விஷ்ணுவாலயங்களுக்குப் பூசைகளெல்லாஞ்செய்து திங்கள்மரபிற்றோன்றிய சிறுவனை மணக்கோலமாகக் கொண்டுபோகவேண்டுமென்று பொங்குந்தடத்[illegible]திதநன்னீரைத் தங்கக்குடத்திற் றெடுத்துவந்து [illegible]ங்கையில்லாத சாஸ்திரம்பாராட்டி ஓங்கியபுதல்வனையுவந்து நீராட்டி வெண்டுகிலால் நீர்துவட்டிச் சிங்காசனத்திலேற்றிச் சிகைசீவிவகுந்து சிலபணிபுனைந்து தேமலரணிந்து, திரிபுண்டரந்தீட்டித் திலகமுங்காட்டிக் குண்டலமாட்டிப் பச்சைக்கன்முருகிட்டு, முத்தாரமுதலிய பத்தாரம்வித்தாரம்பதக்கங்களுந்திருத்தித் திருமுடிபொருத்தி தங்கச்சஞ்சந்தரித்துப் பாஜிபந்து தோளணியுடன் நாககங்கணங் கடகங்கணையாழி பூட்டி அசைப்பட்டிகை அரைஞாண் வீரகண்டைமுதலியவைகளும்வீக்கி, திவ்விய வேஷ்டிகளால் அலங்கரித்து உயரமுஞ்சுற்றும் உன்னதமாகி ஏழுறுப்பும் [illegible]யிற்படிந்து, கிம்புரிப்பூண் கொம்புகட்கிட்டு, முக[illegible]ஞ்செறித்துகவுட்குழிக்கன்னமகரிகை பொறித்த[illegible]கும்பக்கலசஞ் சொம்புடனமைத்து, வெண்கவரி[illegible]கவரிதூக்கி ஒன்பது, வகைபிரத்தின அவுதாவமைத்து, அரசக்களிறாகிய பட்டத்துயானைமேல் அபிமன்னனையேற்றி முத்துக்குச்சுடன் பவளமமைந்த சந்திரவட்டக்குடைகவிக்க வெள்ளைக்கொடிகளிணருங்க ஆலவட்டஞ்சுருட்டி பிசிக்குஞ்சம் பவளச்சவளம் விருதுடால் கருடடால் -அருகு ஒருகுமயிற்பீலி வெண்சாமரம்-மேற்கட்டி தோரணமுதலியவை நெருங்க இளம்பஞ்சபாண்டவனாஞ்சுயேருயபஞ்சவர்ணக்குதிரையேறிப் பக்கத்தில்விடுக்க மத்தகஜத்திலமர்ந்த முற்றப்பிள்ளைகள் சுற்றுநடக்க பல்லக்கிலேறிய பார்த்திபர்முடுக்க மல்லர்கள் சிலம்புவரிசை முன்கொடுக்கமாதவர்-வேதியர் -வாணர்களடுக்கக் கீதநாதக்கிளரொலிதொடுக்க நரகஜபரிகடனமுன்னடிக்கத் துரகஜதுந்துமி சுரஜதியடிக்க ஐந்துகருவியும் முந்திமுன்னேறுக்க பந்திபந்தியாய்ப் பந்துஜனவேந்தர் அந்தணர் ஆதுலர்க்குந் தானங்கொடுத்துக்கொண்டு, போக-மத்தளதாள மேளத்துடன்நாட்டிய மாதர்களடிக்கச்சங்கு-சிங்கநாதக்கொம்புபிடிக்கக் கட்டியக்காரர் மன்னர்களைச்சுட்டிக்காட்டிக் கொண்டாடப் பட்டுவான்கள் வேந்தர்களின் பிரதாபவிருதுகளையெடுத்துப்பேசக் குலமுறைவந்திப்போர் தலைமுறையடுக்கக் கூறப்புகழ்வோர்தொடர்ந்து அடர்ந்துவந்தொதுங்க இந்திரவாத்தியந் தும்தும் தும்மெனச்சேர்ந்த நாற்சேனை திம்திம்திம்மென நந்தகோபலரும் நந்தவண்ணனும் கொந்தலர்க்குடந்தலார் வந்தவர்பலரும் தேரின்பேரிலும் வண்டிகள்பேரிலுஞ்சென்றார் திரௌபதாதேவியும் சுபத்திராதேவியும் அஷ்டலட்சுமியான பாரியர்களும் ஆயமாதரும் முத்துப்பவளமும் மாணிக்கத்தாலமைந்த சித்ரபல்லக்கிலேறிச்செல்ல ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியுஞ்சென்றனர் இப்படியாக இவர்கள்வரப்பார்த்த ஆரியர்களும் சீரியர்களும் பூமாரி-பொன்மாறி-மணிமாரி-நவதானியமாரி- அக்ஷதையுடன் வாரிச்சொரிந்து, வாழ்த்தினார்கள் மங்கிலியப்பெண்டுகள்மகிழ்ந்து, மஞ்சள்-குங்குமம் -தாம்பூலம்-தேங்காய்-வாழைப்பழமுதலிய மாங்கனி-தேன்கனி - இவைகளை வருவார்போவாராகிய மங்கையரைப்பூசித்து, விசுவாசித்துக் கொடுத்துப் போற்றினார்கள் தண்ணீர்-வெந்நீர் ததிபெருக்கி[illegible]நீர் உண்ணீருண்ணீரென்று, உபசரித்து வழியிளைப்புமாற்றினார்கள்.

இவ்வாறுகிய எங்களிருப்புடன் விவாகமுரசங்
களும் தியாகமுரசங்களும்பூரணக்கலசங்களுந் தோ
ரணபாடங்களும் வாரணகூடங்களும் ஆரணபாடங்
களும் கோபுரவிசேடர்களும்பவளம்பட்டை முத்து
ப்பட்டை பத்தியாய்ப்பத்தியாய் அடித்திராமின்ற சு
வர்களுந் திண்ணைகளும் தெருவாசல்களும்பன்னீர்
தெளித்துக் கோலமிட்டு, தீபமேற்றிவைத்து; முத்
தாலாத்தி பவளாலாத்தி நீராலாத்தியெடுத்து, கண்
ணேச்சில்கழித்தலும்-மங்கள-லாலி-சுபசோபன-வா
ழிப்பாடல்-படித்தலும் - கையைச்சுழற்றியடக்கி க
ன்னத்தில் கெட்டைபொடித்தலும் இப்பேர்ப்பட்ட
மணவன் நமக்கிசையாமற் போச்சுதென்று கன்னிய
ர்கலங்கிக் கவலைகொண்டு. துடித்தலும் கட்டியிளமா
தர் ாடித்தலும் இவ்வாறுக இன்னம்பலவிதச் சிங்கா
ரவலங்காரங்களையுடைய விராடபுரவிதியைக்கடந்து
பவனிவருகின்ற பரந்தாமன்மருகனைக்கண்டு மாதர்
மயங்கிவழிமேற்படணிந்து, மயல்கொள்ளும் படியாய்
விவாக மண்டபத்தின் முன்முகப்பிற்கு வந்தார்
கள்.

இவ்வண்ணக் கோலங்கொண்டு வந்தவர்களபி
மன்னனைச் செவ்வண்ணமேனித் திர்ஷ்டத்தூய்மனு
ம் திருமாலும் பெருமன்னர் குழூவுங்கை கொடுக்க
மேகம்விட்டிழியு மின்னொளிபோல் பட்டத்துயானை
விட்டிழிந்து, பிராமணர் முனிவர்பாலவர் பூவலர்கோ
வலர்முதலிய வெவனையும் பணிந்து, குருசாமியார்
பெண்கொடுக்க வருமாமியார் இவரிருவரையும்போற்
றி அவர்களன்புறவளித்த அருண்மொழியும்பெற்று
ச் சம்பிரமமாகச் சதிர்ச்சாலையிலிருந்து, உம்பர்கொ
ண்டாட்ப் பொன்தானமளித்து, ஓங்கிய தருமதானம்
புரிந்து, உற்றுர்பெற்றுர்கற்றுர் பரிந்து, உடனிருந்து
விருந்து அருந்தச்செய்து வருந்தி உபசார- வரிசை
யளித்து, வரும்வண்மையைக்கண்டு, மகிழ்வுற்ற வா
ளபிமன்னனை முகூர்த்தசமயமென்று தௌமியர்முத
லிய முனீஸ்வரர்கள் வந்தழைத்தார்கள்.

உடனே கலியாணமாப்பிள்ளையானவர் இராஜ
வைபவத்துடன் கைலாவுகொடுக்குக் காரியஸ்தர்பக்
கத்திநெருங்க மணப்பந்தலில்வந்தார்.

அப்போதங்கிருந்த வேதவேதிய ரியாவருமெ
ழுந்து வேதநான்குமொழிந்து, மன்மதனுந் தலைசாய்
க்கும் வடிவமைந்த மால்மருமகனை வாளபிமன்னனை
ஆறுகாற்பீடத்திலேற்றி மந்திராக்ஷதையுடன் வாழ்
த்திமான்போலும்விழிபடைத்த உத்தரகுமாரத்தியை
தேன்போலுஞ்சொல்லமைந்தசேடியர் ரதிதேவியை
ப்போற் சிங்காரித்து சகலவிதமேள சம்பிரமங்காட்
டித் த[illegible]வணங்கா ரண்த்துடன்கூட்டிவந்து. நாய
கனுக்கு வலப்பாகம்வைத்து, திரையான்மறைத்து,
நலங்குமுதலியசடங்குகளும்புரிந்து நாகரீகமாதர்வா
ழ்த்தொலிசெய்ய சிலம்பொலிகாளால் பிரதக்ஷணம்
வந்து, அந்தணர்வேத மந்திரமோதச் சந்திரகுலத்தி
ந்திரர் சோச்சுந்தரக் கனல்ஜோதியாய் வளரநர்தகு
லாதிபர் வந்தனைசொல்லக் கந்தனைகணேசனைக் கம
லனைப்பூசித்து, இந்திராதிபரையேற்றி வணங்கி மாசு
தீர்ப்போனல் மறைவிதிமுடித்துப் பிர்மச்சாரிவிரத
ங்களைந்து ஸ்நானஞ்செய்வித்து சாதராதரித்து வை
தீகச்சடங்கு மார்க்கங்காட்டிக்கங்கணங்கட்டி காலா
ழிமாட்டி கரத்தில்வாள்கொடுத்துக் கருணையாளர்க்
குக் கனகமேற்கொடுத்துமேற்பட்டுடையைவிரித்து
மேன்[illegible]விதிமுறைசெவியில் விதம்படவுரைத்து
தேங்காய்-வாழைப்பழம்-சிற்சிலபுட்பம்- அக்ஷதை-
மஞ்சள்-அடைக்காய்-கண்ணடி-சந்தனம்- திருமங்கிலி
யம்-இவைகளையெல்லாம் பொற்றும்பாளத்திலிட்டு
நற்றவர்முதலிய கற்றவர்பலரும் உற்றுர்பெற்றுர் உற
வினரெவரும் இருகரத்தாலும்பரிசித்து, இஷ்டதெய்
வப் பிரார்த்தனையுடன் வாழ்த்தவும் தாய்தந்தையிரு
வரும் தத்தம்பண்ணவும்மாப்பிள்ளைமைந்தன் குருவை
த் தந்தையைவாழ்த்தவும்செந்தீயினெய்யைச் சிதறு
மற்கொட்டத் திரைச்சீரையைத்தாழ்த்திச்சற்றேபிடி
க்கவும் ஜெயம் ஜெயமென்னவும் தேவுலகத்திேனர்
தேமாரி பொழிபவும் மாவுலகத்திேனர் பொன்மாரி
பொழிபவும் பங்கஜமுக மாதர்வாழ்த்தவும் அங்குஜவ
யமள்ளர்போற்றவும் எங்கணும் பருணிதர் [illegible]ளேற்ற
வும் நரகஜதுந்துமியொலிக்கவும் சுரஜதிதாளங்கலிக்க
வும் சங்குமுழக்கந்தழைக்கவும் திங்கட்குலந்தார்செ
ழிக்கவும் தம்மர்வீணையிசைக்கவும் தும்புருவாத்தியா
மதிக்கவும்புள்ளாங்குழல்மரிக்கவும் இயாழ்வகைகள்

மற்ற கருவிகளெல்லாமினையவும் தாரை-பரி-வீரி-சின்னம்-தடாரி-பம்பை-காளம்-முரசம்-கலியாணமுழவும் சர்வவாத்தியம் இதுகளியாவுங் கோஷிக்கவும் மறைவாணர் இறையவர் கலைவாணர்முதலிய சோமசூரியாக்கினியுஞ் சாட்சியாகதாட்சியில்லாக் காட்சியுடன் கலியாணங்கண்டருளினார்கள்.

இப்பால் பெண்ணும் பிள்ளையும் வலமிடமாக மாறியிருந்து, ஓமவிதிநடாத்தி அக்கினியிற் பொரியிறைத்து, பூரணாகுதிகொடுத்து, பிரதக்ஷணம்வந்து, பணிந்துமாலைமாற்றி மறைவாணரைப்போற்றி மாமுனிவரையேத்தி மங்களாசனங்கொண்டு, பெண்ணும் பிள்ளையும் சுண்டுவிரல்மாட்டிநின்று, நிறைகுடம்வெண்சாமரம் கண்ணாடி இயானைக்குடாரி பணிமுரசுவிளக்கு விருதுக்கொடி இணைக்கயல் இவைகளாகிய அஷ்டமங்கலமெடுப்பித்து, அம்மிமிதித்து, அருந்ததியைத்தரிசித்துப் பூசித்து, அரசாணிக்காலையும் ஆயிரச்சோதி விளக்கையும் நைவேத்தியத்துடன் தொழுது மற்றப்பேர்களையும்பணிந்து, திருவளையமாதரொடுத்து, வராநின்ற திருவிளக்குத்துணையுடன் சிற்றறைக்குட்போந்து, வாழ்த்துதல் ஏசல் [illegible]ந்தி பெண்பக்ஷத்திலும்பிள்ளைபக்ஷத்திலும் நிந்தாஸ்துதியாகப் பிரதாபம்பேசி பிரபந்தம்படித்து, பாலும்பழமுங்கொடுத்து மாப்பிள்ளையும் பெண்ணும் மருவியிருக்குஞ் சமயத்தில் அத்தை-மாமி - அம்மான்முதலிய பேர்களும் மச்சான் மச்சினிமார்களும் - இச்சையுடன் கொச்சைமொழிபேசி நொடித்து, வெள்ளிலைச்சுருள்கள்மடித்து குணப்பெண்பிடிக்க மணப்பிள்ளை கடிக்கக்கூசாமற் கொடுக்ககோதிவந்தெடுக்க இவ்வாறு ராஜ விவாகச்சடங்கின் வண்ணமுடித்து, மஞ்சணீர் வசந்தமாடி மஹோற்சவங்கொண்டாடிச் சந்தன-புட்ப[illegible]தாம்பூல-சுகந்த-நிறைந்தபந்திச் செண்டுடன் ஆரமுமணிந்து; குந்தாதேவியார் கந்தனராகிய பாண்டவர்கட்கும் மற்றவேந்தர் தமக்கும்பிராமணஸ்திரீகள்முதலிய ராஜஸ்திரீகள்யாவருக்கும் சம்பந்தத்தட்டுடன் மரியாதைத்தாம்பூலமும்வைத்து, எம்மன்னருங்கண்டு, சந்தோஷப்படும்படியாய்ச் சீதனமுங் கொடுத்தார்கள்.

சீதனவிபரம்.

நவரத்தினக்கசிதப்பண்கள் முகபடாம் விரதண்டை திரண்டை அவுதாக்களுடன்சேர்ந்த யானைகள் திராமுதலிய முத்துக்குச்சுகள் கழுத்துக்குப்பிகள் துமிச்சிப்பில்லைகள் பாதசரவண்டையங்கள் பின்கவரி முன்கவரி கல்லணைகளுடன் கூடிய குதிரைகள் பொன்-வெள்ளி-பட்டுகள்-முதலிய வற்றாலாகிய பெரிபர்தங்கள், கால்பலங்கள்தாதிகள் சேடிகள்தோழிகள் நல்ல ஆளடிமைகள் பால்பொழியு மாடுகள் மேலுயர்ந்தவீடுகள் வளப்பமுள்ளமாடுகள் இளப்பமில்லாக்காடுகள் ஜோதிப்பிரகாசம்பெற்ற ஆபரணத்தினுசுகள் பலவிதவஸ்திரப்பட்டுப் பட்டாவளிகள், தேவேந்திரனாட்டிலும் பூவேந்தர்நாட்டிலும் அகப்படாத அருமையானவஸ்துக்கள் சித்திரப்பொம்மைகள் விசித்திரப்பஞ்சணைகள் பெட்டிபேழைகள் தங்கக்கட்டிமாடைகள் பஞ்சலோகப்பாத்திரங்கள் அவள்படித்த சாஸ்திரங்கள் இவைகள்முதலிய யாவும் விராடராஜன் தன்மகளுக்குச் சீதனமாகக்கொடுத்ததைக்கண்டு ராஜராஜர்களெல்லாருஞ் சிரக்கம்பஞ்செய்தார்கள் இதன்றியும் இந்தக்கலியாணத்துக்கு வந்த காசாம்பூவண்ணன் முதலாகிய காவலர்களுக்கும் குந்திதேவியின் புத்திரர்களான பாண்டவர்களுக்கும் விராடபுரத்திலுற்ற சகலருக்கும் வேறுவேறாய் அவரவர்களின் ஆசார-பூசாவிதிகுலமுறைக்கடுத்த தாய்விருந்து, போசனமும் வெகுமதிகளும் சந்தன-தாம்பூலங்களும் தாட்சியில்லாமற்கொடுத்து மரியாதைசெய்து பூசித்தான் நேசித்தான் விசுவாசித்தான் விராடராஜனவன் பின்பு க்ஷத்திரிய விதிப்பிரகாரம் ஐந்துநாளும் ஓமஞ்செய்து கங்கணவர்ச்சிதமுங்காட்டி மங்களஸ்நானமும் ஆட்டிநல்லசுபமுகூர்த்தத்திற் கூட்டி காப்புதானமுஞ்செய்து நற்பயன்சேர்ந்த நலம்யோற்செறிந்த விற்பனவிவேகிகளாகிய பெண்ணும்பிள்ளையும் சொற்பழுதுருமல் அற்பமேனும் ஒருவரைவிட்டொருவர் பிரியாமல் கற்பனையலங்காரம் போற்கலந்து, வாழ்வுற்றார்கள்.

——0——

மந்திராலோபம் - கிரியாலோபமுமில்லாமல் வளர்ந்திய ஓமாக்கினியாகத்தால் முப்பத்துமுக்கோடி தேவர்கள் அஷ்டவசுக்கள் திக்குப்பாலர்கள் துவாதசாதித்தர்கள் முதலியபேர்களுந் திர்ப்தியடைந்து களித்தார்கள் பூசித்தன்புடனளித்த பெரும்பொருட்குவையால் வேதவேதிய சாதியரியாவரு மிகக்களிப்படைந்தார்கள் கனிந்துரைக்கவிசொலுங் கவிவாணர்களெல்லாருங் கனகக்கொடையாற் கலிநீங்கிக்களித்தார்கள் காசினிக்குரிய காவல்வேந்தர்கள் கலியாணச்சம்பிரமங்கண்டு களித்தார்கள், பூமியிலுள்ளபேர்களெல்லோரும் போசனசௌக்கியத்தாற் புகழ்ந்து களித்தார்கள் தரித்திரர்யாசகர்முதலிய சகலரும் தனத்தாற்கனத்துக் களித்தார்கள் நெறிநிலையற்றவர்கள் நீதியாற்களித்தார்கள் ஸ்ரீ கிருஷ்ணதேவராகிய வெண்ணுண்டவனும் பாண்டவர்முதலிய மற்றியாவரும் உத்தரகுமாரத்தியின் சற்குணத்தாற் களித்தார்கள் வனாபகுவெறிந்த வள்ளிமணாளனையொத்த அபிமன்னன் உத்தரையின் சரசசல்லாப வுல்லாச மிகுதிக் கலவியமளியாற் கலந்துகளித்து வாழ்ந்திருந்தான், மற்ற அரசர்கள் யாவரும் யிஷ்டப்படியிருந்து செலவுபெற்றுக்கொண்டு, தங்கள் தங்கள் பட்டினம்போய்ச்சேர்ந்தார்கள் பிள்ளையும்பெண்ணும் பாண்டவர்களும் திரௌபதாதேவி முதலிய சுபத்திரையும் உபலாபியஞ்சேர்ந்து, வீற்றிருந்தார்கள் கேளும் ஜெனமேஜெய மகாராஜனேயென்று வைசம்பாயனர்சொல்லிவந்தார்.

விராடபர்வம்

முற்றிற்று.